# SPECIAL ARTICLES

# விசேஷ வ்யாஸங்கள்

## WOMEN UNDER CHRISTIANITY

By

Sri S. Bagirathi

## க்றிஸ்தவ மதத்தில் ஸ்த்ரீகளின் நிலைமை*

உலகத்தில் கிழக்கு த்ருவத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும், மேற்கு த்ருவத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும், தக்ஷிண த்ருவத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும், உத்தர த்ருவத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும், மனிதர்கள் ஏறக்குறைய இயற்கைப் பொதுக் குணங்களில் ஒரே ஸ்வபாவமுடையவர்களாகத் தானிருந்து வருகிறார்களென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால், மனிதர்கள் எவ்வகைகளில் வித்யாஸப்படுகிறார்களென்று கேட்டால், நிறத்திலும் மதக் கோட்பாடுகளிலும்தான். நிற வித்யாஸமானது அந்தந்த தேச சீதோஷ்ண நிலைமையைப் பொறுத்திருக்கிறது. மத வித்யாஸமானது அந்தந்தத் தேசத்து ஜனங்களின் மனோதத்வப் பயிற்சியைப் பொறுத்திருக்கிறது. இந்த இரண்டு வித்யாஸங்களும் மனித இயற்கை ஸ்வபாவங்களை மாற்ற முடியாது. உலகத்திலுள்ள தேசங்களில் நல்ல புருஷர்களும், நல்ல ஸ்த்ரீகளும், கெட்ட புருஷர்களும், கெட்ட ஸ்த்ரீகளுமிருந்து வருகிறார்கள். இது உலக ந்யாயம். இவர்களில் ஸ்த்ரீகளாகப் பிறந்தவர்கள் எந்தத் தேசத்தவர்களா யிருந்தாலும், எந்த நிறம், மதம் முதலியவைகளை உடையவர்களாயிருந்தாலும் அவர்கள் சாந்தம், அமைதி, இரக்கம், அன்பு முதலிய நல்ல குணங்களையே உடையவர்களாயிருப்பார்கள். காட்டுமுராண்டி தேச ஸ்த்ரீகள் கூட கொடிய அநாகரிகச் சட்டங்களுக்கு உட்பட்டவர்களாயிருந்தாலும் மேற்சொன்ன நல்ல குணங்களுடையவர்களா யிருப்பார்களென்பதற்கு ஸந்தேஹமில்லை.

ஹிந்து மதாசார்யர்களாகட்டும் ஸ்ரீ ராமர் க்ருஷ்ணர் போன்ற திவ்ய அவதாரமூர்த்திகளாகட்டும் நம் ஹிந்து ஸ்த்ரீகளை எவ்வளவு உயர்வாகவும், கண்யமாகவும் நடத்தி வந்திருக்கிறார்களென்று நாம்

---

* இது "ஏஷ்யாடிக் ரிவ்யு" என்ற பத்ரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

பலமுறையும் இப்பத்ரிகை வாயிலாகப் படித்திருக்கிறோம். நமது வேத சாஸ்த்ர புராண இதிஹாஸங்களில் வெகு ச்லாக்யமாக ஸ்த்ரீகளை கூறியிருக்கிறதையும் பலமுறை இப்பத்ரிகை மூலமாகவும் அறிந்திருக்கிறோம்.

ஆனால், இவ்வளவு உயர்ந்த குணமுள்ள ஸ்த்ரீ வகுப்பார்களை க்றிஸ்தவ மதாசார்யர்கள் எப்படி நடத்தியும் பேசியும் வந்திருக்கிறார்களென்று கவனிப்போம்.

நம் ஹிந்து புராண இதிஹாஸங்களில் சொல்லப் பட்டிருக்கிற ஸ்ரீராமாவதாரம் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம் போன்ற அவதாரங்களை க்றிஸ்தவர்கள் நம்பமாட்டார்கள். ஆனால், தங்களுடைய க்றிஸ்துவின் அவதாரத்தைக் கம்பீரமாக நம்புவார்கள். தங்களுடைய அவதார மூர்த்தியாகிய க்றிஸ்துவுக்குத் தகப்பன் இல்லையென்று ஸாதித்தாலும் அவர்கள் தாயார் இல்லையென்று ஸாதிக்கவில்லை. க்றிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் நீங்கலாக எல்லோரும் க்றிஸ்துவின் தாயாகிய மேரி அம்மாளை வணங்கிக் கோவில்களில் வைத்துப் பூஜை செய்து வருகிறார்கள். இந்தக் காட்சியை ரோமன் காதலிக் கோவில்களில் இப்பவும் நாம் பார்க்கலாம். பொதுவாக க்றிஸ்தவர்கள் தங்கள் கர்த்தரின் தாயாரை வணங்கிப் பூஜை செய்தாலும் ரோமன் காதலிக்க்றிஸ்தவர்களும் மற்றும் சீர்திருத்தமடைந்ததாகச் சொல்லப்பட்ட இன்னும் அநேக வகுப்பு க்றிஸ்தவர்களும் ஸ்த்ரீகளை த்ரோக புத்தி யுடையவர்களென்று சொல்லி, அந்த எண்ணத்தின் பேரில் தங்கள் மதத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவர்கள் ஹீப்ருவின் கதையை நம்புகிறது மல்லாமல் அநேக பைத்யக்கார மூடநம்பிக்கைகளில் ப்ரதான மூட நம்பிக்கையாகிய (Eve) ஏவாள் முதன் முதலில் சாப்பிடக் கூடாதென்ற ஒரு பழத்தைச் சாப்பிட்டதாகவும், அதன் பின்பு தான் கெட்டுப்போனது மல்லாமல் அவள் ஆடத்தையும் அப்பழத்தைச் சாப்பிடும்படி தூண்டினதன் பேரில் ஆடம் (Adam) அவளுடைய அன்புக்கு உட்பட்டுக் கெட்டுப்போனதாகவும் ஒரு கதையை நம்பி வருகிறார்கள். ஆகவே, (Eve) ஏவாளையும், (Adam) ஆடத்தையும் கடவுள் இம்மண்ணுலகத்தில் அனுப்பினார். அவர்களுக்குக் கொடுத்த சாபத்தின் பாபமானது விமோசன மில்லாமல் போய்விட்டதென்றும், ஆனதால், ஒவ்வொரு மனிதனும் பாபியாய்ப் பிறந்து அவனவன் தனது ரத்தத்தினாலேயே பரிசுத்தப் படவேண்டு



மென்றும் நம்புகிறார்கள். கடைசியாக, க்றிஸ்துவே, அவர் கடவுள் அம்சமாயிருந்தாலும் ஒரு ஸ்த்ரீ மூலமாக இவ்வுலகில் பிறந்து காலிலி என்னு மிடத்திலுள்ள செம்படவர்கள் மத்தியில் கொஞ்சம் வர்ஷ காலம் வஸித்துப் பிறகு யூதர்களுக்கு தாம் அவர்கள் அரசனென்று சொல்லவே, அவர்கள் க்றிஸ்துவைச் சிலுவையில் வைத்து அறைந்து விட்டார்கள். அந்த மரண தண்டனையிலிருந்து க்றிஸ்து எவ்வளவோ தப்பிக்க முயன்றும் முடியாமற் போய்விட்டது.

பரிசுத்தமான க்றிஸ்தவ ஸந்யாஸிகளாகிய ஸெயின்ட் ஆன்டனி, போனவென்சர், ஜ்ரோம், க்ரிகரி, ஸிப்ரியன் முதலியவர்கள் ஸ்த்ரீகளை மிகவும் அநீதமாகச் சபித்து கொடிய அஸம்பாவிதமான வசனங்களால் திட்டியிருக்கிறார்கள். அவர்கள் ஸ்த்ரீகளை "பிசாசு ரூபங்களென்றும்," "கெட்ட செய்கைகளுக் கெல்லாம் அஸ்திவாரமானவர்களென்றும்" "விஷத்தேள்களென்றும்" "நம்முடைய ஆத்மாவை வசீகரித்து அதை நாசம் செய்யும்படியான பாபிகளென்றும்" இன்னும் பலவிதமாக கோர சொற்களால் நிராஹரித்து அகௌரவம் செய்திருக்கிறார்கள். இப்போதும் ருஷ்யாவில் பல பாகங்களில் தகப்பனைவிட்டுப் பெண்ணானவள் புருஷன் வீடுபோக முன் ஒரு சாட்டையை யெடுத்து தம் பெண்ணைக் கடைசி தடவையாக மெதுவாய் அடித்து "இனி இந்தச் சாட்டையை உன் புருஷனிடம் ஒப்புவித்திருக்கிறேன். ஜக்ரதை" என்று சொல்லிப் பெண்ணை புருஷன் வீட்டுக்கு அனுப்புவது வழக்கமாயிருக்கிறது. இன்னும் ஸ்த்ரீகளை எவ்வளவோ அவமர்யாதையாக நடத்தும் கோரங்கள் க்ரிஸ்தவ தேசங்களில் இருந்துவருகின்றன.

க்றிஸ்து நாதரும் தமது தாயாரை அவமர்யாதையாகவே நடத்தினாரென்று சொல்லப் படுகிறது. ஸெயின்ட் பால் என்னும் க்றிஸ்தவ ஸந்யாஸி யிடம் தற்கால க்றிஸ்தவர்கள் வெகு பக்தி கொண்டவர்கள். அவரே ஸ்த்ரீகளை புருஷர்களுக்காகவே ச்ருஷ்டித்தாரென்று கூறியிருக்கிறார். சர்ச் ஆப் இங்க்லண்ட் என்னும் க்றிஸ்தவ கோவில்களில் அக்கோவில் சட்டப்படி நாளையும் ஸ்த்ரீகள் அசுத்தர்களென்று கருதப்பட்டு வருகிறார்கள்.

க்ரிஸ்தவ மதம் ஸ்த்ரீகளின்பேரில் ஏழுவித முக்ய குற்றங்களை சுமத்தி யிருக்கிறது. அவை பின் வருமாறு.

1. முதன் முதல் ஸ்த்ரீதான் கடவுளுடைய ஆக்ஞைக்கு மீறி நடந்தவள். 2. அவள் தான் கடவுளின் ஆக்ஞைக்கு மீறி நடந்தது மன்றி ஆடம் என்பவனையும் அவராது ஆக்ஞைக்கு மீறி நடக்கும்படி தூண்டினாள். 3. அவளே தான் ஆடம் என்பவனின் நாசத்துக்குக் காரணம். 4. ஸ்த்ரீகளின் குற்றம் மனித ஸமூகம் முழுமையும் பரவியதனால்தான் ஒவ்வொரு குழந்தையும் பாபத்தில் பிறக்கிறது. 5. கடவுள் அந்த ஸ்த்ரீ செய்த குற்றத்தினால் க்றிஸ்துவையும் இப்பூவுலகத்தில் பிறக்கச் செய்தார். கடைசியாக, அவளே அவரின் அழிவுக்குக் காரணமாயிருந்தாள். 7. க்றிஸ்து மனிதனைக் காட்டிலும் மேலானவர்; அவர்தான் கடவுள் என்று நம்புகிறவர்கள் கூட தங்களுடைய கர்த்தா அழிந்து போனதற்கு ஸ்த்ரீதான் காரணமென்று ஸ்த்ரீகளை தூஷிக்கிறார்கள்.—வெஸ்ட்மினிஸ்டர் ரிவ்யு.

பாகீரதி.

---

## DEATH RATE IN MADRAS

### By

### Sri R. Jayalakshmi Ammal

## சென்னையில் மரண விகிதங்கள்

இச் சென்னைப் பட்டணத்தில் வர்ஷா வர்ஷம் நேரிடும் மரண விகிதங்களை முனிஸிபாலிடியார் அப்போதைக்கப்போது கணக்கெடுத்து வர்ஷத்தில் ஒருமுறை வெகு விரிவாக ப்ரசுரம் செய்வது வழக்கம். அது போலவே அவர்கள் இவ்வர்ஷமும் மரணவிகித ரிபோர்டை ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். பொதுவாக, இப்பட்டணத்தில் ஏற்படும் ஸ்த்ரீ புருஷ மரணங்களாகட்டும், குழந்தை மரணங்களாகட்டும், இன்ன காரணங்களினால் அதிகப்படுகின்றன வென்று நாம் திட்டமாய்ச் சொல்லமுடியவில்லை. ஆனால், முனிஸிபாலிடியார்களும் மற்றவர்களும் ஜனங்களின் அசுத்தமே ஜாஸ்தி மரணத்திற்குக் காரணமென்று நினைக்கிறார்கள். இது மிகவும் பொருந்தாதென்று நாம் திட்டமாய்ச் சொல்லுவோம். ஜனங்களின் அசுத்தம் ஜாஸ்தி மரணங்களுக்கு ஒரு காரணமாயிருந்தாலும் அவர்களின் தரித்ர நிலைமையே ப்ரதான காரணமாயிருக்கிறதென்பதை நாம் முற்றிலும் உணரவேண்டும். இரண்டாவது, கல்வியின்மை, மூன்றாவது, அசுத்தம்; நான்காவது, இன்னும் பலவித அற்ப காரணங்களுமிருக்கின்றன.



சென்ற வர்ஷத்தில் சென்னை நகரில் நேர்ந்த மரணங்களின் தொகை 18,688. இதில் ஸ்த்ரீகளின் மரணங்களும், புருஷர்களின் மரணங்களும் ஏறக்குறைய ஸரியாயிருக்கின்றன. சென்ற வர்ஷத்துக்கு முந்தின 1914 வர்ஷத்தில் நேர்ந்த மரணங்களின் தொகை 24,174. ஆகவே, சென்ற வர்ஷத்தில் நேர்ந்த மரணங்கள் அதற்கு முந்தின வர்ஷத்தைக் காட்டிலும் குறைவாக விருக்கின்றன. சென்ற வர்ஷத்தில் ஏற்பட்ட குறைந்த மரணங்களுக்குக் காரணம் நகர ஸௌகாதாரம் சுத்தமாயிருந்ததென்று சொல்லப்படுகிறது. திடீர் திடீரென்று காலரா, அம்மைபோன்ற பல தொத்து வ்யாதிகள் ஜனங்களைத் தாக்காமலிருந்தால் இவ்வர்ஷமும், அடுத்த வர்ஷமும் ஜனங்களின் மரண விகிதங்கள் குறைவாகவே யிருக்கலாமென்று சொல்லப்படுகிறது.

நிற்க, சென்ற வர்ஷத்தில் இச்சென்னை வாஸிகளில் பல வகுப்பாருள்ளும் நேர்ந்த மரணங்களைக் கவனிப்போம். ஐரோப்யர்களில் 1000க்கு 17 பேரும், ஆங்கிலோ இந்தியர்களில் 1000க்கு 27 பேரும், இந்திய க்றிஸ்தவர்களில் 1000க்கு 29 பேரும், ஹிந்துக்களில் 1000க்கு 36 பேரும், மஹம்மதியர்களில் 1000க்கு 42 பேரும் இறந்துபோனார்களென்று தெரிகிறது. இந்தக் கணக்குகளை வைத்துக்கொண்டு ஹிந்துக்களும் மஹம்மதியர்களும் ஸௌகாதாரத்தில் குறைந்தவர்களென்றும் மற்ற மேற்சொன்ன மூன்று வகுப்பார்களும் ஸௌகாதாரத்தில் முற்பட்டவர்களென்றும் வாதிப்பவர்களுக்கு "இந்துநேசன்" பத்ரிகை சொல்வது மிகவும் பொருத்தமாயிருக்கிறது.

"ஐரோப்யர்களும், ஆங்கிலோ இந்தியர்களும், இந்திய க்றிஸ்தவர்களில் ஒரு பகுதியாரும் செல்வவான்களா யிருப்பதனாலே சுத்தமான காற்றும், வெளிச்சமும் உலாவும் நல்ல பங்களாக்களிலும் வீடுகளிலும் வஸித்து வருகிறார்கள். மேலும், அவர்கள் தங்களுக்குச் சிறிதுநோய் கண்டவுடன் தக்க டாக்டர்களின் சிகித்ஸையைப் பெறக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள். மற்ற இரண்டு வகுப்பினரும் அம்மாதிரி வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. ஹிந்துக்களிலும், மஹம்மதியர்களிலும் சிலரைத் தவிர மற்றவர்கள் ஜன நெருக்கடியும் சந்தடியும் அதிகமாய் ஸௌகாதாரக் குறைவு மேலிட்டு மிருக்கும் இங்கர்ப் பேட்டைகள் பலவற்றிலும் வஸிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் உட்கொள்ளும் காற்று விஷக்காற்றாகும். அவர்கள் தண்

கள் தேஹாரோக்யத்தைக் கவனிப்பதில்லை யென்று சொல்லக் கூடாது. அவர்கள் தேஹத்தைப் பேணக்கூடிய ஸ்திதியி லிருக்கவில்லை. முதலாவது, மாற்றிக் கட்ட வஸ்த்ரங்களில்லாமலும், மாற்றித் தரிக்கச் சொக்கா யில்லாமலும் அழுக்கு வஸ்த்ரங்களைக் கட்ட வேண்டியவர்களாயும், வாரக் கணக்காய்ப் போட்ட சொக்காய்களையே போட்டுக்கொள்ள வேண்டியவர்களாயு மிருக்கிறார்கள். நோய் கண்டால் தகுந்த வைத்யர்களின் உதவியை நாடி ஸிகித்ஸை செய்து கொள்ள முடியாத ஸ்திதியிலிருந்து வருகிறார்கள். இக்காரணங்கள் பற்றி ஹிந்துக்களுள்ளும் மஹம்மதியர்களுள்ளும் மரண விகிதங்கள் அதிகமாயிருந்து வருகின்றன'' வென்று சொன்ன காரணங்கள் உண்மையானவைகளென்றே நாம் சொல்லுகிறோம்.

ஹிந்து வகுப்பார்களில் மரண விகிதம் 1000க்கு 86 பேர்களென்று கணக்கிடப் பட்டிருக்கிறதானாலும், கார்ப்பொரேஷன் அதிகாரிகள் ஹிந்து ஸமூகத்தைச் சேர்ந்த உட்பிரிவுகளின் மரண விகிதங்களை தனியே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவ்விகிதங்கள் ப்ராமணர்களுள் 1000க்கு 24 பேரும், செட்டிமார்களுள் 1000க்கு 26 பேரும், நாயுடு மார்களுள் 1000க்கு 31 பேரும், முதலிமார்களுள் 1000க்கு 32 பேரும், யாதவர்களுள் 1000க்கு 36 பேரும், பறையர்களுள் 1000க்கு 38 பேரும், வன்பர்களுள் 1000க்கு 39 பேரும், கம்மாளர்களுள் 1000க்கு 40 பேரும், பட்டுநூல்காரர்களுள் 1000க்கு 43 பேரும் இறந்திருக்கிறார்களென்று கணக்கெடுத்திருக்கிறார்கள்.

இச்சென்னையில் குழந்தைகளின் மரண விகிதங்களை நினைக்கும்போது மயிர்க்கூச்சலிடுகின்றன. சென்ற வர்ஷத்தில் உயிருடன் பிறந்த குழந்தைகளில் 1000க்கு 286 குழந்தைகள் இறந்து போயின. அதற்கு முந்திய வருஷத்தில் 1000க்கு 308 குழந்தைகள் இறந்து போயினவாகையால் போன வருஷத்து மரண விகிதத்தைப் பார்த்து நாம் சிறிது ஸந்தோஷப்பட வேண்டியதுதான். இதற்கு கார்ப்பொரேஷன் ஸுகாதார அதிகாரிகள், குழந்தைகள் போஷிக்கப் படவேண்டிய இயற்கை முறைகளும் அவைகள் வளர்க்கப்படவேண்டிய இயற்கை முறைகளும் கவனிக்கப் படாமல் அசட்டை செய்யப்படுவதே காரணமென்கிறார்கள். மேலும், அவர்கள் பெற்றோரின் ஏழ்மையே குழந்தைகள் ஸரியாய் போஷிக்கப்படுவதற்கும் வளர்க்



கப்படுவதற்கும் பெரிய தடையாயிருந்து வருகிறதென்றும், கூலி வேலை செய்து பிழைக்கவேண்டிய நிலைமையிலிருக்கும் ஏழை ஸ்த்ரீகள் ப்ரஸவித்த சில தினங்களுக்குள் குழந்தையைக் கதற விட்டுவிட்டு வேலை செய்யப் போய்விட வேண்டியவர்களா யிருக்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள். என்ன விருந்தாலும் இந்நகரில் குழந்தைகளின் மரண விகிதங்கள் வெகு பரிதாபத்துக் கிடமாயிருக்கின்றன. ஐரோப்பக் குழந்தைகளில் 1000க்கு 71 குழந்தைகளும், இந்திய க்றிஸ்தவக் குழந்தைகளில் 1000க்கு 174 குழந்தைகளும், ஆங்கிலோ இந்தியக் குழந்தைகளில் 1000க்கு 197 குழந்தைகளும், மஹம்மதியக் குழந்தைகளில் 1000க்கு 294 குழந்தைகளும், ஹிந்துக் குழந்தைகளில் 1000க்கு 296 குழந்தைகளும் போன வர்ஷத்தில் இறந்துபோயிருக்கின்றன.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பாரும் காலரீதியை அறிந்து முன்னடைந்து வரும் இக்காலத்தில் அந்தந்த வகுப்பிலுள்ள ப்ரமுகர்கள் முன்வந்து அவரவர்களின் வகுப்புகளில் மரண விகிதங்கள் அதிகப்படாமலிருப்பதற்கு முயற்சிகள் செய்யவேண்டும்.

ஆர். ஜயலக்ஷ்மி அம்மாள்.

---

## ACTION SONGS

By

**V. S. Janaki Ammal**

## செய்கைப் பாட்டு

பல பள்ளிக்கூடங்களில் செய்கைப்பாட்டு என்பது நடத்தப்படுகிறது. ஆனால், ஒருதரம் செய்ததையே வர்ஷந்தோறும் திருப்பிச் செய்வதாயிருக்கிறதே யொழிய நவநவமாகச் செய்யும் த்ராணி பல உபாத்யாயர்களுக்கு இல்லை. அப்படி யிருக்க, நமது பெண் பாடசாலை உபாத்தினிகளைப் பற்றிச் சொல்லவேண்டுவதில்லை. அடியிற்கண்ட செய்கைப் பாட்டுகள் உபாத்யாயர்களுக்கு உபயோகமாகும்படி எழுதி யனுப்பியிருக்கிறேன். இது இலகுவான நடையில் நொண்டிச் சிந்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதனைப் போதிக்கும் உபாத்தினிமார்கள் அதற்குரிய செய்கைகளோடும் பாவனைகளோடும் போதிப்பார்களென்று நம்புகிறேன். இப்பாட்டுகளை பிள்ளைகள் பெண்கள் இருதிறத்தாரும் பாடலாம்.

## நொண்டிச்சிந்து

1. மனிதன் நானானால்-பயிர் செயுங்குடியானவனாவேன்
நிலத்தை யுழுதிடுவேன் நல்ல-நெல்விதையிவ்வணந் தூவிடுவேன்
பயிரை யறுத்திடுவேன்-பலவிதப் புல்களைக் களைபறிப்பேன்
கதிரைக் கட்டிடுவேன்-களத்தினிற்கொண்டுபோய் கட்டடிப்பேன்
வைக்கோ லுதறிடுவேன் அதனை - வாரியே போராய்ப்போட்
டிடுவேன். (மனிதன் நானானால்)

2. மனிதன் நானானால்-மாதிரித் தச்சன் நானாவேன்
பலகை யிழைத்திடுவேன்-பலவித வுளிகொண்டு வேலைசெய்வேன்
அரம்பமரா விடுவேன்-அவ்வண்ணமோட்டி யறுத்திடுவேன்
பறவைக் கூட்டுடனே-படகு பெட்டியிவை செய்திடுவேன்
பரவையில் மிதந்தோடும்-பாங்கான பெருங்கப்பல் கட்டிடுவேன்
(மனிதன் நானானால்)

3. மனிதன் நானானால் - வாகான கொல்வேலை கற்றிடுவேன்
கண்கண் கண்ணென்று - காணுமென் செம்மட்டி கதறிடுமே
ஓங்கிய கூடவடி - ஒழுங்காய் விழுமிம் மாதிரியாய்
குதிரைக்கி லாடங்களுங்-குளம்புக்குத் தக்க தாய்ப் போடுவேனே
போட்டபின் குதிரையினைப்-பொதுவில் நடத்திச் சரிபார்ப்பேன்
(மனிதன் நானானால்)

4. மனிதன் நானானால் - மதிப்புள கொத்தனார் நானாவேன்
இட்டிகை யெடுத்தொன்றை - யிவ்விதம் வைத்தபினின்னொன்றை
யொட்டியே மாற்றிவைப்பேன் - கையோடுங்கரணையா லொழு
ங்குபண்ணிப்
புகைப்போக்கி செய்வேன் - பொருந்தியேயாகா சம்வரையிற்
செல்லும்
புதுமாடங் கட்டிவிட்டுப் - பூர்த்தியாய்ப் பார்த்து காணர்த்தி
கொள்வேன். (மனிதன் நானானால்)

# HISTORY & ANTIQUARY

## சரித்திரமும் ஆராய்ச்சியும்

### ANCIENT TAMILIANS AND CUSTOMS

By
Mr. Sivadyanananesan

### பண்டைக்காலத் தமிழரது பழக்க வழக்கங்கள்

இப்பழக்க வழக்கங்களை மூன்று தலைப்பின் கீழ்ப் பரிசோதிப்போம்.

ஜனஸமூக நடை (Social), ராஜீய வ்யவஹாரம் (Political) மதாசாரம் (Religious) என்னும் மூன்றும் தலைப்பின்கீழும் ஏற்படுவனவற்றைப் பொறுக்கி யமைத்துப் பார்ப்போம். இவை யொன்றோடொன்று ஸம்பந்தப்பட்டே தோன்றுமாயினும் கூடுமான வரையில் வேறாகப் பிரித்து நோக்குவோம்.

நம் தமிழ் முன்னோரது நடை, அகம், புறம் என்னும் இரண்டு வகுப்பாகப் பிரிந்திருந்ததாகத் தெரிகிறது இன்ப அநுபவ ஸம்பந்தமாக வுள்ளன அத்தனையும் அகமாம். ஞானம், அரசு, ஸம்பந்தமாகவுள்ளன புறமுமாம்.

நம் தமிழ்நாட்டார் நிலத்தை நான்கு பெருவகையாகப் பிரிப்பர். மலையும் மலைசார்ந்த நாடுமாகிய குறிஞ்சியும், வயலும் வயல் சார்ந்த நாடுமாகிய மருதமும், காடும் காடுசார்ந்த நாடுமாகிய முல்லையும், கடலும் கடல் சார்ந்த நாடுமாகிய நெய்தலுமென இந்நான்கு வகை நிலத்திலும் கழிவுபட்டதே பாலை அல்லது சுரம் என்னப்படும். இந்நால்வகை நிலத்துக்கும் சில ஸொந்த ஜாதியும் மாக்களும் பிராணிகளும் பயிர்களும், சிறப்புக் காலங்களும், செய்கைகளும், ஏற்படுத்தியுள்ளார். உதாரணமாக, மலைக்கு வேடரும், வேங்கைமரமும் புலியும், யானையும், தினையும், புணர்ச்சியும், மருதத்துக்கு, உழவர் மருதமரம், நெல், பகடு, உண்டாட்டு முதலியவையும், முல்லைக்கு பின்னை, இடையர், மாடு, வரகு, கற்பு, முதலியவையும், நெய்தலுக்கு வலையர், தாழை, மீன், இரங்கல் முதலியனவுமாம். ஒவ்வொரு நிலத்திலும் கழிவுபட்ட பாலைக்கு வன்னி, கள்ளி, மறவர், பாம்பு, [illegible]போக்கு, சுடுகாடு முதலியவை எனத் தெரிகிறது. இவை இப்[illegible]

5. மனிதன் நானானால் - வாங்குவோர் ப்ரமிக்கவே ஜோடுசெய்வேன்
பலகையி லுட்கார்ந்து – பாங்காக ஊசியைப் பற்றிக்கொண்டு
பலமாய்த் தைத்திடுவேன் - நல்ல - பாதரட்சை இழுத்தாலுந் தைத்த
தையல் பிரியாதே - தைப்பேனே யுன்னிதமாய்ச் சார்ந்து பார் நீ
(மனிதன் நானானால்.)

6. மனிதன் நானானால் - பல நம் - மலைக்கவே புத்தகம் அச்சிடுவேன்
பொம்மைபல போட்டுப் - புதுப்புதுப் புத்தகமச்சிடுவேன்
பத்திரிகைபோட்டுப் - பற்பலவூர்களுக் கனுப்பிடுவேன்
முதலில் நான் படிப்பேன் - உலக -முழுதுமறியாக் கதைகளை முன்
நலமாய் நான் படிப்பேன் - நாட்டிலதைவிட நல்லதுண்டோ
மனிதன் நானானால்

அறுவரும் நாங்கள் மனிதரானால் - நடைபெற வேதனைச் செய்தாலும்
இஃதொன்றெங்கருத்தில் - ஏற்றமாயுட்கொண்டு நடப்போமே
செய்வன திருந்தச் செய்வோம் - செய்யாதொழிவோமில்லாவிடில்
மெய்ப் பயனுள்ளவராய் - மேதினியொழுகுவோங்காணீரே
நாங்கள் மனிதரானால்

ஆநந்தாச்ரமம், }
குன்னூர். }
வி. எஸ். ஜாநகி அம்மாள்.

---

எவன் பெரியவன்? தான் பேசும் கொள்கைகளின்படி நடக்கிறவனே பெரியவனென்று கூறலாம். அவனது கொள்கைகள் தப்பிதமானவரியா என்பது வெறு கேள்வி.—அசிலஸ்.

* * * *

தரித்ரத்தை ஒப்புக்கொள்வதில் அவமான மொன்றில்லை. அதை ஒளிப்பது தான் பெரிய அவமானம்.—ஹோமர்.



யிலேயே அமைந்துள்ள விஷயங்கள். இவற்றைக் கண்டுகூட்டி ஒன்று சேர்த்து எழுதினது இலக்கணிகரது தொழிலாம். அம்மாதிரி மக்களது பருவத்தையும் உணர்ந்து அவ்வப் பருவத்து நிகழும் தொழிலையும் எழுதிவைத்திருக்கிறதைப் பார்க்க வியப்பைத் தரும்.

ஆண் மக்களது பருவத்தை பிள்ளைப் பருவமென்றும், காளைப் பருவமென்றும், வயோதிகப் பருவம் என்றும் பிரித்ததுமன்றி பெண்களது பருவத்தையும், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் எனப் பிரித்துள்ளார்.

குழந்தைப் பருவத்தில் மார்பால் தவழுவதாகிய செங்கீரையும், தாலாட்டுப் பாடும் தாலமும், குழந்தைகள் கைசேர்த்துக் கொட்டும் சப்பாணியும், முத்தங்கொடுக்கவரும் முத்தமும், நடபாடிவரக் கற்றுக்கொள்ளும் வருகையும், சந்த்ரனைக் காட்டியழைக்கும் அம்புலியும், ஆண் பெண் இரு குழந்தைகளுக்கும் பொதுவான செய்கைகளாம். பின்னர் பெண்குழந்தைகள் அம்மானையாடுவதும், நீராடுவதும், ஊசலாடுவதும் முதலிய செயல்கள் ஒன்று முதல் ஐந்து வயது வரையிலுள்ளவை. பின்னர் சிறு வீடுகட்டி மணற்சோறிடுவதைக் காணலாம். இக்காலத்தும் நம்வீடுகளில் சிறு பையன்கள், பெண்கள் கட்டுஞ் சிறு வீட்டை யழித்தலும், சிறு தம்பட்டங்களைக் கழுத்தில் கோத்துக் கொண்டடிப்பதும், சிறு வண்டிகளில் போவதும், ஸஹஜமாக விருப்பதை யாவரும் பார்க்கலாம். அது தொல்காலத்திலிருந்து வந்தவழக்கு. இச்சிறு தம்பட்டங்களடிக்கும் வழக்கமொன்றே பழைய தமிழர்க்குள் ஜாதிபேதமில்லாதிருந்ததென்பதைக் காட்டப்போதும். பின்னர்த் தமிழர்க்குள் ஜாதிபேதம் மேற்பட்ட வகையைக் கூறுவோம்.

இச்சிறு பருவந் தீர்ந்தபின்னர் மகளிரது செய்கைகளைச் சற்று விசாரிப்போம். தாயாரோடு இல்லத்தொழில் கற்றுக்கொள்வதும் சிறுபான்மையில் கல்வி கற்பதுமே வழக்கம். இவற்றுக்கிடையே தும்பி சுற்றுதல் (தட்டாரப் பூச்சியைப் பிடித்துக் கண்ணைக்குத்திப் பறக்கவிட்டு அது சுற்றுவதுபோலச் சுற்றுதல்) உந்தீபறவென்று இரண்டு பெண்கள் கைகோத்தாடுதல், கழல் (கழற்சிக்காய்) ஆடுதல், பந்தடித்தல் (Tennis) சோலை யேறிப் பூக்கொய்தல் முதலியன அவர்களது விளையாட்டாம். அம்மானை, ஊசல், பந்தடித்தல் பாட்டு முதலிய பலவித பாட்டுக்களும் புஸ்தகப் பாட்டுக்களு

கத் தற்காலத்து மாறிப்போனதை அறிந்துகொள்ளவும். இல்லத் தொழில் செய்யாத நேரங்களில் தொழிற்குத் தக்கபடி மாடுமேய்த்தல், கொல்லைகாத்தல் முதலிய பல தொழில்களும் பெண்களே பார்த்துவருவது ஸஹஜமாயிருந்தது. குரவைக்கூத்து என்ற வழக்கம் இப்பொழுது கும்மியென்றும் குதித்துப்பாடுதலென்றும் வழங்குகிறது.

இச்சிறு பருவந்தீர்ந்தபின்னர் பெண்களுக்குக் கல்வி முடியாதிருக்கும்போதே கல்யாணம் நடந்தேறுவது வழக்கம் என்று சொல்லவிடமுண்டாகிறது. தமிழருக்குள் மூன்றுவகையான கல்யாணமிருந்ததென்றும் அதிலும் ஒன்றே சிறப்புற்றிருந்தது என்றும் தெரியவரும். அவையாவன, ஆசுரம், இராக்கதம், கந்தர்வம் என்பன. இவற்றை ஆரியரது எட்டு மணங்களிலொன்றெனக் கூறுவாரது மதம் தவறு. ஆரியர் தமது ஆசாரங்களைச் சிறந்து கூறினும் இதர (Society) ஜன ஸமூகங்களிலிருந்த பழக்கங்களையும் சேர்த்து ஒன்றுபடுத்தித் தமது விதிகளுக்குள் அமைத்திருக்கிறார்களென்று தெரிகிறது. மேலும், பழையகாலத்து பாபிலோன் பக்கத்திலிருந்து வந்த த்ராவிடர்களது வழக்கத்தையும் பிதிரர்களது வழக்கத்தையும் தம் வழக்கங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டார்கள். இனியும் தமிழரது அகப்பாவிற் சிறந்திருந்த வழக்கங்களையும் ஒரு சேரத்திரட்டித் தமது எட்டுவகை மணங்களை ஆரியர்கள் உருப்படுத்திக் கொண்டார்கள். இவ்வாசுரம், இராக்ஷஸம், கந்தர்வம் என்னும் மூன்றினுள் ஆசுரம் நாகரீகத் தமிழர்களாலேயே கண்டிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கம் இடையர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. அவர்கள் மாடுபிடியில் ஜெயித்துக் குறித்த பெண்ணை மணந்து வந்தார்கள்.

இராக்ஷஸமாவது எதிரிகளினது தேசம், ஊர், வீடு, முதலியவற்றிற்போய் அவர்களைத் தொந்தரவு செய்து, வருத்தி அவர்களிடத்திலிருந்து பலாத்காரமாய்ப் பெண்ணை எடுத்துக்கொண்டுபோய் மணப்பதாம். இதுவும் அவ்வளவு ச்ரேஷ்டமானதாகக் கருதப்பட்டதல்ல. ஏனெனில், இல்வாழ்க்கைத் துணையாகவிருக்கும் 'சக்தி அப்படி கலவரப்பட்ட மாதினுக்கில்லையாதலாலும், ஒத்த உணர்ச்சியும் இன்பமும் ஸமமாக இருக்காததனாலுமே.

இம் மூன்றாவதான கந்தர்வ விவாகமே சிறப்படைந்ததாகத் தமிழரால் கருதப் பட்டிருந்த தென்று அறியவேண்டும். ஆகவே ஆங்கிலேயரது, (Courting Honey moon) முதலிய வுணர்ச்சிகள் ஆரியருக்குப் புதுமையாகத் தோன்றினும் தமிழருக்கு அது பழமையானது என்று உணரவும். இனிக் கந்தர்வம் என்னும் சொல்லுக்கு இசை யென்று பொருள் படுதலால், தமிழர் கானம்வல்லுனரென்றும், கந்தர்வம் என்னும் வடமொழிப் பதத்துக்கு மேகமென்று பொருளேற்படுதலாலும் கந்தர்வ மணத்திற்குத் தக்க இடம் மலைநாடாதலாலும் கந்தர்வ மணம் குறிஞ்சித் தமிழருக்குச் சிறப்புப் பொருந்திய மணமென்றே சொல்லவேண்டும்.

இக்கந்தர்வம் வருமாறு. 16 வயது வாலிபன் ஒருவன் இன்னும் பன்னிரண்டு வயது முற்றுப்பெறாத ஒரு சிறுமியை சோலையிலோ, மலைச்சாரலிலோ அவளது ஆபத்துக் காலத்திலோ பார்க்கிறான். அப்போது அவன் அவளை அவ்வாபத்திலிருந்து தப்புவித்து அவளது அழகில் கட்டுப்படுகிறான். அவளை மணக்கவேண்டுமென்று சங்கற்பிக்கிறான். அவளை நெருங்கி வினவுகிறான். இருவர் மனமும் ஒத்துப்போகிறது. அன்று இருவரும்பிரிந்துபோகிறார்கள். மறுநாளும்அவன் அவ்விடத்திற்கு வருகிறான். அப்பெண்ணைப்பார்க்கிறான். இவ்விருவருக்கும் உள்ள அன்பு விருத்தியாகிறது. இவ்விருவரும் ஒருவரையொருவர் மணந்துகொள்ளுவதாக ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறார்கள். அவள் தன் தோழிக்கு இவ்விஷயத்தை மறைக்கிறாள். அவன் தன் தோழனிடத்துப்போய் தன் மன அவதியைச் சொல்லுகிறான். உன்னுடைய கல்வியையும் மனநிலைமையையும் போகவிட்டு இப்படித் திரிவது உத்தம மல்லவென்று ஸ்நேகிதன் அவனுக்குப் புத்தி புகட்டுகிறான். நீ பார்த்தாயானால் அப்படிச் சொல்லமாட்டாய் என்று அவனைத் தடுத்துத் தன் ஆற்றாத் துக்கத்தைச் சொல்லி வருந்துகிறான். ஸ்னேகிதன் அவனுடைய வருத்தத்தை அறிந்து குறிப்பிட்ட இடத்திற்குபோய் அப்பெண்ணைப் பார்க்கிறான். இத்தகைய பெண்ணைக் கண்டு பின்பு நம்மிடத்துத் திரும்பி வந்து இவ்வளவு பொறுமையோடு தன் கஷ்டத்தைச் சொன்ன நம் ஸ்நேகிதனே மனோபலமுள்ளவனென்று நிச்சயிக்கிறான். இதற்குள் பெண்ணினது குணங் குறிகளைக் கண்டு அவளது தோழி ஸந்தேகிக்கிறாள். தலைவி சாக்குப்போக்குச் சொல்லுகிறாள். என்றாலும் அதை நம்பாமல் நீ சொல்லுவது வாஸ்தவமாயின் பிறைதொழுவை

யாக வெண்கிறாள். (பிறைதொழுவதாவது கல்யாணமாகாத பெண்கள் தங்களுக்கு நல்ல கணவன் ஏற்படவேண்டுமென்று சந்த்ரனை வணங்கும் ஒரு செய்கை). அவள் மறுத்துக் கொண்டிருக்கும்போதே தலைவன் யானை ஒன்று ஓடிற்று அல்லது மான் ஒன்று இவ்வழி யோடிற்றோவென்று கேட்டுக்கொண்டு வருகிறான். தோழி இருவருடைய குறிப்பிலிருந்தும் இவன்தான் தலைவியினது கணவனென்று தெரிந்துகொள்ளுகிறாள்.

சிவத்யானானந்தன்.

---

## MORAL LITERATURE
## ஸன்மார்க்கப் படிப்பு

### KAUSIKAPATHNI OR SUMATHI

**By**

**Sri Adilakshmi Ammal**

### கௌசிகபத்னி அல்லது ஸுமதி

நம் ஹிந்துப் பெண்களுக்கு ஆதிகாலத்திலிருந்து பாதிவ்ரத்யமென்னும் ஸுகுணம் ஸ்வபாவமாகவே யிருந்து வழங்கி வந்துகொண்டிருக்கிறது. மற்ற தேசத்துப் பெண்களைப் போலல்லாமல் ஹிந்துப் பெண்கள் தங்களை புருஷர்கள் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும், கௌரவித்தாலும் அவமர்யாதை செய்தாலும், அவர்களிடம் மாறாத அன்புடன் ஓரேவிதமாகத் தானிருந்து வருவார்கள். எப்படி மல்லிகைப்பூ தன்னை காலால் மிதித்தாலும், தலையால் தரித்தாலும் அது தன் ஸுகமான வாஸனையை இழக்கிறதில்லையோ அப்படியே நம் உத்தமப் பெண்கள் உயர்ந்த ஸம்பத்தில் அனுபவித்தாலும், தரித்ரத்தில் கஷ்டப்பட்டாலும் தங்களுடைய பதி பக்தியைக் குறைக்கிறதில்லை. என்ன கஷ்டங்கள் வரினும் ஸர்வ காலத்திலேயும் ஸர்வாவஸ்தையிலேயும் தங்களுடைய கணவன்மார்களை கௌரவித்து வருவார்கள். அவர்களையே ஈடில்லாத தனமென்று கருதுவார்கள். இப்பேர்க்கொத்த குணசீலிகளாகிய ஹிந்துப் பெண்களால் எவ்வளவோ துன்மார்க்கமுள்ள புருஷர்கள் மறுபடி



யும் நல்லகதியை அடைந்திருக்கிறார்கள். பூர்வம் தனது கற்பின் சிறப்பாலும் உத்தம குணங்களாலும் இந்தியாவை அலங்கரித்து, கொடிய துன்மார்க்கனாகிய தனது புருஷனை நல்லொழுக்கத்துக்குத் திருப்பினவளாகிய கௌசிகபத்னி அல்லது ஸுமதி என்னும் ஒரு பெண்மணியின் சரித்ரத்தைக் கவனிப்போம்.

பூர்வம் வட ஹிந்துஸ்தானத்திலுள்ள ப்ரதிஷ்டா நகரத்தில் கௌசிகன் என்னும் ஒரு ப்ராம்மணன் வஸித்து வந்தான். அந்த ப்ராம்மணனுடைய மனைவியே நமது கதாநாயகி. ஸுமதி கௌசிகனின் பத்னியானதால் அவள் கௌசிகபத்னி யென்று அழைக்கப் பெற்றாள். ஸத்குலத்தில் ஜனித்தவனானாலும் கௌசிகன் துஷ்டர்களோடு சேர்ந்து துன்மார்க்கனாய் காலம் கழித்து வந்தான். அவனைக் கண்டு எல்லோரும் வெறுத்து வந்தார்கள். அவன் சூதாடல், கள் குடித்தல், பொய் பேசுதல், திருடுதல், முதலிய கொடிய வழக்கங்களைப் பின்பற்றி தன் ஸ்னேகிதர்கள் வீட்டிலேயே பொழுது போக்கிவந்தான். ஸுமதி ஒண்டியாய் தன் வீட்டில் இருந்துகொண்டு "என் புருஷனுக்கு நல்லொழுக்கத்தையும் நற்புத்தியையும் அளிக்கமாட்டீரா" வென்று ஸதாகாலம் ஈச்வர த்யானம் செய்த வண்ணமாகக் கண்ணும் கண்ணீருமாய் கலங்கி நிற்பாள். ஒரு நாள் தன் புருஷனை அழைக்க அவனுடைய ஸ்னேகிதன் வீட்டிற்குப் போயிருந்தாள். அப்போது அவன் "அடி தரித்ரம் பிடித்தவளே! நீ ஏன் இங்கு வந்தாய்? வீட்டில் விழுந்து கிடக்கிறதானே? உன்னைத் தொட்டுத் தாலி கட்டினது முதல் நான் வெகு கஷ்டப்படுகிறேன். அடிசண்டாளி! நீ தொலைந்து போய்விடு" என்றுப் பலவிதமாகத் துர்வசனங்களால் தூஷித்தான். அவைகளைக்கேட்டு ஸுமதி மனம் வெந்து புருஷனுக்கு நற்புத்தி கிடைக்கவேண்டுமென்று பதிசிச்ருஷையிலும், கடவுள் பக்தியிலும் காலத்தைக் கழித்து வந்தாள்.

பின்பு, கௌசிகனுக்கு வயதானது. பால்யத்தில் செய்த துஷ்டச் செய்கைகளுக்குத் தக்க பலனை யடைய வேண்டுமல்லவா? இவ்வுலகத்து ஸுகங்களே சாச்வதமென்றும் போகங்களே நித்யமென்றும் எண்ணி வந்த கௌசிகன் குஷ்ட வ்யாதியினால் தேஹம் அழுகி வெகு அவஸ்தைப்படநேர்ந்தது. அவன் படும் கோர கஷ்டங்களைப் பார்த்து "ஏ நாதா! இவ்வுலகில் ஸ்த்ரீகளுக்கு கடவுளும், குருவும், பெற்றோரும், உறவினரும், பாக்யமும்,

மோக்ஷமும் கணவன்தான். உம்மையே நம்பினவளாகிய அடியேனுடைய யோசனையைக் கேளும். ஸர்வ தயாநிதியாகிய பரந்தாமனைப் பூஜை செய்யும். அவர் நம்முடைய கஷ்டங்களை நீக்குவார்" என்று சொன்னாள். கௌசிகன் மிகவும் அஹங்காரம் பிடித்தவனானதால் ஸுமதி சொல்லும் ஹித வசனங்களை அலக்ஷியம் செய்து வந்தான். ஸுமதியோ மனம் கலங்கி புருஷனின் க்ஷேமத்தையே கருதினவளாய் அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைத் தவறாது செய்து வந்தாள். அந்த அதமன் ஒருநாள் திடீரென்று ஸுமதியை அழைத்து, அப்பட்டணத்திலுள்ள ஒரு வேசியைக் குறிப்பிட்டு அவளிடம் தன்னை அழைத்துப்போக அவளுக்கு ஆக்ஞாபித்தான். பொறுமையை ஆபரணமாகக் கொண்ட ஸுமதி, அவன் வார்த்தைகளுக்கு ஆச்சர்யப்பட்டு அவனுக்கு இவ்வித ஆசைத் தகாதென ஹிதோபதேசம் செய்தாள். தன் கார்யத்தை நிறைவேற்றாமலிருந்தால் அவன் தன்னுடைய ப்ராணனை விட்டு விடுவதாகப் பயமுறுத்தினான். பிறகு, ஸுமதி மிகுந்த மனவருத்தத்துடன் அந்த வேசியின் வீட்டைத்தேடிச் சென்றாள். அந்த வேசி, ஒரு ப்ராம்மணப்பெண் தனது வீட்டிற்கு வருவதைப் பார்த்து அதிக ஆச்சர்யமடைந்து "அம்மா! நீர் யார்? யாது கார்யமாக இவ்விடத்திற்கு வந்தீர்? குல ஸ்த்ரீகள் வேசியின் வீட்டிற்கு வந்தாலுமே குழப்பமுண்டாகுமே? ஒரு வேளை வழி தெரியாமல் இங்கு வந்தீர்களோ? ஒன்றும் தெரியவில்லையே. வந்த கார்யத்தை விபரமாகச்சொல்லும்." என்று வினயமாகக் கேட்டாள். தனது எண்ணத்தை நிறைவேற்ற வேசியினிடம் வாக்தானம் வாங்கிக்கொண்டு, உடனே வெகு அடக்கத்துடன் ஸமாசாரங்களைத் தெரிவிக்கலானாள். ஸுமதியின் முகக்குறிகளையும் அவளின் சாந்தத்தையும் தெரிந்துகொண்டு, வேசியானவள் அவளின் வேண்டுகோளுக்கு ஸம்மதித்தாள். நமது கதாநாயகி இந்த விஷயத்தைத் தனது அழுகி ஒழுகும் குஷ்டரோக புருஷனுக்குத் தெரிவித்து விட்டு அவனை அவ்வேசியின் வீட்டிற்கு நடுராத்திரியில் தன் முதுகில் சுமந்து சென்றாள். போகும்போது ஊருக்கு வெளியில் தபஸ் பண்ணிக் கொண்டிருந்த ஒரு ப்ராம்மண ரிஷியின் தலையில் கௌசிகனது கால்படவே, அந்த ப்ராம்மணர் உடனே "என்னைத் தொட்டவன் சூர்யோதயமான பிறகு மரணமடையக்கடவது" என்று சாபமிட்டார்.

பர்த்தாவின் மரணத்திற்குப் பயந்து ஸுமதி, தனது பதிவ்ரதா மஹாத்ம்யத்தால் சூர்யோதயம் ஆகாமலே செய்தாளென்றும், அப்பொழுது தேவர்கள் யாவரும் பயந்து இருக்க, அவர்களுக்கு நன்மை செய்ய எண்ணி, அனுஸூயை ஸுமதியின் இடத்திற்கு வந்து "நீர் மஹா பதிவ்ரதை. உம் பர்த்தா இறக்காமல் நான் செய்கிறேன். சூர்யோதயம் ஆகும்படி செய்யும்" என்று வேண்டவே ஸுமதி "சூர்யோதயம் ஆகக் கடவது" என்று சொன்னதும் சூர்யன் கிழக்கு திசையை அலங்கரித்தாராம். உடனே கௌசிகன் அனஸூயையின் புண்யத்தால் மறுபடியும் பிழைத்து, வ்யாதியின்றி தேஹ திடமுள்ளவனாயிருந்தான். ஸுமதியின் உத்தம குணங்களால் தனக்கு இவ்வளவு நன்மைகள் உண்டானதல்லவா? என அறிந்து கௌசிகன் அன்றயதினமுதல் ஸன்மார்க்கத்தை அனுஸரித்தான். பிறகு, வெகுகாலம் தம்பதிகள் ஈடில்லாத ஐச்வர்யங்களை அனுபவித்து வந்தார்கள்.

ஆதிலக்ஷ்மி அம்மாள்.

---

## DEEPAVALI & ITS SIGNIFICANCE

By

**Sri Chelvanayakammal**

## தீபாவளியும் அதன் சூக்ஷ்மமும்

கடவுளுக்கு ஸமானமானவர் தாய் என்று வேதம் கூறுகிறது. தாயைவிடப் பூஜிக்கத் தகுந்தவர் உலகில் வேறு ஒருவருமில்லை. குழந்தைகளுக்குத் தாயினிடம் எவ்வளவு ப்ரியமும் பக்தியும் உண்டோ அவ்வளவு ப்ரியமும் பக்தியும் அவரவர்களின் ஸ்வதேசத்தின்பேரிலிருப்பது ஸஹஜம். இக்காரணத்தினாலேயே பெரியோர்கள் ஸ்வதேசத்தைத் தாய்க்கு ஒப்பிட்டு தேசத்தோர்கள் எல்லோரையும் தேசபுத்ரர்களாகக் கருதுவது உண்மையாகயிருக்கிறது. இந்த எண்ணம் உயர்ந்ததும் பரிசுத்தமானதுமாகும். அன்றியும் ஈச்வர ஸம்மதமும் இதுவே தானாகும். தாயை எப்படிப் பூஜிக்க வேண்டுமோ அப்படியே தாய் பூமியைப் பூஜிக்கவேண்டுவது மனுஷ்ய தர்மமாகும். தாய்க்கு ஸேவை செய்வதனால் எவ்வளவு புண்யமும் க்யாதியும் கிடைக்குமோ அவ்வளவு புண்யமும் க்யாதியும் தாய் பூமிக்கு ஸேவை செய்வதனால் கிடைக்குமென்பது நிச்சயம்.

இப்போது தீபாவளி தினத்துக்கும் நம் தாய் நாட்டின் ஸேவைக்கும் என்ன ஸம்பந்த மென்பதைக் கவனிப்போம்.

தீபாவளி தினம் எப்பேர்ப்பட்டது? மஹா உயர்ந்த உத்தம குணங்களை யுடைய ஒரு பெண் தனது கணவனுக்குத் துணையாயிருந்து தாய் நாட்டிற்கு ஏற்பட்ட கொடிய கஷ்டங்களை நீக்கின தினமாகும். இந்த தினத்தை மிகப் புண்ய நாளென்று ஹிந்துக்கள் அனைவரும் அனுஷ்டித்துக் கொண்டாடி வருகின்றனர். இது ப்ரதி வர்ஷமும் துலாம் சதுர்த்தசி யென்று வழங்குவது வழக்கம். இதற்கு நரக சதுர்தசியென்றும் வழங்கிவருகிறது. மஹா உத்தம குணங்களை உடையவனும் கோர தபஸ்வியுமான நரகாஸுரன் என்னும் ராக்ஷஸன் மிகுந்த கர்வம்கொண்டு தேவதைகளின் மனம் கலங்கும்படியும், நல்லோர்களின் கண்களில் தூசியைப் போலவும், பெண்களின் முந்தானியில் நெருப்பைப் போலவும், ரிஷிகளின் கழுத்தில் பாம்பைப் போலவும் கொடிய துன்பங்களைச் செய்துவந்தான், அப்பேர்ப்பட்ட கொடியவனை ஸம்ஹாரம் செய்து, தேசத்திலுள்ள நல்லோர்களை ரக்ஷித்து துஷ்டர்களை வேரோடுகளைந்த தர்ம கைங்கர்யத்தில் ஸத்யபாமா தேவி ஸ்ரீக்ருஷ்ணபகவானுக்கு வலது கையாயிருந்து உதவி செய்தாள்.

ஸ்ரீ க்ருஷ்ணன் நரகாஸுரனோடு யுத்தம் செய்து கைகள் சளைத்துப் போகையில், பக்கத்திலிருந்த ஸத்யபாமாதேவி தன்னுடைய வீரத்தனத்தைக் காண்பித்து நரகாஸுரனைக் கொன்றாள். நரகாஸுரனோடு அதர்மங்கள் தொலைந்தன. தர்மங்கள் தலையெடுக்க ஆரம்பித்தன. தேசத்தில் ஸமாதான முண்டாகியது. ஸ்ரீ க்ருஷ்ண பகவானும், ஸத்யபாமாவும் செய்த தேச ஸேவைக்காக தேவர்களும், ஸாதுக்களும், ரிஷிகளும், இன்னு மற்றவர்களும் அவர்களை ஆசிர்வதித்து வாழ்த்தி ஸ்தோத்ரம் செய்தார்கள். தேசத்துக்கு ஸேவை செய்து துஷ்டர்களைப் போக்கி நல்லவர்களை ரக்ஷித்த நாளாகிய நரக சதுர்த்தசியில் ஸ்த்ரீ புருஷர்களாகிய நம்மவர்கள் தர்மம் துலங்கி சிறக்க, தீபாவளி பண்டிகையை நாம் ச்ரத்தையாகக் கொண்டாடவேண்டும். தர்ம ஸ்தாபனத்துக்காகப் பாடுபட்ட ஸ்ரீ க்ருஷ்ணனையும் ஸத்யபாமாவையும் மனதாரத் துதிக்கவேண்டும். இப்படிச் செய்வது நம்மவர்களின் கடமை யாகும்.

செல்வநாயகம்மாள்,

## WOMANS' DHARMAS

## ஸ்த்ரீ தர்மங்கள்

அநுராகபுத்ரியே! விவேகத்தினது மொழிகளுக்குச் செவி கொடு. உண்மையினது கட்டுரைகள் உன் மனத்தில் ஆழப் பதியட்டும். அதனால் உன் மனத்தின் ஸௌந்தர்யம் உனது உருவத்துக்குத் தேஜஸை யளிக்கட்டும். உன் அழகு தன்னை ஒத்திருக்கும் ரோஜா மலரைப்போல, வாடினபோதும் இனிமை பொருந்தியிருக்கட்டும்.

உன் யௌவனமாகிய வஸந்தகாலத்தில், அதாவது, உன் மங்கைப் பருவத்தில், மனிதர்களது கண் உன்னைக் களிப்போடு பார்க்கும்போது, அவர்களது ருசிகாட்டு மொழிகளை எச்சரிக்கையோடு கேள். உனது ஹ்ருதயத்தை நன்றாய்ப் பாதுகாத்துக்கொள். அவர்களது ஏமாற்று மொழிகளுக்குக் காது கொடுக்காதே.

மனிதனுடைய ந்யாயமான தோழியாயிருக்க நீ ஏற்பட்டாயே யொழிய அவனது காமவிகாரங்களுக்கு அடிமையாக நீ ஸ்ருஷ்டிக்கப்படவில்லை. மனிதனது உலக ச்ரமங்களில் அவனுக்கு உதவி புரியவும், உனது லளிதமான மொழிகளாலும் செய்கைகளாலும் அவனது கலக்கங்களை யாற்றவும், உனது அருமையான பாராட்டுகளால் அவனது கவலையை மாற்றவுமே, உன்னைக் கடவுள் ஸ்ருஷ்டித்ததின் நோக்கமென்று அறிக.

மனிதனது மனத்தைக் கவர்ந்து அவனை ந்யாயமான அன்புக்குள்ளாக்கி அவன் மனத்தில் அரசாளும் பெண் யார்? அதோ பார்! அவளே தன் மனத்தில் நிஷ்களங்கத்தோடும் தன் முகத்தில் நாணத்தோடும் கற்பமைந்த கன்னிகையாய் அங்கு செல்பவளாம். அவளது கைகள் தொழில் செய்யத் தேடுகின்றன. அவளது பாதம் வீணாய்த் திரியவிரும்புவதில்லை.

அவள் சுத்தமாய் உடுத்துக்கொண்டிருக்கிறாள்; மிதமான ஆஹாரத்தை யுண்கிறாள். தாழ்வும் ஸாதுத்தன்மையும் அவளது சிரஸில் க்ரீடமணிகள் போலுள்ளன. அவளது கண்டத்தில் விவேகம் அமைந்திருக்கிறது. தேனின் இனிப்பு அவள் அதரத்தினின்றும் ஒழுகுகிறது.

அவள் வார்த்தைகளில் எல்லாம் மர்யாதை அல்லது ஒழுக்கம் நிற்கிறது. அவளது பதிலில் அமைதியும் உண்மையும் குடியிருக்கின்றன. வணக்கமும், தாழ்வும், அவளது நடையின் படிப்பினைகளாம்; ஸமாதானமும், ஸுகமும் அவளுக்குக் கிடைக்கும் வெகுமதிகளாம்.

அவளுக்கு முன் விவேகம் நடக்கிறது. நன்னடத்தை அவளது வலது கைப்பக்கத்தில் செல்லுகிறது. அவள் கண்கள் ம்ருதுவையும் அநுராகத்தையும் காட்டுகின்றன. ஆனால், விவேகம், அவளது புருவங்களில் தன் செங்கோலோடு வீற்றிருக்கிறது.

விடர்களது நாக்கு அவள் முன்னிலையில் அடங்கிப்போகிறது. ஊரில் உண்டான அபவாதத்தினால் வளது பேர் ஒவ்வொருவருடைய நாக்கிலும் அடிபடும்போது, தர்மமும் நற்குணமும் கற்புடையவளது வாயைத் திறப்பியாதிருக்க, மௌனம் அவள் வாயைப் பூட்டிவைக்கிறது. அதனால் அவள் பிறரிடத்துத் தீங்குகளிருப்பதாக ஸந்தேஹிப்பதில்லை.

அவள் தன் வீட்டில் அமுல் செலுத்துகிறாள். அவ்வீடு சாந்தி மந்திரமாகிறது. அவள் நீதியாக அரசாட்சி செய்யும்போது எல்லாரும் அவளுக்குப் பணிந்து நடக்கிறார்கள். அதிகாலையிலெழுந்து தன் வேலையைச் செய்யப்புகுவதுடன் மற்றவர்களுக்கும் அவர்களது வேலைகளை நியமிக்கிறாள்.

அவளது குடும்பப் பாதுகாப்பில் அவளுக்குப் பரிபூர்ண ஸந்தோஷம். அதை அறிவதற்காகவே அவள் படிக்கிறாள்; சிக்கனமும், நேர்த்தியும் அவள் வீட்டிற் குடியிருக்கின்றன. அவள் குடும்ப கார்யத்தை விவேகமாய் நடத்துவது அவளது கணவனுக்குக் குலமர்யாதையைத் தருகிறது. அவளைப் பிறர் புகழ்வதைக் கேட்டுத் தனக்குள்ளேயே ஆநந்திக்கிறாள்.

அவள் தன் குழந்தைகளுக்கு ஸதா ஞானத்தைப் புகட்டுகிறாள். தன் நன்னடக்கையினாலேயே அவர்களது நடைகளை ஒழுங்குபடுத்துகிறாள். அவளது வாசகங்களே அக்குழந்தைகளுக்கு ஆணைகளாகின்றன. அவள் கண்வெருட்டிற்கு அவர்கள் கீழ்ப்படிகிறார்கள்.



அவள் தன் வாயைத்திறந்து ஏவினால் அவளது வேலைக்காரர்கள் ஓடுகிறார்கள். ஒரு உத்தரவு கொடுத்ததும் அவ்வேலை செய்து தீர்ந்துவிடுகிறது. அவள் காட்டும் பட்சம் அவர்களது காலுக்குச் சிறகு கட்டினது போலாகிறது. இவ்வளவும் அவளது அன்புக்காக நடைபெறுகிறது.

• வாழ்வு வந்தபோது அவள் பொங்கிப்போவதில்லை; தாழ்வு வந்தகாலத்தில் பொறுமையோடு தரித்ர கஷ்டத்தை யாற்றுகிறாள். அவள் தன் கணவனது கஷ்டங்களை அழகிய பேச்சுக்களால் நிவர்த்தியாக்குகிறாள்; அவளது பாராட்டுக்களால் அவை இனிமையாக்கப்படுகின்றன. அவன் தன் ஹிருதயத்தை அவள் நெஞ்சில் வைத்து ஆறுதலை யடைகிறான். அவளை மனைவியாகப் பெற்றவனே புண்ய புருஷன். அவளைத் தாயாகப் பெற்ற குழந்தையே பாக்யசாலி.

ஞானதீபிகை.

---

காலாகாலத்தில் செய்யவேண்டிய கார்யங்களை ஸரிவரச் செய்வதனால் தேகச்ரமமும் மனக்கஷ்டமும் குறையும். தற்காலம் பெரியவர்கள் என்று கூப்பிடப் படுகிறவர்கள் எந்தந்தக் காலங்களில் எந்தந்த வேலைகள் செய்ய வேண்டுமோ அவைகளை ஸரிவரசெய்திருக்கிறார்களென்று அறிந்துகொள்:—

ஹோமர்

* * *

ஒரு ஸமூகத்தார்களின் கட்டுப்பாடுகளுக்குப் பணிந்து நடக்கிறவன் பெரியவனென்று கூப்பிடப்படுகிறான். அவன் செய்கிற செய்கைகளையும் அவன் கொடுக்கும் புத்திமதிகளையும் அந்த ஸமூகத்தார்கள் பார்த்துக் கேட்டு அவைகளின்படி நடக்கத்துணிகிறார்கள் :—ராம் தீர்த்தர்.

* * *

மனிதர்களுக்கு ஒழுக்கம் தான்சிறந்தது. மற்றவைகளெல்லாம் தானாகக் கிடைக்கும். மனிதர்களை நல்லவர்களென்றும் கெட்டவர்களென்றும் நிதானிப்பது இந்த ஒழுக்கமே, இதுவே தான் உண்மையான தராசு :—

வேமன்னா.

* * * *

ஸ்த்ரீயில்லாத வீடுபாழ்; ஸ்த்ரீயிருந்து அவளிடம் ஒழுக்கமில்லாமலிருந்தால் அந்த வீடு விளங்காது. அந்த வீட்டில் லக்ஷ்மி தேவி நிலைத்து வாழமாட்டாள். இது உலக அநுபவம் :—அறிந்தவன்

# WOMAN'S WORLD
# ஸ்த்ரீ ப்ரபஞ்சம்

## HOME NEWS
## உள்நாட்டு வர்த்தமானம்

**Compulsory Education in Baroda.**

பரோடாவில் கட்டாயப்படிப்பு :—பரோடா ஸமஸ்தானத்தில் கட்டாயப் படிப்பு சட்டம் ஏற்படுத்தினதற்குப் பிறகு பெண்கள் பாடசாலைகளுக்கு ஜாஸ்தியாகப் போய்வருகின்றனர். வயதான ஸ்த்ரீகளுக்கும் ஸர்க்கார் வீட்டுப் படிப்புக் கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். அநேக வயதான ஸ்த்ரீகளும் வெகு ஸந்தோஷத்துடன் படித்து வருகிறார்களாம்.

**Home Education for women and Growu up Girls in Madras.**

சென்னையில் ஸ்த்ரீகளுக்கும் ருதுவான பெண்களுக்கும் வீட்டுப் படிப்பு :—சென்னை, ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தாரின் முயற்சியால் இப்போது ஐந்து உபாத்தினிகள் 40 வீடுகளுக்குச் சென்று வீட்டுப்படிப்பு போதித்து வருகின்றனர். இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டுச்சில மாதங்களேயாயினும் நல்ல அபிவ்ருத்தியடைந்திருக்கிறது. மேலும், சென்னையிலுள்ள இந்தியன் ஸர்விஸ் லீக் என்னும் சங்கத்தின் கார்யதரிசி ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தாரோடு ஒத்துழைக்க இசைந்திருக்கிறார். இனி இச்சங்கத்தாரின் முயற்சிகள் பரவுமென்று நம்பப்படுகிறது.

**A New Hindu Girls School in Washermanpet.**

வண்ணாரப்பேட்டையில் ஒரு புதிய பள்ளிக்கூடம்:—வண்ணாரப்பேட்டை ஹிந்து பெண்பாடசாலை என்ற பெயருடன் திருவொற்றியூர் ஹைரோட் 316-ம் நம்பர் வீட்டில் புதிதாக ஒரு பெண் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்துக்கு ராவ்பகதூர் P. தியாகராஜ செட்டியார் அவர்கள் ப்ரெஸிடென்டாக இருக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்.

**A woman's Gift.**

ஒரு ஸ்த்ரீயின் நன் கொடை :—பம்பாயிலுள்ள பார்ஸி ஜாதியைச் சேர்ந்த மிஸ்டர் H. A. வாடியா என்ற பார்ஸி கனவானின் மனைவியார் அவர்களின் புது வர்ஷப் பிறப்புதினத்தன்று ஒரு லக்ஷ ரூபாயை நன்கொடையாக எடுத்துவைத்திருக்கிறார். அந்த தர்மத்தில் ஏழை குடும்பத்தில் ஜனித்த பார்ஸீகப்பெண்களுக்கு விவாகம் செய்விக்கவேண்டும் ; அவர்களுக்கு குடியிருக்க ஸ்தலங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டும் ; பஞ்சத்தில் கஷ்டப்படுபவர்களும், இதர துர்க்கதியால் சங்கடப்படுபவர்களும், படிப்புக்கு வகையில்லாமல் தவிப்பவர்களுமாகிய இவர்களுக்கு ஜாதிவித்யாஸமில்லாமல் தக்கபடி பொருளுதவி செய்யவேண்டும்.

**Victoria Gosha Hospital.**

திருவல்லிக்கேணி விக்டோரியா கோஷா ஆஸ்பத்ரி :—இந்த ஆஸ்பத்ரி பணமில்லாமல் கஷ்டப்படுவதைக்கண்டு சென்னை கவர்ன்மென்டார் 5000 ரூபாய் கொடுப்பதாக உத்தரவு செய்திருக்கிறார்கள்.

**A Curious Birth**

ஒரு விசித்ர ப்ரஸவம் : திருச்சூருக்கு அருகேயுள்ள ஒரு க்ராமத்தில் ஓர் இழுவஜாதி ஸ்த்ரீ விகாரஸ்வரூபமுள்ள ஒரு குழந்தையைப் பெற்றாளாம். அது அடுத்த காலை இறந்துபோயிற்றாம். அதற்கு பெரிய தலையும், சிறிய வாலுமிருந்தனவாம். அதன் வாய் பெரிய மனிதர்களுக்கு இருப்பதுபோல் பற்களுடையதாயிருந்ததாம். அதன் அழுகைச் சப்தம் விபரீதமாயும், கழுத்திற்குமேல் குரங்கு வடிவமாயுமிருந்ததாம்.

**Another.**

வேறொன்று :—கல்கத்தாவைச் சேர்ந்த பாரிட்பூர் ஜில்லாவிலுள்ள மதன்பாரா என்னும் க்ராமத்தில், ஒரு பெரிய தன வந்தரின் குடும்பத்தில் ஒரு ஆச்சர்ய ஸம்பவம் நடந்தது. ஸமீபத்தில் அந்த குடும்பத்திலுள்ள எஜமானனுடைய மருமகளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அது பிறந்ததும் தாயானவள் வெகு அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். பக்கத்திலிருந்தவர்கள் இரட்டை ப்ரஸவமாயிருக்குமோ என்று தயங்கி இருந்தார்கள். இந்த ஸமயத்தில் அந்தப் பெண்ணானவள் ஆண் குழந்தையுமில்லாமல் பெண் குழந்தையுமில்லாமல் ஒரு ஆமையைப் பெற்றனளாம். அதற்கு நான்கு கால்களும் ரூபத்தில் தண்ணீர் ஆமை என்ன ரூபமோ அப்படியேயிருந்ததாம். சில மணி நேரங்கள் வரையில் ஆண் குழந்தையும் அந்த ஆமையும் உயிரோடிருந்தனவாம். பிறகு, இரண்டும் இறந்துவிட்டனவாம். சென்ற வர்ஷத்திலேயும் இதே பெண்ணுக்கு ஒரு குழந்தையும் ஒரு

குரங்கும் பிறந்தனவாம். அவைகளும் இறந்துவிட்டனவாம். அதற்கு முந்தின வர்ஷத்தில் இதேபெண் ஒரு ஆண் குழந்தையையும் மீன் ரூபம் போன்ற ஒரு நாக கன்னிகையும் பெற்றனளாம். இவைகளும் இறந்து விட்டனவாம்.

இந்த ஆச்சர்ய ஸமாசாரத்தை தன் கண்ணால் பார்த்த ஒரு நிருபர் கல்கத்தாவிலுள்ள பங்காளிப்பத்ரிகைக்கு எழுதியிருக்கிறார்.

**A Lecture on Women's Education.**

ஸ்த்ரீகளின் கல்வியைப்பற்றி ப்ரசங்கம் :—சென்னை கவர்ன்மெண்ட் ஸ்த்ரீ காலேஜ் ப்ரின்ஸிபாலாகிய மிஸ் டிலாஹே இம்மாதம் 23-ந் தேதி ப்ரிஸிடென்ஸி காலேஜ் சங்கத்தில் "ஸ்த்ரீகளின் கல்வியும் மாணவர்களின் கடமையும்" என்னும் விஷயமாக ஒரு நீண்ட உபந்யாஸம் செய்தார். அச்சமயம் திவான் பஹதூர் P. ராஜகோபாலாசாரியார் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார். உபந்யாஸகர் பெண்களுக்கு உயதரப் படிப்பு அவச்யமென்றும் தற்கால படிப்பு மேனாட்டுப் பழக்கவழக்க ரீதியை அடைந்திருந்ததேயானால் அதை கலாக்ரமத்தில் நம்மவர்களுக் கேற்ற விதமாக அமைத்துக் கொள்ளலாமென்றார். ஆகவே, பெண்கள் உயர்தரக் கல்வி படிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திப் பேசினார்.

**Lady Pentland Hospital**

லேடி பெண்ட்லண்ட் ஆஸ்பத்ரி :—ஆனரபில் ராவ் பஹதூர் S. Rm. M. அண்ணாமலை செட்டியார் அவர்கள் பெரு முயற்சியினால் ஸ்த்ரீகளுக்கும் குழந்தைகளுக்கும் வைத்ய சிகித்ஸை கிடைக்கும்படி ஒரு ஆஸ்பத்ரியை தமது ஊராகிய கானாடுகாத்தானில் ஸ்தாபித்திருக்கிறார். சென்ற மாதம் 21-ந் தேதி கானாடுகாத்தானுக்கு லார்ட் பெண்ட் லண்டு விஜயம் செய்திருந்த போது அதற்கு அஸ்திவாரக்கல் நட்டார். அந்த ஆஸ்பத்ரி கானாடுகாத்தான் லேடி பென்ட்லண்டு ஆஸ்பத்ரி என்ற பெயரால் வழங்கும்.

* * * *

இங்கிலாந்தில் ஸ்த்ரீ ஸ்வதந்திரவாதிகளின் சங்கம் ஏற்பட்டிருக்கிறது போல தென் ஆப்பிரிக்காவிலும் அவ்வூர் ஸ்த்ரீகள் சேர்ந்து ஒரு ஸ்த்ரீ ஸ்வதந்திர வாதிகளின் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.



## FOREIGN NEWS
## வெளிநாட்டு வர்த்தமானம்

**Women on Railway Service.**

ரயில்வேயில் ஸ்த்ரீகள் :—ப்ரான்ஸ் தேசத்தில் ஏறக்குறைய 25,000 ஸ்த்ரீகள் ஸ்டேஷன் மாஸ்டர்களாகவும், கார்டுகளாகவும், கூலிக்காரர்களாகவும், தச்சுவேலை செய்பவர்களாகவும், ப்ளாட்பாரம் பெருக்குபவர்களாகவும், வண்டிகளைச் சுத்தி செய்கிறவர்களாகவும், எஞ்சின்களை சுத்தி செய்பவர்களாகவும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

**Inventions of Women.**

பெண்மணிகள் கண்டுபிடித்த விஷயங்கள் :—உலகத்தில் நூதனமாகக் கண்டு பிடிக்கப்படும் விஷயங்கள் ஆண் மக்களாலேயே ஆகிறதென்றும், பெண்மக்கள் பிள்ளை பெறும் யந்த்ரங்களேயென்றும் பலர் எண்ணுகிறார்கள். ஆனால், விஷயங்களை ஆராயுமிடத்து இது தவறு என்று தெரிகின்றது. பெண்மணிகளும் பொது ஜனங்களின் நன்மையின் பொருட்டு பலவிஷயங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். கம்பியில்லாத் தந்தியை அபிவ்ருத்தி செய்தது ஒரு பெண்மணி என்றும், செவிடர்களின் காது கேழ்க்கும்படியான ஸாதனத்தைத் தேடினவர் லிலியன் லெவர்ஸன் என்னும் மாதராள் என்றும் க்ராமபோன் முதலான வாத்யங்களைச் சீர்திருத்தம் செய்ய முறைகளைத்தேடியவர் ரோஸாவெல்டன் என்ற மாதராள் என்றும் தெரிகிறது

**Re-Marriage in Arabia.**

அரேபியாவில் புனர் விவாகம் :—அரேபியா தேசத்து ஸ்த்ரீகள் தங்களுடைய முதற் புருஷன் இறந்த பிறகு, மறுவிவாகம் செய்துகொள்ள வேண்டுமானால், அவர்கள் கல்யாணத்திற்காக குறித்திருக்கும் நாளைக்கு முந்தின ராத்ரி தன் புருஷன் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு ஒரு கழுதையின்பேரில் ஆட்டுத் தோலினால் செய்யப்பட்ட இரண்டு குடங்கள் நிறைய குளிர்ந்த தண்ணீர் கொண்டுபோவாள். அங்கு போனவுடன், கல்லறைக்கு எதிரே முழங்காலிட்டு இறந்த கணவனைக் குறித்து ஸ்தோத்ரம் செய்து, தான் மறுவிவாகம் செய்து கொள்ளப்போவதாயும், தன்பேரில் கோபமும் பொறாமையும் கொள்ளாமலிருக்கும்படியாயும் வேண்டிக்கொள்வாள்.

## I
## CONCERNING CHILDREN
### குழந்தைகள் விஷயம்

**Night terrors**

இரவில் திடுக்கிடல்:—குழந்தைகளை எந்தக் காரணத்தினாலும் பயமுறுத்தக் கூடாது. பகலில் பயமுறுத்தப்பட்ட குழந்தைகள் இரவில் படுத்தவுடன் பாதி தூக்கத்தில் திடுக்கிட்டு எழுந்திருக்கும். சிலவேளை பலமாகக் கத்தும். ஏதோ தங்கள் கண்ணில் பயங்கரமான மனிதனையோ வேறு ப்ராணிகளையோ கண்டதாகக்கூறும். அக்குழந்தைகளுக்கு வியர்வை யுண்டாகும். நடுக்கமும் உண்டாகும். சில ஸமயங்களில் அந்த நடுக்கத்தை ஒட்டி ஜுரமும் வரும். பிறகு, ஒவ்வொரு இரவும் படுக்கைக்குப் போகும் போதெல்லாம் நடுங்கும். இதைப் பெற்றோர்கள் சரியாகக் கவனிக்கா விடில் குழந்தைகள் மிகவும் இளைத்துக் கெட்டுப் போகும்.

**Treatment of night terrors**

நடுக்கங் களுக்குப் பரிஹாரம்:—இரவில் குழந்தையைப் படுக்கவைக்கும் போது அது தூங்குகிற வரையிலும் தாய் பக்கத்திலிருக்கவேண்டும். எப்போதும் படுக்கையறையில் ஒரு சிறுவிளக்கெண்ணெய்விளக்குயெரிந்து கொண்டிருக்கவேண்டும். குழந்தை எதற்கும் பயந்துகொண்டு தூக்கத்தை விட்டு எழுந்திருந்தால் நல்ல தைர்ய வார்த்தைகளால் தேற்றி அதைத் தூங்கச் செய்யவேண்டும். சில தாய்மார்கள் பூனைவந்து பிடித்துக் கொள்ளு மென்றும், கள்ளன் வந்து பிடித்துக்கொள்வானென்றும் பயமுறுத்தித் தூங்கவைக்கிறார்கள், அப்படிச் செய்கிறது மிகவும் குழந்தைக்குக் கெடுதி என்பதைத் தாய்மார்கள் கவனிக்கவேண்டும்.

**Conversing with Children**

குழந்தைகளுடன் பேசுதல்:—மிகவும் சாந்தமாயும் இன்பமாயும் குழந்தைகளுடன் பேசவேண்டும். அவங்கிய வார்த்தைகளைக் குழந்தைகள் எதிரில் உச்சரிக்கக் கூடாது. குழந்தைகளை ப்ரியத்தோடு அழைக்கவேண்டும். கெட்ட வார்த்தைகளால் குழந்தைகளைத் திட்டக்கூடாது. நல்ல பழக்கங்களைக் குழந்தைகளுக்குப் பழக்கவேண்டும்.

**Hooping Cough**

கக்குவாய் இருமல்:—இது ஒட்டுவாரொட்டியானது. இது ஸாதாரணமாகக் குழந்தைகளுக் குண்டாகும். வயதானவர்களுக்கு இது வராது. வந்தால் சொஸ்தமாவது ச்ரமம். வஸந்தகாலத்திலும் கோடை காலத்திலும் இந்த வ்யாதி பரவும். இது ஒரு குழந்தைக்கு வந்தால் அந்தக் குடும்ப முழுமையும் பரவி மிகத் தொந்தரவு கொடுக்கும். இந்த வ்யாதி வந்தால் ஆறு முதல் 12 வாரம் வரையிலுமிருக்கும். சில ஸமயங்களில் இது வலிப்பை யுண்டாக்கும். குழந்தைகளை மிகவும் இளைக்கச்செய்யும். இவ்வியாதி கண்டவுடன் குழந்தை வைத்யம் செய்யும் பேர்போன வைத்யர்களிடம் காண்பித்து பெற்றோர்கள் தகுந்த சிகித்ஸையைச் செய்யவேண்டும்.

**Moral Instruction to Children**

குழந்தைகளுக்கு ஸன்மார்க்க போதனை:—தாயார் தான் படித்திருக்கிற வீரர்களின் சரித்ரங்களையும், புண்ய கதைகளையும் தன்னிடத்தில் குழந்தைகள் ஸந்தோஷமாயிருக்கும்போது எளிய நடையில் குழந்தைக்குப் புரியும்படி இன்பமாய்க் கதைபோல் சொல்லி வரவேண்டும். கதைகள் சொல்லும்போது சொஞ்சங்கூட முகம் கோணுமலிருக்கவேண்டும்.



THE
# FEMALE EDUCATION
AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE
# பெண் கல்வி
சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதப்பத்ரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Vol. 6. தொகுதி 6. } நளஹூ கார்த்திகைமீ Novr. 1916. } No. 2. பகுதி. 2.

ஓம்

அனந்யாச் சிந்தயந்தோமாம் ஏஜனா: பர்யுபாஸதே!
தேஷாம் நித்யாபி யுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் !!

உலகத்தில் ப்ரபுக்களாலும், ராஜாக்களாலும், ஏக சக்ரவர்த்தியாலும், தேவர்களாலும் கொடுக்கமுடியாததும் கொடுப்பதாகக் கனவில் எண்ணமுடியாததுமான ஒரு அபயத்தை மானிடர்களாகிய நமக்குக் கொடுத்திருக்கிற அந்த ஸர்வ வல்லமையும் கருணாநிதியுமான ஸ்ரீ பகவான் சொல்லுகிறார். "ஏ அர்ஜுனா! எவர்கள் வேறு ஒருவரையும் நினைக்காமல் என்னையே ஸதா காலம் ஒரே மனதுடன் ஸந்தோஷமாக த்யானித்துப் பூஜைசெய்து வருகிறார்களோ அதாவது எவர்கள் களங்கமற்ற மனதுடன் ஸுகதுக்கங்களை ஸமமாகப் பாவித்து மனத் திருப்தியாக உலகப்பற்றில்லாமல் ஈசா நீயே கதி என்று என்னையே சரணமடைந்து உலகத்தில் என்னைத் தவிர வேறு ஒருவருமில்லையென்று என்னையே பூஜை செய்து வருகிறார்களோ அவர்களை நான் காப்பாற்றுகிறேன்; அதாவது, அவர்களுடைய யோகக்ஷேமத்தை நான் வஹித்துக் கொள்ளுகிறேன். அதற்கு ஸம்சயமேயில்லை" என்று சொல்லியிருக்கிறதை நாம் ஸதா காலமும் நினைக்கவேண்டாமா? அதைர்யம், அநீதி, அநாசாரம் முதலிய கெட்ட குணங்களை உருவெடுத்து வந்திருக்கிற இந்த மானிட ஸமூகங்களினின்றும் நாம் எப்படி ஈடேற முடியும்? ஸஹோதரிகளே! அந்த ஸர்வ தயாநிதியையே பூஜை செய்யுங்கள்; கடைசியாக, நாம் நல்ல கதியைப் பெறலாம். இது நிச்சயம்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

# PROGRESS OF THE WORLD

# ப்ரபஞ்சப் போக்கு

**Aim of Moral Education**

**ஸன்மார்க்கப் படிப்பின் நோக்கம் :**—வங்காள கவீச்வரராகிய பாபு ரபீந்த்ரநாத் டாகூர் அவர்கள் தமது வாஸஸ்தானமாகிய போல்பூர் என்னும் க்ராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்திருக்கிறார். அப்பாடசாலையில் நடத்தப் பட்டுவரும் ஸன்மார்க்கப் படிப்பின் நோக்கத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியம். பிள்ளைகள் தங்கள் வாழ்நாளில் படுகிற கஷ்டங்களையும் நாசத்துக்குக் காரணமாயிருக்கப்பட்ட ஆசைகளையும் ஜயித்துத் தங்களுடைய வாழ்க்கை லக்ஷ்யத்தை ஸுலபமாக அடைவதற்கென்றே அங்கு ஸன்மார்க்கப் படிப்பு கற்பிக்கப்பட்டு வருவதின் முக்கிய நோக்கமாயிருக்கிறதென்று அறிகிறோம். இந்த நோக்கம் முற்றிலும் உண்மையானதாகும். ஸன்மார்க்கப் படிப்பில்லாதவன் ஆசைகளை விலக்க முடியாதவனாய் விடுவான். தன்னை அடக்கியாள முடியாதவன் தப்பு வழிகளில் கட்டாயம் புகுந்து கெடுவான். கடைசியாக அவன் தன் வாழ்க்கையை துக்ககரமாகக் கழித்தே தீரவேண்டும். ஆகவே, ஸன்மார்க்கப் படிப்பில்லாமல் வேறுவிதமான படிப்புகள் எவ்வளவு படித்தாலும் நல்ல பலனைத் தரமாட்டாவென்று உறுதியாய் அனுஷ்டித்து வருகிற அந்த ஸ்கூல் அதிகாரிகளின் கொள்கையை நாம் மதிக்கிறோம். தெய்வீக மணம் வீசுகின்ற படிப்பே சிறந்தது. அதைத் தவிர்த்து வேறு எந்தப் படிப்புகள் உயர்ந்திருந்தாலும் அவைகள் நல்ல புத்திமான்களால் மதிக்கப் படாதவைகளாகும்.

**Muhamadan Women Education**

**மஹம்மதிய ஸ்த்ரீகளின் கல்வி :**—சென்றமீ 28-ந் தேதி வாணியம்பாடியில் ஒரு மஹம்மதிய கல்விக் கான்பரன்ஸ் நடந்தது. அச்சமயம் நிஜாம் ராஜ்யத்துக் கார்ய தரிசியாகிய மிஸ்டர் ஹைதரி அக்ராஸனம் வஹித்தார். அக்கான்பரன்ஸில் ஆண் பிள்ளைகளின் படிப்பை வ்ருத்தி செய்வதற்குப் பல யோசனைகள் சொல்லிய தோடிராமல் பெண்களின் படிப்பையும் அதன் உபயோகத்தையும் பற்றி மிஸ்டர் ஹைதரி மிகவும் தெளிவாகப் பேசினார். மேலும், ஒவ்வொரு மஹம்மதியனும் ஸ்த்ரீகளின் படிப்பு விஷயமாக முயற்சி



எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், ஸ்த்ரீகளின் படிப்பினாலேயே நம் இந்திய தேசம் முன்னுக்குவர வேண்டியிருக்கிறதென்றும் வந்திருந்தவர்களை அவர் உத்ஸாஹப் படுத்திப் பேசினார். மஹம்மதிய ஸ்த்ரீகளின் படிப்பு விஷயமாக போபால் பீகம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளைத் தாங்கிப் பேசி, ஆண் பிள்ளைகளின் படிப்பை பெண் பிள்ளைகளுக்குக் கொடுக்கக்கூடாதென்று மஹம்மதியப் பெண்களின் படிப்பு விஷயமாக அக்கறை எடுத்துக்கொண்டு உழைத்து வருபவர்களுக்கு எச்சரிக்கை செய்தார். மஹம்மதிய ஸ்த்ரீகளுக்கு எத்தகையக் கல்விக் கொடுக்கலாமென்பதையும் எவ்வளவு தூரம் அவர்களைப் படிப்பிக்கலாமென்பதையும் விசாரிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தும்படி வேண்டிக் கொண்டார். மிஸ்டர் ஹைதரி ஸ்த்ரீகளின் படிப்பு விஷயமாகச் சொன்னவைகள் யாவும் கவனிக்கக் கூடியவைகளாகும். தற்காலம் காலரீதியை உற்று நோக்கும்போது அது வெகு துரிதமாகச் செல்லுகிறதை நாம் காணலாம். மஹம்மதியர்கள் தங்கள் ஸ்த்ரீகளின் படிப்பு விஷயமாக காலப்போக்கை அறிந்து அதற்குத் தக்கபடி நடந்து வருவதுதான் ஒழுங்கும் பெருமையுமாகும்.

**Children's Laziness in Schools**

**பாடசாலைகளில் சிறுவர்களின் சோம்பேரித் தனம் :**—பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் சோம்பேறித் தனத்தினால் பாடங்களை ஸரிவரக் கவனிக்காமலும், அவைகளைப் படிக்காமலுமிருந்து வருகிறதை நாம் காண்கிறோம். சில உபாத்யாயர்கள் அவர்களின் சோம்பேறித்தனம் போகிறதற்கு சில ஸமயங்களில் அவர்களை அடிக்கிறார்கள். அப்படிச் செய்வதனால் பிள்ளைகள் திருந்துவதில்லை. பிள்ளைகளின் சோம்பேறித்தனம் நீங்குவதற்கு பாரிஸ் நகரிலிருக்கும் ப்ரபல டாக்டரான மிஸ்டர் நேடியர் என்பவர் பின் வருமாறு தெரிவிக்கிறார் :—

"பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலும் சில மாணவர்கள் படிப்பில் அக்கறை யில்லாது சோம்பலுடன் சும்மா உட்கார்ந்திருக்கப் பிரியப்படுகிறார்கள். உபாத்யாயர் ஒரு பையனை மிகவும் சோம்பேறியென்று அனுபவத்தில் நிச்சயித்து விடுவாரேயானால், உடனே திறமையுள்ள வைத்யரைக் கொண்டு அப்பையன் உடம்பை நன்றாய்ப் பரீட்சை செய்யச் சொல்லவேண்டும். அவ்வாறான பையன்களை டாக்டர்கள் பரிட்சித்துப் பார்ப்பார்களாயின், பையனுடைய மந்தத்

திற்குக் காரணம் அவன் உடலின் கூறுபாடே என்பது தெளிவாகும். தாராளமாய் ச்வாஸிக்க முடியாததாலும், சரிவர உடலில் இரத்த ஓட்டமில்லாததாலும், மூளையில் சில கோளாறுகள் உண்டாகி, அதனால் ஒருவித மயக்கமுண்டாவதாலும், சில பையன்கள் சோம்பேறிகளாய் விடுகிறார்கள். 9 வயதாகியும் ஓரெழுத்துகூட அறியாதிருந்த சில பையன்களைப் பரீக்ஷித்துப் பார்த்ததில், மேலே கண்ட கோளாறுகள் அவர்கள் உடலிற் காணப்பட்டன. ஆகையால், சோம்பேறிப் பையன்களைப் பிரம்பு கொண்டடித்து மந்தத்தனத்தைப் போக்க முயலாமல், ஸரியான வைத்ய சிகித்ஸை செய்வதே நலம்.”

# SPECIAL ARTICLES
# •விசேஷ வ்யாஸங்கள்

## WOMEN AND FASTS

By

Sri R. Jayalakshmi Ammal

## ஸ்த்ரீகளும் வ்ருதங்களும்

தற்காலம் நமது தேசத்தில் ஹிந்து ஜனங்களால் அநுஷ்டிக்கப்படும் வ்ருதங்கள் கணக்கற்று இருக்கின்றன. இவைகள் எல்லாம் ஆதிகாலத்திலிருந்து உண்டானதல்ல. நாகரீகமுற்போக்கை அநுஸரித்து காலக்ரமத்தில் இவைகள் வ்ருத்தி யடைந்திருக்கின்றன என்று ஊஹிக்க வேண்டியிருக்கிறது.

### வ்ருதங்கள்

ஜனங்கள் ஸஹஜமாக வ்ருதங்களைப் பண்டிகைகளாகவும் பண்டிகைகளை வ்ருதங்களாகவும் பேதமில்லாமல் உபயோகிக்கிறார்கள். ஆனால், இவைகளின் உற்பத்தி அர்த்தத்தை யோசித்து, அநுஷ்டிக்கப்படும் தன்மையை ஒப்பிட்டுப் பார்த்தால் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று விரோத பதங்களா யிருக்கின்றன. வ்ருதம் என்கிற ஸம்ஸ்க்ருத பதத்துக்கு நோன்பு என்று பெயர். வ்ருதமென்றால் தள்ளவேண்டியவை என்றர்த்தம். வ்ருதங்களுக்கு கால பரிமாணம் உண்டு. வ்ருதம் ஆரம்பித்து முடிவை அடையாவிட்டால்



அபசாரம் ஸம்பவிக்கும். ஆகையினால், வ்ருதங்களில் தன் இஷ்டப்படி இருத்தல் கூடாது.

### வ்ருதாதிகாரம்.

பதிகாமம்ச பர்த்தாரம் ஸௌபாக்யம்ச ஸுமங்கலீம் ।
விதவா பூஜயித்வாது வைதவ்யம் நாப்நுயாத் க்வசித் ॥

பதியைக் கோரி கன்னிகைகளும் மாங்கல்யத்தைக் கோரி ஸுமங்கலிகளும் இனி வைதவ்யம் கூடாதென்று விதவைகளும் வ்ருதத்தை அநுஷ்டிக்கலாமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஸ்த்ரீகள் ஸ்வதந்த்ரமாய் வ்ருதங்களை அநுஷ்டிக்கக் கூடாதென்றிருக்கிறது. கன்னிகைகள் ஏதாவது வ்ருதத்தைச் செய்யவேண்டுமென்று இச்சைகொண்டால் கன்னிகைகள் தகப்பனாரிடமிருந்தும் ஸுமங்கலிகள் பதியினிடமிருந்தும், விதவைகள் புத்ரனிடமிருந்து ஆக்ஞையைப்பெற்றுச் செய்யவேண்டும்.

பூர்வம் ஸ்த்ரீகள் ஸ்வதந்த்ரமாக வ்ருதங்களை அநுஷ்டித்ததினால் நிஷ்பலர்களாகி விட்டார்களென்று தெரியவருகிறது. குந்திதேவி கன்னிகையாயிருந்தபோது தன் பிதாவினுடைய க்ருஹத்தில் சூர்யனை ஆராதித்து வ்ருதமிருந்தாள். அந்த வ்ருதத்தின் பலனால் கர்ணனைப் பெற்று பெட்டியில் வைத்து நதியில் எறிந்துவிட்ட கதை ஸ்ரீ மஹாபாரதத்தில் ஸ்பஷ்டமாய்த் தெரியவரும். கவுண்டன்ய ரிஷியின் பார்யையாகிய சீலாதேவி பதி யாக்ஞை பெறாமலே அனந்த வ்ருதத்தைச் செய்து ஸகல ஐச்வர்யத்தைப் பெற்றாளென்றும் அதை யறிந்த கவுண்டன்யர் நோம்புக் கயிற்றை அக்னியில் எறிந்தாரென்றும் தெரிய வருகிறது. கடைசியாக, ஸ்த்ரீகள் எந்த வ்ருதத்தையும் புருஷர்கள் அநுமதியில்லாமல் செய்யக் கூடாது.

மந்த்ரங்களோடு கூடின வேதவ்ருதங்கள், வைதிக வ்ருதங்கள் புராணத்தில் சொல்லப்பட்ட கல்பங்களுடன் கூடின பௌராணிக வ்ருதங்கள் முதலியவைகளைச் செய்ய ஸ்த்ரீகளுக்கு அதிகாரம் கொடுபடவில்லை. ஆயினும், ஸ்த்ரீகள் அநுஷ்டிக்கக் கூடிய வ்ருதங்கள் அநேகமிருக்கின்றன. பெண்ணாகப் பிறந்தவர்கள் வயது காரணமில்லாமல் விவாகமானவுடனே சிறு பெண்கள் கூட வ்ருதங்கள் செய்ய லாயக்குள்ளவராகின்றனர். பொதுவாக வ்ருதங்கள் ஸௌபாக்யத்தைக் குறித்து கௌரியையும், ஸம்பத்தைக் குறித்து லக்ஷ்மி

யையும், வித்தையைக் குறித்து ஸரஸ்வதியையும், பாபஹரணார்த்தம் துளஸியையும் பூஜிக்கு தன்மையாயிருக்கின்றன.

ஸ்த்ரீகளுக்கு வ்ருதமென்பது மந்த்ரோபதேசம். பதியே மந்த்ரத்தோடு கூடிய தெய்வமாகும். அவர் தான் ஜகமெங்கும் நிறைந்திருக்கும் பகவான். இவ்விஷயம் மனதில் திடமாக இருக்கும் பொருட்டு நோன்புகள் செய்யப்பட்டு வருகின்றன. அதனால் தெய்வ பக்தியும் அது வழியாக பதி பக்தியும் உண்டாகிப் பலப்பட்டு ஞானமுண்டாகும். அதனால் மோக்ஷ ஸாம்ப்ராஜ்யமும் அடையலாமென்பது முக்கிய அபிப்ராயம். இன்னும் அநேக உத்தேசங்களுமுண்டு.

வ்ருதங்கள் இன்னின்ன இடங்களில் செய்ய வேண்டியது என்ற நியமம் உண்டு. சில வ்ருதங்கள் வீட்டுக்கு முன் பாகத்திலேயும், சில அக்னிஹோத்ரசாலையிலேயும், சில பசு மாடுகள் தங்கும் இடத்திலேயும், சில ப்ருந்தாவனத்துக்குச் சமீபத்திலேயும், சில தேவாலயங்களிலேயும், சில தோட்டங்களிலேயும், ஜல ஸமீபத்திலேயும் செய்யவேண்டுமென்று நியமம் இருக்கின்றன. சரீரத்தை ரோகமில்லாமல் செய்துகொள்ளவேண்டியதன் பொருட்டும், தர்மத்தை அனுஸரிக்கும் பொருட்டும் வ்ருதங்கள் செய்யப் படுகின்றன.

தற்கால புருஷர்களில் அநேகர் நமது தேச பாஷையைவிட்டு, ஆங்கிலேய வித்தையினுடைய வாஸனா பலத்தினாலேயோ, ப்ரகிருதி சாஸ்த்ரப் பாண்டித்யத்தினாலேயோ, இதர தேசத்தார்களுடைய ப்ரஹ்ம ஸமாஜம் போன்ற ஸமாஜங்களில் சேர்ந்தவர்களின் ஸஹவாஸத்தினாலேயோ, வித்யாதிகாரிகள் எல்லோரும் ஸேவகா வ்ருத்தியில் இருப்பதனாலேயோ, மேனாட்டு நாகரீக ஆசாரப் போக்கில் புத்திமேலிட்டோ, அல்லது மீதி தேசங்களைப்போல நம்முடைய தேசமும் நல்ல தசைக்குவர வேண்டுமென்று ஸத்புத்தியினாலேயோ, அல்லது எந்தக்காரணத்தினாலேயோ, இந்து மதாசாரத்திற்கு விரோதிகளாய் விக்ரஹ ஆராதனையை விட்டு இருப்பதனால் பூர்வாசாரங்களெல்லாம் இந்து தேச நாரீமணிகளினால் தாங்கப்பட்டிருக்கிறது. மேலும், நம்பெண்களை மேனாட்டு துரைசானிகளாகமாற்றிவிடவேண்டுமென்று வெகுபாடுபடுகிறார்கள். தெய்வம் எப்படி செய்யுமோ நாமறியோம்.

ஆர். ஜயலக்ஷ்மி அம்மாள்

# MARRIAGE CUSTOMS AMONG NAIRS

By

**Sri R. Rajammal**

## நாயர்களும் அவர்களின் விவாக வழக்கங்களும்

கேரள தேசத்தில் நாயர்மார்களின் விவாக முறைகளை நம் ஸஹோதரிகள் அறிய விரும்புவார்களாகையால் சுருக்கமாக இங்கு வரைகிறேன். தென்னிந்தியாவில் வசிக்கும் மற்ற ஜாதிகளுக்குள்ளிருக்கும் விவாக வழக்கங்களைக் காட்டிலும் நாயர்களின் விவாகவழக்கங்கள் வெகுதூரம் வித்யாஸமுள்ளவைகளாயிருக்கின்றன. மலையாளத்துக்குப் புதிதாகப்போகிறவர்கள் நாயர்களின் விவாகங்களைப் பார்த்து ஆச்சரியப்பட நேரிடும் நாயர் ஜாதியில் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் தன் வாழ்க்கையில் இருதரம் விவாஹம் செய்துகொள்ளுகிறாள். முதல் விவாஹம் ருதுவாகிறதற்கு முன்னும் மறுவிவாஹம் ருதுவான பிறகும் நடக்கிறது. முதல் விவாஹம் செய்துகொண்ட பெண் பழக்கப்படியாவது அல்லது சட்டப்படியாவது முதல் தாலி கட்டினவனுக்குக் கட்டுப்பட்டவளல்ல. அவனும் இவளுக்குக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால், கல்யாணம் சாஸ்த்ரப்படி வெகு மும்முரமாக நடக்கும். இரண்டாவது விவாஹம் விமரிசையாக நடக்காது. இருந்தும், இரண்டாவது கல்யாணம்தான் வெகு முக்யம். ஏனென்றால், அது ஒரு பெண்ணை ஒருவனுக்கு மனைவியாகச் செய்கிறது. நிற்க, விவாஹம் எப்படி நடத்தப்படுகிறதென்றுக் கவனிப்போம். முதல் கல்யாணம் தாலி விவாஹமென்று பெயர். பெண்ணுக்கு 9 அல்லது 10 வயதானவுடன் அவளின் பெற்றோர்கள் அவளுடைய விவாஹத்துக்கு ஏற்பாடு செய்கிறார்கள். முகூர்த்தநாள் குறித்து, அந்த நாளில் விவாஹச் சடங்குகள் ஏராளமாக நடைபெறுகின்றன. ருதுவாகாத பெண்கள் எவ்வளவுபேர் அந்த வீட்டிலிருக்கிறார்களோ அவர்களுக்குப் புது ஆடைகள் கட்டி கல்யாணப் பந்தலுக்குத் தங்களது மாமன்மார்களால் கொண்டுவரப் படுகிறார்கள். வயதுக்ரமப்படி பெண்கள் வரிசையாக உட்கார்ந்த பிறகு, க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்த திருமல்பத் என்ற பட்டப் பெயருள்ளவன் தயாராக இருந்து கல்யாணப் பெண்களில் வயதான பெண்ணுக்கு முதல் தாலியை சரியான லக்னத்தில் கட்டுகிறான். பிறகு, தன் கையைச் சுத்தமாகக் கழுவிவிட்டு வயதுக்ரமப்படி கடைசி வயதுபெண்கள் வரை முன்போல கட்டுகிறான். இப்

படி ஒவ்வொரு பெண்ணுக்கும் தாலி கட்டிவிட்டுக் கையைக் கழுவுவதுதனக்கும் அதனால் தாலி கட்டப் பட்ட பெண்ணுக்கும் யாதொரு ஸம்பந்தமில்லை யென்பதைக் குறிக்கிறதாம். விவாஹ உத்ஸவம் நான்கு நாட்கள் நீடிக்கும். பந்து மித்ரர்களுக்கு யதேஷ்டமாக அன்னமளிக்கப்படும். பூரிகள் கொடுக்கப்படும். நாலாவதுநாள் ஊர்வலம் வெகு மும்முரமாக புறப்பட்டுவரும். அன்று ஆலயத்துக்குச் சென்று மண்டகப்படிகள் செய்வார்கள். கடைசி தினம் ஸமஸ்த ஜனங்களுக்கும் விருந்தளிக்கப்படும். ஏழையாயிருந்தாலும் கடனாவது கனத்த வட்டிக்கு வாங்கிச் செலவழிப்பான். முதல் விவாஹம் இப்படியாக முடியும்.

இப்போது இரண்டாவது விவாஹத்தைக் கவனிப்போம். இந்த இரண்டாவது கல்யாணந்தான் நாயர் பெண்களுக்கு மிகவும் அவசியம். தடபுடலாக முதல் விவாஹம் மாதிரி கடன் வாங்கியாவது செலவழிக்கிறது கிடையாது. பெண் ருதுவானபிறகு அப்பெண்ணின் பெற்றோர்கள் தங்கள் பந்துக்களுக்குள் தகுந்தபடி மனதுக்கு பிடித்தமான ஒரு மாப்பிள்ளையை தேடுவார்கள். இந்தக் கல்யாணத்தில் பிள்ளையின் ஸம்மதத்தையாவது பெண்ணின் ஸம்மதத்தையாவது கேட்கிறது கிடையாது. பெற்றோர்கள் இஷ்டப்படி ஒரு தினம் குறிப்பிடப்படும். பிள்ளைவீட்டார் தங்கள் பந்துமித்ரர்களுடன் கல்யாணப் பெண் கட்டிக்கொள்ள உயக்த ஆடைகள் கொண்டுபோவார்கள். அன்றைய தினம் குறிப்பிட்ட லக்னத்தில் பிள்ளை அந்த ஆடைகளையும் நகைகளையும் பெண்ணிடம் கொடுப்பான். அப்போது பெண்வெகு மரியாதையுடன் கல்யாணத்துக்கு வந்திருந்தவர்கள் முன்னிலையில் அவன் கையிலிருந்து வாங்கி, அதைக் கொண்டு போய் அலங்கரித்துக்கொண்டு வருவாள். இந்த ஒரு சடங்கினால் தான் அப்பெண் இந்த பிள்ளைக்குக் கட்டுப் பட்டவளாகிறாள். இவன் தான் நாயகன். தெய்வமே இவன்தானென்ற எண்ணம் பெண்ணுக்கு போதிக்கப்படுகிறது. வாழ்க்கையில் இருவர்களும் கஷ்டஸுகங்களைப் பங்கிட்டுக் கொண்டு வெகு அன்புடன் வாழ்ந்துவரவேண்டும். இந்தவிவாஹம் ஸமூகச்சட்டத்தினால் ஆதரிக்கப் படுகிறதே யன்றி வேறில்லை. ஒருவருடன் ஒருவர் வாழ்நாளில் ஒத்து வாழவிருப்பமில்லாதவர்களாக இருந்தால் விவாஹத்தை ரத்துசெய்து கொள்ளலாம். இப்படியாக அநேககேஸ்கள் நடைபெறுகின்றன. இங்கு ஒன்று



மட்டும் கவனிக்கத் தக்கது. மற்ற ஜாதிகளில் புருஷன் பெண் ஜாதிக்குள் மனஸ்தாபமுண்டானால் ஒருவர் இறக்க ஒருவர் ப்ரார்த்திக்கிறதும் ஒருவரையொருவர் ஆயுள்வரை வெறுக்கிறதுமாக இருக்கின்றனர். ஆனால், நாயர் ஜாதியில் புருஷன் பெண்ஜாதிக்குள் கடுமையான மனஸ்தாபமுண்டானால் அவர்கள் வேறு விவாஹம் செய்துகொள்ளலாம். பர்வமடைந்து நாயர்பெண்களுக்கும் புருஷர்களுக்கும் விவாஹமாகிறதால், இருவர்களின் ஸம்மதத்தைக் கேட்டு விவாஹம் செய்விப்பது மிகவும் மேன்மையானது. இப்போது படித்தவர்கள் ஒருவருடன் ஒருவர் ஸம்மதம் பெற்று விவாஹம் செய்து கொள்கிறார்கள். மற்ற ஜாதிகளைப்போல ஆயுள் முழுவதும் துக்கமுள்ளவர்களாய் புருஷன் பெண்ஜாதி வாழ்க்கையில் கஷ்டப்படுகிறதில்லை. நாயர்கள் ஜாதி விவாஹம் மிகவும் ச்லாக்யமானதாகக் கருதப்படுகிறது. நாயர் ஸ்த்ரீயாவது புருஷனாவது தங்களுக்கு இருக்கும் ஸ்வதந்த்ரத்தைக் கொண்டு மதம் பிடித்துத் தப்பு வழியில் நடக்கக் கூடாது. வெகு காலமாக விவாக முறைகள் அமைக்கப்பட்டு நடைபெறுகிறதினால் அந்த மாதிரி விவாஹ முறைகளை மாற்ற ப்ரயத்தனப் படுவது அறிவின்மையாகும்.

ஆர். ராஜம்மாள்.

---

## INDIAN WOMEN'S EDUCATION
## A RETROSPECT

**By**

**Mrs. Ramachandra Revathi**

## இந்திய ஸ்த்ரீகளின் கல்வி

### முற்கால நிலைமையின் ஆராய்ச்சி

இந்தியாவில் ஸ்த்ரீகளின் கல்வி நிலைமையை வ்ருத்திபடுத்த கவர்ன்மெண்டாரும், ஜனப்ரதிநிதிகளும், மற்றும் பரோபகாரமுள்ள தனவந்தர்களும் ஆங்காங்கு முயற்சி செய்து வருகிறார்கள். இவர்களின் முயற்சிகள் வீணாகப் போகவில்லை. ஸுமார் ஐம்பது வர்ஷங்களுக்கு முன் ஸ்த்ரீகளின் கல்வி நிலை மிகக் கேவலமாயிருந்ததைவிட இப்போது அதிகமாய்ப் பரவி யிருக்கிறதென்பதை நாம் மறுக்கமுடியாது. ஸ்த்ரீகளின் கல்வி விஷயமாகப் பலர் பலவிதமாக முயற்சிகள் செய்தும் இந்தியாவில் ஸ்த்ரீ வகுப்பார்களுள் ஒரு

சிறு பகுதியாரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். 1913-14 ஆம் வர்ஷத்தில் இந்தியாவின் பல மாகாணங்களிலும் பாடசாலைகளில் வாசித்துக் கொண்டிருந்த பெண் பிள்ளைகளின் விகிதம் பின் வருமாறு குறிக்கப் பட்டிருக்கின்றன.

நாம் ஒவ்வொரு மாகாணமாகப் பார்ப்போம். பர்மாவிலுள்ள மொத்த ஸ்த்ரீ ஜனங்களுள் நூற்றுக்கு 10 பேரும், சென்னை மாகாண ஸ்த்ரீ ஜனங்களுள் 100க்கு 8 பேரும், பம்பாய் மாகாணத்தில் நூற்றுக்கு 8 பேரும், வங்காள மாகாணத்தில் நூற்றுக்கு 7 பேரும், பீஹார் மாகாணத்தில் நூற்றுக்கு 3 பேரும், பஞ்சாப் மாகாணத்தில் நூற்றுக்கு 3 பேரும், மத்ய மாகாணத்தில் நூற்றுக்கு 3 பேரும், வட மேற்கு எல்லை மாகாணத்தில் நூற்றுக்கு ஸுமார் இரண்டு பேரும், ஐக்ய மாகாணங்களில் நூற்றுக்கு ஸுமார் இரண்டு பேருமாகப் பாடசாலைகளில் படித்துக்கொண்டிருந்தார்களென்று தெரிகிறது. இவ்விதக் கணக்குகளிலிருந்து பர்மா, பம்பாய், சென்னை, வங்காளம் முதலிய மாகாணங்களில் ஸ்த்ரீகளின் கல்வி கொஞ்சம் பரவியிருப்பதற்கும் மற்ற மாகாணங்களில் முற்போக்கே அடையாமலிருப்பதற்கும் காரணங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஸ்த்ரீகளின் கல்வி வ்ருத்தியடையாத மாகாணங்களில் ஸ்த்ரீகள் கோஷா முறையை ஜாஸ்தியாக அநுஷ்டிக்கிறதனாலும், அவர்களின் குடும்பப் பழக்க ஸம்ப்ரதாயங்களினாலும் ஸ்த்ரீகளின் கல்வி வ்ருத்தியாகவில்லையென்று நாம் ஊஹிக்கிறோம். மேலும், இந்திய ஸ்த்ரீகளின் ஜாதீய ஸமூக லக்ஷ்யங்களுக்குத் தகுந்தபடி கல்வியை ஏற்படுத்தாததனாலுமென்று அறிகிறோம். தற்போது இந்தியா கவர்ன்மெண்டாரும், மாகாண கவர்ன்மெண்டாரும் வித்யா இலாகாத் தலைவர்களும் பெண்களின் கல்வி விஷயமாகத் தகுந்த ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். இவர்கள் செய்து வரும் ஏற்பாடுகள் இந்திய ஜாதீய ஸமூக லக்ஷ்யங்களுக்குத் தகுந்தவாறு ஒத்திருக்குமென்று எண்ண இடமிருக்கிறது. இனி ஸமீப காலத்தில், ஸ்த்ரீகளின் கல்வி திருப்திகரமாக வ்ருத்தியாகுமென்று நாம் நம்பியிருக்கலாம்.

சில வர்ஷங்களாக நம் தேசத்தில் ஆங்காங்கு ஸ்த்ரீகளே தங்களுடைய நிலைமையையும் பொறுப்பையும் உணர்ந்து அவர்களின் கல்வி விஷயமாகவும் இதர மார்க்கத்தில் முன்னேற்ற விஷயமாகவும் பாடுபட்டு வருகிறார்கள். தற்காலம் ஸ்த்ரீகள் உபாத்திமார்களாகவும் பொறுப்புள்ள டாக்டர்களாகவும், தாதிமார்களாகவும், புருஷர்களால் நடத்தப் பட்டு வரும் பத்ரிகைகளுக்கு ஸமமாகப் பத்ரிகைகள் நடத்துவோராகவும், ப்ரஸங்கிகளாகவும் இன்னும் பலவித துறைகளில் இறங்கிப் பரோபகாரமாகப் பாடுபட்டு வருகிறார்கள். தங்களுடைய நிலைமையை உயர்த்த முக்யமான காலங்களில் பெருத்த மீட்டிங்குகள் கூட்டி கவர்னர் ஜெனரலுக்கும் கவர்னர் அவர்களுக்கும் தங்களுடைய விஷயங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். இப்படி ஸ்த்ரீகள் முன்னடைந்து வரப் பரோபகாரமுள்ள புருஷர்கள் அவர்களுக்குப் பின் பலமாக நின்று உதவி வருகிறதையும் நாம் மறக்கக்கூடாது.

நம் சென்னை கவர்ன்மெண்டாரும் ஸ்த்ரீகளின் கல்வி விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு அவர்களின் படிப்புக்கும் முன்னேற்றத்துக்கும் பல வசதிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நம் மாகாணத்திலுள்ள பல ஜில்லாக்களில் எலிமெண்டரி பள்ளிக்கூடங்களும், ஸெகண்டரி பள்ளிக்கூடங்களும், போதனாமுறைப் பாடசாலைகளும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. இச் சென்னைப் பட்டணத்தில் ஸ்த்ரீகளுக்காக இரண்டு காலேஜ்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்று க்றிஸ்தவப் பாதிரிமார்களால் நடத்தப்பட்டு வருகிறது. இனி, ஸ்த்ரீகளுக்குத் தனியாக ஒரு வைத்ய காலேஜ் ஸ்தாபிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அது ஸமீபத்தில் நம் ராஜதானியிலுள்ள முக்கியபட்டண மொன்றில் ஸ்தாபிக்கப் படுமென்று தெரியவருகிறது. இப்படியாகக் கவர்ன்மெண்டார் ஸ்த்ரீகளின் கல்விக்குப் பலவித ஸௌகர்யங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

தற்காலம் துரிதமாகக் காலம் மாறிவருகிறபடியால் ஸ்த்ரீகளின் கல்வியின் நிலைமையைக் கவனிக்கப் பலர் முன் வருகின்றனர். இவைகளெல்லாம் நல்ல அபிவ்ருத்தி காலத்தின் அறிகுறிகளா யிருக்கின்றன.

மிஸஸ் ராமசந்த்ர ரேவதி

---

ஏ! ஜெகதீச்வரீ! எனது ஆவியும் மனதும் தூய்மை யடைவதெக்காலம்! உன்பாதத்தை யடைகிறதற்கு யான் யாத்ரை செல்வதெக்காலம்! ஸர்வம் தேவிமயமான உலகத்தை நான் தரிசிப்பது எக்காலம்! அம்மா! அருள் புரிய வேண்டும்:—விவேகாநந்தரின் தாயார்.

## THE TEACHING OF GEOGRAPHY IN SCHOOLS

By

**Mr. S. Ygnasamy**

**Teacher's College, Saidapet**

## பள்ளிக் கூடங்களில் பூகோளம் கற்பித்தல்

### Local Geography in Primary Stage

முந்திய ஒரு 'பெண்கல்வி' பத்திரிகையில் பள்ளிக் கூடங்களில் முதல் தரம் அல்லது ப்ரைமரி தரத்துக் குழந்தைகளுக்கு பூகோளம் கற்பித்தலைப் பற்றிக் கூறினேன். இந்தத் தரத்திலேயே குழந்தைகளுக்கு அவரவர்களின் ஜில்லா பூகோளம் சற்று கற்பிக்கத் தொடங்கவேண்டும். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தின் பக்கங்களிலுள்ளவைகளைப் பற்றி ஸம்பாஷணையாக முதலில் ஆரம்பிக்கவேண்டும். கடற்கரைப் பட்டணமாயிருந்தால், கடலினது அபாயமும், அதிலிருந்து பட்டணம் பாதுகாக்கப் படுகிறவிதமும் எடுத்துக் கொள்ளலாம். கடல் மார்க்கமாய் உள் நாடுகளோடு நடக்கிற ஏற்றுமதி இறக்குமதி ஸாமான்களையும் பற்றி எடுத்துச் சொல்லலாம். வ்யாபார ஸ்தலம் (Custom House) விளக்குக் கூண்டு ஹார்பர் இவைகளின் உபயோகங்களைப் பற்றியும் விரிவாய் எடுத்துரைத்தல் அவசியம்.

உள் நாடுகளிலிருக்கும் பட்டணமானால் அதற்குத் தகுந்த விஷயங்களை எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது: கடைகளும், மார்க்கட்டுகளும் அவைகளில் கிடைக்கக்கூடிய ஸாமான்களும், வேறு என்ன ஸாமான்கள் பக்கத்து ஊர்களிலிருந்து கிடைக்கின்றனவென்பவைகளையும் சொல்லவேண்டியது. உள்ளூரில் நடக்கிற தொழில்கள், ஜீவனத்திற்காக ஜனங்கள் செய்யும் வேலைகள் இவைகளைப் பற்றி விஸ்தாரமாய்க் கூறவேண்டும். பிறகு, க்ரமமாக இவைகளை மற்ற ஊர்களோடு ஆராய்ந்து பார்த்தல் அவசியம்.

க்ராமாந்தரப் பள்ளிக்கூடங்களில் அவ்வூரிலுள்ள ரஸ்தாக்கள், ரயில்வே மார்க்கங்கள், அவ்வழியாய் நடக்கும் வ்யாபாரங்கள் இவைகளை எடுத்துச் சொல்லவேண்டும். க்ராமங்களிலுள்ள பல தொழிலாளிகள் அவர்களுடைய ஒற்றுமை, அவர்களுக்கு ஜீவனத்திற்காக விடப்பட்டிருக்கிற மான்யங்கள் ஆகிய இவைகளைப் பிள்ளைகளுக்குப் புரியும்படி விரிவாய் எடுத்துச்சொல்லவேண்டியது. பல பயிர்களைச் சாகுபடி செய்கிற விதமும் அவைகளின் காவல்களும் தெரியவேண்டியது அவசியம். க்ராமங்களில் உண்டாகிற தான்யங்களில் மிகுந்தவைகளை எப்படிச் சமீபத்திலிருக்கும் பட்டணங்களுக்கு கூடைகளில் வைத்துத் தலைமேல் சுமந்தோ அல்லது எருதுகளின் மேல் போட்டோ கொண்டுபோய் வ்யாபாரம் செய்கிற விஷயங்களையும் தெரிவிக்கவேண்டியது. இதனுடன் ஊரிலுள்ள குளம், குட்டை ஆறுகள் அவைகளுக்கு ஜலம் கிடைக்கக்கூடிய வழிகள், அவற்றின் உபயோகங்கள் அவற்றைப் பற்றிக் குழந்தைகளுக்கு ஸந்தர்ப்பம் நேர்ந்த பொழுதெல்லாம் அவர்களை வெளியில் அழைத்துக் கொண்டுபோய் இயற்கை ஸம்பவங்களைக் கவனிக்கும்படி செய்தல் அவச்யமாகும்.



முக்யமாய் சீதோஷ்ண ஸ்திதி அதாவது வர்ஷத்தின் பல ருதுக்களை கவனித்தல் வேண்டும். அப்படி ருதுக்கள் மாறும்பொழுதெல்லாம் இயற்கை பதார்த்தங்களிலேயும் மாறுதல்கள் ஏற்படுகிறதையும் கவனிக்கச் செய்யவேண்டும். ஸூர்ய உதய அஸ்தமன திக்குகளையும் எந்த எந்த மாதங்களில் ஸூர்யன் வடக்கேயும் தெற்கேயும் தள்ளி உதிக்கிறதோ அவ்விஷயத்தையும், எப்பொழுது ஸூர்யன் மத்யானத்தில் தலைக்குமேல் நேராக நிற்கிறது என்பதையும் அவர்களைக் கவனிக்கச் செய்யவேண்டும். பற்பல மாதங்களில் அடிக்கிற காற்றுகளும் எந்தத் திக்கிலிருந்து அடிக்கின்றது என்பதையும் அறிவிக்கவேண்டியது. மேற்கேயிருந்து காற்று அடித்தவுடன் ஆறுகளில் ப்ரவாஹம் வருவதையும் கவனிக்கச் சொல்லவேண்டும். அக்டோபர் நவம்பர் மாதங்களில் வட கிழக்கு மூலைகளிலிருந்து காற்று அடித்தால் மழைக்கு ஆர்பாட்டமென்பதையும் குழந்தைகளுக்குத் தெரிவித்தல் அவச்யம். ஆறுகள் ஓடும் திசைகளும் அதிலிருந்து தேசத்தின் மேடுபள்ளங்கள் எப்படி உண்டாகும் என்பதையும் இவை போலொத்த பல விஷயங்களையும் இந்த ப்ரைமெரி தரத்திலேயே க்ரமமாக எடுத்து ஸுலபமான மார்க்கத்தில் சிறுவர்களுக்குக் கற்பித்தல் நலம்.

S. எக்ஞஸ்வாமி

பகவான் எவனுக்கு அருள் புரிய வேண்டுமென்று ஸங்கல்பிக்கின்றாரோ அவன் தான் அவரை அடைய முடியும். அவனுக்குத் தான் தம் ஸ்வரூப ரூபத்தைக் காட்டுகின்றார்:—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

# FREDERIC FROBEL

### A Friend, Father & Teacher of School Children

### By

### A Trained Ex-mistress

## சிறுவர்களின் நண்பரும், பிதாவும் உபாத்யாயருமான ப்ரடரிக் ப்ரொபல்

தற்காலத்தில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அந்தந்த தேச கவர்ன்மெண்டார்கள் பால சிக்ஷை செய்வதில் ப்ரொபல் மான்டிஸோரி என்னும் இருவர்களின் கொள்கைகளையும் முறைகளையுமே முக்யமாக அநுஷ்டித்து வருகின்றனர். அது போலவே, இந்தியாவில் இந்தியச் சிறுவர்களுக்கு பால சிக்ஷையைத் தகுந்தபடி அமைக்க கவர்ன்மெண்டாரும், வித்யா நிபுணர்களும் முயற்சித்து வருகின்றனர். இந்த ஸமயத்தில், பால சிக்ஷையை ஒரு உயர்ந்த தன்மைக்குக் கொண்டு வந்த மிஸ்டர் ப்ரொபலின் கொள்கைகளையும் முறைகளையும் நாம் கவனிக்க வேண்டுவது அவச்யம். அவரின் ஜீவ்யசரித்ரத்தையும், வரலாற்றையும் தெரிந்துகொண்டால் நாம் அவருடைய கொள்கைகளையும் சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டிய விதத்தைப் பற்றியும் விஸ்தாரமாக அறிந்து கொள்ளலாம். ஆகவே, அவரின் சரித்ரத்தை சில இங்க்லீஷ்ப் புஸ்தகங்களிலிருந்து எழுதுகிறேன்.

ப்ரடரிக் ப்ரொபல் ஜெர்மனி தேசத்திலுள்ள ஒரு க்ராமத்தில் பிறந்தார். அவருடைய தகப்பனார் அவ்வூரில் மத விஷயமாக உபந்யஸிக்கும் குருவாயிருந்தார். அவரின் தகப்பனார் மிகவும் யோக்யர். மன உறுதி கொண்டவர். ஸதாகாலமும் ஒய்வு ஒழிவு இல்லாமல் தமது வேலையையே அவர் பார்த்துக்கொண்டிருப்பவர். அவர் பிறருடைய கார்யத்தில் தலையிட்டுக் கொள்ளமாட்டார். அவருக்குத் தமது வேலையே பொழுது போக்காயிருந்ததனால், தம்முடைய பிள்ளை ப்ரொபலின் விஷயத்தில் அக்கரை எடுத்துக்கொள்ள முடியவில்லை.

குழந்தை ப்ரொபல் ஒரு வயதாவதற்குள் அவனுடைய தாய் இறந்து போனாள். வீட்டு விஷயங்களைக் கவனிக்க ஒருவருமில்லாமையைக் கண்டு, ப்ரொபலின் தகப்பனார் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டார். ஸாதாரணமாகவே, மாற்றாந் தாய்க்கு முதல் தாயின் குழந்தைகளிடத்தில் அன்பும் ஆதரவும் இராது. அப்படியே ப்ரொபலினிடத்தில் அந்த மாற்றாந் தாய்க்கு அன்பும்



பராமரிப்பும் கிடையாது. நான்கு வயது வரையில் ப்ரொபல் அவ்வூர் தேவாலயத்தின் ஓரமாக இருந்த ஒரு வீட்டில் வஸித்துக் கொண்டிருந்தார். அவர் குடியிருந்த வீடு மிகவும் தாழ்ந்ததும், ஓரமாகவுமிருந்ததனால் சூர்ய வெளிச்சம் அதன் மேல் படாமல் குளிர்ச்சியடைந்தும் இருட்டாகவுமிருந்தது. அவ்வீட்டை விட்டு அவரை வெளியில் எடுத்துக்கொண்டு போகிறவர்கள் ஒருவருமில்லை. ஒரு ஸமயம் பக்கத்துக் கோயிலைப் பழுதுபார்த்து சில இடங்களில் இடித்துக் கட்டிக்கொண்டிருந்த சில வேலைக்காரர்கள் செய்யும் வேலைகளை அவ்வீட்டுச் சாளரத்தின் வழியாய் அவர் நுட்பமாகக் கவனித்துக் கொண்டுவந்தார். பிறகு, அங்கு வேலைக்காரர்கள், செய்யும் வேலைகளைத் தாமும் செய்ய முயன்றார். ஆனால், அவர் எவைகளைக்கொண்டு ஒரு வீட்டைக் கட்டுவார்? அவரால் அச்சமயம் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆயினும், பெரியவராக வந்ததும் தாம் சிறு பருவத்தில் நினைத்து முயற்சி செய்ததை அவர் மறக்கவில்லை. பிற்காலத்தில் சிறுவர்களுக்குக் கட்டடம் கட்டி விளையாடுவதற்கு வேண்டிய ஸாமான்களைத் தேடிக் கொடுக்க வேண்டுவது அவச்யமென்று வற்புறுத்தினார்.

இப்படியாக ஸூர்ய வெளிச்சமில்லாத வீட்டில் வஸித்துக் கொண்டு வந்த ப்ரொபலுக்குப் பத்து வயதானது. அவரின் பத்தாவது வயதில் ப்ரொபலின் மாமன் அவரை நேசிக்கலானான். இந்த ஸமயத்தில் ப்ரொபலின் மாமன் பிள்ளை இறந்து போய்விட்டான். பிறகு, அம்மாமன் ப்ரொபலினிடத்தில் அதிக நேசம் காட்டி ஆதரித்து வந்தான். ப்ரொபல் வெகு ஆதரவுபெற்று ஐந்து வர்ஷ காலம் மாமன் வீட்டில் வஸித்துக் கொண்டிருந்தார். பையனுடைய சுறுசுறுப்பையும் புத்தியையும் அறிந்து அநத மாமன் ப்ரொபலை அவ்வூர் பாடசாலைக்கு அனுப்பினான். பாடசாலைக்கு நேரத்துக்குப் போவதும் தம் ஸ்நேஹிதச் சிறுவர்களோடு விளையாடுகிற நேரத்தில் விளையாடுவதுமாக அவர் இருந்து வந்தார்.

இக்காலத்தில் ப்ரொபல் செடிகளையும் ஜந்துக்களையும் நுட்பமாய்ப் பார்க்கத் துவக்கினார். இயற்கைப் பொருள்களை நுட்பமாகக் கவனிப்பதும் அவைகளைப் பற்றித் தமக்கு ஸந்தேஹம் வந்தால் பெரியவர்களைக் கேட்பதுமாக இருந்து வந்தார். பறவைகள், பூச்சிகள், பூக்கள், மலர்கள் மிருகங்கள் முதலியவைகளெல்லாம் அவருக்கு அதிக

ஆச்சர்யத்தை யுண்டாக்கின. ப்ரொபல் பாடசாலைக்குப் போய்வந்து கொண்டிருந்தாரே யொழிய அங்கு சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் இயற்கைப் பொருள்களின் பேரில் மிகவும் கருத்துக் கொண்டவராயிருந்ததனுல் பாடசாலைகளில் சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்கள் ஒன்றுகிலும் நல்ல பயனைத்தரவில்லை. ப்ரொபல் மிகவும் யுக்தியுள்ளவர். தமது கடமைகளில் விசேஷக் கருத்துக்கொண்டவர். எவைகள் ந்யாயமோ அவைகளைச் செய்யவேண்டுமென்று விருப்ப முடையவர். ஆனுல், தம் இஷ்டப்படிச் செய்ய விருப்பங்கொண்டவரல்லர். அவ்வூரிலுள்ள பாடசாலையில் படித்துத் தேறின பிறகு காலேஜில் சேரவேண்டுமென்று தம் தகப்பனுரைக் கேட்டுக் கொண்டார். அவருடைய மாற்றுந் தாய் ப்ரொபலை காலேஜில் படிக்க வைக்கவேண்டாமென்று அவரின் தந்தைக்குத் துர்போதனை செய்தாள். மாற்றுந் தாயின் மகனை மாத்ரம் காலேஜிக்கு அனுப்பினுர். ப்ரொபல் தம்மாலான வரையில் தகப்பனுரைக் கேட்டும் அவரைக் காலேஜிக்கு அவர் அனுப்பவில்லை. கடைசியாக ப்ரொபல் பயிர்த்தொழிலில் பயிலவாவது அனுமதியும் உதவியும் கொடுக்கவேண்டுமென்று தந்தையைக் கேட்டார். தகப்பனுரின் ஸம்மதத்தின் பேரில் பயிர்த்தொழில் வேலையைப் பழக்கிக்கொள்ள ஒரு பெரிய வ்யவஸாயினிடம் அவர் வேலைக்கு அமர்ந்துகொண்டார். ப்ரொபலுக்கு இயற்கைப் பொருள்களின்பேரிலும் தேசத்தின் பேரிலும் மிகவும் அபிமானம் கொண்டவராதலால் ஒழிவு நேரங்களில் பயிர்த் தொழிலுக்கு வேண்டிய புஸ்தகங்களைப் படித்து வந்தார்.

(இன்னும் வரும்.)

ஒரு மாஜி உபாத்யாயினி

---

இல்லற தர்மத்தை ஸரியாகச் செய்பவளே பாக்யமுள்ள ஸ்த்ரீயாவாள். அவளே இஹபரங்களுக்கு ஒத்த துணை.—ஓமா

* * * *

ஏ! அம்பிகை! உன்னுடைய திருவுள்ளத்திலிருப்பதை நான எப்படி அறிவேன்? கேவலம் மனிதர்களின் உத்தேசம் வெகு தூரம் செல்லாதே! அம்மா! உன்னுடைய தயவு எனக்கு எப்போதும் வேண்டுமே.—ஒரு ராஜ ஸ்த்ரீ.

# HISTORY & ANTIQUARY
# சரித்ரமும் ஆராய்ச்சியும்

## QUEEN MANGAMMAL'S ADMINISTRATION
## மங்கம்மாள் மஹாராணியின் ராஜ்ய நிர்வாஹம்

மதுரை நாயக்கர் வம்சத்தில் 1689-ம் வர்ஷத்தில் முத்தம்மாளுக்கு விஜயரங்கச் சொக்கநாதன் என்ற பிள்ளை பிறந்தான். அவனுக்கு மூன்றுவது மாதத்திலேயே பட்டம் கட்டப் பட்டது. அவன் குழந்தையா யிருந்ததனுல் அவனுடைய பாட்டியாகிய (தகப்பனுடைய தாயார்) மங்கம்மாள் மஹாராணி அவர்கள் அவனுக்கு ப்ரதிநிதியாக இருந்து ராஜ்யத்தை நிர்வஹித்து வந்தாள். மங்கம்மாள் பெண்பாலாயினும் புத்தி, மனோ தைர்யம், ராஜ தந்த்ரம், தயாளத்வம் முதலான சிறந்தகுணங்கள் வாய்ந்தவள். அவள்காலத்தில் ராஜ்யமெங்கும் செழிப்புற்றோங்கியது. உள்நாட்டிற் கலகம் விளைந்தாவது அயல் நாடுகளிலிருந்து பகைவர் படையெடுத்து வந்தாவது ராஜ்யத்தின் சீரைக் குலைக்க வில்லை. 'காசி முதற் கன்யா குமரி வரைக்கும் ராமேச்வரம் வரைக்கும்' எங்கும் பாட்டைகளும் சாலைகளும் அவள் காலத்தில் ஏற்பட்டன. இன்றும் 'மங்கம்மாள் சாலைகள்' என்று எங்கும் ப்ரஸித்தி பெற்றிருப்பது யாவரும் கேட்டிருக்கலாம். வழிகளிலும் மற்ற இடங்களிலும் ஆங்காங்கு சத்ரங்கள், சாவடிகள், ஆலமரங்கள், குளங்கள், கிணறுகள் முதலியன ஏற்படுத்தப்பட்டன. அந்தணர்க்கும் அறிஞர்க்கும், ஏழைகளுக்கும் பரதேசிகளுக்கும் விசேஷ தான தர்மங்கள் செய்து வந்தாள்.

திருவாங்கூர் அரசன் மதுரை யரசருக்குக் கப்பங் கட்டுவது வழக்கம். அது சில வர்ஷமாகச் செல்லாகாது பாக்கி நின்றுவிட்டது. 1697-ம் வர்ஷத்தில் மங்கம்மாள் அதை வசூலித்து வருமாறு தன் வடுகர் ஸைந்யத்தை யனுப்பினுள். இச்சேனை ஆரவாய்பொழிக்கணவாய் வழியாய்க் கற்குள (கொல்லம்?) த்தருகே வந்து சேர்ந்தது. கார்யம் மிஞ்சிவிட்டதென்று அரசன் பயந்து பலத்தால் முடியாத கார்யத்தை வஞ்சனையால் ஸாதித்துக்கொள்ள எண்ணினுன். பிறகு, அவன் வடுகர் சேனைத் தலைவருடன் நட்புப் பாராட்டி அவர்களைக் கோட்டைக்குள் அழைத்துச் சென்றுன். அப்பொ

முது திருவாங்கூர் அரசனுக்கு 'எட்டு வீட்டுப் பிள்ளைமார்' என்ற எட்டுபரம்பரை மந்த்ரிகளில் ஆகாத சில மந்த்ரிகள் வலுத்தவராயிருந்தனர். ஒரே கல்லால் இரண்டு குருவி யடிப்பதுபோலத் திருவாங்கூர் அரசன் ஒரே வஞ்சனையால் இரண்டு கார்யங்களைச் சாதித்துக் கொண்டான். வடுகர் சேனைத் தலைவருடன் கபடாலோசனை செய்து அவர்களைக் கொண்டு, அம்மந்த்ரிகளைச் கொலை செய்வித்தான். பிறகு, ஒரு நாள் வடுகர் சேனை பந்தோபஸ்தில்லாமல் உல்லாஸமாய்க் கற்குளம் கோட்டைக்குள் திரிந்துகொண்டிருக்கையில் திருவாங்கூர்ச் சேனை திடீரென்று தாக்கி, வடுகர் சேனை முழுவதையும் ஈவு இரக்கமின்றி நாசஞ் செய்து விட்டது. தப்பியோடிய சிலர் மூலமாய் இக்கொடுஞ் செய்தி கேட்ட மங்கம்மாள் திருவாங்கூர் அரசனுக்குத் தக்க சிக்ஷை செய்யக் கருதி ஓர் பெருத்த சேனையைத் தளவாய் நரசப்பையரோடு 1699 வர்ஷத்தில் அனுப்பினாள். தளவாய் நரசப்பையர் திருவாங்கூர் ஸமஸ்தானத்திற் ப்ரவேசித்துக் கடும் போர் புரிந்து ஜயித்து, மிகுந்த த்ரவியத்துடனும் ஜய கோலத்துடனும் திரிசிராப்பள்ளி வந்து சேர்ந்தார். 1700-ம் ஆண்டில் பூச்சே (Bouchet) என்ற பாதிரி, ப்ராம்மண மந்த்ரியான தளவாய் நரசப்பையரின் பேட்டி பெற்றுக் காணிக்கைகள் செலுத்தி, மர்யாதை பெற்றுச் சென்றார்,

அதே வர்ஷத்தில் தஞ்சை யுத்தம் நடந்தது. இதன் காரணம் இன்னதென்று தெரியவில்லை. 1700-ம் ஆண்டில் நரசப்பையர் தன் சேனைகளுடன் காவேரியின் தென்கரையில் தங்கியிருந்தார். எதிரே வடகரையில் தஞ்சைச் சேனை காத்திருந்தது. தஞ்சைச் சேனையிற் குதிரைப்படை அதிகமாயிருந்ததால் நரசப்பையர் அதை எதிர்க்கத் துணியாமல் தருணம் பார்த்திருந்தார். திடீரென்று அதே ஸமயத்தில் தஞ்சைச் சேனை பிரிந்து மதுரைச் சேனையை இருபுறமும் சூழ எண்ணிக் காவேரியைத் தாண்டி வந்தது. நரசப்பையர் ரஹஸ்யமாய்க் காவேரியைத் தாண்டி நேரே தஞ்சையைத் தாக்கினார். பிரிந்திருந்த தஞ்சைச் சேனை மறுபடி தங்கள் நகரைக் காக்க ஓடி வந்தது. காவேரியில் திடீரென்று வெள்ளம் வந்து தஞ்சைச் சேனையில் அநேகரை அடித்துக்கொண்டு போயிற்று. நரசப்பையரும் மிகுந்தவரைத் தாக்கி நாசஞ்செய்தார். பிறகு, தஞ்சை மன்னன் ஸமாதானம்



செய்துகொள்ள விரும்பினான். ஸமாதானம் செய்துகொண்டு வெற்றிக்கோலத்துடன் நரசப்பையர் ஊர் வந்து சேர்ந்தார்.

1701-ம் ஆண்டில் தஞ்சை மன்னனும் மதுரை மங்கம்மாளும் மைசூர் அரசனுக்கு விரோதமாய் யுத்த உடன் படிக்கை செய்துகொண்டார்கள். இதற்குக் காரணம் மைசூர் அரசன், காவேரி நதியின் குறுக்கே ஓர் பேரணை கட்டித் தஞ்சை திரிசிராப்பள்ளி என்னும் நாடுகளுக்குக் காவேரியிற் போதுமான ஜலம் வராதபடி தடுத்து விட்டதனாலென்று தெரிகிறது. இதனாற் கோரமான யுத்தம் நேரிடக் கூடியதாயிருந்தது. காவேரியில் திடீரென்று பெருத்த வெள்ளம் வந்து யுத்த காரணமான அப்பேரணையை அடித்துகொண்டு போய்விட்டபடியால் யுத்தம் நேரவில்லை.

பிறகு, இராமநாதபுரம் சேதுபதியை யடக்கும்பொருட்டு, நரசப்பையரும் தஞ்சை மன்னனும் தக்க சேனைகளுடன் இராமநாத புரத்தின்மீது படையெடுத்துச் சென்றார்கள். மறவர்கள் ராஜாபிமானத்துடனும் தேசாபிமானத்துடனும் ஜாதிக் கட்டுடனும் ஏகோபித்துக் கடும்போர் புரிந்தார்கள். அப்போரில் நரசப்பையர் உயிரிழந்தார். நரசப்பையரின் மரணத்தால் மதுரை ஸமஸ்தானத்துக்கே ஒரு பெருங்குறை ஏற்பட்டது. சிலர் எதிர் பாராத காரணங்களால் மதுரைச் சேனை தோல்வியடைந்தது.

நரசப்பையர் இறந்தபின் அச்சையன் என்பவர் தளவாய் ஸ்தானத்தை வகித்து வந்தார். இவ்வாறு இரண்டு மூன்று வர்ஷங்கள் கழிந்தன. 1704 (1705)-ம் ஆண்டில், விஜயரங்கச் சொக்கநாதன் பட்டத்துக்குரிய வயதினன் ஆனான். அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு, மங்கம்மாள், மதுரையில் தன் அரண்மனையில் தான தர்மங்கள் செய்துகொண்டு வைதிக ச்ரத்தையுடன் காலங் கழித்தாள்—செந்தமிழ்.

---

ஸ்த்ரீகளின் வேலை பரிசுத்தமாகவும், மேன்மையாகவும், அழகாகவும், இனிமையாகவும், இடையறாத அன்பைப் பற்றினதா யிருத்தல்வேண்டும்:—

ராணிபவானி

*   *   *   *

பிறருக்குப் பயன்படும் மார்க்கத்தை ஒவ்வொருவருக்கும் எடுத்துக் காட்டினால் இவ்வுலகத்துக்கு மிகச் சிறந்த நன்மை புரிந்தவளாவாய்:—

ஸரோ[illegible]

# WORSHIPING OUR GREAT MEN & WOMEN

**By**

**An Worshiper.**

## பெரியோர்களைப் பூஜித்தல்

பெரியோர்கள் என்றால் யார்? என்று சிலர்க்கு ஸந்தேஹம் உண்டாகலாம். இந்த ஸந்தேஹத்துக்கு ஸ்ரீ க்ருஷ்ண பகவான் பகவத்கீதை 3-வது அத்யாயம் 21-வது ச்லோகத்தில் "பெரியோர்கள் எதெதை அநுஷ்டிக்கிறார்களோ அதைத்தான் மற்ற ஜனங்களும் அநுஷ்டிக்கிறார்கள். அவர்கள் எந்தெந்த உத்தமக் கொள்கைகளை ப்ரமாணமாய் ஸ்தாபிக்கிறார்களோ அவைகளையே ஜனங்களும் பின்பற்றுகிறார்கள்." என்று சொல்லி யிருக்கிறார். ஆகவே, பெரியோர்களென்றால் ஒரு ஸமூகத்துக்குத் தலைவர்களென்றாகிறது. ஒரு ஸமூகத்துக்கு எந்தத் துறைகளிலாவது அவர்கள் தலைவர்களா யிருக்கவேண்டும். அவ்விதத் தலைமை ஸ்தானம் படிப்பு, பணம், ஞானம், வீரத் தனம், ஜனக்கட்டு முதலிய பலதுறைகளில் பல காரணங்களால் ஏற்படலாம். கல்வியை ப்ரதானமாகக் கொண்ட ஜன ஸமூகத்துக்கு வித்வான் பெரியவனாகிறான். உதாரணமாக, முற்காலத்தில் காளிதாஸன், கம்பன், ஔவை போன்றவர்கள் பெரியவர்களாக மதிக்கப்பட்டுப் புகழ் அடைந்திருந்தார்கள். தற்காலத்தில் ஸர். ரவீந்த்ர நாத் டாகூர், ஸரோஜனி நாயுடு ஆகிய இவர்களின் படிப்புக்குப் புகழ்ந்து இவர்களைப் பெரியவர்களென்று கருதுகிறோம். செல்வத்தைத் தேடும் ஜன ஸமூகத்துக்குப் பணம் ஜாஸ்தியாகப் படைத்தவனே தலைவனாகிறான். இதற்கு உதாரணம் ஸகலருக்கும் தெரியும். ஞானமே ப்ரதானமாகக் கொண்ட ஸமூகத்துக்கு ஞானவானே ப்ரதானமாகிறான். இதற்கு உதாரணமும் தெரிந்ததே. வீரத் தனமுள்ள ஜன ஸமூகத்துக்கு அதிவீரனே தலைவனாகவும் பெரியவனாகவுமாகிறான். ஆதலால், ஒவ்வொரு ஸமூகத்திலும் சிறந்து தலைவனாகவும் பெரியவனாகவு மிருக்கின்ற பெரியோர்களின் கொள்கைகளைப் பஹிரங்கப்படுத்தியும், அவைகளைப் பின்பற்றியும் நடந்துகாட்டும் ஜனஸமூகம் உலகத்தாரால் கொண்டாடப்பட்டு வருகிறது. இது சரித்ரம் படித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். நம் ஹிந்து ஸமூகமானது உலகத்துப் பல தேசங்களிலுள்ள வித்வ ஜன ஸமூகங்களாலேயும், பணக்கார ஜனஸமூகங்களாலேயும், ஞான ஜன ஸமூகங்களா



லேயும், வீரத்தனமுள்ள ஜனஸமூகங்களாலேயும் கொண்டாடப் பட்டு வருவதற்குக் காரணங்களை நாம் அறியவேண்டும். இந்தியாவிலுள்ள ஹிந்து ஸமூகத்தில் பல துறைகளில் வித்வ ஸ்ரேஷ்டர்களாகவும், குபேரர்களாகவும், ஞான ஸ்ரேஷ்டர்களாகவும், வீர பராக்ரம ஸ்ரேஷ்டர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்களென்பதைத் தவிர வேறு காரணம் ஒன்றும் தோன்றவில்லை.

உலகத்தில் ஸ்த்ரீ புருஷர்களாகப் பிறந்தவர்கள் அவரவர்களின் ஸமூகத்திலுள்ள ஸ்ரேஷ்டர்களை அதாவது பெரியோர்களைப் பற்றி சரித்ரங்கள் எழுதுகிறார்கள்; அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடி உத்ஸவம் செய்கிறார்கள்; அவர்கள் ஸ்தாபித்த கொள்கைகளின்படி நடப்பதுமாக விருந்து வருகிறார்கள். மேலும், அந்தப் பெரியோர்களைப் பற்றி பாடங்களாக எழுதி அவைகளைப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஏற்படுத்தி வருகிறார்கள்.

இப்படியாக உலகத்துத் தேசங்களெல்லாம் தங்கள் தங்கள் ஸமூகங்களில் பெரியோர்களின் கொள்கைகளையும் அவர்கள் சென்ற அடிச்சுவடுகளையும் பின்பற்றி வருகிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு ஜனங்கள் பெரியோர்களின் புத்திமதிகளின் படியும் அவர்களின் கொள்கைகளின் படியும் நடக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு பெரியோர்களுக்குக் கௌரவமும் அநுஷ்டிக்கிறவர்களுக்கு க்ஷேமமும் உண்டு. ஹிந்து ஜனங்கள் தங்கள் ஸமூகங்களிலுள்ள பெரியோர்களைப் பற்றி விசாரித்துக் கவனிக்கிறதே கிடையாதென்று சொல்லலாம். தற்காலம் மேனாட்டு நாகரீகப் புதுப் பழக்கத்தினால் நம் பெரியோர்கள் ஸ்தாபித்த கொள்கைகளும், அவர்கள் சென்று காட்டின வழிகளும் ஹிந்து ஜனங்களுக்கு விரோதமாகப் படுகின்றன. முற்காலத்திய பெரிய ஸ்த்ரீ புருஷ வீரர்களின் சரித்ரத்தைச் சொன்னால், உடனே அதை கட்டுக் கதையென்று நம்மவர்களில் பெரும்பாலோர் சொல்லிவிடுகிறார்கள். ஒரு ஞானியின் சரித்ரத்தைச் சொன்னால் பரிஹாஸம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். இந்தத் தலைமுறையில் ஒரு ஹிந்து ஸ்த்ரீயாவது, புருஷனாவது ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீ மஹாபாரதங்களைச் செவ்வையாகப் படித்திருப்பார்களா? நாம் நினைக்கவேயில்லை. ஒரு ஹிந்து ஸரிவர மட்டும் ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீ மஹாபாரதங்களை படித்தானேயானால் ஏன் பெரியோர்களைப் பூஜிக்கவேண்டுமென்று அவனுக்குத் தெரியவரும். முக்யமாக, ஹிந்து ஸஹோதரிகளை ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீ மஹாபாரதங்களை கருத்துடன் படிக்கும்படி வேண்டுகிறோம்.

பெரியோர்களைப் பூஜிக்கிறவன்.

# MORAL LITERATURE
# ஸன்மார்க்க கல்வி

## MAHABARATAM
## ஸ்ரீ மஹாபாரதம்

### Who wrote and with what objects ?

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது. இந்த மானிட ஜன்மம் மிகவும் உயர்ந்ததும் பரிசுத்தமானதுமாகும். இதை நாம் வீணாக்கக் கூடாது. நாம் இந்த மனுஷ்ய ஜன்மத்தை அந்யாயமாகச் செலவழித்தோமானால் கடவுளினுடைய ப்ரீதியை நாம் பெறமுடியாது. நம்முடைய ஜன்மத்தை ஸர்வ காருண்ய நிதியாகிய அந்தப் பகவானுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும். அவரை இடை விடாது த்யானித்து வரவேண்டும். அப்படிச் செய்வது நமது கடமையாயிருத்தல் அவசியம். பகவத் கீதை 16-வது அத்யாயத்தில் 19-20-வது ச்லோகங்களில் உலகத்தில் இரண்டு விதப் பிறப்புகள் இருக்கின்றன. ஒன்று தேவப்பிறப்பு, மற்றொன்று அஸுரப் பிறப்பு. இவைகளில் அஸுர ஸ்வபாவத்தைத் தள்ள வேண்டும். அப்படித் தள்ளாமல் அதை அநுஸரித்து வருகிறவர்கள் கீழான பிசாசு ஸ்வபாவத்தையடைவார்கள். அவர்களுக்கு நல்ல கதி கிடைக்காதென்று ஸ்ரீ பகவான் அர்ஜுனனுக்குக் கூறியிருக்கிறார்.

ஆகவே, மானிடர்களாகிய நாம் கடவுளை த்யானிக்கவேண்டும். உயர்ந்த திவ்யமான க்ரந்தங்களைப் படிக்கவேண்டும். இவைகளில் ஸ்ரீ மஹா பாரதத்தை ஒவ்வொருவரும் படிப்பது அவச்யம். மனுஷ்யர்களுக்கு ஸந்ததி, ஸௌபாக்யம் முதலானவை ராமாயணம் கேட்பதால் உண்டாகும். மோக்ஷத்துக்கு வேண்டிய பக்தி, வைராக்யங்கள் பாகவதம் கேட்பதனாலுண்டாகும். இக பர ஸுகங்களுக்கு மத்தியில் தர்மம் வ்ருத்தியாகி, சரீரம் ஆரோக்யமடைந்து, பலம் உண்டாகி, பக்தி வைராக்யங்கள் மேலிட்டு மறுபடியும் ஜனனம் உண்டாகாமலிருப்பதற்கு ஸ்ரீ மஹா பாரத கதைகளைக் கேட்கவேண்டும். ஸ்ரீ மஹாபாரதத்தை மனப்பூர்வமாய்ப் படித்து வந்தால் அக்ஞானம் நீங்கும். ஆத்மா சைதந்யம். மறைவுபட்டிருக்கிறது. அக்ஞானம் நீங்கினால் ஆத்மா ப்ரகாசிக்கும். பாரதம் பெரிய ஸமுத்ரம்



அதைத் தாண்டுவது அதிகக் கஷ்டம். அதைத் தாண்டாமல் நாம் எப்படியிருப்பது ?

நைமிசம் என்னும் க்ஷேத்ரத்தில் சௌனகர் ஸத்ரயாகம் செய்துகொண்டிருந்தார். அங்கு அநேக முனிவர்கள் கூடியிருந்தனர். சூதர் அல்லது ரோமர்ஷரும் அவரது புத்ரராகிய உக்ர ச்ரவஸும் (நரஸிம்மனை ஆராதிக்கிறவர்) சௌனகர் யாகம் செய்யுமிடத்திற்கு வந்தார்கள். சௌனகாதிகள் விஜயம்செய்த முனிகளுக்கு உபசாரங்கள் செய்த பிறகு அவர்களின் யோக க்ஷேமங்களை விசாரித்தார். அப்போது "நாங்கள் பரீக்ஷித் மஹாராஜாவின் குமாரரான ஜனமேஜய மஹாராஜன் ஸர்ப்பயாகம் செய்ததற்குப் போயிருந்தோம். அங்கு வேதவ்யாஸரும், அவருடைய சிஷ்யரான வைசம்பாயனரும் இருந்தார்கள். ஜனமேஜய மஹாராஜன் பகவத் கதைகளில் காலம் கழிக்கவேண்டுமென்று கோரினார். அச்சமயம் குரு உத்தரவைக் கேட்டு ஜனமேஜய மஹாராஜாவுக்கு வைசம்பாயனர் பாரதத்தை ஸாங்கோபாங்கமாக எடுத்துச் சொன்னார். நாங்களும் திவ்யமாகக் கேட்டோம். அங்கிருந்து தீர்த்த யாத்ரைகள் செய்துகொண்டு வரும்போது ஸ்யமந்த பஞ்சகமென்று சொல்லப்பட்ட புண்ய க்ஷேத்ரத்தை தர்சனம் செய்தோம். அங்கு பரசுராமர் அவதாரம் செய்து 21 தடவை க்ஷத்ரிய குலங்களை நாசமாக்கி, அந்த ரத்தத்தை ஐந்து பெரிய மடுக்களாகத் தேக்கி, அவைகளில் தமது பித்ரு தர்ப்பணம் செய்தார். அந்த ஐந்து மடுக்களுக்குச் சமீபத்திலிருக்கப்பட்ட ஸ்யமந்த பஞ்சகமென்ற இடத்தில் தான் மஹாபாரத யுத்தம் நடந்தது. தாங்கள் சத்ரயாகம் செய்வதாகக் கேள்விபட்டு அங்கிருந்து நேராகத் தங்களை தர்சனம் செய்யவந்தோம்" என்று விரிவாகக் கூறினார்கள். அவர்கள் இப்படிக் கூறவே, ஹா ! பாரதக் கதை நடந்ததா ? அதை ஏன் வேதவ்யாஸர் எழுதினாரென்று சௌனகாதிகள் கேட்டார். அதற்கு வேதங்களை அத்யயனம் செய்கிறதற்கு ப்ராஹ்மாதிகள் கஷ்டப்படுவார்களென்று ரிக்வேதத்தை 24 சாகைகளாகவும், யஜுர்வேதத்தை 101 சாகைகளாகவும், ஸாமவேதத்தை 1000 சாகைகளாகவும், அதர்வண வேதத்தை 12 சாகைகளாகவும், வேதவ்யாஸர் முதன்முதல் செய்தார். பிறகு, வேதார்த்தங்களை உலகத்தில் ஸர்வஜனங்களும் அறிந்து தர்மார்த்த, காம, மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களை அடையும்பொருட்டு எழுதிவைத்தார். ஆனால், எங்களுக்குச் சி

ஸந்தேஹங்கள் உண்டாயிருக்கின்றன. அவைகளைத் தீர்க்கவேண்டுமென்று சௌனகாதிகள் தெரிவித்துக்கொண்டார்.

வினா :—ஹே! ரோமஹர்ஷரே! ஸ்ரீ மஹா பாரதத்தை வேத வ்யாஸர் செய்தாரென்று சொன்னீரே, அது என்ன தர்ம சாஸ்த்ரமா? காவ்யமா? வசனமா? (விடை) தர்மிஷ்டர்களுக்கு தர்ம சாஸ்த்ரம்போலவும், கவிகளுக்குக் காவ்யம் போலவும், இதிஹாஸத்தில் பிரியமுள்ளவர்களுக்கு இதிஹாஸம் போலவும் இருக்குமென்றார். கடைசியாக ஸ்ரீ மஹாபாரதம் ஒரு கல்பக வ்ருக்ஷமென்றார். (வினா) அப்படியானால், அந்த வ்ருக்ஷத்துக்குக் கிளைகளும் புஷ்பங்களுமிருக்கின்றனவா? (விடை) ஸ்ரீ மஹாபாரதத்திலுள்ள சிறு நீதிக் கதைகள் கிளைகளாயிருக்கின்றன. (வினா) அக்கிளைகள் நிழலைக் கொடுக்குமா? (விடை) அதில் அடங்கியிருக்கும் வேதார்த்தங்கள் நிழலையும் அவை மூலமாக மனச் சாந்தியையும் கொடுக்கும். அதிலுள்ள தர்மார்த்த காம மோக்ஷமென்னும் நாலு புருஷார்த்தங்களே நாலுவித புஷ்பங்களாயிருக்கின்றன. (வினா) அதில் பழங்கள் இருக்கின்றனவா? (விடை) கிருஷ்ணார்ச்சுனர்களின் ஸம்வாதமே பழங்கள். (வினா) எங்கே முளைத்தது. (விடை) அது வேத வ்யாஸரென்னும் தோட்டத்தில் முளைத்தது. (வினா) இதை தேவர்கள் மாத்ரம்தான் அனுபவிப்பார்களோ? (விடை) இல்லை. ஸமஸ்த ஜனங்களும் இதை அனுபவிக்கலாம்.

ஸ்த்ரீ புருஷர்கள் ஸ்ரீ மஹா பாரதத்தை படிப்பதனாலும் கேட்பதனாலும் நல்ல இஹபரஸுகங்களை அடைவார்கள். ஆகவே, நாம் இது விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

கே. கிருஷ்ணவேணி அம்மாள்

---

மனோகரமான சமையலறையும் ஸந்தோஷகரமான வீடும், அன்பான வேலையும் இவைகளே ஸ்த்ரீகளுக்குரிய ராஜ்யமாம். அவற்றில் அவள் ஆட்சி நிலைப்பதாகும்; எவரும் அவற்றை விட்டு அவளை வெளியே தள்ளமுடியாது:—

அஹல்யாபாய்

* * * *

கவலை யென்பது மனிதன் களைப்படைந்து சாய்ந்து கொள்ளும் துக்கத்துக் கிருப்பிடமான கற்பாறையாகும். மனச் சாந்தியும் திருப்தியும் தான் அந்த கற்பாறையைப் பிளக்கக் கூடியவைகள் :—புத்தர்.

## PARENT'S DUTY

By

**Sri. Annapurani Ammal**

(Mrs. E. Suryanarayana Aiyer, Tanjore)

## பெற்றோர்களின் கடமை.

உலகத்தில் வசிக்கும் ஜீவராசிகளில், மேன்மையானதும், பகுத்தறிவும் பேசும் சக்தியுமுள்ளதும் மனித ஜன்மமே. அந்த மனித ஜன்மத்துக்குள்ள அறிவை கல்வியால் ப்ரகாசிக்கச் செய்யவேண்டும். உலகத்தில் கடவுளால் ச்ருஷ்டிக்கப்பட்ட குழந்தைகளின் சரீரத்தைத் தாய் தந்தையர் ஜாக்ரதையாக பால் முதலியவைகளைக் கொடுத்து வளர்ப்பதுபோல, தங்கள் குழந்தைகளின் அறிவையும் அழிவில்லாத செல்வமாகிய கல்வியால் போஷித்து ஜாக்ரதையாய் வளர்க்கவேண்டும். இவ்வாறு தாய் தந்தையர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வியை கற்பிக்காமலிருப்பதினால், பிறகு அக்குழந்தைகள் கஷ்டப்படுகின்றார்கள். எப்படியெனில், ஒரு ப்ரபு தன் பிள்ளையை, கல்வி கற்றுக்கொள்ள பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக்காமலும், சரீரப்பயிற்சி பழக்காமலும், செல்வமாய் வளர்த்து வருகின்றான். பிறகு, அந்தப் பையனுக்குத் தகுந்த வயது வந்தவுடன், சோம்பேரித்தனமாய், வீண்காலம் கழித்துக்கொண்டு தன் ஆஸ்தியைக் கெட்ட மார்க்கத்தில் செலவு செய்து விடுகின்றான். இவ்விதம் தன் கைப்பொருளை இழந்து ஜீவனம் செய்வதற்குக்கூட பொருளில்லாமல் கஷ்டப்படும் காலத்தில், பால்யத்தில் கல்வியை கற்காமலிருந்ததினால், இவ்வளவு கஷ்டத்திற்குத் தான் உள்ளானதென்பதையும், தன் தாய்தகப்பன்தான் தன்னுடைய கஷ்டத்திற்குக் காரணமென்பதையும் உணர்ந்து தன்னை பால்யத்தில் அன்பாய் வளர்த்து வந்த அத்தாய் தகப்பன்மேல் மன வருத்தத்தை அடைகின்றான். ஆகையினால், ஸஹோதரிகளே! "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிப்பிரகாரம், தகுந்த காலத்தில், அழிவில்லாக் கல்வியைக் கற்பித்து, ஜீவனோபாயத்திற்கு தகுந்த யோக்யதையை அவர்களுக்குண்டுபண்ணுவது அக்குழந்தைகளைப் பெற்றவர்களுடைய முக்கிய கடமையாகயிருக்கிறது.

பெண்களுக்கும் இல்லற தர்மத்தை நடத்தக் கல்வி அவசியம் வேண்டும். [illegible] பெண்கள் கல்வியைக் கற்றுக்கொள்ளுவது, அவர்

களுக்கு அழிவில்லாத ஆபரணம். இதை உணர்ந்தே காருண்யமுள்ள ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரும் பெண்கல்வியை வ்ருத்திசெய்யும் பொருட்டுக் கல்வி விதையைப் பயிர் செய்துகொண்டு வருகிறார்கள். ஆகையினால், பெண்கள் குழந்தைகளை வளர்க்கும் சுகாதார வழிகளையும், கற்பையும், ஈச்வர பக்தியையும், வ்ருத்தி செய்யவேண்டிய வழிகளைக்காட்டிப் போதிக்கின்ற இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை ஆகிய இந்நூல்களை வாசிப்பது அவசியமானது.

ஹிந்துப் பெண்களுக்கு ருது சாந்தியானவுடன், தங்கள் புருஷனுக்குக் கீழ்ப்படிந்து தான் நடக்கவேண்டும். அவரவர்கள் குலசாரக்கொள்கையின்படி, சாஸ்த்ரங்களுக்கு விரோதமில்லாமலும், பெரியோர்களால் அனுஷ்டித்து வரப்படுகின்ற வ்ரதங்கள், க்ருஹக்ருத்யங்களாகிய குல தர்ம விஷயங்களை ஹிந்து ஸ்த்ரீ புருஷர்கள் ஒரே மனதாய் கண்ணும், இமையும்போல ஒருங்கேயிருந்து நடத்தவேண்டும்.

அன்னபூரணி அம்மாள்.

---

# WOMAN'S WORLD
# ஸ்த்ரீ ப்ரபஞ்சம்

## HOME NEWS
## உள்நாட்டு வர்த்தமானம்

**Bhavani Girl's School.**

பவானி பெண் பாடசாலை :—இமமாதம் 11-ந் தேதி சென்னை நகரிலுள்ள ராயப்பேட்டையில் பவானி பெண் பாடசாலை என்னும் பெயரால் ஒரு பாடசாலை மிஸஸ் அனிபெஸண்ட் அம்மாள் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது மிஸஸ் பெஸண்ட் அம்மாள் மேனாட்டுப் பழக்க வழக்கங்களையும் ஐரோப்ப ஸ்த்ரீகளின் நடை உடை பாவனைகளையும் இந்து ஸ்த்ரீகள் அனுஷ்டிப்பது விகாரமானதென்றும் கௌரவக் குறைவானதென்றும் வந்திருந்தவர்களுக்கு எச்சரிக்கை செய்தார்.



**Education for family Women.**

வீட்டு ஸ்த்ரீகளுக்குப் படிப்பு :—திருவல்லிக்கேணி ஸெகண்டரி பெண் பாடசாலையில் குடும்ப ஸ்த்ரீகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. குறைந்தது இருபது ஸ்த்ரீகள் சேர்ந்தால் படிப்பு ஆரம்பிக்கப்படும். கல்வி சொல்லிக் கொடுக்க ஆரம்பமாகும் தினமும் மற்றவைகளும் பின்னால் தெரிவிக்கப் படுமென்று ஸஹோதரி ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள் தெரிவிக்கிறார். இந்த முயற்சி கைகூடுமென்று நம்புகிறோம்.

**Stree Aikiya Samajam.**

ஸ்த்ரீ ஐக்ய ஸமாஜம் :—சென்னை ஜார்ஜ் டவுனில் மாதரம் இப்போது ஸ்த்ரீ ஐக்ய ஸமாஜத்தார் குடும்ப ஸ்த்ரீகளுக்கு வீட்டுப் படிப்புச் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். குடும்ப ஸ்த்ரீகளுக்குப் படிப்பு விஷயமாக இந்த ஸமாஜத்தார்கள் செய்யும் கார்யங்களை அநேக ஸ்த்ரீ புருஷர்கள் ஆதரித்து வருகின்றனர். ஜார்ஜ் டவுனிலுள்ள முத்தியாலுபேட்டை பெத்துநாய்க்கன் பேட்டையில் எந்தக் குடும்பங்களுக்காவது வீட்டுப் படிப்புத் தேவையிருந்தால், ஸ்த்ரீ ஐக்ய ஸமாஜக் கார்யதரிசி, நெ 8, ராமஸாமி தெரு என்ற விலாசத்துக்கு எழுதியாவது நேரிலாவது கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

**Mahila Seva Smajam.**

மஹிள ஸேவ ஸமாஜம் :—இம்மாதம் 3-ந் தேதி பங்களூரில் ஸ்த்ரீகளுக்காக ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் மேற்கண்ட ஸமாஜத்துக்கு மிஸஸ் ஒயிட்ஹெட் விஜயம் செய்தார். தற்காலம் இங்கிலாந்தில் ஸ்த்ரீகள் பணக்காரர் முதல் ஏழைவரையில் வித்யாஸமில்லாமல் தேசத்துக்கு உழைத்து வரும் கார்யங்களைப் பற்றி அந்த ஸமாஜ ஸ்த்ரீகளுக்கு எடுத்துச் சொன்னார். மிஸஸ் சந்த்ர சேகர ஐயர் அவர்கள் மிஸஸ் ஒயிட்ஹெட் அவர்களுக்கு வந்தனமளிக்க ஸபை கலைந்தது.

**Liberal Gifts for Women Education.**

ஸ்த்ரீகளின் கல்விக்கு தாராள கொடை :—கோயமுத்தூர் வாஸியாகிய மகா-ா-ா-ஸ்ரீ ராவ்ஸாஹிப் மாரன்னகவுண்டர் அவர்கள் கோயமுத்தூரிலுள்ள தியஸாபிகல் பெண் பாடசாலைக்கு ஸுமார் பதினையாயிரம் ரூபாய் வரை உதவியிருக்கிறார். ஸ்த்ரீகளின் கல்வி விஷயத்தில் இவரின் அபிமானம் பெரிதாகும்.

**Miss. A. Picha muthu.**

மிஸ். எ. பிச்சமுத்து :—எட்டியாபுரம் ஸமஸ்தானத்தில் டாக்டராயிருந்த மிஸ். எ. பிச்சமுத்து அம்மாள் அவர்கள் அயர்லாந்திலுள்ள டப்ளின் நகத்து மருத்வத் தொழில் கலாசாலையில் படிக்கப் புறப்பட்டுப் போகிறாரென்று அறிகிறோம். அவருக்கு எம்பெரு

மொத்தச் செலவுகளை எட்டியாபுரம் ராஜா வஹித்துக் கொள்ளுகிறாரென்று ஒரு நிருபர் நமக்குத் தெரிவிக்கிறார்.

**A Woman's Club in Mysore.**

மைஸூரில் ஒரு ஸ்த்ரீ சங்கம் :—இம்மாதம் முதல் வாரத்தில் மைஸூரிலுள்ள லால்பாக்ரோடில் ஒரு ஸ்த்ரீ சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது அச்சங்கத்தில் ஸுமார் 60 ஸ்த்ரீகள் வரை மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்களென்று தெரிகிறது. இதன் மாதச் சந்தா ரூபாய் இரண்டாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். மைஸூர் ராஜவம்சத்து ஸ்த்ரீகளும் இன்னும் ப்ரபுக்களின் மனைவிமார்களும் 100 ரூபாய் முதற்கொண்டு ஆயிரம் வரை அச்சங்கத்துக்கு மூலதனமாகக் கொடுத்திருக்கிறார்களென்றும் தெரிகிறது.

## FOREIGN NEWS

## வெளி நாட்டு வர்த்தமானம்

**Women soldiers.**

ஸ்த்ரீ யுத்த வீரர்கள் :—ருஷ்யப் போர்முகத்தில் பல ஸ்த்ரீகள் ஒன்றாகச் சேர்ந்து ராணுவ அதிகாரிகள் ஸ்த்ரீகளென்று அறியாதபடி ஆண்வேஷம் தரித்து யுத்த களத்துக்குச் சென்றார்களாம். அங்கு ஒரு பயங்கரமான சண்டையில் இவர்களில் சிலர் படுகாயமடைந்தனர்களாம். ஆஸ்பத்ரியில் சிகித்ஸையிலிருக்கும்போது பார்த்ததில் இவர்கள் ஸ்த்ரீகளென்றறிந்துகொண்டு அதிகாரிகள் மிகவும் ஆச்சர்யமடைந்தனர்களாம். இவர்களில் இரண்டுபேர் எதிரிகளோடு யுத்தம் செய்கையில் வெகு தைர்யம் காட்டினார்களென்று தெரிகிறது.

**Women Foresters.**

ஸ்த்ரீகள் காட்டைப் பரிபாலிக்க :—அக்டோபர் மீ 13-ந் தேதி ஸ்காட்லாந்திலுள்ள க்ளாஸ்கோ பட்டணத்தில் ஒரு ஸ்த்ரீகளின் கான்பரன்ஸ் நடந்தது. அதில் ஸ்த்ரீகளை காட்டைப் பரிபாலிக்க உபயோகப் படுத்தலாமென்று தீர்மானிக்கப் பட்டது. அந்தத் தீர்மானத்தை ப்ரதம மந்த்ரிக்கும், யுத்த மந்த்ரிக்கும் அனுப்பினார்கள்.

**Women Telegraphists.**

ஸ்த்ரீ தந்தி குமாஸ்தாக்கள் :—வெகு வர்ஷங்களாக ஐரோப்பாவிலுள்ள பெரிய தேசங்களில் ஸ்த்ரீகளை தந்தி குமாஸ்தாக்களாக அமர்த்தி வந்திருக்கிறார்கள். அந்தந்தத் தேசத்திலுள்ள பல புருஷர்கள் இந்த யுத்தத்தில் சேர்ந்து வேலை செய்து வருகிறதால் முன்னிருந்ததைவிட இப்போது ஒன்றுக்கு மூன்று பங்காக ஸ்த்ரீகளை தந்தி குமாஸ்தாக்களாக நியமித்திருக்கிறார்கள். அவர்கள் புருஷர்களைக் காட்டிலும் வெகு நன்றாக வேலை செய்து வருகிறார்களென்று கேள்விப்படுகிறோம்.



**Women Vakils.**

ஸ்த்ரீ வக்கீல்கள் :—அமெரிக்காவிலுள்ள நியாய ஸ்தலங்களில் ஸ்த்ரீகளைப் பற்றிய கேஸ்கள் வந்தால் அக்கேஸ்களுக்கு ஸ்த்ரீ வக்கீல்கள் ஆஜராகலாமென்று உத்தரவு இட்டிருக்கிறார்கள். ஆயினும், சில கோர்ட்டுகளில் ஸ்த்ரீகள் வக்கீல்களாக இருக்கக்கூடாதென்றும் உத்தரவு இருக்கிறது. ஸ்த்ரீ வக்கீல்கள் இருப்பது ஒரு நாகரீகமான தேசத்துக்கு அழகென்றும், ஸ்த்ரீ ஜனங்களுடைய கௌரவம் காப்பாற்றப் படுமென்றும் அமெரிக்கன் டைம்ஸ் பத்ரிகை எழுதுகிறது.

**Women Conductors.**

ஸ்த்ரீகள் ட்ராம் டிக்கட் கொடுப்பவர்கள் :—ஜெர்மனியிலும், ப்ரான்ஸிலும் ட்ராம்வண்டிகளுக்கு டிக்கட் கொடுப்பவர்கள் எல்லோரும் ஸ்த்ரீகளாகவே யிருக்கிறார்கள். அவைகளை ஓட்டுகிறவர்களும் அநேகமாக ஸ்த்ரீகளாகத் தானிருக்கிறார்கள். எந்தெந்த வேலைகளுக்கு எந்தெந்த ஸமயத்தில் ஸ்த்ரீகள் உபயோகப் படுவார்களோ அவ்வேலைகளையெல்லாம் குறித்து அனுப்பும்படி ஒரு கமிட்டியை ஜெர்மன் கவர்ன்மெண்டார்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்களென்று தெரிகிறது.

**A girl's patriotism.**

ஒரு சிறுமியின் தேசாபிமானம் :—லண்டன் பட்டணத்தில் செம்படவர்களின் ஆஸ்பத்ரி என்ற ஒரு ஔஷதசாலை உண்டு. அந்த ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் ஸர்ஜன் ஒருவருக்கு அதே பட்டணத்தில் வேலை செய்யும் சிறுமி யொருத்தி பின் வருமாறு எழுதியிருக்கிறாள் என்று லண்டன் டைம்ஸ் பத்ரிகை கூறுகிறது.

"யுத்தத்தில் காயம் பட்ட ஸோல்ஜர்களின் காயத்திற்கு மனுஷத் தோல்கள் தேவையென்றும், அவை கொண்டு அக்காயங்கள் மிகவும் ஸௌகர்யமாய்ச் சொஸ்தம் பண்ணப் படுகின்றனவென்றும் தெரிகிறது. தேச க்ஷேமத்தை யொட்டி என்னுடைய தேகத்தை நான் ஒரு பொருட்டாய் எண்ணாமல், அத்தோல் கொடுக்கும் விஷயத்தில் என் தேகத்தை அர்ப்பணம் செய்கிறேன். நான் நல்ல சித்தத்துடன் தான், இக்கடிதம் தங்களுக்கு எழுதுகிறேன். என்னுடைய ஸகோதரர்கள் இருவர் யுத்தமுனையிலிருக்கிறார்கள். அவர்களாலான கைங்கர்யத்தை அவர்கள் யுத்த முனையிலிருந்து செய்து வருகிறார்கள். நான் மேற்கூறிய வழியிலாவது என்னுடைய தேசத்திற்குக் கைங்கர்யம் செய்யலாமென்று கருதியிருக்கிறேன். ஆகவே, அம்மாதிரியாய் உதவுவதற்கு எப்போது வரவேண்டுமென்று நினைக்கிறீர்களோ அப்போது நான் தயாராயிருப்பேன்"

# INSTRUCTIVE HINTS

# விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN

## குழந்தைகள் விஷயம்

**Children and Coins.**

**குழந்தைகளும் நாணயங்களும்:—** சிறு குழந்தைகள் சில ஸமயங்களில் நாணயங்கள், சோழி, புளியம் விதை முதலானவைகளை வைத்துக்கொண்டு விளையாடும். அப்போது பெற்றோர்கள் அவைகளை குழந்தைகளிடத்திலிருந்து மெதுவாக வாங்கிவிட வேண்டும். இல்லையேல், விளையாட்டுத் தனத்தின்பேரில் அவைகளை வாயில் போட்டுக் கொள்கிற ஸ்வபாவம் உண்டு. சில ஸமயங்களில் வாயிற் போடப் பட்டவைகள் தொண்டைக்கு சென்று விடுகின்றன. இதற்கு நாம் ஒன்றும் செய்யக் கூடாது. உடனே தெரிந்த அனுபவமுள்ள டாக்டரைக் கொண்டு அவைகளை எடுக்கவேண்டும், ஏனென்றால், டாக்டர்கள் ஆயுதங்களைக் கொண்டு அவைகளை இலேசாய் எடுத்து விடுவார்கள்.

**Care of Children.**

**குழந்தைகளின் பாதுகாப்பு:—** குழந்தைகள் நோயாளிகளாயிருந்தால் தாய்மார்களுக்கு அவர்களை ஸுகமாகப் படுக்க வைக்கத் தெரிய வேண்டும். குழந்தைகளின் வ்யாதிகளை வைத்யரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். வைத்யர்கள் சொல்லுகிற முறைப்படி மருந்து கொடுக்கும் விஷயத்திலும் பத்தியம் போடும் விஷயத்திலும் தாய்மார்கள் கவனித்துச் செய்யவேண்டும். அழுக்கு உடைகளைக் கழற்றவும் சுத்தமான உடைகளைப் போடவும் தெரியவேண்டும். தாய்மார்கள் ஏதாவது கோபத்தைக் கொண்டு வ்யாதியாயிருக்கும் குழந்தைகளிடத்தில் காண்பிக்கக் கூடாது. குழந்தைகளை நல்ல வார்த்தைகளால் தேற்றி ஸந்தோஷ முகத்துடன் ஆஹாரம் கொடுக்கவேண்டும். குழந்தைகளை சுத்தமான காற்று உலாவு மிடங்களில் படுக்க வைக்க வேண்டும்.

**Causes of diseases.**

**வ்யாதிகளின் காரணங்கள்:—** சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் அநேக வ்யாதிகள் அஜீர்ணத்தினாலேயே அநேகமாய் ஏற்படுகின்றன. ஆகையால், குழந்தைகளுக்கு மாதத்திற்கு ஒரு தரம் பேதிக்குக் கொடுத்துவந்தால் அநேகமாய் வ்யாதிகள் தடுக்கப்பட்டுப்போகும். இப்படியாக நம்முன்னோர்கள் தவறாமல் குழந்தைகளுக்குப் பேதிக்குக் கொடுத்து அவர்களின் தேகத்தை ஸரியாகப் பார்த்து வந்தார்கள். குழந்தைகளின் பேதிக்கு சிற்றாமணக்கெண்ணெய்தான் எடுத்தது. இரண்டு அல்லது மூன்று தடவை பேதியானாலே குழந்தைகளுக்குப் போதும்.

**Teething.**

**பல் முளைத்தல்:—** குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத்தில் அநேக வ்யாதிகள் ஏற்படுகிறதுண்டு. அவைகளில் முக்யமாக வயிற்றுப் போக்கும் வலிப்புகளுமே. இவ்வியாதிகள் சிலர்க்கு வராது வந்தால் குழந்தைகளை வெகு ஜாக்ரதையாகக் கவனிக்கவேண்டும். கண்ட மருந்துகளை எந்தக் காரணத்தினாலும் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது. தகுந்த வைத்யர்களிடம் காண்பித்து ஜீரணிக்கக்கூடிய இலேசான ஆஹாரத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதப்பத்திரிகை


கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.


Vol. 6. தொகுதி 6. } நளஸு மார்கழி மீ December 1916. { No. 3. பகுதி. 3.


ஓம்

ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே
ஸஹஸ்ர நாம தத்துல்யம் ஸ்ரீராம நாம வரானனே.

பார்வதி தேவியார் பரந்தாமனாகிய பரமேச்வரனை நோக்கி "ஏ! லோகநாயகா! பக்தி பெரிது பக்தி பெரிது என்று அடிக்கடி சொல்லுகிறீர்களே! அப்படி பக்தி செய்கிறதற்கு எந்த நாமத்தினைக் கொண்டு பக்தி செய்யவேண்டும்; ஆயிரநாமங்களில் எந்த நாமம் சிறந்தது. எந்த நாமத்தை ஸ்மரித்துப் பக்தி செய்தால் மோக்ஷமடையலாமென்று பலவிதமாக மிகப் பணிவுடன் கேட்க" பரமேச்வரன் வெகு ஸந்தோஷத்துடன் ராம நாமம் பெரிது; அந்த ராம நாமமே எல்லா நாமங்களிலும் சிறந்தது; அந்த நாமத்தைக் காட்டிலும் சிறந்தது வேறு ஒன்றுமில்லை யென்று சொன்னார். இம்மந்த்ரத்தினையே தாரகமந்த்ரம் என்பர். அது பற்றியே, ஸ்ரீராமநாம தாரகம் வாஸுதேவபக்தி முக்தி தாயகம், சங்கராதி கீயமான புண்ய நாம கீர்த்தனம். என்று கூறப்படும். ஸஹோதரிகளே! ஸம்ஸார பந்தங்களைக் கடக்கத் தக்க நாமமாகிய ஸ்ரீ ராம நாமத்தை விடாமல் ஸதாகாலம் பஜித்துக் கொண்டு வாருங்கள். அப்படிச் செய்து வந்தால் நீங்கள் குலதர்மத்தைக் காப்பாற்றினவர்களாவீர். உங்களுடைய புத்தி ப்ரகாசிக்கும். உங்கள் கஷ்டங்களெல்லாம் சூர்யனைக் கண்ட பனிபோல நீங்கும். உங்களுடைய குடும்பம் ஓங்கி வளரும். ஆகவே, உங்கள் குழந்தைகளையும் புருஷர்களையும் ஸ்ரீராம நாமம் செய்யச் சொல்லுங்கள். ஸ்ரீராம சந்த்ரமூர்த்தி உங்களைக் கைவிடமாட்டார். ஓம் சாந்தி.

# PROGRESS OF THE WORLD

# ப்ரபஞ்சப் போக்கு

**Children's Feeding Home**

குழந்தைகளின் ஆஹார விடுதி:—சென்னையிலுள்ள, ஏழைக் குழந்தைகளுக்கு உதவி செய்யும்பொருட்டு தர்ம ப்ரபுவாகிய மகா-ா-ாஸ்ரீ ராவ்ஸாஹிப் C. கண்ணன் செட்டியாரவர்கள் திருவல்லிக்கேணியிலுள்ள பேயாழ்வார் வீதி 3-வது நெம்பருள்ள வீட்டில் அநாதைக் குழந்தைகளுக்கு ஆஹார விடுதி யொன்று சென்ற மாஸம் கடைசிவாரத்தில் ஸ்தாபித்தார். அந்த ஆஹார விடுதியில் தினந்தோறும் காலை 7 மணியிலிருந்து 8 மணி வரையில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகச் சுத்தமான பசும்பால் கொடுக்கப்பட்டு வருகிறது. மகா-ா-ா-ஸ்ரீ ராவ் ஸாஹிப் கண்ணன் செட்டியாரவர்கள் எடுத்த தர்மங்கள் ஒன்றாகிலும் பழுது போகிறது கிடையாது. இவரின் தர்மங்கள் ஈச்வர அநுக்ரஹத்தைப் பெற்றிருக்கிறதனால் வெகு திவ்யமாகவும், செவ்வையாகவும் நடைபெறுமென்பதில் ஸந்தேஹமில்லை. சென்னையில் குழந்தைகளின் மரணம் பரிதாபத்துக்கிடமான நிலைமையிலிருக்கிறதென்று நாம் பலதடவைகள் குறித்திருக்கிறோம். குழந்தைகளின் ஜாஸ்தி மரணத்திற்கு அநேக காரணங்களுள் குழந்தைகளுக்கு நல்ல பால் கிடைக்காததே முக்கிய காரணமாயிருக்கிறது. இனி, மகா-ா-ா-ஸ்ரீ செட்டியார் அவர்களைப் போல் பல ப்ரபுக்கள் முன் வந்து இந்தப் பட்டணத்திலுள்ள முக்ய ஸ்தலங்களில் ஏழைக் குழந்தைகளுக்கு ஆஹார விடுதிகள் ஸ்தாபித்தால் குழந்தைகளின் மரணம் குறையுமென்பது நிச்சயம்.

**Compulsory primary Education in Bhopal**

போபால் நாட்டில் கட்டாய ப்ரைமெரிப் படிப்பு:—போபால் என்பது வட இந்தியாவிலுள்ள ஒரு ஸமஸ்தானம். இது ஒரு மஹம்மதிய ஸ்த்ரீயால் ஆளப்படுகிறது. இவர் தமது ஸமஸ்தானத்து ஜனங்களின் க்ஷேமத்தைத் தமதாகக் கருதி நடத்து வருகிறவர். ஜனங்கள் படிப்பிலும், செல்வத்திலும் முன்னடைகிறதற்குப் பல வழிகளில் தமது சக்திக் கியன்றவாறு சீர்திருத்தங்களைச் செய்வதே இவரின் நோக்கமாயிருக்கிறது. ஸமீபத்தில் இவர் தமது ஸமஸ்தானத்தில் கட்டாய ப்ரைமெரிப் படிப்பை ஏற்படுத்துகிறதற்கு



ஸ்பெஷலாக ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறாரென்று அறிந்து ஸந்தோஷிக்கிறோம். எவ்வளவுக் கெவ்வளவு தேசத்தில் கல்வி ஸரியான முறையில் விருத்தியடைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தேசம் ஸாபிக்ஷமாயிருக்குமென்பது பெரியோர்களின் கருத்தும் அநுபவமுமாக இருக்கிறது.

**Our 31 Indian National Congress.**

நமது 31-வது வர்ஷத்திய இந்திய ஜாதீய மஹாஜன ஸபை:—இம் மஹாஜன ஸபை ஐக்ய மாகாணத்தைச் சேர்ந்த லக்னோவில் நடைபெறுகிறது இம்மாதம் 26ந் தேதி இம் மஹாஜன ஸபை ஆரம்பமாகி நான்கு நாள் நடந்து 29ந் தேதி ஸாயங்காலத்தோடு முடிவு பெறும். வங்காள வாஸியாகிய ஆனரபில் மிஸ்டர். A. C. மஸூம்தார் காங்கிரஸின் அக்ராஸனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இது வரையிலும் நடந்திருக்கிற காங்கிரஸூகளைக் காட்டிலும் இவ்வர்ஷத்திய காங்கிரஸ் வெகு முக்யமானதாகும்.

மாக்ஷிமை பொருந்திய ஜார்ஜ் சக்ரவர்த்தியிடம் இந்திய ஜனங்களாகிய நாம் வைத்திருக்கும் அத்யந்த ராஜ விச்வாஸத்தைப் பற்றியும், தற்காலம் நடக்கும் யுத்தம் முடிந்தவுடன் ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்துக்குட் பட்டு இந்தியர்களாகிய நமக்கு ஸ்வயாக்ஷி கொடுக்கப் படவேண்டுமென்பதைப் பற்றியும் இரண்டு முக்ய தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். காங்கிரஸ் பந்தலில் இதைத் தவிர மற்ற ஏழு கான்பரன்ஸூகள் நடைபெறும். அவைகளில் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸூம் ஒன்று. இந்த கான்பரன்ஸூகளெல்லாம் நம் தாய் நாட்டின் அபிவ்ருத்திக்காகவே நடைபெறுகிறதால் ஸர்வ வல்லமையுமுடைய கடவுளை மேற்கண்ட கான்பரன்ஸூகள் மங்களகரமாக முடியுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

**Education of the blind**

குருடர்களின் படிப்பு:—கடவுளது ச்ருஷ்டியில் இவர்களின் நிலைமை பரிதாபத்துக்கு இடமானதாகும். இவர்கள் கண்ணுடையவர்களைக் காட்டிலும் அறிவுடையவர்கள். கண் பார்வை இல்லாதவர்களுக்கு மற்ற இந்திரியங்கள் மிகவும் ஸூக்ஷ்மமாக இருக்கும். முக்யமாக இவர்களுக்கு ஞானேந்திரியம் வலிவுடையதாகி ஞாபக சக்தி ஜாஸ்தியாக இருக்கும். இங்கிலாந்தில் முதன் முதலாக குருடர்களுக்குப் பாடசாலை 1178-ஆம் வர்ஷத்திலும் பாரிஸ். நகரத்தில்

1260-ஆம் வருஷத்திலும் முறையே ஸ்தாபிக்கப்பட்டது. மேனாடுகளில் பரோபகாரமுள்ள தர்ம ப்ரபுக்கள் குருடர்களுக்கு வேண்டிய உபகாரங்கள் செய்ய வரவே, கவர்ன்மெண்டாரும் தங்களுடைய செல்வாக்கையும் உதவியையும் கொடுத்து வந்தார்கள்.

ஸமீப காலத்தில் இங்கிலாந்தில் குருடர்களுக்கு ஸங்கீத பாடசாலைகளும், மதப்படிப்பைப் போதிக்கும் படியான பாடசாலைகளும், இன்னும் மற்ற தொழிற் பாடசாலைகளும் ஜாஸ்தியாக ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகின்றன. நம் இந்தியாவிலோ லக்ஷக்கணக்கான குருடர்கள் படிப்பு, தொழில் முதலியவைகளின்றியில் பட்டினி கிடந்து ரோகிகளாகத் தங்கள் வாழ்நாளைக் கழித்து வருகிறார்கள். ஆனால், மேனாட்டு லோகாயதக்கொள்கையானது நம் இந்தியர்களை எவ்வளவு விஜாதியப் படுத்தினாலும் அவர்கள் தங்கள் இயற்கை தர்ம குணத்தைக் கைவிடாமல் இந்தக் குருடர்களையும் இவர்கள் போன்ற திக்கற்ற ஏழைகளையும் காப்பாற்றி வருகிறதானது மெச்சத் தக்கது. மேலும், நல்ல காலத்தின் அறிகுறியாகவும் சில பரோபகாரமுள்ள குணவான்கள் குருடர்களுக்கு ஆங்காங்கு சில தர்ம பாடசாலைகள் ஸ்தாபித்து வேலைசெய்து வருகிறார்கள். இவர்கள் குருடர்களின் விஷயத்தில் கவனிக்கவேண்டியவைகள் அநேகமிருக்கின்றன. அவைகளில் முக்யமாகக் குருடர்களுக்கு ஸன்மார்க்கக் கல்வியையே ப்ரதானமாகக் கொடுக்கவேண்டும். பிறகு, குருடர்களுக்கு ஏற்ற கைத்தொழில்களான கூடை பின்னுதல், துடைப்பம் கட்டுதல், பாய் பின்னுதல், பிரம்பு நாற்காலி பின்னுதல், பிரம்பு தட்டிகளும் பெட்டிகளும் செய்தல் முதலியவைகளையும் கற்றுக் கொடுக்கலாம். சில ஸமயங்களில் குருடர்கள் ஸங்கீத வித்வான்களாகவும், உபாத்யாயர்களாகவும் பழக்கினால் மிகவும் தேர்ந்தவர்களாகவும் ஆவார்கள். இன்னும் இவர்கள் செய்யக்கூடியது எவ்வளவோ சில்லரைக் கைத்தொழில்களும் இருக்கின்றன. இந்தியாவிலுள்ள குருடர்களின் நிலைமையானது கவர்ன்மெண்டாருக்கும், ஜன ப்ரதிநிதிகளுக்கும் கூடிய சீக்ரத்தில் ஒரு விசேஷக் கவலையைக் கொடுக்குமென்பதில் ஸந்தேகமில்லை.

**The Tamil Cyclopedia**

தமிழ் சைக்ளோ பீடியா :—பிரமஸ்ரீகளாக வி. எஸ். கிருஷ்ணையர் எம். ஏ; எம். வி. ஈசுவர ஐயர் இருவரும் அனுப்பிய ப்ரகடனப் பத்ரிகையை வரப்பெற்றோம்.



சைக்ளோபீடியாவில் அகத்தியம் முதற்கொண்டு தற்கால நாவல்களீறாக ஒவ்வொன்றின் ஸாரஸங்க்ரமமும், அகத்தியர் முதற்கொண்டு தற்கால நூலாசிரியர்கள் ஒவ்வொருவரின் பிறப்பு, வளர்ப்பு புலமை முதலிய சரித்ரமும் சேர்க்கப்படுமென்பது தெரிகிறது. இத்தகைய நூலொன்றை திருவனந்தபுரம் ஸ்ரீ பி. சுந்தரம் பிள்ளை எம்.ஏ. அவர்கள் செய்ய உத்தேசித்திருந்ததாயும், அம்முயற்சி அவர் அகால மரணத்தால் தடைபட்டதென்றும் அறிகிறோம். அவர் இறந்து 20 வர்ஷங்களாகியும் இதுவரை ஸித்தி பெறாமலிருந்த "உத்தம லோகோபகாரமான கைங்கர்யத்தை" ஸ்ரீமான்கள் ஆரம்பித்திருப்பது பத்ராசிரியர்களும், வித்வான்களும், தமிழபிமானிகளும் நன்றி பாராட்டக் கூடிய விஷயமாகும். திவான் பஹதூர் ஸ்வாமி கண்ணு பிள்ளையவர்கள் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ச் சங்கத்தில் உபந்யாஸித்த பொழுது தமிழில் சைக்ளோ பீடியா போன்ற நூலின் அவச்யத்தை விரித்தெடுத் துரைத்தார். சைக்ளோ பீடியா என்பதை "தமிழ் ஸாரஸங்க்ரஹசேகரம்" எனக் கூறலாம். இப்புத்தகத்தி னுதவியால் தமிழிலக்கியம், இலக்கணம், காவ்யம், நாவல், சாஸ்த்ரம் முதலிய பாகுபாடுகளில் யார் யார் என்னென்ன நூல்களியற்றியுள்ளார்களென்பது நன்கு விளங்கும். நூலாசிரியர்களுக்கும், ப்ரசுரம் செய்வோர்களுக்கும் இவ்வரிய நூல் மிக்க உதவியாயிருக்கும். இங்கிலீஷிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளவைகளில் ஒருவர் மொழி பெயர்த்ததையே வேறு சிலரும் மொழி பெயர்த்திருக்கிறார்கள். இரண்டொரு உதாரணங்கள் காட்டுகிறோம். ஷேக்ஸ்பியர் நாடகங்களாகிய ஸிம்பலீன் மூவராலும், ஹாம்லட் மூவராலும், ஸ்காட் கெனில் வொர்த் மூவராலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. மொழி பெயர்க்கப் படவேண்டிய புஸ்தகங்கள் பல வுள்ளனவாதலால் அனாவச்யமாய் ஒருவர் செய்ததையே வேறு சிலரும் செய்து மனோ முயற்சி வீணாகுவதை இவ்வரிய நூல் தடுக்குமென்றும், ஸரியானவும் நூதனமானவும் துறைகளில் இறங்கி உழைக்க வழிகாட்டியாயிருக்குமென்றும் நம்புகிறோம்.

உலகமும் உலகத்திலுள்ள ஸகல ச்ருஷ்டிகளும் ச்ரேஷ்டமானவைகளே. ஆனாலும், அவைகளில் உத்தமமான ஸ்த்ரீயே அதிக ச்ரேஷ்டமானவள் :—மஹம்மத் நபி.

# SPECIAL ARTICLES
# விசேஷ வ்யாஸங்கள்

## ECHOES OF ANCIENT WOMEN

Mr S. K. S.

### முற்கால ஸ்த்ரீ ரத்னங்களின் எதிரொலிகள்.

பூர்வம் நம் ஸ்த்ரீகளின் நிலைமையைப் பற்றி ஆராயுமிடத்து அவர்கள் கல்வி கேள்விகளில் தேர்ச்சி யடைந்திருந்தார்களென்றும் ஆகவே, புருஷர்களும் அவர்களை கௌரவித்து வந்தார்களென்றும் தெரிகிறது. மேலும், ஸ்த்ரீகள் குடும்ப தர்மத்தைக் காப்பாற்றி நமது மதத்தைக் கைவிடாமல் கோட்டைக் காப்பு வீரர்களை போல் பாதுகாத்து வந்தார்களென்றும் பின் சொல்வனவற்றிலிருந்து அறியக்கூடும்.

சீதையானவள் தனக்கிஷ்டமான ஸ்ரீராமபிரானையும், த்ரௌபதி தனக்கிஷ்டமான பஞ்ச பாண்டவர்களையும், தமயந்தி நளனையும், ஸாவித்ரி ஸத்யவானையும், மைத்ரேயி யாக்ஞவல்கரையும், அருந்ததி வஸிஷ்டரையும் முறையே விவாஹம் செய்துகொண்டார்கள். இதல்லாமல் ராஜபுத்ர வம்சத்தில் தோன்றின ஸம்யுக்தா தேவி ப்ரிதிவி இராஜனையும் அவ்வாறே வரித்துக்கொண்டாள். அக்காலத்தில் மாதர்கள் புருஷர்களுக்கு ஸரி ஸமானமாக வித்யாப்யாஸஞ் செய்துகொண்டு அநேக கார்யங்களையுஞ் செய்திருக்கின்றனர். யாக்ஞவல்கர் தமது மனைவியான மைத்ரேயியைக் கூப்பிட்டு பெண்ணே! "நான் கானகஞ் செல்லுகிறேன். நீ இங்குதானே ஸுகமாய் வீற்றிரு" என்றனர். மைத்ரேயி உடனே இச்சுகம் ஸ்வர்க்கத்தைக் கொடுக்குமா? என்ற கேள்வியைக் கேட்கவும் உடனே அவர் கொடுக்காது என்றார். அதற்கு மைத்ரேயி, ஸ்வாமி! மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியதும், மேலான ஸுகத்தை யளிப்பதும் பேரானந்தஞ் கொடுப்பது மானதெதுவோ அதைக் கொடுத்தருளும் என்று கேட்க, உடனே, யாக்ஞவல்கர், மைத்ரேயியை யழைத்து உபசரித்து அவளுக்கு ஆத்ம அனாத்ம வித்தையை உபதேசம் செய்தார். அக்காலத்தில் இவ்விருவர்களுக்கும் அநேக ஸம்வாதங்களுண்டாயின. ஆகவே, மாதர்கள் மோட்ச ஸாம்ராஜ்ய விஷயத்தைக் குறித்துத் தர்க்கிக்கவும் உபதேசிக்கவும் பாத்யதையுள்ள

வர்களா யிருந்தார்களென்று தெரிகிறது. த்ரௌபதி தன் கணவன்மார்களுடன் கானகஞ் சென்று அவர்களின் துயரத்தைப்பற்றி, யுதிஷ்டிரருடன் அநேக இராஜ தர்மத்தைப் பற்றி தர்க்கித் திருக்கிறாள். அவள் பெரிய இராஜதந்த்ரி. தென்னாட்டில் அல்லியராணி முதலானோர், புருஷர்களைவிடப் பன்மடங்கு நீதியுடன் இராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தார்கள். இதல்லாமல் தசரதர் சம்பராஸுரனைக் கொன்ற காலத்தில் கைகேயி ஸாரத்யஞ் செய்ததும், அர்ஜுனனுக்கு சுபத்ரை நடுயுத்தத்தில் யுத்தத்தின் பயங்கரத்தைச் சற்றுங் கவனியாது ஸாரத்யஞ் செய்ததுமான அதிசயங்கள் மாதர்களின் விசேஷ ஸ்தானத்தைக் காண்பிக்கின்றதல்லவா? இதல்லாமல் மாதர்கள் தங்கள் கணவன்மார்களுக்காக, உயிர் துறந்தும், கொடிய கஷ்டங்கள் பட்டும் வருந்தியு மிருக்கிறார்கள். கணவன்பொருட்டு யமனை நோக்காது அவனிடம் வாதாடி கணவன் உயிரைக் கொணர்ந்த ஸாவித்ரியும், நாடிழந்து, உற்ற தனமிழந்து, பாலனை யிழந்து, புருஷனைப்பிரிந்த குணவதியான சந்த்ரமதியும் ஸத்யத்தின்பொருட்டுத் தன் கணவனுடன் ஸரியாகக் கஷ்டமனுபவிக்கவில்லையா? ஆகவே, எண்ணிறைந்த மாதர்கள் இராஜதந்த்ரத்திலும் கல்வி கேள்விகளிலும், புருஷ பக்தியிலும் சிறப்படைந்திருந்தார்கள்.

அசோக சக்ரவர்த்தியின் சகோதரியான சங்கமீதா என்பவளும், இன்னுமநேக பெண்களும் பௌத்தமதத்தைப் பரவச் செய்வதன் பொருட்டுத் தென்புறத்திலுள்ள இலங்கை (சிலோன்) பர்மா முதலிய நாடுகளுக்குச் சென்று ஆங்காங்கு அரிய ப்ரஸங்கங்களைச் செய்து தங்கள் மதத்தை உத்தாரணஞ் செய்திருக்கின்றார்கள். மிதுலா நகரில் கார்க்கி என்பவள் ஜனக மகாராஜனுடைய வித்வத்ஸபையில் கல்வியில் மிக்க பாண்டித்தியமுள்ள ஆடவர்களும் நடுங்கும்படித் தர்க்கஞ் செய்து, தனது ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தாள். இந்நாட்டில் புருஷர்கள் எங்ஙனம் யோகிகளா யிருக்கிறார்களோ அங்ஙனமே மாதர்களும் யோகினிகளா யிருந்திருக்கிறார்கள். ஸ்ரீ ராமரைப் பஞ்சவடியில் பழமுதலானவைகளால் உபசரித்த சபரி சிறந்த யோகினியில் ஒருத்தி. உலோபா முத்ரை, அனுசூயை முதலான ஸ்த்ரீ ரத்னங்கள் தங்கள் கணவன் மார்களுடனே யிருந்துகொண்டு சிறந்த ராஜ யோகத்தைப் அப்யஸித்துப் பதிவ்ருதா

சிரோன்மணிகளாய் விளங்கி யிருந்தார்கள். பௌத்த ஜைன்ய காலங்களில் அநேக மாதர்கள் புருஷர்களைப் போலவே, ஸந்யாஸிகளாக யிருந்தனர். வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பன்னிரண்டாழ்வார்களில் ஒருவரான சூடிக்கொடுத்த நாச்சியார் என்று வழங்கும் ஆண்டாள் சிறுபிராயந் தொட்டே ஸாக்ஷாத் பகவானையே வதுவை செய்ய வேண்டுமென்று எங்ஙனம் கோரி முடித்தனளோ அம்மாதிரியாகவே, உத்ரதேசத்தில் மீராபாய் என்னும் பெண் ஒருத்தி பால் மணம் மாறாச் சிறு பிராயத்தொட்டே பக்தி பரவசப்பட்டுப் பாண்டவ ஸஹாயனான கிருஷ்ண பகவானையே வரிக்கவேண்டுமென்று அநுதினமும் சிந்தை மேலிட்டுக் கடைசியில் மனம்போல் மாங்கல்யம் என்ற முதுமொழியைப் பொய் மொழியாக்கிடாமல் உலகமுண்ட திருவாயனை மணந்தாள். ஆகவே, ஸ்த்ரீகளுடைய நிலைமையை அறிந்து மநுவும் மாதர்களுக்குச் சிறந்த ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறார். மேலும், உபாத்யாயரைக் காட்டிலும் பன்மடங்குயர்ந்தவர் ஆசார்யர். ஆசார்யரைக் காட்டிலும் 100 மடங்குயர்ந்தவர் பிதா. பிதாவைக்காட்டிலும் 1000 மடங்குயர்ந்தவள் மாதாவென்று கூறியிருக்கிறார். ஸ்த்ரீகள், வீட்டிலிருக்கும் தகப்பன், உடன் பிறந்தோன், கணவன், மைத்துனன் முதலிய ஸகலராலும் பூஜிக்கப்பட்டவர்கள். எங்கு மாதர்களை நன்கு பூஜிக்கப்படுகின்றதோ அங்கு தேவதைகளும் பூஜிக்கப்பட்டு ஸந்தோஷமடைகின்றனர். எங்கு மாதர்களைப் பூஜிக்கவில்லையோ அங்கு தபம், ஹோமம் முதலிய கர்மங்கள் கிடையா. எக்குடும்பத்தில் மாதர்களின் துக்கம் ஆறாய்ப் பெருகுகிறதோ, அக்குடும்பம் நசித்துப் போகும். அங்ஙனம் குடும்பம் மறுபடியும் விருத்தியாகாது.

மாதர்கள் எக்காலத்தும் ஸந்தோஷமாயிருக்கவேண்டும். வீட்டுக் கார்யங்களில் கவலையுள்ளவர்களா யிருப்பதுமல்லாமல், குடும்ப நிர்வாகத்தை ஒழுங்காகச் செய்ய வேண்டும். இல்லற தர்மத்தை ஸரிவரச் செய்துவரும் கற்புடைய ஸ்த்ரீகளுக்கு நோன்பு, வ்ருதம், ஜபம், த்யான முதலியவைகள் யாவும் வேண்டியதில்லை. இன்றைக்கும் கிராமங்களில் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏக மனதுடன் குடும்ப தர்மங்களைச் செவ்வையாய் அநுஷ்டித்து வருவதைப் பார்க்கலாம். நம் ஸ்த்ரீகள் ஹிந்து மதத்திலும் சரித்ரத்திலும் தக்க ஓர் ஸ்தானத்தை வகித்து வருகின்றார்கள். இல்லற தர்மம் நடத்தி வந்த ஸ்த்ரீகளின் பக்தியினாலும் தைர்யத்திலும், யோகத்தினாலும் முயற்சியினாலும் அநேக புருஷர்கள் மேலான பதவியை அடைந்திருக்கிறார்கள்.

எஸ். கே. எஸ்.

# EDUCATION IN ANCIENT INDIA

By

**Mr. S. K. Sarma.**

## முற்கால இந்தியாவில் கல்வி

கடல்சூழ்ந்த இந்நெடிய உலகில் வாழும் மனிதர்களுக்குக் கல்விப்பொருள் மற்றப் பொருளைக் காட்டினுஞ் சிறந்தது. "எண்ணென்பவேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங் கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்றாற்போல கல்வியானது மானிடர்களுக்கு நேத்திரம் போலும். ஒருவனுக்கு எவ்வகை உருப்பு பலமுள்ளதாயிருப்பினுங் கண்வலிவு குறைந்திருப்பின் ஏனைய உருப்புகள் பயன் படாததுபோல் நம்மவர்க்குக் குறையாத செல்வமும், பலமான ஜனக்கட்டு மிருப்பினுங் கல்விச்செல்வம் குறையின் பிற செல்வங்கள் ப்ரகாசியா. எத்தகைய ஜாதியாயிருப்பினும் எம்மாதிரி ஸ்திதியிலிருப்பினுங் கல்வி கற்கல் அவசியம். கல்வி கற்பதினால் வினயம் உண்டாகிறது. வினயத்தினால் யோக்யதை யுண்டாகிறது. யோக்யதையின் பொருட்டு த்ரவியமும், த்ரவியத்தினால் தர்மமும், தர்மத்தினால் ஸுகமு முண்டாகிறது. ஒரு க்ருஹத்தில் ஆண் பெண்ணிருவரும் கல்வி கற்றவர்களாயின் அக்குலம் ஓங்கும். குலம் ஓங்குவதினால் ஸநாதன தர்மம் விளங்கும். ஸநாதன தர்மம் விளங்குவதினல் இஹபர ஸாதனங்கள் ஏற்படும். புருஷன் பெண்சாதி இருவர்களும் படித்தவர்களாயின் இவர்கள் வழி தோன்றும் புத்ரர்களும் கல்விப் பிரியர்களாகி ஸத் கார்யத்திலேயே ஈடுபட்டிருப்பர். தாய் தகப்பன்மார் கல்வியற்ற மூடர்களாயின் இவர் வழி தோன்றும் புத்ரர்களும் பரம மூர்க்கர்களாகி ஸதா துஷ்கார்யத்திலேயே மூழ்கியிருப்பர்.

ஆகவே, கல்வியே கற்புடைய பெண்டிர், கல்வியே ஸத்ஸங்கம். கல்வியே பூஷணம், கல்வியே தர்மம், கல்வியே ஞானம், கல்வியே தைர்யம், கல்வியே ஆண்மை, கல்வியே புகழ், கல்வியே குணம், கல்வியே அழியாச்செல்வம். இது பங்காளிகளால் பகுக்கக் கூடாதது. கள்வர்களால் பறிக்கக் கூடாதது. வலியவர் வாங்கக் கூடாதது. அரசர் முதலியவர் கொள்ளப் படாதது. வழிபட்டவர்க்குக் கொடுத்த விடத்தே குறைவு படாதது. மன்னுதிமன்னர்கள் மாண்டு

போயினுங் கல்வி மாளாது. தேசங்கள் அழிந்துபோயினுங் கல்வி அழியாது. ஏனெனில், கல்வி ஸநாதனமானது. கல்வி தெய்வீகமானது. கல்வி சைதன்யமானது. விவேகத்துக்கும், ஸாமர்த்தியத்துக்கும், குணத்துக்கும், இன்னும் அநேக நூதனப் பொருள்களுக்கும் கல்வியே சிறந்த ஸாதனம். சரித்ரங்களைக் கற்கவும், ஆராய்ச்சி செய்யவும் கல்வியே யவசியம். செல்வ விருத்திக்கும் தொழில் நடமாட்டத்திற்கும் கல்வியே காரணம். நாட்டின் பொது விஷயங்களறியவும், அரசாங்க ஸம்பந்தமான அரசிறை, அர்த்தசாஸ்த்ரம், ஸுகாதாரம் முதலிய போக்குகளை யறியவுங் கல்வியே இன்றியமையாதது. ஜனக்கட்டுக்கும், தேசாபிமானத்திற்கும், பரோபகாரத்திற்கும் கல்வியே மூல புருஷன். நாட்டின் நிலைமையையும், ஜனங்களின் ஸ்திதியையுங் கண்டறிவதற்குக் கல்வியே மார்க்கபந்து. நாட்டின் நாகரிகத்திற்குக் கல்வியே அவதார புருஷன். கெட்ட ஸகவாஸத்தை யொழித்து ஸத்ஸகவாஸத்தை யளிக்கக் கல்வியே பரம ஆசார்யன். இத்தகைய மேம்பாட்டைக் கொண்டது கல்வியே. கல்வியானது புத்தகக் கல்வி, அப்யாஸக் கல்வியென இருவகையாகும். சிறந்த பண்டிதர்கள் அநுபோகத்தினால் எழுதிப் புத்தகங்களாக ப்ரசுரித்தது புத்தகக் கல்வி. இப்புத்தகக் கல்வியினால் விஷயங்களை யறிந்து, அறிந்த விஷயங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவது அப்யாஸக்கல்வி. இதர நாட்டினர்கள் கல்விஞானமின்றி மிருகப்ராயமாயிருந்த காலத்திற்கு முன்னரே இத்தகைய கல்வியை இந்நாட்டினர்கள் கற்று வந்தனர்.

கிறிஸ்து பிறக்க வெகு காலத்திற்கு முன்னரே இந்தியாவில் கல்வியானது வெகு விமர்சையாய் நடமாடிக்கொண்டிருந்தது. வனத்தில் வஸிக்கும் ரிஷிகள் தங்கள் ஆச்ரமங்களிலேயே கல்வி கற்பித்து வந்தனர். கல்வி கற்கவரும் வித்யார்த்திகள் உபாத்யாயர்களுக்குப் பணிவிடை செய்து குருவினிடத்திலேயே வஸிப்பர். இதற்குக் குருகுல வாஸமென்பர். குருகுலத்திற்கு வரும் வித்யார்த்தி 7 வயது முதல் 24 வயது வரையிலும் ஆசார்யனுடைய ஆதரவிலிருந்து வித்தையைக் கற்று வருவான். இவ்வித்தியார்த்திகளுக்குப் பிரம்மசாரிகள் எனப்படுபவர். அக்காலத்திய ஹிந்து இராஜாக்களினால் உதவி செய்யப்பட்டுப் பற்பல கல்வியைக் கற்று வந்தனர். பெரிய பெரிய நகரங்களிலும், இராஜதானிகளிலும், மன்னர்களால்



ஆதரிக்கப்பட்டு வந்த வித்யாசாலைகள் பல உண்டு. இவ்வித்யாசாலைகளுக்கு எண்ணிறைந்த வித்வான்கள் வெளியூர்களிலிருந்து ஸன்மானம் பெற வருவது வழக்கம். இப்பெரிய வித்யாசாலைகளில் வித்வான்களுக்கு வித்தையின் மதிப்புப் படி மன்னர்களால் பட்டங்களும், மான்யங்களும் கொடுக்கப்படும். மன்னர்களும், வித்வான்களும் அடிக்கடி விஷயங்களைப் பற்றித் தர்க்கிப்பதுண்டு. கிராமத்திலுண்டாகும் வரும்படியைக்கொண்டு அநேக கிராம பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருந்தன. உயர்தரக் கல்வி மிகவும் பரவியிருந்தது, கல்வியானது, தெய்வ பக்தியை ஆதாரமாகக் கொண்டு கற்பிக்கப்பட்டு வந்தது.

தற்காலத்திலிருக்கும் ஸர்வகலாஸபை (யூனிவர்ஸிடி) போல் முற்காலத்தில அநேக ஸர்வகலாஸபைகளிருந்தன. அவைகளில் தக்ஷஸ்தலம், ஸ்ரீதன்யகடகம், நாளந்தா, உதந்தபுரி, விக்ரம சிலா, வாராணசி, காஞ்சி முதலியவைகளே முக்கியமானவைகளாகும். தக்ஷஸ்தலத்திலுள்ள ஸர்வகலாசாலையில், வேதம், வ்யாகர்ணம் தர்க்க சாஸ்தீரம், ந்யாயசாஸ்த்ரம், ஜோதிஷம், கணிதம், வைத்யம், சிற்பசாஸ்த்ரம், சித்ரவேலை, ஆயுதவித்தை, நீதிசாஸ்த்ரம், காவ்யம், அலங்காரம், நாடகம், ஸங்கீதம், இரஸாயனம், சரீரசாஸ்த்ரம், ஆத்ம தத்வம் முதலிய பாடங்கள் கற்பிக்கப் பட்டு வந்தன. இச்சர்வ்கலாஸபை கிறிஸ்து பிறக்க ஒரு நூற்றாண்டிற்கு முன் வெகு கீர்த்தி பெற்றிருந்தது. ஸ்ரீதன்ய கடகம் பீரார் மாகாணத்திலிருப்பது. மத்திய இந்தியாவிலுள்ள ஒரு மன்னரால் அங்கு ஸ்தாபிக்கப் பட்ட நாளந்தா ஸர்வகலாஸபையே மிக்க கீர்த்தியுடன் நடமாடிற்று. இச்சர்வ கலாஸபையைப் பற்றி சீனதேசத்து வழிப்பிரயாணிகளிலொருவரான ஹியூன் ஸியாங் என்பவர் வெகுவாய்க் கொண்டாடியிருக்கின்றனர். இச்சர்வ கலாஸபைக்கு 100 கிராமங்களிருந்தன. இக்கலாஸபைக்குரிய கல்விச்சாலைகளில் வித்யார்த்திகள் முதல் முதல் சப்தவித்யா, சிற்ப வித்யா, சிகித்ஸாவித்யா, ஹேதுவித்யா, அத்யாத்ம வித்யா முதலிய பஞ்சவித்தைகளைக் கற்றுவந்தனர். கிறிஸ்து பிறந்து 5-ம் நூற்றாண்டில் உதந்தபுரி ஸர்வகலாஸபை வங்காளத்திலுள்ள பல வம்சத்து இராஜாக்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பெரிய புத்தகாலயமொன்று இருந்தது. மகம்மதியர்கள் வங்காளத்தின் மேல் படையெடுத்த காலத்தில் இப்புத்தகாலயம் அழிக்கப்பட்டது. வித்

ரமசீலா ஸர்வகலாஸாலையைச் சேர்ந்த ஆறு கல்விச்சாலைகளில் 100 ப்ரதம உபாத்யாயர்கள் கல்விபோதிக்க நியமிக்கப் பட்டிருந்தனர். வாரணாசி (காசி) யும் காஞ்சியும் பல நூற்றாண்டுகளாக கல்விச்சாலைகளுக்குப் பேர்போனவை. இதல்லாமல் இந்நாட்டிலிருக்கும் கோயில்களிலும், மடங்களிலும் கல்விச்சாலைகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன. ஹிந்து இராஜாக்கள் காலத்திற் கப்புறம் வந்த மகம்மதிய சுல்தான்களின் காலத்திலும், கல்வியானது பரவியிருந்தது. மசூதிகளிலும், பள்ளிவாசல்களிலும், ஸ்தாபிக்கப்பட்ட அநேக கல்விச்சாலைகளுக்கு மாளவிகளும் ஹக்கீம்களும் போதகாசிரியர்களாயிருந்து கோரான், சித்ரவேலை, துணி அச்சிடும்வேலை, யூனானி வைத்யம், ஜமக்காள நெசவு, கண்ணாடி பீங்கான் வேலை முதலியவைகளைப் போதித்து வந்தனர். ஆகவே, கிறிஸ்து பிறந்து 16 நூற்றாண்டுகள் வரை ஹிந்துக்களும், மகம்மதியர்களும் அவரவர்களுக்குரிய ஜாதீயக் கல்வியைப் பயின்று வந்தனர்.

S. K. சர்மா

---

## ADOPTION BY WOMEN

By

**A Law Student**

## ஸ்த்ரீகள் ஸ்வீகாரம் செய்துகொள்ளல்

ஸ்வீகாரம் அல்லது தத்து எடுத்துக் கொள்ளும் வழக்கம் நம்மிந்து தேசத்திலேயே முக்கியமாக வழங்குகின்றது. ஸ்வீகாரத்தினால் ஒருவன் சட்டப்படி லௌகிக வைதீக விஷயங்களில், தான் பிறந்த குடும்பத்திலுள்ள கடமை, உரிமை, பாத்தியங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவையனைத்தையும் மற்றொரு குடும்பத்திலேற்கிறான். ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதில் ஸ்த்ரீகளுக்கு எம்மட்டும் அதிகாரமிருக்கிறதென்பதை சுருக்கமாகப் பெண்களறியும்படி யெழுதுவதே இவ்வியாஸத்தின் கருத்து. சில அம்சங்களில் வெவ்வேறு மாகாணங்களில் உள்ள மாறுபாடுகளைக் குறிக்காமல் சென்னை ராஜதானியில் அது வழங்குமாறே கூறுவோம்,



ஸ்த்ரீகளுக்கு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள ஸ்வயாதிகாரமில்லை. ஒவ்வொரு ஸ்த்ரீயும் தன் புருஷனிடமிருந்தே அவ்வதிகாரத்தைப் பெறவேண்டும். ஆகையால், கல்யாணமாகாத கன்னிகா ஸ்த்ரீகள் எவ்வளவு வயதானாலும் எடுத்துக் கொள்ள முடியாது. ஒரு ஸ்த்ரீ தன் புருஷனிடமிருந்து அதிகாரம் பெறுவது, தானே தனக்காக ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதற்கன்று. தன் புருஷனுக்காக அவன் பேருக்கே எடுத்துக்கொள்ளுகிறாள். ஒவ்வொரு ஸ்த்ரீயும் தன் ஸொந்தபுருஷனுக்கே தவிர வேறுயாருக்கு மெடுக்கமுடியாது. அதேவிதமாக ஒருவன் தன் பார்யைக்கு மாத்திரம் தான் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கக்கூடும். பிறருக்கு சேர்க்கையாகக் கொடுத்தால்கூட அவ்வதிகாரம் செல்லாது. ஒரு ஸ்த்ரீ கீழ்கண்ட இரண்டுவித அதிகாரத்தின்மேல் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாம்.

(1) புருஷன் கொடுத்த நேரான அதிகாரம். (2) அதிகாரம் கொடுக்காமல் புருஷனிறந்தபிறகு, அவனுக்காக ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது அவனிஷ்டத்திற்கு விரோதமில்லை யென்று ஊகித்து ஸபிண்டாக்களின் ஸம்மதத்தின்மேல் எடுத்துக்கொள்வது.

புருஷன் கொடுத்த அதிகாரம்:—இது வாய்மொழி அல்லது எழுத்து மூலமாயுமிருக்கலாம். உயிலிலும் குறிக்கலாம். முன்சொன்னபடி பார்யைக்கே இவ்வதிகாரம் கொடுக்கப்படவேண்டும். புருஷன் தனக்கு இருக்கும் அதிகாரத்திற்கு மேலும், சட்டத்திற்கு விரோதமாயும், அதிகாரம் கொடுக்கமுடியாது. ஏற்கனவே ஒரு குமாரன் உயிருட னிருக்கையிலும், அல்லது ஒரே ஸமயத்தில் இரண்டு மூன்று பேர்களையும் தத்தெடுக்க அதிகாரம் கொடுக்கமுடியாது. இக்கார்யங்கள் செய்ய புருஷனுக்கே அதிகாரமில்லை. இந்த நிபந்தனையைத் தவிர இவ்வதிகாரம் புருஷனிஷ்டப்படி எவ்விதமாயுமிருக்கலாம். ஷரத்து அல்லது நிபந்தனைகளோடு அதிகாரத்தை அவன் கட்டுப்படுத்தலாம். மனைவி கர்ப்பமாயிருந்தால் பிறப்பது பெண்ணாகிவிடில், அல்லது ஆண்பிறந்து இறக்கில் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படி புருஷன் குறிக்கலாம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தத்தெடுக்கும்படியும் சொல்லலாம். சில குறிப்பிட்ட மனிதர்களின் ஸம்மதம் பெறும்படி அவன் ஆக்ஞாபிக்கவும் செய்யலாம். தனுக்கு ஏற்கனவே இருந்த ஒரு குமாரனிறந்தபிறகும், அல்லது

தத்தெடுத்த குமாரனிறந்தபிறகும் மறுபடியும் தத்தெடுக்க அவன் அதிகாரம் கொடுக்கலாம். ஒரு புருஷனுக்கு இரண்டு அல்லது அதிக மனைவிகளிருக்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். அவர்களெல்லோருக்குமோ அல்லது குறிப்பாக ஒருவருக்கு மாத்ரமோ அவன் அதிகாரம் கொடுக்கலாம்.

அதிகாரத்தின் நோக்கத்தின்படியும், அவ்வதிகார நிபந்தனைகளுக்குட்பட்டுமே மனைவி நடக்கவேண்டும். குறித்தகாலத்திற்குள் ஸ்வீகாரத்தை முடிக்கவேண்டும். அக்காலம் கடந்தபிறகு அவ்வதிகாரம் ப்ரயோஜனமில்லை. குறிப்பாக ஒரு பையனையாவது அல்லது பொதுவாக ஒரு குடும்பத்திலுள்ள பையனையாவது புருஷன் எழுதிவைக்கும் உயிலில் குறித்திருந்தால் அப்பையனையே தான் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும். குறிப்பாகச் சிலபேர்களின் ஸம்மதத்தின்மேல் தான் தத்தெடுத்துக் கொள்ளலாமென்று எழுதியிருந்தால் அவ்விதம் செய்வதொழிய பார்யைக்கு வேறு அதிகாரமில்லை. அநேகம் பார்யைகளில் ஒருத்திக்கே அதிகாரம் கொடுத்திருந்தால் அவளேதான் எடுத்துக்கொள்ளலாம். ஒரே ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக் குறித்திருந்தால் அக்குமாரன் இறந்தபிறகு, மற்றொருதரம் ஸ்வீகாரம் எடுக்கக்கூடாது.

அதிகாரத்தின் நோக்கைப் பார்த்தே அதன் அளவைச் சரிவர அறியவேண்டும். ஸ்வீகாரப் பத்திரத்தில் அதிகாரத்தைக் குறிப்பாக (ஸ்பெஷலாக) கட்டுப் படுத்தாதவரையில் அவ்வதிகாரம் கூடுமானளவு தாராளமாகவே யிருப்பதாக வைத்துக் கொள்ளவேண்டும். ஸ்வீகாரப் பத்திரத்தில் எவ்வளவுபேர் எடுத்துக் கொள்ளலாமென்று குறிக்காதவரையில் ஒவ்வொரு ஸ்வீகார குமாரனிறந்தபிறகும், எவ்வளவு தடவையேனும் மறுபடியும் தத்தெடுக்கலாம். இரண்டு அல்லது அதிக மனைவிகளில் ஒருவரைக் குறிக்காதவரையில் எல்லோருக்கும் அதிகாரமுண்டு. ஆனால், மூத்தவளுக்கே முன்னெடுக்க பாத்தியம். மூத்தவளிருக்கையில் அவள் அனுமதி பெறுவது, அல்லது அவள் எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டாளென்று ஸந்தேகமில்லாமல் தெரிந்துகொண்ட பிறகாவதுதான் இளையவள் ஸ்வீகாரமெடுக்கக் கூடும்.

இக் கட்டுப்பாடுகளோடு ஒரு மனைவி தான் மைனராயிருந்தாலுங்கூட தன் புருஷனுக்கு தத்தெடுக்கலாம், ஆனால், ஒரு பார்யை



ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள தன் புருஷனிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றால் அவள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது கட்டாயமில்லை. அவளுக்கு இஷ்டமில்லாவிடின் எடுக்காமலே யிருக்கலாம். அவளிஷ்டத்திற்கு விரோதமாக எவரேனும் பயமுறுத்தி அல்லது வேறு விதமாகக் கட்டாயப்படுத்தி எடுக்கச் சொன்னாலும் அது செல்லாது. மேலும், ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள காலம் குறிக்காதவரையில் எத்தனை வர்ஷங்கள் கழித்து வேண்டுமானாலும் தத்தெடுத்துக் கொள்ளலாம். பம்பாயில் ஒரு ஸ்த்ரீ 72 வர்ஷங்கள் கழித்து ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டிருக்கிறாள்.

ஆனால், சட்டப்படி சில கால நிர்ணயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை அறிவது கொஞ்சம் கஷ்டமாகவே யிருக்கும். கீழ்க்கண்ட மூன்று நிபந்தனைகளை அறியவேண்டும் :—

(a) மூல புருஷன் ஒருவனிருந்து இறந்தானென்று வைத்துக் கொள்வோம். அவன் ஸொத்தானது அவனுடைய மனைவி தவிர மற்றொரு வார்ஸுக்கு உரிமையான பிறகு மூலபுருஷன் மனைவியெடுத்த ஸ்வீகாரம் செல்லாது.

உதாரணமாக, ராமன் மூலபுருஷன். கிருஷ்ணன் அவன் புத்திரன். கிருஷ்ணனிறந்துபோனால் ஸ்வீகாரம் எடுக்க ராமன் தன் மனைவி சாவித்ரிக்கு அதிகாரம் கொடுத்துவிட்டு இறந்தான். ராமனிறந்தவுடன் குமாரனாகிய கிருஷ்ணனுக்கு ஸொத்து வந்தது. கிருஷ்ணன் ராதா என்பவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டிருந்தான். பிறகு, தெய்வ சங்கற்பத்தால் கிருஷ்ணனும் இறந்தான். உடனே அவன் ஸொத்து ஸமீப வார்ஸாகிய அவன் பார்யை ராதாவுக்கு வந்தது. இப்போது ராமன் பார்யையாகிய சாவித்ரி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமா என்பது கேள்வி? சாவித்ரி தன் புருஷன் ராமன் தனக்குக் கொடுத்த அதிகாரத்தைக் கொண்டு ஸ்வீகாரமெடுக்க முடியாது. அப்படி யெடுத்துக் கொண்டாளேயானால் ஸ்வீகாரம்போன பிள்ளைக்கு ராதாவிடமிருந்து ஸொத்து வராது.

(b) ஆனால், சாவித்ரிக்கே ஸொத்து ஸொந்தமானால் அப்பொழுது அவள் தத்தெடுத்துக்கொள்ளலாம். மேலும், கிருஷ்ணன் கல்யாணம் செய்துகொள்ளாமலிருந்தால் ஸொத்து ஸமீபவார்ஸா

தாயாராகிய ஸாவித்ரிக்கே வரும். அப்பொழுது சாவித்ரி ஸ்வீகார மெடுத்துக் கொள்ளலாம்.

(c) ஆயினும், மகனைத் தாண்டி ஸொத்து மற்றொருவரிடமிருந்துவிட்டு பிறகு, அனந்தர வார்ஸாக அது தனக்குவந்தால் ஸாவித்ரி ஸ்வீகாரம் எடுக்க முடியாது. மேலும், ராதாபாயு மிறந்து அல்லது கிருஷ்ணனுக்கு குமாரனிருந்து அவனும் இறந்து, பிறகு ஸொத்து ஸாவித்ரிக்குக்கிடைத்தால், அப்பொழுதும் அவள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், கிருஷ்ணனைத் தாண்டி ஸாவித்ரியைத் தவிர பிறரிடம் ஸொத்து எப்போது போயிற்றோ அப்பொழுதே ஸாவித்ரிக்கு தன் புருஷன் கொடுத்த அதிகாரம் போய்விட்டது. பிறகு, ஸொத்து ஸாவித்ரிக்கே வந்தாலும் போன அதிகாரம் மறுபடியும் பிழைத்து வராது. இவ்வளவே புருஷன் நேராகக் கொடுத்த அதிகாரத்தைப் பற்றியது.

**ஸபிண்டாக்களின் ஸம்மதம்.** கணவன் அதிகாரம் கொடுக்காமலிறந்துவிட்டால் அவள் தத்தெடுப்பதை குறிப்பாக மறுத்துவிடாதவரையில் ஸபிண்டாக்களின் ஸம்மதத்தின்மேல் மனைவி தன் கணவனுக்கு ஸ்வீகார மெடுக்கலாம். பாகமான குடும்பமாயிருந்தால் குடும்பத்திற்கு தலைவரான மாமனாரின் ஸம்மதம் போதும்; பாகமாகாத குடும்பமாயின் எல்லா ஸபிண்டாக்களின் ஸம்மதம் வேண்டும்

சட்டப் பரிக்ஷைக்குப் படிக்கும் ஒரு வித்யார்த்தி

தூக்கத்தில் செலவிட்ட நேரத்தையே கணக்கிட்டு இன்னும் அதிகமாகத் தூக்கப்படாதே. ப்ரகாசமான நேரத்தையே கணக்கிடும் சூர்ய கடியாரத்தைப்போலிரு :—ஓமா

*    *    *    *

நீ புத்தியிலேயோ, படிப்பிலேயோ, தர்மத்திலேயோ, செல்வத்திலேயோ முன்னடைந்து வரும் காலத்தில் உனக்கு விரோதிகள் ஏற்படுவார்கள், அவர்களின் குணங்களையும் செய்கைகளையும் கண்டு பரிதாபப்படு. ஆனால், அவர்களை வெறுக்காதே :—ஹோமர்

*    *    *    *

ஒரு விஷயத்தில் அதிக ஆசை வைக்காதே. அது மிகவும் கெடுதல். கடைசியில் அது கெட்ட புளிப்பைக் கொடுக்கும் :—மிஸஸ் ஸரோஜினி

# FREDERIC FROBEL

**A Friend, Father & Teacher of School Children**

**By**

**A Trained Ex-mistress**

## சிறுவர்களின் நண்பரும், பிதாவும் உபாத்யாயருமான ப்ரடரிக் ப்ரோபல்

(நவம்பர் மாதப் பத்ரிகையின் 48-ம் பக்கத் தொடர்ச்சி.)

சென்ற மாதப் பத்ரிகையில் ப்ரோபல் தகப்பனாரின் விருப்பத்தின்பேரில் பயிர்த்தொழில் வேலையைப் பழக்கிக்கொள்ள ஒரு வ்யவஸாயினிடம் வேலைக்கு அமர்ந்துகொண்டாரென்று சொன்னோம். அந்த வ்யவஸாயினிடம் ப்ரோபல் மூன்று வர்ஷகாலம் வேலைசெய்தார். ஒருவனுக்கு அதிர்ஷ்டகாலம் வரவேண்டியிருந்தால் அது வந்தே தீருமல்லவா? அந்த வ்யவஸாயி அவரை அலக்ஷ்யம் செய்து அவருக்கு ஒன்றும் கற்றுக் கொடுக்காமலிருந்தான். மனதில் வருத்தப் பட்டுக்கொண்டவராய் ப்ரோபல் ஒழிவுநேரங்களில் பயிர்த்தொழில் ஸம்பந்தமான புஸ்தகங்களைக் கவனமாய்ப் படித்து விஷயங்களைத் தெரிந்துகொண்டார். ஆனால், அவருக்கு வேளாண்மைசெய்ய கைப்பழக்கம் மட்டும் சிறிதும் உண்டாகவில்லை. மூன்றாவது வர்ஷம் முடிகிற ஸமயத்தில் அந்த யஜமானன் தான் அதுவரை ப்ரோபல் விஷயத்தில் காட்டிவந்த அலக்ஷ்யம் வெளிவரக்கூடாதென்று நினைத்து, ப்ரோபலைப்பற்றி தப்பான அபிப்ராயங்களை அவருடைய தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுதி யனுப்பினான்.

அந்தக் கடிதத்தைப் பார்த்த ப்ரோபலினுடைய மாற்றாந்தாய் அவரை வீட்டிலேயே ஒரு அற்ப வேலைக்காரனைச் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டாள். இப்படியிருக்கையில், மூன்றுவர்ஷம் ஸரியாகக் கழிந்தவுடன் தம் யஜமானனிடம் ஸரியானபடி வாதாடி தகுந்த யோக்யதா பத்ரம் பெற்றுக்கொண்டு ப்ரோபல் தம் தகப்பனாருடைய ஊருக்கு வந்து சேர்ந்தார். பின்பு, சிலகாலம் உயர்படிப்புப் படிக்க ப்ரோபல் தம் தகப்பனாரை உத்தரவுகேட்டார். அவர் கருணையில்லாமல் மறுத்துவிடவே, ஒருநாள் ப்ரோபல் தம் ஸஹோதரர் ஒருவரைக் காணப் போயிருந்தார். தம்முடைய விஷயங்கள் அனைத்தையும் ஸஹோதரரிடம் தெரிவித்து இர

ண்டு வர்ஷகாலப் படிப்புக்குப் போதுமான பணத்தைச் சேகரித்துக் கொண்டார். அதைக்கொண்டு பக்கத்துப் பட்டணத்திலுள்ள கலாசாலையில் உயர்தரப் படிப்புப் படித்துவந்தார். இங்கேயும் துரதிர்ஷ்டம் அவரைவிடவில்லை. ஒரு வர்ஷத்திலேயே அப்பணமெல்லாம் செலவழிந்துவிட்டது. வேறுவழியில்லாமல் ப்ரோபல் கடன்பட்டு பாடசாலைக்குச் சம்பளம் கொடுக்கமுடியாமல் அக்கலாசாலை ஜெயிலில் அடைபட்டார். இந்த ஸமயத்தில் ப்ரோபலின் தகப்பனார் உடம்பு குணமில்லாமல் வருந்திக்கொண்டிருக்கவே, கலாசாலையைவிட்டு நீங்கினபிறகு ப்ரோபல் தம் தகப்பனாரிடம் வந்து சேர்ந்தார். இப்போது ப்ரோபலுக்கு வயது இருபது. ப்ரோபல் தம் நேரங்களை வீண்பொழுது போக்காமல் வீட்டு வேலையும் செய்துகொண்டு தமக்குவேண்டிய புஸ்தகங்களைப் படித்துவந்தார். ப்ரோபலினுடைய படிப்பையும் புத்தியையும் அறிந்த வேறொரு வ்யவஸாயி தன் நிலங்களுக்கு அவரை விசாரணைத் தலைவராக அமர்த்தினான். அவனிடம் கொஞ்ச நாள் இருந்து அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு நில விவஸாயிக்கு சிற்பசாஸ்த்ரமும் தெரிந்திருக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டார். உடனே சிற்பசாஸ்த்ரம் கற்றுக்கொள்ள, தம் யஜமானனிடமிருந்து செலவு பெற்றுக் கொண்டு ப்ராங்போர்ட் என்ற பட்டணத்துக்குச் சென்றார். இந்த ப்ரயாணத்தோடு ப்ரோபலின் துரதிர்ஷ்டகாலம் போய்விட்டது. அப்பட்டணத்திலுள்ள போதனாமுறைப் பாடசாலைத் தலைமை உபாத்யாயரின் ஸ்நேகத்தை ப்ரோபல் ஸம்பாதித்துக்கொண்டார். அப்போதனாமுறைப் பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்யாயர் வேலை காலியாகவே, அந்த ஸ்தானம் ப்ரோபலுக்குக் கிடைத்தது. அந்த உத்யோகம் கிடைத்தவுடன் தமக்கு அதே ஸரியென அவருக்குத் தோன்றியது. "முப்பது பிள்ளைகளடங்கிய ஒரு வகுப்பின் முன்னால் நான் முதலில் போய் நின்றபோது, பறவைகளுக்கு ஆகாயம்போலவும், மீன்களுக்கு நீர்போலவும் எனக்கு அதிக உத்ஸாகமும் ஸந்தோஷமும் உண்டாகிற்று. மேலும், நான் அநேக வர்ஷங்களாக உபாத்யாயராக இருந்ததுபோலவும், நான் அந்த வேலைக்காகவே பிறந்திருப்பதுபோலவும் தோன்றியது" என்று அவர் தமது ஸ்நேஹிதருக்கு ஒரு கடிதம் எழுதினார். குழந்தைகளுக்குப் போதிக்க தாம் உபாத்யாயராக நியமிக்கப்பட்டதற்காகக் கடவுளை வேண்டிக்கொண்டார். தமது விடுமுறைகாலத்தில் விடு



நாட்களை வீணாக்காமல் அக்காலத்தில் ஸ்விட்ஸர்லாந்தில் பெயர்போன பெஸ்தலோசி என்னும் போதனாமுறை உபாத்யாயரிடத்திலிருந்து தமக்கு வேண்டியதையெல்லாம் கற்றுக்கொண்டார். பிறகு, லீவுகாலம் கழிந்தபிறகு தமது உத்யோகத்துக்குத் திரும்பி வந்தார். போதனாமுறை விஷயத்தில் சில அருமையான சீர்திருத்தங்கள் செய்து நாளடைவில் தமது வகுப்பை ஒரு உயர்வு நிலைமைக்குக் கொண்டுவரவே, மேல் வகுப்பு உபாத்யாயர்களும் அவரின் புத்தியையும் போதனாமுறையின் வழியையும் கண்டு மதிக்கலானார்கள்.

ஒரு மாஜி உபாத்யாயினி

இன்னும் வரும்.

---

## RADIUM MADAME CURIE

By
**Mr. Nataraja Aiyar**
Asst Prof. of Science, Pachiappa's College.

## "ரேடியம்" என்னும் ஒளிப்பொருளும் மாது கூரியம்மையும்

### ரேடியமாவது யாது?

ரேடியம் என்னும் பொருளைக் கண்டுபிடித்த நாளாக ஜனங்கள் அநேக அபூர்வமான பொருள்களையும், சாஸ்த்ரங்களையும் எதிர்பார்த்து வருகிறார்கள். ரேடியம் என்னும் பொருள் அபூர்வமாகவும் விலையுயர்ந்ததாகவு மிருத்தலால் பெருமைபெற்ற டாக்டர்கள் (வைத்தியர்கள்) விப்புருதி, பீனஸம், கழலை, முதலிய ரோகங்களை நிவர்த்திக்கக் கூடலாமென்று கூறியிருக்கின்றனர். மேலும், அநேக விதமான புதிய குணங்களமையப் பெற்றிருக்கிறதென்றும் சொல்லுகின்றனர். ஆகையால், ரஸாயனர்கள் தங்களுடைய வாதம் (செம்பு முதலிய உலோகங்களைத் தங்கமாக மாற்றல்) பலிக்கலாமென்று இப்போது நினைக்கின்றனர்.

ரேடியம் தற்செயலாய்க் கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால் சில ஆவிர்ப்பங்களை சாஸ்த்ரிகள் ஒன்றன்பின் ஒன்றாய் அனுபோக ஆராய்ச்சியில் அறிந்து ஆராய்ந்ததனால் கண்டு பிடிக்கப்பட்டது. எப்படி என்றால்,

(1) சில பொருள்களை வெளிச்சத்தில் வைத்திருந்து, பிறகு இருட்டில் வைத்தாலும் ஒளி கொடுக்கிறது. அவ்வொளி மின்சார

வினத்தைச் சேர்ந்திருக்கிறது. (2) 'எக்ஸ்' ரேஸ் ("X" Rays) என்று சொல்லப்படும் ஒளி ருண்ட்ஜன் என்னும் சாஸ்த்ரியால் (Prof. Rontagen) 1895௵த்தில் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது ஆஸ்பத்திரிகளில் உபயோகப்படுகிறது. (3) 1896௵ ஹென்றி (Henry) என்பவர் கண்டுபிடித்த நாககந்த பஸ்பத்தை (Zinc Sulphide) வெளிச்சத்தில் வைத்திருந்து பிறகு இருட்டறையில் வைத்தால், அதில் காணப்படும் ஒளியைத் தவிர நம் கண்ணுணர முடியாமல் மின்சார வழியி லறியக்கூடிய ஒளியையும் கொடுக்கிறது. (4) பிறகு, பாக்குரல் (Bacqueral) என்பவர் யுரேனியம் உப்புக் (Uranium salt) களுக்குள்ள ஒளிவீசும் தன்மையைக் கண்டுபிடித்த ஸர்வில்லியம் குருக்ஸ், (Sir William Crooks) என்பவர் இந்த யுரேனியம் உப்புக்களைக் களைந்து பரிசோதித்தார். கடைசியாக யுரேனியம் உப்பினுலல்லாமல், அதில் கலந்த மாசுதான் ஒளிக்குக் காரணம் என்று வெளிப்படுத்தினர். இம் மாசு யாதென்று உலகறிய ப்ரஸித்தி செய்தது இவ்வம்மையே.

## கூரியம்மையின் பிறப்பும், வித்யாப்யாஸமும்

மாது ஸ்க்ளோடௌஸ்கா கூரீ (Madame Sklodowska Curie) அம்மை ஐரோப்பிய ருஷ்யாவைச்சேர்ந்த போலாண்டில் (Poland) வார்ஸா (Warsaw) என்னும் யுத்த க்ஷேத்ரத்தில் 1867௵த்தில் பிறந்தார். முதலில் வார்ஸாவில் படித்து 1891௵ பாரிஸ் நகரத்துக்குப்போய், ஸர்வகலாசாலைகளில் வித்யார்த்தியாகி கணிதத்திலும் ஜட சாஸ்த்ரத்திலும் தலைமைப் பட்டம் (M. A.) பெற்றார்.

## விவாகமும் ஆராய்ச்சியும்.

1895௵த்தில் பாரிஸ் ஸர்வகலாசங்கத்துப் பெரிய ஜடசாஸ்த்ர பண்டிதரான ப்ரொபஸர் கூரீயை மணந்தார். மறு வர்ஷத்தில் வேண்டிய பரிக்ஷைகளில் தேறி பிரான்ஸில் ஸெவரஸ் (Saveres) என்னுமூரில் 1900௵ பெண்கள் கலாசாலையில் பண்டிதையானார். ஜட (Physics) சாஸ்த்ரத்தில் அநேக விஷயங்களைப்பற்றி யெழுதி "டாக்டர்" என்னும் அதிமேலான பட்டமும் பெற்றார்.

இந்த 'டாக்டர்' பட்டம் பெற "முக்கியமாக ரேடிய ஒளித் (Radi activity) என்பதைப்பற்றி வ்யாஸம் எழுதினர். சிலவர்



ஷங்கள் கழித்து ஆஸ்த்ரியா கவர்ன்மெண்டார் தங்கள் நாட்டில் ஏராளமாய்க் கிடைக்கும் யுரேனியக்கனிகளிலிருந்து சுத்த யுரேனிய உப்புக்களை யெடுத்துக்கொடுக்கவும் மாசுமுற்றின பொருளை ஆராய்ச்சி செய்யவும், அவரை வேலைக்கு அமர்த்திக் கொண்டார்கள்.

மாசு முற்றிய பொருளே ரேடியம் அதிகமாயுள்ள பொருளென்று யேற்கனவே இந்த அம்மை தெரியப்படுத்திருக்கிறார். 1901௵ ப்ரொபஸர் கூரீயும் தன் மனையாள் வேலையிற் சேர்ந்து, மாசு முற்றிய பொருளைக் களைந்து பரிசோதித்து வேலைசெய்ய இருவரும் ஆரம்பித்தார்கள். மாசுப்பொருள் சூர்ணம் போன்ற சிவப்பு நிறமுடையது. அதனின்றும் ரேடியம், போலோனியம் (Polonium) ஆக்டினியம் (actinium) என்னும் ஒளிப்பொருள்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகளில் முக்கியமானது ரேடியம். இது 8-டன் மாசுப்பொருளினின்று 15-நெல் எடை கிடைக்கிறது. இதுவும் உப்பு வாயுவுடன் (Chloride) கலந்திருக்கிறது. இப்போது ஸோடியம், பொட்டாஸியம் (Sodium & Potassium) என்னும் உலோகங்களோடு சேர்க்க ரேடியம் தனியே கிடைக்கிறது. மாது கூரீயாரும், அவர் புருஷனும் இவ்விஷயத்தில் அநேக வேலை செய்திருக்கிறார்கள். இம்மாதிரி நம் ஸ்த்ரீகளும் உலகத்தில் அபூர்வமான பொருள் கண்டுபிடிக்க முயல ஏற்றஸாதனமாகிய சாஸ்த்ரீய கல்வியைக் கற்பது அவச்யம்.

ரேடியம் இருட்டறையில் வைத்தாலும் கெட்டுப்போன மீன் பளபளவென்று (Decaying fish) வெளிச்சங் கொடுப்பதுபோல வெளிச்சம் கொடுக்கிறது. ஆனால், நாக கந்தபஸ்மத்தை (Zinc Sulphide) பக்கத்தில் வைத்தால் வெகு அதிகமாக வெளிச்சங்கொடுக்கிறது. சட்டைப்பைகளில் $\frac{15}{1000}$ நெல்லிடை ரேடியத்தை கண்ணாடி சீஸாக்களில் அடைத்து வைத்தாலும் சரீரத்தில் புண்ணுண்டாக்குகிறது. ரேடியத்தைப் பார்த்தாலும் கண்ணுக்கு கெடுதியுண்டாகும். ஆனால், குருடர்களின் கண்ணில் வைத்தால் அவர்கள் குணமடைகிறார்களாம். இந்த ரேடியத்தினால் மாதுகூரி சரீரவண்ணத்தை மிகுதியு மடைந்தாள். இந்த ரேடியமும் அதன் உப்புக்களும் இன்னும் வைத்ய சாஸ்திரத்திற்கு எவ்வளவோ உபயோகமாகும் பொருள்களென்று ஊகிக்கப்படுகின்றன. நடராஜய்யர்.

# HISTORY & ANTIQUARY
# சரித்ரமும் ஆராய்ச்சியும்

## QUEEN MEENAKSHI
## ராணி மீனாட்சி

மதுரை நாயக்கர் ராஜவம்சத்தரசர்களுள் ராணி மீனாக்ஷியும் ஒருவராவர். இவர் ஐந்து வர்ஷகாலம் ராஜ்யபாரம் செலுத்தினார். இவர் 1731-ம் வர்ஷத்தில் பட்டத்துக்கு வந்தார். தமது கணவன் சொக்கநாதன் எழுதி வைத்துச் சென்ற உயில்படி ராஜ வம்சத்தைச் சேர்ந்த வங்காரு திருமலையின் மகனை ஸ்வீகாரம் செய்து கொண்டார். தமது ஸஹோதரன் வெங்கடராயபெருமாள் நாயக்கன் மூலமாய் அரசாட்சி செலுத்திவந்தார்.

இப்படி அரசாட்சி செய்து வரும் நாளில், மீனாட்சிக்கு விரோதமாக ராஜ்யத்தில் ஒரு கட்சி யேற்பட்டது. இக்கட்சிக்குத் தலைவர் தளவாய் வெங்கடராயாசாரியார் என்பவர். மீனாட்சியை பட்டத்தினின்றும் நீக்கி வங்காரு திருமலையைப் பட்டத்தில் வைக்க வேண்டுமென்பது இக்கட்சிக்காரர்களின் கொள்கையாகும். ராணி திருச்சிராப்பள்ளி கோட்டையிலிருக்கையில் திருமலையின் கட்சிக்காரர்கள், அவளறியு முன்னர்க் கோட்டைக்குள், பலாத்காரமாய் புகுந்துவிட்டார்கள். இவ்விஷயம் தெரிந்தபிறகு திருமலையையும் அவன் கட்சிக்காரரையும் தோற்கடித்துத் துரத்தி விட்டார்கள்.

அக்காலத்தில் ஆர்க்காட்டு ராஜ்யத்தை நவாப் தோஸ்த் ஆலிகான் அரசாண்டுகொண்டிருந்தான். அவன் தக்ஷிணதேச முழுவதையும் தன் ஆட்சிக் குட்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற பேராசை கொண்டவன். அவன் அதற்காக தன் மூத்த மகனை ஸதர் ஆலிகானையும், தன் மாப்பிள்ளையும் மந்திரியுமான சந்தா ஸாகிபையும் தக்க சேனையுடன் அனுப்பினான். மகம்மதியர்கள் தஞ்சையைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால், திருச்சிராப்பள்ளியைப் பிடிக்க முடியவில்லை. ஆயினும், தெற்கே திருவாங்கூர் வரை சென்று ஊர்களையும் பட்டணங்களையும் நாசஞ் செய்து விட்டுத் தக்க கொள்ளைப் பொருளுடன் திரும்பிவந்தார்கள்.

1734-ம் ௵ வங்காரு திருமலை, ஸதர் ஆலிகானுடன், ஒரு ரஹஸ்ய ஒப்பந்தம் செய்து கொண்டான். துருக்கர் தலைவன் மீனா



க்ஷியைப் பட்டத்தினின்றும் விலக்கித் தனக்குப் பட்டங்கட்டினால், அதற்கு ப்ரதி ப்ரயோசனமாய்த் 38 லட்சம் ரூபாய் கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஸதர் ஆலிகான் ஒரு யுக்தி செய்தான். மதுரை அரசாட்சியைப் பற்றித் திருமலைக்கும் மீனாக்ஷிக்கும் ஏற்பட்ட விவாதத்தைத் தீர்த்துவைக்கத் தான் வந்திருப்பதாகவும் அதில் இருதரப்பிலும் ஸாக்ஷ்யம் சொல்லக்கூடியவர்கள் தன் முன் ஆஜராகும்படியாகவும் பறையடிக்கச் செய்தான். இதையொன்றும் கவனியாது மீனாக்ஷி அலக்ஷ்யமாயிருந்து விட்டார். பேருக்கு ஒரு விசாரணை மாதிரி செய்துவிட்டு எதிர்பார்த்தவண்ணமே திருமலைக்கு அநுகூலமாய்த் தீர்ப்புச்சொல்லி விட்டான். ஒப்பந்தப்படி திருமலைக்குப் பட்டங்கட்டி விட்டு 30 லக்ஷ ரூபாயை வாங்கி வரும்படி சந்தாஸாஹிபை நிறுத்திவிட்டு ஸதர் ஆலிகான் ஆர்க்காடு போய்ச் சேர்ந்தான்.

காரியம் மிஞ்சிவிட்டதென்றுப் பயந்து மீனாக்ஷி சந்தாஸாஹிபுடன் ஓர் ரஹஸ்ய ஒப்பந்தம் செய்தார். மீனாக்ஷி கோடி ரூபாய் கொடுத்து விடுகிறது என்றும், அதைப் பெற்றுக்கொண்டு சந்தாஸாஹிப் ஒன்றும் செய்யாமற் போய்விடுகிறதென்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. வஞ்சனை மிகுந்த சந்தாஸாஹிப் அதற்கிணங்கினான். ஆயினும், மீனாக்ஷி ஸந்தேஹங் கொண்டு அவனைக் கோரான் மேல் ப்ரமாணம் செய்யச்சொன்னார். அங்ஙனமே காவேரிக்கரையிலுள்ள தளவாய் மண்டபத்திற் சந்தாஸாஹிப் ஸத்யம் செய்து கொடுத்தான். ப்ரமாணம் தன்னைக் கட்டுப் படுத்தாமலிருக்கும் பொருட்டு ஒரு செங்கல்லைப் பட்டுத் துணியாற் சுற்றி அதன்மேல் ப்ரமாணம் செய்து ஏமாற்றி விட்டதாகவும் சொல்லுவதுண்டு.

சந்தாஸாஹிப் கோட்டைக்குள் விடப்பட்டான். கோட்டையும், அதிலுள்ள யானை குதிரைகளும், கஜானாக்களும் கைவசமானதும், தன் அந்தரங்கமான கபட எண்ணத்தை வெளியிட்டான். தான் சொந்தம் பாராட்ட வந்தவனே யொழிய மீனாக்ஷியையாவது திருமலையையாவது காப்பாற்ற வந்தவனல்லவென்று தெரிவித்துவிடவே திருமலையும் அவன் மகனும் மதுரைக்கு ஓடிவிட்டார்கள். பாவம்! ராணி மீனாக்ஷி கோட்டைக்குள் அகப்பட்டுக் கொண்டார். மீனாக்ஷியின் அரண்மனையைக் காக்கத் தக்க சேனையை நிறுத்திவிட்டு, மிகுந்த சேனையுடன் சந்தாஸாஹிப் மதுரை நோக்கிப் புறப்பட்டான்.

மதுரையிலிருந்து ராணி கட்சியைச்சேர்ந்த கோவிந்தையர், ராவணையர் என்ற இரண்டு ஸேனாபதிகள் 8000 குதிரைப் படையுடன் திண்டுக்கற் பக்கத்தில் துருக்கற் படையை எதிர்த்துத் தோற்றுப் போனார்கள். துருக்கர் மதுரை நோக்கிவரவே திருமலையின் இன்னொரு படை, அவர்களை அம்மய நாயக்கனூரில் எதிர்த்து வீராவேசத்துடன் போர்புரிந்தும் கடைசியில் தோற்றுப் போயிற்று. சந்தாஸாஹிப் மதுரை வந்து சேர்ந்தான். திருமலை நகரை விட்டுத் தப்பி ஓடிச்சிவகங்கை போய்ச் சேர்ந்துவிட்டான். மதுரைத் தேச முழுதும் மஹமதியர் வசமாகிவிட்டது. மீனாக்ஷி உயிருடன் இருக்கும்வரை யாராவது கலகஞ் செய்துகொண்டே யிருப்பார்களென்றெண்ணி, சந்தாஸாஹிப் மீனாக்ஷியைக் கொலைசெய்ய உத்தேசித்தான். இது விஷயம் தெரிந்து அவன் கையாற் சாகும் வரை காத்திராமல், மீனாக்ஷி தாமே விஷம் உண்டு இறந்தார் :—செந்தமிழ்.

# MORAL LITERATURE

## சன்மார்க்க கல்வி

### SWEET WORDS ARE BETTER THAN GIFTS

By

**Sri. Shanbagavalli Ammal**

### இன்சொல் தானத்திலும் சிறந்தது

தானம் கொடுப்பதைப் பார்க்கிலும் மேம்பாடாகிய தர்மம் ஒன்றுண்டு. அதென்னவென்றால், வந்தவர்களையுபசரித்து வணங்கி புன் முறுவல் பூத்துத் தேன் சொரிவதுபோல் இன்சொல் பேசுவது. இது பெரியதானம். சொல்வேறு செய்கை வேறாகவிருப்பவர்கள் இன்சொல் பேசுவார்களா? சிலர் உள்ளே விரோதத்தை வைத்துக் கொண்டு மேலுக்கு மாத்திரம் தேனொழுகப் பேசுவார்கள். அது இன்சொல் அல்ல. ஆனால், வன்சொல்லேயாகும். த்ரிகரண சுத்தியுடையவர்கள் இன்சொல்லே பேசுவார்கள். மற்றவர்கள் வன் சொல் பேசித்திரிவார்கள். இன்சொல் பேசுவது எவருக்கும் தானாய்

வராது. அது சுத்த ஸாத்வீகமானவர்களுக்கே ஸொந்தம். இதற்கொரு த்ருஷ்டாந்தம் கீழே எழுதப்பட்டிருக்கிறது.

ஸர்வஜீவ ராசிகளிடத்தில் க்ருபையுள்ள ஸாத்வீக குணத்தையுடைய ப்ராமணரொருவர் வனத்தில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் தாருணன் என்கிற ராக்ஷஸன் ஒருவன் பெரும் பசியுடையவனாகி எங்கும் இரையகப்படாமல் எதை எடுத்து விழுங்கலாமென்று ஏக்கம்பிடித்து வந்துகொண்டிருந்தான். அப்போது, மேற்கூறிய ப்ராமணரைக் கண்டதும் அவனது ஸந்தோஷத்துக்கு எல்லையே யில்லை. தன் பசியின் நோயினால் இந்த ப்ராமணரைப் பிடித்து எடுத்து விழுங்கிவிடவேண்டுமென்று நினைத்து அவர் பக்கம் வந்தான். உடனே, தன் இரண்டு கைகளையும் விரித்து அவரைத் தடுத்துப் பிடித்துக்கொண்டான். அப்போது ஸகல வேதாகம புராண சாஸ்த்ரங்களை அறிந்திருந்த வேதியர் தெளிவுடையராகி சற்றேனும் முகம் சுளிக்காமல், சித்தங் கலங்காமல், மனம் பதைக்காமல், உடல் துடிக்காமல், உள்ளம் கோபிக்காமல் ஆனந்த நடம் புரிகின்ற ஆதிமூர்த்திபோல் புன்னகைபுரிந்து துயரற்றிருந்தார். அந்தத் தாருணனென்னும் அஸுரன் மனமருண்டு, மதிமயங்கி, இவரெப்படிப்பட்ட பெரியவரோ? எத்தன்மையுடையவரோ? என்று ஸந்தேகப்பட்டு அவரைச் சேர்த்து பிடித்த கைகளை விட்டுவிட்டு பசிநோயோடு மெழுந்த கோபமாறி "வேதியரே! எனக்குப் பசியும், ஆயாஸமும், இளைப்பும், வெறுப்பும், விதிர்விதிர்ப்பும் வரவேண்டிய காரணமென்ன? இதற்குக் காரணத்தைச் சொல்வீராகில் உம்மைக் கொல்லாமல் அகல்வேன். இல்லாவிட்டால், என் பசிக்கு எப்படியும் உம்மைத் தின்னுவேன். கொல்வதற்கு முன்னால் நான் கேட்ட சங்கைக்கு உத்தரம் சொல்லுமென்றான். அந்த மொழி கேட்ட ப்ராமணர் அஞ்சாமல் புன்னகையோடு முகமலர்ந்து ஸர்வ பூதங்களிடத்திலும் பகவான் ப்ரஸன்னமாயிருக்கிறாரென்பதை நன்றாகத் தெரிந்தவராதலால் மிகுந்த இரக்கத்துடனே இன்சொல்லினால் அவனுக்கு உத்தரம் கூறுகின்றார்.

"அப்பா குணவானே! ஒருவன் தன்னுடைய பந்து ஜனங்கள், மித்திரர், முதலியவர்களைக் கடிந்து குரூரவார்த்தைகளால் பேசினாலும், அவர்களை வயிறெரிந்து மனம் புகைந்து மலமலவென்று கண்ணீர் சொரிந்து அழும்படிச் செய்தாலும், ஒருவன் உண்ணும்

போது அவன் மென்னியைப் பிடித்தாலும், தாய், தந்தை, தமையன் முதலியவர்களைப் பழித்துப் பேசினாலும், தான் பெற்ற ஜயத்தைத் தானே புகழ்ந்து ராஜஸமூகத்தில் நின்று பெருமை கூறினாலும், தன்னைச் சரணமடைந்தவனுக்கு ஆபத்காலத்தில் உதவிசெய்யாதிருந்தாலும், உதவி செய்யாமலே ஒருவனுக்கு நான் செய்த உதவியால்தான் பிழைத்தான் என்றும் வீண்டம்பம் பேசினாலும், செய்த உதவியைப் பலதரம் அற்பனைப்போல சொல்லிக் காட்டினாலும், தேடிய தனத்தை ஸன்மார்க்கத்தில் செலவழிக்காமல், துன்மார்க்கத்தில் வீண்செலவு செய்தாலும், அன்னமுண்டு பின்னம் பண்ணினாலும், வீண்விசாரம் பெற்றாலும், அயலார்வாழத் தன் கண் பார்க்கச் சகியாமல் பொறாமைப்பட்டு மனம் பொருமினாலும், தேவர்கள், நல்லோர், பெரியோர் இவர்களை நிந்தனை பண்ணினாலும் மஹா பாவமாகிய பசி, ஆயாஸம் வெளுப்பு, விதிர்விதிர்ப்பு ஆகிய இவை முதலிய ரோகங்களெல்லாம் வரும்" என்று சொன்னார். அதைக்கேட்ட தாருணன் வேதியருடைய இன்சொல்லுக்கிரங்கி அவரை உயிர்வதை செய்யாமல் விட்டுவிட்டு அவரை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் தான் செய்த பிழைக்கு தன்னை க்ஷமிக்கும்படி வேண்டி, பிறகு வேதியரின் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடத்தை யடைந்து இன்சொல் பேசும் வழக்கத்தை மேற்கொண்டு வாழ்ந்திருந்தான். வேதியரானவர் அவனை ஆசீர்வதித்துத் தம் யதாஸ்தானத்தை யடைந்தார். ஸஹோதரிகளே! அந்த ப்ராமணர் இன்சொல்லை வகித்திருந்ததால் தான் அக்கொடிய அஸுரனின்றும் உயிர் பிழைத்தார். நீங்களும் இன்சொல் பேசி வருவீராகில் உங்கள் புருஷரையும், குழந்தைகளையும், மாமி மாமன் முதலானோர்களையும் மகிழச் செய்வீர்கள். உங்கள் ஸ்நேகிதர்கள் உங்களை உள்ளன்போடு நேசிப்பார்கள். நீங்கள் இன்சொல் பேசி வருவதுமன்றி உங்கள் குழந்தைகளையும் அந்த வழக்கத்தில் பழக்கவேண்டும். அப்போது, உங்கள் குழந்தைகளின் வாழ்வு மங்களகரமாயிருக்கும்.

ஷண்பகவல்லி அம்மாள்.

---

ஏ புமானே! உன்னுடன் உன் மனைவி ஆலயத்துக்கு வருகிறேனென்று சொன்னால் அவளைக் கூட்டிக்கொண்டுபோ. அவளை நீ தடஸ்தம் பண்ண வேண்டாம் :—மஹம்மத் நபி.

## INNER MEANING OF OUR CUSTOMS

**By**

**An old lady**

### நமது வழக்கங்களின் தத்வார்த்தம்

நமது நாட்டார் தொன்று தொட்டு அனுஸரித்துவரும் பற்பல ஸம்ப்ரதாயங்களில் ஆழ்ந்த உண்மைகள் எவ்வளவோ அடங்கியிருக்கின்றன. அவற்றை அறிய முயலாமல் அந்த ஸம்ப்ரதாயங்களை மட்டும் நாம் கைவிடாமல் அனுஸரித்து வருகிறோம். ஆயினும், உண்மையை அறியமட்டும் முயலுகிறதில்லை. அவ்வித ஸம்ப்ரதாயங்களில் ஒன்றைப்பற்றி இப்போது கவனிப்போம். தீபாவளிப் பண்டிகையின் பெருமையைப் பற்றி அக்டோபர்மீ ஸஞ்சிகையில் படித்தோம். அப்பண்டிகையை அநுஸரித்து நம் நாட்டு நாரீமணிகள் கோலாட்டம் போடுதல் என்கிற ஒரு வழக்கத்தை இன்றும் அநுஸரித்து வருகிறார்கள். அதைப்பற்றிய உண்மை என்ன என்று அறிய எல்லோருக்குமே ஆவலிருக்கலாம். இந்தக் கொண்டாட்டம் நடக்கும் காலத்தையும், நடத்துபவர்களையும் கவனிக்குமிடத்து புராணரீதியான இந்தத் தீபாவளியை ஒட்டியே இந்து மாதர்களுக்குப் பக்தியும் தெய்வ பக்தியும் ஏற்படக்கூடிய நற்போதனைகளைச் சிறு வயதிலிருந்தே கொஞ்சம் கொஞ்சமாய்ப் புகட்டலாமென்று ஏற்படுகிறது.

நரகாஸுரன் பூமி தேவியின் புத்ரனென்றும் தாயாரால் தனக்கு மரணம் ஏற்படவேண்டுமென்று வரம்பெற்றவனென்றும், ஸத்தியபாமை பூமி தேவியின் அம்சமென்றும், ஆனது பற்றி ஸத்தியபாமையால் அக்கார்யம் ஏற்பட்டதென்றும், அக்காலத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வரத்தின் பெருமைதான் தீபாவளிப் பண்டிகை என்றும் எல்லோரும் அறிவோம். அப்பண்டிகையை ஒட்டியே நடந்து வரும் கோலாட்டத்தின் உண்மையை அறிய வேண்டும். எவ்வாறெனில், இறந்த அஸுரன் தன் மகனெனவறிந்த பூமாதேவியாகிய ஸத்தியபாமை தன் மகனைக்கொன்ற பாவம் தீர என்ன செய்யலாமென்று விசார முற்றிருக்கையில், "கற்புடைய மங்கையர்க்குக் கணவனே தெய்வம்" என்று உபதேசிக்கப்

பட்டாள். தன் கணவனைப் போற்ற வெண்ணி தன் தோழி மார்கள் சூழதெய்வ பாடல்களை ஆடிப்பாடிக்கோலாட்டம் அடித்தல், கோக்களுக்குப் புல்லளித்தல், ஏழைஎளியவர்களுக்கு நீரருந்தக் கொடுத்தல் முதலிய சிறந்த தர்மங்களை அனுஷ்டித்து ஸ்ரீ கிருஷ்ண பகவானைச் சந்தோஷப்படுத்தி பௌர்ணமியன்று வ்ரதசமாப்தியாகக் கொண்டு, நதிதீரம் சென்று அந்தணர்க்கும் ஏழைகளுக்கும் அறுசுவை யுண்டியருந்தி எல்லோருமே தத்தம் இல்லம் சென்றார்கள். அப்பெரும் பாதகமே தொலையக்காரணமாயிருந்தது பதிஸேவையே. ஆகையால், இம்மட்டுமாவது நமது மங்கையர்கள் அறிந்திருப்பாராயின் மிகவும் நலத்தைக் கொடுக்கும்.

ஆயின், இக்காலத்தில் அதன் நீதி போதனையை உணராது, சிறு குழந்தைகளுக்குக் கண்ட பாடல்களை யெல்லாம் கற்பித்துக் கொடுத்து விடுகிறார்கள். ஆடவர்களிற் பலரும் அவ்வித பாடல்களைக் கொண்டாடி அதற்கேற்ற அபினயங்களுடன் ஆடிக் கோலாட்ட மடித்துப் பரிசு பெற்றுவருகிறார்கள். இந்தப் பழக்கத்தின் உண்மையான கருத்தை அறியாதவர்கள் இதனை ஆதரிப்பது மில்லை; இதன் பெருமையை உணர்வது மில்லை. உத்தம ரத்னங்களாகிய குலஸ்த்ரீகள் பதிவ்ரதா சிரோன்மணிகளாக விளங்கி அருந்ததி, அனசூயை, தமயந்தி, சாவித்திரி, சந்த்ரமதி போன்றவர்கள் உறைவிடமாயிருந்த இன்னாட்டில் இப்போது அவ்வாறு மங்கையர்கள் விளங்குகிறார்கள். நமது பூர்வீக வழக்கங்களின் உண்மைகளை நமது குழந்தைகளுக்கு விளக்கி நமது பாரதமாதா சிறப்புற்றோங்கும் வண்ணம் நமது ஸ்த்ரீ ரத்னங்களுக்கு ஏற்ற கல்வி கேள்விகளில் அவர்களைப் பயிற்றுவதே நமது கடமையாகும்.

“ஓர் கிழவி.”

---

பெண்களின் படிப்புக்கும் அவர்களின் ஸன்மார்க்க அபிவிருத்திக்கும் உதவி செய்கிறவர்கள் யாவரானாலும் கடவுளின் அன்புக்கு அருகராவார்கள், ஒரு வேளை கொடும் பாபம் செய்தவனாயிருந்தாலும் அவன் ஒரு பெண்ணுக்கு ஸன்மார்க்கத்தில் உதவி செய்தவனாயிருந்தால் அவனுடைய பாபம் கொஞ்சம் குறையும்;—மனுஸ்மதி.

* * * *

செல்வத்திலும் வறுமையிலும் அடக்கமாயிருத்தல் உத்தமப் பெண்களின் அழகு.

# WOMAN'S WORLD

# ஸ்த்ரீ ப்ரபஞ்சம்

## HOME NEWS

## உள்நாட்டு வர்த்தமானம்

**Stree Aikya Samajam.**

ஸ்த்ரீ ஐக்ய ஸமாஜம்:—இம்மாதம் 12-ந் தேதி மண்ணடி, நெ. 8, ராமஸாமி தெரு 'பெண்கல்வி' ஆபீஸில் ஸ்த்ரீ ஐக்ய ஸமாஜத்தார் தர்பார்தின வைபவத்தை வெகு குதூஹலமாய்க் கொண்டாடினார்கள். தமிழிலும், தெலுங்கிலும், ஆங்கிலத்திலும் சிறு பெண்களால் ராஜ வாழ்த்துகள் பாடப்பட்டு ஸபை கலைந்தது.

**Home Rule League ladies Branch.**

ஸ்த்ரீகள் ஸ்வயாக்ஷி சங்கம்:—ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் நமது தேசம் ஸ்வயாக்ஷி பெறவேண்டுமென்று இந்தியாவில் ஆங்காங்கு புருஷர்கள் ஸ்வயாக்ஷிசங்கம் ஸ்தாபித்து வருகிறார்கள். இப்போது இம்மாத முதல் வாரத்தில் சில ஹிந்து ஸ்த்ரீகளும் சில இங்கிலீஷ் ஸ்த்ரீகளும் சேர்ந்து ஸ்த்ரீகள் ஸ்வயாக்ஷி சங்கமொன்று கும்பகோணத்தில் ஸ்தாபித்தார்கள்.

**Madar vidyanu palana sangam**

மாதர் வித்யானு பாலன சங்கம்:—இம்மாதம் 15-ந் தேதி மேற்கண்ட ஸ்த்ரீ சங்கத்தின் 3-வது வர்ஷோத்ஸவம் ஸ்ரீ ஸ்வாமி வேதாசலம் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் நடந்து நிறைவேறியது.

**Women in the Congress.**

காங்கிரஸில் ஸ்த்ரீகளின் உழைப்பு:—இம்மாதம் 26-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை நடை பெற்ற காங்கிரஸுக்கு ஸ்த்ரீகள் ஜாஸ்தியாக விஜயம் செய்தார்களாம். காங்கிரஸ் நடவடிக்கைகள் ஆரம்பமாகு முன் வங்காள தேசத்து ஹிந்து ஸ்த்ரீகள் தெய்வ ப்ரார்த்தனைகளும் வந்தே மாதரப் பாட்டுகளும் பாடி காங்கிரஸ் ஸபையுள்ளோர்க்கு ஒரு தெய்வீக உணர்ச்சியை உண்டாக்கினார்களாம்.

**Amravathi vidyalayam.**

அமராவதி வித்யாலயம்:—மேற் கண்ட பெண் பாடசாலையில் பெண்களுக்கு ஸன்மார்க்கப் படிப்புக் கற்றுக் கொடுக்கிறதற்கு

டுகிற உபாத்யாயர்களின் சம்பளத்தை மிஸஸ் ஸல்லா குருஸாமி செட்டியார் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களென்று தெரிந்து ஸந்தோஷிக்கிறோம்.

**Students Convention.**

மாணவர்களின் கான்பரன்ஸு:—இம்மாதம் 27-ந் தேதி நடைபெற்ற மாணவர்களின் கான்பரன்ஸுக்கு அநேக ஸ்த்ரீ மாணவர்களும் வேறு ஸ்த்ரீகளும் விஜயம் செய்திருந்தார்கள்.

## FOREIGN NEWS

## வெளி நாட்டு வர்த்தமானம்

**Philonthropic women in America.**

அமெரிக்காவில் பரோபகாரமுள்ள ஸ்த்ரீகள்:—அமெரிக்காவில் ஜீவகாருண்ய சங்கத்தைச் சேர்ந்த பரோபகாரமுள்ள ஸ்த்ரீகள் தங்கள் தேசத்தில் துன்மார்க்கத் தனம் செய்து ஜெயிலில் அடைப்பட்டிருக்கும் ஸ்த்ரீகளுக்கு ஸன்மார்க்க போதனை செய்து வருகிறார்களாம். மேலும், இவர்கள் திக்கற்ற ஏழைப் பெண்களாவது குழந்தைகளாவது தெருவில் காணப்பட்டால் அவர்களை தங்கள் சங்கத்துக்கு அழைத்துப் போய் காப்பாற்றி வருகிறார்களாம்.

**Women Workers in france.**

ப்ரான்ஸில் ஸ்த்ரீ வேலைக்காரர்கள்:—இந்த யுத்தம் ஆரம்பமானது முதற்கொண்டு ப்ரான்ஸில் புருஷர்கள் செய்த வேலைகளையெல்லாம் ஸ்த்ரீகளே பார்த்து வருகிறார்கள். ப்ரஞ்சு யுத்த மந்திரி ஸ்த்ரீகள் இந்த யுத்த விஷயத்தில் பாடு பட்டிருக்கிறதைப் புகழ்ந்து அவர்களுக்குக் கொடுத்து வரும் சம்பளத்தை உயர்த்தும்படி ப்ரஞ்சு கவர்ன்மெண்டுக்குச் சிபார்சு செய்திருக்கிறார்.

**Christian Women missionaries.**

கிறிஸ்தவ ஸ்த்ரீமிஷனரிகள்:—இந்தியாவில் கிறிஸ்தவ மதத்தை மும்முரமாய்ப் பரவச் செய்யும் பொருட்டு அமெரிக்காவிலுள்ள ஒரு கிறிஸ்தவ சங்கத்தில் கிறிஸ்தவ ஸ்த்ரீ மிஷனரிகளை ஜாஸ்தியாக அனுப்புவதாகத் தீர்மானித்திருக்கிறார்களென்று ஒரு கிறிஸ்தவ வேத பேபரில் குறித்திருக்கிறது.



**A true European Woman.**

ஒரு உண்மையான ஐரோப்பிய ஸ்த்ரீ:—லண்டனிலுள்ள ஒரு ஸ்த்ரீ சங்கத்தில் இந்தியாவில் வெகு வர்ஷ காலம் வஸித்திருந்த ஒரு ஐரோப்ப ஸ்த்ரீ இந்தியப்பெண்களின் நிலைமையைப் பற்றி ஸமீபத்தில் ஒரு உபந்யாஸம் செய்தாள். அப்போது இந்திய ஸ்த்ரீகளின் பதிபக்தியையும், கற்பையும் அவர்களின் உயர்ந்த குணங்களையும் சிலாகித்துப் பேசினாள்.

**Japan Women.**

ஜபானிய ஸ்த்ரீகள்:—இப்போது நடக்கும் யுத்தம் அநேக தேசங்களுக்கு நன்மையை உண்டாக்கியிருக்கிறதென்று நன்றாகத் தெரிகிறது. ஜப்பானிய தேசத்து படித்த ஸ்த்ரீகள் ஒன்று சேர்ந்து சங்கம் ஸ்தாபித்து தங்கள் பௌத்த மதத்தைப் பரவச் செய்கிறதற்கு முயற்சிகள் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். மத விஷயமான ஒரு மாதப் பத்ரிகையையும் ஒரு ஸ்த்ரீயால் நடத்தப்படுமென்று ஜப்பான் டைம்ஸ் பத்ரிகை கூறுகிறது.

**Women Taking drinks.**

ஸ்த்ரீகள் பானங்கள் குடித்தல்:—தற்காலம் ஸ்த்ரீகளே நம் இந்தியாவில் புருஷர்களைக் காட்டிலும் காபி, டீ கோகோ முதலிய பானங்களை அதிகமாகக் குடித்து வருகிறார்கள். உயர்வகுப்பு ஹிந்து ஸ்த்ரீ முதல் ஏழை ஸ்த்ரீ வரையிலும் யாவரும் தேகக்கட்டுக்கு விரோதமான இந்தப் பானங்களைக் குடிக்கத் துணிந்திருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள வைதீக ஸ்த்ரீ புருஷர்கள் கூட இந்த துர் அப்யாஸத்துக்குத் தலைப்பட்டிருக்கிறார்கள். நீர் ரோகத்தினால் வருந்தும் ஸ்த்ரீ புருஷர்களும் நாளுக்கு நாள் அதிகப் பட்டு வருகிறார்கள். நம் ஹிந்து ஸ்த்ரீகள் இது போன்ற பானங்களைக் குடித்து தேகத்தைக் கெடுத்துக்கொள்வது வரும் ஸந்ததியார்களுக்குக் கேட்டை விளைக்குமென்றும், ஆகையால் படித்த ஸ்த்ரீகள் மேற் சொன்ன பானங்களைத் தாங்கள் குடிக்காமலிருப்பதும் தவிர இதர ஸ்த்ரீகளையும் குடிக்காமற் செய்வது அவர்களுடைய கடமை யென்று பங்காளிப் பத்ரிகை கூறுகிறது.

---

அஸங்கியமான வசனங்களை உச்சரிக்காதே. நாவடக்கம் எல்லா குணங்களிலும் சிறந்தது. நாவடக்க முள்ளவன் எல்லோராலும் போற்றப் படுவான்.

# INSTRUCTIVE HINTS
## விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN
### குழந்தைகள் விஷயம்

**Children's bones.**

குழந்தைகளின் எலும்புகள் :— குழந்தைகளின் எலும்பு மிருதுவாயிருக்கும். இவைகளை முறித்தால் முறியாது. ஆனால், வளைந்து கொடுக்கும். குழந்தைகளின் எலும்புகள் குருத்தாக இருப்பதால் உபாத்யாயர்களும் பெற்றோர்களும் குழந்தைகளின் விஷயத்தில் ஜாக்ரதையாயிருக்க வேண்டும். குழந்தைகளையும் சிறுவர்களையும் நிமிர்ந்து நடக்கவும் உட்காரவும் சொல்லவேண்டும். இல்லாவிடில் கூன் ஏற்படும். இருக்கமான உடைகளையும் கால் சராய்களையும் குழந்தைகளுக்குப் போடக்கூடாது. சிறு குழந்தைகளை நடக்கும்படி செய்தால் தேகத்தின் பாரம் தாங்காமல் கால் வளைந்துபோகும். அஜாக்ரதையினால் குழந்தைகளுக்குக் கூன் ஏற்பட்டு விட்டால் ச்வாஸாசயத்தில் அடிக்கடி இருமல் உண்டாகும். கைக்குழந்தைகளையும் சிறுவர்களையும் நாம் வெகு ஜாக்ரதையாகப் போற்றி வரவேண்டும்.

**Children's Teeth.**

குழந்தைகளின் பற்கள் :—குழந்தைகளின் வாயில் இருக்கும் பற்கள் ஸ்திரமானதல்ல. அவைகளுக்குப் பால் பற்கள் என்றுபெயர். அவைகள் மேல் வாயில் 10ம் கீழ்வாயில் 10ம் இருக்கும். அவை 8 மாதம் முதல் $2\frac{1}{2}$ வர்ஷத்துக்குள்ளாக முளைக்கும். அப்பற்கள் 5, 6 வது வயது வரையில் உபயோகத்திலிருக்கும். பிறகு, அவைகள் கீழே விழுந்துபோகும். இதற்குப் பிறகு முளைக்கும் பற்கள்தான் ஸ்திரமாகயிருக்கும். இவற்றுள் முதன் முதலாக முளைப்பது கடைவாய்ப் பற்கள். இவை 7 முதல் 13 வயது வரைக்குள் முன் பற்களும் கோரப்பற்களும் முளைக்கும். 17 முதல் 20 வயதுக்குள் கடைவாயில் கடைப்பற்கள் முளைக்கின்றன. இவைகளுக்குத்தான் ஞானப்பல் என்று பெயர். ஆக, முன் பற்கள் 8, கோரப்பற்கள் 4, கடைவாய் சிறியபற்கள் 8, கடைவாய் பெரியபற்கள் 12 இப்போது, ஸ்த்ரீகளுக்கும், புருஷர்களுக்கும் 32 பற்கள் இருக்கின்றதைப் பார்க்கலாம்.


**Deaf Children.**

செவிட்டுக் குழந்தைகள்:—குழந்தைகளுக்குப் பிறந்தது முதல் காது கேட்காமலிருக்குமானால் அவை ஊமையாய்விடும். காதின் ஜவ்வு தடித்துப் போனாலும், கிழிந்துபோனாலும், காதின் த்வாரத்தில் குறும்பி அதிகமாய்ச் சேர்ந்தாலும், நடுக்காதிலிருந்து தொண்டைக்குப்போகும் குழாய்கள் அடைத்துப் போனாலும் காது கேட்காது. அப்போதைப்போது அவயவங்களைச் சுத்தமாய்த் துடைத்து வைத்துக்கொள்ள வேண்டும். பெற்றோர்களுடைய அஜாக்ரதையினாலே அநேக குழந்தைகள் கஷ்டப்படுகின்றன. வியாதி வந்தபிறகு குணப்படுத்துவதைக் காட்டிலும், வராதபடி தடுத்து விடுவது நலமாகும்.







ஸஹாரா கைக்கெடியாரம்.



இது எங்களுக்காகவே செய்யப் பட்டது.

கெடியாரம் செய்வதில் தற்காலத்திய புதுமையான வேலைத்திறத்துடன் செய்யப்பட்டு சரியான காலத்தைக் காட்டக் கூடியதும் பார்வைக்கு அழகாயுமிருக்கக் கூடியதும் வெகு நாள் உழைக்கக்கூடியதுமானது இதன் விலை நீக்கல் ரூ 5.

நமது தேசத்திய மாதர்கள் கையில் தோல்ப் பட்டையுடன் சேர்ந்த கைக்கெடியாரத்தை அணிய, அசவுகரியமெனக் கொண்டு, வெள்ளி, ரோல்ட் கோல்ட், பொன் முதலியவைகளில் செய்து கையில் அணிந்துகொள்ள அருமைவாய்ந்தபல மாதிரியான கடியாரங்களை "பெண்கல்வி" சந்தாதார்களின் ஸ்ரீமதிகளுக்கு விலைச்சரசமாக கொடுக்கப்படும். மாதிரி விலை முதலியவைகளை எமக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.



**காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்,**
கவர்ன்மெண்ட் ரெயில்வே வாட்சு, சப்ளையர்ஸ்
சென்னை.

# THE FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதப்பத்திரிகை


கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். —திருக்குறள்.


| | | |
|---|---|---|
| Vol. 6.<br>தொகுதி 6. | நளஹு தைமீ January 1917.<br>நளஹு மாசிமீ February 1917 | No 4, 5.<br>பகுதி. 4, 5. |


ஓம்

*நம: கிருஷ்ணாய ராமாய வாஸுதேவ ஸுதாயச:*
*ப்ரத்யும்னாய நிருத்தாய ஸாத்வதாம் பதயேநம:*

ஸ்ரீமத்பாகவதம் காளிங்கநர்த்தன கட்டம்.

இது காளிங்கபத்தினிகளின் வாக்கியம். ஒருநாள் ஸ்ரீகிருஷ்ணன் தமது குழந்தைப் பருவத்தில் கன்றுக்குட்டிகளை ஓட்டிக்கொண்டு யமுனாநதியிலுள்ள காளிங்கமடுவினருகில் போனார். தாம் ஓட்டிவந்த கன்றுகளை அம்மடுக்களின் கரைகளில் மேயவிட்டு அவர் அம்மடுவில் குதித்துக் குதித்து விளையாடிக்கொண்டிருந்தார். ஆகாயத்தில் செல்லும் பறவைகளைக்கூட தன்னுடைய விஷவேகத்தினால் கீழ் இழுக்கக்கூடிய 101 தலைகளையுடைய காளிங்கன் என்னும் நாகப்பாம்பு தன்னுடைய பரிவாரங்களுடன் அங்கு வஸித்துக்கொண்டிருந்தது. அந்நாகப்பாம்பு மிகக்கர்வம் கொண்டிருந்தமையால் ஸ்ரீகிருஷ்ணன் அப்பாம்பின் தலைகள் ஒவ்வொன்றின்மீதும் குதித்து அதன் கொழுப்பை யடக்கினார். தங்களுடைய பர்த்தா ஸ்ரீ பகவான்காலில் அகப்பட்டு வருந்துவதைப் பார்த்த காளிங்கனது மனைவிகள் ஸ்ரீபகவானை மேற்கூறிய சுலோகங்கள்போல் அநேக சுலோகங்களால் ஸ்தோத்ரம் செய்தார்கள். கற்புடைய அந்த ஸ்திரீகள் பகவானின் திருநாமங்களைச் சொல்லி தம்முடைய கணவன்

செய்த பிழைகளை மன்னிக்கும்படி வேண்டினார்கள். மேலும், ஏ ஸ்ரீகிருஷ்ணா! உம்முடைய முன் அவதாரமாகிய ராமாவதாரத்துக்கும் நமஸ்காரம். உம்முடைய தமயனுக்கும் தகப்பனுக்கும் நமஸ்காரம். உமக்குப் பிறக்கப்போகிற ப்ரத்யும்னனாகிய பிள்ளைக்கும் அவனுக்குப் பிறக்கப்போகிற உமது பேரப்பிள்ளையாகிய அநிருத்தனுக்கும், ஸாத்வீகர்களுக்குப் பதியாகிய உமக்கும் நமஸ்காரம் செய்கிறோம். உம்மையே சரணமடைந்து, உம்மைத்தவிர வேறு ஒருவருமில்லையென்று வந்து, உமது திருவடிகளில் சாஷ்டாங்கமாகப் படிந்து நிற்கின்ற நினர்களாகிய எங்கள்மேல் இரக்கம் கொள்ளவேண்டும். கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து இடிமுழக்கம்கொண்டு ஓய்வில்லாப் பெய்தமழையை அடக்கி, கோடானுகோடி ஜனங்களையும் பசுக் கூட்டங்களையும் காப்பாற்றின லோகநாயகா! எங்கள் கணவனைக் காப்பாற்றவேண்டும். எங்கள் ஸ்திரீஜாதிகளில் முதன்மையானவளும் கற்புடைய மாதர்களில் பரிசுத்தகுணங்களை யுடையவளுமான பாஞ்சாலியின் வஸ்த்ராபஹரண காலத்தில் அவளைக் காப்பாற்றி துஷ்ட துர்யோதனனை அடக்கின எங்கள் ஈசா! எங்கள் புருஷன் செய்த பிழைகளை மன்னித்து அவருக்கு ஸௌக்யத்தைக் கொடுத்துக் காப்பாற்றவேண்டும். இப்படியாகக் காளிங்கபத்தினிகள் பணிந்து துதிக்கும் ஸ்தோத்திரங்களுக்குச் செவிசாய்த்து அவர்களின் களங்கமற்ற பக்தியையும் மெச்சி 101 தலைகளை யுடைய காளிங்கனைக் காப்பாற்றினார்.

ஸஹோதரிகளே! ஆபத்துக் காலங்களில் ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒருவரையும் கைவிடமாட்டார். ஆனால், முக்கியமாக உத்தம பதிவிரதையான குலஸ்திரீகளின் ஆபத்துக் காலங்களில் அவர்களைக் கைவிடவே மாட்டார். எங்கேயாவது பகவானை நம்பி மோசம்போனேன் என்று சொல்லுவதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஒருக்காலத்திலும் அவரை மனப்பூர்வமாக பக்தி செய்து நம்பினவர்கள் மோசம்போனதில்லை. ஸுககாலத்திலும் கஷ்டகாலத்திலும் ஸ்ரீகிருஷ்ணபகவானை நாம் மறக்கவேகூடாது. ஸ்திரீகளின் உருக்கமான ஸ்தோத்திரங்களுக்கு பகவான் கட்டுப்படுகிறவர். நாம் கடவுளை மறந்திருக்கிறதனாலல்லவோ நம்முடைய மக்கள் துராசாரங்களிலேயும் துர்க்குணங்களிலேயும் பித்தம்பிடித்து உழன்றுவருகிறார்கள். நம் குடும்பத்துக்கும் மக்களுக்கும் கணவனுக்கும் ஒருகஷ்டம் வராமல் பாதுகாத்துக்கொள்ள சக்தி நம்மிடமிருக்கிறதே. அந்தச் சக்தியே கடவுள்பக்தி. ஸகலகோடி ஜீவர்களின ஹிருதயகமலவாஸனாகிய அந்தப் பரந்தாமனைப் பஜித்து நம்முடைய புருஷர்களுக்கும் மக்களுக்கும் கடவுள் பக்தியை உண்டாக்குவோம். அப்படி, நம் இந்தியமாதர் பூர்வநிலையை அடையும்படிச் செய்வோமாக.

ஓம் சாந்தி: சாந்தி; சாந்தி;

# PROGRESS OF THE WORLD
# பிரபஞ்சப் போக்கு

**New Year**

புதுவருஷம்:— ஸர்வ சக்தியான கடவுளின் அனுக்கிரகத்தால் இவ்வருஷம் சுபமாய் முடியுமென்று நாம் பிரார்த்திக்கிறோம். தற்காலம் நடக்கும் யுத்தம் ஆரம்பமாகி ஸுமார் 2½ வருஷங்களுக்கு மேலாகியும் அது எப்போது முடியுமென்றும் எவ்வளவு காலம் நடக்குமென்றும் ஒருவராலும் சொல்லுவதற்கில்லை. ஆனால், சில மாதங்களாக இரு கட்சிகளிலும் ஸமாதானப் பேச்சுகள் நடமாடுகின்றன. இவ்வருஷத்திலேயாவது யுத்தம் ஒழிந்து, ஸமாதானம் பரவி ஜனங்கள் தங்கள் பெருத்த கவலையை ஒழித்து வாஸம் செய்ய இடமுண்டாகுமென்று நம்புகிறோம். எல்லாம் வல்ல இறைவன் செயலே செயல்.

**Bangalore Mahila Seva Samaj.**

பங்களூர் மஹிள ஸேவ ஸமாஜம்:—இது 1913ஆ அக்டோபர் மீ 1ந் தேதி சில கௌரவக் குடும்ப ஸ்திரீகளால் பங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்களெல்லாம் கூடி, இந்திய ஸ்திரீகள் பிரதானமாக ஒழுக்கம், கல்வி, ஒற்றுமை முதலியவைகளில் விருத்தியடையவேண்டு மென்பதாகும். இச்சங்கத்தில் தற்போது 75 மாதர்கள் வரை மெம்பர்களாயிருக்கிறார்கள். இந்த ஸமாஜத்தை மைஸூர் மஹாராணியாரும் யுவராஜர் மஹாராணியாரும் பார்வையிட்டுத் தங்களது ஆதரவை இதற்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஸமாஜத்திற்குக்கட்டிடம் கட்டுவதற்காக மைஸூர் மஹாராஜா அவர்கள் இரண்டு ஏகரா நிலத்தை உதவியிருக்கிறார். இக்கட்டிடத்திற்காக மதிப்பிட்ட ரூபாய் 25,000. மைஸூர் கவர்ன்மெண்டாரும் இதற்குக் கொஞ்சம் உதவிசெய்வதாக வாக்களித்திருக்கிறார்களென்று தெரிகிறது. சீக்ரத்தில் இந்த ஸமாஜத்திற்கு ஒரு கட்டிடம் ஏற்படும். இத்தகைய ஸமாஜத்திற்கு ஸ்ரீமதி பார்வதியம்மாள் சபைத்தலைவராகவும், ஸ்ரீமதி ரங்கம்மாள் கார்யதரிசியாகவும் ஏற்பட்டிருக்கிறது மிகவும் பொருத்தமாகும். பொதுவாக, எவருக்கும் ஒழுக்கமும் கல்வியும் பிரதானமா யிருக்கவேண்டுமாதலால் அவ்வழிகளில் ஜாஸ்தி கவலையைச் செலுத்தும்படி இந்த ஸமா



ஜத்தார்களை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். ஒழுக்கமும், கல்வியும் விருத்தியடைந்து வருமாயின் மற்றவைகள் தானாகவே அதன் வழிகளில் வரும்.

**Schools for deaf, dumb and blind.**

செவிடர், ஊமையர், குருடர்களுக்குப் பாடசாலைகள்:—இந்தியாவில் இருபாலார்களிலும் குருடர்களின் எண்ணிக்கை 48,558. இவர்கள் 5 வயதுக்கும் 15 வயதுக்கும் உட்பட்டவர்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஊமையர் செவிடர்களின் எண்ணிக்கை 58,801. இவ்வளவு பேர்களும் அந்த 5 வயதுக்குமேல் 15 வயதுக்குட்பட்டவர்களென்றே தெரிகிறது. நம் இந்திய தேசத்திலுள்ள குருடர், ஊமையர், செவிடர் முதலானவர்களுக்கு 18 பாடசாலைகளேதானிருக்கின்றன. இந்தப் பதினெட்டுப் பாடசாலைகளிலும் படிக்கும் சிறுவர் சிறுமிகளின் தொகை 500 என்று அறிகிறோம்.

இவர்களின் நிலைமை பரிதாபத்துக் கிடமாகவே இருந்து வருகிறது. இவர்கள் பட்டினியாலும் பிணியாலும் சாகிறார்கள். இவர்களின் நிலைமையைக் கவனிப்பார் ஒருவரையும் காணோம். நம் கவர்ன்மெண்டாரே இவர்களுக்கு ஒருவழிதேடவேண்டுவது அவசியமாக இருக்கிறது.

**Domestic Economy.**

குடித்தனச் சிக்கனம்:—எங்குபார்த்தாலும் தற்காலத் தலைமுறைப் பெண்களுக்கு செட்டுக் குடித்தனம் செய்யத்தெரிகிறதில்லையென்று ஒரு புகார் கிளம்பியிருக்கிறது. இதற்குக் காரணம் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். சிலர் மேனாட்டு ஆசாரப் பழக்கவழக்கங்கள் காரணமென்கிறார்கள். சிலர் பிறந்தவீட்டில் பெண்களுக்குச் ஸரியானக் குடித்தனப் பழக்கம் கற்றுக்கொடுக்காமையென்று கூறுகின்றனர். வேறு சிலர் படிப்பு காரணமென்கின்றனர். மற்றும் சிலர் பெற்றோர்கள் காரணமென்கிறார்கள். பின்னும் சிலர் ஜாதக விசேஷமென்று வைதீகமாகப் பதில் சொல்லுகின்றனர். இந்தப் புகாருக்கு என்ன காரணங்களிருந்தாலும் இந்தத் தலைமுறைப் பெண்களுக்குச் செட்டுக் குடித்தனம் செய்யத் தெரிகிறதில்லையென்பதில் கொஞ்சம் உண்மை யிருக்கிறதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். வீட்டுக் குடித்தன விஷயங்களில் கவலையைச் செலுத்திச் செட்டாக ஒரு ஸ்திரீக்குக் குடித்தனம் செய்யத் தெரியாமலிருந்தால்

அவள் படித்தவளாயிருந்தும் பிரயோஜனம் கிடையாது. அவள் நம் இந்தியாதேசத்துக்கு ஒருபாரமென்றும்கூட சொல்லலாம் புருஷனின் வருமானத்தை அறியாது டாம்பீம் என்று கடன் வாங்கிச் செலவழிக்கிற ஸ்திரீகள் குடித்தன ஸ்திரீகளாகமாட்டார்கள். சில ஸ்திரீகள் அனாவசியமான கிலிட்டு சாமான்களிலும் இன்னும் மனேக தாறுமாறான விஷயங்களிலும் பணத்தைச் செலவழிக்கிறது கூடாத கார்யம். ஆனால், தன் புருஷன் வயிற்றுக்கும் குழந்தைகள் வயிற்றுக்கும் போதாமல்கூட குடித்தனம் செய்து, பட்டினி கிடந்து மிகுத்தி, அப் பணத்தை இரண்டு வட்டிக்கும் மூன்று வட்டிக்கும் பக்கத்தில் லேவாதேவி செய்வதும் கூடாதகார்யம். மேலும், பாபமாகும். வீட்டுக் குடித்தன விஷயங்களுக்கு அவசியமானவைகளை வாங்கி சீராகக் குடித்தனம் செய்வதுதான் தங்களுக்கும் பெருமை, புருஷர்களுக்கும் ஸந்தோஷம். நம் பூர்வீக ஸ்திரீகளுக்குப் பெருமை வந்ததெல்லாம் காரணம் அவர்களுக்கு சீராகக் குடித்தனம் செய்யத் தெரிந்திருந்ததனாலென்று அறிந்துகொள்ளவேண்டும். தம் வீட்டுக் கார்யங்களை வேலைக்காரர்களிடம் ஒப்புவித்துவிட்டு தாம் அவைகளைக் கவனியாதிருத்தல் அழகல்ல. இப்பேர்ப்பட்ட புகார் கிளம்பி புருஷர்களுக்கு அதிருப்தியைக் கொடுக்காவண்ணம் பார்த்துக்கொள்வது ஒவ்வொரு குடும்ப ஸ்திரீகளின் கடமையாகயிருக்கிறது. குடும்ப ஸ்திரீகள் வீட்டுக் கார்யங்களைக் கவனிக்கவேண்டும். அவர்கள் படிக்கவேண்டும். ஸ்திரீகளுக்காக ஏற்பட்டு நல்லமுறையில் நடத்தப்பட்டு வருகிற 'பெண் கல்வி' பத்திரிகையை வாசிக்கவேண்டும் நம் ராமாயண மஹாபாரதங்கள் போன்ற ஸன்மார்க்கப் புத்தகங்களைப் படிக்கவேண்டும்; நல்ல ஸகவாஸம் செய்யவேண்டும்; நல்லோருடைய வழிகளைப் பின்பற்றவேண்டும். தீயோரோடு பழகினும் பாவமாதலால் அவர்களுடைய ஸகவாஸத்தை கட்டோடு ஒழிக்கவேண்டும். இப்படிச் செய்துவந்தால் புருஷர்களுடைய அன்புக்கும், குழந்தைகளுடைய பக்திக்கும், ஊரார்களுடைய பெருமைக்கும் கடவுளினுடைய அனுக்கிரகத்திற்கும் பாத்திரமாவோம்.

**Literacy in Madras Presidency.**

சென்னைராஜதானியில் கல்வி நிலைமை:—நமது சென்னைராஜதானியில் சுண்டூர் ஸமஸ்தானம் நீங்கலாக 142,330 சதுரமைல்களிருக்கின்றன. அதன் மொத்த ஜனத்தொகையோ 4,14,05,404.



அதாவது நாலுகோடியே பதினான்கு லக்ஷத்து, ஐயாயிரத்து நானூற்று நாலுபேர் களிருக்கின்றனர். நம் ராஜதானியில் 279 பட்டணங்களும் 58,835. கிராமங்களுமிருக்கின்றன. பள்ளிக்கூடங்களின் மொத்தம் 33,833. இவைகளில் பிரைமெரிப் பாடசாலைகள் 32,803 அதில் படிக்கும் பிள்ளைகள் 13,784,69. ஸெகண்டரி ஸ்கூல்கள் 824. அதில்படிக்கும் மாணவர்கள் 1,48,048. ஸ்பெஷல் ஸ்கூல்கள். 40. அதன்மாணவர்கள் 1,611 உபாத்தியாயத்தொழிலைக் கற்பிக்கும் ஸ்கூல்கள். 126 அதினுடைய மாணவர்கள் 5,523. ஜீவனத்திற்குறிய காலேஜ்கள் 3. மாணவர்கள் 1029. சாஸ்த்திர காலேஜ்கள் 37. மாணவர்கள் 8,284. மேற்கண்ட எல்லா ஸ்கூல் காலேஜ்களில் படிக்கும் மாணவர்களில் 8278 ஐரோப்பியர்களும். யூரேஷியர்களும், 1,04121 கிறிஸ்தவர்களும், 1,70,129 பிராமணர்களும், 9,96,890 பிராமணர்களல்லாதவர்களும், 1,28,967 மகம்மதியர்களும், 104 புத்தமதஸ்தர்களும், 96 பார்ஸிகளும், 9,253 இதாஜாதியார்களுமாகக்கல்வி கற்கின்றனா. சென்னைராஜதானியில் கல்விக்காகச் செலவழிக்கப்படும் தொகை ஏறக்குறைய ஒன்றேமுக்கால் கோடி ரூபாயாகிறது.

---

## SPECIAL ARTICLES
## விசேஷ வியாஸங்கள்

### FREDERIC FROBEL
**A Friend, Father & Teacher of School children**

**By**

**A Trained Ex-mistress**

### சிறுவர்களின் நண்பரும், பிதாவும் உபாத்யாயருமான ப்ரடரிக் ப்ரோபல்

(டிஸம்பர் மாதப் பத்திரிகையின் 85-ம் பக்கத்தொடர்ச்சி.)

சென்ற மாதப் பத்திரிகையில் ப்ரோபல் போதனாமுறை விஷயத்தில் அநேக அருமையான சீர்திருத்தங்கள் செய்து, தமது வகுப்பை உயர்வு நிலைக்குக் கொண்டு வந்தாரென்றும் அதனால் அவர் மற்ற மேற்வகுப்பு உபாத்தியாயர்களால் மதிக்கப்பட்டு வந்தாரென்

றும் சொன்னோம். ப்ரொபல் மிகவும் யோசனையுடையவராதலால் இன்னும் நல்ல போதனா முறைகளை அறிய வேண்டி, அப்பாடசாலையையும் விட்டு ஸாவகாசமாக இந்த விஷயத்துக்கே பாடு படலானார். இவருடைய படிப்பையும் புத்தியையும் கேட்டறிந்த ஒரு பெருமாட்டி தம் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி இவரை வேண்டினர், ப்ரொபல் அப்பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஸ்விட்ஸர்லாந்திலுள்ள பெஸ்த லோகியின் பாடசாலைக்குச் சென்று அங்கு அவர்களுக்குப் பாடம் சொல்லி வைத்தும் தாமும் மூன்று வர்ஷ காலம் படித்து வந்தார். பிறகு, பர்லின் நகரத்துக்குத் திரும்பி வந்து அங்கு ஒரு கலாசாலையில் சேர்ந்து தாதுப் பொருள்களைப் பற்றிப் படித்தார். இச்சமயம் தம் தேசத்துக்கும் இதர தேசத்துக்கும் யுத்தம் உண்டாயிற்று. அந்த யுத்தத்தில் ப்ரொபல் தம்தேசத்துக்காக கஷ்டப்பட்டு சண்டை செய்தார். சில காலங்களுக்கெல்லாம் யுத்தம் ஒழிந்து ஸமாதானம் உண்டாகியது. யுத்தம் முடிந்த பிறகு, மறுபடியும் பர்லின் நகரத்திலுள்ள ஒரு பாடசாலையில் சேர்ந்து தமது படிப்பை விருத்தி செய்துகொண்டு வந்தார். இந்த நாளையில் தமது ஸஹோதரர் ஒருவர் நோயினால் இறந்து விடவே அவருடைய குழந்தைகளை ப்ரொபல் காப்பாற்றும்படியாக நேரிட்டது.

இப்போது தான் ப்ரொபல் தம் ஸஹோதரரின் பிள்ளைகளோடு இன்னும் சில பிள்ளைகளையும் சேர்த்துக்கொண்டு 1815-ம் வர்ஷத்தில் கீலன் என்னும் ஒரு சிறு கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார். அப்பள்ளிக்கூடம் தம் மனோரதங்களை நிறைவேற்றுகிறதற்கு அனுகூலமாயிருந்தது. சாதாரண உணவும் ஆடம்பரமில்லாத நடையுடையுமே தம் மாணாக்கர்களுக்கும் தமக்கும் ஏற்றதென்று தீர்மானித்துக் கொண்டார். அக்கிராமத்திலுள்ள வயல்களுக்கு தம்பள்ளிப் பிள்ளைகளை அழைத்துப்போய் ஜந்துக்கள், செடிகள், கற்கள், சூர்ய சந்திர நக்ஷத்திரங்கள் ஆகிய இவைகளைப் பற்றிக் கற்பித்தார். புஸ்தகப் படிப்பை அவர் ஜாஸ்தியாக உபயோகப்படுத்தவில்லை. பூமியும் ஆகாயமும் தான் பிள்ளைகளுக்கு உபயோகமாயிருந்தன. ப்ரொபல் ஏற்படுத்தின பள்ளிக்கூடமானது பார்க்கிறவர்களுக்குக் குருகுல வாஸமாகவே யிருந்தது.



பின்பு, ப்ரொபல் இல்லற வாழ்க்கை அவசியமென்று அறிந்து ஒரு பெருமாட்டியைக் கல்யாணமும் செய்துகொண்டார். அந்தப் பெருமாட்டியும் தம் புருஷனின் கொள்கைகளையும் போக்குகளையும் நன்றாயுணர்ந்து இவரோடு சேர்ந்து பாடு படலானார். ப்ரொபலின் இல்லற வாழ்க்கை வெகு சிறப்பாகவும் ஸந்தோஷகரமாகவும் இருந்தது. இந்த ஸமயத்தில் ப்ரொபலின் இடை விடாச் சினேகிதர்கள் இருவர் இவரோடு சேர்ந்து ஒத்துழைக்கக் கங்கணம் பூண்டார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து யோசனை செய்து, ஸ்விட்ஸர்லாந்துக்குப் போவதாக தீர்மானித்துக் கொண்டார்கள். பிறகு, ஸ்விட் ஸர்லாந்துக்குச்சென்று அங்குள்ள வில்ஸன் நகரில் ஒரு பாடசாலை ஏற்படுத்தினார்கள். அங்கு, ப்ரொபல் ஐந்துவர்ஷகாலமிருந்து பாடசாலையைச் செவ்வனே நடத்தி வந்தார். அப்பள்ளிக் கூடத்திலிருந்து ஸுமார் எண்பது உபாத்யாயர்களை தம் போதனா முறையில் பழக்கினார். ப்ரொபல் முன்னுக்கு வருகிற ஸமயத்தில் அவருடைய மனைவி இப்பூவுலகை நீத்தார். காலத்தின் பலனாக ப்ரொபல் மறுபடியும் தம் ஜென்மதேசமாகிய ஜெர்மனிக்கு வரும்படி நேர்ந்தது. தமக்கு நேர்ந்த துக்கத்தை அதிகமாகப் பாராட்டாமல் தாம் கைக்கொண்டுள்ள வேலையில் கவலையைச் செலுத்தி வந்தார். ப்ரொபல் சிறு பிள்ளைகளுக்குப் போதிப்பதில் அதிகப்பிரியமும் ஊக்கமும் கொண்டவராயிருந்ததால் தம்முடைய கிராமத்தில் முதன்முதலாக சிறுவர்சிங்காரத்தோட்டமொன்று ஸ்தாபித்தார். அதை ஸ்தாபித்த போது ஒரு சிறு பண்டிகையொன்று நடந்தது. அப்பண்டிகையின் சிறப்பைப் பார்க்க சுற்றுப் பக்கத்திலுள்ள பெரிய பிரபுக்களும் ஸ்த்ரீகளும் அங்கு விஜயம் செய்திருந்தனர்.

முக்கியமாய், அந்தச் சிறுவர் சிங்காரத் தோட்டத்தின் விசேஷமென்ன வென்றால், அதில் ஸ்த்ரீகள் தான் சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டு மென்பதாகும். பிள்ளைகளைப் பத்திரமாய்ப் பாதுகாத்து அவர்களுக்குப் படிப்புக் கொடுப்பதற்காகவே இவ்வுலகில் ஸ்த்ரீகள் பிறந்திருக்கிறார்களென்று அடிக்கடி ஸ்த்ரீகளுக்குத் தெரிவித்து வந்தார். இவ்வுலகில் சிறுவர் சிறுமிகளுக்கு நல்ல வழியில் போதித்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வருகிறதைவிட வேறுதொழில் ஸ்த்ரீகளுக்குக் கிடையாதென்றது இவரு

டைய கொள்கையாகும். இவரின் கொள்கைகளையும் நோக்கங்களையும் பார்த்த, பரோபகாரமுள்ள ஸ்த்ரீகள் அநேகர் இவரின் சிங்காரத் தோட்டத்தில் சிறுவர்களுக்குப் போதிக்க முன் வந்தார்கள். ப்ரொபலின் பெயர் ஜெர்மனி முழுமையும் பரவியது. இவர் தமது மனோரதப்படிச் சிறுவர்களுக்குப் போதித்து அவர்களை முன்னுக்குக்கொண்டு வருகிறதைக் கண்டு, அநேகர் பொறாமைகொண்டனர். இப்படியிருக்கும்போது, ப்ரொபல் அநேக ஸ்கூல் அதிகாரிகளின் அதிருப்தியைப் பெற்றுவந்தார்.

குடிகளுக்கு நிர்ப்பந்தம் அதிகமானால் அதிருப்தி அதிகமாகுவது ஸஹஜம். அதிருப்தி அதிகமானால் கலகம் விளையுமென்று பயந்து ஜெர்மன் கவர்ன்மெண்டார் குடிகளை மூடர்களாகவே வைத்திருக்க வேண்டுமென்று நினைத்துப் பலகார்யங்களைச் செய்து வந்தார்கள். கடைசியாக, ப்ரொபல் ஏற்படுத்திய மாதிரியில் சிறுவர் சிங்காரத்தோட்டங்கள் ஸ்தாபித்து சிறுவர்களுக்குக் கல்விபயிற்று வந்தால் அவர்கள் சுதந்திரமுடையவர்களாகி கவர்ன்மெண்டாரை எதிர்ப்பார்களென்று நினைத்து ஜெர்மனிதேசத்தில் இது போன்ற சிறுவர் சிங்காரத் தோட்டமே ஸ்தாபிக்கக் கூடாதென்று ஒரு உத்திரவு செய்துவிட்டார்கள். இவ்வளவு வர்ஷகாலமாய் யோசனைகள் செய்து பாடுபட்டு வந்த கார்யம் நிமிஷத்தில் நசித்துவிட்டது. இப்படியாகத் தமது கார்யங்கள் பாழடைந்து போகவே, கொஞ்ச நாளைக்கெல்லாம் ப்ரொபல் தமது 70 வயதில் இறந்துபோனார். இறந்துபோனாலும் ப்ரொபலினிடைய புஸ்தகங்களும் அவர் எழுதி வைத்துப் போதித்து வந்த போதனமுறைகளும் அழியவில்லை. தற்காலத்தில் அநேக தேசங்களில் ப்ரொபலின் முறைகள் அனுஷ்டிக்கப் பட்டுவருகிறதே இவர் எழுபது வர்ஷங்கள் கஷ்டத்திற்கு கைமாறாக இருக்கிறது.

ஒரு மாஜி உபாத்தியாயனி.

---

உத்தம குலஸ்த்ரீ தன் ஆபத்துக்காலத்தில் பகவானை மனதார பக்தி செய்து வேண்டிக்கொண்டால் அவளின் கஷ்டங்கள் பனிபோல் நீங்கும் :—

ஸ்ரீமத் பாகவதம்.

## GENIUS OF KAMBAR

By

**Mr K Tiruvenkatachariar**

## கம்பர் கவித்வம்

குலோத்துங்க சோழன் அரசாட்சி செய்து வந்த காலத்தில் அவருக்குப் போகமாதர்களைத் தவிர பட்ட மகிஷிகளாயமர்ந்தவர்கள் பலர். அவர்களுள் முக்கியமானவர்கள் சேரன்மகள், பாண்டியன் புதல்வி, சிங்களத்திறைவன் செல்வி, வான் கோட்டரசன் குமாரத்தியாகிய நால்வர். இவர்கள் சையாக்கிருஹத்திற்கு அரசன் செல்லுமுறை எவ்விதமெனில், தினம் ஒவ்வொருவரிடத்திற்குச் செல்லுகிறதாக வாக்குதத்தம்; இவர்களில் யாரேனும் பூப்படைந்து மங்கள ஸ்நானம் செய்வார்களேயானால், கர்ப்பாதானத்தின்பொருட்டு முறையை நோக்காது அரசன் அவள் வீட்டுக்குப் போகவேண்டும், பாண்டியன் பெரிய சக்ரவர்த்தியானதால் அவன் புதல்வி எந்தக் காலத்தில் விரும்பினாலும் அவளிடம் சென்று அவள் தகப்பனுக்கு மனவருத்தம் வராமல் நடந்து கொள்வது அரசனின் வழக்கமாயிருந்தது.

அப்படியிருக்க, ஒருநாள் அரசன் வேட்டையாடி வீடடைந்து ஸ்நானசந்தி முடித்துப் போஜனம்செய்து தனக்கு அன்று யாருடைய முறையென்று கேட்டான். சேரன் மகளுடைய முறை என்று அவளுடைய பாங்கி (தோழி) சந்தனம் புஷ்பம் கொண்டு வந்து அரசனை அழைத்தாள். அதேகாலத்தில் பாண்டியன் செல்வி அரசனைக் கட்டாயம் பார்க்கவேண்டுமென்று சொல்லித் தன் பாங்கியை அனுப்பிவைத்தாள். அதேதினத்தில் சிங்களமாது மங்கள ஸ்நானம் செய்திருக்கின்றாள் என்றும் கர்ப்பாதானத்தின் பொருட்டு அவள் மனைக்கு வரவேண்டுமென்றும் அவள் பாங்கி யழைத்தனள். இடையில் போஜனசாலைக்குப் பக்கத்து மாளிகையிலிருக்கும் வான் கோட்டரசன் குமாரத்தி ஓர் ஆட்டம் பந்தயம்வைத்துச் சதுரங்கம் ஆடி அரசனை யுட்படுத்தி 'நீர் ஜெயித்தால் என்னைவிட்டு நீங்கிவிடலாம்; தோற்றால் என்னிடம் இருக்கவேண்டு'மென்று பேசி ஆட்டத்தில் தானே ஜயித்து அரசனைத் தன்வசப்படுத்தினாள். மற்ற பட்ட மகிஷிகளின் தோழிகள் மூவரும் இவள் அரண்மனைவந்து அரசனை அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

அரசன் தன் வாக்கைத் தள்ளிப் போக முடியாமலும் இன்னார் வீட்டுக்குச் செல்லுவதென்று தோன்றாமலும் யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது விடியற்காலமாகிவிட்டது. பிறகு, ஸ்நானத்திற்குச் சென்று பூஜைமுடித்துச் சிம்மாசனத்திற்கு வந்தவுடன் ராஜஸபையில் கம்பநாட்டாழ்வார் முதலானவர்கள் வந்து நிறைந்தார்கள். அச்சமயம், அரசன் தனக்கு எத்தனையோ பட்டமகிஷிகளும் போகமாதர்களும் இருந்தும் முன்னிரவில் தனித்திருந்து துயருற்றதைச் சிந்தித்து கம்பரைநோக்கிக் கொல்லென்று சிரித்தார். உடனே கம்பர்,

"சேரன்மகள் முறை பாண்டியன் செல்வி
சினந்திருப்பாள்
நாரங்கமழ் சிங்களமாதுக்கு
நாட்பொருத்தம்
வாரங்கிளைக்கொங்கை வான்கோட்டு வல்லிக்குப்
பந்தயச் சொல்
ஆரென்றுதள்ளி விடுவோமென்றே
சிந்தை யானதுவே."

என்று கூறினர். அரசன் திடீரென்று சிம்மாஸனத்தினின்று குதித்துக் கவிஞர் பெருமானைக் கட்டியாலிங்கனஞ்செய்து கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தனர்.

பின்னொருநாள், குலோத்துங்கசோழன் மந்திரி பிரதானி கம்பர் முதலான கனவான்கள் புடைசூழ யானையின்மீது முத்துக்கொடை பிடித்துக்கொண்டு இரவில் பவனி வருங்கால், குலோத்துங்கன் கம்பரை நோக்கி 'இரவில் குடை பிடித்துக்கொள்ளும் வழக்கம் குற்றமென்றும், அற்பனுக்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான் என்றும் உலகில் குறை கூறுகின்றார்களே, நான் இவ்விதம் குடை பிடித்துக்கொண்டு வருவது குற்றமா அல்லவா?' என்று கேட்டான். அதற்கு பெருமானாகிய கம்பர்—

"அண்டமீ துலவிவாழு மருந்ததி தினதுகாந்தி
கண்டபோ தாசையாகிக் கற்பவ ளழிவாளென்றே
எண்டிசை புரக்கும் வேந்தே யிரவினிற் கவிகை நீதான்
கொண்டது தகுதியெங்கள் குலோத்துங்கச் சோழரேறே."



என்று கூறினர். இதைக்கேட்ட அரசன் மகிழ்ந்து 'புலவரே! தங்களைப்போல ஸமயோசிதமாகக் கவி சொல்லும் திறமையில் யாரிருக்கின்றார்கள்?' என்று கூறி ஸந்தோஷித்தனன்.

மற்றொரு ஸமயம், கம்பர் காஞ்சிபுரம் சென்றிருந்தபோது ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ரதோத்ஸவத்தில் சில பிராம்மண சிப்பந்திகள் தங்கள் எண்ணத்திற்கு இசையாத அம்மைச்சி என்னும் ஒரு தாசி வீட்டிற்கு அருகில் தேரை யொதுக்கி அவள் வீட்டை யிடித்துவிடவேண்டுமென்று யோசனை செய்தார்கள். அது கண்ட தாசி கம்பரைக்கண்டு ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, 'ஸ்வாமி! புலவர் பெருமானே! எனக்கிந்த விதமாகப் பெருமாள் தேரைவிடுத்துத் தீங்கு செய்கிறார்களே; இந்த விபத்தைத் தீர்த்தருளவேண்டு'மென்று வருந்திக் கேட்டுக் கொள்ளக் கம்பர் பின்வருமாறு கூறிய கவி

"பாப்பார் குரங்காய்ப் படைகடமைத் திரட்டி
வாய்ப்பானக் கச்சி வரதரே—கோப்பான
கொம்மையிலங் கைத்தலத்தின் கோட்டையென்றோ வந்தீர்
அம்மைச்சி வாழும் அகம்."

இக்கவியைப் பெருமாள் கேட்டுத் திடீரென்று தம் தேரைத் தெருவழியாக நேரே திருப்பிவிட்டார். இது கண்ட பலரும் அதிசயமுற்றுக் கம்பரைத் தொழுது இவர் பெருமையைப்புகழ அனந்தனாலு மாகாதென்று பலவாறாய் வியந்து அம்மைச்சியிடம் கொண்ட துவேஷத்தையும் ஒழித்து அவளைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

திருவேங்கடாசாரியார்.

---

உனக்குத் ஏதாவது தேவையாயிருந்தால் அது உனக்கு அவசியமா என்பதை முதன் முதல் யோசித்துப்பார். உன் ஸ்நேகிதி அந்த ஸாமானை வாங்கி யிருக்கிறாளே ஆகவே, நானும் அதை வாங்கவேண்டுமென்பதாக வாங்காதே:—ராம்தீர்த்தர்

* * * *

நல்ல கார்யங்களைச் செய்; அவைகள் தான் உன்னுடைய கடமைகள். எனக்குப் பலன் கிடைக்கவேண்டுமென்று அவைகளைச் செய்யாதே:—
துகாராம்

## ON KNOWLEDGE
By
**Swami Vallinaygam**

## விவேக விசாரங்கள்

புளிப்பான சுவையையுடைய மாங்காய் முதிர்ந்தவுடன் இனிய சுவையுள்ளதாய் அது பற்றியிருந்த மரத்தின் கிளையை விட்டு நீங்குகின்றது. அதுபோல, யாவரும் வெறுக்கத்தக்க காமாதி அறுவகைத்துர்க் குணங்களை யுடைய மனிதன் விவேகத்தில் முதிர்ந்தவுடன் சினேகாதி இனிய குணங்களையுடையவனாய்த் தான் பற்றியிருந்த மாயா விருக்ஷத்தின் கிளையாகின்ற ஈஷணையைவிட்டு நீங்குகின்றான்.

ஸம்ஸாரம் என்னும் ஸாகரத்தில் விஷயம் என்னும் கல்லோடு ஆசையென்னும் பாசத்தால் கட்டுண்டு கிடக்கும் மாந்தர், வைராக்கியம் என்னும் கத்தியால் அப்பாசத்தை அறுத்து, சாதனம் என்னும் ஓடமேறி, ஸத்குரு வென்னும் மாலுமியால் ஞானமென்னும் வழியினூடு நடத்தப்பெற்றால் மோக்ஷமென்னும் கரையை அடைவார்கள். கெட்டவாஸனையை மூடிவைத்திருந்த போதிலும் அது வெகு தூரத்தில் சென்று பரவுகின்றது போல, ஒருவனுடைய கொடிய துர்க்கிருத்தியங்களை எவ்வளவு மறைத்து வைத்திருப்பினும் அவை எங்கும் சென்று பரவும். தவளைகள் தாமரைப் புஷ்பத்தின் சமீபத்திலிருந்தாலும் அதில் ஒழுகும் தேனை யுண்ண அறிகிறதில்லை. எங்கேயோ வுள்ள வண்டு வந்து அதை அருந்துகின்றது. அதுபோல, எத்தனை ஸமீபத்திலிருந்தாலும் மூடர்கள் ஞானிகளிடத்தில் அறிய வேண்டியவைகளை அறிகிறார்களில்லை. விவேகிகளோ வெகு தூரத்திலிருந்த போதிலும் ஞானிகளை அடுத்து ஞானாமிர்தத்தைக் கிரகிக்கின்றார்கள். மழைத்துளியானது பழுக்கக் காய்ச்சின இரும்பில் விழுந்தால் காணாமல் போகின்றது; அது தாமரையிலையில் விழுந்தால் முத்துப்போல் தோன்றுகின்றது; அதே சமுத்திரத்திலுள்ள சிப்பியில் விழுந்தால் முத்தாகிவிடுகின்றது. அதுபோல், அதே குருவினால் அனுக்கிரகிக்கப்பட்ட ஞானோபதேசமானது கிரகிப்பவர்களுடைய பக்குவத்திற்குத் தக்கபடி விளங்குகின்றது.



ஒரு குருடன் கிருமிகள் மொய்த்த மாம்பழம் ஒன்றை "மிகவும் நன்றாக இருக்கின்றது" என்று புசிக்கின்றான். அப்பொழுது அவனுடைய கண்கள் பார்க்கும் சக்தியைப் பெறுமாயின், எண்ணிறந்த புழுக்கள் அப்பழத்தில் நெளிவதைக் கண்டு அருவருத்தவனாய் அதைத் தூரத்தில் எறிந்துவிடுவான். அது போலவே, "நன்றாயிருக்கின்றது," என்று சொல்லி, உலக விஷயங்களை அனுபவிக்கும் மாந்தர்க்கு விவேகமானது திடீரென உதிக்குமாயின், அவைகளின் மேலுள்ள இச்சையை யொழித்து, அவர்கள் தூரத்தில் விலகி விடுகிறார்கள்.

கரும்பின் ருசியை யானை அறியுமேயன்றி கழுதையறியாது. அது போலவே ஞானிகளின் தன்மையை விவேகிகள் அறிவார்களேயொழிய மூடர்கள் அறியார்கள். ஓர் அரும்பானது புஷ்பிக்குங்கால் அதன் ஸுகந்தம் பக்கங்களில் எல்லாம் பரிமளிக்கின்றது. அது போல, மோக்ஷ இச்சையுடைய ஒருவன் ஞானியாகுங் காலத்து அவனுடைய சுத்தவாசனையானது பக்கமெல்லாம் வியாபிக்கின்றது. மனுஷ்ய சரீரம் என்னும் புணைபற்றி ஸம்ஸாரம் என்னும் ஸாகரத்தைக் கடக்க எத்தனிக்கும் ஜீவர்களில் பலர், காமம் என்னும் புயல்காற்றினால் தங்கள் மரக்கலம் மோதப்பட்டு, விஷயம் என்னும் பாறையில் தாக்கி நசிக்க, ஜன்மம் என்னும் மீனால் விழுங்கப்படுகிறார்கள்.

ஓர் பாட்டையில் சென்றுகொண்டிருந்த பிரயாணி ஒருவன் வழியில் ஒரு முற்றின தேங்காய் கிடக்கக் கண்டான். அவன் அதைக் கையில் எடுத்துச் சுற்றிச் சுற்றிப்பார்த்து, அதில் ஒன்றுமில்லை யென்று நினைத்து, அவ்விடத்திலேயே அதை எறிந்துவிட்டுப் போனான். அவ்வழியே இரண்டாவதாகச் சென்ற ஒருவன் அதைப் புறட்டிப்பார்த்து அதில் ஏதேனும் புசிப்பதற்கேற்றதிருக்கும் என்றெண்ணி, அதைப் பல்லினால் கடித்துச் சவரியில் (மட்டையில்) சிறிது பாகம் எடுத்துவிட்டான். ஆயினும், அவனுடைய பல்லில் ரத்தம் வந்துவிட்டதினால் அவன் அதில் ஒன்றும் இருக்காதென நினைத்து, அதை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுச் சென்றான். அதேவழியில் மூன்றாவதாகச் சென்ற ஒருவன் அத்தேங்காயைக் கண்டு தன் பசிக்கு உதவக் கூடிய ஏதேனுமொன்று அத

னுள் இருக்கலாமென்று கருதி, தன்பல்லினாலும் கையினாலும் வேலை செய்து, அதில் மிகுதிருந்த சவரியையும் எடுத்துவிட்டான். சவரியை எடுத்துவிட்டுப் பார்த்தபொழுது அங்கு தேங்காயின் ஓட்டைக்கண்டான். கண்டதும் ஆஹா! மோசம்போனோமே! இதற்காகவா இவ்வளவு பிரயாசைப்பட்டோம். இது கல்போலிருக்கின்றதே. இதனால் என்ன உபயோகம்? என்று நினைத்து, அவனும் அதை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுப்போனான். நான்காவதாக அவ்வழியே அரிவாள்கொண்டு சென்ற ஒருவன் அத்தேங்காயைக் கண்டு, அரிவாளினால் உடைத்து, உள்ளிருக்கும் பருப்பைக் கீறித் தின்று, திருப்தியடைந்து சென்றான். இதுபோலவே, மனிதஜென்மமாகிற மார்க்கத்தில் செல்லும் சிற்சிலர் ஸச்சிதானந்தமாகின்ற கடவுளின் ஸ்வரூபத்தை மூடியிருக்கும் நாமரூபத்தைப் பிரித்தெடுக்கச் சிறிது சிறிது முயன்று, அம்மட்டில் நின்றுவிடுகிறார்கள். ஞானஸாதனம்கொண்டு செல்லும் ஒருவனே, அச்சாதனத்தினால் நாமரூபத்தைத் தள்ளி, கடவுளையடைகின்றான்.

ஓர் அரசனைக் கண்டு வெகுமதி பெறும் பொருட்டு இரண்டு சங்கீத வித்வான்கள் சென்றார்கள். அவ்விரண்டுபேரும் இராஜனிடத்தில் சென்று தனித்தனியே பாடினார்கள். அரசன் அவ்விருவர்களுடைய சங்கீதத்தையும் கேட்டு, மிகுந்த ஸந்தோஷத்தையடைந்தவனாய் அவர்களில் ஒரு வித்வானை நோக்கி "நாம் மிகுந்த ஸந்தோஷமடைந்தோம். நீர் என்ன கேட்டாலும் கொடுக்கிறோம், உமக்கு வேண்டியதென்ன? சொல்லும்" என்றான். அதுகேட்டு. வித்வானும் களிப்படைந்து "மஹாராஜாவே! அடியேன் மிகவும் ஏழை. 10,000 ரூபாய் இருக்குமானால் சுகமாய்க் காலக்ஷேபம் செய்யலாம் என்று நினைக்கிறேன். "என்று சொல்லி முடியுமுன், அரசன் தன் வேலைக்காரனை யழைத்து, அவனுக்கு 10,000 ரூபா, கொடுக்கும்படி உத்திரவு செய்துவிட்டு இரண்டாவது வித்வானை நோக்கி "உமக்கு வேண்டியதென்ன?" என்று கேட்டான். அவனும் மிக ஏழையாயிருந்தபோதிலும் விவேகியானதால், அரசனை நோக்கி "மஹாராஜாவே! எனக்கு யாதொன்றும் வேண்டியதில்லை. மஹாராஜாவின் கிருபைதான் வேண்டும்" என்று சொன்னான். அரசன் கேட்டு "இவனுக்கும் அந்தத் தொகை போதாது



போலிருக்கின்றது" என்று நினைத்து 15,000 ரூபாய் கொடுக்கும்படி உத்திரவு செய்தான். வித்வான் "எனக்கு வேண்டியதில்லை. மஹாராஜாவினுடைய கிருபைதான் வேண்டும்" என்றான். அரசன் "ரூபாய் 20,000 கொடுக்கட்டும்" என்றான். அதற்கும் வித்வான் எனக்குப் பணம் வேண்டவே வேண்டாம். "மஹாராஜாவினுடைய கிருபைதான் வேண்டும்" என்றான். இவ்விதமாக அரசன் பாதிராஜ்யம்வரை கொடுக்கும்படி உத்திரவு செய்தும் வித்வான் மறுதளித்துவிட்டான். அரசன் திகைத்து, "இவன் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லுகிறானே. இவனை நாம் எவ்விதத்தில் சந்தோஷப்படுத்துகிறது?" என்று தனக்குள்ளேயே ஆலோசித்து, முடிவில் ஒருவிதமாகத் தீர்மானித்துக்கொண்டு வித்துவானைநோக்கி "நீர் அரண்மனையில் தானே இரும்" என்று சொல்லி, மற்றொரு வித்வானுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டான். பின்னர், அரசன் கூட இருந்த வித்வானுக்கு பிரத்தியேகமாய் அரண்மனை ஒன்று கட்டுவித்து, அவனுக்கு வேண்டும் காரியங்கள் எல்லாம் ஏற்பாடுசெய்து, தன்னைப்போல் அவனையும் பார்த்துவந்தான். அதுபோலவே, கடவுளானவர் தம்மை வழிபடுவர் ஏதேனும் ஒன்றை விரும்பிக்கேட்டால், அதைக் கொடுத்துவிடுகிறார். வாங்கினவன் ஏமாந்தவனாகிறான். அதனால், விவேகிகள் கடவுளிடத்தில் ஸாரமில்லாத உலகப் பொருள்களில் ஏதேனும் வேண்டுமென்று அபேக்ஷிக்கிறதில்லை; அவராகவே கொடுத்தாலும் வேண்டாம் என்கிறார்கள். அவ்விதமாக, நிராசையோடு அவரை வழிபட்டுவந்தால் அவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து, அவர்களுக்கு நித்திய சுகத்தையளித்து, அவர்களைத் தம்மோடு சேர்த்துக்கொள்கின்றார்.

புச்சம் (வால்) இல்லாவிடின், பக்ஷிகள் எங்ஙனம் ஆகாயத்தில் அதிக உயரமாய்ப் பறக்கமுடியாதோ, அங்ஙனமே நடுநிலைமையில்லா ஒருவன் இப்பூலோகத்தின்கண் அதிக உயர்வை அடையமுடியாது. ஒரு விருக்ஷத்தின் மூட்டில் சேரும் ஜலம அவ்விருக்ஷம் எத்தனை பெரிதாயிருப்பினும், அதனுடைய கிளைகள், அவைகளிலுள்ள ஒவ்வொரு இலை, பூ, பிஞ்சு, காய் முதலியவைகளில் எங்ஙனம் சென்று வியாபித்து, அவைகளை யெல்லாம் போஷிப்பிக்கின்றதோ, அங்ஙனமே ஓர் பரோபகார சீலனுக்குக் கிடைத்த ஊதியத்தால் அவனைச் சார்ந்த பந்துக்கள், மித்திரர்கள், தரித்திரர்கள் முதலியவரும் போஷிக்கப்படுகின்றார்கள்.

சுவாமி வள்ளிநாயகம்.

# GIRLS' MORAL INSTRUCTIONS
## பெண்மணிகள் நீதி போதனை

கொடுமுடி ஸ்ரீ சீதாலக்ஷ்மி வித்யாசாலைப் பெண் குழந்தைகள் கீழ்வரும் நீதிபோதனைப் பாட்டுகளை தங்களின் தினகிருத்தியமாக வைத்துக் கொண்டு அனுஷ்டித்து வருகிறதை நாம் இங்கு பிரசுரிக்கிறோம். இந்த நீதி போதனைகள் எல்லாப் பெண் பாடசாலைகளுக்கும் உபயோகப்படுமென்று நம்புகிறோம். பெண் பள்ளிக்கூட உபாத்தியாயினிகளும், உபாத்தியாயர்களும் மானேஜர்களும் இவைகளைக் கவனித்தல் நலம்.

(1) பாவையரே நாமும் படுக்கையினின்று
பரம புருஷனைப் பணிந்தெழுந்து
பாங்குடன் கால்முகம் நாமுமே கழுவி
பாடம் படித்துப் பின் பணிகலமிட்டு

(2) பழைய வமுதுண்டு பாடசாலை வந்து
பரனுடன் குருவையும் பாடி வணங்கி
பாடம் படிக்கப் பராக்குகள் விட்டு
பகர்ந்த வாஸனத்திற் பரிவுடனிருப்போம்.

(3) கற்பிப்பதை நாமும் கருத்திலமைத்து
கடுகியில்லஞ் சென்றதைக் கருதி நினைத்து
காட்டியவேலைகள் வீட்டினிற் செய்து
களிப்பாய் நீராடிப் பின்னுடுப்போம் சீராடை.

(4) எண்ணெழுத்துக்களையு மேற்றதையல் வேலையும்
இயம்பு சித்திரத்துடன் இறைவன் சரித்திரமும்
ஏற்ற நற்பூகோள பாக சாத்திரமும்
இருமையுந்தரும் தெய்வத்துதியுடன் படிப்போம்.

(5) கற்புடைய மாதர் கதைகளைப் படித்து
கடவுளாய்க் கணவனைக் கருத்திலமைத்து
காத்த நற்றாய் தந்தை கீர்த்திமிக் கோங்க
காசினிமேல் புகழ் தேசம் பெறுவோம்.

(6) அன்பு மேற்கொண்டு துன்பங்களை விண்டு
அன்னைமேரியுடன் அரசன் ஜார்ஜுக்கும்
ஆட்சியுங் கீர்த்தியும் ஆயுளுமோங்க
அணிமகுடேசர் மலர் இணையடி பணிவோம்.

(8) அயன்று நித்ரை செய்தவன்று நம்மைக் காக்கும்
ஆதி சௌந்தர்யவதியம்மையைப் போற்றி
ஆவியை மேவிடும் தீவினை தீர்த்து
அருளிய பகவனை அடிபணிந்தெழுவோம்.

# AHIMSA

By

**R. S. Subramania Desikar**

## கொல்லாமை *

நம் பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்காகவே ஸ்ரீமான் சுப்பிரமணிய தேசிகரவர்கள் எளியநடையில் இதை எழுதியிருக்கிறார். இதன் அருமையை அறிந்து நமக்குத் தெரிந்த சில இரண்டொரு பாடசாலைத் தலைவர்களுக்கு அவர்கள் பள்ளிக்கூடத்தில் உபயோகிக்கும்படி சிபார்சு செய்திருக்கிறோம். இன்னும் மற்ற பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்யாயர்களும் இதைக் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

"மறுக்கிவல் வலைப்படுத்திக் குமைத்திட்டுக் கொன்றுண்பர்
அறப்பொருளை யறிந்தோரா ரீதென்ன வுலகியற்கை!"
—ஸ்ரீ சடகோபர்

உலகினி லுயர்ந்தோ ருரைத்தபா வங்களுட்
கொலையெனும் பாவங் கொடிது கொடிது
கோவென் றலறக் கொடுமைத் தோடும்
உயிரை வதைத்தல் ஊனப் பழக்கம்
உயிரு முடலுஞ் சேர்ந்த புதுமை
உரைக்கநீ யுணராய் உன்னைப் போலவே
மற்றுள உயிருந் தின்று குடித்து
இன்ப துன்ப மீசனுற் பெற்றுக்
கால முற்றிக் கழிதல் வேண்டும்
உயிரையு முடலையும் ஒன்ற தாகக்
கூட்டிய பிரானே குலைத்தலும் வேண்டும்
அன்றியுங் கேளாய் அரிய மகனே
உலகி லுயிர்கள் உடலுடன் கூடிப்
பலபல விதமாய்ப் பிறந்திறந் துழலும்
மனுடர் தேவர் மிருகம் பறவை
ஊர்ந்து திரியும் பூச்சியும் புழுவும்
நீரில் வாழும் நெடிய மீன்களும்

* இதை ஒரு சிறு புஸ்தகமாக சென்னை, வெஜிடேரியன் லோவைலடி காரியதரிசி ஸ்ரீமான் ப. விஜயரத்ன பிள்ளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார். வேண்டுவோர் இதை அவரிடம் பெற்றுக்கொள்ளவும்.

நண்டு மிறாலும் நாதனார் அருளால்
தாவர முதலாச் சாற்றிட நின்றன
ஓரறி வோடும் ஈரறி வோடும்
மூன்று நாலு முற்றி ஐந்தாய்
ஏறி ஏறி ஏற்ற மாக
அப்பனே வளரும் அன்புடன் கேளாய்
உற்றுநீ பார்க்கில் உலகினி லுயிர்கள்
எல்லா மொன்றே ஊமர்கள் உணரார்
வேறு பிரித்து வெறுமொழி பிதற்றி
நாக வாயில் நமக்கென நிற்பார்
மாவும் பலாவுந் தெங்கும் தேக்கும்
ஆலு மரசும் வேறு வேறு
வர்க்க மாக வளர்ந்த வேனும்
சாதியொன் றாகிச் சாரு மன்றோ
மரமென யாரும் மதித்திடு வார்காண்
வித்தில் முளைத்து வெளியே தழைத்து
இலையுந் தளிரும் எறிந்து வளர்ந்து
மரமென நிற்கும் மாற்ற மொன்றே
ஊணும் உறக்கமும் இன்பமுந் துன்பமும்
உயிர்களுக் கெல்லாம் உள்ளன வாமே
நாமு முயிரில் நாடில் ஒன்றே
நாத னவனே ஆவன் யார்க்கும்
ஆக்கவும் அழிக்கவும் அவனே தாதா
உன்றன் உடம்பில் ஒருவர் அடித்தாற்
கதறிப் பதறிக் கன்று தன் தாயைத்
தேடு மாபோற் றிகைப்புட னின்று
வீட்டுக் கோடி விளைந்ததை யுரைப்பாய்
உன்றன் மேனியிற் றுன்பமே வியதால்
உன்னை அன்பாய் அன்னை பார்ப்பாள்
அதுவே போல ஒவ்வோ ருயிரும்
கன்றுங் குட்டியுங் குஞ்சும் குழந்தையும்
ஆக வளர்ந்து தமக்குந் தாய்க்கும்
அன்பு கூடி அருகினி லோடும்



இவற்றுள் ஒன்றை இன்னற் படுத்தினால்
இறைவனு நோவான் உயிரும் பதைக்கும்
உனக்குந் துன்பம் உடனே கூடும்
பிறர்க்குத் துன்பம் பண்ணுவ தாலே
பீடையும் நோயும் பிறவியும் வறுமையும்
உன்னிழல் போல உன்னைத் தொடரும்
பிறவித் துன்பம் பெரிதோ சிறிதோ
ஆடும் மாடும் ஆன உயிர்கள்
கோழியும் மீனும் வாய்விடாச் சாதி
வாழ்த்தினும் சரியே தாழ்த்தினுஞ் சரியே
அடிக்கினுங் குறைக்கினும் ஆரிடம் பேசும்
அவைக்குத் துன்பம் ஆக்கிடு மவனே
தனக்குத் துன்பந் தானே தேடுவன்
எந்த உயிரும் இறைவன் கோவில்
தடிகொண் டடித்தல் தலையை அறுத்தல்
குத்துதல் மிதித்தல் கொடூரஞ் செய்தல்
கொலையொடு சேர்ந்த தொலையாப் பாவம்
மன்னுயி ரெல்லாம் உன்னுயிர் போலவே
மனத்திற் கொண்டு மாதவ னடியை
மறவா திருப்பாய் அறமிது வேகாண்
இராச குமார னிரதமேற் செல்லச்
சில்லிற் கன்று சிக்கி இறந்தது
பசுத்தான் கதறிப் பதைபதைப் போடும்
பாலன் றாதையைப் பார்த்தே யோடி
மாளிகை வாசல் மணியை அடிக்க
அறநீதி வழுவா அரசன் றானும்
காரிய மறிந்து கன்றினைக் கொன்ற
காதன் மைந்தனைத் தேரின் காலிற்
கீழே கிடத்தித் தேரினை யூர்ந்தான்
கன்றை யிழந்த கறவை போல
மைந்தனை யிழந்து மன்னன் பதைத்தான்
ஆயினு முயிரை அழித்த லாலே
சேயினும் பெரிதாய்ச் செங்கோல் செலுத்தினான்

மனுநீதி கண்ட மாச்சோழன் என்று
உலகம் புகழ உமையாள் பாகன்
திருவருள் புரியச் சிறந்துயிர் பெற்றுக்
கன்றுங் குமரனுங் கடிதி லெழுந்தார்
இறைவன் செயல்தான் இப்படியாக
எவ்வுயிர்க் காயினும் ஔவையார் சொற்படி
அறஞ்செய விரும்புமின் மறஞ்செயா தொழிமின்
அறமெனப் படுத லுயிர்க்கிதம் புரிதல்
கொலையி னோடு கொடிதெனப் புகலும்
புலையெனும் புன்மை கூடியே நிற்கும்
புலாலினை யுண்டான் புலைய னவான்
னனைவிரும்பி யுயிரைக் கொல்லும்
பாதகரோடு பழகினும் பாவம்
மீனு மிறைச்சியுந் தேனுங்கற் கண்டுமோ
காலந் தப்பிற் கறைந்து நாறும்
புழுத்து நெளியும் புன்புலால் அப்பா
இத்தை இவர்கள் இனிதென வேண்டிக்
கழுகு கூகை காகநாய் நரிபோற்
பிணத்தைத் தின்று மணத்தை யுவந்து
உடம்பை வளர்த்து உலகின் ஞரே
வியாதியோ வென்றால் விட்டிடா தன்னை
உடம்பு தளரவும் உண்ணின்று வருத்தித்
தீரா நோய்களாற் றீமையே விளையும்
ஆயுசு குன்றும் அப்பா கேளாய்
காயுங் கனியுஞ் சுத்த போஜனம்
சத்த தாதுவுஞ் சுத்தமே யாகும்
அன்புந் தயையும் அணைந்து நிற்கும்
மிருகத் தன்மை ஒருவிப் போகும்
கோபமுங் கோரமுங் காமமு மனுகா
பொறையுந் தவமும் பொருந்தி வளரும்
"புலையுங் கொலையுங் களவுந் தவிர்"க
கொல்லா விரத மெல்லார்க்கு நன்றே.

சுப்பிரமணிய தேசிகர்.

## AHATHI PLANT

By

**Pandit V. Subramania Aiyar**

## அகத்திச் செடி

அகத்திச்செடிகளைப் பெரும்பாலும் வெற்றிலைத் தோட்டங்களில் பயிரிடுவார்கள். இச்செடிகள் 30 அடி உயரம் நீண்டுவளரும். வெற்றிலைக்கொடிகள் நீண்டுபடர்ந்து வளர்வதற்குச் சாதகமாகவே கோணலில்லாமல் நிமிர்ந்து வளரத்தக்க இச்செடிகளை தோட்டக்காரர்கள் வெற்றிலைத்தோட்ட வேலிக்கால்களில் பயிரிடுகிறார்கள். இச்செடிகள் வெற்றிலைகள் வளருவதற்குச் சாதகமாவதோடும்கூட இதன்கீரைகள் ஒருவித வியாபாரப் பொருளாகி அதனால் தோட்டக்காரர்கள் விசேஷ லாபம் பெறுகிறார்கள்.

பசுமாடுகள் முதலியவற்றிற்கு இக்கீரையைப் புண்யத்தை உத்தேசித்துப் பிராமணர்களும் மார்வாரிஜாதியாரும் விலைக்குவாங்கி ஏராளமாய்ப் போடுவார்கள். இது மாடுகளின் நாக்குக்கு மிக்க இனிமையைத்தந்து அவைகளுக்குத்தேகாரோக்கியத்தையும் தருகிறது. இது குளிர்ச்சியுள்ள பொருளாகும். இக்கீரைகளையுண்ட மாடுகள் பால் மிகுதியும் தரும். இக்கீரை துவாதசிபோன்ற புண்யதினங்களில் உபயோகப்படுவதாலே இது புண்யப்பொருளாக கருதப்பட்டு வருகிறது.

### அகத்திக் கீரையைச் சமைக்கும் விதம்.

ஏகாதசியில் உபவாஸமாயிருக்கும் பிராம்மணர்களும் மற்ற வகுப்பார்களும் அகத்திக்கீரையை துவாதசிதினம் அவசியம் சமையல் செய்து உபயோகிப்பதில் தவறமாட்டார்கள். முதலில் அகத்திக்கீரையில் பழுப்புகளை நீக்கி பூச்சிப் புழு இல்லாமல் ஆராய்ந்து அவைகளை நறுக்கிவைத்துக் கொள்ளவும். பின்பு, அவற்றை ஜலத்தில் அலம்பி எடுத்துத் தக்க பாத்திரத்திலிட்டு வேகவைத்துக்கொள்ளவேண்டும். அதை நன்றாக வெந்த பதம் பார்த்துத் தனியாக எடுத்துவைத்த பிறகு, சங்குபோல் தேய்த்த வாணலியை அடுப்பில் வைத்துத் தக்கபடி நெய்யோ எண்ணெயோவிட்டுக் காயவைத்து, சிறிதுபெருங்காயம், சிறிது மிளகாய், உளுத்தம்பருப்பு முதலியவற்றை வறுத்துக்கொண்டு தக்கபடி கடுகு இட்டுத் தாளித்துக் கொள்ளவேண்டி

யது. அந்தத் தாளிதத்தில் பொடித்த உப்புடன் வெந்த அகத்திக் கீரை, தக்கபடி வெந்தபருப்பு, தேங்காய்த்துறுவல், வறுத்த முந்திரிப்பருப்பு முதலியவைகளையும் போட்டுக் கிளறிக் கடைசியாக நல்லபாத்திரத்தில் எடுத்துவைத்து, போஜனத்துடன் உட்கொள்ள அது வாய்க்கு மிகுதியும் ருசியையும் தேகாரோக்கியத்தையும் தரும்.

### அகத்திக் கீரைக் கூட்டு.

அகத்திக்கீரையை வேகவைத்து கீரைக்குத் தகுந்தாற்போல் சிறிதுபுளியைக் கரைத்து அதில்விட்டு வேகவைக்க வேண்டும். பிறகு, சிறிதளவு மிளகாய்ப்பொடி உப்பு முதலியன சேர்த்து நன்றாகக்கொதிக்க வைத்து, அதற்கென்று முன்னாலேயே வேகவைத்திருக்கிற பருப்பை அதில் நிறைய இடவேண்டியது. அதன்பின் உளுத்தம் பருப்பை நெய்யிலோ எண்ணெயிலோ வறுத்துக்கொண்டு அதில் கடுகையும் இட்டு வெடிக்கவைத்துக் கொட்டிக்கொண்டு கிளறிக்கொடுக்க வேண்டும். அவ்வகத்திக் கீரைக் கூட்டு மிகுதியும் திரவ ரூபமாயிருந்தால் அதனில் மெல்லியதான அரிசிமாவைச் சிறிது நீரில் கரைத்துச்சேர்த்துக் கொதிக்கவைக்க, திரவரூபம்மாறிக் கெட்டியாகும். பருப்பும் கீரையும் சேர்ந்து கெட்டியாகவே இருந்தால், மாவு கரைத்து விடாமலிருந்தலே விசேஷமானது, அதில் பெருங்காயத்தைச் சிறிதளவு எடுத்து நெய்யில் பொறித்துப் பொடிசெய்து அக்கூட்டில் கலக்கலாம். அல்லது, பொருங்காயத்தைப் பாத்திரத்தில் ஜலமிட்டூறவைத்து அதில்விட அது மணமுள்ளதாகும். அக்கூட்டைச் சாப்பாட்டில் கலந்துட்கொள்ள மனதுக்கு மிக ரம்யமாகவிருக்கும். மற்றப்படி அக்கூட்டை போஜனத்திற்கு உபகரணமாகவும் உபயோகப்படுத்தலாம். இவ்வகத்திக் கீரையைப் பக்குவம்செய்து மனிதர் உட்கொள்ளுவதனால் உடம்பிலிருக்கும் உஷ்ணம் எளிதில் நீங்கக்கூடியதாகும். வாய்ப்புண் தொண்டைப்புண் குடல்புண் முதலியவைகளை இவ்வகத்திக்கீரை நீக்கவல்லது. விஷமருந்துகளின் குணங்களையும் இவ்வகத்திக் கீரைக்கு முறிக்கும் ஸ்வபாவமுண்டு. ஆகவே, சிலவேளைகளில் மருந்துகளை முறிக்கவேண்டியிருந்தால் வைத்யர்கள் இக் கீரையை உபயோகிக்கிறார்கள். கல்குடலுள்ளவர்களின் தேகத்திற்கு அகத்திக்கீரை மிகுதியும் குணம் தரத்தக்கது.



அக்கீரை சில இலேசான தேகங்களுக்கு சாதாரண விரோசன மருந்தாகவும் ஆகும். அகத்திக்கீரைப் பழுப்பை பக்குவம்பண்ணி உட்கொண்டால் அதனால் மல பிரவிருத்தி அதிகமுண்டாகி தேகத்திற்கு உபத்திரவம் உண்டுபண்ணும். ஆதலால், அதனை நீக்கவேண்டியது அவசியம். அகத்திக் கீரையின் பூவையும் வேகவைத்துப் பக்குவப்படுத்திச் சாப்பிட்டால் அதன் கீரையைக் காட்டிலும் பூவின் பக்குவம் விசேஷ குணம் தரும். அகத்திக் கீரை இம்மாதிரியான விசேஷ மருந்துச் சரக்கானபடியாலும் அது நல்ல வஸ்துவானபடியாலும் அதனை துவாதசி காலங்களில் உஷ்ண சமனத்தை யுத்தேசித்துப் புண்யமானபொருளாக உபயோகிக்கிறார்களென்று சொல்லினும் தவறாகாது. அகத்திக் கீரையை இன்னும் சிலமருந்துச் சரக்குகளுடனும் நல்லெண்ணெயுடனும் சேர்த்துக் காய்ச்சித் தலைமுழுக உடம்பிற்குக் குளிர்ச்சியையும் மயிர்வளர்ச்சியையும் மிகுதியும் உண்டுபண்ணும்.

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

## MAKARA SANKRANTI

**By**

**Sri Kalyani Ammal**

### மகரஸங்கராந்தி

ஸூர்யன் மகரராசியில் பிரவேசிக்கும் காலத்தையே ஹிந்துக்கள் பொங்கல் என்று கொண்டாடுகிறார்கள். இதனையே மகரஸங்கராந்தி என்றும் சொல்லுவதுண்டு. அறுவிடையாய் புதியநெல்வீட்டுக்கு வருவதற்கு ஆதாரமாயிருந்த இக்காலத்து ஸூர்யனைப் பூஜிக்க வேண்டியே ஹிந்துக்கள் இதை விசேஷ தினமாகஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஸ்த்ரீ புருஷர்கள் இவ்வுத்தராயண புண்யகாலத்திற்கு வெகுநாட்கள் முந்தியே தம்வீடுகளையெல்லாம் சுத்தப்படுத்தியும் வெள்ளை முதலியன அடித்தும் வைத்துக் கொள்ளுகிறார்கள்.

மார்கழிமாசக் கடைசிநாளன்று காலையில் வடதேசத்தினரில் பிராமணரல்லாத மற்றஜாதியினர் தம் வீட்டில் ஒருவருஷகாலத்தில் கட்டிக்கிழிந்துபோன வஸ்திரங்களையும், வீட்டில் மிஞ்சியிருக்கும் குப்பை கூளங்களையும் கொண்டுவந்து வீட்டின்முன்னே கொட்டிக்

கொளுத்திவிடுவார்கள். வருஷவாரியில் வீட்டில் அடைபட்டிருந்த அசுத்தங்களெல்லாம் ஒருவழியாய்த் தொலையட்டுமென்று இவர்கள் இம்மாதிரிச் செய்கிறது சுகாதாரத்துக் கடுத்தது என்று சொன்னாலும் பொருந்தும். தைமாஸத்து முதல்தினமே பொங்கல் பண்டிகையாகும். இதுவரையில் தான்யாதிகளின் வளர்ச்சிக்கு அநுகுணமாயிருந்த ஸூர்யன் பூஜிக்கப்படவேண்டுமென்று நினைத்து ஹிந்துக்களில் எச்சாதியினரும் இன்று ஸூர்யனைப் பூஜிக்கிறார்கள். இந்தத் தினத்தில் சர்க்கரை கலந்த அன்னம் அல்லது சர்க்கரைப்பொங்கல், தேங்காய், பழம், கரும்பு முதலியன சூர்யபகவானுக்கு நிவேதனம் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும் ஸூர்யபிம்பம் எழுதப்பட்டு அங்கு புதிதாகச் சமைத்த அரிசிச் சாதம் சர்க்கரைப் பொங்கல் முதலியனவும் கொண்டுவந்து சாயாதேவி ஸமேத சூர்யநாராயண ஸ்வாமிக்குப் பூஜைகள் சங்கல்பபூர்வமாக ஆரம்பித்துச் செய்யப்படுகிறது. இன்றையதினமும் மாட்டுப்பொங்கல் தினமாகிய மறுதினமும் ஸ்த்ரீகள் பக்திசிரத்தையாய் வீட்டில் அநேக கார்யங்களைச் செய்யவேண்டியவர்களாகிறார்கள். மாட்டுப் பொங்கல் தினத்தன்று ஆடுமாடுகளை வெகு சுத்தமாகக் கழுவி எஜமானர்கள் அவைகளுக்கு அலங்காரங்கள் விதம் விதமாகச் செய்வார்கள். ஸ்த்ரீகள் விதம்விதமான கோலங்கள் போட்டு வீடுகளை மங்களகரமாகவும் சுத்தமாகவும் தேவலோகம்போன்றே வைத்திருப்பார்கள். அன்றுதினம் பசுமாட்டுப் பூஜை திவ்யமாக நடக்கும்.

இந்தப் பொங்கல் பண்டிகைக்காக ஸஹோதரர்கள் தம்முடைய ஸஹோதரிகளுக்கு சீர் அனுப்புவார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கும் அதற்குமேலும் உபயோகப்படும்படியான அரிசி, பருப்பு, பழம், தேங்காய்க் காய்கறிகள் முதலிய சாப்பாட்டுக்குத் தேவையான சாமான்களையும் அனுப்பி, ஸஹோதரிகளை மகிழ்விக்கிறது வழக்கம். இவ்வனுப்புகள் கொண்டு மகிழ்ந்த ஸ்த்ரீகள் பொங்கலன்றையதினத்தின் மறுநாளில் வீட்டைவிட்டு நதிதீரங்கள் குளங்கள் முதலிய விடங்களுக்குப் புதியஆடை ஆபரணங்கள் முதலியன தரித்துச் சென்று தம்முடைய ஸஹோதரர்களின் க்ஷேமத்தைக் கோரியேப் பலவித சாதங்களால் கன்னிகைப்பிடி காக்காய்ப்

பிடி முதலியனவற்றை வைத்துத் தங்கள் தங்களுடைய இஷ்டதேவதைகளை வேண்டிக்கொள்ளுகிறார்கள். பிறகு, அவர்கள் பந்துக்களுடனும் சிநேகிதர்களுடனும் நதிதீரங்களிலிருந்து சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாய் வீடுவந்து சேருகிறார்கள். ஸ்திரீகளுக்கு சகோதரர்கள் வருஷவாரியில் அனுப்பும் உலுப்பைஅல்லது சீர்கொடுக்கும் வழக்கம் இன்னும் அனுஷ்டானத்திலிருக்கிறதை நாம் பார்க்கலாம். இப்பண்டிகையில், ஹிந்துக்களுள் ஒருவன் எவ்வளவோ ஏழையாயிருந்தாலும் அவன் தனது சகோதரிகளுக்குச் சீர்கொடுக்காமலிருக்க மாட்டான். ஸ்திரீகளும் தங்கள் பிறந்தவீடு மங்களகரமாயிருக்க வேண்டுமென்றும் கூடப்பிறந்த சகோதரர்கள் தீர்க்கஆயுளைக் கொண்டு வாழவேண்டுமென்றும் தங்களது இஷ்ட தேவதைகளைப் பூஜிக்காமலிருக்க மாட்டார்கள். இன்று எஜமானர்கள் பலரும் தம்முடைய குடியானவர்களிடமிருந்து உலுப்பைகள் மரியாதையாகப் பெற்று அவர்களுக்குப் பதில் மரியாதை செய்து சந்தோஷ வார்த்தைகள் சொல்லிக்கொள்வதுமுண்டு. ஸம்ப்பிரதாய வழக்கங்கள் பொருந்திய பிராம்மண அக்ரஹாரங்களில் வேதாத்தியான சாஸ்திர விசாரம் மிகுந்த பிராம்மணர்கள் ஒன்றுகூடி இவ்வுத்தராயண புண்ணிய காலத்தின் இரவில் பொதுவான பல இடங்களில் கூடியிருந்து வேத பாராயணங்கள் செய்வதும் ஈசுவர ஸ்தோத்திரங்கள் செய்வதுமாயிருப்பார்கள் இன்று மாஸப் பிரவேசமாயிருப்பதனால் பிதுர்க்களை யுத்தேசித்துத் தர்ப்பணங்கள் பண்ணி அவர்களைத் திருப்தி படுத்துவது முண்டு.

இந்த மகரஸங்கராந்தி புண்ய காலத்தில் பஞ்சநத க்ஷேத்திரம் (திருவையாறு) போன்ற இடங்களுக்குச்சென்று, காவேரி தீரத்தில் வாஸமாயிருந்து அநேக ஏழைகளுக்கு ஸ்நானாதிகள் செய்தும் தானதர்மங்கள் செய்தும் புண்ணிய பலனை பெற இச்சிப்ப வருமனேகர். எப்போதும் இன்றுபோல் பொங்கிக் குதூகலமாய் வருஷ காலமும் இருக்கவேண்டுமென்று இக்காலத்தைப் பொங்கல் என்று கொண்டாடுகிறார்கள். இம்மாதிரிப் பண்டிகைகள் சீனா ஜப்பான் போன்ற கீழ்ப் பிரதேசங்களில் ஒவ்வொரு திருநாளாய்க் கொண்டாடப் படுகின்றன.

S. கல்யாணி யம்மாள்.

## HISTORY & ANTIQUARY
## சரித்திரமும் ஆராய்ச்சியும்

# ANCIENT VIJAYANAGAR

By

**K. P. Seshadri Aiyangar**

## பழைய விஜய நகரத்தின் பெருமை

விஜய நகரமென்பது புராதன ஒரு ஹிந்து ராஜ்யம். அது இப்பொழுது காலக் கொடுமையால் பாழாகிக் கிடக்கின்றது. ஹம்பி என்கிற கிராமத்திலிருந்துதான் இந்த விஜய நகரத்தை நாம் இப்பொழுது காணலாம். இந்த ஊர் பல்லாரிக்கு 32 மைல் மேற்கே இருக்கிறது. இந்த ஹம்பி தான் இராமாயணத்தில் பம்பை என்று வருணிக்கப்பட்டப் பிரதேசம். வால்மீக மஹரிஷியால் வெகு அழகாய் வருணிக்கப்பட்டப் 'பம்பா ஸரஸ்' என்ற குளமும் இங்கு தான் இருக்கிறது. பாழடைந்து போன இந்தக் காலத்திலும் கூட அதில் அழகிலும், பரிமளத்திலும், காத்திரத்திலும் முதல் தரமான தாமரைப் புஷ்பங்கள் மலர்கின்றன. வாலி சுக்கிரீவன் ஆண்ட கிஷ்கிந்தையும் இதுதான். ஸ்ரீ ராம லக்ஷ்மணர்கள் தசக்ரீவனான ராவணனை ஸம்ஹாரம் செய்யவும் சீதையை மீட்கவும் உத்தேசித்து லங்கைக்குச் செல்வதற்குமுன் இந்தக் கிஷ்கிந்தையில் தான் வாசம் செய்தார். ஸ்ரீமந்நாராயணன் அவதாரமெடுத்து சஞ்சரித்தப் பிரதேசத்தின் அலங்காரத்தையும் பெருமையையும் சொல்லவும் வேண்டுமோ?

ஹரிஹரன், புக்கன் என்ற இரண்டு ஹிந்து அரசர்கள் 14 வது நூற்றாண்டில் விஜய நகர ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். பல துறைகளிலும் இந்த ராஜ்யம் உன்னதபதவியை யடைந்திருந்தது. சுமார் 250 வருஷகாலம் வரை ராஜ்யம் நிலைத்திருந்து கடைசியில், மகம்மதியர்களால் பாழாக்கப்பட்டுப் போயிற்று. விஜயநகரத்திலுள்ள கட்டடங்களின் அழகை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லத் தரமல்ல. அந்தக் கட்டடங்களின் அழகைப் பார்த்துத் தான் சென்னப்பட்டணம் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அக்கட்டடங்களிலமைக்கப்பட்ட ஜன்னல்கள், கதவுகள் இவைகளை வைத்துக்கொண்டு தான் சிஷோம் (Chisholm)



முதலான ஆங்கிலேய வாஸ்துசாஸ்திர பண்டிதர்கள் நமது சென்னை நகரத்தில் அழகாய் அமைக்கப்பட்டிருக்கும் 'ஜெனரல் போஸ்டாபீஸ்' 'செனெட்ஹவுஸ்' முதலிய கட்டடங்களை ஒருவாறு கட்டியிருக்கிறார்கள். விஜயநகரத்தின் பெருமைகளைக் கண்ணால் நேரிடக் காணவேண்டுமென்று ஆசையுள்ளவர்கள் சென்னை, பொருட்காட்சி சாலைக்குச் (Museum) சென்று காணலாம். அங்கு விஜயநகரத்திலிருந்து இரண்டொருகல் நிலைகளைக்கொண்டுவந்துவைத்திருக்கிறார்கள். அவைகளின் மேலிருக்கும் சிற்பவேலையை ஒருவருஷம் முழுமையும் பார்த்தாலும் நமது கண்ணின் ஆத்திரம் குறையாது. மனமும் சோர்வடையாது. ஒருவிரல் நீளத்தில் புருஷ உருவம் செதுக்கப்பட்டு, அதற்குத் தகுந்தபடியே கைகால் முதலிய உறுப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே நிலையில், இராமாயண கதையில் வருகிற சகல சங்கதிகளையும் சித்திரரூபமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. ஆஹா! இம்மாதிரி சிற்பவேலையை எப்படி முடித்தார்கள்? இதை வேலை செய்ய எத்தனை நாள் பிடித்திருக்கும்? யாரால் இந்தச் சிற்பவேலைகள் செய்தவர்களுக்குக் கூலிகொடுத்து நிர்வாகம் செய்யப்பட்டது? என்று வெகு யோசனைகள் சகஜமாகவே, ஒவ்வொரு மனிதருக்கும் தோன்றும்.

இவ்விதமாகப் பல யோசனைகள் ஒரு ஆங்கிலேய சிற்ப சாஸ்திரியின் மனதிலுதித்தது. அவர் இந்தச் சிற்பவேலைகள் கூலிக்குச் செய்யப்பட்டதல்ல. எந்த ராஜன் காலத்திலோ அல்லது ராஜாக்கள் காலங்களிலோ தங்கள் திறமையை அந்நாட்டுச் சிற்பிகள் காட்டச் செய்த சிற்பவேலையாயிருக்கவேண்டுமேயல்லாது கூலிக்குச் செய்தவையாகத் தோன்றவில்லையென்று சொல்லியிருக்கிறார். மேலும், தற்காலத்திய கூலி நிர்ணயத்தை வைத்துக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒவ்வொரு கல்தூணுக்கும் அதன்மீது செதுக்கப்பட்டிருக்கும் சிற்பவேலைக்குமாகச் சுமார் அரைலக்ஷம் ரூபாய் கொடுத்தே தீரவேண்டும் என்று அதே ஆங்கிலேய சிற்பசாஸ்திரி செல்லியிருக்கிறார். பாழாய்க்கிடக்கும் காலத்திலேயே அதன் அழகையும் வேலைப்பாட்டையும் புகழ்கிற நாம் அவைகள் செவ்வையாக இருந்த காலத்தில் எப்படிப் புகழ்வோமோ? அதை யோசித்து நாமே அறிந்து கொள்ளவேண்டியது.

விஜய நகரத்துக் கட்டடங்கள் அதிகமானவை. ஆகையால், நாம் அவைகளை வருணிக்க ஆரம்பிக்குமுன் அங்கிருக்கும் கட்டடங்களை வகுத்தறிந்து இவ்வளவு விதம் என்று ஒரு வரம்பு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அவைகளைப் பெரும்பாலும் கோவில்கள், கடைத் தெருவுகள், அரண்மனைகள், கோட்டைகள், சமாதிகள் என்று பல விதமாகப் பிரிக்கலாம்.

கோவில்கள் : விஜய நகரத்தில் அநேக ஜயினக் கோவில்கள் இருக்கின்றன. இந்த ஜயினக் கோவில்களுக்கு அடுத்த படியாக விஜயநகர வம்சத்தரசர்கள் கட்டின கோவில்களைச் சொல்லலாம். விஜப நகரம் என்ற இந்த ராஜதானியின் முக்கிய பட்டணமும் முதன் முதலில் சிறிய பட்டணமாக இருந்தது. அது துங்கபத்ரைக் கரையில் கட்டப்பட்டு அப்புறம் நாலு பக்கத்திலும் நம் சென்னப் பட்டணத்தைப் போல அங்கு தெருக்கள் எல்லா திக்கிலும் பெருகிற்று. அப்படிப் பெருகி வரும்போது ஒரு பக்கத்தில் குடிகள் குறைய ஆரபித்தன. இதற்குச்சில ஆதாரங்களிருக்கின்றன. இவ்வித ஆதாரங்களைக் கொண்டும் வாஸ்து சாஸ்திரக்கண்ணைக் கொண்டும் பார்த்தால் ஹம்பி தான் முதன் முதலில் விஜபநகரவரசர்களால் அமைக்கப் பட்டதாக ஏற்படுகிறது. அந்த ஊரிலிருக்கும் தேவஸ்தானத்து தர்மகர்த்தாக்கள் அவ்வூர் கோவில் கி. பி. 1195 ஆம் வருஷத்தில் கட்டப்பட்டதென்று சொல்லுகிறார்கள், அது ஒருவாறு நிஜமாயிருக்கலாம்.

ஹம்பியில் இப்பொழுதும் பூஜை உத்ஸவம் முதலானதுகள் நடந்து கொண்டிருக்கும் பம்பாதீச்வரர் ஆலயம் ஒன்று இருக்கிறது. இதன் கர்ப்பக் கிருஹம் மிகவும் பழைமையானதாகத் தோற்றுகிறது. இந்த பம்பா தீச்வரர் கோவிலைப் பரிசோதித்துப் பார்த்தால் 12, 13 14 நூற்றாண்டுகளில் நடந்த செயல்கள் காணப்படும். இந்தக் கோவிலிலுள்ள கறுப்புக் கல்லில் நமது பழைய சிற்பிகள் செய்திருக்கும் சிற்ப வேலைகளின் திறத்தைக்கண்டு நாம் கண்குளிர வேண்டும். வெகு அழகாய் வழ வழ வென்று எண்ணெய் பூசியிருப்பது போலவே சிற்பங்கள் நமது கண்ணுக்குத் தென்படும்.

ஊருக்குத் தென்கிழக்கு மூலையில் மால்யவானம் என்ற ஒரு பர்வத உச்சியில் ரகுநாதஸ்வாமி கோயில் இருக்கிறது. எல்லா கோவில்களைக் காட்டிலும் இது சிற்பத்தில் சிறந்து விளங்குகிறது,



இந்தக்கோயில் விஜய நகரத்தரசர்கள் அரண்மனைக்குச் சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஓர் அற்புதக் கட்டடம். அதில் ஒரு மண்டபம் உண்டு. அதன் நான்கு கறுப்புத்தூண்கள் இனிமேலும் உண்டோ என்று எண்ணும்படி அக்காலத்துச் சிற்பி தங்கள் வேலைப்பாட்டை தூணில் ஒவ்வொரு பாகங்களிலும் காட்டியிருக்கிறார்கள். மதம், சரித்திரம், கூத்துப்பாட்டு, சண்டை முதலியவைகளை எடுத்துக் காட்டும் ஒவ்வொரு சித்திரமும் இந்தக் கேவிலில்தான் நாம் விசேஷமாய்க் காணலாம். ஊருக்குக் கிழக்கே துங்கபத்ரை நதிக் கரையில் விட்டல ஸ்வாமி கோவிலிருக்கிறது. இந்தக் கோவிலில் காணும் சித்திரவேலை மிகவும் அற்புதம். இந்தக் கோயிலில் ஒரே கல்லால் செய்யப்பட்ட அதியுன்னதமான ஒரு ரதம் இருக்கிறது. அதன் அழகு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லத்திறமன்று.

இவைகளல்லாது அநேக ஹநுமார் கோயில்கள் இருக்கின்றன. வாலி சுக்ரீவன் இவர்கள் ஆண்ட கிஷ்கிந்தை இந்த ஹம்பியானதால் ஹநுமார் கோவில்கள் இவ்விடத்தில் அவ்வளவு அதிகமாக ஏற்பட்டன. ஹநுமாருக்குக் கோயில்கள மாத்திரமல்ல. ஹநுமார் சிலைகள் ஆங்காங்கு மலை மலையாய் வெட்டப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய ஹநுமார் விக்கிரகம் 20 அடி உயரமுள்ளதாகயிருக்கிறது. இது ஹம்பிக்கு மேற்கே ஒரு வயல் மத்தியில் வெகு உன்னதமாக நிற்கின்றது. வால்மீக மகரிஷி எழுதிய ராமாயண வசனத்தை மெய்ப்பிக்க மால்யவான் பர்வதத்தில் பெரிய பெரிய குரங்குகள் கூட்டம் கூட்டமாய் வாழ்கின்றன.

கடைத்தெரு : 800 கஜம் நீளமுள்ள அழகான கடைத்தெருக்களை இங்கு காணலாம், பழைய காலத்தின் அழகைப் பார்க்கவேண்டுமானால் வருஷத்தில் ஒரு தடவை வரும் ஹம்பி ஜாத்ரா என்ற உத்ஸவத்தில் தான் காணலாம். தெருவின் இரு பக்கங்களிலும் விசித்திரமான வீடுகள் அநேகம் உண்டு. இந்தக் கடைத்தெருக் கோடியில் குளங்களும், குளத்திற்குப் போகும் விசித்திர வீதிகளும், வழிகளும் பார்க்கிறவர்கள் மனதை ரமிக்கச் செய்யும்.

அரண்மனை : பழைய அரண்மனையைப் பற்றி அப்துல் ரஜாக் என்ற ஒரு மகம்மதியா வருணித்திருக்கிறார். அக்காலத்தில் அரண்மனையைச் சுற்றி ஏழுமதில் களிருந்ததாகவும் நாலு பக்கங்களிலும்

கடை வீதிகளிருந்ததாகவும், ஊரைச் சுற்றிச் சிறு வாய்க்கால்களில் துங்கபத்திரை நதியின் தண்ணீர் ஓடினதாகவும், அரண்மனைக்கு வலது பக்கத்தில் கச்சேரி மண்டபம் சிம்மாசனம் முதலியவை இருந்ததாகவும், இடதுபக்கம் தங்க சாலையிருந்ததாகவும்—நாணயங்கள் அச்சடிக்குமிடம்—அங்கு மோகரா வராகன் இவைகள் அச்சடிக்கப்பட்டதாகவும் வருணித்திருக்கிறார்.

கோட்டைகள்: கோட்டையின் மதில் பதினாறுமைல் நீளமுள்ளது. அந்த மதில்கள் எல்லாம் இப்போது நாசமாகிவிட்டன.

காலத்தின் கொடுமையாலே விஜயநகர ராஜ்யம் பாழாகிவிட்டது. விஜயநகரத்தின் தேவாலயச் சிறப்பும், சிற்பவேலைப் பாட்டின் திறமையும் அதன் பெருமையும் சுமார் 350 வருஷங்களுக்கு முன் மேலோங்கி இருந்ததென்று தெரிகிறது.

சேஷ சயனம்,
19-1-17.

கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

---

# MORAL LITERATURE
# சன்மார்க்க கல்வி

## SAKUNTALA'S LAMENT
## சாகுந்தலையின் சோகம்

மஹாதபஸ்வியாகிய விசுவாமித்திர மஹாரிஷிக்கும் தேவதாஸ்த்ரீயாகிய மேனகைக்கும் பிறந்த குழந்தை சாகுந்தலை கண்ணுவரிஷியின் ஆசிரமத்தில் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாக வளர்ந்துவந்தாள். பாலபருவத்தைக் கடந்து சாகுந்தலை யௌவனதசையை அடைந்தாள். ஸதாகாலம் தெய்வமணம் வீசிக்கொண்டிருக்கிற கண்ணுவரிஷியின் ஆசிரமத்தில் பகவத்பக்திசெய்துகொண்டு அவள் அங்கு விஜயம்செய்யும் அநேக மஹாரிஷிகளால் ஆசீர்வதிக்கப்பெற்று ஸுசீலியாய் விளங்கிவந்தாள். ஒரு நாள் கண்ணுவர் ஸ்தலயாத்திரைசெய்ய வெளியேபோயிருந்த ஸமயத்தில் அழகிலும் குணத்திலும் சாகுந்தலைக்குத் தகுதியுள்ளவரான ஒருவர் அங்கு வரநே



ர்ந்தது. அவர்தான் துஷ்யந்த மஹாராஜன். தெய்வசங்கற்பத்தால் கண்ணுவரில்லாத ஸமயத்தில் கந்தர்வவிவாக முறைப்படி துஷ்யந்த மஹாராஜனுக்கும் சாகுந்தலைக்கும் கல்யாணம் நடந்தேறியது. இருவரும் நேசமாயிருந்துவிட்டு துஷ்யந்த மஹாராஜன் மூன்று நாளையில் திரும்பி வருகிறேனென்று சொல்லிவிட்டுத் தமது ராஜ்யம் சென்றார்.

இச்சமயத்தில் துர்வாஸமஹாரிஷி தற்செயலாய் கண்ணுவரின் ஆசிரமத்திற்கு விஜயம்செய்தார். வழக்கம்போல் சாகுந்தலை வந்த மஹாரிஷிகளுக்கு வாசற்படியில் காத்திருந்து உபசரணை செய்ய வேண்டியவள். ஆனால், அச்சமயம் சாகுந்தலை துஷ்யந்தராஜன் மயக்கத்தில் ஈடுபட்டவளாய் வந்தவரைக் கவனியாது படுத்திருந்தனள். துர்வாஸருக்குக் கோபம் வந்தது. சாகுந்தலை! சாகுந்தலை! என்று அநேக முறைக் கூப்பிட்டதும் அவள் பதில் சொல்லாதிருந்ததைக் கண்டு, ஞானதிருஷ்டியினால் விஷயத்தைத் தெரிந்துகொண்டு "நல்லது சாகுந்தலை! எனக்கு நீ உபசரணை செய்யாது அலக்ஷியமாய் மறந்து இருக்கிறதனால் உன்னைத் துஷ்யந்தன் மறக்கவேண்டு"மென்று சாபமிட்டுவிட்டுச் சென்றார்.

இந்த சாபத்தைக் கேட்ட சாகுந்தலையின் தோழிகளான பிரியம்வதை அநசூயை என்ற இருசிறு பெண்களும் துர்வாஸரை வழிமறித்து, அவரின் பாதத்தில் விழுந்து சாகுந்தலையின் தப்புக்கு மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். துர்வாஸர் மனம் இரங்கியவராய் துஷ்யந்தன் கொடுத்திருக்கிற மோதிரத்தைக் காண்பித்தால் அவனுக்கு ஞாபகம் வந்து சாகுந்தலையைச் சேர்த்துக்கொள்வானென்று அக்குழந்தைகளிடம் தெரிவித்துவிட்டுப் போனார். துர்வாஸர் ஆசிரமத்துக்கு வந்ததையும், அவர் உபசரணை செய்யப்படாதிருந்ததையும் அதன்மேல் சாகுந்தலைக்குச் சாபம் கொடுத்ததையும் தோழிமார்கள் சாகுந்தலையினிடத்தில் தெரிவிக்கவில்லை. எங்கு தெரிவித்தால் தமக்கை வருந்தப்படுவாளோ என்ற பயத்தினால் தெரிவிக்காமலே இருந்துவிட்டார்கள். தீர்த்த யாத்ரை ஸ்நானம் செய்துவிட்டு கண்ணுவரிஷி தமது ஆச்ரமம் வந்துசேர்ந்தார். தம்குழந்தை சாகுந்தலையைப் பார்த்தவுடன் அவள் வெட்கப்பட்டுக்கொண்டு தலை குனிந்து நின்றதில் ஞானதிருஷ்டி மூலமாக எல்லா விஷயங்களையும்

அறிந்தவராய் "அம்மா சாகுந்தலை! நீ பண்ணினது ஸரியே அதைர்யப்படாதே; மேற்செய்யவேண்டிய காரியத்தைக் கவனி" என்று சொல்லவே, சாகுந்தலை தன் தினகிருத்தியங்களை வழக்கம்போல் செய்து வந்தாள்.

சாகுந்தலை கர்ப்பவதியானாள். அவளை வளர்த்த தகப்பனாராகிய கண்ணுவர் பார்த்துப் பிறந்தவீட்டில் பெண்ணுக்குச் செய்யவேண்டியகார்யங்கள் அனைத்தும் சாஸ்திர விதிப்படிச்செய்து முடித்தார் பின்பு, நல்ல தினம் ஒன்று பார்த்து தம் சிஷ்யர்களுடனும் ஒரு கிழவியுடனும் சாகுந்தலையை அவள் புருஷனாகிய துஷ்யந்த ராஜனிடம் அனுப்பித்தார். அப்போது, கண்ணுவ மஹரிஷி தம்குழந்தையாகிய சாகுந்தலை தன் புருஷனிடத்திலும் அவன் வீட்டாரிடத்திலும் நடந்து கொள்ள வேண்டியதற்கு அநேகப் புத்திமதிகளை அவளுக்குப் பலவாறாக எடுத்து உபதேசம் செய்து, வாழ்த்தி அவளை வழி யனுப்பினார்.

கால் நடையாய் நடந்து சாகுந்தலை தன் தகப்பனாருடைய சிஷ்யர்களுடனும் துணைக்காக வந்த ஒரு கிழவியுடனும் துஷ்யந்த மஹாராஜனுடைய பிரதிஷ்டானம் என்ற நகரம் போய்ச் சேர்ந்தாள். ராஜனரண்மனைபோவதற்கு முன், அந்நகரத்து ஒரு குளத்தில் இறங்கி முகங்கழுவிக்கொள்ள இவர்கள் இறங்கினார்கள். கைகால்களை அலம்பும் பொழுது துஷ்யந்த, மஹாராஜன் கொடுத்து விட்டுப்போன அந்த விவாக மோதிரம் அக்குளத்தில் சாகுந்தலையின் விரலிலிருந்து கைநழுவி விழுந்துவிட்டது. அது தன் கையிலிருந்து நழுவி குளத்தில் விழுந்ததை சாகுந்தலை அறியவில்லை. பின்னர் இவர்கள் யாவரும் ஜபதபங்களை முடித்துக்கொண்டு அரண்மனை வாசல் போய்ச் சேர்ந்தார்கள். துஷ்யந்தன் இவர்களை வரவழைத்து சாகுந்தலையை யாரென்று வினவினான். சாகுந்தலை தான்வந்த கார்யத்தையும் ஆசிரமத்தில் நடந்த மற்ற கார்யங்களையும் தெரிவிக்கிறாள். "ஏ மஹாராஜன்! என்னை நீர் அறிய முடியவில்லையா? நான்தான் சாகுந்தலை. கண்ணுவ மஹரிஷியின் குமாரி. நீர் ஸமீப காலத்தில் என் தகப்பனாரின் ஆசிரமத்திற்கு வரவில்லையா? அங்கு என் தகப்பனார் தீர்த்தஸ்நானம் செய்ய வெளியே போயிருந்த ஸமயத்தில் என்னை கந்தர்வ விவாக முறைப்படி ஆசிரமத்திலேயே கல்

யாணம் செய்துகொள்ள வில்லையா? பிறகு, மூன்று நாட்களில் திரும்பி வருகிறேனென்றும் சொல்லி விட்டு வரவில்லையா?" என்று சொன்னவுடனே அரசன் திடுக்கிட்டுப் பிரமித்து நின்றான். மறுமொழி ஒன்றும் சொல்லமுடியவில்லை. சற்று நேரம் பொறுத்து "ஆஹா! இதென்ன ஆச்சர்யம்! யாரோ ரிஷியின் குமாரியாம்! நான் கண்ணுவரின் ஆசிரமத்திற்குப் போயிருந்தேனாம்! அங்கு இப்பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டேனாம்! இதென்ன புதுமை! பெரிய ஸாஹஸமாயிருக்கிறதே. மேலும், மூன்று நாட்களில் திரும்பி வருகிறேனென்று சொன்னேனாமே! ஆச்சர்யமாயிருக்கிறது! போதும் போதும்! நீங்கள் இந்த மாதிரி அபாண்ட வார்த்தைகளைச் சொல்லாதீர்கள். ஸ்த்ரீ ஸாஹஸம் என்று சொல்வது ஸரியாக யிருக்கிறதே! நல்லது! இங்கு விட்டுப் புறப்பட்டு போங்கள்! நிற்காதீர்கள்!" என்று அரசன் மொழிந்தான், இம்மொழிகளைக்கேட்ட சாகுந்தலைக்கு ஒன்றும் தோன்றவில்லை. துக்கம் மேலிட்டவளாய் மனம் பொறுக்காமல் ஏதோ சில வார்த்தைகளைச் சொல்லப் புகுமுன், காவலாளிகள் சாகுந்தலையையும் கூட வந்த மற்றவர்களையும் வெளியே போகச் சொன்னார்கள். ஆகவே, அரண்மனைக்கு வெளி வாசலில் வந்து நின்றுகொண்டு ஒன்றும் தோன்றாதவளாய் மனம் புழுங்கி சாகுந்தலை அழுதாள். அவளுக்கு துக்கமோ ஸஹிக்க முடியவில்லை. என்ன செய்வாள் பாவம்! கோவென்று கதறினாள். ஈசனைத் துதித்தாள். கூட வந்த கிழவியும் சிஷ்யர்களும் இவளைத் தூஷிக்கலானார்கள். "நீ சொல்வதெல்லாம் பொய்! துஷ்யந்த மஹாராஜன் பொய் சொல்வாரா! என்ன விசித்திரமாயிருக்கிறதே! மஹா நீலி அழுகை ஏன் அழுகிறாய்! ஒரு மஹாராஜன் மேல் அநாவசியமாகப் பழியைச் சாத்தாதே! உண்மையைச்சொல்" என்று துணைக்குக் கூட வந்திருந்த கிழவி அதட்டிக் கேட்கலானாள். சாகுந்தலை துக்கம் மேலிட்டவளாய் நடந்ததை எல்லாம் உரைத்தனள். பிறகு, அவள் சொல்வது நிஜமாயிருக்கலாமென்று அக்கிழவி நம்பினாள். கூட வந்த ரிஷி சிஷ்யர்களும் நம்பினார்கள். பின்பு, எல்லோருக்கும் ஒரு யோஜனையும் புலப்படவில்லை. ஆனால், ஏக்கம் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

சாகுந்தலைக்கு அச்சமயம் மன ஆறுதல் சொல்ல ஒருவருமில்லை, தான் பிறந்த பிறப்பையும் வளர்ந்த விதத்தையும் நினைத்து

உருகினாள். "ஏ மேலோக நாயகா! ஏ ஆபத் பாந்தவா! நானிருக்கும் நிலைமையை நீர் அறியவில்லையோ! உம்மைத்தவிர வேறு யார் எனக்குத் தேறுதல் சொல்லி, என் நாயகரிடம் என்னைச் சேர்க்கப் போகிறார்? முன் ஜன்மத்தில் என்ன பாவம் செய்தேனோ! எந்த உத்தம ஸ்த்ரீயை அவள் புருஷனிடமிருந்து பிரித்துவைத்தேனோ? நான் நல்ல பூஜை செய்திருந்தால் எனக்கு இவ்வளவு கஷ்டம் வராதே. ஈசா நீயே கதி! உம்மைச் சரணமடைந்தவர்களைக் கைவிடாமல் காப்பாற்றவில்லையா? முதலைவாயில் அகப்பட்டுக்கொண்டு துடிக்கும் கஜேந்திரன் ஆதி மூலமே என்று கதறினவுடன் ஓடி வந்து அவனை ரக்ஷிக்கவில்லையா? ஏ ஜகதீசா! என் பிரார்த்தனை உம்முடைய காதுக்கு எட்ட வில்லையோ?" என்று இவ்வாறுப் பலவிதமாக உருகிக் கொண்டிருக்கிறஸமயத்தில் துஷ்யந்த மஹாராஜன் மறுபடியும் சாகுந்தலையை வரவழைத்து ஆதியோடந்தமாய் ஸகல விவரங்களையும் கேட்டான்.

ஏதோ நல்லகாலம் பிறந்திருக்கிறதென்றுக் கொஞ்சம் தெளிந்தாள். எவ்வளவு கேட்டும் கண்ணுவர் ஆச்சிரமத்தில் நடந்த விஷயம் அவனுக்கு ஒன்றுமே ஞாபகத்துக்கு வரவில்லை. ஆனால், அவன் சாகுந்தலையின் நிலைமையைக் கண்டு மனமுருகினான். என்ன செய்வான் பாவம்! மிகுந்த வியாகூலத்தையடைந்தான். துர்வாஸர் கொடுத்த சாபம் இலகுப்பட்டதா? அதனாலேயே துஷ்யந்தன் அச்சமயம் சாகுந்தலையை அடியோடு மறக்கும்படியானது. "நாம் விவாகம் செய்து கொண்டதற்கு ஏதாவது சாக்ஷிகளுண்டாவென்று கேட்க, சாகுந்தலை தன் கையிலிருந்த மோதிரத்தை எடுத்துக் கொடுக்கப் பார்த்தாள். மோதிரமோ தன் கையில் இல்லை. பின்பு, சாகுந்தலைக்கு வெட்கமும் துக்கமும் வந்தது. அதை அடக்கமுடியவில்லை. அவள் துஷ்யந்தனைப் பார்த்து "யாராவது சாக்ஷிகளிருக்கிறார்களாவென்று கேட்கிறீர்? உமது மனச் சாக்ஷி எங்கே போய் விட்டது? சூர்ய சந்திரர்களெல்லாம் சாக்ஷிகளில்லையா? நாம் தனியாக விவாகம் செய்து கொண்டோமாவென்று நினைக்கிறீரோ? ஸமஸ்த தேவர்களும் சாக்ஷிகளாக இருக்கிறார்களே. அவர்களை நீர் கவனிக்க மாட்டீரோ?" இப்படியாக துஷ்யந்தன் மனதில் குத்தும்படியாகவும் படும்படியாகவும் பல பல அடையாளங்களை எடுத்துச் சொன்னாள்.

துஷ்யந்தன் வருத்தமுடையவனாய்க் கடைசியாக "ஏ பெண்ணே நீயோ என்னைக் கல்யாணம் செய்துகொண்டேன் என்று உறுதியாய்ச் சொல்லுகிறாய். அதற்குப் பல அடையாளங்களையும் தெரிவிக்கிறாய். நீயோ ரிஷிப்பெண். பொய் சொல்லமாட்டாய் என்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது. ஆனால், எனக்கோ நீ சொல்லும் ஒருவிஷயமும் புலப்படவில்லை. என்னால் கூடியவரையில் யோசனையைச் செலுத்திப்பார்த்தேன். நீ சொல்வதெல்லாம் எனக்குப் புதுமையாகவும் ஆச்சர்யமாகவும் இருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் தோன்றவில்லை. என்னைக் கல்யாணம் செய்து கொண்டேனென்று உனக்கு நம்பிக்கையிருக்கிறதானால், ஒரு கார்யம் செய். நீயோ பூர்ண கர்ப்பிணியாகவிருக்கிறாய். உன் பிரஸவத்துக்கு ஸகல சௌகர்யங்களும் செய்து தருகிறேன். குழந்தை பிறந்ததற்குப் பிறகு, அதன் சின்னங்கள் என் சாயலைக் கொண்டிருந்ததேயானால் நான் உன் வாக்கை நம்பி உன்னைச் சேர்த்துக் கொள்கிறேன். அது வரையிலும் ஒன்றும் செய்வதற்கில்லை." என்று அனுதாபமாகச் சொல்லிவிட்டுத் தனது புரோகிதனை அழைத்து இப்பெண்ணைக் கூட்டிக்கொண்டு 'உன் வீட்டில் வைத்து ஸகல ஸௌகர்யங்களும் செய்து கொடு' என்று உத்திரவிட்டான், சாகுந்தலை இவ்வுத்திரவைக் கேட்டு மனம் ஸஹியாதவளாய் நிற்கையில், புரோகிதர் அவளை வீட்டுக்கு அழைத்துப் போனான். கூடவந்த கிழவிகளும் சிஷ்யர்களும் "சாகுந்தலை! வெகு நன்றாயிருக்கிறது! நீ செய்த கார்யமும் இப்போது செய்கிற கார்யமும் உனக்குத்தான் ஸரி! நீ உன்னிஷ்டப்படி செய்து கொள்! எங்களுக்கு உத்திரவு கொடு. நாங்கள் போகவேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். பிறகு, அவர்கள் சாகுந்தலையினிடம் செலவு பெற்றுக்கொண்டு கண்ணுவரின் ஆசிரமம் போய்ச் சேர்ந்தார்கள்.

சாகுந்தலை துக்கம் பொறுக்கமுடியாதவளாய் புரோகிதன் வீட்டுக்குப்போகும் வழியில் இரு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு "ஏ ஆபத்பாந்தவா? நான் மஹாதபோநிதியாகிய விசுவாமித்திருக்கும் மேனகைக்கும் பிறந்தும், அநேக ரிஷிகளால் பூஜிக்கப்பட்டு வருகிற கண்ணுவரிஷியிடம் வளர்ந்தும், அகண்ட பூமண்டலத்தையாளும் துஷ்யந்த மஹாராஜனைக் கல்யாணம் செய்துகொண்டும் என் கதி இப்படியாயிற்றே! ஏ லோக நாயகி! என் கஷ்டம்போல ஸ்த்ரீ ஜாதிகளில் ஒருவருக்கும் வரக்கூடாதம்மா" என்று மனம் வெந்து புலம்பினாள். ஒருவர் வெகுகாலம் கஷ்டப்படுவதைப் பகவான் பார்த்து

மாட்டாரல்லவா? தீனர்களுக்கும் பக்தியுள்ளவர்களுக்கும் ஆப்த நண்பராகிய ஸ்ரீமன் நாராயணனின் அனுக்கிரஹத்தால், மேனகை ஆகாசமார்க்கமாய் வந்து, கதறி அழுது தவிக்கும் தன் பெண் சாகுந்தலையைத் தன் மார்பில் தழுவி அணைத்து தூக்கிக்கொண்டு சென்றுவிட்டாள். சற்று நேரம் வரையில் புரோகிதனுக்கு ஒன்றும் தெரியவில்லை. சாகுந்தலையைக் காணாததைக் கண்ட அவன் துஷ்யந்தனிடம் ஓடிவந்து "நான் கூட்டிக்கொண்டு போகும் வழியில் என்னமோ வெளிச்சம் வந்தது. நான் கண்ணை மூடிக்கொண்டேன். பிறகு, கண்ணைத்திறந்து பார்த்தபொழுது அப்பெண் சாகுந்தலையைக் காணோம்" என்று தெரிவித்தான். அது கேட்டதும் சிம்மாசனத்திலுட்கார்ந்தபடியே துஷ்யந்தன் யோசனையிலாழ்ந்தான்.

இது இப்படியிருக்க, குளத்தில் கெட்டுப்போன சாகுந்தலையின் மோதிரமானது மீன் பிடிக்கும்போது ஒரு செம்படவன் கையில் அகப்பட்டது. அவன் அதை எடுத்துக்கொண்டு கடைத்தெருவில் விற்கவந்தான். இராஜ சேவகர்கள் அதை வாங்கிப் பார்த்தவுடன் அந்த மோதிரம் துஷ்யந்த மஹாராஜனுடையதாயிருந்தது. உடன் விசாரித்து, அதை அவன் கையிலிருந்து வாங்கிக்கொண்டு மஹாராஜனிடம் கொண்டுவந்து அதனைக் கொடுத்தான். அதை வாங்கிப் பார்த்தபொழுது, அது தான் சாகுந்தலைக்குக் கொடுத்த மோதிரமாயிருந்தது. உடன், அவனுக்கு சாகுந்தலையின் ஞாபகம் வந்தது. கண்ணுவரிஷி ஆசிரமத்தில் நடந்த விஷயங்களெல்லாம் அப்படியப்படியே அவன் ஞாபகத்துக்கு வந்தன. ஏ சாகுந்தலே! சாகுந்தலே! என்று கதற ஆரம்பித்தான். தன்னுடைய பதவியையும், ராஜஸபையையும் கவனிக்காமல் சாகுந்தலையை நினைத்துப் புரண்டு அழுதான். ராஜனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பகவானை மனப்பூர்வமாக ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தான். அவன் புத்திமானானதால் சாகுந்தலையை ஒருவேளை மேனகைக் கூட்டிக்கொண்டு போயிருக்கலாமென்று தன் மனதை திடப்படுத்திக்கொண்டான். எனினும், துஷ்யந்தன் தான் சாகுந்தலையினிடம் நடந்துகொண்ட வழிகளைக் கண்டு பரிதபித்தான்.

இந்த சமயத்தில் இந்திரனிடமிருந்து ஒரு உத்திரவு வந்தது. அதில் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தம் நேர்ந்திருக்கிறதனால் துஷ்யந்த மஹாராஜன் இந்திரனுக்குத் துணையாகப்போய்



யுத்தம் புரிய வரவேண்டுமென்று அதில் கண்டிருந்தது. அந்த உத்திரவை தலையால் வகித்து, உடன் இந்திரன் அனுப்பிய ரதத்தில் ஏறி தேவலோகம் சென்றான். அங்குபோய், இந்திரனுக்குத் துணையாயிருந்து யுத்தம்செய்து தான் அஸுரர்களைத் தோற்கடித்தான். பிறகு, இந்திரனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு தன் தேசத்துக்கு வந்துகொண்டிருந்தான். வரும்போது, நடுவழியில் துஷ்யந்தன் ஒரு பர்வதத்தைக் கண்டான். தன்னோடுகூட வருகிற இந்திரனுடைய சாரதியைக் கூப்பிட்டு "ஏ மாதலி! இதோ தெரிகிறதே அதென்ன பர்வதம்" என்று கேட்க அவன் "ஏ ராஜன்! நீர் காண்பித்தது ஹேமகூடபர்வதமாகும். அங்கு இந்திரனுடைய தகப்பனாராகிய கசியப்பிரஜேசுவரரும் அவரது மனைவியாகிய அதிதி தேவியும் வசித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று தெரிவித்தான்.

இதைக்கேட்ட, அவன் அவர்களைப் பார்க்கவேண்டுமென்று ஆசை கொண்டவனாய், தன் ரதத்தை கொஞ்ச தூரத்தில் நிறுத்தி வைத்துவிட்டு அஞ்சலியஸ்தனாய் அந்த ஆசிரமம்போய்ச்சேர்ந்தான். அந்த ஆசிரமத்தின் முன்னிருந்த வனத்தில் விளையாடிக்கொண்டிருந்த மூன்று வயதுள்ள ஒருசிறு ஆண் குழந்தையைக்கண்டான். துஷ்யந்தனுக்கு வந்த ஸந்தோஷத்திற்கு அளவில்லை. வெகு ஆச்சர்யத்தை யடைந்தான். "ஆஹா! இந்தச் சிறு பையன் இவ்வளவு ராஜவடிவாகவும் குணவந்தனாகவுமிருக்கிறானே? இவனைப் பெற்ற தாய் தகப்பன்மார்கள் பாக்யவான்களாகத் தானிருக்கவேண்டும்" என்று தனக்குள்ளேயே யோஜித்து அப்பிள்ளை விளையாடும் ஆட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். அந்த ஸமயம் அவ்விடத்தில் ஒரு கிழவி வந்தாள். "அம்மா இக்குழந்தை யாருடையது! வெகு தைரியமுள்ளவனாகவும் அழகாகவுமிருக்கிறானே" என்று கேட்டான். அதற்கு அந்தக் கிழவி அந்தப் பாபி பெயரை ஏன் கேட்கிறாய் என்று சொன்னாள்! உடனே, கொஞ்சம் அறிந்து கொண்டான். அவன் தாயார் யாரம்மா? என்று மறுபடியும் கேட்க, அதேன் என்னை சொல்லச் சொல்லுகிறாயப்பா? அவளோர் துர்ப்பாக்யவதி. அவள் பெயர் சாகுந்தலையாம்" என்று கடூரமாக மொழிந்தாள். உடன் அக்குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டுக் கட்டியணைத்துக்கொண்டான். அதற்குள் அந்தக் கிழவி உள்ளேபோய் சாகுந்தலையினிடம் உன் புருஷன் வந்திருக்கிறானென்பதைத் தெரிவிக்

கவே அவள் அவஸரமாக ஓடிவந்தாள். வந்ததும், துஷ்யந்தன் அவளைக் கட்டி யணைத்துக்கொண்டு ஒருவர்க்கொருவர் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

துஷ்யந்தன் பிறகு சாகுந்தலையையும் ஸர்வ தமனன் என்கிற பிள்ளையையும் கூட்டிக்கொண்டு கசியப்பிரஜேசுவரர் இருக்கும் இடத்திற்குச் சென்றார்கள். அவரையும் அவரது மனைவியையும் நமஸ்காரம் செய்து விட்டு எழுந்திருந்து துஷ்யந்தன் சோகமடைந்தான். கசியப்பிரஜேசுவரர் அவனைத் தேற்றி "ஏ ராஜனே! உன் பேரில் பிசகில்லை. துர்வாஸர் கொடுத்த சாபத்தினால் நீ சிறிது காலம் சாகுந்தலையை மறந்திருக்கும்படி நேரிட்டது. அதெல்லாம் இப்போது போய்விட்டது. இனிமேல் சாகுந்தலையுடன் தீர்க்க காலம் ராஜ்யமாண்டு வருவாயாக" என்று ஆசீர்வாதம் இருவருக்கும் செய்து அவர்களை வழியனுப்பினார். பின்பு, துஷ்யந்தனும் சாகுந்தலையும் தன் ராஜ்யமாகிய பிரதிஷ்டானம் என்னும் நகரம் வந்து சேர்ந்தார்கள். அங்கு தம் பிள்ளைக்குப் பரதன் என்று நாமகரணமிட்டு அவனுக்கு வித்தியாப்பியாஸம் தகுந்த ஆசார்யரிடத்தில் செய்துவைத்தான். பரதன் யௌவன தசையை அடைந்த பிறகு அவனுக்கு யுவராஜ்யப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு தானும் சாகுந்தலையும் வானப்பிரஸ்தாசிரமிகளாய் காட்டில் தவம் பண்ணச் சென்றார்கள்.

இந்த பரத சக்கிரவர்த்திதான் மஹாபாரத ஆதிகர்த்தா. இவர் வம்சத்தினைப் பற்றிய வேதம் போன்ற கிரந்தம்தான் பாரதம் என்பது. நம் தேசத்துக்கும் இவர் பெயரால் பரதக்கண்டம் என்றும் பாரத வருஷமென்றும் வழங்கிவருகிறது. ஸஹோதரிகளே! சாகுந்தலை மிக உத்தம ஸ்த்ரீ. அவளுக்குக் கஷ்டங்கள் நேர்ந்தன. அவைகள் ஸாதாரணக் கஷ்டங்களல்ல. அக்கஷ்டங்களை தனது கற்பின் வல்லமையாலும் கடவுள் பக்தியினாலுமே போக்கடித்தாள். எவ்வளவு கஷ்டங்கள் வந்தும் விடாமல் அந்த லோகநாயகனையே பஜித்தாள். கடைசியாக, கடவுள் அவளைக் கஷ்டங்களினின்றும் காப்பாற்றினார். சாகுந்தலையின் வம்சத்தில் உதித்த இந்திய ஸ்த்ரீகளே! அவளைக் கொண்டாடுங்கள். அவள் காட்டின வழிகளை பின்பற்றுங்கள். உங்களுக்கு இகபரமோக்ஷம் கிடைக்கும். சுபம்.

# WOMAN'S WORLD
# ஸ்த்ரீ பிரபஞ்சம்

## HOME NEWS.
## உள் நாட்டு வர்த்தமானம்

**Besant College.**

பெஸண்ட் காலேஜ் :—பம்பாய்ப் பட்டணத்தில் மாது ஸ்ரீ பெஸன்ட் அம்மை யோால் ஒரு காலேஜ் ஏற்படுத்தப்போகிறதாகத் தெரிகிறது. அக்காலேஜை ஸ்தாபிக்கிறதற்கு ரூபா 15 லக்ஷம்வேண்டுமாம். அப்பணமும் கிடைத்து விட்டதென்று தெரிகிறது.

**Lady Chelmsford College.**

லேடி செம்ஸ் போர்டு காலேஜ் :—சமீபத்தில் ராஜப் பிரதிநிதியும் அவரது மனைவியாரும் பர்மாவுக்கு விஜயம் செய்திருந்த ஸமயத்தில் அங்குள்ள ஸ்த்ரீகள் பலர் சேர்ந்து அவர் பேரால் ஒரு மெடிகல் காலேஜ் ஸ்தாபிப்பதாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

**A Medical College for Women.**

ஸ்த்ரீகளுக்கு ஒரு வைத்திய காலேஜ் :—சென்னையில் ஸ்த்ரீகளுக்கென்று பிரத்தியேகமாக ஒரு மெடிகல் காலேஜ் ஸ்தாபிப்பதாக ஆலோசனையிலிருக்கிறது. அதற்காக, ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு ஸ்த்ரீ மாணவர்கள் வைத்தியப் பரீக்ஷைக்குப் படிக்கமுடியுமென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல அந்த அந்த ஜில்லா மெடிகல் சானிடரி ஆபீஸர்களுக்கு சென்னை சர்ஜன் ஜனரல் உத்திரவிட்டிருக்கிறதாக ஓர் நிருபர் தெரிவிக்கிறார்.

**Sadu Sanga Maha Sabha.**

ஸாது ஸங்க மஹா ஸபா :—இம்மாதம் 30ந் தேதி ஸாது ஸங்க மஹாஸபையின் ஆதரவின் கீழ் சென்னை பச்சையப்பன் காலேஜ் ஹாலில் பெண்கல்விப் பத்திராதிபர் ஸஹோதரி தாயாரம்மாள் அவர்களும், ஸ்த்ரீ ஐக்ய ஸமாஜ மெம்பராகிய ஸ்ரீமதி நாகரத்தின அம்மாள் அவர்களும் "பெண்களின் நிலைமை" "ஸாதுக்களின் பெருமை" என்ற விஷயமாக முறையே உபந்யாஸம் செய்தார்கள். அப்போது டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்.

**Saraswathi Sangam.**

சரஸ்வதி சங்கம் :—இம்மாதம் மேற்கண்ட சங்கத்து எட்டாவது வருஷோத்ஸவம் கனம் ஜட்ஜ் குமாரஸாமி சாஸ்திரிகள் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. இச்சங்கத்தார் இரண்டு பெண்பாடசாலைகளை நடத்திவருகிறார்கள். பொதுஜனங்களின் ஆதரவு இதற்கு அவசியமென்று ரிபோர்ட்டினால் தெரிகிறது.

**A flower garden for Women.**

மாதர்களுக்கு ஒரு பூந்தோட்டம் :—கல்கத்தா முனிஸிபாலிடியார் ஸ்த்ரீகளுக்காக ஒரு பூந்தோட்டம் தனியாக ஏற்படுத்தவேண்டுமென்று அங்குள்ள சில முனிஸிபல் கமிஷனர்கள் முயற்சி செய்து வருகிறார்கள்.

**The Bagavath Tatva Bodini Saba.**

பகவத் தத்துவ போதினி ஸபா.—இந்த ஸபையாரின் ஆதரவின்கீழ் இம்மாதம் 20, 21, 22, 26, 27, 28 முதலிய தேதிகளில் துஷ்யந்த ராஜன் சரித்திரம், பீஷ்ம ஜனனம், ஸத்யவதீ பரிணயம் திருதராஷ்டர பாண்டு ஜனனம், குருபாண்டவ ஜனனம், ஆகிய இந்த ஐந்து காலக்ஷேபங்களை முறையே கீதாலக்ஷ்மணாசாரியர் என்று பெயர் போன ஸ்ரீமான் பாண்டிட் டி. லக்ஷ்மணாசாரியர் அவர்கள் வெகு அருமையாகவும் மனதில் பதியும்படியாகவும் பின் வாத்தியங்களுடன் செய்தார். எவ்வளவோ காலக்ஷேபங்களை நாம் கேட்டிருக்கிறோம். எனினும், ஸ்ரீமான் பாண்டிட் டி. லக்ஷ்மணாசாரியர் அவர்கள் காலக்ஷேபங்கள் செய்கிற தோரணையும் நீதிகளை எடுத்துச் சொல்லும் விதமும் அந்த பக்தியும் மற்ற பாகவதர்கள் செய்யும் காலக்ஷேபங்களில் இல்லையென்று சொல்லவேண்டியிருக்கிறது. இவரின் துஷ்யந்த ராஜன் சரித்திர காலக்ஷேபத்திலுள்ள பின் பாகத்தை சாகுந்தலையின் சோகம் என்று பெயர் கொடுத்து வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். இது விஷயமாக ஸ்ரீபகவத் தத்துவபோதினி ஸபையாரின் முயற்சிகள் புகழத்தக்கவைகள்.

**Sarda Ladies union.**

ஸாரதா ஐக்ய சங்கம் :—இம்மாதம் 20-ந் தேதி சனிக்கிழமை மாலையில் மேற்படி சங்கத்தின் ஐந்தாவது வருஷோத்ஸவம் துளசிங்க பெருமாள் கோவில்தெரு, கவர்ன்மெண்ட் பெண் பாடசாலையில் நடத்தப்பட்டது. அச்சமயம் மிஸ்ஸ் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்.



**Hindu Ladies, Lakshmi Vilasa Saba.**

ஹிந்து மாதர் லக்ஷ்மி விலாஸ ஸபை :—லேடி பெண்ட்லண்டின் யுத்த நிதிக்காக இம்மாதம் 18-ந் தேதி மேற்படி ஸபையின் ஆதரவின் கீழ் பத்து வயதுக் குட்பட்ட சிறுமிகள் ஸாவித்ரி நாடகத்தை விக்டோரியா பப்ளிக்ஹாலில் லேடி சிவஸாமி அய்யர் முன்னிலையில் நடத்திக் காட்டினார்கள்.

**Sree Ramakrishna National Girls School.**

ராமகிருஷ்ண பெண் பாடசாலை :—இம்மாதம் 21-ந் தேதி இதன் இவ்வருஷ வருஷோத்ஸவம் கனம் ஜட்ஜ் அப்துர் ரஹிம் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் நடைபெற்றது.

## FOREIGN NEWS
## வெளி நாட்டு வர்த்தமானம்

**Economy of German Women.**

ஜெர்மன் ஸ்த்ரீகளின் குடித்தனச் செட்டு ;—சில வாரங்களுக்குமுன் பர்லின் நகரம்போய்ப் பார்த்துவந்த ஒரு அமெரிக்கா தேசத்து ஸ்த்ரீ பின்வருமாறு எழுதுகிறார்.

"ஜெர்மன் ஸ்த்ரீகள் அனைவரும் மிகவும் செட்டாய்க் குடித்தனம் செய்துவருகின்றனர். எந்தப் பதார்த்தம் கிடைக்குமோ அந்த பதார்த்தத்தைக்கொண்டே சமையல் செய்து சாப்பிட்டு திருப்தி அடைந்து வருகிறார்கள். யுத்தம் ஆரம்பித்த நாள் முதல் அவர்கள் தங்களுக்குள்ள அத்தியந்த தேசாபிமானத்தினால் அதிகச் செலவு யாதொன்றும் செய்யாமல் பண்டங்களையும் பணங் காசுகளையும் மிகுத்து வைக்கின்றனர். ஜன்ம தேசத்தின் நன்மைக்காக மிகவும் செட்டாயிருப்பதே தங்களுக்குச் சந்தோஷமாகுமென்று குழந்தைகளும் அறிந்திருக்கின்றனர்."

**A brave Russian Girl.**

ஒரு தைர்ய ருஷ்யச் சிறுமி :—ஸமீபத்தில் ஒரு ருஷ்யப்பெண் தனது ஆகாய விமானத்துடன் போர்முனைக்குச் சென்றாள். அங்கிருந்து ஆஸ்டிரிய ஸைன்யங்களிருக்குமிடம் தெரிந்து ஆகாயவிமானத்திலிருந்தே பறந்து துப்பறிந்துகொண்டு வந்தாள். அவள் பாதிவழி வரும்போது ஆஸ்டிரியர்கள் கடுமையாக அவள்மீது பீரங்கியால் சுட்டனர். அவள் காயமடைந்தாளாயினும் தப்பி ருஷ்யச்

சேனை இருக்குமிடம் வந்துசேர்ந்துவிட்டாள். இப்பெண்ணின் தைரியம் என்ன?

**Women Military.**

ஸ்த்ரீகள் இராணுவம்.—1852-வது வருஷத்தில் சீனாவில் நேர்ந்த பெருங்கலகத்தில் 5-லட்சம் ஸ்த்ரீகள் ஆயுதபாணிகளாக வந்து தமது தேசத்தைப் பாது காக்க முயன்றனராம். இவர்களுக்குத் தலைவர்கள் ஸ்த்ரீ உத்யோகஸ்தர்களாகவே யிருந்தனராம்.

**Japanese Women Philonthropists.**

பரோபகார ஜப்பானிய ஸ்த்ரீகள்:—ஜப்பானிய ஸ்த்ரீகளும் புருஷர்களும் சேர்ந்து 25 லட்சம் பவுன் கொண்ட நிதியொன்று சேர்த்து, அதன் வட்டியைக்கொண்டு, தமது தேசத்தில் தேக சௌக்கியமின்றி வறுமையில் வருந்தும் ஏழை ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கும் உதவி செய்யப் பிரயத்தனஞ் செய்து வருகின்றனர். இந்நிதிக்கு ஜப்பான் சக்கரவர்த்தியார் சொந்தப்பணத்திலிருந்து லட்சம் பவுன் வரையில் உதவி செய்திருக்கின்றனர்; சாதாரணமானவர்கள் ஏதேஷ்டமாகத் தந்திருக்கின்றனர். ஆனால், இவர்களில் ஸ்த்ரீகளே ஜாஸ்தியாக உதவி செய்திருக்கின்றனராம்.

**Women Typists.**

ஸ்த்ரீ டைபிஸ்டுகள்:—நியூயார்க் நகரத்தில் மாத்திரம் டைப்ரட்டிங் யந்திரத்தில் ஒரு லட்சம் பெண்களும், ஸ்த்ரீகளும் வேலை செய்கின்றார்கள்.

**Women Suffrage Societies.**

ஸ்த்ரீ ஸ்வதந்திரவாதிகளின் சங்கங்கள்:—இங்கலண்டிலுள்ள ஸ்த்ரீ ஸ்வதந்திரவாதிகளின் சங்கத்தார்கள் யுத்தம் முடிந்தவுடன் தங்களுக்குப் பார்லிமெண்டில் ஸ்தானங்கள் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பெரு முயற்சிகள் செய்து வருகின்றனர்.

**Value Of Children.**

குழந்தைகளின் உபயோகம்:—இந்த யுத்தத்தினால் இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் குழந்தைகளின் உபயோகத்தை நன்கறிந்து தங்கள்தேசத்திலுள்ள திக்கற்ற ஏழைக் குழந்தைகளுக்கு அநேக ஆகார விடுதிச்சாலைகள் ஆங்காங்கு ஸ்தாபித்து வருகிறார்கள். மேலும், ஏழைத்தாய்மார்களையும் கவனிக்கவும் சில சங்கங்கள் முயற்சி செய்துவருகின்றன.

---

# INSTRUCTIVE HINTS
# விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN
## குழந்தைகள் விஷயம்

**Feeding Infants**

குழந்தைகளுக்கு ஆஹாரம் கொடுத்தல்:—நாம் சிலகுழந்தைகள் கிண்ணியைத் தூக்கிப் பால்குடிக்க யத்தனப் படுவதைப் பார்த்திருக்கிறோம் அல்லவா? கிண்ணியைத் தூக்கத் தொடங்கும்பொழுது, கிண்ணி தவறி விழுந்து பாலும் கொட்டிப்போம்; கிண்ணியைச் சற்றுத் தூக்கினவுடன் பால்வயிற்றின்மேல்கொட்டிப்போம். சிலஸமயத்தில் முகத்திலும் கண்களிலும் கொட்டுவது உண்டு. இன்னும் சில ஸமயங்களில் பால் பொரை ஏறி குழந்தைகள் மூச்சுவிடமுடியாமல் திக்குமுக்காடுவது முண்டு. ஆகவே, தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும்போது பக்கத்திலிருந்து பால்கொடுக்கவேண்டும். குழந்தைகள் வளர்க்கும் விஷயத்தில் கொஞ்சமேனும் அஜாக்கிரதை கூடாது.

**Some mannerless Parents.**

மரியாதையில்லாத சில பெற்றோர்கள்:—குடும்பங்களில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் எதிரில் அஸங்கியமாகப் பேசுவதும், துர்பாஷையால் திட்டுவதும், கோபக்குறிகளினால் முகத்தைச் சுளுக்குவதும் ஒரு பழக்கமாக வைத்துக்கொண்டிருக்கின்றனர். நாம் எப்படியெல்லாம் குழந்தைகளின் எதிரில் செய்கிறோமோ அப்படியே அக்குழந்தைகள் பெரியவர்களானவுடன் தாங்கள் பெற்றோர்களிடத்தில் கற்றுக்கொண்டவைகளை வெளிப்படுத்துகின்றன. பிறகு, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடைய நடத்தைகளைக் கண்டு வருத்தப்படுவதிற் பிரயோஜனமில்லை. விதை யொன்று போட சுரை யொன்று முளைக்காதல்லவா? என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

**Children's Mischiefs**

குழந்தைகளின் சேஷ்டைகள்:—ஈயைப் பிடித்து நசுக்குவதும் எறும்பை மிதித்துக்கொல்லுவதும் பாவம். சில பிள்ளைகள் வெட்டுக்கிளிகளைப் பிடித்துச் சிறகுகளை ஒடிக்கிறார்கள். சிலர் நத்தைகளைப் பிடித்து ஓட்டை உடைத்து வதைக்கிறார்கள். சிலர் குருவிகளைப் பிடித்துக் கொல்லுகிறார்கள். இவை எல்லாம் பாவம். மனிதனைத் தவிர மற்றப் பிராணிகளெல்லாம் ஊமை என்று சொல்லப்படுகிறது. ஆகையால், வாயில்லாப் பிராணிகளை இம்சிப்பதால் கடவுளுக்குக் கோபம் பிறக்கும்.

**Making Children to Walk**

குழந்தைகளை நடப்பித்தல்:—இளங் குழந்தைகள் நடக்கப் பழகுவதை நாம் பல முறை பார்த்திருக்கிறோம். எழுந்து நின்றதும், சில குழந்தைகள் கீழேவிழுகின்றன; ஒரு அடி வைத்ததும் விழுவது உண்டு. இரண்டு மூன்றடி வைத்ததும் விழுவதுண்டு; சிறிது தூரம் நடந்து விழுவதும் உண்டு. இதை எத்தனையோமுறை கண்டிருக்கிறோம். குழந்தைகள் நடக்கப்பழகும்போது தாய்மார்கள் பக்கத்திலிருந்து அவர்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

# 11

# DOMESTIC HINTS AND SUGGESTIONS

## கிருஹத்தியக் குறிப்புகள்

**Betel chewing.**

வெற்றிலை போடல்:—தினந்தோறும் காலை மாலை இரண்டுவேளையும் வெற்றிலை போட்டுக் கொள்ளுதல் உடம்புக்கு ஆரோக்யமும் ஸுகமும் கொடுக்கத்தக்கது. முதலில் வாயின் துர்க்கந்தம் வெற்றிலை போட்டுக் கொள்ளுதலினால் நீங்கக்கூடும். கிராம்பு ஜாதிக்காய் ஏலக்காய் சேர்ந்த பாக்குகளுடன் சுண்ணாம்பிட்ட வெற்றிலை போட்டுக்கொண்டால், உட்கொண்ட அமித போஜனமாயினும் சுகமாய் ஜீரணிக்க ஏதுவாகும். இது வாய்த் துர்க்கந்தத்தைப் போக்கி ஜீரண காரியாயிருப்பது பற்றியே குணவான்களாகிய பெரியோரும் பஞ்ச பஞ்ச உஷத் காலத்திலும் தாம்பூலம் கொள்வர். கொட்டைப் பாக்கைச் சீவி பாக்குடன் கலந்து கொள்ளுதலே மிகுதியும் சிறந்ததாகும்.

சந்தனம் பூசிக் கொள்ளுதல்:—சந்தனம பூசிக் கொள்ளுதல், வெற்றிலைப் போட்டுக் கொள்ளுதல் எவ்வளவு அவசியமானதோ அவ்வளவு அவசியமானதுதான். விருந்துண்டின பிறகு இச்சந்தனம் பூசிக்கொள்வது மிகுதியும் நலமானது. உடம்பின் மேல் பூசப்படுவதனாலேயே இச்சந்தனம் ஜீரணகாரியாகின்றது. பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, பனிநீர் கலந்த மைசூர் கட்டையிலிருந்துண்டான சந்தனம் வெற்றிலைப் பாக்குக்கு சிநேகனென்றே இச்சந்தனத்தைச் சொல்லலாம். சந்தனம் விலையுயர்ந்த வஸ்துவானதால் எப்போதும் இதனை மகாராஜாக்களே உபயோகிப்பர்.

கருஞ்செம்பைப் பூ:—கருஞ்செம்பைப் பூவை எண்ணெயில் காய்ச்சித் ஸூர்யோதயத்திற்கு முன்னால் பதமாக வெந்நீரில் இரண்டொரு முறை ஸ்நானம் பண்ணினால் உஷ்ணத்தினாலுண்டாகும் தலைவலி இருந்த இடம் தெரியாமல் பறந்து போம். இது ஓர் கைகண்ட ஔஷதம்.

கஞ்சாங் கோரை:—இஃதோர் மருந்துப் பூண்டு. இது காட்டுக் கஞ்சாங்கோரை யென்றும் சிறு கஞ்சாங் கோரை யென்றும் இருவகைப்படும். கஞ்சாங்கோரைச்செடி துளசிச்செடி போல் வளரக்கூடியது. இலை 2 அங்குல நீளமுள்ளது. ருசியும் மணமுமுடையது. அதன் சாற்றைக் குழந்தைகளுக்கு ஜுரத்துக்கும் ஜலதோஷத்துக்கும் கொடுப்பதுண்டு. தேயிலை அகப்படாத இடங்களில் அதற்குப் பிரதியாக இதன் இலையை ஐரோப்பியர் உபயோகிக்கிறார்கள்.

கடல் தேங்காய்:—இது மலே தீவிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுகின்றது. அஃது ஒரு புறம் கவிந்ததாகவும் மற்றொரு பக்கம் தட்டையாகவும் இருக்கிறது. இதன் இரண்டு மூடிகளும் நீண்டிருக்கின்றன. ஓடு கறுப்பு நிறமாக இருக்கும். தேங்காயைப் போலவே உள்ளே பருப்பும் இருக்கிறது. இதனை மூலைப்பாலில் அஸ்திஜுரம் பித்தஜுரம், எலும்புருக்கி ஜுரம், கிரந்திநோய், லிங்கபுற்று, சொறி, கரப்பான் இவைகளுக்குக் கொடுப்பது வழக்கம். இதன் ஓட்டைத் திருவோடு என்று பெயரிட்டு ஆண்டிகள் உபயோகப் படுத்துகிறார்கள். சந்நியாசிகள் அதன் முழுக்காயைக் குடைந்து குடமாக உபயோகப் படுத்துகிறார்கள். இதன் பருப்பின் உபயோகம் தெரிந்தவர்கள் மேற்கூறிய வண்ணம் உபயோகப் படுத்துகிறார்கள்.

THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்திர ஸஹிதமான ஒரு தமிழ் மாதப்பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

| Vol. 6. தொகுதி 6. | நள ௵ பங்குனி ௴ March 1917 | No. 6. பகுதி. 6. |
|---|---|---|


## கடவுள் வணக்கம்.

உலகத்தையும் உலகத்தில் வாழும் உயிர்களையும் படைத்துக் காத்து அருள் செய்பவர் கடவுள். ஆன்மாக்களாகிய நாம் இவ்வுலக வாழ்க்கையில் செய்யவேண்டிய புண்ணியங்களைச் செய்யாமலும், செய்யத்தகாத பாவங்களைச் செய்தும் பாவிகளாகி, அப்பாவங்களுக்குத் தக்கபடி இவ்வுலகத்திற் பிறந்து வருந்தி உழல்கின்றோம். கடவுள் நம்முடைய அறியாமையை நீக்கிப் பாவகர்மங்களைப் போக்கிப் பரிசுத்தமாக ஜீவிக்கும்பொருட்டே நம்மை உலகத்திற் படைக்கின்றார். உலகத்தில் நாம் வாழுங்காலத்து இன்பமுந் துன்பமும் நம்மை வந்தடைகின்றன. இந்தப் பிறவியிலே நாம் வாழும் நாளிலே இடையில் வரும் இன்பதுன்பங்களைத் தருபவர் கடவுளே. முன் செய்த புண்ணியத்தின் பயனாக இன்பத்தைத் தருகிறார்; பாவத்தின் பயனாகத் துன்பத்தைத் தருகிறார். நாம் மாத்திரமல்ல; மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், தண்ணீரில் வாழும் பிராணிகள், மரம், செடி, புல், பூண்டு முதலானவைகள் ஆகிய உயிருள்ளவை யெல்லாம் வினைப்பயனை அநுபவிக்கும்பொருட்டுப் பிறந்தனவேயாம். இந்த உலகத்தில் மாத்திரமல்ல; மேலேயுள்ள சுவர்க்கம் முதலியவற்றிலும், நம்மைப்போன்ற உயிர்கள் பிறந்து வினைப் பயனை அநுபவிக்கின்றார்கள். நாமும் இந்த உடம்பு நீங்கிய பின்பு மிருகம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பவைகளிலாவது, சுவர்க்க நரகங்களிலாவது சென்று பிறக்க நேரும். அப்படிப் பிறப்பதற்குக் காரணம் நம்மாற் செய்யப்பட்ட நல்வினை தீவினைகளேயாம். கடவுள் இப்பொழுது நாம் செய்துள்ள புண்ணிய பாவங்களை அறிந்து அதற்குத் தக்கபடி மறுமையிலே முன் சொன்ன பிற

விகளில் ஒன்றை நமக்குத் தருகின்றார். இவற்றுள், புண்ணியம் இன்பத்துக்கும், பாவம் துன்பத்துக்கும் காரணமாயிருத்தலால், கடவுள் நம்மைப் புண்ணியஞ்செய்யும்படி விதித்தும், பாவஞ்செய்யலாகாதென்று விலக்கியுமிருக்கிறார். நாம் நம்முடைய அறியாமையினாலே கடவுளாலே விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்யாமற் கைவிட்டும், விலக்கப்பட்ட பாவங்களை விரும்பிச் செய்தும் அவருடைய அதிருப்திக்குப் பாத்திரமாகிறோம்.

ஆதலால், நாம் எப்பொழுதும் கடவுளுடைய கட்டளைக்கு அடங்கி பாவங்களைச் செய்யாமல் புண்ணியங்களையே செய்தல் வேண்டும். அல்லாமலும், நாம் எப்பொழுதும் கடவுளையே வழிபட்டு வருதல் வேண்டும். முக்கியமாக இந்த மனித ஜன்மம் கடவுளை வழிபடும் பொருட்டாகவே தரப்பட்டது. கடவுளை நாம் வழிபட்டு வருவோமானால் அவருடைய அருளினாலே நம்மைப் பீடித்த அறியாமை நீங்கிவிடும். அதனால் வினைப்பகுதிக்கு நாம் உட்பட மாட்டோம். அப்பொழுது பிறவித்துயரும் நம்மை வந்தடைய மாட்டாது. ஆதலால், கடவுளை வழிபட வேண்டியதே நமது முக்கியமான கடமையாம். இந்தச் சரீரத்திலுள்ள அவயவங்களெல்லாம் அவருடைய வணக்கத்துக்காகவே தரப்பட்டன. தலை அவரை தாழ்ந்து வணங்குதற்கும், கண், அவருடைய திருமேனியைத் தரிசிப்பதற்கும், செவி, அவருடைய புகழைக் கேட்பதற்கும், கை அவரைப் பூசித்துக்குவித்துத் தொழுதற்கும், கால் அவருடைய கோவிலை வலம் வருவதற்கும் உரியனவாயிருக்கின்றன. மனம் எப்பொழுதும் அவரைத் தியானித்தற்குரியது. இப்படியாக எல்லா அவயவங்களும் அவருடைய வணக்கத்தின் பொருட்டே தரப்பட்டிருக்கின்றன.

நாம் இந்த உண்மையை அறியாமல் நமது உடம்பையும் இதிலுள்ள அவயவங்களையும் வீணான பாவச் செய்கைகளுக்கு இடமாக்கி, மறுமையிலே துன்ப அநுபவத்திற்கு ஆளாகிறோம். இப்படிச் செய்யாமல் கடவுளை எப்பொழுதும் வழிபட்டு வருவோமானால், அவர் நம்மேல் இரங்கி இந்த ஜன்மத்திலேயே நமக்கு அருள் புரிவார். அவருடைய அருள் கிடைக்குமானால் இனி ஒரு காலத்தும் பிறவியும், அதனால் வரும் துன்பமும் நம்மை வந்தடையா. கடவுள் இந்தப் பிறவியை நீக்கி எப்பொழுதும் தமது திருவடியில் இருத்தி நித்தியமான ஆனந்தத்தைத் தந்தருளுவார். அவருடைய நித்தியானந்த வாழ்வைப் பெறுதலே நாம் அடையவேண்டிய முக்கிய பிரயோஜனமாம். மானுடப்பிறவி மிக அருமையானது. இந்தப் பிறவி நீங்கிவிட்டால் இது போன்ற பிறவி வாய்ப்பது அரிதாகும். ஆதலால், இது இருக்கும்பொழுதே கடவுளை வழிபட்டு அவருடைய அருளைப்பெற்று நித்தியானந்த முத்தியை அடைய முயலுதல் நமது கடமையாகயிருக்கிறது. ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

# PROGRESS OF THE WORLD
## பிரபஞ்சப்போக்கு

**Lady Chelmsford and Indian Ladis**

லேடி செம்ஸ் போர்டும் இந்திய ஸ்த்ரீகளும் :—கல்கத்தாவிலுள்ள பிரம்ம சிக்ஷாலயம் என்ற ஒரு பெண்பாடசாலையிருக்கிறது. அதன் வருஷாந்தக் கொண்டாட்டம் இம்மாதம் 8-ந்தேதி நடந்தது. மேன்மை தங்கிய லேடி செம்ஸ்போர்டு அக்கிராஸனம் வகித்துப் பரிசுகளை வழங்கினார். அச்சமயம், அவர் இந்திய ஸ்த்ரீகளிடம் தமக்கு அன்பும் அபிமானமும் இருக்கிறதாகத் தெரிவித்தார். இந்திய ஸ்த்ரீகள் முன்னடைவதற்குள்ள பல வழிகளில் தாம் விசேஷக் கருத்து வைத்திருப்பதாகவும் தெரிவித்துப் பேசினார். மேலும், அவர் அங்கு கூடியிருந்த ஸ்த்ரீகளை சுகாதாரம் குழந்தைகளை வளர்த்தல் ஸம்பந்தமான புஸ்தகங்களைப் படிக்கும்படி தூண்டினார். இந்திய ஸ்த்ரீகளின் நிலைமையை அறிந்து லேடி செம்ஸ் போர்டு அவர்களிடம் வைத்திருக்கும் அன்பையையும் அக்கரையையும் நாம் மதிக்கிறோம். அவர் அவர்களுக்குத் தகுந்த புத்தி சொன்னதானது மிகவும் பொருத்தமானதாகும். இந்திய ஸ்த்ரீகள் சுகாதாரம் குழந்தைகள் வளர்த்தல் ஸம்பந்தமான அநேக புஸ்தங்களைப் படித்து அவைகளின்படி அனுஷ்டித்துவந்தால் பிரஸவகாலத்தில் ஸ்த்ரீகள் மரணங்களும் குழந்தை மரணங்களும் குறையுமென்பது நிச்சயம். மேலும், ஸ்த்ரீகள் திடசரீரிகளாகவும் வாழமுடியும்.

**Viceroy on Women Education.**

ஸ்த்ரீகளின் கல்வியைப்பற்றி வைஸராய் அவர்கள் பேசியது:—சென்ற ஜனவரியீ இந்தியாவிலுள்ள வித்தியாதிகாரிகளின் கான்பரன்ஸ் ஒன்று டில்லிமாநகரில் நடந்தது. அப்போது எல்லா மாகாணங்களிலுள்ள வித்தியாதிகாரிகள் விஜயம் செய்திருந்தனர். ராஜப் பிரதிநிதி அவர்கள் முதல்நாள் கான்பரன்ஸுக்கு அக்கிராஸனம் வகித்தார். அப்போது ஸ்த்ரீகளின் கல்வியைப்பற்றி அவர் அபிப்பிராயம் கொடுத்தது சிலாகிக்கக் கூடியதாகும். அது பின் வருமாறு.

"ஸ்த்ரீகளுக்குள் கல்வியை விருத்தி செய்ய வேண்டியதைப் பற்றியும் நீங்கள் கவனிக்கப் போகிறீர்கள். இத்தேசத்தில், ஆண்

கள் கல்விபெற்று வருவதற்குத் தகுந்தவாறு பெண்கள் படிப்பிக்கப்பட்டு வராததைக் குறித்து எனக்கு ஒருவித அச்சம் ஜனிக்கின்றது. புருஷர்களின் கல்வியபிவிருத்திக் கேற்றவாறு ஸ்த்ரீகளும் கல்வியறிவு பெற்று வராவிட்டால் தேசத்தில் கல்வியினால் எவ்வித நலமும் உண்டாகமாட்டாது. இது உண்மை யென்பதை அநேக இந்தியர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே, இவ்விஷயத்தில் நம்மால் கூடியதை நாம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம். நம்முடைய முயற்சியில் படித்த இந்தியர்கள் கூட்டுறவு காட்டுவார்களென்று நான் நம்புகிறேன். அதோடு இவ்விஷயத்தில் ஸ்த்ரீகளின் கூட்டுறவும் நமக்கு வேண்டும். அவர்களே தங்களுக்குள்ள தேவைகளைத்தெரிந்து சொல்லக் கூடியவர்கள். ஆண்கள் மாத்திரம் எவ்வளவு யோசனை செய்து ஒரு ஏற்பாட்டைச் செய்தாலும் ஸ்த்ரீகளின் அபிப்பிராயமும் அதனில் கலந்திருந்தாலன்றி அந்த ஏற்பாடு ஈடேற மாட்டாது ''

**Compulsory Education.**

கட்டாயப்படிப்பு.—மலாய்த் தீவுகளில் பிராக் என்பது ஒரு சமஸ்தானம். இதை ஆளுகிறவர் மஹம்மதிய சுல்தான். இவர் பிரிட்டிஷ் ஆதீனத்துக்குட்பட்டிருக்கிறவர். இவர் தமது சமஸ்தானத்தில் ஆண்களும் பெண்களும் 7-வது வயது முதல் 14-வயது வரையில் கட்டாயப்படிப்புப் படிக்கவேண்டுமென்றும் அப்படிப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பத் தவறினால் அவர்கள் அபராதம் விதிக்கப்படுவார்களென்றும் உத்திரவு விட்டிருக்கின்றனர். நமது பிரிட்டிஷ் அரசாட்சிக்கு உட்பட்ட அநேக சமஸ்தானங்கள் தங்கள் நாடுகளில் பிரைமெரிப் படிப்பை இலவசமாகவும் கட்டாயமாகவும் ஏற்படுத்தி நடத்தி வருகின்றனர். நமது கவர்ன்மெண்டார் எப்பொழுதுதான் பிரைமெரிப் படிப்பை கட்டாயமாகவும் இலவசமாகவும் செய்வார்களோ? இப்போதிருக்கிற கல்விநிலைமையில் நமது சென்னை மாகாணத்திலுள்ள ஜனங்கள் பிரைமெரி படிப்பு மட்டும் படிக்க இனி 80 வருஷங்கள் பிடிக்குமென்று ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது. ஒரு தேசத்தில் எவ்வளவுக் கவ்வளவு பிரைமெரிப் படிப்புப் பரவி விருத்தியாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அத்தேசம் நாகரீகமடைந்த தேசமென்றும் ஸுபிக்ஷமுள்ள தேசமென்றும் பெரியோர்களால் கருதப்படும்.

---

# SPECIAL ARTICLES
# விசேஷ வியாஸங்கள்

## ON KNOWLEDGE

By

**Swami Vallinayakam**

## விவேக விசாரங்கள்

மாயை என்னும் பைசாசம் தனது நிஜவடிவைக் காட்டாமல் மோகத்தைத் தருகின்ற விஷயங்கள் என்னும் நானாவித சொரூபங்களைத் தாங்கி நிற்க, அறிவில்லாத மாந்தர் தமது இச்சை என்னும் கரத்தால் அவற்றைப்பற்றி அநுபவிக்கப் பார்க்கின்றனர். அப்பொழுது மாயையோ, தனது துக்கம் என்னும் வாயில் அவரைப்போட்டுக் கொள்கின்றது. இந்த யதார்த்தத்தை உணர்ந்த அறிஞர்கள் மாயா தோற்றங்களாகின்ற விஷயங்களைக் காணுந்தோறும் விவேகமென்னும் மாரண மந்திரத்தைப் பிரயோகிக்கிறார்கள். அதனால் மாயையானது தான் எடுத்த பல விஷயங்களுடன் அக்னியினால் தகிக்கப்பட்ட வஸ்திரம் போன்று ஆகி விடுகின்றது.

ஜன்மம் என்னும் சாகரத்தில் சுழிக்கின்ற இச்சை என்னும் சுழியில் அகப்பட்ட மனிதர், நிராசை என்னும் தெப்பம் ஏறி, சத்குருவென்னும் தீபஸ்தம்பத்தினின்று ஞானம் என்னும் ஒளியால் மோக்ஷமென்னும் கரையை அடைகிறார்கள்.

குழந்தை ஹிதம் செய்யினும் அஹிதம் செய்யினும் தாய் அதனிடத்தில் மாறாத அன்புடையவளாக இருக்கிறாள். அவளுக்கு அதனிடத்துள்ள அன்பு சுபாவமாகவும் யாதொரு பிரயோஜனத்தையும் கருதியில்லாமலும் இருக்கின்றது. அது போன்று, கடவுளிடத்திலும், அவர் தோற்றமாக விளங்குகிற சகல ஜீவர்களிடத்திலும் பக்தர்கள் செலுத்தும் அன்பானது பிரதிப் பிரயோஜனத்தை நோக்கி உண்டாகாததும் சுபாவமாகவே எழுகின்றதும், ஒருபொழுதும் மாறாததுமாகவே இருக்கிறது. பூமியானது தன்னைச் சுற்றியுள்ள ஆகாயத்தில் வர நேரும் கல் முதலிய கனத்த பொருள்களைத் தன் ஆகர்ஷண சக்தியாலிழுத்துத் தன்னுடன் சேர்த்துக்கொள்கின்றது. ஆனால், தனக்குச் சமீபமாக ஆகாயத்தில் பறக்கும் நுண்ணிய அணுக்களை அங்ஙனம் செய்வதில்லை. அது போலவே, ஞானிகளும் விவேகத்தால் கனமுடையவர்களைத் தம் சக்தியால் கவர்ந்து,

தம்மோடு சேர்த்துக்கொள்கின்றனர். ஆனால், விவேகமில்லாத பதர்கள் எவ்வளவு சமீபத்திலிருப்பினும் அவர்களை லக்ஷியம் செய்கிறார்களில்லை.

தென்னைமரத்தில் ஓர்வித வண்டு புகுந்து கொள்கிறதுண்டு. அவ்வண்டு மட்டையிலுள்ள குருத்துக்களை அரித்துக் கெடுத்துப் போடுவதினால் மரத்தினுடைய வளர்ச்சி தடைபட்டு, அது காய்ப்பதும் கெட்டு விடுகின்றது. ஆனால், அவ்வண்டை எடுக்கத் தெரிந்தவர்களைக் கொண்டு எடுத்துவிட்டால், மரம் முன் போல வளர ஆரம்பித்து, சீக்கிரத்தில் பலனைக் கொடுக்கும். அது போலவே, மனிதர்களுடைய மண்டையில் அகங்காரமானது புகுந்து, அவர்களுடைய விவேகத்தை அரித்து விடுகின்றது. அது, சாந்தம் அடக்கம் முதலிய நற்குணங்களைத் தின்று, மனிதர்களுடைய ஆத்மார்த்த வளர்ச்சியைத் தடுத்து, மோக்ஷ பலத்தையும் கெடுத்து விடுகின்றது. ஆனால், அவ்வகங்காரத்தை எடுக்கத் தெரிந்தவர்களாகிய ஞானிகளைக் கொண்டு அதை எடுத்து விட்டால் அவர்களின் ஆத்மார்த்த வளர்ச்சி ஓங்கி மோக்ஷ பலம் எளிதில் கிடைக்கும் பூமியின் பல பாகங்களிலிருந்து எண்ணிறந்த நதிகள் சமுத்திரத்தில் வந்து சேர்கின்றன. அவைகள் மூலமாய் எவ்வளவோ ஜலம் நிமிஷம் தோறும் சமுத்திரத்தில் சேர்ந்தபோதிலும் சமுத்திரம் தன் கரையை மீறாமல் எப்பொழுதும் போல் இருக்கின்றது. ஏனெனில், மேகத்தின் மூலமாய்ப் பரோபகார நிமித்தம் வரவுக்குத் தக்கபடியுள்ள ஜலம் செலவாகின்றது. அங்ஙனம் செலவில்லையாயின், சமுத்திர ஜலமுழுவதும் கரையை உடைத்து வெளியில் செல்லுமென்பதில் சந்தேகமில்லை. அது போன்று, பல வழியாலும் ஊதியத்தைப் பெறுபவர்கள் பொது நன்மையைக் கொடுக்கும் வழிகளில் வரவுக்குத் தக்கபடி செலவு செய்வது உசிதமாகும். அவ்விதம் செலவு செய்யாமல் லோபத்தினால் பணத்தை இறுகப்பிடித்து வைத்திருப்பின், முழுமுதலும் வெளியே நழுவுமென்பது அனுபவம்.

பேராசை என்னும் மாது "யாரை அடைவோம்" ஒன்று இவ்வுலகத்தில் சஞ்சரித்து வருகின்றாள். அவளை யாரேனும் விரும்பிச்சேரின் தரித்திரம் என்னும் மகவை உடனே ஈன்று விடுகிறாள். அவளை இன்னாரென்று அறியாமல் அவளோடு சேர்ந்து கெட்டவர்கள் அநேகருண்டு. பலாப்பழமானது புறமெல்லாம் முட்களையுடையதாய் நெருங்குபவர்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பது போன்று



தோன்றுகின்றது. ஆனால், அதினிடத்துள்ள சுளைகள் நாவிற்கு மதுரத்தைக்கொடுத்து மனதைக் களிக்கச் செய்கின்றன அல்லவா? அதுபோலவே, சிலர் தோற்றத்தில் துன்பத்தையும் பயத்தையும் உண்டுபண்ணுபவர் போன்றிருப்பினும் அந்தரங்கத்தில் சாந்தமுடையவர்களாய்த் தம்மை அடுத்து வருபவர்களின் செவிக்கு இன்பம் உதவி, மனதிற்கு ஆனந்தம் விளைவிக்கின்றனர். சத்சாஸ்திரங்கள் என்னும் பாற்கடலில், விவேகம் என்னும் மந்தர மலையை நட்டு, ஆராய்ச்சி என்னும் வடம் கொண்டு கடைந்தால், முதலில் சந்தேகம், விபரீதம் என்னும் விஷம் எழும். அதனைத் தெளிதல் என்னும் அரன் உணவாக உட்கொண்டபின், கடைந்தெடுக்கப்படும் மெய்ஞ்ஞானம் என்னும் அமிர்தம் சத்குருவென்னும் பகவானால் பகிர்ந்து கொடுக்கப்படும். பக்குவர்கள் என்னும் தேவர்கள் ஆசை என்னும் பசிதாகங்கள் நீங்கி, அஞ்ஞானம் என்னும் மிருத்தியுவை ஜயித்து, சிதம்பரம் [சிதாகாயம்] என்னும் பொன்னகரில் வசிப்பார்கள்.

வெள்ளை, சிவப்பு, நீலம் முதலிய பல நிறங்களையுடைய கண்ணாடிகளால் செய்யப்பெற்ற அறையொன்றில் புகுந்த ஓர் நாய், சுற்றிலுமுள்ள கண்ணாடிகளில் பல நிறத்தனவாயுள்ள அநேக நாய்கள் பிரதிபிம்பித்துத் தோன்றுவதைக் கண்டு, எங்ஙனம் முறுமுறுத்துக் குரைக்கின்றதோ, அங்ஙனமே பலவேறுபாடுகளையுடைய முக்குணங்களால் ஏற்படுத்தப்பெற்ற இந்தஜகத்திலிருக்கிற மனிதரில் அநேகர், தம்மைச் சூழ்ந்துள்ள ஜீவர்கள் யாவரும் ஓரே (தமது) ஆத்மாவின் பிரதி பிம்பங்கள் என்றுணராமல் அவர்களோடு சீறித் துவேஷிக்கிறார்கள். பல இலைகளை உடைத்தாயிருக்கும் மரமானது காற்றடிக்கும்பொழுது மிகவும் அசைகின்றது. ஆனால், கிளைகளெல்லாம் கோடரியால் தறிக்கப்பட்டுப்போய்த் தனித்திருக்கிறபொழுது சலனமின்றி நிற்கின்றது. அதுபோன்று, பெண், பிள்ளை, பந்து, மித்திரர் முதலிய சகல விஷயங்களிலும் ஆசைவைத்து, அவைகளைத் தாங்கித் தாங்கி நிற்கும் மனிதர்கள் மாயை என்னும் காற்றினால் மோதப்பட்டு, ஸதா சலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவ்விஷயங்களோடுள்ள பற்றுக்கள் எல்லாம் வைராக்கியத்தினால் சேதிக்கப்பட்ட காலத்தில் நிச்சலமாய்த் தனித்து நிற்கிறார்கள்.

ஓர் கூத்தாடியானவன் நெடிய கம்பத்தினுச்சியில் நின்றுகொண்டு அநேக விநோதமான வித்தைகளைக் காட்டுகிறான். அப்பொழுது

அவனுடைய சாதுரியத்தைக்கண்டு அநேகர் மெச்சுகிறார்கள். ஆயினும், அவன் கம்பத்தின் உச்சியில் நிற்கும் வரை அவனுக்கு வெகுமதியாகின்ற பலன் கிடைக்கிறதில்லை. அதுபோலவே அகங்காரத்தை அடக்கி அதனுச்சியில் நின்றுகொண்டு வேண்டியவாறு ஞானப்பிரசங்கம்செய்யும் ஒருவனைப் பலபேர் மெச்சினும், அவன் அகங்காரத்தின் முகட்டில் நிற்கும்வரை அவனுக்கு மோக்ஷபலன் கிடைக்கிறதில்லை.

ஒருவன் துக்கத்தினால் கண்ணீர் பெருக்கி நிற்கிறான். மற்றொருவன் ஆனந்தத்தினால் கண்ணீர் பெருக்கி நிற்கிறான். அவ்விருவரையும் பார்க்கின், விவேகமில்லாதவன் ஒருவன் புறத்தோற்றத்தையே ஆதாரமாகக் கொண்டு, அவர்களுடைய உள்நிலையைக் குறியாது, இருவரும் துக்கத்தினால் கரைகிறதாகவே கொள்கின்றான். அதுபோலவே உலக விஷயங்களை விரும்பி, பற்பல கர்மங்கள் செய்பவர்களையும், தமக்கு யாதொன்றிலும் இச்சையின்றிப் பரோபகார நிமித்தம் பற்பல கார்யங்கள் செய்பவர்களையும் காணும் அவிவேகிகள் அவ்விருவர்களுடைய மனோபாவனையின் பேதத்தை உணராமல் புறத்தோற்றத்தை வைத்தே இருவரையும் ஒரே தன்மையாகக் கிரகிக்கின்றனர்.

நடுக்காட்டில் தானியம் சிதறிக் கிடப்பதைக் கண்டு, ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளில் சில தமக்கு வரும் கெடுதியை அறியாமல் அதைப் பொறுக்கித் தின்னலாம் எனக் கருதிச் சென்று, வலையில் விழுந்து வேடன் கைவசப்பட்டு நாசம் அடைகின்றன. ஆனால், புத்தியுள்ள சில பக்ஷிகள் தானியம் கிடப்பது வலையில் என்று அறிந்து, அதை நெருங்காமல் விலகிப் பறந்து போய் விடுகின்றன. அதுபோன்று, சூது, மதுபானம், பிராணிவதை இவைகளிருக்கும் இடங்களில் உலகத்திலுள்ள மனிதர் சிலர் தமக்கேதோ பிரயோஜனம் அடையலாம் எனக்கருதி, தமக்கு நேரும் கெடுதியைப் பாராமல் சென்று பாபத்திற்குள்ளாகி, கலியென்பவன் கைவசப்பட்டு நாசமடைகிறார்கள். ஆனால், விவேகிகள் அவைகள் இருக்கு மிடங்களில் சென்றால் பாபத்தில் படவேண்டி வருமென்றும் சமீபத்தில் கலியிருப்பானென்றும் உணர்ந்து, அவைகளை நெருங்காமல் தூரமாய்விலகி விடுகிறார்கள்.

சுவாமி வள்ளிநாயகம்.

## GROWTH OF CHILDREN.

## குழந்தைகளின் வளர்ச்சி

குழந்தைகளிடம் அன்பு முதலிய ஸத்குணங்கள் இயற்கையிலேயே அமைந்திருக்கின்றன. அவைகளைத் தக்க விதத்தில் ஓங்கி வளரும்படி செய்யவேண்டியது பெற்றோர்களுடைய கடமைகளாகும். அநேக பெற்றோர்களுக்கு பிள்ளைகளையும் பெண்களையும் சரிவரக் கவனித்து நல்ல வழியில் நடத்தத் தெரியாமையால், அவர்கள் பால்பத்திலேயே கெட்ட குணங்களை அடைந்து, பிற்காலத்தில் வாழ்க்கையில் கெட்டுப்போய் விடுகிறார்கள்.

சிறுவர்களுக்குத் தனித்திருப்பதில் ஸந்தோஷமே இராது. அவர்களுக்குக் கூட்டுறவில் அதிக பிரியம். தங்களுடைய வீட்டுச் சுபாசுபங்களில் தங்கள் கூட்டாளிகளும் பங்கு பெறவேண்டுமென்பது அவர்கள் வாஞ்சை. அவர்களுக்கு ஒரு கார்யம் ஸந்தோஷத்தைக் கொடுக்கிறதானால், அது தங்கள் தாயாருக்கும் ஸந்தோஷமாயிருக்குமென்று நினைப்பார்கள். ஆகையால், எந்த ஸந்தோஷம் வந்தாலும், விசனம் வந்தாலும், தாயாரிடம் சொல்ல ஓடுவது அவர்களது இயல்பு. அவ்விஷயங்கள் தாயாருக்கு மிக அற்பமானவைகளாயிருந்தாலும், பிள்ளைகளுக்கு அவை மகா விசேஷமானவையாகத் தோன்றும். ஆகையால், பிள்ளைகள் தங்களண்டை ஓடிவந்து சொல்லும் விஷயங்களைப்பற்றித் தாய்மார் அலட்சியமாயிருக்கக் கூடாது. அப்படிச் செய்வது பிள்ளைகளை விசனப்படுத்தும். தாயார் பிள்ளைகளின் விஷயத்தில அநுதாபப்படுவது பிள்ளைகளுக்கு நிரம்ப மதிப்பாயிருக்கும். அவர்களைத் தைரியப்படுத்தும்படி ஒரு வார்த்தை சொன்னால், அல்லது ஏற்ற ஸமயத்தில் அவர்களைச் சற்று மெச்சிப் பேசினால், அவர்களுக்கு வெகு உத்ஸாகமுண்டாகும். அன்று முழுவதுங்கூட அவர்கள் அதனால் ஸந்தோஷமாயிருப்பார்கள்.

பிள்ளைகள் கூச்சல்போடுவதனாலும் அல்லது தங்களை அலட்டுவதனாலும் தாய்மார்கள் தொந்தரவு பொறுக்கக்கூடாமல் பிள்ளைகளைத் துரத்தி அடிப்பது வழக்கம். அப்படிச் செய்யாமல், பிள்ளைகளின் சுறுசுறுப்பான கைகளும் மனமும் வேலை செய்து கொண்டிருக்கும்படி அவர்களுக்கு ஒரு லேசான வேலையை அல்லது விளையாட்டைத்

திட்டஞ் செய்யவேண்டும். பிள்ளைகளின் விஷயங்களில் நெருங்கி அவர்களுடைய வேலைகளிலும் விளையாட்டுகளிலும் கூட இருந்து அவர்களை நடத்தினால், பிள்ளைகளுக்குத் தாயின் பேரில் அதிகப் பற்றுதலும் நம்பிக்கையு முண்டாகும். தாயும் பிள்ளைகளின் துர்ப் பழக்கங்களைத் திருத்தி, அவர்களிடத்தில் ஸ்வயநயம் அல்லது கோபம் காணப்பட்டால் அதைத் தடுக்கலாம். தகுந்த ஸமயத்தில் தாயார் ஒரு எச்சரிப்பு வார்த்தை சொல்வது அல்லது கடிந்துகொள்வதானது மிகப்பிரயோஜன முள்ளதாயிருக்கும். தாய் தன் பொறுமையினாலும், பிள்ளைகளின் நடத்தையை அன்போடு கவனிப்பதனாலும், பிள்ளைகளின் மனதைச் சரியான பாதையில் நடத்தி அவர்களின் நற்குணங்களை அபிவ்ருத்தி செய்யலாம்.

எல்லாம் தங்கள் இஷ்டப்படி நடக்கவேண்டுமென்று பிள்ளைகள் விரும்புவார்கள். பெற்றோர் இதற்கு இடங்கொடாதபடி அவர்களை நடத்தவேண்டும். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உத்ஸாகப்படுத்தவும் ஸந்தோஷப்படுத்தவும் அதிகமான நேரத்தையும் கவனத்தையும் செலவிடுகிறார்கள். பிள்ளைகள் தங்களையே ஸந்தோஷப்படுத்திக்கொள்வதற்கும், தங்கள் ஸொந்த விவேகத்தையும் ஸாமர்த்தியத்தையும் அப்பியாஸிப்பதற்கும் பழக்கவேண்டும். இப்படிச் செய்தால் அவர்கள் தங்கள் ஸ்வல்ப ஸந்தோஷங்களில் மனரம்யமாயிருக்கக் கற்றுக்கொள்வார்கள். அவர்கள் தங்களுக்குண்டாகும் சிறு சோதனைகளையும் கஷ்டநஷ்டங்களையும் தைரியத்தோடு சகிக்க போதிக்கப்படவேண்டும். அல்ப ஸ்வல்ப நோய்களையும் துன்பங்களையும் அதிகமாய் கவனிக்காதபடி அவர்களைப் பழக்கவேண்டும். மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்படியான வழிவகைகளைத் தாய்மார் முதல் கற்றுக்கொண்டு, அவற்றைத் தங்கள் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

பெற்றோர் பிள்ளைகளை அசட்டைசெய்யக்கூடாது. தாய்மார்களுக்கு அநேக வேலைகளும் கவலைகளும் இருப்பதனால், தங்கள் சிறுவர்களைப் படிப்பிக்கவும், அவர்களைப் பக்ஷமாய் நடத்தி அவர்களுக்கு அநுதாபம் காட்டவும், தங்களுக்கு நேரமில்லை யென்று நினைக்கிறார்கள். பிள்ளைகள் தங்கள் ஸந்தோஷத்தையும், தோழமையையும், அநுதாபத்தையும் தங்கள் ஸொந்த வீட்டிலும், தங்கள் பெற்



றோரிடத்திலும் அடையக்கூடாவிட்டால், அவர்கள் வெளியிலே மற்றவர்களிடத்திலே அதை அடையத் தேடுவார்கள். அதனால் அநேகமாய் அவர்கள் மனதும் நடத்தையும் கெட்டுப்போகக்கூடும்.

அநேகம் தாய்மார்கள் தங்களுடைய யோசனைக் குறைவினால் தங்கள் பெண்களுக்குக் கொடுக்கவேண்டிய சில குற்றமில்லாத ஸந்தோஷ காரியங்களைக் கொடாதிருக்கிறார்கள். ஆனால், தங்களையும் தங்கள் பெண்களையும் வீணாய் அலங்கரிப்பதில் கவனமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீண் அலங்கரிப்புகள் செய்து பெண்களை வளர்ப்பது ஆசையையும் ஊதாரித்தனத்தையும் அதிகரிக்கச் செய்கிறதாயிருக்கிறது. சிறுவர்கள் வளர்ந்து ஸ்த்ரீ புருஷர்களாகும் காலத்தில், அவர்கள் வீண்டம்பமும் துர்நடத்தையு முள்ளவர்களாவது நிச்சயம்.

பிள்ளைகள் செய்யும் துஷ்டச் செய்கைகளைத் தடுப்பதில் தகப்பன் ஒருபோதும் அலக்ஷ்யமாயிருக்கக்கூடாது. சிலர் பக்ஷத்தினால் பிள்ளைகளுக்கு அதிக இளக்காரம் கொடுத்து, அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யும்படிப் பார்ப்பதில் கண்டிப்பாயிருக்கிறதில்லை. இது உண்மையான அன்பு அல்ல. தகப்பன் தன் வீட்டில் சுறுசுறுப்பு, நேர்மை, பொறுமை, தைரியம், உண்மை, பரோபகாரம் முதலிய நல்லொழுக்கங்களைப் பலப்படுத்தவேண்டும். பிள்ளைகளிடத்தில் என்னென்ன நற்குணங்களையும், நன்னடக்கைகளையும் காண விரும்புகிறோமோ, அவற்றை யெல்லாம் நாமே அப்பியாஸிப்பதனால் நம்மிடத்திலிருந்து அவைகள் வெளிப்படவேண்டும். "தகப்பன்மாரே, உங்கள் பிள்ளைகளை அதைர்யப்படுத்தாதேயுங்கள். உங்கள் அதிகாரம் பக்ஷத்தோடும், உங்கள் பக்ஷம் திடமனதோடும் சேர்ந்திருக்கவேண்டும். உங்களுக்கு ஒழிந்த நேரங்களில் ஒரு பாகத்தை உங்கள் பிள்ளைகளுக் கென்று செலவிடுங்கள். அவர்களோடு பழகுங்கள்; அவர்கள் வேலையிலும் விளையாட்டிலும் ஸம்பந்தப்பட்டு நெருங்கியிருங்கள்; அவர்களுடைய அன்பை விருத்திசெய்யுங்கள். இவ்விதமாய்ச் செய்தால் உங்களுடைய வீட்டில் அதிக நன்மை யுண்டாகும்.";—நிகழ்கால சத்தியம்.

A MOTHER'S ADVICE TO HER DAUGHTER

By

**Sri Bagirathi Ammal**

## ஒரு பெண்ணுக்கு அவள் தாயின் புத்திமதி

*கீழ் கையொப்பமிட்டிருக்கும் ஸ்ரீமதி பாகீரதி அம்மாள் அவர்கள் நமக்கு அனுப்பிய கடிதத்தையும் அவரது தாயார் அவருக்குப் போதித்தப் புத்திமதிகளையும் அப்படியே பிரசுரித்திருக்கிறோம். நம் ஸஹோதரிகள் இவைகளைக் கவனிப்பது அவசியமாகும்.*

அம்மா,

ஸாதாரணமாக தாய்மார்கள் தங்கள் பெண்கள் முதன் முதலில் புருஷன் வீடு போகு முன், அவர்களுக்குப் புருஷனிடத்திலும் அவன் வீட்டாரிடத்திலும் நடந்துகொள்ளவேண்டிய புத்திமதிகளைப் பலவாறாக எடுத்துரைப்பது வழக்கம். நான் ஐந்து வர்ஷங்களுக்கு முன் என் 14-வது வயதில் புருஷன் வீடு வந்தேன். அப்போது எனது தாயார் பல புத்திமதிகளைச் சொல்லி அதன்படி நடக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டாள். என் தாயார் சொன்ன புத்திமதிகளைக் கெட்டியாய் முடிந்துகொண்டு அதன்படி நடந்து வந்தேன். நாளடைவில் என் புருஷனுக்கும் என் மாமியார் மாமனார் முதலிய வீட்டாருக்கும் என்பேரில் அத்தியந்த அன்பும் அபிமானமும் உண்டாகியது. நான் இப்போது என் கணவனுடனும் அவர் பெற்றோருடனும் சௌக்கியமாக வாழ்ந்து வருகிறேன்.

நம் பெண்களின் குடும்ப தர்மத்தையும் ஸன்மார்க்கப் படிப்பையும் பரவச்செய்ய தென்னிந்தியாவில் உலவிவரும் தங்களது 'பெண்கல்வி'ப் பத்திரிகையை அநேகம் பெண்கள் வாசிப்பார்களென்று நம்புகிறேன். நான் புருஷன் வீட்டுக்கு முதன் முதலில் வந்தபொழுது என் தாயார் எனக்குப் போதித்த சிலபுத்திமதிகளை இக்கடிதத்தோடு சேர்த்து அனுப்பியிருக்கிறேன். அவைகளை ஸ்த்ரீகளின் அபிவிருத்திக்காக நடத்தப்படும் தங்களுடைய மேலான பத்திரிகையில் பிரசுரிக்கும்படி வேண்டுகிறேன். கீழ் வரும் புத்திமதிகளை அனுசரித்து பெண்கள் மாமியார் வீட்டில் நடந்து வந்தால் புருஷனது பிரியத்துக்கும் அவர் வீட்டாரது அபிமானத்துக்கும் பாத்திரமாவார்கள். இது என் அனுபவம்.



1. "புருஷனே தெய்வம், புருஷனே பூஷணம், புருஷனே ஆஸ்தி, அவனே ஸகலமும் என்பதாக நினைத்து அவனையே கொண்டாடு. 2 உன் புருஷனுக்கு உன்பேரில் கோபமுண்டாகும்படி நடந்து கொள்ளாதே. 3. உன் புருஷனுடைய மனோபாவத்தைத் தெரிந்து அதற்குத் தகுந்த மாதிரியாக நடந்துகொள். 4. உன் புருஷனுடைய நடவடிக்கைகள் மற்றவர்களைவிட நன்றாய் உனக்குத் தெரியுமாதலால் எந்த விதமாய் நடந்தால் அவனது கோபம் மாறுமோ அம்மாதிரி நடந்துகொள். 5. புருஷன் களைத்து வரும்போது அவனை உன்னுடைய சிரித்த முகத்தினால் உபசரித்து அவனது சிரமம் நீங்கிய பின்பு உனக்குக் கேட்கவேண்டியதைக்கேள். அப்படிக்கில்லாவிடில் அவனுக்கு உன்பேரில் கோபமும் அசூயையும் ஏற்படும். 6. புருஷன் அவனது சிநேகிதர்களிடத்திலோ அல்லது பந்துக்களிடத்திலோ பேசிக்கொண்டிருக்கும்போது நீ பின்புறமாக நின்றுகொண்டு அவர்கள் பேசுவதைக்கேளாதே. அல்லது, நீயோ அல்லது குழந்தைகளைக் கொண்டோ, அவனைக் கூப்பிடாதே. அச்சமயத்தில் குழந்தைகளை அழவிட்டு அவனிடத்திற்கு அனுப்பாதே. ஏனென்றால், குழந்தையின் சேஷ்டையினாலோ அல்லது குழந்தை அப்பா, அப்பா, என்று கூப்பிடுவதினாலோ, அவர்கள் சம்பாஷணைக்கு இடைஞ்சல் ஏற்படும். அப்போது குழந்தையின்பேரிலும் உன்பேரிலும் உன் புருஷனுக்கு கோபமுண்டாகக்கூடும். 7. புருஷன் ஏவும் பணிவிடைகளைச் சிரத்தையோடும் மனப்பூர்வமாயும் செய். அவனுக்குச் செய்ய நீ கடமைப்பட்டிருக்கிறாய். அவனே உனக்குத் தெய்வம். 8. புருஷன் வந்து உன்னைக்காணாமல் தேடும்படியாக நீ கதவைப் பூட்டிக்கொண்டு பக்கத்து வீட்டுக்குப் போகாதே. 9. புருஷனுடைய ஸகோதரர் ஸகோதரி ஆகிய இவர்கள் பேரில் பொய் வார்த்தைகளைச்சொல்லி அவனுக்குக் கசப்புண்டாகும்படி செய்து வைக்காதே. 10. குழந்தைகளை அடிப்பது, பாத்திரங்களைச் சத்தமாகும்படி வைப்பது, கீழே போடுவது, கடிந்துபேசுவது, இவைகளினால், நீ கோபமாய் இருக்கிறாயென்று உன் புருஷனுக்குக் காட்டிக்கொடுக்காதே. 11. உன் புருஷன் ஏதாவது காரியம் சொன்னால் அதைச்செய்வதற்கு முன்னாடியே எதற்காக, யார், ஏன், என்பதாகிய கேள்விகளைக் கேட்காதே. 12. உன் புருஷன் உன்னைச் செய்யக்கூடாதென்று சொல்லும் காரி

யங்களை மனதில் வைத்திருந்து அதைத் திருப்பவும் நீ செய்யாமல் பார்த்துக்கொள். 13. புருஷன் முன்னிலையில் யாரிடத்திலும் உரத்துப் பேசாதே. 14. புருஷனுக்குத் தெரியாமல் நீ வியாபாரம் செய்யாதே. இவைகளையும் இன்னும் இவைபோன்றவைகளையும் கவனித்து நடப்பாயானால் உன் புருஷன் நட்புக்குப் பாத்திரமாகி, ஸகலராலும் நீ கொண்டாடப்பட்டு, ஊரார் பெருமைக்கும் கடவுளின் பிரியத்துக்கும் பாத்திரமாவாய்.'' என்று சொன்ன புத்திமதிகள் இன்றைக்கும் என் மனதில் முதன்மையாக நிற்கின்றன.

கோயமுத்தூர்,<br>22-2-17. } பாகீரதி அம்மாள்.

---

## DOGS, PIGEON AND MONGOOSE IN THE WAR

By

**Sri Kalyani Ammal**

## யுத்தத்தில் நாய்களும், புறுக்களும், கீரிப்பிள்ளைகளும்

நாய் வீட்டுப்பிராணி. மிகவும் அறிவுடையது. அது நன்றாய் வாஸனை அறியக்கூடியது. தன் மோப்பத்தினால் எந்த எல்லா விஷயங்களையும் நன்றாயும் சுலபமாயும் அறிந்து கொள்ளக்கூடாது. நாயை வளர்த்தால் நல்ல வழிகாட்டும் பூனையை வளர்த்தால் பொட்டை வழிகாட்டுமென்பது பழமொழி. நாய்கள் நம்முடன் பழகிவிட்டதானால் அவை எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்தும் நம்மைக் காப்பாற்றும். யுத்த காலங்களில் நல்ல ஜாதி நாய்களை எல்லா தேசகவர்ன்மெண்டார்களும் வளர்ப்பதுண்டு. யுத்தத்துக்கு நாய்கள் உபயோகப் படுகின்றன போல் குதிரையைத் தவிர வேறு எந்தப் பிராணியும் அவ்வளவு உபயோகப்படுவதில்லை. இந்த யுத்தத்தில் நாய்கள் எங்கெந்த ஸமயங்களில் எப்படி உபயோகப்பட்டு வருகின்றனவென்பதைக் கவனிப்போம்.

போர்முனையில் தன்னை ஒரு நாய் காப்பாற்றியதைப்பற்றி, பிரஞ்சு ஸோல்ஜர் ஒருவன் எழுதியிருக்கும் கடிதம் பின்வருமாறு:-

"போர்க்களத்தே நாங்கள் இருந்த காலையில் ஒரு நாய் பசியால் வாடி என்னையடைந்தது. உடனே அதற்குச் சிறிதளவு ஆகாரமளித்தேன். அது முதல் அந்நாய் எக்காலத்தும் என்னுடன் உண்



டும் உறங்குவதும் போர்முனைக்கு உடன் செல்வதுமாயிருந்தது. கடுமையாகப் பீரங்கிப் பிரயோகம் நடக்கும்பொழுதும், அது என்னுடனேயே இருக்கும். ஒரு நாள் போர்க்களத்தின் ஒரு மூலையில் நான் இரண்டு கால்களிலும் குண்டுபட்டு விழுந்துவிட்டேன். நான் இரவில் போய்த் தங்கவேண்டிய அரண் 100 கஜ தூரத்திற் கப்பாலிருந்தது. அங்கு போனால், மிகவும் சௌகரியமாயிருக்கலாமென எனக்குத் தோன்ற, உடனே மெதுவாய்த்தவழ்ந்துசெல்ல முயன்றேன். ஆயினும் என்னால் முடியவில்லை, ரணத்தினால் எனக்குண்டான வலியோ சொல்லி முடியாது. ஆகவே, அந்நாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு ஜாடைசெய்தேன். உடனே அந்நாய் எனது குறிப்பை யுணர்ந்துகொண்டு, என்னை மெதுவாய் இழுத்துச் சென்றது. நான் சேரவேண்டிய இடம் சேர்ந்தேன். அன்றிரவு முழுவதும் அது என்னுடன் படுத்திருந்து எனக்குச் சூடுண்டு பண்ணியது. மறுநாட் காலையில் வைத்தியர் வந்து, என்னை சிகிச்சை செய்யத் தூக்கிச்சென்றனர்."

ருஷ்யப் போர்முகத்தில் காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு செல்ல சில ஜனங்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கட்சி வீரர்கள் காயமடைந்துவிட்டால் அவர்களிருக்குமிடம் தெரிவிக்கும் பொருட்டும் அவர்களைத் தூக்கிக்கொண்டு முகாம் அடித்திருக்கிற இடத்தில் கொண்டுவந்து சேர்க்கும் பொருட்டும் சில உயர்ந்த ஜாதி நாய்களை வளர்த்துவருகிறார்கள். ஒரு நாள் ஒரு யுத்தவீரன் காயமடைந்து கீழ் விழுந்துவிட்டான். அவன் உயிரை மாத்திரம் வைத்துக்கொண்டு துடித்துக் கிடந்தான். அவனது பக்கத்தில் நூற்றுக்கணக்கான வீரர்கள் இறந்துகிடந்தனர். அங்கு ஒரு நாய் அங்குமிங்கும் அலைந்து தேடித் திரிந்துகொண்டு காயமடைந்து படுத்துக்கிடக்கும் வீரனைப்பார்த்தது. அவன் பக்கத்தில் நின்றுகொண்டு அவன் தலையை நக்கிற்று. அந்த நாய் வைத்திய டிபார்ட்மெண்டைச் சேர்ந்ததென்று தெரிந்துகொண்டு "நீ போய் என் தோழர்களை அழைத்துவா" என்று அடையாளம் காட்டினான். அது உடன் புறப்பட்டுப்போய் தன் எஜமானர்களிடம் தெரிவித்து அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து இந்த வீரன் கிடக்குமிடத்தைக் காண்பித்தது. பிறகு, அவர்கள் இவனைத் தூக்கிக்கொண்டு போனார்கள். இந்த நாயின் அறிவுக்கும் சாதுர்யத்துக்கும் மெச்சி அதி

காரிகள் ஒருதங்கப்பதக்கம் செய்து அதன் கழுத்தில் கட்டினார்கள் என்று ஒரு ஆங்கிலப்பத்திரிகை கூறுகிறது.

இன்னும், இட்டாலியப் போர்முகத்தில் பல்லோனா என்னும் நாய் ஒன்றுள்ளது. அந்தநாய் ஒரு ஆகாயவிமானியுடையது. அவன் ஒருஸமயம் ஆகாயவிமானத்தில் ஏறிப்போகும்படி நேரிட்டது. அவன் அந்நாயைவிட்டு நீங்கும்போது அது மிகுந்த வருத்தமடைந்தது. எனினும், தன் யஜமானன் திரும்பிவருவான் என்று எண்ணிக் கொண்டிருந்தது. அந்த ஆகாயவிமானி சண்டைபோட்டு காயம்பட்டுக் கீழ்விழுந்துவிட்டான். இந்தஸமயத்தில் அந்தநாய் தான் இருந்த இடத்தைவிட்டு வேறுபக்கம்போகும்படியாயிற்று. எப்படியோ தன் யஜமான் கீழேவிழுந்து அடிப்பட்டு உயிர் துடித்துக்கொண்டிருக்கிற இடத்தை அறிந்து அங்குசென்றது. அவனிருக்கும் பரிதாபநிலையைப் பார்த்துவிட்டு இரண்டு மைலுக் கப்பாலுள்ள ஒரு வைத்திய ஆஸ்பத்ரியில் போய் கதறிற்று, அதை அறிந்த ஒரு டாக்டர் அதனுடன் வந்தான். ஒரு ஆகாயவிமானி காயம்பட்டு கிடப்பதைப் பார்த்தான். உடனே அவனைத் தூக்கிக்கொண்டு சென்றான். இது போன்ற நாய்களின் பராக்கிரமச் செயல்கள் இந்தயுத்தத்தில் கணக்கற்றவைகளா யிருக்கின்றன. இவைகள் இந்த யுத்தத்தில் காட்டும் சாமர்த்தியம் அதிசயிக்கத் தக்கதாயிருக்கிறது. நம்பழைய புராணக் கதைகளிலும் நாய்களின்சாமர்த்தியத்தைப் பலவாறாகக் கேட்டிருக்கிறோம். இப்போது அவைகளெல்லாம் உண்மையானவைகளா யிருக்கலாமென்று தெரிகின்றன.

புறாக்கள் :—நடக்காமல், சொல்லாமல் இருக்கிற சங்கதிதானகப் பிறந்து அந்த சங்கதியைப்போய், ஒருவனை ஒருவன் கேட்குமிடத்து இஃது காக்கையின் காலில் கட்டிவந்ததோ என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். இதனால் காக்கையின் காலிலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சீட்டுக் கட்டி அனுப்பும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால், அவ் விஷயம் உண்மையோ அல்லது பொய்யோ என்ற சந்தேகம் இருந்துவந்தது. அநேக கட்டுக்கதைகளிலும் நாசரித்திரம் போன்ற கதைகளிலும் புறாக்கள், கிளிகள், அன்ன பக்ஷிகள் முதலியன நாயகன் நாயகிமார்களைக் கடிதமூலமாயும் பேச்சு மூலமாயும் சேர்த்து வைத்ததாகத் தெரிகிறது.



ஜப்பானியர்களுக்கும் ருஷ்யர்களுக்கும் யுத்தம் நடந்தபொழுது புறாக்கள் மூலமாய் அநேக யுத்த ரகஸ்யங்களை ஜப்பானியர்கள் தெரிந்துகொண்டார்களாம். இப்போது யுத்தத்தில்கூட புறாக்கள் மூலமாய் அநேக ரகஸ்யங்களைத் தெரிந்து கொள்கிறார்களென்று தெரிகிறது. இதற்காக ஒவ்வொரு தேசத்தாரும் ஆயிரக் கணக்கானபுறாக்களை வளர்க்கிறார்களாம். அவஸரக்கடிதங்களை புறாக்கள் மூலமாய்க் கொண்டுபோகிறதற்கு இப்போது ஒரு புதியமுறை கண்டுபிடித் திருக்கிறார்களென்று ஒரு பத்திரிகை சொல்லுகிறது. கடிதத்தை இரண்டு அங்குல நீளமுள்ள ஒரு சிறிய வாத்துப்பேனாவில் அடக்கம் செய்து புறா இறக்கையில் சேர்க்கிறார்களாம். இந்த வாத்திறகின் இரண்டு நுனியையும் பழுக்கக் காய்ச்சின ஊசியினால் துவாரம் செய்து அதில் அரக்கிட்ட மெல்லிய பட்டுக்கயிறுகளைக் கோத்து அதனை புறாவின் வாலின் இறகில் வலிவான பாகத்தில் சேர்த்துக் கட்டுவதனால், அது பறக்கிறதற்கு இலகுவாயிருக்கிறதாம்.

கீரிப்பிள்ளைகள் :—கீரிப்பிள்ளைகள் பாம்பின் வைரிகள். கீரிப்பிள்ளை பிராமணனுக்குச் சமானமென்று வேதங்கள் கூறும். தர்மதேவதைகூட பல சமயங்களில் கீரியுருவமெடுத்துப் பலரைச் சோதிக்க வந்ததாக பாரத பாகவத, ஸ்காந்த புராணாதிகள் கூறும். கீரிப்பிள்ளைகள் நன்றியறிதலுள்ள பிராணி. அதற்கு நகுலம் என்று பெயர் பெறும். பஞ்சபாண்டவர்களில் ஒருவன் பெயர் நகுலன். அவன் குதிரையேறி நகுலம்போல் விரைவாய் ஓடுவதில் சாமர்த்தியவான்; ஆதலினாலேயே நகுலன் என்னும் புனைவு பெயர் பெற்றான் என்றும் கூறுவர்.

இத்தகைய நகுலம் ஒருவீட்டில் இருந்தால் அவ்வீட்டில் பாம்பணுகாது என்று சொல்லி, அதனை நம்மவர் பெரிதும் மதிப்பர். இப்படிப்பட்ட நகுலம், படையை நடுங்கச்செய்யும் பாம்பை ஸம்ஹாரம் செய்ய சக்தியுடையது. இவைகள் யுத்தமுகத்திற் இப்போது ஜாஸ்தியாகத் தேவையாயிருக்கின்றனவாம். யுத்தரங்கத்தில் இப்போது யுத்தம் நடத்திக்கொண்டிருக்கிற அரண்களில் எலிகளின் உபத்திரவம் பொறுக்க முடியவில்லை. வீரதீரங்களை யுத்தத்தில் காட்டிப் பிரக்கியாதி பெற்றவர்களைக்கூட இவ்வெலிகள் இரவுகளில் புகுந்து கலக்கி விடுகின்றனவாம். அவ்வெலிகளைக் கொல்

அவதை யுத்தேசித்து கிரிப்பிள்ளைகளைக் கொண்டு அவ்வரண்களில் விட ஏராளமான இந்திய தேசத்துக் கீரிகளைப் பிடித்து யுத்த முனைக்கு அனுப்புவதாகத் தீர்மானித்திருக்கிறார்களென்று தெரிகிறது.

கல்யாணி அம்மாள்.

---

## INDENTURE LABOUR
## ஒப்பந்தக்கூலி முறை

காலதேச வர்த்தமானத்தினால், ஏழை இந்தியர்கள் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்ட்ரேலியா, கனடா, பிஜி, கயானா முதலிய நாடுகளுக்கு வயிறு பிழைக்கக் கப்பலேறிப்போவது வழக்கமாயிருக்கிறது! அன்னிய தேசங்களுக்குக் கூலி வேலை செய்யப்போகிற நமது ஜனங்கள் ஒப்பந்த முறை, ஏதேச்சைமுறை என்ற இரண்டு ஏற்பாடுகளின்படி போகிறார்கள். அவ்விரண்டு முறைகளிலும் கஷ்டங்கள் அதிகமாயிருக்கின்றனவென்று சென்னை கவர்ன்மெண்ட நிர்வாக கவுன்ஸிலில் மெம்பராகிய ஸர். அலெக்ஸாண்டர் கார்டியுவும் இன்னுமனேக கவர்ன்மெண்ட் மெம்பர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

பூர்வத்தில் நம்முடைய முன்னோர்கள் ஈஜிப்ட் தேசத்துக்குச் சென்று அத்தேசம் நாகரீக மடையும்படி செய்தார்கள். யேசு கிறிஸ்து உபதேசம் பண்ணின நாடாகிய பலஸ்தீனுக்கு பௌத்த குருமார்கள் போய் அங்கு உபதேசம் செய்து ஜனங்களை நல் வழிப்படுத்தினார்கள். சீன தேசத்தையும் அப்படியே நம்மவர் நாகரீகப் படுத்தினர். ஆனால், இப்பொழுதோவென்றால், நம்மவர் தேசம் தேசமாய்க் கூலி வேலை செய்யப்போய் அங்கு அடிபட்டு, இடிபட்டு மானத்தை இழந்து வரும்படியாக யிருக்கிறது. கொடுமையான துர்அதிர்ஷ்டத்தினால் பிழைக்கப்போன இடத்திலும் கூட அவர்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். மேற்கண்ட அநேகநாடுகளில் பிஜித்தீவுக்குப் பிழைக்கப்போயிருக்கும் இந்திய ஸ்த்ரீபுருஷக் கூலிகள் எந்த மாதிரிக் கஷ்டங்களை அனுபவிக்கிறார்களென்று கவனிப்போம். நம் தேசத்திலிருந்து பிழைக்கப் போகும் ஏழை இந்தியக்கூலிகள் அங்குள்ள ஐரோப்பியத்தோட்டக்



காரர்களிடம் ஐந்து வருஷம் ஒப்பந்தத்தின் பேரில் வேலை செய்து தீரவேண்டும். இந்த ஒப்பந்த முறைக்கு நமது தேசத்தில் கூலியாட்களைச் சேர்க்கும் கங்காணிகளைப் பற்றி நாம் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

அவர்கள் எழுத்துவாஸனை அறியாதவர்கள்; மோசம்செய்ய அஞ்சார்கள். சமயத்துக்குத் தகுந்தாற்போல் வேஷம்பூண்டு யாத்ரிகர்கள் கூடும் புண்யஸ்தல க்ஷேத்ரங்களிலும் கும்பல் கூடும் அநேக ரயில்வே ஸ்டேஷன்களிலும் வந்து உதவி செய்பவர்போல் அபிநயித்து ஒன்று மறியாத் ஸ்த்ரீபுருஷர்களை ஏமாற்றி ஆள் சேர்க்கும் டெப்போக்களுக்கு அழைத்துப்போகிறவர்கள்; அவர்களை இழந்த பந்துக்கள் அவர்களைப்டெப்போக்களில் போய் பார்க்கவும் விடப்படுவதில்லை. இப்படி மோசடியாய்க்கொண்டு போகப் பட்டதற்காக கங்காணிகள் மீது வியாஜ்யம் செய்தாலும் அவை ஜயிப்பதில்லை. இக்கூலிகள் கப்பலில் கொண்டு போகப்படும்போது அவர்களுக்குச் சரியானபடி ஸாதாரண வசதியும் கொடுக்கப்படுவதில்லை. கப்பலில் ஸ்த்ரீகளுக்கென்று பிரத்தியேகமான இடம் அமைக்கப்படுவதில்லை யென்றுப் பலவாறாக ஆனரபில் மதன் மோஹன் மாளவ்யா சென்ற வருஷம் வைசராய் சட்ட சபையில் பேசினார். பிறகு, ஒப்பந்தக்கூலிகள் பிஜித்தீவில் படும் கஷ்டங்களைத் தெளிவாய் மனதுருகும்படி பேசினது கவனிக்கத்தக்கது. அங்கு ஒப்பந்த கூலிகளுக்கு கொடுக்கப்படும் வேலைகள் மிகவும் கடினமானது; அவர்களை அளவுக்கு மீறி வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துகிறார்கள்; அவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியோ மிகக் குறைவு; ஆனால், அங்கு வஸிக்கும் செலவுகள் வருமானத்துக்கு இரண்டு மடங்கு அதிகமாக இருக்கின்றன. அவர்கள் இஷ்டமில்லாத எஜமானர்களிடத்தில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஒரு அற்ப குற்றங்கள் செய்தால் கூலிகள் ஸ்த்ரீகளாயிருந்தாலும் கடுமையாகத் தண்டிக்கப் படுகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வார் யாருமில்லை. ஒரு ஸமயத்தில் ஒரு கூலிக்காரன் ஏதோ அற்ப குற்றத்திற்காக 692 நாள் ஜெயிலி லடைக்கப்பட்டானென்று தெரிகிறது. இது இப்படியிருக்க, ஸ்த்ரீகள் படும் கஷ்டங்களையெல்லாம் வாய் விட்டுச் சொல்ல முடியாததாயிருக்கிறதென்று சுருக்கமாகத் தெரிவித்தார்.

பிர்ம்ம தேஜஸ் பொருந்திய ஆன்ட்ரூஸ் என்னும் ஒரு ஐரோப்பிய கனவான் பிஜித் தீவுக்கு சென்று அங்கு ஸ்த்ரீ புருஷர்கள் படும் எண்ணிறந்த கஷ்டங்களை யெல்லாம் ஒரு ரிபோர்ட்டாக ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறார். அதில் ஸ்த்ரீகள் படும் துன்பங்களையும் மானக்கேடுகளையும் விரிவாக எடுத்துரைத்திருக்கிறார். மிஸ்டர் ஆன்ட்ரூஸ் வெளியிட்டிருக்கும் ரிபோர்ட்டைப் படிக்கிற ஸ்த்ரீ புருஷர்கள் கலங்கிக் கண்ணீர் வடிப்பார்களென்பதற்கு ஸந்தேகமில்லை. அங்கு ஸ்த்ரீகள் கற்பை இழந்து போகும்படி நேரிடுகிற ஸந்தர்ப்பங்களையும் அவர்கள் படும் மானக்கேடுகளையும் இங்கு எழுத மனம் கூசுகின்றது. நிற்க, இந்த ஒப்பந்தச் சட்டத்தைத் தொலைக்கும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ள சென்னையிலுள்ள கோகலே ஹாலில் பிப்ரவரிமீ 16-ந் தேதி ஒரு மீட்டிங் கூடிற்று. அப்போது கனம் ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார். அச்சமயம் பலபுருஷர்கள் பேசினார்கள். ஸ்த்ரீகளுள் கனம் ஜட்ஜ் ஸதாசிவ அய்யர் பார்யையும் ''பெண் கல்வி'ப் பத்திராதிபர் ஸஹோதரி தாயாரம்மாள் அவர்களும் இந்த ஒப்பந்தச் சட்டத்தை அடியோடு எடுத்து விடும்படி பேசினார்கள். அவ்விருவர்கள் பேசின ஸாராம்சத்தை மட்டும் இங்கு பிரசுரிக்கிறோம்.

### கனம் ஜட்ஜ் ஸதாசிவ அய்யர் மனைவியார் பேசியது

தீபாந்தரங்களுக்குப் போகும் கூலி ஜனங்களும், மேலும் அவர்களில் விசேஷமாக ஸ்த்ரீ ஜாதிகளும், படும் துக்கத்தையும் மானக்கேட்டையும் அறிந்து எனக்கு மனக்கொதிப்பு உண்டாகிறது. சாதாரணமாக ஒரு நாட்டை விட்டு வேறொரு நாட்டிற்கு ஜனங்கள் போய் சாசுவதமாகவோ அல்லது நீண்ட காலங்கள் வரைக்குமோ குடிப்போகும் விஷயத்தில் குடும்பசமேதமாய்க் குடியேறினால்தான் போகிறவர்களுக்கு ஆயுள், ஆரோக்கியம் உண்டாவதுமன்றி மானக்கேடுகளும் கஷ்ட நஷ்டங்களும் சம்பவிக்காமலிருக்கும். அப்படியின்றி, புருஷர்கள் தொகையே அதிகமானால் அநேகம் கெடுதல்கள் சம்பவிக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அவைகளிலும் முக்கியமான இரண்டொரு கெடுதிகள் சம்பவிக்கத் தடையில்லை.

முக்கியமாக ஸ்த்ரீ புருஷர்களுக்கு கற்பு அழிந்து விடுகிறது. ஜனசங்கியை குறைந்து விடுகிறது. தவிரவும் ஸ்த்ரீஹத்தி, சிசுஹத்தி



முதலான கொலைகளும் கோர ரூபமாய்க் கணக்கிடமுடியாமல் நேரிடுகின்றன. தாழ்ந்த வகுப்பு உயர்ந்த வகுப்பு என்பதாகப் பேதமின்றி சர்வ ஜனங்களுக்குள்ளும் ஒரே சட்டமாக இருக்கும் இப்புண்ணிய பூமியில் ஸ்த்ரீகளின் கற்பு நிலைமைக்குக்கூட கேடு நேர்ந்திருக்கின்றன. ஒருவரை மேலே ஏற்றுவது கஷ்டமேயல்லாமல் கீழே தள்ளுவது வெகு சுலபமல்லவா? இங்கிருந்து போகும் ஸ்த்ரீ புருஷக்கூலிகள் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளை முன்னமே யறிந்து பிறகு போவதாயிருந்தால் கூட நாம் இவ்வளவு துக்கப்பட வேண்டுவதில்லை. அநேகம் ஏழை ஸ்த்ரீ புருஷர்களை கங்காணிகள் மோசம் செய்து அழைத்துப் போய் தீபாந்தரங்களில் துரோகம் செய்வது நாமறிந்த விஷயம். நீதியும் தருமமும்பொருந்தின நம் ராஜாங்கத்தார் தங்களுடைய ஜனங்களான தோட்ட அதிகாரிகளுக்குப் பொருள் நஷ்டம் உண்டாகுமோ என்று அபிமானம் பாராட்டி இன்னும் ஐந்து வருஷம் வரையில் ஒப்பந்தக் கொடுமை இருக்கலாமென்று அபிப்பிராயப்படுவது அதிகசோகத்தையும் துக்கத்தையும் கொடுக்கிறது.

ராஜாங்கத்தாருக்கும் இதைவிட அகௌரவம் வேறுஇல்லை. இன்னும் ஐந்து வருஷம் என்று நினைக்க உடல் பதறுகிறது. ஐந்து வருஷமா! ஐந்து மாதம், ஐந்து நாள், ஐந்து நிமிஷம், ஐந்து துருடிகால அளவு கூட இந்த அடிமைக் கஷ்டம் சகிக்கமுடியாது. இது எப்படியிருக்கிறதென்றால், ஒருவன் உடுத்தின வஸ்திரத்தில் பற்றின தீயை அணைக்கப்போகும் சமயத்தில் ஐந்து நிமிஷம் அணைக்காதே; வீட்டிலிருந்து சுருட்டுக் கொண்டு வந்து பற்ற வைத்துக் கொள்ள வேண்டும் என்று உத்திரவு இடுவது போலிருக்கிறது. ஆகையால், சகோதரர்களே! நாமெல்லோரும் ஆண், பெண், ஜாதி, வர்ணம், தோட்டி, தொண்டைமான் என்கிற பேதங்களை விட்டு மற்றெல்லாப் பிரயத்தனங்களை இரண்டாவதாக நிறுத்தி இந்த பிஜித்தீவு கூலி அடிமைத்தனமென்னும் அவமானமான விலங்கை நம்முடைய பாரத மாதா தேவதையின் கைகளிலிருந்து முறித்தெறிவதையே முதல் வேலையாக நம்முடைய ஆவியைக்கூட தத்தம்செய்யு ஊக்கத்துடன் வேலைசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஸஹோதரி தாயாரம்மாள் பேசியது.

இந்திய ஸஹோதரி ஸஹோதரர்களே!

ஸ்த்ரீ புருஷர்களாகிய நாமெல்லோரும் இம்மண்டபத்தின் கீழ் எதற்காகக் கூடியிருக்கிறோமென்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஒப்பந்தக் கூலி முறையின் அளவு கடந்த தீமைகளை நீங்கள் உண்மையாக உணரவேண்டும். இந்த ஒப்பந்தக் கூலியின் முறைகளும் பிஜிபோன்ற தீவுகளில் ஸ்த்ரீ புருஷர்கள்படும் கஷ்டங்களும் அவமானங்களும் விபரமாக மிஸ்டர் ஆண்ட்ரூஸ் வெளியிட்டிருக்கிற ரிபோர்ட்டினால் தெரியவரும். இவைகளைப் படித்தவர்கள் மனம் கசியாமலிருக்க மாட்டார்கள். ஸஹோதரி ஸஹோதரர்களே! படித்தவர்களாகிய நாம் இவ்விஷயமாகச் செய்யவேண்டிய கடமைகளை உணர்ந்தீர்களா? ஜெகத் கர்த்தாவாகிய ஸர்வேசன் படிக்காதவர்களுடையவும், துன்பப்படுவோர்களுடையவும் அவமானப் படுவோர்களுடையவும் யோக க்ஷேமங்களை நம்மிடத்தில் ஒப்புவித்திருக்கிறார். நாம் அவர்களுடைய யோக க்ஷேமங்களை நமது கடமைகளில் ஒன்றாக மனதார ஏற்றுக்கொண்டு இவ்விடத்தில் கூடியிருக்கிறோம். நாம் அக்கடமைகளை ஸரிவரச் செய்யாமல் காலத்தை வீணாக்குவோமானால் கடவுளுடைய கோபத்துக்குப் பாத்திரர்களாவோம். வேத சாஸ்த்ர புராண இதிகாசங்கள் நம் ஸ்த்ரீகளைப் பரிசுத்த நிலையில் வைத்துப்பேசுகின்றன. மற்ற மதங்களும் அப்படியே சொல்லுகின்றனவென்று தெரிகிறது. அப்பேர்ப்பட்ட பரிசுத்த குணங்களையுடைய ஸ்த்ரீகள் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலுள்ள தோட்டக்காரர்களிடத்தில் எண்ணிறந்த அவமானங்களையும் கஷ்டங்களையும் அனுபவிப்பது தகுதியற்றதாகும். கவர்ன்மெண்டுக்கு அஸ்திவாரம் சன்மார்க்கமாயிருக்கிறது. இந்தியாவில் கணவனை இழந்த ஸ்த்ரீகள் சககமனம் செய்து வந்ததை நிறுத்தினவர்களும், உலகத்தில் அடிமை வியாபாரம் நடந்து வந்ததைத் தொலைத்தவர்களுமாகிய பிரிட்டிஷார் அடிமைத் தனத்துக்குச் சமமானதென்று சொல்லப்பட்டிருக்கிற இந்த ஒப்பந்தக்கூலி முறைக்கு இடம் கொடுத்துவந்திருப்பதும் இன்னும் சில காலம் அது வழக்கத்திலிருக்க காரணங்கள் சொல்லுவதும் விபரீதமாயிருக்கிறது. இனியேனும், கவர்ன்மெண்டார் தாமதம் செய்யாது இந்திய ஸ்த்ரீ புருஷர்களின் ஆத்மகௌரவத்தைக் காப்பாற்றுவார்களென்று நம்புகிறேன்.

# MORAL LITERATURE

## ஸன்மார்க்கக் கல்வி

### VAIN PRIDE OF LEARNING

By

**Sri Yembu Ammal**

### வித்யா கர்வம்கூடாது

"முற்று முணர்ந்தவரில்லை முழுவது உங்
கற்றனமென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந்தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தினால்."

பண்டைக்காலத்தில் உத்தாலகர் என்றொரு தபசி இருந்தார். இவர் தமது குமாரியை கஹோளன் என்னுமோர் அந்தணனுக்குக் கன்னிகாதானம் செய்துகொடுத்திருந்தார். மருமகன் மாமனாரது அஹத்திலேயே வித்தியார்த்தியாய்க் கலைகள் பயின்று வந்தான். தன்மனையாட்டி கருத்தரித்தனளென்றுணர்ந்த கஹோளன் செலவுக்குப் பணந்தேடிவர வெண்ணி ஜனகமஹாராஜரிடம் போனான். அங்கே வந்தி என்னுமொருபுலவன் கல்வியின் கர்வத்தால் மதங்கொண்டிருந்தனன். ராஜசபைக்கு வரும் வித்வான்கள் அனைவரையும் அவன் வாதித்துவென்று, அவர்களின் கைகளையும் கால்களையும் கட்டுவித்து அவர்களை மடுவில் ஆழ்த்துமாறு செய்வித்து வந்தான்; கஹோளனுக்கும் இதே கதிவாய்த்தது.

சில நாட்சென்றபின் கஹோளனது மனைவி அஷ்டாவக்ரன் எனுமோர் ஆண் சிசுவைப் பெற்றனள். தாதாவாகிய உத்தாலகரையே தனது தந்தையெனப்பாவித்து அக்குழந்தை பன்னிரண்டு ஆண்டளவும் வளர்ந்தது. ஒருநாள் உத்தாலகருடைய குமாரன் சுவேதகேது என்னும் இளைஞன் தன் தந்தையின் துடைமீது உட்கார்ந்திருக்க, அஷ்டாவக்ரன் தாதாவினிடத்து ஓடிவந்தான். அப்போது சுவேதகேது அஷ்டவக்ரனை நோக்கி,—"நீ இங்கு அணுகாதே. உன் தந்தை இவர் அல்லர்; அகன்று ஓடிப்போ" என்று வெருட்டி யடித்தான். அதைக் கேட்டு மனம் வருந்தி அஷ்டாவக்ரன் அழுதுகொண்டு தாயாரிடம் சென்று தன்பிதா எங்கேயென்று வினவ, அவள் தன் நாயகனுக்கு நேர்ந்த கதியையுரைத்தனள்.

இதைக் கேட்டறிந்து அஷ்டாவக்ரன் ஜனகமஹாராஜாது பட்டணத்திற்குப்போய், அந்த மஹாராஜன் வினவிய வினாக்களனைத்துக்கும் தக்கவிடைகள் அளித்து ஜயவீரனாய்ச் சபை நடுவில் வீற்றுத் தன் தந்தையைக் கொல்லுவித்த வந்தியை வாதத்திற்கு அழைத்தான். வந்தி என்பவன் அஹங்காரமிகுந்து, குரூபியான இந்தப்பையனோடு தனக்கு வாதமா என்று உதாஸீனமாய்த்திக்காரம் செய்து பேசினான். ஆயினும், அஷ்டாவக்ரன் விடாமல் பலவந்தப் படுத்தினமையால், வந்தி அவனுடன் உட்கார்ந்து வாதித்துக் கடைசியில் தோற்றுப்போயினான். அப்போது அரசரை நோக்கி அஷ்டாவக்ரன்,—"மஹாராஜரே! அநேக பண்டிதர்களை அவமானப் படுத்தி மடுவில் தள்ளுவித்த இந்த வந்தி என்னிடம் தோற்றுப்போய்விட்டான். ஆதலின், இவனைக்கட்டி மடுவில் தள்ளவேண்டும். இந்தப்பாபியானவன் தன்னிடம் வந்த பண்டிதர்களை வரையும் அவர்களுள் ஒருவரான என் தந்தையையும் தனது கல்விச்செருக்கினால் கொல்லுவித்திருக்கிறான். ஆகவே, இவனுக்குச் சிக்ஷை செய்வதனால் தோஷமில்லை" என்று எடுத்துரைத்தான். இவ்வுரையைச் செவியுற்ற வந்தி நயமும் பயமும் மேலிட்டவனாகி மிகுந்த வணக்கத்துடன் அந்தப் பையனுடைய மன்னிப்பைக்கேட்டு மன்றாடி நின்று இறந்துபோன இவன் தந்தையையும் மற்றவர்களையும் பிழைப்பிப்பதாக ஒப்புக்கொண்டான். உடனே, வருணபகவானைத் துதித்துப் பிரார்த்தித்து வந்தியானவன் தான் கொல்லுவித்திருந்த அந்தணர்களைப் பிழைப்பித்தான். அப்போது கல்விச்செருக்கு மிகக் கெட்டதென்று அஷ்டாவக்ரன் வாதிக்குப் போதித்து, தந்தையை அழைத்துக்கொண்டு ஸந்தோஷத்துடன் வெளிவந்தான். வித்தையினால் கர்வம் அமைந்தவருக்கு அவமானம் நேரிடாமலிராது.

வேம்பு அம்மாள்.

---

உலகத்தில் பல மதங்களும் பல பாஷைகளும் பல ஜாதிகளும் பல அபிப்ராயங்களுள்ளோர் மத்தியில்தான் ஒற்றுமை ஏற்படும். ஒரு தேசத்தில் எல்லாம் ஒன்றாயிருந்தால் சீக்கிரம் ஒற்றுமை ஏற்படுமென்று கருதுகிறவர்களுக்கு ஆழ்ந்தஞானம் போறாதென்று சொல்லவேண்டும்:—ஒரு தத்வஞானி

## A LESSON FOR WOMEN

By

**Sri Marakathavalli**

### ஸ்த்ரீகளுக்கு ஒரு பாடம்

கிருதயுகத்தில் உத்தான பாதன் எனும் ஒரு அரசன் செங்கோல்செலுத்தி வந்தான். அவனுக்கு ஸுமதி, ஸுருசியெனுமிரண்டு மனைவியர் இருந்தனர். மூத்தவளாகிய ஸுமதிக்குத் துருவன் எனுமொரு புத்திரன் இருந்தான். இளையவளாகிய ஸுருசிக்கும் ஒரு புதல்வனிருந்தான். அரசனுக்கு இளையவள்மீது அதிகமான பிரியமுண்டு. ஒருநாள் இளையவளது புத்திரனைத் துடையின்மீது வைத்துக்கொண்டு அரசன்சிம்மாசனத்திலமர்ந்திருந்தான். குழந்தையான துருவன் தந்தையைப்பார்த்து அவனண்டையோடித் தானும் அவன் துடைமீது உட்காரப்போனான். அப்போது அருகிலிருந்த ஸுருசியானவள் துருவனைநோக்கி, அசூயையினால், "என் மகனுடன்கூட உட்காருவதற்கு நீ யாவன்? அத்தகைய யோக்கியதை யுனக்கெங்கிருந்து வந்தது? நீ செய்திருக்கும் தவம் அம்மட்டிலேயே இருக்கின்றது. சீ! அப்புறம்போ" என்று கோபித்து அவனைத் தள்ளினாள். துருவன் அழுதுகொண்டு தன் தாயினிடம் போய் இந்தச் சங்கதியைச் சொன்னான். ஸுமதியும் இந்த விருத்தாந்தத்தைக் கேட்டு விசனப்பட்டாள். தாயாரைச் சமாதானப்படுத்தித் துருவன் கடவுளைக்குறித்துத் தவம்புரிந்து சிம்மாசனமேறும் யோக்கியதையைச் சம்பாதித்துக்கொண்டே வருவேனென்று சொல்லி காட்டுக்குப் போனான். அங்கு அவன் வெகுகாலம் ஸ்வாமியைக் குறித்துத் தவஞ்செய்யக் கடவுள் அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி, "அடா, குழந்தாய்! உனது பக்திக்கு மெச்சினேன்; உனக்குவேண்டிய வரத்தைக் கேட்பாயாக" என, துருவன் "ஸ்வாமீ! சிம்மாசனத்தின் மீது உட்காரும் யோக்கியதையை எனக்கு அளித்தருள வேண்டும்" மெனப் பிரார்த்தித்தனன். 'அங்ஙனமே ஆகுக" என்று அனுக்கிரகித்துக் கடவுள் மறைந்தார். இதற்குள்ளாக உத்தானபாதன் மிகுந்த பச்சாதாபத்தையடைந்து, 'ஐயோ! இளங்குழந்தையான துருவன் எங்கேயோபோய் விட்டானே? அவனைக் காட்டுக்கனுப்பி நான் இன்னும் எத்தனை நாள் உயிர்த்திருக்கவேண்டும்? என்னைப்போன்ற பாபி இவ்வுலகிலெங்குமில்லை." என்றுபிரலாபித்துக் கொண்டிருக்கையில்

வுளிடத்து வரம்பெற்றுத் துருவன் ஊருக்குத் திரும்பிவந்து தந்தையை நமஸ்கரித்து நின்றான். முதியோனான உத்தானபாதன் புத்திரனைக்கண்டு கட்டிக்கொண்டு ஸந்தோஷப்பட்டான்; அன்றியும், எல்லா விஷயங்களிலும் யோக்கியனாயிருந்த துருவனுக்கு உடனே பட்டாபிஷேகம் செய்வித்துத் தான் தவஞ்செய்யக் கருதிக் காட்டுக்குச்சென்றான். தான் செய்தது அவிவேகமென்று ஸுருசியானவள் அறிந்து வெட்கமுற்று, ஊரிலிருந்து கொண்டு எல்லாருக்குந் தன் முகத்தைக் காட்டமாட்டாதவளாய்க் கணவனுடன் காட்டுக்குப் போயினாள். அசூயை பென்பதைக் குடித்தன ஸ்திரீகள் ஞாபகத்திலிருந்து ஒழிக்கவேண்டியதாகும். அல்லது வயிற்றெரிச்சற் படுவோரது கதி இங்ஙனமேயாகும்.

மரகதவல்லி.

---

# WOMAN'S WORLD
# ஸ்த்ரீ பிரபஞ்சம்

## HOME NEWS.
## உள்நாட்டு வர்த்தமானம்.

**Education in Travancore.**

திருவாங்கூரில் பெண்களின் கல்வி:—இந்த ஸமஸ்தானத்தில் பிள்ளைகளின் கல்வி எவ்வளவு கவனிக்கப்பட்டு வருகின்றதோ அப்படியே பெண்களின் கல்வியும் கவனிக்கப் பட்டு வருகிறது. இதர ஸமஸ்தானங்களில் திருவாங்கூரில் பெண்களின் கல்வி விருத்தியடைந்திருக்கிறது போல் அவ்வளவு விருத்தி யடையவில்லை யென்று தெரிகிறது.

**School going girls.**

பாடசாலையில் படிக்கும் பெண்கள்:—ஸமீபத்தில் வெளிவந்திருக்கிற 1915-16ளுத்து கல்வி இலாகா ரிபோர்ட்டின்படி 16,500 பெண்கள் சென்னைமாகாணத்தில் பாடசாலைக்குப் போய்ப் படித்து வருகின்றனரென்று தெரிகிறது.



**Frahmani widows Home.**

பிராமண விதைவைகளின் ஆசிரமம்:—இந்த ஆசிரமத்தில் 1915-ளு 31 விதவைகள் இருந்ததாகத் தெரிகிறது. 1916-ளு 11 பேர்கள் புதிதாகச் சேர்ந்திருக்கிறார்கள். ஆக, இப்போது 42 விதவைகள் தங்கி வாசித்து வருகின்றனர்.

**Miss. K. Natarajan.**

மிஸ். கே. நடராஜன்:—கவர்ன்மென்ட் ஸ்த்ரீகள் காலேஜில் சரித்திர போதகரா யிருக்கும் மிஸ்டர் கே. நடராஜன் தமது வேலையை ராஜிநாமா கொடுக்கத் தீர்மானித்திருக்கிறாரென்று தெரிகிறது.

**Society for the Protection of Children.**

குழந்தைகள் சம்ரக்ஷணை சங்கம்:—இச்சங்கத்தின் 9-வது வருஷோத்ஸவம் இம்மார்ச்சுமீ 1-தேதி மாலை 6 மணிக்கு விக்டோரியா ஹாலில் ஆனரபில் மிஸ்டர் கில்மன் அக்ராஸனத்தின் கீழ் நடைபெறும்.

**Indians In Fiji.**

பிஜித்தீவுகளில் இந்தியர்கள்:—பிஜித்தீவுகளில் 40,385 இந்தியர்களிருக்கின்றனர். அவர்களுள் ஸ்த்ரீகளின்தொகை 14,213. ஆக அங்கு மூன்று புருஷர்களுக்கு ஒரு ஸ்த்ரீ இருக்கின்றனவென்று தெரிகிறது.

**Sarada Ladies Union.**

ஸாரதா ஐக்கிய ஸங்கம்:—மேற்கண்ட சங்கத்து ஆதரவின் கீழ் பிப்ரவரிமீ நடந்த மீட்டிங்கில் ஸஹோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள், 'ஆத்மகௌரவம்' என்பதைப்பற்றிப் பேசினார். டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் 'மனிதர்களின் மூளையும் அதன் வேலைகளும்' என்பதைப்பற்றி விஸ்தாரமாக உபந்யாஸம் செய்தார். ஸ்ரீமதி ஜயபாய் என்பவர் 'இந்திய ஸ்த்ரீகளின் தற்கால நிலைமை' என்ற விஷயமாகப் பேசினார்.

**Sri Bagavath Tatwa Bodini Saba.**

ஸ்ரீபகவத் தத்வபோதினி ஸபை:—மேற்கண்ட ஸபையின் ஆதரவின் கீழ் பிப்ரவரிமீ 23, 24, 25-ந் தேதிகளில் பாண்டவ ராஜஸூய கமனம், பாண்டவ விதயாப்பியாஸம், பாலலீலை முதலிய காலக்ஷேபங்

களைத் தகுந்த பின்வாத்தியங்களுடன் பிர்ம்மஸ்ரீ பண்டிட் டி. லக்ஷ்மணாசார்யார் அவர்கள் வெகு அருமையாகச் செய்தார். ஐந்தாவது வேதமாகிய ஸ்ரீமஹாபாரதத்தை சாங்கோபாங்கமாகக் கேட்கவிரும்புவோர் இச்சமயத்தைக் கைவிடாது ஸ்ரீஆசார்யரின் காலக்ஷேபங்களைக் கேட்டுப் பலனை யடைவார்களென்று நம்புகிறோம். ஸ்த்ரீபுருஷர்கள் இருபாலாரும் சதுர்வித புருஷார்த்தங்களை யடைய வேண்டியே ஸ்ரீபகவத் தத்வபோதினி ஸபையார் இக்கார்யத்தைச் சிரத்தையாய் நடத்திவருகிறார்களென்று அறிகிறோம். இம்மாதம் 9-ந்தேதி முதற்கொண்டு பிப்ரவரிமீ க் காலக்ஷேபங்களையும் சேர்த்து ஆறு காலக்ஷேபங்கள் சென்னை தியஸாஜிகல் ஸ்கூலில் நடைபெறுமென்று தெரிகிறது.

**Anti-indenture Labour Meeting.**

ஒப்பந்தக்கூலி முறைக் கண்டன மீட்டிங்:— பிப்ரவரிமீ 24ந்தேதி அலஹபாத் நகரில் படித்த உயர்குல ஹிந்து ஸ்த்ரீகளும், மஹம்மதிய ஸ்த்ரீகளும் சேர்ந்து இந்த ஒப்பந்தக்கூலி முறையைத் தொலைத்துவிடவேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ள ஒரு மீட்டிங்கூடினார்கள். அப்போது மிஸஸ் நேரு அவர்கள் அக்ராஸனம் வகித்தார்.

## FOREIGN NEWS
## வெளி நாட்டு வர்த்தமானம்.

**Women and The war work.**

யுத்தவேலையும் ஸ்த்ரீகளும் :—இங்கிலாந்து, ருஷ்யா, ப்ரான்ஸ் ஆகிய நம் நேச தேசங்களில் ஸ்த்ரீகளே யுத்தத்துக்கு வேண்டிய ஸகல ஸாமக்கிரியைகளும் சேர்த்து வருகின்றனர். ஸ்த்ரீகளின் உதவி இந்த மஹத்தான யுத்தத்தில் இல்லாமற் போனால் மிகவும் கஷ்டப்படும்படி நேரிடுமென்று பார்லிமெண்ட் மெம்பர் ஒருவர் சென்றமாதம் லண்டனில் பேசினார். மேலும், ஸ்த்ரீகளின் உதவியை இன்னும் எங்கெங்த வழிகளில் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறதற்கு ஒரு விசாரணைக்கமிட்டியும் ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்தார்.

**New Zealand women.**

நியு ஸீலாந்து ஸ்த்ரீகள்:—இம்மஹா யுத்த ஸம்பந்தமாக இத்தேச ஸ்த்ரீகள் செய்து வருகிற வேலையை ஒரு நாளும் மறக்க

முடியாதென்று இந்நாட்டுப் பிரதம மந்திரியாகிய மிஸ்டர் மாஸீ என்பவர் லண்டனிலுள்ள எக்ஸ்பிரஸ் பேபரில் தெரிவித்திருக்கிறார்.

**European Women's Place After The war**

யுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பிய ஸ்த்ரீகளின் ஸ்தானம்:—தற்போது நடக்கும் மஹாயுத்தம் முடிந்த பிறகு ஸ்த்ரீ ஸ்வதந்திர வாதிகள் தங்களுக்குப் பார்லிமெண்ட் ஸ்தானங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும் வோட்கொடுக்கும் பாத்தியத்தையும்சட்டமாகச் செய்யவேண்டுமென்றும் அந்தந்த தேச ஸ்த்ரீ ஸ்வதந்திரவாதிகள் பெருமுயற்சிகள் செய்து வருகிறார்கள். இதாலியிலும் சென்ற ஜனவரிமீ" க் கடைசியில் சில பிரபல ஸ்த்ரீ ஸ்வதந்திரவாதிகள் அத்தேசமந்திரியை இது விஷயமாகப் பேட்டி கண்டுகொண்டனர். அப்போது திருப்திகரமாக ஸ்த்ரீகளின் நிலைமையைக் கவனிக்கப் படுமென்று மந்திரி பதில் அளித்தாராம்.

**Women In France**

பிரான்ஸில் ஸ்த்ரீகள்:—சென்ற ஜனவரிமீ" 9ந் தேதி பாரிஸ் நகரத்திலுள்ள ஒரு ஸ்த்ரீ சங்கத்தில் அதன் கார்யதரிசி பின்வருமாறு பேசினாராம்.

ஸ்த்ரீகளே இந்த யுத்தத்தை முடிக்க வல்லவர்கள். அவர்கள் தான் நிலங்களைப் பயிர் செய்தும் யுத்த தளவாட ஸாமான்களைச் சேகரித்தும் வருகிறார்கள். இந்த யுத்தமானது அநேக கெடுதிகளை உண்டுபண்ணி வந்தாலும் ஸ்த்ரீகளை தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டிருக்கிறது. ஸ்த்ரீகளுடைய உண்மையான நிலைமையை வெளிப்படுத்தி இச்சமயம் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிப்பது அவசியமென்று வந்திருந்த ஸ்த்ரீகளை ஊக்கப்படுத்திப் பேசினாரென்று தெரிகிறது.

**Women Suffragist Society In Japan**

ஜப்பானில் ஸ்த்ரீ ஸ்வதந்திர வாதிகளின் சங்கம்:—மேனாட்டு நாகரிகக் காற்று ஜப்பானிலும் அடித்து அத்தேச ஸ்த்ரீகளும் புருஷர்களுக்குள்ள ஸ்வதந்திரங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஜப்பான் தலை நகரில் ஒரு சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். தங்கள் நோக்கங்களைப் பிரபலப்படுத்த ஒரு வாரப் பேபரும் போடுவதாகத் தீர்மானித் திருக்கிறார்கள்.

# INSTRUCTIVE HINTS
# விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN
## குழந்தைகள் விஷயம்

**குழந்தைகளுக்கு சிற்றாமணக் கெண்ணெய் கொடுத்தல் :—** நம் தாய்மார்கள் குழந்தைக்குப் பிறந்தது முதல் தினசரி இரண்டுவேளை ஆமணக்கெண்ணெய் கொடுத்து வருகிறார்கள். குழந்தைக்கு மல நிவிருத்தி ஆகாமற்போனால் ஆமணக்கெண்ணெய் கொடுக்கவேண்டும். அப்படிக்கில்லாது குழந்தை முதற்கொண்டு நாம் வழக்கப்படுத்தி வந்தோமானால் பின்னால் அவ்வழக்கம் ஏற்பட்டு விளக்கெண்ணெய் சாப்பிட்டால்தான் மலநிவிருத்திசரியாகப்போகும் என்கிற தன்மை ஏற்பட்டு விடும். என்றையதினம் மலம் நிவிருத்தி ஆகவில்லையோ அன்றைக்கோ அதன் மறு நாளோ விளக்கெண்ணெய் சாப்பிடுவது தான் உசிதம். குழந்தைகளின் தேகத்தை இயற்கைக்கு ஒத்து நாம் வளர்த்து வரவேண்டுமென்பதை தாய்மார்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டியதவசியமாகும்.

**தற்காலக் குழந்தைகளின் நிலைமை :—** மேனாட்டு நாகரீகத்தினாலோ அல்லது பெற்றோர்களின் அறிவின்மையாலோ இந்தியக்குழந்தைகள் மொத்தத்தில் தேகதிடமின்றி அநேக வியாதிகளுக்குட் பட்டு வருகிறதென்று ஒரு ஆங்கிலப்பத்திரிகை கூறுகிறது. பொதுவாக அதிக ஸொத்து இல்லாதபெற்றோர்கள் பிரபுக்களின் வீட்டுக்குழந்தைகளைப் பார்த்துவிட்டு தங்கள் குழந்தைகள் பேரிலுள்ள அன்பினால் கடன் வாங்கியாவது ஸகல சுகத்தையும் அவர்களுக்குக்காட்டி விடுகிறார்கள். இப்படிச் செய்வதினால் அவர்கள் பலஹீனமாய் வளர்ந்து தாங்கள் பெரியவர்களான பிறகு கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கத் திறமையில்லாதவர்களாய் வியாதியுடன் மனது வருந்தி கஷ்டப்படுகிறார்கள். ஆகையினால், இப்படிக் குழந்தைகளை வளர்ப்பதில் பிரயோஜனமில்லையென்று தெரிந்தும் சிறுவர்களை சரியான நெறியில் பழக்கி வைக்கத் தெரியாமலிருக்கிறதானது பரிதபிக்கத் தக்கதாகும்.

**குழந்தை பிறந்தவுடன் அது அழாமலிருந்தால் அப்போது நாம் செய்யவேண்டியதென்ன?—** குழந்தையை அதன் பாதம் முதல் கழுத்துவரையில் வெந்நீரில் வைத்திருந்து பார்க்கலாம். (2) அதன் மார்பிலும் முகத்திலும் குளிர்ந்த ஜலத்தை எடுத்துத் தடவிப்பார்க்கலாம் (3) இவ்விரண்டு உபாயங்களிலும் குழந்தை அழாத பக்ஷத்தில் அதன் வாய்க்குள் கைவிரலைவிட்டு வாயையும் தொண்டையையும் நன்றாய்த் தொடைக்க வேண்டும். மேலும், அதன் மூக்குத்துவாரங்களையும் நன்றாய்த் தொடைத்து அதற்குள்ளிருக்கிற அழுக்குகளையும் கோழைகளையும் எடுக்கவேண்டும். பிறகு, அதன் நாக்கை வெளியில் மெதுவாக இழுத்து 1-2-3 என்று எண்ணும் வரை பிடித்துகொண்டிருக்கவேண்டும். மறுபடியும் மூன்று எண்ணும் வரை நாக்கை உள்ளே இருக்கச் செய்து திரும்பவும் வெளியில் இழுக்கவேண்டும். இந்த மாதிரி கால்மணி நேரம் வரை செய்து பார்க்கலாம் என்று ஒரு வைத்தியப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

# II
# DOMESTIC HINTS AND SUGGESTIONS
## கிருஹத்தியக் குறிப்புகள்

**Health Hints.**

தேகாரோக்கியக் குறிப்புகள் :— நமக்குத் தேவையான வஸ்துக்களுக்குள் போஜன பதார்த்தங்கள் அதிக முக்கியமானவைகளானதனால் அவைகள் சுத்தமாயிருக்கவேண்டுமென்பதைப்பற்றி ஸ்மிருதிகளில் விதிகள் நிரம்ப ஏற்பட்டிருக்கின்றன.

பிணம் கிடக்கிற வீட்டிலும் அசௌசமுள்ள வீட்டிலும் சாப்பிடக்கூடாது. (இதற்குக் காரணம் என்னவென்றால், அப்படிப்பட்ட இடங்களில் தொத்து வியாதிகளுக்குக் காரணமான கிருமிகள் போஜன பதார்த்தங்களின் மூலமாய் மற்றவர்களுக்குப் பரவும் என்பதாம்) அசுத்தஜனங்களினால் தொடப்பட்ட போஜனம், மயிர், பூச்சி, எலிப் புழுக்கை முதலியவைகளினால் அசுத்தப்படுத்தப்பட்ட வஸ்துக்கள், பக்குவம் செய்து கடையில் விற்கப்பட்ட போஜன பதார்த்தங்கள், முந்திய தினத்தில் பக்குவம் செய்யப்பட்ட போஜனம் ஆகிய இவைகளையும் புசிக்கக்கூடாது. இதற்குக் காரணம் தெளிவாக இருக்கின்றது. ஒரு நாளைக்கு இரண்டு வேளை நியமித்தின்படி சாப்பிடவேண்டும். வயிறு நிரம்பச் சாப்பிடக்கூடாது. ஒவ்வொரு நாளும் குறித்த காலத்தில் சாப்பிடாவிட்டாலும் அதிகமாய்ச் சாப்பிட்டாலும் வயிற்றுச் சம்பந்தமான அநேக வியாதிகள் உண்டாகும்:—ஆபஸ்தம்பஸூத்திரம்.

**About Water**

தண்ணீரைப்பற்றி :—நம் ஜனங்கள் குடிக்கிறதற்கு ஏற்பட்டிருக்கும் ஏரிகளிலும் கிணறுகளிலும் ஆறுகளிலும் ஸ்நானம் செய்தும் துணிகளைத் தோய்த்தும் அசுத்தமாக்கி விடுகிறார்கள், அது பாபமாகும், சிலர் துவேஷத்தினால் குடிக்கிற ஜலத்தில் விஷத்தைக் கலந்து விடுகிறார்கள். இதைவிட பெரிய பாபமில்லையென்று சொல்லலாம். ராமர் காட்டுக்குப் போக பரதனும் உட்கையாக தாயாரோடிருந்து வேலை செய்தானென்று வதந்தி கிளம்பவே அப்போது பரதன் ஓடுகிற ஜலத்தைக் கெடுப்பதற்காக அதில் விஷத்தைப் போடுவது எவ்வளவு பாபமோ அவ்வளவு பாபம் ராமரைக்காட்டுக்கு அனுப்பச் சம்மதித்தவன் பேரில் இருக்கட்டுமென்றுசொன்னான். இதனால் குடிக்கிற ஜலத்தைக் கெடுப்பது மஹா பாபமென்று அந்தக்காலத்தில் கருதப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

**Smoking.**

சுருட்டுப் பிடித்தல்:—இது ஒரு பெரிய ஒட்டுவாரொட்டியான பழக்கம். இப்பழக்கம் ஒன்றுமறியாத நம் பாடசாலைச் சிறுவர்களுக்குள் பற்றி வருகிறது. சுருட்டு, பீடி, ஸிகரெட் போன்றவைகளைத் தமாஷாக பாடசாலைச்சிறுவர்கள் முதன் முதலில் பிடிக்க ஆரம்பிக்கிறார்கள். இதனால் சிறுவர்களின் தேகம் குன்றி, இளம் மூளை கலங்கி, முகம் விகாரமடையும். ஜீர்ணக் கருவியைக் கொஞ்சம் மந்தப்படுத்துகிறதென்று டாக்டர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். வீடுகளில் பெற்றோர்களும் பள்ளிக்கூடங்களில் பாடசாலை அதிகாரிகளும் இது விஷயத்தில் ஜாஸ்தி கவலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் "சுருட்டுப் பிடித்தலைத் தடுக்கும்" சங்கமொன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது. மேலும், இப்போது மைசூரில் 16-வயது வரையுள்ள சிறுவர்களுக்குச் சுருட்டு, பீடி, ஸிகரெட்டு முதலானதுகளை விற்கக்கூடாதென்று ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது; இது போன்ற நம் பிரிட்டிஷ் நாடுகளிலும் ஒரு சட்டம் ஏற்படுத்துவது அவசியமென்று கூறுகிறது.

III

# VIEWS AND REVIEWS.

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

**South Indian Music.**

**தாக்ஷிணாத்ய கானம்:**—இதை நம்பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். பக்த சிரோமணியும் ஸங்கீத ஸாஹித்ய வித்யா பாரங்கதருமான ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் அருளிச்செய்த கீர்த்தனங்களை ஸ்ரீமான் வி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார். பி. ஏ. அவர்கள் விசேஷார்த்தங்களுடன் பிரசுரித்து வருகிறார். இவரின் முக்கிய நோக்கம் ஜயதேவர், தீர்த்த நாராயணஸ்வாமி, புரந்தர விட்டலர், தியாகராஜ ஸ்வாமி, முத்துஸாமி தீக்ஷிதர், சாமாசாஸ்த்ரி, முதலிய ஸாஹித்ய நிபுணர்களின் கீர்த்தன ரூபமான உபதேசங்களை இந்தக் காலத்திலுள்ள அவரவர்களின் சிஷ்யபாரம்பரையின் ஸஹாயத்தால் வெளிப்படுத்துவதாகும் என்று அறிகிறோம். நம் ஹிந்து ஸங்கீதம் தெய்வீகமானதாகும். அதற்கு உயிருண்டு என்று கூட சொல்லவேண்டும். ஆத்மாவை ஆனந்தப் படுத்தி மோக்ஷ ஸாதனமாக ஏற்பட்டிருக்கிற நம் ஹிந்துஸங்கீதத்தைக் கேவலம் இந்திரியங்களைத் திருப்திபடுத்த உபயோகப்படுத்துவது பாபமாகும். தற்காலம், காலக்ஷேபங்கள் செய்யும் பாகவதர்களும் மற்றும் ஸங்கீதப் பிரியர்களும் தாங்கள் பாடும் கீர்த்தனங்களின் அர்த்தத்தை அறியாமல் அறிவிலிகளாய் கேவலம் இந்திரியங்களைத் திருப்திபடுத்தும் படியாகச் செய்து பாமர ஜனங்களை ஸந்தோஷப் படுத்துகிறார்கள். நம்முடைய தெய்வீகமான ஹிந்து ஸங்கீதத்தை விருத்திசெய்ய வெகு சிரமத்துடன் பணச்செலவைப் பாராமல் மேற்கண்டபுஸ்தகத்தை பிரசுரித்து வருகிறதானது மிகவும் மெச்சத்தக்கதாகும். இப்புஸ்தகம் மாதம் ஒன்றாக வெளிவந்துகொண்டிருக்கிறதென்று அறிகிறோம். இதுவரையில் 4 பாகங்கள் வெளிவந்திருக்கின்றன. ஒவ்வொரு பாகத்தின் விலை அணா 12. இதை ஸங்கீதப் பிரியர்களாகிய ஸ்த்ரீபுருஷர்கள் தங்கள் தங்கள் குடும்பங்களில் வாங்கிவைப்பது அவசியமாகும். வேண்டுவோர் சென்னை, அரண்மனைக் காரத்தெரு, 117 நம்பருள்ள இந்தியா பிரிண்டிங் அச்சாபீஸுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**Hints on Trade.**

**வர்த்தகயுக்தி:**—இவ்வருமையான புஸ்தகத்தை நம் பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். இதன் ஆசிரியர் ஸ்ரீமான் எம். ஏ. நெல்லையப்ப முதலியார் அவர்கள். இவர் வியாபாரத்தில் நல்ல அனுபவம் பெற்றவராதலால் தமது வியாபார அனுபவஞானத்துடன் இப்புஸ்தகத்தை வெகு அருமையாக எழுதியிருக்கிறார். தற்காலம் எல்லோருமே வியாபாரம் செய்து பணத்தை ஸம்பாதிக்கவேண்டுமென்று பிரியப்படுகின்றனர். அவர்கள் முதன் முதலில் வியாபாரத்தை ஆரம்பிக்கு முன் அதன் நிலைமை, நோக்கம், அதிலுள்ள லாப நஷ்டங்கள், அதை முன்னுக்குக் கொண்டு வருகிற வழிகள் முதலியவைகளடங்கிய இப்புஸ்தகத்தை வாசிப்பது அவசியமாகும். இதன் விலை அணா 4 இப்புஸ்தகம் வேண்டுவோர் சென்னை கதாரத்னாகரம் ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

LIBRARY ... MADRAS

THE
# FEMALE EDUCATION
AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்திர ஸஹிதமான ஒரு தமிழ் மாதப்பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Vol. 6. தொகுதி 6. { April 1917 பிங்கள ௵ சித்திரை ௴ } No. 7. பகுதி. 7.

ஓம்

ஓரஞ்சு பாணேன ஸமான ரூபம்
ஈரஞ்சு தேரஸ்ய ஸுதமேகதாரம்
மூவஞ்சு நேத்ரேண ஸமான ஸாரம்
நாலஞ்சு ஹஸ்தஸ்ய ரிபும் நமாமி.

இது மணிப்ரவாள விருத்தம். ஸமஸ்கிருதமும் தமிழுங் கலந்தது. இது ஸ்ரீராம ஸ்தோத்திரம். அரவிந்தம், அசோகம், சூதம், நவமல்லிகை, நீலோத்பலம் முதலிய ஐந்து பாணங்களையுடைய மன்மதன் போன்ற ரூபாகிருதியுடையவர் ஸ்ரீராமன் என்பது முதல் வரியின் அர்த்தம். ஈரஞ்சு 10 இரதங்களையுடைய அதாவது தசரதருடைய புத்திரனாகிய ஸ்ரீராமன் ஏகபத்னி விருதத்தையுடையவர் என்பது இரண்டாவது வரியின் தாத்பர்யம். ஸத்தியோஜாதம், அகோரம், தத்புருஷம், வாமதேவம், ஈசானம் என்ற பஞ்சமுகூர்த்தங்களையுடையவராகவே ஒவ்வொரு முகூர்த்தங்களுக்கு மும்மூன்று கண்களாகப் பதினைந்து கண்களையுடையவர் பரமேசுவரன். அவர் போன்ற வீரதீரம் பொருந்தியவர் ஸ்ரீராமன் என்பது மூன்றாவது வரியின் கருத்து. அப்படிப்பட்ட ஸ்ரீராமன் நாலைந்து அல்லது 20 கைகளையுடையவரான தசகண்டராவணனுக்குச் சத்துருவாக விளங்கும் ஸ்ரீராமனை நான் வணங்குகிறேன் என்று

ஒரு கவி கூறியிருக்கிறார். மன்மதனைப் போன்ற ரூபத்தையுடைய தசரத புத்திரனாகிய ஸ்ரீராமன் பரமேசுவரன் போன்ற பராக்கிரமம்கொண்டு இலங்கேசுவரனான இராவணனைச் சங்கரித்து உலகத்திற்கு இன்பம் கொடுத்தார். அப்படிப்பட்ட பகவான், சத்துருவாகிய ராவணனுக்குப் பயங்கரனாயினும், பக்தர்களிடத்தில் தமது கலியாண குணங்களைக் காட்டி ஈடுபடுகிறவர். ஆகவே, ஸ்ரீ சீதா ஸமேத ஸ்ரீராமனை ஸ்த்ரீ புருஷர்கள் யாவரும் இகலோக பாக்கியங்களையும் பரலோக பாக்கியங்களையும் யநுபவித்தற் பொருட்டு சதா அவரை ஸ்மரிக்கவேண்டும். பரம் பொருளைக் குறிக்கும் ஸ்ரீராம என்ற பதம் பஞ்சாக்ஷரத்திலிருந்தும் அஷ்டாக்ஷரத்திலிருந்தும் சேர்த்து இணைக்கப்பட்டது. ஸ்ரீராம நாமத்தை ஹநுமார், வால்மீகி பகவான் முதலியோர் அநுஷ்டித்து அவர்கள் பெற்றிருக்கும் பேற்றை நாம் நன்றாக அறிவோம். ஆதலின், ஸ்ரீராம நாமத்தை நன்றாக யாவரும் எப்போதும் பஜிக்கவேண்டும். நமக்கு அவசியம் ஜன்ம ஸாபல்யமுண்டாகும்.

---

# PROGRESS OF THE WORLD
## பிரபஞ்சப் போக்கு

**Responsibilities of Indian Mothers.**

இந்தியத் தாய்மார்களின் பொறுப்புகள்:—எக்காலத்திலும் உலகத்திலுள்ள அந்தந்த தேசத்து ஸ்த்ரீகளாலேயே ஒவ்வொரு தேசமும் நாகரீகமடைந்து உலகத்தார் கண்முன் பிரகாசித்து விளங்குகின்றது. இது சரித்திர உண்மை. தற்காலம் ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து ஜெர்மனி போன்ற பெரிய தேசங்களின் உயர்வுக்கும் பெருமைக்கும் அந்தந்த தேச ஸ்த்ரீகளே காரணமாயிருந்து வருகிறார்களென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். முற்காலம் நமது பாரத மாதாவாகிய இந்திய தேசம் பல துறைகளில் செழிப்படைந்து அந்ய நாட்டார்கள் பார்த்துப் பெருமூச்சு விடும்படி அவ்வளவு உயர்ந்த நிலைமையில் இருந்து வந்ததற்கு நம் இந்திய ஸஹோதரிகளே காரணமென்று வேத சாஸ்திர புராண இதிஹாஸங்கள்



சரித்திரங்கள் முறையிடுகின்றன. அப்படி எல்லாம் இருந்திருக்க தற்காலம் படித்த இந்திய ஸ்த்ரீகள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் உணராமல் காலத்தைக் வீணாகக் கழித்து வருவது அழகாயில்லை. ஒரு தேசமேம்பாட்டுக்கு ஸ்த்ரீகளே அஸ்திவாரமாயிருக்கிறதால் அவர்கள் ஜனங்களின் க்ஷேமத்தில் கவலை கொள்ளுவது மிகவும் உசிதம். இந்த விஷயத்தில் ஜனப்பிரதிநிதிகளும் கவர்ன்மெண்டாரும் சேர்ந்து தேச ஐக்கியத்துக்கும் முன்னேற்றத்துக்கும் உற்ற வழிகளில் ஸ்த்ரீகளுடைய உழைப்பைப் பெறுவது அவசியம்.

ஸ்த்ரீகளுடைய உழைப்பும் ஒத்தாசையும் தேசமுன்னேற்றத்திற்கு அவசியமெனக்கருதி ஜப்பான் கவர்ன்மெண்டார் தங்கள் தேசக் கல்வி விஷயமாக அனுசரித்து வருகிற முறையை 'ஜப்பான் டைம்ஸ்' பத்திரிகை பின் வருமாறு எழுதுகிறது. "ஜப்பானில் சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றும் பாரம் முழுவதும் எங்கள் தேசத் தாய்மார்களின் பொறுப்பாகவிருக்கிறது. கல்வி அறிவுள்ள தாய்மார்கள் சிறுவர்களுக்குக் கடவுளைப்பற்றியும், தேசாபிமானிகளைப்பற்றியும், வீரர்களைப் பற்றியும், மதாசார்யர்களைப் பற்றியும் பலபாடங்களைச் சிறுகதைகள் மூலமாகச் சொல்லிக்கொடுத்து வருவது வழக்கம். சிறுவர்களின் மூளைவலிமைக்குத் தகுந்தபடியே பாடங்கள் போதிக்கப்பட்டுவருகின்றன. சிறுவர்கள் விளையாடுவதில் ஜாஸ்திப் பிரியமுடையவர்களானதால் கல்வியும் விளையாட்டாகவேப் போதித்து வரப்படுகிறது. சில படித்த ஸ்த்ரீகள் சேர்ந்து "குழந்தைகளின் க்ஷேமாபிவிருத்தி சங்கம்" என்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். அதன் மூலமாக அவர்கள் ஜப்பானியக் குழந்தைகளை எந்தெந்த வழிகளில் பயிற்றுவிக்கலாமென்று கவர்ன்மெண்டாருக்கு யோசனை சொல்லி வருகிறார்கள்." இப்படிப் பல விதமாக ஜப்பானியத் தாய்மார்கள் தங்கள் தேசச்சிறுவர்களின் க்ஷேமத்தில் அக்கறை வைத்துப் பாடுபட்டு வருவது மிகவும் புகழுக்குரியது.

**Our Women's Work.**

நம் ஸ்த்ரீகளின் வேலை:—நம் தேசத்துப் படித்த ஸ்த்ரீகளை ஒரு காரியம் செய்யும்படி வேண்டுகிறோம். ஒவ்வொரு குடும்ப ஸ்த்ரீயும் தங்களுடைய ஆண் குழந்தைகளுக்கு ஸத்யம், தர்மம், ஜீவகாருண்யம், தைர்யம், நியாயம், விடாமுயற்சி, ஊக்கம் முதலிய குணங்களையுடைய சிறு கதைகளை லளிதமாக அவர்கள் சந்தோஷ

மாயிருந்து தங்கள் பக்கம் வரும்போது மனதில் பதியும்படி போதிக்கவேண்டும். பெண் குழந்தைகளுக்கு ஸத்யம், தர்மம், நியாயம் தைர்யம், இரக்கம், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய உத்தம குணங்களையுடைய சிறு கதைகளை வெகு அழகாக அவர்கள் மனதில் பதியவைக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட குணங்களையுடைய ஸன்மார்க்கக் கதைகள் எங்கிருக்கின்றன வென்று ஒரு ஸஹோதரி கேட்கலாம். அவைகளுக்கேற்றது நமது ராமாயண மஹாபாரதத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை யென்று நாம் கூசாமல் சிபார்சு செய்கிறோம். ஸஹோதரிகளே! இராமாயண மஹா பாரதத்தைத் தமிழில் புருஷரிடம் தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்களும் அப்படியே உத்தம குணங்களின்படி நடந்து உங்கள் குழந்தைகளுக்குக் காண்பியுங்கள். இந்தக் கார்யத்தை நீங்கள் செய்து வந்தீர்களேயானால் அதுவே நம் தேசத்துக்கும், கடவுளுக்கும் குழந்தைகளுக்கும் செய்யவேண்டிய உங்களுடைய கடமைகளையும் பொறுப்புகளையும் செய்தவர்களாவீர்கள்

**Children's Education in America.**

அமெரிக்காவில் குழந்தைகளின் படிப்பு:—முதன் முதலாக ஒரு தேசம் பலவழிகளிலும் சுபிக்ஷமுடைவது அத்தேசத்தாருடைய குழந்தைகளின் படிப்பையும் ஸௌக்கியத்தையும் பொறுத்திருக்கிறதென்பது தெரிந்த விஷயம். இந்த மேலான நோக்கத்தைக் கொண்டு அமெரிக்கன் கவர்ன்மெண்டார் குழந்தைகளின் படிப்புக்காக வருஷம் ஒன்றுக்கு 24 கோடி ரூபாய் செலவழித்து வருகிறார்களென்று நியுயார்க் டைம்ஸ் என்னும் பத்திரிகை கூறுகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் கல்வி இலவசமும் கட்டாயமுமானது. ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளை அத்தேசச் சட்டப்படி பாடசாலைக்கு அனுப்பியே தீரவேண்டும். கவர்ன்மெண்டார் எல்லா ஏழைக் குழந்தைகளின் சாப்பாட்டு ஸௌகர்யத்தைக் கவனிப்பதுமன்றி அவர்களுக்குப் புஸ்தகங்கள், உடுப்புகள் முதலியன கொடுத்து உபகரிக்கின்றனர். மேலும், ஒவ்வொரு அமெரிக்கன் குழந்தையும் படித்து வீணாக இருக்கக்கூடாதென்று அததன் சக்திக்குத் தகுந்தபடி ஏதாவது ஒரு கைத்தொழிலில் பழக்கிவைத்து அக்குழந்தை பிற்காலத்தில் ஜீவனத்திற்குக் கஷ்டப்படாமலிருக்கும் வண்ணம் செய்துவருகின்றனர். இது விஷயமாக அமெரிக்கன்



கவர்ன்மெண்டாரின் முயற்சிகளைப் பிரபலப்படுத்த உத்தம பரோபகாரமுள்ள அத்தேச ஸ்த்ரீகள் ஆங்காங்கு குழந்தைகள் சங்கம் ஸ்தாபித்து கவர்ன்மெண்டாருக்குப் பலயோசனைகள் சொல்லிப் பொது ஜனங்களிடமிருந்து பண வசூல் செய்து வருகின்றனர். குழந்தைகளின் படிப்புக்கு உபகாரம் செய்தல் ஒவ்வொரு ஸ்த்ரீயும் தனது தர்மமென்று உணர்ந்து அதன்படி நடந்து வருவதுதான் நாம் கொண்டாடத்தக்கது.

**Defence of India Force.**

இந்தியப் பாது காப்புச் சேனை:—இவ்விஷயமாக ஒரு உத்தம ஸ்த்ரீ தமது புருஷனுடைய அனுமதியின் பேரில் இந்திய ஸஹோதரர்களுக்கு ஒரு விண்ணப்பம் எழுதியிருக்கிறார். அதை நாம் வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அந்த விண்ணப்பம் ஒவ்வொரு புருஷர்களின் மனதில் பட்டு அவர்கள் இந்த ஸமயம் அரசருக்கும் தேசத்துக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யப் பின்வாங்க மாட்டார்களென்பது திண்ணம். நமது நிருபர் எழுதியிருக்கிற விண்ணப்பத்தின் அபிப்பிராயத்தில் நாமும் கலக்கிறோம்.

---

# SPECIAL ARTICLES
# விசேஷ வியாஸங்கள்

## REFORM OF OUR EDUCATIONAL SYSTEM

By

Sri R Jayalakshmi Ammal

## நமது கல்விமுறையின் சீர்திருத்தம்

நாம் தற்காலம் இருபதாவது நூற்றாண்டில் வசித்து வருகிறோம். இதற்கு மேனாட்டு சாஸ்த்ரக்ஞர்கள் (சாஸ்த்ர சகாப்தம்) என்று கூறுகின்றனர். அதாவது ஆங்கிலத்தில் (Scientific Century) என்று கூறுவர். இந்த நூற்றாண்டில் உலக முழுமையும் நாநா தேசங்களில் பல துறைகளிலும் ஒரு நவீனக் கிளர்ச்சி ஏற்பட்டதன் பலனாக ஆங்காங்குள்ள பெரியோர்கள் ஒவ்வொரு துறையிலும் தீவிரமாக உணர்ந்து வருகிறார்கள். இந்த உணர்ச்சி

தினஸரிப் பத்திரிகைகளைக் கவனித்து வந்திருக்கிற சகோதரி சகோதரர்கள் பூர்ணமாய் அறிவார்கள்.

இங்கு நாம் சம்பந்தப்பட்டமட்டில் கல்வித் துறையை எடுத்துக் கவனிப்போம். பல வருஷங்களாக இங்கிலாந்தில் ஆங்கிலச் சிறுவர்களுக்குக் கொடுத்து வருகிற கல்வியானது குறுகிய நோக்கத்தைக் கொண்டிருக்கிறதென்று ஆங்கிலக் கல்விமான்களே சமயம் வாய்த்த போதெல்லாம் முறையிட்டு வருகின்றனர். அவர்கள், ஜெர்மனியாரிடத்திலுள்ள பல குற்றங்களை ஒருபுறம் கண்டித்தாலும் மற்றொருபுறம் அவர்களின் கல்வி முறையைச் சிலாகிக்காமல் இருக்கவில்லை. உதாரணமாக, லார்ட் ஹால்டேன் என்னும் ஒரு ஆங்கிலப்பிரபு கல்வி விஷயத்தில் வெகுகருத்துக்கொண்டவர். தேர்ந்தபடிப்பாளி. மேலும், அனுபவசாலி. அவர் தம்தேசத்துச் சிறுவர்களுக்கு தற்காலம் கொடுத்துவருகிற கல்விமுறை பிரயோஜனமற்றதென்றும் விரிந்த மனோபாவத்தையும் எடுத்த கார்யத்தை விடாமல் முடிக்கும் ஊக்கத்தையும் கொடுக்கத் தக்கதாயில்லையென்றும் குறை கூறுகிறார். மேலும், யுத்தம் முடிந்தவுடன் கவர்ன்மெண்டார் தமது தேசத்து இருபாலார்களின் கல்வியைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கிறார். அவர் சமீபத்தில் லண்டனில் ஒரு மீட்டிங்கில் பேச நேர்ந்தபோது பின்வருமாறு பேசினது கவனிக்கத்தக்கது.

"இம்மகா யுத்தத்தினாலுண்டாகும் துன்பங்கள் ஒருபுறமிருக்க சில விசேஷமான நீதிகளை நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். இப்போது தான் நாம் விழித்துக் கொண்டோம். நமது வித்யா முறையில் சில திருத்தங்கள் செய்தாலொழிய நமது கைத்தொழிலபிவிருத்தியும் உயர்ந்த சாஸ்த்ர ஞானமும் எளிதில் கிடைத்துவிடாது. இப்போது நாம் அனுஷ்டித்து வருகிற கல்விமுறைகளைத் திருத்த கவர்ன்மெண்டாரும் மற்றும் பெரியோர்களும் கவலை எடுத்துக்கொள்வது அவசியம். நம் பள்ளிக்கூடங்களில் நடுத்தரக் கல்வியோ முழுமோசமாய் இருக்கிறது. பிரைமெரிப் படிப்பின் நிலைமையோ வெகு பரிதாபகரமான நிலைமையிலிருக்கிறதை ஆங்கில ஜனங்கள் நன்றாய் அறியவேண்டும்."

படித்தவர்களே! ஹால்டேன் பிரபு சொன்னவைகளை நாம் கொஞ்சம் கவனமாய் யோசிக்கவேண்டும். இப்படியாக ஆங்கிலே



யர்களின் கல்வி நிலைமை பரிதாபகரமான நிலைமையிலிருக்கும்போது நம் இந்திய ஸ்த்ரீ புருஷர்களின் கல்வி முறையைப்பற்றி என்ன சொல்லவேண்டியிருக்கிறது! இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்விக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று 'லார்ட் மெகாலே' என்பவர் என்ன உத்தேசங்களுடன் அக்காலத்து இந்தியாவை ஆண்ட ஆங்கிலப்பிரபுக்களுக்குப் போதித்தாரோ? நாம் அறியோம். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயமாயும் அநுபவமாயுமிருக்கிறது. *ஆங்கிலக் கல்வியினால் எவ்வளவோ நன்மைகளை நாம் அடைந்திருந்தாலும் நமக்குக் கொடுத்துவருகிற ஆங்கிலக் கல்வியின் முறையானது தற்காலத் தலை முறை இந்திய ஸ்த்ரீ புருஷர்களுக்கு முற்றிலும் ஏற்றதாகயில்லை. அது நம் ஸ்த்ரீபுருஷர்களின் மனோபாவத்தை விரிக்கத்தக்கதாயும் எடுத்த கார்யத்தை முடிக்க ஊக்கத்தைக் கொடுக்கத் தக்கதாயுமில்லை. மேலும், இதனால் இந்தியாவில் பொருளே சதமென்று நினைத்து வருகிறவர்களே ஜாஸ்தியாகிக்கொண்டு வருகின்றனரென்று தெரிகிறது. புருஷர்கள் வயிறு பிழைப்பதே பெரிதென்று கருதி தமது மதாசார நெறிகளை விட்டுக்கடந்து அலைகின்றனர். துராசாரப் பழக்க வழக்கங்களினாலோ, கால வித்தியாஸத்தினாலோ அல்லது வேறு எவ்வித காரணங்களினாலோ இந்திய புருஷர்களில் அநேகர் தங்கள் தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானமில்லாமல், பொறாமை, கோழைத்தனம், ஸதா பொய் பேசுதல், கபடம், துன்மார்க்கம் முதலிய துர்க்குணங்களிலேயே இரவும் பகலும் உழன்று வருகிறார்கள். ஸ்த்ரீகளிலும் சிலர் தங்கள் இல்லற தர்மத்தையொழித்து அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய ஸ்த்ரீ ஜாதிகளுக்குரிய குணங்களின்றி வீணே காலத்தைக் கழிக்கிறார்கள்.

எல்லாமதத்தினர்க்கும் பொதுவாயும் அநுபவமாயும் இயற்றியுள்ள திருக்குறளின் கண் நமது திருவள்ளுவ நாயனாரும் வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரத்தின் கண்,

இல்லதென், இல்லவள் மாண்பானால்
உள்ளதென், இல்லவள் மாணாக்கடை என்றார்.

அதாவது, இல்லவள் மாண்பானால்=குலஸ்த்ரீ நற்குண நற்செய்கையுடையவளாயிருந்தால் இல்லதென்=அவ்வீட்டில் ஒரு வஸ்துவும் இல்லாவிட்டாலும் எல்லாம் உள்ளது என்றார். அப்படியின்றி இல்லவள் மாணாக்கடை=குடும்ப ஸ்த்ரீ நற்குண நற்செய்கை

இல்லாதவளாயிருக்கும் பக்ஷத்தில் உள்ளதென் — அவ்வீட்டில் ஒன்றிலும் குறைவின்றி நிறைந்திருப்பதாய் இருந்தாலும், என்ன பிரயோஜனம்? என்று ஏற்பட்டது. இச்செய்யுளினால் நாம் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்? நற்குண நற்செய்கை உடைய ஸ்த்ரீகள் எல்லோராலும் போற்றப்படுவதன்றி அவர்கள் இருக்கும் இடமும் தேவதைகள் வசிக்குமிடமாகும். அப்படியின்றி, மாறாக நடக்கும் ஸ்த்ரீகள் அறிவுடையோரால் இகழப்படுவதுமன்றி அவர்கள் இருக்குமிடமும் இராக்ஷதர் வசிக்குமிடமாகும்.

தற்காலம் மேற்கண்ட குணங்களுடைய ஸ்த்ரீகளில் அநேகர் தங்கள் குழந்தைகளை ஸன்மார்க்கத்தில் பழக்காமலும், பதிபக்தியில்லாமலும், கடவுள் பக்தியில்லாமலும் அரைகுறையாய் ஆங்கிலவார்த்தைகளைக் கற்றுக் கொண்டு வீண்டம்பம் செய்து டென்னிஸ் பந்து விளையாடுவதும் பிலியார்டு விளையாடுவதுமாகக் காலத்தைப் போக்குகின்றனர். தற்கால நிலைமையை நோக்கிப் பார்க்கும் கால் ஸ்த்ரீகளுக்குக் குடித்தன போக்கியதை வரவரக் குறைந்து வருகிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது. இங்கிலாந்து போன்ற மேனாடுகளிலுள்ள ராஜரீக நிபுணர்கள் நாகரீகமடைந்ததாகச் சொல்லப்பட்ட தங்கள் தேச ஸ்த்ரீகள் குடும்பத்தைக் கவனியாது, புருஷர்களோடு போட்டி போட்டு நிற்பதைக் கண்டித்துப் பேசுகிறார்கள். மேலும், நம் தேச ஸமூகக் கட்டுப்பாட்டையும் நமது விவாக ஸம்ஸ்காரத்தையும் ஸ்த்ரீகளின் உயர்ந்த பரிசுத்த நிலைமையையும் கண்டு புகழ்ந்து வருகிறார்கள். அப்படியிருக்க, நாம் போகிற போக்கோ பின்னுக்குப் போகிறதாய் இருக்கிறதேயொழிய உயர்ந்த நிலைமையை அடைவதற்கு இல்லையென்று தோன்றுகிறது. தற்கால ஸ்த்ரீ புருஷர்களின் நிலைமையை ஆழ்ந்து கவனித்துப் பார்ப்பவர்களுக்கு இவை நன்றாகப் புலப்படும். தேச ஸமூக லக்ஷ்யங்களுக்குத் தகுந்தவாறு கல்விமுறையை ஸரியானபடி திருத்தி அமைத்தால் இனி மேன்மேலும் பல தீங்குகள் ஏற்படாமலிருக்கும். இப்படிச் செய்வதானது ஜனப்பிரதிநிதிகளுடையவும் கவர்ன்மெண்டாருடையவும் வேலையாயிருக்கிறது.

ஆர். ஜயலக்ஷ்மி அம்மாள்.

## THE DUTIES OF GIRLS

By

**Sri P. Nagaratnammal**

### பெண்கள் கடமை *

இப்பாலிகா பாடசாலையின் வருஷோத்ஸவமாகிய இன்று உங்கள் மத்தியில் "பெண்கள் கடமை" என்ற விஷயமாகப் பேசக்கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஏதோ எனக்குத் தெரிந்த சில முக்கிய அம்சங்களை மட்டும் தெரிவிக்கத் துணிகிறேன். நாம் எடுத்துக்கொண்டிருக்கிற பெண்கள் கடமை என்ற விஷயம் பெரிது. இவ்விஷயத்தைப் பலர் பலவிதமாக எழுதியும் பேசியும் வருகிறார்கள். பெண்களுடைய கடமைகள் ஏகதேசமாக அவரவர்களின் பெற்றோர்களைப் பொறுத்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். என்னென்ன கடமைகள் பெண்களிடத்திலிருந்து நாம் எதிர்பார்க்கிறோமோ அவைகளெல்லாம் அவர்களைப் பெற்றெடுத்தவர்களிடமும் அவர்களுக்குக் கல்வி பயிற்றவந்த உபாத்யாயர்களிடமும் இருக்கவேண்டுவதவசியம். அப்போது தான் பெண்கள் தங்கள் தாய்மார்களிடமும் உபாத்யாயர்களிடமும் கற்றுக் கொண்ட கடமைகளை ஸரிவரச் செய்யவும் அவைகளைக் கண்டு நாம் ஆனந்திக்கவும் முடியும்.

தாயைப்போல பிள்ளை யென்றும் நூலைப்போல சேலை யென்றும் வழங்கும் பழமொழி இங்கு நாம் கவனிக்கத்தக்கது. பெண்களின் நடத்தையும் ஒழுங்கும் அவர்களின் பெற்றோர்களை பொறுத்திருக்கிறதாதலால் அவர்கள் நல்ல நெறியுடையவர்களாய் இருக்கவேண்டும். இப்போது பாடசாலைகளில் படிக்கும் பெண்கள் தான், நாளைக்குத் தாய்மார்களாக ஆகிறார்கள். அவர்களே குடும்ப பாரத்தையும் தேசபாரத்தையும் பொறுக்கவேண்டியவர்கள். பெண்களை நல்ல வழியில் பழக்கவேண்டிய கடமைகள்

* சென்ற பிப்ரவரி மீ த்தில் எழும்பூர் பாலிகா பாடசாலையின் வருஷோத்ஸவ தினத்தன்று ஆனரபிள் அட்வொகேட் ஜெனரல் எஸ். சீனிவாஸ ஐயங்கார் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் ஸ்த்ரீ ஐக்கியானந்த ஸமாஜமெம்பராகிய ஸ்ரீமதி பு. நாகரத்தின அம்மாள் அவர்கள் செய்த உபந்யாஸத்தின்

பெரியவர்களாகிய நம்மைச் சார்ந்திருக்கின்றன. ஸர்வேசுவரன் சிறுவர்களின் யோக க்ஷேமங்களைப் பெரியோர்களாகிய பெற்றோர்களிடத்திலும் உபாத்தியாயர்களிடத்திலும் ஒப்புவித்திருக்கிறார். நாம் அந்தக் கடமைகளை மனதார ஏற்றுக் கொண்டிருக்கிறோம். கடவுள் தயை கூர்ந்து நமக்கு ஒப்புவித்திருக்கிற கடமைகளை ஸரிவரச் செலுத்தி, சிறுவர்களை நல்ல மார்க்கத்தில் பழக்கி, அவர்களைத் தேசபக்தர்களாகவும், மதாபிமானிகளாகவும், பாஷாபிமானிகளாகவும் நாம் செய்து வரவேண்டியது அவசியம். நாம் நமது கடமையை ஸரிவரச் செலுத்தாமலிருந்தால் கடவுளுடைய கோபத்துக்கு ஆளாகுவோம். இது நிச்சயம். ஒரு குழந்தையைப் பட்டினிபோடுகிற தாய் தகப்பனை ராஜாங்கச் சட்டம் எப்படித் தண்டிக்குமோ அப்படியே எந்தப் பெற்றோராகிலும் எந்த உபாத்தியாயராகிலும் தங்களுக்குக் கடவுள் கிருபை கூர்ந்து கொடுத்திருக்கிற கடமைகளைச் ஸரிவரச் செலுத்தாமல் சிறுவர்களின் சேதன ஸ்வபாவத்தைச் சுருங்கவைக்கிறார்களோ அவர்களைக் கர்மவிதியானது தண்டிக்காமல் விடாது.

ஆகவே, நாம் எடுத்துக் கொண்டிருக்கிற தர்ம கார்யத்தைக் கிரமப்படி நடத்தவேண்டும். சிறுவர்களை ஸன்மார்க்கத்தில் பழக்கினால் மற்ற நல்ல குணங்கள் அதன் வழியில் தானாகவே வருமென்பது அநுபவசித்தாந்தம். பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் உயர்ந்த உத்தம குணங்களுடையவர்களாய் இருக்கவேண்டும். அவர்கள் நல்ல நெறியில் இல்லாதவர்களாய் இருந்தால் பெண்களின் கடமையைப் பற்றிப் பேசுவது பைத்தியக் காரத்தனமாகும். துர்ப்பலமுள்ள அஸ்திவாரத்தைக் கொண்டு ஒரு கட்டிடம் கட்டுவது எவ்வளவு புத்தியோ அப்படியே நல்ல நெறியில்லாத சிறுவர்களைக் கொண்டு ஸமூகத்தைத் திருத்தி அமைப்பதாகும். கடைசியாக நம் பெண்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டுமானால் நாம் நல்ல வழியில் இருக்க வேண்டுவது அவசியமாக இருக்கிறது. நம் பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் போது அது அவர்களின் மூளைக்குத் தகுந்ததாய் இருக்கவேண்டும். மேலும், அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பது அவர்களின் பிற்கால குடும்ப வாழ்க்கைக்குத் தகுந்ததாயும் குடும்பத்தை நடத்த யோக்கியதை வரும்படியாயும் இருக்கவேண்டுமென்பதை ஸ்கூல்களை நடத்து



வோர்கள் அறியவேண்டுவது அவசியம். இந்த நோக்கங்களைக் கொண்டு பெண்களை நல்ல வழிகளில் பழக்கி நடத்தி வந்தால் அவைகளே நாம் அவர்களுக்குச் செய்த கடமைகளாகும். பெண்களும் தங்கள் கடமைகளைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

பி. நாகரத்தின அம்மாள்.

---

## EARLY HISTORY OF THE EARTH

By

**Swami Vallinayakam**

## பூகோளத்தின் பூர்வ சரித்ரம்

பூகோளம் ஒரு காலத்தில் அஃதாவது அக்நி மயமாகவும் ஜோதிமயமாகவுமிருந்து சற்றுக் குளிர்ந்த காலத்தில் பூமியின் மேற்பாகம் முழுதும் தடிக்க ஆரம்பித்தது. அங்ஙனம் தடித்துத் தடித்துப் பல பாகங்கள் பாறைகளாயின. அவைதாம் கரும்பாறைகளாகும். அக்காலத்தில் பூமியில் புற்பூண்டாதிகள் கூடக் கிடையா. அதி ஸூக்ஷ்ம அணுக்களின் கூட்டமாக இருந்த வாயு அக்நிமயமாகி, அண்டரூபமாகத்திரண்டு, உருப்பட்ட நாள் முதல் நாளது வரை அதன் ஹிருதயத்திலுள்ள சக்திகள் ஸதா வேலை செய்துகொண்டே இருக்கின்றன. சில வருஷங்களுக்கு முன் பூமியின் ஓர் பாகத்தில் திடீரென அண்டகடாகங்கள் வெடித்தாற்போல ஒரு சப்தம் கேட்கவும், ஏறக்குறைய முந்நூறு அடி உயரமிருந்த ஒரு மலை காணாமற் போகவும் அது இருந்த இடத்திலும் அதைச் சுற்றிலும் ஒரு பெரிய ஏரி தோன்றவும் செய்ததென்ற விஷயம் ஸமாசாரப் பத்திரிகைகளைக் கிரமமாக வாசித்து வருபவர்க்கெல்லாம் தெரிந்ததாகும். இது தவிர, பூமியதிர்ச்சி யுண்டாவதைப் பற்றியும் பூமியின் உட்பாகத்திலிருந்து அக்நி, உலோகம் உருகியோடுவதுபோன்ற இளகின கல்முதலியன கக்கப்படுவதைப்பற்றியும் எத்தனையோ தடவைப் பத்திரிகைகளில் வாசித்திருக்கின்றோமல்லவா? இவையெல்லாம் பூமிக்குள்ளிருக்கும் சக்திகளின் சின்னங்களாகும். அச்சக்திகள் தற்காலத்தைப் பார்க்கிலும் ஆதிகாலத்தில் அதிக மும்முரமாய் வேலை செய்து வந்ததாகத் தெரிகின்றது. பூமியின்மீது ஆதியிலுண்டாகிய கரும் பாறைகளை பூமிக்குள்ளிருக்கும் சக்திகள்

தம்மை மறைத்துக்கொள்ள முதலில் செய்த வஸ்திரமாகும். இதுவே பூமியின்மீது தோன்றத் தக்கவைக்கெல்லாம் அஸ்திவாரமாகுமென்பதை அறியவேண்டும்.

பின்னர், நாளுக்குநாள் பூமியின் மேற்பாகத்தில் குளிர்ச்சி அதிகப்பட, நீராவிகள் கிளம்பி மேற்புறமெல்லாம் ஜலமாகி சமுத்ரங்களானாலும் அந்த ஜலம் சூடுமிகுந்ததாய் இருந்ததால் அதில் வெகுகாலம் ஜீவராசிகள் தோன்றாமலேயிருந்தன. பின் போதுமானபடி குளிர்ந்ததும் ஜலஜந்துக்கள் பல தோன்ற ஆரம்பித்தன. அவை நண்டு, சிப்பி இவைபோன்ற கீழ்த்தர ஜந்துக்களேயாகும். இவைதாம் ஆரியர், திராவிடர் முதலிய எவ்வகை ஜாதியாருக்கும் முன்னரே இப்பூலோகத்தில் குடி புகுந்தவையாகும். இந்தஜந்துக்களில் சில தற்காலத்தில் கிடையவே கிடையாது. இதற்கு எவ்வளவோ காலத்திற்குப் பின் தான் புற்பூண்டு, செடி, கொடி, முதலியன உண்டாயினவென்று தெரியவருகின்றது. அக்காலத்தில் பூமியெங்கும் வெறுங்காடாகவே யிருந்தது. அக்காலத்திலுள்ள செடி கொடிகளிற் பல தற்காலத்தில் கிடையவே கிடையா. நாம் தற்பொழுது வெட்டியெடுக்கும் நிலக்கரிக்கு ஹேதுவாக இருந்தவை இக்காடுகளேயாகும்.

இங்ஙனம் ஒரு காலத்திற் பாறையாகவும், மற்றொரு காலத்தில் ஜலமாகவும், பின் ஜலஜந்துக்களுடனும், பின் கொடி செடிகளுடனும், பூமியிலிருந்ததென்றால் இவையாவும் ஒரே காலத்தில் இருந்ததாகக் கொள்ளலாகாது. ஜலஜந்துக்கள் தோன்றி மறைந்தபின் அதன்மேல் செடிகொடிகள் தோன்றி மறைந்ததாகக்கொள்ளவேண்டும்; இப்பொழுதும் பூமிக்குக் கீழே தோண்டிப் பார்த்தால் அங்ஙனம் ஒன்றின்மேல் ஒன்று அடுக்கடுக்காக இருக்கப் பார்க்கலாம். அந்த மாதிரிப் பார்த்துத்தான் மேனாட்டுப் பண்டிதர் கூறுவது. அவர்கள் பூமியைத்துளைத்துச் சென்று பார்த்திருக்கிறார்களா என்றால் அது கூடாத காரியம் என்றே சொல்வோம். பூமியின் மேற்புறம் தோன்றும் கடினபாகம் ஒரு கோழிமுட்டையின் ஓட்டைப்போலும் தேங்காய் ஓட்டைப்போலும் தானென்று கூறினாலும் அதன் கனம் ஏறக்குறைய இருபத்தெட்டு மைல்கள் இருக்கின்றன. 28 மைல்கள் துளைத்துச் செல்வோமானால் இரண்டு மைலுக்கப்புறம் பூமியின் கீழ் நன்றாகக் கொதிக்கிற ஜலம் எவ்வளவு சுடுமோ அவ்வளவு



சூடாயிருக்கிறது. அதாவது 100 டிகிரி சூடு. பின், ஏழரைமைல் போனால் பழுக்கக் காய்ச்சின இரும்பு எவ்வளவு சுடுமோ அவ்வளவு அதாவது 400 டிகிரி சூடு உண்டாகும். பதினெட்டு மைல் போனால் உருகியோடும் கண்ணாடி எவ்வளவு சுடுமோ அவ்வளவு அதாவது 1000 டிகிரி சூடு உள்ளதாயிருக்கிறது. இருபத்தெட்டு மைல் போய் விட்டால் எந்தக் கடின பதார்த்தமும் இளகி ஒன்றோடொன்று சேரக்கூடிய நிலையை உண்டாக்கத்தக்க அதாவது 1500 டிக்ரி உஷ்ணம் உண்டாகும். தவிரவும், பூமியின்கீழ் கொஞ்ச தூரம்போனாலே பிராண வாயுவற்று பிராணிகள் ஜீவிப்பது அருமையாகிவிடும்.

பின் எங்ஙனம் பண்டிதர் கண்டார்? எனில், பூமிக்குள்ளிருக்கும் சக்திகளால் அதன் உள்பாகங்கள் பூமியதிர்ச்சியினால் சில சமயங்களில் பூமியின் மேல் பாகத்தில் கொண்டுவந்து தள்ளப்படுகின்றன. பூமிக்குள்ளே எவ்வளவோ ஆழத்திற் கிடக்கும் பாறைகளைப் பூமிக்கு மேற்பாகத்தில் செங்குத்தான நிலையில் நிற்கத்தக்க விதத்தில் தூக்கி யெறிந்து விடுகின்றன. மேற்கூறிய கரும்பாறைதவிர மற்றப்பாறைகளெல்லாம் ஆற்றங்கரைகளிலும் கடற்கரைகளிலும் அலைகளினால் ஒதுக்கப்பெற்ற மணல் ஒன்றின் பின் ஒன்றாய் அடுக்கடுக்காக இருப்பதுபோல் அடுக்கடுக்காகப் பல அடுக்குகள் சேர்ந்துண்டானவை யென்று அவற்றை உடைத்துப் பார்த்தால் தெரியவரும். அவையெல்லாம் கடல்களிருந்த இடங்களில் கடல் ஜலத்தினால் ஒதுக்கப்பெற்ற அடுக்குகள் மேல்பாரத்தினால் இறுகிப் பாறைகளாகத் தடித்தவையாகும். ஆதியில் நாம் மேற்கூறிய வண்ணம் ஜல ஜந்துக்களாக இருந்தவையும், கொடி செடிகளாக இருந்தவையும் இவ்வடுக்குகளில் காணப்பெறும். அவற்றுள் சில கல்லாக மாறியும் சில வேறு விதமாகவும் இங்ஙனம் பலமாதிரி காணப்பெறும்.

பின்னர், ஊர்வன பறப்பன இவற்றின் தோற்றம் உண்டாயினவென்று தெரிகின்றது. இக்காலத்தில் முலையுண்ணும் பிராணிகளின் தோற்றம் கொஞ்சம் உண்டானதாகச் சொல்லப்படுகிறது. இவை தோன்றி மறைந்தபின் முலையுண்ணும் பிராணிகளே உலகெங்கும் நிறைந்தன. பூமியின் மேற்பாகத்தின் கனம் அதிகமாகயிருந்தால் குளிர்ச்சி அதிகப்பட்டு பூமியினுட் பாகத்திலுள்ள உஷ்ணம் அதி

கப்படவும் சீதோஷ்ண ஸ்திதிகள் பல நிலைமையடையவும் காரணமாகி கொடி செடி உயிர்ப்பிராணிகளும் முதலியன மிகச்செழிப்பாக உண்டாயிருந்தன. இக்காலத்தில் குரங்கு வெளவால் முதலியவும் மிகப்பருத்த மிருகங்களும் ஏராளமாக உண்டாயிருந்தன. ஊர்வன அதிகமாகக்கிடையா. தற்காலத்தில் எங்குமில்லாத ஒரு கலைமான் ஜாதி அக்காலத்தில் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பெற்று அதற்கு சிவதெரியம் என்னும் பெயர் கொடுக்கப் பட்டுள்ளது. ஹிந்துக்கள் வணங்கும் சிவபெருமானின் பெயரையே அதற்குக் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. இக்கலைமான் ஒரு யானையத்தனை பருமன் இருக்குமென்றும் அதன் தலையில் நான்கு கொம்புகள் உளவென்றும் தெரிய வருகின்றன.

இவற்றிற்குப் பிற்காலத்துத்தான் மனிதன் தோன்றினான். இக்கடைக் காலத்திலும் பிராணிகளின் பருமனும் எண்ணிக்கையும் அதிகமென்றே தெரிகின்றது. ஒரு துருவத்திலிருந்து மற்றொரு துருவம் வரை உருண்டு புரண்டு கொந்தளித்துக் கொண்டிருந்த ஸமுத்ரத்தை அக்காலத்தில் காணாவிடினும் ஜலப் பிரளயங்களும், மலைத் தொடர்களின் கிளர்ச்சிகளும், பனிக்கட்டிகளின் ஆக்ரமிப்புகளும் அடிக்கடி சம்பவித்துள்ளன. தற்காலத்துக் கடுத்த முற்காலத்து நாம் வாழும் பூமியெங்கும் கம்பீரமான காடுகளும் அழகிய புற்றரைகளும் நிறைந்திருக்க, அவற்றினிடையில் யானை, காண்டா மிருகம் முதலிய மிருகத்தொகுதிகள் உல்லாசமாக உலாவிக்கொண்டிருந்தன. இங்ஙனமிருக்க, திடீரென்று கப்பல் முழுகினாற்போல், பனியும் பனிக்கட்டிகளும் பிரவாகமாகப் பெருகி, ஐரோப்பாவின் வடபாக முழுவதையும் ஆக்கிரமித்து, ஜர்மனியின் சமநிலம்வரை வந்து அவற்றுட்பட்ட செடி, கொடி, மிருகாதிகள் யாவற்றையும் மூடிப் பரவிவிட்டன. ஹா! ஹா! என்ன ஆச்சர்யம். எத்தனையோ மனோகரமாக இருந்த இடமெல்லாம் மரணம் என்னும் நிஸ்சப்தத்தால் நிறைந்துவிட்டது. இங்ஙனம் திடீரென்று பனிக்கட்டிப் படையெடுத்து வந்ததற்குக் காரணம் ஒரு பொழுதும் ஒருவேளை அறியப்படாமலே போயினும், அதன் அடையாளங்கள் பலவிடங்களிற் காணாமற்போகா. இங்ஙனம் பூகோளத்தின் சரித்திரத்தைப் பூகோளமே சொல்லுகின்றது. இது நிற்க.



ஞானவாஸிஷ்டத்தில் புசுண்டர் கதையில் புசுண்டர் தம்மை வஸிஷ்டர் பார்க்க வந்தது எட்டாவது தடவை என்றும், அதற்குமுன் ஏழு தடவைகள் பூலோகம் ஸிருஷ்டிக்கப் பெற்றதாகவும், ஒவ்வொரு தடவையிலும் வஸிஷ்டரும் ஸிருஷ்டிக்கப் பெற்றுத் தம்மை வந்து பார்த்ததாகவும், அங்ஙனம் பல தடவைகள் ஸிருஷ்டிக்கப் பெற்ற இப்பூமி ஒரு காலத்தில் எல்லாம் காடாகவும், மற்றொரு காலத்தில் எல்லாம் பாறையாக இருந்ததாகவும் புசுண்டர் கூறுவதைப் பார்த்தால் அத்யாச்சர்யம் உண்டாகின்றது. இன்னும் ஹிந்து சாஸ்திரங்களில் கூறப்பட்ட விஷயங்கள் உலக ஸ்ருஷ்டிக்ரமத்திற்கு எத்தனை பொருத்தமுடையதாக இருக்கின்றன! தற்காலத்து மேனாட்டுப் பண்டிதரின் கூற்று என்று யோஜிக்கினும் மிக வியப்பே உண்டாகின்றது. பூதக்கண்ணாடி, தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலிய பல ஸூக்ஷ்மக் கருவிகளின் உதவியைக்கொண்டு மேனாட்டார் கண்டு பிடிக்கும் யாவும் ஹிந்துக்களின் புத்திக் கண்ணாடியிற் பட்டவைகளாகவே காணப்படுகின்றன.

ஸ்வாமி வள்ளிநாயகம்.

---

## ESSENTIALS OF GOOD TEACHERS

By

**K. P. Seshadri Aiyangar**

(Asst, Muthialpet High School)

## உபாத்தியாயர்களின் தேவைகள்

உபாத்திமைத் தொழில் மற்றத் தொழில்களைவிடத் தெய்வீகமானதாகும். அது மிகவும்பொறுப்புடையது. தேசச் சிறுவர்களையும் தேசத்தையும் முன்னுக்குக் கொண்டுவருகிறவர்கள் உபாத்தியாயர்களைத் தவிர வேறு ஒருவருமில்லையென்று சொல்லலாம். உபாத்திமைத் தொழில் எல்லோருக்குமே எளிதில் கிடைத்துவிடாது. அத்தொழிலுக்கு ஆசைப்பட்டு அதில் நுழைகிறவர்களிற் சிலரேதான் அதில் ஸ்திரமாக இருப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தான் நல்ல உபாத்தியாயர்கள், உண்மையுடையவர்கள், அன்புடையவர்கள். அவர்களே தான் பிள்ளைகளுக்குத் தாய், தகப்பன், பந்துக்கள், சிநேகிதர்கள். நல்ல உபாத்தியாயர்கள் தங்களிடத்தில் கடவுள் ஒப்புவித்திருக்கிற கடமைகளை உணர்ந்து பிள்ளைகளின்

யோகக்ஷேமத்தைக் கருதி தமக்குத் தெரிந்தவைகளை யெல்லாம் சிறுகச்சிறுகப் பிள்ளைகளின் மனதில் போதித்து வருவர். நல்ல உபாத்தியாயர்கள் யாவராலும் போற்றப்படுவர்.

இப்போது உபாத்திமைத் தொழிலுக்குப் போக விரும்புவோர்க்கும் அதில் புதிதாக நுழைந்திருக்கிறவர்களுக்கும் சில தேவையானவைகளைச் சுருக்கமாகத் தெரிவிக்கிறேன். புதிதாகப் போகும் உபாத்தியாயர்களுக்குப் பொதுவாகப் பிள்ளைகளிடத்தில் ஆழ்ந்த அன்பும் அவர்களின் க்ஷேமத்தில் ஆசையுமிருக்க வேண்டும். பிள்ளைகளிடத்தில் அவர்களுக்கு இயற்கை அன்பில்லையாகில் அவர்கள் உபாத்திமைத் தொழிலுக்குப் போகப் பிரயத்தனப்படாமலிருப்பதே உசிதம். உபாத்திமைத் தொழிலில் கீர்த்திபெற இருப்பவர்கள் பொறுமையுடையவர்களாயும், தேகாரோக்ய முடையவர்களாயும், சந்தோஷமுடையவர்களாயு மிருக்க வேண்டும். மேலும், ஸ்பஷ்டமாக மனதில் படும்படி போதிக்கும் தன்மையும், கஷ்டப்படுவதற்கு அபாரமான சாமர்த்தியமும், உயர்ந்தகுணங்களும், கூர்மையான கண்ணும், காதும், பக்ஷத்தினால் மறைக்கப்பட்ட சித்தமும் உடையவர்களா யிருக்கவேண்டும். பாடசாலைக்கு வரும்போது குறித்தகாலத்தில் லக்ஷணமாக வரவேண்டும். அவர்கள் சுத்தமான உடைகளை உடுத்திருக்கவேண்டும்.

மேலும், உபாத்தியாயர்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கவிதம் ஆடை தரித்தல் அவசியம். அவர்களுக்குப் பணம் கொஞ்சமானதால் அதற்குத்தகுந்தவிதம் ஆடையுமிருக்கவேண்டும். ஆடையினால்தான் ஒருவனுக்கு மதிப்பு ஏற்படும். ஆகவேதான் ஆடையில்லாதவன் அரைமனிதன் என்னும் பழமொழியும் வழங்குகிறது. அழுக்குவஸ்திரமும், க்ஷவரம் செய்துக்கொள்ளப்படாத முகமும் அவருடைய உயர்ந்த பதவியையும் மதிப்பான வார்த்தைகளையும் கெடுத்துவிடும். அவர்கள் சுறுசுறுப்புள்ளவர்களாக விருக்கவேண்டும். வகுப்பில் நிற்றல் முதலிய செய்கைகளில் அவயவங்களை வைத்துக்கொள்ளும் ரீதியைப்பற்றி உபாத்தியாயர்கள் கொஞ்சம் கவனக் குறைவாகவே யிருக்கிறார்கள். சோம்பலாய்ப் படுத்த மாதிரியாக நாற்காலியிலுட்கார்ந்திருப்பது மனம் சோம்பலாயிருப்பதை முன்னமேயே யெடுத்துக் காட்டும். உபாத்தியாயர்கள் நாற்காலியில் உட்காருவதை விட



அதிக நேரம் அதைவிட்டு வகுப்பில் நடந்து பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது நலம். அவர்கள் மேஜையின்மீது காலை வைத்தோ அல்லது அதன் மீது சாய்ந்து கொண்டோ மற்றும் எந்த விதமாகவோ நிற்கக்கூடாது. நாற்காலியில் இரண்டு கால்களையும் தூக்கி வைத்துக்கொள்வதும், புஸ்தகத்தை முழங்காலின் மீது வைத்துக் கொள்வதும், சுவற்றின் மீது தன் தலையை கற்பிக்கும்போது சாய்த்துக் கொள்வதும் எப்படியிருக்கிறதென்றால், நான் சோம்பலாயிருக்கிறேன். நீங்களும் அப்படியிருக்க இஷ்டப்பட்டால் இருக்கலாம் என்று சொல்வது போலாகும். பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பும் கவனிப்பும் இருக்கவேண்டு மென்று எண்ணுகிறவரானால், தமக்கு அவைகளிருப்பதாகத் தாமே நேரில் பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பாக விருந்து காட்ட வேண்டும்.

உபாத்தியாயர்கள் காலை பத்துமணி அடித்தால் தங்கள் வேலை ஆரம்பிக்கிறதென்றும் பகல் ஒரு மணி அடித்தால் காலை வேலை முடிந்து விடுகிறதென்றும் மத்தியானம் இரண்டு மணியடித்ததும் மறுபடியும் வேலை ஆரம்பமாகிறதென்றும் மாலை 5 அடித்ததும் தங்கள் ஒருநாள் வேலை முடிந்து விடுகிறதென்றும் நினைக்கக்கூடாது. பள்ளிக்கூடத்திற்கு வெளியிலும் தம்மிடம் படிக்கும் பிள்ளைகளைப் பற்றிச் சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டியது ஒவ்வொருபாத்தியாயரது கடமையாகும். பிள்ளைகள் பள்ளிக்கூடத்தை விட்டுப் போய்விட்டால் தங்களுடைய பொறுப்பும் அப்போதே போய் விடுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது கூடாது. உபாத்தியாயர் பிள்ளைகளின் தகப்பன்மார்களையோ அல்லது பந்துக்களையோ தெரிந்துகொண்டு, அவர்களுடன் பிள்ளைகளைப்பற்றிச் சம்பாஷிக்கவேண்டும். உபாத்தியாயர் சொல்லும் வார்த்தைகளை அவர்கள் யாவரும் கேட்டு நடப்பார்கள். பிள்ளைகள் படியாமலோ அல்லது கவனத்தப்பினாலோ துஷ்டத்தனம் செய்துவந்தால் அவர்களைச் சரியானபடி திருத்தவேண்டும்.

அவர் பூரணஞான முடையவரா யிருக்கவேண்டும். பலவிதமான புத்தகங்களைப் படித்தவரா யிருக்கவேண்டும். பிள்ளைகளுக்கு எதைக் கற்பிக்கவேண்டும்? எப்படிக் கற்பிக்கவேண்டும், ஏன் கற்பிக்கவேண்டும், முதலிய விஷயங்களை ஒன்றுகூட விடாமல் முழுமையும் தெரிந்துள்ளவரா யிருத்தலவசியம். தமக்குத் தாமே மனோ

கற்பனை செய்யும் சக்தியையும், அப்படி மனோகற்பனை செய்ததைப் பிறருக்கு மனதில் பதியும் வண்ணம் வர்ணித்துச் சொல்லும் சக்தியையும், உடையவராயிருக்கவேண்டும்; சம்பாஷிப்பதில் தேர்ந்தவராயும் கதை சொல்வதில் சமத்காரமுள்ளவராயு மிருக்கவேண்டும். நாமொவ்வொரு வரும் தோஷமற்றவர்களாக விருக்கமுடியாது. அப்படிக்குத் தோஷமுடையவர்களாக விருந்தாலும் நமக்கு இடையூறாய் ஏற்பட்டிருக்கும் பலஹீனங்களையும், தவறுகளையும், குறைகளையும் வேரோடு களைய நாம் ஒவ்வொருவரும் பிரயத்தனப்படுதல் நமது கடமையாகும்.

கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

---

# MORAL LITERATURE
## சன்மார்க்கக் கல்வி

### INTUITION IN OUR WOMEN

By

**Mr S. Velayutham Pillai B. A.**

### குறிப்பறிந் தொழுகல்

இப்பூவுலகின் கண் இல்வாழ்க்கையே மிகச் சிறந்ததென்பதும், அவ்வாழ்க்கைக்குக் கற்புடைய பெண்டிர் மிக்க அவசியமென்பதும் உலகறிந்த விஷயம். இல்லறம் வழுவாது நடத்துதல் அதனை நடத்துபவர்க்கேயன்றி உலகினர்க்கும் அதிக ஆனந்தம் விளைக்கக் கூடியதென்பது நம் அநுபவமே. இல்வாழ்க்கையில் உதிக்கும் ஆனந்தத்திற்குப் பல வேறு காரணங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானது குறிப்பறிந்து நடத்தலாம். கணவனின் மனதை அவன் முகக்குறியாலோ அல்லது அவன் செய்கைகளாலோ அல்லது அநுபவத்தாலோ உணர்ந்து அவற்றிற் கிசைய நடத்தலே குறிப்பறிந் தொழுகலாம். இதன் பெருமையையும் இதனால் உண்டாகும் ஆனந்தத்தையும் ஓர் உதாரணத்தால் விளக்குவோம்,

சில வருஷங்களுக்கு முன்பு யான் யாத்திரை செய்யும்பொழுது வழியில் ஒரு கிராமத்தில் கொஞ்சம் எட்டிய பந்து ஒருவரைச்



சந்திக்க நேர்ந்தது. அவர் என் வரவினை ஏற்று க்ஷேமங்களை விசாரித்து பின் தனது கிருகத்திற்கு விருந்திற்கு அழைத்தனர். அவர் சற்று எளியவர். ஆகவே, அவருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய எனக்கு மனமில்லாதிருந்தது. எனினும், அவர் அன்பும் உபசாரமும் என்னை அவர்பின் இழுத்தது. நாங்கள் அவர் கிருகத்திற்குச் சென்றதும் சற்றுநேரம் தெருத்திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அவர் உள்ளே சென்று விருந்துக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கவுமில்லை. அவர் மனைவியும் வெளி வந்து பார்க்கவுமில்லை. ஆனால், சற்று நேரத்திற்கெல்லாம் என்னை அவர் உள்ளே கூட்டிச்சென்றார். அவ்விடத்து என் ஆச்சர்யத்தை என்னென்றுரைப்பேன்! இரண்டு இலைபோட்டு ஒழுங்காய்ப் பரிமாரி இருந்தது. நாங்களிருவரும் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அப்பொழுது கலத்திற்ப் படைத்திருக்கும் உண்டியின் இனிய சுவை கூட என் மனதிற்றைக்கவில்லை. அவ்வில்லத்து விளங்கும் பெண்மணியின் கற்பு நிலையே என்னை ஆநந்த சாகரத்தில் ஆழ்த்தியது. இது ஒன்று மாத்திரமா? இலையில் இருந்த கரியொன்றில் உப்பில்லாதிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அம்மாது அக்கரியையே பரிமாரினள். அது சுவையாயிருந்தது. அக்கரியில் உப்பில்லாது இருந்ததை அவள் எப்படி உணர்ந்தாளென்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவள் கணவன் தன் முகக்குறியால் யாதோ ஒன்று அவளுக்குச் சற்றுமுன் தெரிவித்தது என் உள்ளத்து உதித்தது.

இதை வாசிக்கும் பெண்மணிகாள்! சற்று யோசித்துப் பாருங்கள். விருந்து வந்திருப்பதையும், கரியில் உப்பில்லாதிருப்பதையும் நேரில் தெரிவிப்பதைவிட குறிப்பாலுணர்த்தியது எவ்வளவு அழகாயும், சுகமாயும், ஆனந்தத்தை விளைக்கக் கூடியதாயுமிருக்கிறது! மானிடர்க்குப் பகுத்தறிவு விசேஷமாய் இருப்பதின் பயனை உணர்ந்தோர் இச்சதி பதிகளன்றி வேறுயார்? மானிடர் என்னும் பட்டத்திற்கு இவர்களே உரித்தானவர்கள். கணவன் கருத்தின்படி நடவாது, அவன் சொல்லியும் கேளாது, அவன் வற்புறுத்தியும் சட்டை செய்யாது நடமாடுகின்ற ஸ்த்ரீகளை, ஸ்த்ரீகளென்றழைக்க என்வா கூசுகின்றது. அவர்கள் படித்தும் என்ன! என்ன தான் அழகுள்ளவர்களாயிருந்து மென்ன! எவ்வளவு விலையுயர்ந்த ஆடையாப

ணங்கள் அணிந்துமென்ன! நிற்க, குறிப்பறிந்தொழுகலால் மானிடர் அடையும் பயன்களைச் சற்றுச் சிந்திப்போம்.

'காதன் மனையாளும் காதலனும்' இரண்டு எருதுகளாக நின்று இல்வாழ்க்கை என்னும் வண்டியை இழுத்தாலன்றோ அது செல்லும். அப்படி இருவரும் ஒருமித்துச்செல்ல குறிப்பறிந்தொழுகல் முக்கிய சாதனமாம். எப்பொழுது தன் கணவன் உள்ளத்தையும் உணர்ந்து ஒழுக ஆரம்பித்தாளோ பின் அக்குடும்பத்தை நடத்தும் உடல் இரண்டெனினும் உள்ளம் ஒன்றேயாகுமாதலால் இல்லறம் வழுவாது நடைபெறுவதற்கு ஐயமுண்டோ! இரண்டாவது தாசி வீடே கதியென்று உலவும் வீணர்களும், காதல், கவருடல், கள்ளுண்டல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல் என்னுந்தூர்க் குணங்களுடையோர் எவ்வளவோபேர் நற்குண நற்செய்கைகளுடன் குறிப்பறிந்தொழுகும் ஸ்த்ரீகளால் திருந்துவர். வீட்டில் மனைவியானவள் கணவனுக்கினியவளாய், மிருது பாஷியாய் இருப்பளேல் அவன் வெளியிலும் யாவருக்கும் இனியனாக நடந்து கொள்வானன்றோ. உதாரணமாக, தஞ்சைமாநகரில் ராமன் என்று ஒரு கூலியாள் இருந்தான். அவன் எப்பொழுதும் ஆனந்தமயமாகவே இருப்பான். தனக்கிட்ட வேலைகளை எவ்வளவுகஷ்டமாயிருப்பினும் அவன் சந்தோஷமாகச் செய்வது வழக்கம். அவனைச் சுற்றி இருக்கும் வேலையாட்கள் யாவரும் துக்கமாயும், சோம்பேறிகளாயும், குடிகாரர்களாயும் இருக்க அவன் மாத்திரம் சந்தோஷமாயிருப்பது யாவருக்கும் ஆச்சர்யத்தை உண்டு பண்ணியது. ஆதலால், ஒரு நாள் நான் அவனை நெருங்கி விசாரித்தேன்.

அதற்கு அவன் "ஐயா! நான் சாயங்காலம் வீட்டிற்குச் செல்லுமுன் எனக்கிதமானவைகளை நான் சொல்லாமலே என்மனைவி செய்து வைப்பது வழக்கம். நான் சென்றதும் அவள் எனக்குச் செய்யும் உபசாரத்திற்குக் கணக்கு வழக்கில்லை. அவளிடத்து என்னால் ஒரு குற்றமும் காணமுடியாது. நான் அவளை மணம் புரிந்ததுமுதல் ஒரு நாளாவது எங்களுள் மனஸ்தாபமென்பதே கிடையாது. இப்படி நான் என் வீட்டில் பிரம்மானந்தத்தை அநுபவிக்கின்றேன். அதனாலேயே நான் எவ்விடத்தும் சந்தோஷமாயும் குதூகலத்துடனும் இருக்கிறேன்" என்றான். இதனால் அவன் இன்புறுவதற்கும், அவனால் உலகினர் ஆனந்தமடைவதற்கும் அவன் மனைவி



தான் காரணம் என்று நன்கு விளங்குகின்றது. அவள் குறிப்பறிந்தொழுகல் என்னும் இடுமருந்தினால் அவனை வசியப்படுத்தினள் என்பதற்குச் சந்தேகமுண்டோ. இவற்றையெல்லாம் உத்தேசித்தன்றோ 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்று ஆன்றோர் கூறியுள்ளார். இத்தகைய மாது சிரோன்மணிகளாலன்றோ மாதமும்மாரி பெய்வதும், உலகம் க்ஷேமத்தை யடைவதுமாயிருந்தது. இவர்களைக்குறித் தன்றோ திருவள்ளுவரும்,

> தெய்வந்தொழா அள் கொழு நற்றொழு தெழுவாள்
> பெய்யனப் பெய்யு மழை

என்று கூறியுள்ளார். ஆதலால், பெண்மணிகளே! சீர்திருந்துங்கள். கணவன் குறிப்பறிந்து நடவுங்கள். நீங்கள் வசிக்கும் இல்லம் இந்திர சபைக்குமேல் இன்புற்று விளங்கும்.

சா. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ.

---

## LESSONS FROM SITA'S LIFE

By
**Mr. M. R. Sreenivasa Ayar**
(Pleader, Periakulam)

## ஸ்ரீ சீதாதேவியினிடமிருந்து சில நீதிகள்

இந்தப் பரதக் கண்டத்தில் ஆதிகாலமுதல் அவதரித்துவிளங்கிய பதிவிரதா சிரோமணிகளில் ஸ்ரீ சீதாதேவி முதன்மையானவள். ஸ்ரீராமனுடைய பத்னியாகிய சீதையை கொடிய அரக்கனான இராவணன் அபகரித்துக்கொண்டு போனதும் அவள் இலங்கையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். அப்பால், ஸ்ரீராமர் ராவணனை அவன் பரிவாரங்களுடன் ஜயித்து சீதையை மீட்டினார் என்று பொதுவாய் நமது ஹிந்து சகோதரிகள் அனைவரும் அறிவார்கள். ராமாயண பாராயணம் செய்பவர்கள் யுத்த காண்டத்துடன் ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் வரையில் வாசித்து வழக்கமாய் நிறுத்தி விடுகிறார்கள். ஆனால் உத்தரகாண்டத்தில் ஸ்ரீராமருடைய தர்ம ராஜ்ய பரிபாலனமும் ஜானகியினுடைய பதிவிரத தர்ம மகிமையும் முந்தின காண்டங்களை விட ஜாஸ்தியாக நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் சீதையினுடைய தர்மமும் மேன்மையும் விசேஷமாகத் தெரியும் பொருட்டு இவ்விஷயத்தைப் பற்றி எழுதலானேன்.

தன் கணவனுடன் தானும் காட்டுக்கு வரவேண்டுமென்பதற்காக அவள் ஸ்ரீராமருக்குச் சொல்லுகிற நியாயங்கள் அவளுடைய புத்தித் திறமையையும் உயர்ந்த பதிவிரதைக்கு வேண்டிய லக்ஷணங்கள் இன்னவைகளென்பதையும் காட்டுகின்றன. "எனது நாதா! தந்தை, தாய், சகோதரன், புத்திரன், மருமகள் ஆகிய இவர்களெல்லாரும் தங்கள் தங்கள் புண்ணிய பாபங்களின் பயனைத் தாங்களே தனிமையில் அனுபவிக்கிறார்கள். புருஷஸ்ரேஷ்டரே! மனைவி ஒருத்திதான் தனது கணவன் செய்த புண்ணிய பாபங்களின் பயனைப் பகிர்ந்துகொண்டு அனுபவிக்கிறாள். ஆகையால், காட்டில் வசிக்க வேண்டுமென்று தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை எனக்கும் கொடுக்கப்பட்டதுதான். இம்மையிலும் மறுமையிலும் ஸ்த்ரீக்கு அவள் தந்தை, தாய், பிள்ளை, தோழிமார்கள் ஆகிய இவர்கள் உற்ற துணையாகமாட்டார்கள். கணவன் ஒருவன்தான் எப்பொழுதும் துணை. அவனே கதி. நீண்ட கண்களையுடையவரே! நீர் மாத்திரம் காட்டில் அனுபவிக்கப்போகிற ஸுகங்களை நானும் சேர்ந்து அனுபவிக்கக்கூடாதா! காட்டில் கொடிய மிருகாதிகளுண்டென்று பயமுறுத்திச் சொல்லுகிறீர். அவை உமக்கில்லையா! காடு என்றிருந்தால் அநேக துஷ்டமிருகங்களிருக்கத்தான் செய்யும். ஆனால், அவைகளிடமிருந்து என்னைக் காப்பாற்ற உமக்குச் சக்தியில்லையா? உம்மை விட்டுவிட்டு ஒரு நிமிஷம் தனியே இருக்கமாட்டேன். எனக்கு ஸ்வர்க்கலோகத்தைக் கொடுத்தாலும் நீர் என்னோடு இல்லாதுபோனால் அது எனக்கு நரகமேதவிர வேறொன்றுமில்லை. என்னை விட்டுவிட்டு நீர் மாத்திரம் தனியாய்ப் போனீரானால் அச்சமயம் என் உயிரை மாய்த்துக்கொள்வே"னென்று திடமான வார்த்தைகளை சீதை வெகுவாய்ச் சொல்ல ஸ்ரீராமர் அவளைக் காட்டுக்கு அழைத்துச் சென்றார்.

மாயா மானாகிய மாரீசன் ஸ்ரீராமரால் வதைக்கப்பட்டு விழுங்காலத்தில் "ஹா! சீதா லட்சுமணா" என்று மோசமாக ஸ்ரீராமருடைய குரல் போல சப்தித்தான். களங்கமறியாத பெண்பாலான சீதை அதை உண்மையில் ஸ்ரீராமருடைய குரல் என்று மதித்து ஸ்ரீராமரைப்போய்ப் பார்த்துவரும்படி லக்ஷ்மணரை வேண்டினாள். உலகத்தில் நாம் பிரியமாக மதித்திருக்கும் பந்துக்கள் சிநேகிதர் அல்லது வஸ்துக்கள் ஆகிய இவைகள் இருந்தால் அவர்களிடத்து அல்லது அவைகளிடத்துள்ள மிகுந்த பிரேமையால் அவர்களுக்கு அல்லது அவைகளுக்கு ஏதாவது கெடுதல்வரும் போல இருந்தால் நாம் பயத்தையடைகிறோமல்லவா? அது போல, ஸ்ரீராமரிடத்துள்ள ஆழ்ந்த அன்பினால் சீதாதேவி லக்ஷ்மணர் சொல்லும் சமாதானத்தைக் கொஞ்சமேனும் அங்கீகரிக்காதவளாய் அவரை சொல்லத்தகாத வார்த்தைகள் சொல்லும்படி நேரிட்டது.



பிறகு, கொடிய அரக்கனால் இலங்கையில் கொண்டுபோய் வைக்கப்பட்டு அவனாலும் ராக்ஷசிகளாலும் அவள் பட்ட மன இம்சைகளுக்கு அளவில்லை. துக்கம் சகியாமல் சீதை தன் உயிரை விட எத்தனிக்கும் சமயத்தில் புத்தியும் பராக்கிரமமுள்ள அனுமானைக் கண்டு அவள் துக்கத்தை விடுத்து ஸந்தோஷத்தை அடைந்தாள். அனுமான் தன்னை எடுத்துக் கொண்டு போவதாகச் சொன்னதற்கு அவள் "வானரோத்தமா! நீ சொல்வது சரியே. உன்னுடைய பக்திக்கு மெச்சினேன். என்னுடைய பதிவிரதா தன்மையை முன்னிட்டு ஸ்ரீராமர் அல்லாத மற்றொரு ஆண்மகனை நான் தீண்டமாட்டேன். மேலும், நான் உன் பின்னோடு வந்துவிடுவேனானால், ஸ்ரீ ராமருக்கல்லவோ அது அகௌரவம். உலகத்தார் ஸ்ரீ ராமருக்குக்கூட கையாலாகவில்லையென்று பரிஹாஸம் செய்வார்களே" என்று சொல்லி மறுத்தாள். இராவணனை எரிக்கும்படியாயுள்ள சக்தியை உடையவளாயினும் ஸ்ரீராமனுடைய அனுமதியன்றி அவ்வாறு செய்வது உயர்ந்த பதிவிரதையின் லக்ஷணமல்லவென்று நினைத்திருந்தாள். அதே பிரகாரம் அனுமாருக்குச் சொன்ன மறுமொழியிலும் "ராமர் வந்து ராவணனைச் சுற்றத்தாரோடும் கொன்று இங்கிருந்து என்னை மீட்டுக் கொண்டு போவதுதான் அவர் பெருமைக்குத் தக்கதாயிருக்கும். போரில் வல்ல ராமருடைய பராக்கிரமத்தை நான் கேட்டிருக்கின்றேன்." என்று சொன்னாள். மேற்கூறிய காரணங்களினால் தன்னுடைய கஷ்டங்களைப் பொறுமையாகச் சகித்துக்கொண்டு மிகுந்த அடக்கமும் வணக்கமும் நிறைந்த ஸ்ரீசீதாதேவி தன்னுடைய பதிவிரதா தர்மத்திற்கும் ஸ்ரீராமருடைய பராக்கிரமத்துக்கும் யாதொருகுறைவு வாராமலிருக்கும்பொருட்டு ஸ்ரீராமர் வந்து தன்னை மீட்டுக்கொண்டு போவதை ஸதாகாலம் நம்பி எதிர் பார்த்திருந்தாள்.

ஸ்ரீ[illegible] ஐயர்.

---

# DEFENCE OF INDIA FORCE

**By**

**An Hindu Kshtriya Lady**

## இந்தியப் பாதுகாப்புச் சேனை

இந்திய ஸஹோதரர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

**ஆரியதேச மாதாவின் புத்ரர்களே!**

இந்தியர்களாகிய நாம் பரமசிவனின் அருளால் காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் தர்ம கொடையின்கீழ் வசித்துக் கொண்டிருக்கிறோம். பிரிட்டிஷ் அரசாக்ஷி இந்தியாவில் ஸ்தாபிதமானது முதற்கொண்டு நாம் எவ்வளவோ நன்மைகளை அடைந்து வந்திருக்கிறோம். இனியும் பல நன்மைகள் அடைந்து வருவோமென்பது நிச்சயம். ஆனால், இதுவரையில் பிரிட்டிஷார்களைப்போல நமது தேசத்தைப் பாதுகாக்கும் விஷயத்தில் நாம் சைன்யத்தில் சேர்த்துக்கொள்ளப்படாமலிருந்துவந்ததுதான் பரிதபிக்கத்தக்கது. இப்படி விஷயங்கள் இருந்துவந்ததற்கு நம்முடைய குற்றமன்று; ராஜாங்கத்தாருடைய குற்றமுமன்று. ஆனால், கடவுளுடைய கட்டளை அப்படியிருந்தது. இப்போது கடவுள் நம்பேரில் கருணைகூர்ந்திருக்கிறார். அதன் பலனாக நமது ராஜப்பிரதிநிதியாகிய லார்ட் செம்ஸ்போர்டு அவர்கள் நமது இந்திய தேசத்தைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியப் புத்திரர்களை அழைக்கிறார். எங்களோடு பங்கு பெற வாருங்களென்கிறார். காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ளுங்களென்கிறார். இந்த ஸமயம் அவருடைய அழைப்பை நாம் பெரிதாக மதிக்கவேண்டும். ஏனென்றால், நமக்கு வந்திருக்கும் கட்டளை கடவுளுடையதாகும். இந்த ஸமயத்தை நாம் கைவிடக்கூடாது. நான் முன்வந்து இவ்வரிய பெண்கல்விப் பத்ரிகையின் மூலமாக உங்களிடம் விண்ணப்பம்செய்துகொள்வதற்கு முக்கியமான காரணம் ஒன்றுண்டு. நமது தேசம் வீரதீரம்பொருந்திய ஸ்த்ரீபுருஷர்கள் நிறைந்த தேசமாகும். ஸாதாரண காலங்களில் ஸ்த்ரீகள் தேச நிர்வாக கார்யங்களைப் புருஷர்களிடம் ஒப்புவித்து விடுகிறது முற்கால ஸ்த்ரீகளின் தர்மமாயிருந்தது. ஆனால், அரசருக்கும், தேசத்துக்கும் ஹானிவரும் காலத்தில் ஸ்த்ரீகள் மாத்திரம்வீட்டிலிருந்துகொண்டு சும்மாவிருக்க முடியாதல்லவா? அந்த ஸமயத்தில் புருஷர்களுக்கும்,



புத்ரர்களுக்கும் ஸஹோதரர்களுக்கும் உத்ஸாக மூட்டி நம் அரசரை ஜயிக்கவைப்பதே முற்கால ஸ்த்ரீகளுடைய கடமையாகும். ஆகவே, அந்த வம்சத்தில் உதித்த நான் உங்களிடம் விண்ணப்பம் செய்து கொள்ள முன்வந்தது அனுசிதமென்று நினைக்கக் காரணமில்லை. ஸஹோதரர்களே! நாம் இந்த ஸமயம் அலக்ஷ்யம் செய்துவிட்டால் வரப்போகும் நம் ஸந்ததியார்கள் நம்மைப் பயங்காளிகள் என்று ஏசுவார்கள். தெய்வபக்தி நிறைந்த நாம் பின் வாங்கினோமானால் நமது மதத்துக்கும், அரசருக்கும், தேசத்துக்கும் துரோகிகளாகுவோம். இந்த ஸமயம் கைதவறிவிட்டு விட்டீர்களேயானால் மறு ஸமயம் வேணுமென்றால் வாய்க்காது. யுத்தகளத்திலிருந்து பின் வாங்கிய புத்ரர்களைக்கண்டு அவரவர்களின் தாயார்கள் அவர்கள் உண்டு வளர்ந்த ஸ்தனங்களை வெட்டி யெறிந்த நாடாகுமல்லவா? ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மரணத்துக்குப் பயப்படார்கள், அவர்களுக்கு உயிர் பெரிதல்ல. பணமும் பெரிதல்ல; பணத்தை நாளைக்கு வண்டி வண்டியாக ஸம்பாதிக்கலாம். போன கௌரவம் மட்டும் வராது! உயிரையும் உடலையும் திரணமாகக் கருதி தாங்கள் செய்ய வேண்டிய கடமைக்காகப் போர் முகத்தில் சண்டையிட்டு ஜெயம் பெற்ற நாடல்லவா இது? இத்தேசத்தார்களாகிய நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் நமது தேசத்தையும் பல வழிகளில் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இந்தியப் புத்திரர்களே! முன்றுங்கள்; படையில் சேருங்கள்; சேர்ந்து தேசத்தைக் காப்பாற்றுங்கள்; அரசருக்கு ஜயத்தைக்கொண்டு வாருங்கள்; பெற்றோர்களுக்குக் கீர்த்தியை ஸமர்ப்பியுங்கள்; நீங்கள் செய்யும் தேச ஸேவைக்கு வரும் ஸந்ததியார்கள் உங்களைக் கொண்டாடுவார்கள். நமது இந்திய தேசசரித்ரம் இம்மண்ணுள்ளவரை உங்களைப் புகழும்.

ஒரு க்ஷத்திரிய ஸ்த்ரீ.

---

எவர்களிடத்தில் வீரத்தனம், தைர்யம், அழகு, படிப்பு, கீர்த்தி, வாக்சாதுர்யம், பொறுமை, அடக்கம், வணக்கம் முதலிய உயர்ந்த குணங்கள் இருக்கின்றனவோ அவைகளெல்லாம் என்னுடைய காந்தியென்று நினைத்துக் கொள்ளவும்.—ஸ்ரீகிருஷ்ணன்.

# WOMAN'S WORLD
# ஸ்த்ரீ பிரபஞ்சம்

## HOME NEWS
## உள்நாட்டு வர்த்தமானம்

**Indenture labourers.**

ஒப்பந்தக்கூலிகள் :— இந்தியாவிலிருந்து கூலிக்காரர்கள் ஒப்பந்த முறையில் அந்நிய நாடுகளுக்குச் செல்வது தடுக்கப்படுதல் வேண்டுமென்று கல்கத்தாவிலுள்ள படித்த வகுப்பு ஸ்த்ரீகள் ராம் மோஹன் கட்டிடத்தில் மார்ச்சுமீ 3-ந் தேதியன்று ஒரு மீட்டிங் கூடினார்கள். அப்போது லேடி ஜே. ஸி. போஸ் அம்மாள் அக்ராஸனம் வகித்தார்.

**Emigration Stopped.**

அந்ய நாடுகளுக்குச் செல்வது தடுக்கப்பட்டது:—இந்திய ஸ்த்ரீ புருஷர்களின் பொதுஜன அபிப்பிராயத்தை முன்னிட்டோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ அந்ய நாடுகளுக்கு இந்தியக் கூலிகள் தரை வழியாகவும் கடல் வழியாகவும் போகக்கூடாதென்று வைஸராய் அவர்கள் தமக்கிருக்கும் அதிகாரத்தினால் தடுத்திருக்கிறார்.

**King Theebaw's daughter.**

தீபா அரச குமாரத்தி :—பர்மாவுக்கு அரசராகவிருந்த தீபா அரசரது கனிஷ்ட குமாரத்தியாகிய திச்சுமயங்கு பயாலட் என்னும் ராஜ குமாரத்தி தீபா அரசரது பிரைவெட் செக்ரிடரியாயிருந்த தினம் வாங்லாட் தாக்கின் என்பவரை விவாகஞ் செய்துகொண்டாள். இந்தக் கல்யாணம் ரத்னகிரியில் சென்றமீ 7-ந்தேதி நடந்தது.

**Women's Education in Lahore.**

லாகூரில் ஸ்த்ரீகளின் கல்வி :—ஸ்த்ரீகளுக்கு உயர்தரப்படிப்பின் தேவையையும் அவசியத்தையும் கருதி லாகூர் பிரம்ம ஸமாஜத்தார்கள் அங்கு ஒரு ஹைஸ்கூல் ஸ்தாபிக்கப்போவதாகத் தெரிகிறது. அப்பாடசாலையில் ஸ்த்ரீகள் தங்கி வாசிக்கவும் சாப்பிடவும் வசதிகள் கொடுக்கப்படுமென்று அறிகிறோம். இந்த நற்காரியத்திற்கு உதவிகள் வந்து கொண்டிருக்கின்றனவென்று கல்கத்தா மெஸன்ஜர் என்னும் பத்திரிகை கூறுகிறது.

**K. T. C. Girl's School.**

கே. டி. ஸி. பெண் பாடசாலை :—கலவால திருவேங்கடத்தான் செட்டி பெண் பாடசாலையின் இவ்வருஷோத்ஸவம் மார்ச்சுமீ 12-ந் தேதி பச்சையப்பன் கலாசாலையின் மண்டபத்தில் நடந்தது. அப்போது ஜே. பி. பெட்போர்டு அவர்கள் அக்ராஸனம் வகித்தார். லேடி கார்டியு அவர்கள் வகுப்பில் தேறின பிள்ளைகளுக்குப் பரிசளித்தார்.

**The Stree Aikyananda Samajam**

ஸ்த்ரீ ஐக்கியானந்த ஸமாஜம் :—சென்னை நகரில் குழந்தைகளின் ஜாஸ்தி மரணத்தையும், கர்ப்ப ஸ்த்ரீகளின் மரணத்தையும் உத்தேசித்து இந்திய ஸ்த்ரீகளுக்கு தேகாரோக்கியத்தைக் குறித்து ஏப்ரல்மீ 7-ந் தேதி முதற்கொண்டு முத்தியாலுப் பேட்டை நெ 8, ராமஸாமித் தெருவிலுள்ள 'பெண்கல்வி' ஆபீஸில் பிரதி சனிக்கிழமை மாலை 4 மணிக்குத் தகுந்தவர்களால் உபந்யஸிக்கப்படும். எல்லா ஸ்த்ரீகளும் வரக் கோரப்படுகிறார்கள்.

**Conjeeveram Hindu Girl's School.**

ஸ்ரீ காஞ்சிபுரம் ஹிந்துப் பெண்பாடசாலை :—இப்பாடசாலையின் இவ்வருஷோத்ஸவம் ஸமீபத்தில் காஞ்சிபுரத்தில் நடந்தது. அக்ராஸனம் வகித்த திவான் பஹதூர் கோவிந்தராகவய்யர் அவர்கள் பெண்களுக்கு மதபோதனை போதிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் அதனால் தேசம் முன்னடைவதைப் பற்றியும் பேசினார்.

**Women's Education and Early Marriage.**

ஸ்த்ரீகளின் படிப்பும் பால்ய விவாகம்.—சென்ற மார்ச்சுமீ 22ந் தேதி ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த கோத்தமங்கலம் வாசகசாலையில் அவ்வூர் ஸ்ரீமான் C. A. C. காசிநாதன் செட்டியார் அவர்கள் மேற்கண்ட விஷயமாக எல்லோருடைய மனதில் படும்படி ஒரு நீண்ட அருமையான பிரசங்கம் செய்தார்.

**Indian Ladies Deputation to Viceroy.**

இந்திய ஸ்த்ரீகள் வைசராய் அவர்களைப் பேட்டி கண்டுகொண்டது.—சென்ற மார்ச்சுமீ 26ந் தேதியன்று இந்தியாவிலுள்ள பல

மாகாணத்தைச் சேர்ந்த ஸ்த்ரீ பிரதிநிதிகள் டெல்லிமா நகரில் வைசராய் அவர்களை ஒப்பந்தக் கூலி முறை விஷயமாக பேட்டி கண்டு கொண்டார்கள். வைசராய் அவர்கள் மிகுந்த ஆனந்தத்துடனும் பெருமையுடனும் ஸ்த்ரீ பிரதிநிதிகளை வரவேற்றி உபசரித்து ஸமீபத்தில் தடுக்கப்பட்ட ஒப்பந்தக் கூலி முறையானது இனி அமுலுக்குக் கொண்டு வரமாட்டோமென்று அவர்களுக்கு உறுதி கூறினர்.

## FOREIGN NEWS.
## வெளிநாட்டு வர்த்தமானம்.

**Women Volumteers**

ஸ்த்ரீகள் வாலண்டியர்கள் :—பிரான்ஸ் கவர்ன்மெண்டார் ஸ்த்ரீ புருஷர்களை வாலண்டியர்களாகச் சேர்த்துக்கொள்வதற்காக ஒரு மசோதா கொண்டு வந்திருக்கின்றனர். அம்மசோதாவில் 17 வயதுக்கு மேற்பட்டு 60-வயது வரையிலுள்ள ஸ்த்ரீகளும் யுத்தத்தில் வாலண்டியர்களாகச் சேர்த்துக்கொள்ளப் படுவார்களென்றும் அவசியமானால் கட்டாயமாக அவர்கள் ஸிவிலுத்தியோகத்தில் (தேச நிர்வாக உத்தியோகத்தில்)சேர்த்துக்கொள்ளப் படுவார்களென்றும் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

**Duchess of Caunaught.**

கன்னாட் அரசரின் மனைவியார் :—சென்றமீ 14-ந்தேதி கனம் கன்னாட் அரசரின் மனைவியார் லண்டனில் இறந்து விட்டார். அவரின் தேகத்தை புதைக்காமல் கொளுத்திவிட்டார்கள். இது ஆங்கிலேயர்களில் புது வழக்கமென்று தெரிகிறது.

**National Service for English women.**

ஆங்கில ஸ்த்ரீகளின் தேச ஸேவகம்:—இந்த யுத்தத்தைச் சடுதியில் முடிக்க இங்கிலாந்திலுள்ள புருஷர்கள் யாவரும் 17 வயதுக்குமேல் யுத்தத்தில் கட்டாயமாகச் சேரவேண்டுமென்று ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் ஸ்த்ரீகளையும் கட்டுப்படுத்தவில்லையென்று அத்தேச ஸ்த்ரீ ஸ்வதந்திர வாதிகள் கவர்ன்மெண்டாரிடம் முறையிடுகின்றனர். மேலும், பிரான்ஸில் ஸ்தரீகளும் யுத்தத்தில் கட்டாயமாகச் சேரவேண்டுமென்று சட்டம் ஏற்பட்டிருக்கிறபோது இங்கிலாந்தில் அதேமாதிரி ஏன் ஏற்படுத்தக்கூடாதென்றும் கேட்கிறார்கள்,



**Women Carpenters.**

தச்சுவேலை செய்யும் ஸ்த்ரீகள் :—இங்கிலாந்திலிருந்து தச்சுவேலை செய்யும் ஸ்த்ரீகளின் முதல் தொகுதியார் பிரான்ஸுக்குப் புறப்பட்டு விட்டார்களென்று ஸ்டார் என்னும் பத்திரிகை கூறுகிறது. அங்கு அவர்கள் ஸைன்யங்களுக்குக் குடிசைகளைக் கட்டவும் மற்றும் சில்லரை வேலைகளைச் செய்யவும் உபயோகப்படுவார்களாம். அவர்களுக்குத் தலைமை வகிக்கிறவர் தச்சு வேலையில் தேர்ந்த ஒரு ஸ்த்ரீயாம். அவர்களுக்கு ஸகல ஸௌகர்யங்களும் கொடுக்கப்படுமென்று அதன் அதிகாரி தெரிவிக்கிறார்.

**Family Economy.**

குடும்பச்சிக்கனம்:—இந்த யுத்த காலத்தில் இங்கிலாந்திலுள்ள ஸ்த்ரீகள் அநாவசியமான குடும்பச் செலவுகளைக் குறைக்கவேண்டுமென்று படித்த ஸ்த்ரீகள் "குடும்பச் சிக்கனச் சங்கம்" ஒன்று ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள். அதன் நோக்கம் ஸ்த்ரீகளுக்கு இந்த யுத்தத்தைப் பற்றிய விவரத்தையும் அதை ஜயத்துடன் கடைசிவரை முடிக்க நாம் சிக்கனமாக யிருக்கவேண்டிய அவசியத்தையும் துண்டுப் பத்திரிகைகள் மூலமாகப் பிரசுரம் செய்து வெளிப்படுத்துவதாகும்.

**Industrial Education for women in Philippines.**

பிலிப்பைன் தீவுகளில் ஸ்த்ரீகளுக்குத் தொழிற் கல்வி :—ஸாதாரணமாக மேற்கண்ட தீவுகளில் பெண்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் தொழிற் கல்வியை ஒவ்வொரு பெண் பாடசாலையை ஒட்டி கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு குடும்ப ஸ்த்ரீயும் தனது புருஷன் வருமானத்தோடு தான் கற்றுக்கொண்ட சிறு தொழில்களினால் ஏதோ வேலை செய்து அதன் வருமானத்தினால் குடும்ப பாரத்தைச்சுகமாக நடத்த முடிகிறதென்று பிலிப்பைன் தேசத்து தொழிற் பத்திரிகை யொன்று கூறுகிறது.

**Women Motorists.**

மோட்டார் வண்டிகளை ஓட்டும் ஸ்த்ரீகள் :—இங்கிலாந்தில் மோட்டார் வண்டிகளை ஓட்டும் புருஷர்களை யுத்த முகத்துக்கு அனுப்பிவிட்டு அவர்களுக்குப் பதிலாக ஸ்த்ரீகளை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதென்று டெயிலி எக்ஸ்பிரஸ் என்னும் பத்திரிகை கூறுகிறது.

# INSTRUCTIVE HINTS
# விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN
## குழந்தைகள் விஷயம்

**The Care of infants.**

**குழந்தைகளைப் பாதுகாத்தல்:-** குழந்தையானது பிறக்குமுன் தாயின் கர்ப்பப்பையில் 10 சந்திர மாதங்களிருக்கின்றன; அதாவது 280 நாட்கள் வளரும். தாயின் சுகத்துக்குத் தக்க குழந்தையின் சுகமுமிருக்குமாகையால் கர்ப்பவதியாயிருக்கையில் தாய் தன் போஜனம், உடை, தேகாப்பியாஸம், குடல்கள், மனநிலைமை இவைகளைப்பற்றி அதிகக் கவனமுள்ளவளாயிருக்கவேண்டும். கர்ப்பவதியாகிய தாய் சாராயம் பிராந்தி முதலிய எவ்வித லாகிரி வஸ்துக்களையும் குடிக்கலாகாது. இந்தப் பானங்கள் அவளுக்கும் அவள் கர்ப்பத்திலிருக்கிற சிசுவுக்கும் கெடுதலுண்டாகும். ஜீரணமாகக்கூடிய இலேசான ஆகாரமே அவளுக்கேற்றது. கர்ப்ப காலத்தில் பால் கஞ்சி, பழுத்த பழம், நன்றாய் சமைக்கப்பட்ட காய்கறிவகையறுக்களை அதிகமாய் உபயோகிக்கலாம். மாம்சம் சாப்பிடுகிறவர்கள் அதிகமாய் மாம்ச வகையறுக்களை உபயோகிக்காமலிருப்பது உத்தமம். புது ரொட்டிகளை உபயோகிக்கக்கூடாது. பழைய ரொட்டிகள் நல்லது. போஜனத்தோடு கொஞ்சம் அதிகமாய் உப்பைச் சேர்த்துக் கொள்ளுவது நலம். கர்ப்ப ஸ்திரீகள் இரவில் கனத்த போஜனங்களை முற்றிலும் விலக்கவேண்டும். காலையில் வாந்தி அதிகமிருக்குமானால் சற்றுப் படுத்திருந்து பின்பு மனதிற்குப் பிடித்தவைகளைச் சாப்பிடுவது நலம். வாந்தியெடுக்குமென்று பட்டினியிருக்கக்கூடாது. அது அவளுக்குக் கெடுதி, குழந்தைக்கும் கெடுதி. கர்ப்பவதி இறுக்கமான உடைகளை விலக்கவேண்டும். சிலஸ்திரீகள் வீட்டு வேலைகளைச் செய்து நடமாடி வாராமல் சோம்பலாய்ப் படுத்திருந்து தன்னை பல வீனமாக்கிக்கொண்டு பிரஸவிக்க முடியாமல் அகாலமரணமடைந்ததுண்டு. ஆனால், கனத்த ஸாமான்களைத் தூக்குவதும் கிணற்றிலிருந்து பெரிய குடங்களைக் கட்டி ஜலமெடுப்பதும் கூடாத காரியம். சீக்கிரம் இரவில் படுத்துக்கொள்ளவேண்டும். கர்ப்ப ஸ்திரீகள் தினம் 10 மணி நேரம் தூங்கவேண்டும். கர்ப்ப ஸ்திரீ படுத்திருக்கும் அறைகளைச் சுத்தமான காற்று வரும்படி திறந்து வைத்திருக்கவேண்டும். கர்ப்ப ஸ்திரீகளுக்கு மலபந்தமிருக்கக்கூடாது. இரண்டொரு நாள் வெளிக்குப் போகவில்லையாகில் லாதுவான பேதியை எடுத்துக்கொள்ளலாம். அவள் எப்போதும் ஸந்தோஷமுடையவளாயிருக்கவேண்டும். அப்போது தான் கர்ப்பத்திலுள்ள குழந்தை சுகமாய் வளரும். அவலக்ஷணரூபிகளையும் அங்கஹீனர்களையும் பார்க்கக்கூடாது.

திடீரென கோபங்கொள்ளுதலும் துக்கங்கொள்ளுதலும் அவசியம் விலக்கவேண்டும். குழந்தை பிறந்தபின் அவள் இனியும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். பத்தியத்துடன் சாப்பிடவேண்டும். இஷ்டப்பட்டவைகளையெல்லாம் புசிக்கக்கூடாது. பயந்திருக்கையிலும், கெட்ட எண்ணங்களை மனதில் வரவழைத்துக்கொண்டிருக்கையிலும் குழந்தைகளுக்குப் பால் கொடுத்தல் கூடாது.



# 11
# DOMESTIC HINTS AND SUGGESTIONS
## கிருஹத்தியக் குறிப்புகள்

**Reducing the bodily heat.**

**சரீர அனலைக்குறைத்தல்:—** தேகத்தில் உஷ்ணம் அதிகப்படவிட்டுவிட்டால் தேகம் மெலிவடைந்து பலஹீனம் மேலிட்டு மரணம் ஸம்பவிக்கும். ஆதலால், மட்டுக்கு மிஞ்சியிருக்கும் சரீர அனலைக் குறைக்கவேண்டும். காடியும் தண்ணீரும் கலந்த நீரில் ஒரு துண்டுத் துணியைப் போட்டு வைத்து பிறகு அதை எடுத்து தலையில் ஒத்தடம் கொடுக்கலாம். பனிக்கட்டியை தலையில் வைத்தும் கட்டலாம். பனிக்கட்டி (ஐஸ்) கலந்த குளிர்ந்த தண்ணீரைக் குடிக்கவும் செய்யலாம். இம் முறைகளில் தலையிலிருக்கும் கடுமையான உஷ்ணம் குறையும். தலை குளிர்ந்து பாதங்கள் அனலாயிருப்பது தேக சுகத்தின் அடையாளமாகும்.

**About Water**

**தண்ணீரைப் பற்றி:—** தொத்து வியாதிகள் பரவுகிறதற்கு ஸாதகமாகயிருக்கிறவைகளில் தண்ணீர் முக்கியமானதாகும். விஷபேதி முதலிய தொத்து நோய் பரவியிருக்கும் பொழுதும் அல்லது அந்நோய் சீக்கிரம் ஸம்பவிக்கலாம் என்று பயம் உண்டாயிருக்கும் பொழுதும் நாம் உபயோகிக்கும் தண்ணீரைப் பற்றி ஜாக்ரதையாயிருக்கவேண்டும். அசுத்தமான நீரை நாம் ஒன்றுக்கும் உபயோகிக்கக்கூடாது. எவ்வளவு மட்டும் சுத்த நீரை உபயோகிக்கிறோமோ அவ்வளவு தூரம் நாம் ஸுகமாயிருக்கலாம். நாம் குடிக்கிற நீர், நாம் அருந்தும் நீர், பால் மோர் தயிர் இவைகளில் கலக்கும் நீர், சமையலுக்கு உபயோகிக்கும் நீர் ஆகியவைகள் வெகு சுத்தமாக யிருக்கவேண்டும். இது விஷயத்தில் கொஞ்சம் சோம்பலாயிருந்தால் பெரிய வியாதிகளுண்டாகி பின்னால் கஷ்டப்படவேண்டிவரும்.

**Uses of sleep & its time.**

**நித்திரையின் உபயோகமும் அதன் காலமும்:—** நாம் தினம் வேலைசெய்வதால் தேகயந்திரங்கள் வரவரத் தேய்ந்து, பலவீனப்படுகின்றன. நித்திரை காலத்தில் சோர்வடைந்த யந்திரங்கள் இளைப்பாறிப் பலனடைகின்றன. தேகத்திலுள்ள விஷக்கழிவுகள் வியர்வையால் வெளிப்படுகின்றன. மனோதத்துவங்கள் பலனடைகின்றன. போஜனத்தைப் போலவே ஒருவனுக்கு வேண்டிய நித்திரையின் அளவும் அவன் செய்யும் தேகமனோ முயற்சிகளுக்குத் தக்கதாய் இருக்கவேண்டும். கடின உழைப்புள்ள கூலியாட்களுக்கும், படிப்பு முதலிய மனோ முயற்சியுள்ளவர்களுக்கும், சிறுபிள்ளைகளுக்கும், அதிக நித்திரை வேண்டும். சுகமுள்ள ஒருவனுக்கு 7-மணி நித்திரை போதும். பிள்ளைகளுக்கு 7-வயது வரையில் 12-மணி நேர நித்திரையும் 16-வயது வரையில் 9 அல்லது 10-மணி நேர நித்திரையும் வேண்டும். நித்திரை செய்வதற்கு இராக்காலமே தகுந்தது. பகலில் தூங்குகிற வழக்கத்தைக் கூடிய மட்டில் நீக்கவேண்டும். நித்திரைக்குப் போகும் நேரம் 10-மணிக்கு அதிகப்படாமலிருக்க வேண்டும். 10 மணிக்குப் படுக்கப்போய் காலையில் 5-மணிக்கு முன் எழுந்திருக்கிற வழக்கம் நல்லது. நடு இராத்திரி நித்திரை சுகத்திற்கு மிகவும் அனுகூலமானது. அதிகாலையில் எழுந்திருக்கிற வழக்கம் பிரயோஜனமானது. அக்காலத்திலுள்ள ரம்மியமான ஆகாயத்தை சுவாசிப்பதனால் உடம்பில் சுறுசுறுப்பும் மனதில் உற்சாகமும் உண்டாகும்.

## III
## VIEWS AND REVIEWS
### அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

**Our Punya Bhumi or Kashi**

நமது புண்ணிய பூமி அல்லது ஸ்ரீகாசி :—இப்புஸ்தகத்தை நம் பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். இது பல வருஷங்களாக ஸ்ரீகாசியில் பிரபலப்பட்டு வர்த்தகம் செய்துகொண்டு நற்பெயரும் நாணயமும் கொண்டு புகழ் பெற்றுவரும் ஸ்ரீமான் கே. எஸ். மூத்தையா அவர்களால் இயற்றப்பட்டு அவருடைய கம்பெனியால் பிரசுரிக்கப்பட்டது. இதன் விலை அணா 12. தென் தேசத்திலிருந்து வருஷா வருஷம் லக்ஷக்கணக்கான தெய்வபக்தி மிகுந்த ஜனங்கள் நமது புண்ய க்ஷேத்ரங்களில் முதன்மையானதும் பரிசுத்தமானதும் உயர்வானதுமான ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திற்குப் போய்வருகிறார்கள். ஸ்ரீ காசிக்குப் போவோர்கள் முதன் முதலில் அங்கு முக்கிய தர்சினங்களைப் பற்றியும் அவைகள் இருக்குமிடங்களைப் பற்றியும் இன்னும் பல விசேஷங்களைப் பற்றியும் முன்னமே தெரிந்து கொள்ளாமற் போகிறார்கள். அங்கு போனதும் கண்ட ஜனங்களை நம்பி மோசம்போய் பணங்களை இழந்து கஷ்டப்படுகிறவர்கள் அநேகம். ஆகவே, ஸ்ரீ காசி க்ஷேத்ரம் அனாதி காலமுள்ளதானதால் அதன் மகிமைகளையும் பெருமைகளையும் தமிழ் பாஷையில் எழுத வேண்டுமென்பதை உத்தேசித்தும் அங்கு செல்லுகிற தமிழ் ஜனங்களுக்கு உபயோகமாகும் பொருட்டு யாத்திரை வழி வகைகளைக் காண்பிக்கும் பொருட்டும் இப்புத்தகத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று தெரிகிறது. ஸ்ரீகாசி க்ஷேத்திரத்துக்குச் செல்லும் தமிழ் ஜனங்களுக்கு இது ஒரு முக்கிய துணைப் புஸ்தகமென்றே சொல்லவேண்டும். இதில் ஒவ்வொரு விஷயத்தையும் ஆசிரியர் விஸ்தாரமாக விளக்கியிருக்கிறார். க்ஷேத்ரக்கட்டடங்களையும் கோவில்களையும் குறிக்கும் அழகிய 12 சித்திரப்படங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த பேபர் பஞ்சநாளில் நல்ல கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சடித்திருக்கிற போது இதன் விலை அணா 12 பெரிதாகாதென்று சொல்லுவோம். வேண்டுவோர்கள் கே. எஸ். மூத்தையா கம்பெனி, பட்டு வர்த்தகம், காசி, என்று எழுதி வரப்பெற்றுக் கொள்ளவும்.

**Three days in Kasi.**

காசியில் மூன்று நாள் :—இதுவும் பட்டு வர்த்தகம், ஸ்ரீ காசி கே. எஸ். மூத்தையா கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. இதில் அவஸரமாகக் காசிக்குப் போய்விட்டுத் திரும்புகிறவர்கள் அங்கிருந்து மூன்று நாளில் தரிசினம் செய்யவேண்டியவைகளையெல்லாம் குறித்திருக்கிறது. வேண்டுவோர்கள் நமது பெண் கல்விப் பத்திரிகையைக் குறித்து எழுதினால் அவர்களுக்கு இனாமாக ஒரு காபி அனுப்புவார்கள்.

**The Story of Chitraputra.**

சித்ரா புத்ரன் கதை :—இது எமனை ஜயித்து சிம்யாசன மேறிய ஒரு அரச குமாரனின் கதை. இது எம். கவிராஜ கந்தசாமி பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு ஸ்ரீமான் இராஜகோபால் முதலியார் அவர்களால் பிரசுரிக்கப்பட்டது. இதன் விலை அணா 6. வேண்டுவோர் டி. இராஜகோபால் முதலியார் நெ. 45, நம்புலைய்யர் தெரு, சென்னை என்று எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



THE
# FEMALE EDUCATION
AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE
# பெண் கல்வி
சித்திர ஸகிதமான ஒரு தமிழ் மாதப் பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Vol. 6. தொகுதி 6. } May 1917, மே மாஸம். { No. 8. பகுதி. 8.

ஓம்

விக்ரீது காமாகில கோபகந்யா
முராரி பாதார்ப்பித சித்த விருத்தி:
தத்யாதிகம் மோஹவசாத வோச
கோவிந்த தாமோதர மாதவேதி.
(ஸ்ரீ கிருஷ்ண கர்ணா மிருதம்)

எவரும் ஈசுவர பக்திக்குடையவராயிருத்தல் வேண்டும். ஒருவர் பக்தி பண்ணிக்கொண்டிருந்தால் முக்தி பெறலாமென்பது நிச்சயம். பக்தர்களிடத்து எப்போதும் அபிமானமுடையவர் ஈசுவரன் என்பது பிரசித்தமாயிருக்கிறது. பக்தர்களுக்கு எப்பேர்ப்பட்ட ஆபத்து வந்தாலும் அதனை நீக்குவதில் ஈசுவரன் பின் வாங்கார் என்பதை அநேக இதிஹாஸங்கள் விளக்கியிருக்கின்றன. ஆதலினாலேயே மணிவாசகரும் தமது திருவாசகத்தில் ஈசுவரனை: "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்றார்.

ஸ்த்ரீகள் பக்தி பண்ணின கதைகள் பலவற்றைப் பாகவதத்தில் ஸ்ரீசுகாசாரியர் பல விடங்களில் எடுத்துக் காட்டி, அவர்களுடைய பக்தி மற்றவர்களினும் விசேஷமென்று அநேக இடங்களில் நிரூபித்திருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் முனிக்கூட்டங்களே கோபிகைகளாக அவதரித்தனர் என்பர். இவர்கள் காட்டின பக்தியை எழுத

எழுத விரியும். தயிர் விற்று வரும் ஒரு கோபிகா ஸ்த்ரீயினுடைய பக்தி நிலைமையை மட்டும் மேற்கூறிய சுலோகம் விளக்குகிறது. முரன் என்ற அசுரனைச் சங்கரித்து வெற்றி மாலை புனைந்து விளங்கிய ஸ்ரீமந் நாராயணனாகிய கிருஷ்ணனின் பாதார விந்தத்தில் எப்போதும் அதிக மோஹத்தினால் ஆசை வைத்த ஒரு கோப ஸ்த்ரி தெருவில் தயிர்க்கூடையைத் தயிரோ தயிர் என்று விற்பனை செய்து கொண்டே போனாள். அவள் பகவானின் மீது வைத்த விசேஷ பக்தியினால் தயிர் விற்பதை மறந்து கோவிந்தன் வாங்கவில்லையோ கோவிந்தன்; மாதவன் வாங்கவில்லையோ மாதவன், தாமோதரன் வாங்கவில்லையோ தாமோதரன் என்று தன்னையும் மறந்து உச்சாரணம் பண்ணிக்கொண்டே போய் கூடை தயிரையும் விற்று வீடு போய்ச் சேர்ந்தாள்; இப்படிப்பட்ட ஈடில்லாத பக்தியினால் அக்கோபிகை பகவானை இரண்டறக் கலந்தாள். இதுபோன்ற பக்தியே நம் ஹிந்து ஸ்த்ரீக்கு ஈசுவரனிடத்து ஜனிக்கவேண்டும். ஸ்த்ரீகள் இம்மாதிரி பக்தி சிரத்தை யுடனிருப்பதனால் அவர்களிருக்கும் குடும்ப சமூகம் முழுவதும் அம்மாதிரியான பக்திமேலிட்டு கடவுளுடைய அனுக்ரஹத்திற்குப் பாத்திரமாவார்கள். பாரத நாட்டில் வசிக்கும் நம் ஹிந்து ஸ்த்ரீ ரத்னங்கள் எல்லோரும் தாம் எப்போதும் கொண்ட ஈசுவர பக்தியை மேற்கொண்டிருக்கக் கடவர். தம் புத்திர பௌத்திர சந்ததிகளுக்கும் அம்மாதிரியான வழியைக் காலையிலும் மாலையிலும் எந்நேரத்திலும் ஓதி தம் பின்னோர்களைக் கூடுமான வரையில் ஆஸ்திக புத்தியையடையச் செய்யக்கடவர். ஸ்ரீபகவதனுக் கிரகத்தால் ஸ்த்ரீகளும் அவர்களினால் புருஷர்களும் மேன்மேலும் பக்தியினால் நன்மை யடைவார்களாக.

## PROGRESS OF THE WORLD
## பிரபஞ்சப் போக்கு

**New Tamil year.**

பிங்கள வருஷம் :—சென்ற ஏப்பிரல் மாதம் 13உ புது வருஷம் சித்திரைமீ பிறந்தது. இப்புது வருஷ தினத்தை ஹிந்துக்கள் மிக மங்களகரமாகக் கொண்டாடி இருப்பார்கள். இவ்வருஷத்



திற்குச் சனி ராஜாவாக இருக்கிறான். ஆகவே, உலகத்தில் மாறுதல்கள் ஜாஸ்தியாக உண்டாகும், அதாவது இன்றைக்கு ஒரு தினுஸாக இருக்கிறது அடுத்த நிமிஷம் திடீரென்று வேறு தினுஸாக மாறிவிடும். இவ்வருஷத்தில் ஜனங்கள் சுக ஸௌக்கியமாக ஜீவனம் செய்துகொண்டு வாழ்வார்கள். ஜனங்களுக்கும் தெய்வ பக்தி விருத்தியாகும். ராஜாக்கள் நீதியுடன் ஜனங்களைக் காப்பாற்றுவார்கள். ஆனால், சிற்சில இடங்களில் புதிது புதிதான ரோகங்கள் உண்டாகி மறையுமென்று நம்பப் படுகிறது. ஸ்த்ரீ புருஷர்களின் கல்வி விருத்தியடையும். ஸ்த்ரீகள் இல்லற தர்மத்தைக் காப்பாற்றி வீடுகளைத் தேவலோகத்தைப்போல் வைத்துக்கொண்டிருப்பார்கள். ஸ்த்ரீகளால் புருஷர்கள் நல் வழியில் திருந்துவார்கள். இப்படிப்பட்ட பலன்களைக்கொண்டு பிங்கள வருஷம் சுபிக்ஷமாகக் கழியுமென்று நம் பரந்தாமனைப் பிரார்த்திக்கிறோம்.

**How The World Goes ?**

உலக நடை :—உலகம் பெரிது? இது ஒரு நாடகசாலை. அதிலுள்ளோர் நடிகர்களாவார்கள். இவர்களின் அற்புதக் காக்ஷிகளை விதவிதமாக நிமிஷத்திற்கொருதரம் பார்த்து வருகிறோம். இக்காக்ஷிகளை நம்மாயுள்வரை சலிக்காமல் பார்த்துக்கொண்டிருக்கலாம். இவ்வுலகத்தை ஒரு ஸமூகத்தாராவது, ஒரு தேசத்தாராவது, திருத்தமுடியாது. ஏனென்றால், இயற்கையிலேயே மனிதர்கள் ஸ்வகார்யப் புலிகள். பொறாமை, கோபம், மதம் முதலிய துர்க்குணங்கள் மனிதர்களின் தேகத்துடன் பிறந்திருக்கின்றன. இந்த இயல்பு உலகத்திலுள்ள ஸகல மானிடப் பிறவிகளுக்கும் பொதுவானது. ஒருவர் போனபடி மற்றொருவர் போகமாட்டார். ஒருவர் அபிப்ராயத்தை மற்றொருவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். தான் என்கிற அகம்பாவத்தை முதன்மையாக ஒவ்வொரு மனிதனும் கொண்டிருப்பான். தான் சொல்வதே நியாயம்; அதே நல்லவழி; அவ்வழியை மற்றவர்கள் அனுஸரித்து நடந்துவந்தால் அவ்வழியில் முன்னடையலாம் என்ற கொள்கையே ஒவ்வொரு மனிதனுக்கும் பிரதானமாகவிருக்கும். இன்றைக்கு ஸரி என்று ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை சில வருஷங்களுக்குப் பிறகு அது தப்பு என்று நிரூபிக்கப் பலர் முன்வருவார்கள்,

தன் வீடு, தன் மனைவி, தன் பந்து, தன் ஜாதி, தன் மதம் என்ற அபிமானத்தைக்கொண்டே மனிதன் வாழ்வான். ஒருவனுக்குக் கல்வி செல்வம் உண்டாகுமாயின் அவன் தன் இனத்தார்களுக்கே உதவுவானே யொழிய வேறு இனத்தார்களுக்கு உதவமாட்டான். பிறர் கஷ்டப்படத் தான் வாழ்வான்; பிறர் பட்டினியால் வருந்த தான் ஸுகமான போஜனத்தோடு உண்பான். பிறர் சாக்கடையின் ஓரமாகக் குளிரிலும் பனியிலும் படுத்திருக்கத்தான் மாளிகையில் பஞ்சுமெத்தையில் படுத்து இரண்டுபேர் கால்கைகள் பிடித்து வெண் சாமரம் வீச உறங்குவான். இது ஒருவனுக்கு அல்லது ஒரு ஜாதிக்கு ஏற்பட்ட குணமல்ல. பூலோகத்திலுள்ள ஸகல மனிதர்களுக்கும் பொதுவான குணமென்று பலமுறையும் சொல்லுகிறோம். இவ்வுலக உண்மையை அறியாத சில அறிவிலிகள் ஒருவரை யொருவர் தூஷித்துக்கொண்டுத் திரிகிறார்கள். அப்படிச் செய்வதனால் லாபம் ஒன்றுமில்லை. ஆனால், ஒருவர்க்கொருவரும் ஒரு சமூகத்துக்கும் மற்றொரு சமூகத்துக்கும் பரம துவேஷத்தில் வந்து முடியும். ஒருவர்க்கொருவர் பொறாமை, மதம், மாற்சர்யம் முதலிய துர்க்குணங்களினால் வரும் துவேஷத்தை யொழித்து அன்புடனும் ஸஹோதர வாஞ்சையுடனும் அபிமானத்துடனும் வாழவேண்டுமென்று உலகத்து மதங்களுக்கெல்லாம் தாய் மதமாகிய நமது ஹிந்துமதம் போதிக்கின்றது. நமக்கு மதபோதனைக் குறையக்குறைய இது போன்ற சண்டை சச்சரவுகள் வளர்ந்துகொண்டே யிருக்கும்.

**Failure of Social Reform.**

ஆசாரச் சீர்திருத்தத்தின் பலிதமின்மை :—நாம் சில நூற்றாண்டுகளாகப் பல துராசாரங்களைக் காரணமில்லாமல் அனுஷ்டித்து வருகிறோமென்று கருதி அவைகளைத் திருத்த நமது பெரியோர்கள் ஆசாரச் சீர்திருத்த சங்கமொன்று ஸ்தாபித்தார்கள். இது ஸ்தாபிக்கப்பட்டு கால் நூற்றாண்டுக்கு மேலாகிறது. இவ்வளவு வருஷங்களாக ஜனசாரச் சீர்திருத்தத்தில் அக்கரையுள்ளவர்கள் உண்மையாகவே இது சம்பந்தமான பல விஷயங்களை ஆராய்ச்சி செய்து ஜனங்களுக்குப் போதித்து வந்தார்கள்.

மேலும், பிரதி வருஷம் ஆசாரச்சீர்திருத்தக் கான்பரன்ஸ் கூடும்பொழுது, நூற்றுக் கணக்காகப் படித்தவர்கள் சேர்ந்து பேசு-



வார்கள். அச்சமயம் தெரிந்தெடுக்கப்பட்ட அக்ராஸனாதிபதியும் தான் பேசப்போகும் விஷயங்களை அறிந்து பேசுவதுண்டு. இவைகளெல்லாம் நடப்பதைப் பார்த்து ஸாதாரண ஜனங்களும் ஆசாரச் சீர்திருத்தத்தில் அபிமானம் வைத்துவந்தார்கள். இப்போதோ இவைகளெல்லாம் போய் விட்டன. நல்ல காலத்திற்கோ கெட்ட காலத்திற்கோ ஆங்கிலம் படித்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இவ்விஷயத்தில் உணர்ச்சி குன்றி வருகிறது. தற்காலம் கூடும் கான்பரன்ஸுகளில் அக்ராஸனம் வஹிப்போர் விஷயங்களை அறியாத படியும் ஜனங்களின் போக்கைக் கவனியாதபடியும் தாறுமாறாகப் பேசி வருகிறார்கள். கடைசியாகப் பிள்ளையார் பண்ணப்போய் குரங்காய் முடிந்தது என்றது போல், ஆசாரச் சீர்திருத்தம் செய்யப் போய் பிராமணர் பிராமணர்களல்லாதவர்கள் என்ற சண்டையில் முடிந்திருக்கிறது. இது நன்மைக்கோ தீமைக்கோ நாமறியோம். குடியில் கலகம் கெடுதிக்கு மூலம் என்பது போல் பிராம்மண அப்பிராமணச் சண்டையால் பிரஜைகளுக்குள் கூட்டுறவு ஒழிந்து அனுசாரமும், அஞ்ஞானமும் விருத்தியாகி வருமோவென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

**India's Heroic women & Lady Chelmsford.**

இந்தியாவின் வீரபத்நிகளும் லேடி செம்ஸ்டோர்டும் :—சென்ற மாஸம் 13-ந் தேதி ராஜப் பிரதிநிதியும் அவரது மனைவியும் தமது சுற்றுப் பிரயாணத்தில் லாகூர் சென்றிருந்தார்கள். அப்போது லேடி செம்ஸ்போர்டு கோஷாவிலிருக்கும் ஸ்த்ரீகளைச் சேர்த்துக் கூட்டி லாகூரில் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் பின் வருமாறு :—

எப்போதும் இந்திய ஸ்த்ரீகளைச் சந்திப்பதிலும் அவர்கள் குறைகளை விசாரித்துத் தக்கது செய்வதிலும் நான் சிந்தை கொண்டிருக்கிறேன். எந்த சமயம் ஏற்பட்டதோ அங்கு அவர்களை முகம் முகமாகச் சந்தித்துப் பேசாமலிருப்பதில்லை. நீங்கள் உத்தம குலத்தில் பிறந்த வீர பத்னிகள். உங்களுடைய கணவர்களில் பல்லோர்கள் ஐரோப்பிய யுத்தத்தில் அரசருக்காகச் சென்று விசேஷமான போர்த்திறமையைக் காட்டி ரணரங்க சூரர்களாக விளங்கி இருக்கிறார்கள். அவ்வீரத்தன்மையை மெச்சி அவர்களுக்குக் கொடுக்கப்பட்

டிருக்கும் புகழ்ச்சிக்குரிய பத்திரங்களும் பதக்கங்களும் அநேகம். இவர்களில் அநேகர் யுத்த ரங்கத்தில் உயிரை அரசருக்காக விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீர புருஷரை ஏகாதிபத்தியத்தின் பொருட்டு யுத்த ரங்கத்தில் இழந்த இந்திய வீரப் பெண்கள் கௌரவப்படுத்தப்படத் தகுந்தவர்கள். இவர்கள் மீதும், இவ்வீரர்களின் தாய்மார்களின்மீதும் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னரின் மனைவி மிகுந்த அநுதாபம் காட்டுகிறார். அப்படிப்பட்ட அநுதாபத்தைக் காட்டின பத்திரமொன்றை கணவனை இழந்த இந்திய வீரர்களின் மனைவிமார்களில் ஒவ்வொருவருக்கும், வீர புத்திரர்களை இழந்த தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும் அரசரின் மனைவி கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தில் மாட்சிமைபொருந்திய ஜார்ஜ் மன்னரின் மனைவியாருடைய உருவப்படம் வெகு அழகாய்ச் சித்திரிக்கப்பட்டிருக்கும். அதில் இறந்துபோன இந்திய வீரதீரர்களின் பெயர் அவர்களுடைய குணாதிசயங்கள் முதலியன ஒன்றுவிடாமல் எழுதப்பட்டிருக்கும். இன்னும் அரசரின் மனைவியாருடைய உபசார மொழிகளும் பொருந்தியிருக்கும். இப்படி அச்சடித்த கடிதங்கள் இந்தியாவுக்கு வந்துவிட்டன. இவை சீக்கிரம் அனுப்பப்படவேண்டியஸ்த்ரீகளுக்கு அனுப்பப்படும்.

நான் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னால் இங்கிலாந்தில் அரசரின் மனைவியாரிடம் போயிருந்தேன். அவர் இந்திய ஸ்த்ரீகளிடம் தாம் வைத்திருக்கும் சிரத்தை அநுதாபம் முதலியவற்றை எடுத்து எனக்குச் சொன்னார். இந்திய ஸ்த்ரீகளின் கல்வி முன்னேற்றமடையவேண்டிய விஷயத்தில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார். அவர்களுக்கு வைத்திய உதவிகொடுக்கவேண்டிய மார்க்கங்கள் என்னென்ன செய்யலாமோ, அவையெல்லாம் செய்யப்படவேண்டுமென்றும் எனக்கு எடுத்துச் சொன்னார். இப்படிப்பட்ட சிரத்தையை அரச பத்னி இந்திய ஸ்திரீகளின் மீது வைத்திருக்கிறார் என்று சொன்னார். இப்படி இந்திய ஸ்த்ரீகளின் விஷயத்தில் விசேஷ சிரத்தையுடன் பட்சம் காட்டிப்பேசிய லேடி ஸெம்ஸ்போர்டினிடத்து இந்திய மாதர்கள் மிகுதியும் நன்றி பாராட்டுவார்கள்.

---

# SPECIAL ARTICLES
# விசேஷ வியாஸங்கள்

## WOMEN & INDUSTRY

By

**Sri. R. Jayalakshmi Ammal**

## ஸ்த்ரீகளும் கைத் தொழில்களும்

தற்காலம் எங்கு பார்த்தாலும் இந்தியத் தொழில்களை விருத்தி செய்யவேண்டுமென்கிற பேச்சாகவேயிருக்கிறது. பத்திரிகைகளில் பலர் தொழில் முறைகளையும் அவற்றின் உபயோகத்தையும் எழுதி வருகிறார்கள். ஆனால், இதுவரையில் ஒருவரேனும் தொழிலபிவிருத்தியில் ஸ்த்ரீகளின் உழைப்பும் உதவியும் அவசியமென்று கருதவில்லை. இந்தியத் தொழில் அபிவிருத்திக்கு ஸ்த்ரீகளே பிரதானமானவர்கள். அவர்களில்லாமல் நம் தேசக் கைத்தொழில் விருத்தியடையாதென்பது நிச்சயம். இப்போது நம் தேசக் கைத்தொழில் விருத்தியாவதற்கு ஸ்த்ரீகள் எவ்வளவு தூரம் ஸாதகமாயிருக்கிறார்களென்பதை அறிய முயலுவோம்.

நாம் நம்முடைய பூர்வீக கைத்தொழில்களின் சரித்திரத்தைக் கவனிப்போமேயானால், அவைகளெல்லாம் நம் பெண்மணிகளாலேயே முன்னுக்குக் கொண்டுவரப்பட்டனவைகளென்பது நன்கு புலப்படும். உதாரணமாக, மஹாராஜ ராஜாக்களின் அரண்மனைகளிலுள்ள ராஜ சபைகளில் விரிக்கும் அழகிய ரத்ன கம்பளங்களுக்கும், உயர்வுள்ள ராணிகள் உடுத்துக்கொள்ளும் பட்டுப்பட்டாடைகளுக்கும் அழகிய சரிகை பூக்களிட்டு வேலை செய்து வந்தது நமது பெண்மணிகளே. இப்போதும் மைஸூர், பரோடா, காஷ்மீரம் நேபாளம் முதலிய சமஸ்தானங்களில் பெண்மணிகள் அவ்வேலைகளைச் செய்து வருகிறார்கள். நாளையும் டக்கா மஸ்லின்களுக்கு நூல் நூற்றுக்கொடுத்து வருவதும் நமது ஸஹோதரிகளே. நமது தேசத்தில் உயர்ந்த அத்தர் பில்லை முதலிய வாஸனை ஸாமான்களைச் செய்து வருவதும் மகம்மதிய ஸஹோதரிகளாவார்கள். சுருக்கமாகக் கூறுமிடத்து சித்திர விசிறி செய்தல், நேர்த்தியான தாழம்பாய் முடைதல், பட்டுநூல் நூற்று அழகிய பட்டுக் குட்டைகள், இடுப்பு பெல்ட்டுகள்

அல்லது கச்சான்கள், கயிறுகள் முதலியவை செய்தல், பட்டுத்துணி முதலியவைகளுக்குச் சாயம் போடுதல், சரிகை, குல்லாக்கள் சம்கி வேலை முதலியவைகள் செய்தல் இவை போன்ற தொழில்களை ஸ்த்ரீகளே செய்து வருகிறார்கள்.

மேலும், கட்டில் நாடா, பாவாடை நாடா, காக்கிநாடா, இவைகளைப் பட்டுநூலிலேயும், பருத்திநூலிலேயும் செய்து வருகிறார்கள். மேற்கூறிய கைத்தொழில்களினால் லக்ஷக்கணக்காக ரூபாய்களை ஸ்த்ரீகள் சம்பாதித்திருக்கிறதை நாம் பார்த்திருக்கிறோம். தேசத்தில் கைத்தொழில் விருத்தியடைந்தால் பணம் விருத்தியாகும். நம் தேசம் கஷ்டதசையிலிருந்து வருவதற்குப் பல காரணங்களுண்டு. அவைகளுள் ஒரு காரணம் புருஷர்கள் அந்நிய நாடுகளிலிருந்து வந்த ஸாமான்களை ஆதரிக்க முற்படவும் தேசத்துக் கைத்தொழில்கள் ஆதரிப்பாரில்லாமல் நாளடைவில் குறையவும் நேர்ந்தது. இப்போது ஏதோ ஆங்காங்கு சில கைத்தொழில்கள் பிழைத்து இருப்பதும் அத்தொழிலாளிகள் ஜீவித்து வருவதும் நம் ஸ்த்ரீகளின் ஆதரவினாலேயேயொழிய புருஷர்களின் ஆதரவினாலல்ல வென்பதைக் கவனிக்க வேண்டும். நாம் இங்கு சற்று யோசிக்குமிடத்துப் புருஷர்களுக்கு நம்தேசத்தில் மிக அபிமானம் கிடையாதென்று தெரியவருகிறது. இது போன்ற பல காரணங்களால் நம் தொழில்கள் விருத்தியடையாமல் இருக்கின்றன. இந்த யுத்தம் காரணமாக விலையின் ஏற்றத்தினாலும் உணவு பொருள் சாமான்கள் கிடைக்காமையினாலும் ஸ்த்ரீகள் இனி தங்கள் குடும்பத்தை நடத்துவது மிகவும் கஷ்டமாயிருக்குமென்று தெரிகிறது. ஆகவே, ஸ்த்ரீகள் புருஷன் வருமானத்தோடு தாங்களும் வீட்டிலிருந்து கொண்டு ஒழிந்த நேரங்களில் மேற் கூறிய தொழில்களில் ஏதோ ஒன்றைச் செய்து அதன் மூலமாக வருமானத்தைப் பெறலாம். நாம் மேற்கூறிய தொழில் செய்த ஸாமான்களுக்குக் கிராக்கி யிருக்கிறதாவென்று ஒரு ஸஹோதரி கேட்கலாம். நாம் அதற்குச் சொல்லும் விடையாவது நம் தேசத்தில் உண்டாகக்கூடிய எல்லா சாமான்களுக்கும் அதிகமாகக் கிராக்கியிருக்கின்றனவென்று சொல்லுவோம்.

இந்த மஹா யுத்தம் ஆரம்பிக்குமுன் நம் தேசத்தில் கிடைக்கக் கூடிய சாமான்களெல்லாம் ஜெர்மனி ஆஸ்டிரியா போன்ற தேசங்



களிலிருந்து வந்து கொண்டிருந்தன. இந்த யுத்தம் காரணமாக அங்கிருந்து வரும் ஸாமான்களெல்லாம் நின்றுபோயின. இந்த ஸமயம் நம் ராஜாங்கத்தாரும் தேச கைத்தொழில்களை விருத்தி செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். ஜப்பான் அமெரிக்கா போன்ற தேசங்களிலிருந்து எவ்வளவு சாமான்கள் வந்தாலும் இந்திய தேசத்தாருக்குப் போதுமான அளவு ஸப்ளை செய்ய முடியாது. ஆகவே, நமக்குச் சிறு கைத்தொழில்கள் விருத்தியாவதற்குக் காலமிதுவே. இந்தச் சிறு தொழில்களைக் கற்றுக் கொள்வது மிகவும் சுலபம். கடினமானவையல்ல. இவைகளை ஏற்படுத்த பெரிய முதலும் வேண்டாம். தற்காலத்திலோ குடும்ப வேலை மிகவுங் குறைவு. ஒழிந்த நேரத்தில் பத்துப் பெண்கள் ஒரே சபை போலக் கூடித் தங்கள் தங்கள் வீட்டில் மாமியார், நாத்திமார், புருஷன் முதலானவர்களுக்கும் தமக்கும் நடந்த சம்பாஷணையைப் பேசுகிறார்கள். அதிலோர் தலைவியிருந்து நீ அதற்கு அப்படிச் செய், இப்படிச் செய்யென்று தொட்டிலு மாட்டித் தொடையையுங் கிள்ளி விடுகிறாள். எத்தனை பேரெவ்விதஞ் சொன்னாலும் அச்சபையில் அக்கிராசனாதிபதியாயிருப்பவள் சொன்னதை உறுதியாய்ப் பிடித்து மாமியார், மருமகள், நாத்திமார் முதலானவர்களுடன் சண்டையும் வம்புந் தொடுத்துக்கொள்கிறார்கள். இதனாற் பண நஷ்டமுங் கௌரவக் குறைவுந்தான் மிகுதியாகிறது. ஸ்த்ரீகள் இரண்டொரு தொழில்களைக் கற்றிருத்தல் மிகவும் அவசியம். பெரிய ஆபத்துக் காலங்களில் இவை நமக்கு மிகவும் உபயோகப்படும்.

ஆர். ஜயலக்ஷ்மி அம்மாள்.

---

## LIFE OF CONTINENCE

By

**Mr. Sivadyananandan**

## பொறியடக்க வாழ்வு

பொறி யடக்கம் என்னும் சொல்லுக்கு இந்திரியங்களை யடக்கி நிற்றல் என்பது பொருளாகும். தற்காலத்துப் பலர் மேனாட்டாசாரங்களைக் கைக்கொள்ளும் அவசரத்தில் நம்நாட்டுப் புராதன ஆசாரங்களைக் கைவிட்டதுமன்றி அவற்றைத் தூஷிக்கவும் தலைப்

பட்டனர். எனினும், அவர்களுக்கு மனதில் நன்குபடும்படி அமெரிக்கா தேசத்து ஒரு கனவான் தம்முடைய புதிய 'ஜீவிய நூல்' என்னும் புத்தகத்தில் ஸ்த்ரீ புருஷர்கள் இரு பாலாரும் நடக்கவேண்டிய வழிகளை எழுதியிருக்கிறார். அவைகள் இங்கு வருமாறு.

## ஜீவிய ஒழுக்கம்.

கள், அபினி, புகையிலை, சாராயம் முதலியவற்றை உபயோகிப்பவர்களிடம் உலக விஷயானுபவங்கள் அதிகமாய்க் காணப்படுவதால், இவ்வனுபவங்களுக்கு மேற்சொன்ன வஸ்துக்கள் தூண்டுகோலாகின்றனவா அல்லது அவ்வஸ்துக்கள் விஷய அனுபவங்களை உண்டாக்குகின்றனவா என்று சொல்லுவது அசாத்தியமாயிருக்கின்றது. இவ்வஸ்துக்களை உபயோகிக்கும் எவனும், அல்லது எவளும் காம இச்சைகளையடக்கிப் பரிசுத்தமான வாழ்வையடைய எண்ணுதல் துர்லபம். ஈசுவர பிரதிபிம்ப சைதன்னியமாய்ச் (Image of God) சிருஷ்டிக்கப்பட்ட மனிதனது ஆத்துமாவைக் கெடுத்து அதற்கு என்றுமறியாத குற்றத்தை உண்டு பண்ணும் வஸ்துக்களில் கள்ளையும், புகையிலையும்விடக் கெட்டது ஒன்றுமில்லை. ஆகவே, பொறிகளையடக்கி வாழவேண்டுமென்று விரும்புவர் ஒவ்வொருவரும் இவ்விலாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாது.

இரண்டாவது விஷயம் மித ஆகாரமாகும். விஷயானுபவங்களில் அதிகமாகப் பிரவேசிப்பவர்கள் அதிகமாக அமிதபோஜனம் செய்வார்கள். ஒருவரை விஷயானுபவம் கொல்லத்தவறினால் அமித போஜனம் உடனே அந்த வேலையைச் செய்துவிடும். உலக விஷயத்தில் மூழ்கியிருப்பவன் எப்போதும் பெருந்தீனிக்காரனாயிருப்பான். ஆகையால், ஜீவிக்கவேண்டிய அளவுக்கு மாத்திரம் உண்ண வேண்டும். கொழுப்புப் பதார்த்தங்களை அதிகம் உண்ணக்கூடாது. தேயிலை, காப்பி, கோக்கோ முதலிய கஷாயங்களை உபயோகிப்பதை விட்டு விடவேண்டும். முக்கியமாக இவ்விதியை ஸ்த்ரீகள் அனுஷ்டிக்கவேண்டியது அவசியமாகும். எத்தனை ஸ்த்ரீகள் காலையில் காப்பி முதலிய பானங்களைக் குடித்துவிட்டுத் தமக்குப் பசியில்லாத காரணத்தால் தமது புருஷர்களுக்கும் பசியிராது என்றெண்ணி சமையல் வேலை முதலியவற்றைப் பிராமுகமாகச் செய்கிறார்களென்பதைப் பலரும் பிரத்தியட்சமாகக் காண்பார்கள். ஆகையால், சுத்த



தீர்த்தம் தவிர மற்ற எவ்வித பானமும் ஒருவரும் குடிக்கக்கூடாது. வேண்டுமாயின் சிறிதளவு பாலைக்குடிப்பது நலம். நாம் உண்ணும் உணவை மெல்லுவதற்கும் ஜீரணப்படுத்துவதற்கும் எச்சிலையுதவக் கடவுள் நமது கடைவாயிலும் நாக்கினடியிலும் எச்சிற் பையை உதவியிருக்கிறார். நாம் அதைக் கவனியாது நமது உணவை காப்பி முதலிய பானங்களால் தொண்டைக்குள் தள்ளிவிடுவது எவ்வளவு மதியீனமான காரியம்.

மாமிச உணவுகளில், கொழுப்பு, முட்டை, நண்டு, நத்தை, பலவித மீன் இவற்றை உண்ணக்கூடாது. அவை நமது காம இச்சைகளைத் தூண்டிவிடுவதால் இந்திரியங்களை அடக்க விரும்புவர்கள் யாவரும் அவற்றைப் புசிக்கக்கூடாது. கூடுமானவரையில் மாமிசவுணவு இல்லாமலே யிருப்பது நலம். தேக வலிமையில் பழைய காலத்து கிரீஸ்தேச ஸ்பார்டர் (Spartans) என்ற ஜாதியார் சாகவுணவுகளைக் கைக்கொண்டிருந்த வரையில் தமது வீரியத்திற் சிறந்திருந்தார்கள் அவ்வுணவைக் கைவிட்டு மாமிச போசனம் பண்ணத் தலைப்பட்டதும் தங்கள் வீரிய மெல்லாமொடுங்கித் தட்டுக்கெட்டு நிலைதவறி யழிந்தார்கள்.

ரொட்டியே ஆகாரமாயுள்ளவர்கள் சுத்தத் தண்ணீரிலும் பாலிலும் பிசைந்த மாவால் ரொட்டி தட்டிச்சுட்டுத் தின்று தண்ணீர் குடிக்கவேண்டும். புளிக்கவைத்துச் செய்யும் எவ்வித உணவும் சரீர ஆரோக்கியத்துக்கு எடுத்ததல்ல. உப்பு சிறு அளவாக உபயோகிக்கக்கூடாது. மசாலைவர்க்கங்களையும் உபயோகியாமலிருப்பது நல்லது. அவை குடலுக்கு எரிச்சலைக் கொடுக்கும் வஸ்துக்களாகும்.

உடை சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கதுபோல அமைந்திருக்க வேண்டும். அது சுத்தமாயும் சுகத்துக்கு அனுகுணமாயுமிருக்க வேண்டும். சரீர நரம்புகளை இறுகப்பிடிக்கும்படி இடுப்பில் துணிகளை ஒருபோதும் உபயோகிக்கக் கூடாது. இவ்விஷயத்தை ஸ்த்ரீகள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு அவயவங்களில் இரத்த ஓட்டம் சரியாக ஓடாவிடில் பிரசவ அபாயம் நேரிடுமென்ற விஷயம் மனதில் பதிந்திருக்கவேண்டியது. குறுகிய இடையழகென்றெண்ணிப் பெண்கள் நரம்புகளை இறுக்குவதனாலே தான்

இடுப்பில் இரத்தம் கட்டிப்போய்க் காம இச்சைகளை அதிகம் தூண்டிவிடுகின்றதென்பது வைத்தியசாஸ்திரிகளது கொள்கை. அம்மெல்லிய இடையுடையாள் தனது சுவாபாவிக இடுப்புத் தனக்கு வரும்வரையில் கருப்பம் தரிக்கக்கூடாது. சுபாவத்திலேயே தன்னிடுப்புச் சிறியது என்று சொல்லும் ஸ்த்ரீயும் கருப்பந்தரிக்கத் தகுந்தவளல்லள் என்றால் மற்றும் கட்டுக்களால் இடுப்பைச் சிறிது பண்ணிக்கொள்ளும் ஸ்த்ரீகளின் விஷயத்தைப்பற்றிக் கேட்பானேன்.

உணவு, உடை இவ்விரண்டைப் போலவே தேகாப்பியாசமும் முக்கியமானது. ஒவ்வொரு நாளும் சரீராப்பியாசமும், மனோப்பியாசமும், நியாயமான விளையாட்டும் ஒவ்வொருவருக்கும் அவசியமானது. தற்காலத்தில் பலவகையாக வண்டிகள் ஏற்பட்டுவிட்டபடியால், எப்போதும் உட்கார்ந்தே வேலை செய்யும் குமாஸ்தாக்கள்கூட தங்களுக்கு அத்தியாவசியம் வேண்டியதான சரீர அப்பியாசத்தைவிட்டு விட்டார்கள். தங்கள் அலுவலிடங்களுக்குக் காலையும் மாலையும் நடந்து செல்லும் வழக்கங்களை அவர்கள்விடாது வைத்துக் கொள்ளுவார்களானால் அது அவர்களுக்கு எவ்வளவு நன்மையைத் தரும். நடையைக் காட்டிலும் லாபகரமான சரீராப்பியாசம் வேறொன்றுமில்லை. அந்நடையும் தம்மொத்த நண்பர்களோடு செய்யப்படுமானால் அது பயக்கும் நன்மைக்கு அளவில்லை. தற்காலத்துச் சிலர் கால்களைக் கடிக்கும் பூட்சு மேஜோடுகளைப் போட்டுக்கொண்டு பலரும் தம்மைப் பார்த்து வியக்கும்படி நடக்கப் பழகுவதை ஆண் பெண் இருபாலரிலும் காணலாம். அந்நடையினால் எள்ளளவு பலனுமுண்டாகாது. சுபாவமாய்க் கைகால்களை வீசிக்கொண்டு தனது இயற்கையான நடையாக நடப்பதே எப்போதும் மிக்க பலனைத் தருவதாகும். அப்படி நடக்கும்போது ஜனங்களின் க்ஷேம ஸம்பந்தமாக மனதுக்கு உயர்வையும் உற்சாகத்தையும் தரத்தக்கப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டு போகவேண்டுமேயன்றி அதிகமாக மூளைக்கு வேலையைக்கொடுத்து மனதுக்குக் கோபம் வெறுப்பு முதலிய விஷயங்களை உண்டாக்கக்கூடிய பேச்சைப் பேசலாகாது.

வரும் சிவத்தியானாநந்தன்.

## WALKING IN SLEEP

By
K. P. Seshadri Aiyangar
(Asst, Muthialpet High School, Madras.)

### தூக்கத்தில் நடை

நித்திரையில் நினைவு என்பது கனவேயாகும். இராத்திரியில் தூங்கும்போது நமது தேகசக்தியெல்லாமடங்கி ஒடுங்கிக் கிடக்கிறது. அந்த வேளையில் மனோ சக்தியானது விளையாடும் விளையாட்டை நாம் கனவென்று சொல்லலாம். இந்தக் கனவு ஆச்சரியமாயிருக்கும். இதன் உண்மையான காரணங்களை இது வரையும் ஒருவரும் கண்டுபிடித்தார்களில்லை. அதி அத்புதமாயிருக்கிற விஷயங்களில் கனவும் ஒன்று. கனவென்பது ஈச்வரனால் நமக்குப் பின்வரும் சுகதுக்கங்களைக் காட்ட முன்னதாகவே அனுப்பப்படும் தூது என்று பழையகாலத்துப் பெரியவர்களின் கொள்கை. இதற்கு உதாரணமாக ராமாயணத்தில் பரதன் தம் தகப்பனான தசரத சக்கரவர்த்தி சாகும் முன் கண்டகனவு; அனுமான் வருமுன் சீதை கண்ட கனவு; ஹரிச்சந்திரன் கானகத்தில் கண்ட கனவு; இவைகளை நம் சகோதர சகோதரிகள் படித்திருக்கலாம்.

நம்மவர்கள் எல்லாரும் கனவில் பூரண நம்பிக்கை யுடையவர்கள். எவனொருவன் விடியற்காலத்தில் நல்ல கனவோ அல்லது கெட்ட கனவோ காணுகிறானோ அவன் கண்ட கனவின்படி அதன் பலனை அடைவான் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் பிரகாரமே நடந்து வருகின்றது. ஞானிகள் இந்த உலகம் எப்படிப் பொய்யோ அதுபோல் கனவென்பதும் தூக்கத்தாலுண்டாகும் பொய்த்தோற்றமென்பார்கள். ஆனால், கனவு என்பது என்னவென்றால் அது நமது விழிப்புக்காலங்களில் நமது புத்தியில் படியும் எண்ணங்களின் பிரதிபிம்பம் என்று ஒருவாறு சொல்லலாம். ஒருவன் விழிப்பில் காணாததைக் கனவில் காண்பதில்லை.

அற்ப எண்ணமும் அற்ப புத்தியுமுடையவன் பெரும்பாலும் பயங்கரமான கனவு காண்பான். ஒருவனைக் கொலை செய்தவன் தூங்கும்போது ஜாக்கிரதையாய் கவனித்துப் பார்ப்போமானால் கனவு அவன் மனதிலிருப்பதுடன் கலந்து பயங்கரமாகப் பிதற்றுவான். அவன் தான் ஒளித்துவைத்திருக்கும் சங்கதிகளை வெளியிடுவான்.

குழந்தைகள் தூங்கும்போது கவனிப்போமானால் அது குற்றமற்றதாகையால் தான் பகலில் சிரித்து விளையாடியதை நினைவில் நினைத்துக்கொண்டு தூக்கத்தில் சிரிக்கும். பின்பு துக்கப்படும்; நாமிதை நரிமிரட்டு என்று சொல்கிறோம். நாம் விழிப்புக்காலத்தில் கெட்ட காரியங்களைச் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் கனவில் மிகப் பயங்கரமான கனாக்களைக் காண நேரிடும். சில கணித சாஸ்திரிகள் விழிப்புக் காலத்தில் கண்டுபிடிக்கமுடியாத உண்மைகளை கனவில் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நமது ஆகாரப்பைக்கும் கனவுக்கும் சம்பந்தமிருப்பதாக அநேக வைத்யர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். கனவில் நினைவு என்பது மனதுக்கு மாத்திரமல்ல. தேகம் முழுமையும் கனவுகாண்பதாகச் சொல்லலாம். எப்பொழுது தேகமும் கனவு காண்கிறதோ அதற்குக் கனவில் நடை என்று பெயர். கனவில் நடை என்பதை கருமவியாதிக்குச் சமமாகச்சொல்லுகிறார்கள். இதைக் கீழ் வரும் ஸம்பவத்தால் விளக்குவோம்.

ஓர் ஆஸ்பத்திரியில் ஒரு டாக்டர் இருந்தார். அவரிடத்தில் ஒரு ஏழையான பையன் வைத்தியம் கற்றுக்கொண்டிருந்தான். அவன் கெட்டிக்காரப் பையன். ஆகவே, அவனிடத்தில் டாக்டருக்கு அதிக அபிமானம். ஆனால், அவனுக்கு கனவில் நடை என்ற வியாதியிருந்தது. இது டாக்டருக்குத் தெரியவந்தது. அன்று முதல் அவனறியாமல் அவனைப் பரிக்ஷித்து வந்தார். ஒரு நாள் அவர் ஒரு பூண்டு விஷயமாய்ப் பாடசாலையில் பிரசங்கம் செய்தார். பிறகு, எல்லாரையும் அந்தப் பூண்டை மறுநாள் சரிவரப் பரிசீலனை செய்து கொண்டுவரும்படிச்சொன்னார். எல்லாரும் அவ்விதமே பரிசோதித்துக் கொண்டுவருவதாக ஒப்புக்கொண்டார்கள். அன்றிரவு சாப்பாடான பிறகு எல்லோரும் நித்திரை செய்ய அவரவர்களிடத்துக்குச் சென்றார்கள். ஆனால், டாக்டர் அந்தப் பையன் தூங்கும் அறைக்குள் வந்தார். மாணாக்கன் நித்திரை செய்து கொண்டிருந்தான். டாக்டர் அவனருகில் உட்கார்ந்து பரிக்ஷிக்கத் தொடங்கினார். திடீரென்று படுத்துறங்கினவன் எழுந்திருந்தான். அவன் உறக்கம் விட்டு எழுந்திருந்தவனல்ல. கனவில் நடையின் உபாதியால் எழுந்திருந்தவன். என்ன செய்கிறான் என்று டாக்டர் பார்த்தார். மாணாக்கன் தன் சட்டையை யெடுத்துப் போட்டுக்கொண்டு கதவைத் திறந்து மெதுவாகத் தன் வீட்டைக் கடந்து இரவு 12-மணி வேளையில் வெளியில் புறப்பட்டான். தூரநின்று எங்கு போகிறாய் என்று டாக்டர் கேட்டார். தோட்டத்திற்கு என்று சரியாய்ப் பதிலளித்தான். இன்னார் கேட்டார் இன்னபதில் சொன்னோம் என்னும் நினைவு அவனுக்குக் கிடையாது. போகும் வழியில் வண்டிகளுக்கு ஒதுங்கிக் கொடுத்து ½ மைல் தூரம் சென்று எந்தப் பூண்டைப்பற்றி உபாத்தியாயர் வகுப்பில் சொன்னாரோ அதைப் பிடுங்கித் தன் பையில் போட்டுக்கொண்டு கொஞ்சமும் வழி பிசகாமல் வீடுவந்துசேர்ந்தான். பிறகு, கதவை மூடித் தன்னறையில் புகுந்து படுக்கையைத் தூக்கி அதன் கீழ் பூண்டைச் சரியாய் வைத்துவிட்டுப் படுத்துக்கொண்டான். இதை யெல்லாம் அந்த டாக்டர் பார்த்துப் பரிசோதித்துவிட்டு அந்தமாணாக்கன் மறுபடியும் தூங்கின பிறகு தானும் அங்கேயே சமீபத்தில் படுக்கையைப் போட்டுக்கொண்டு தூங்கினார். பொழுதுவிடிந்ததும் அவர்கள் தனித்தனியே எழுந்தார்கள். பின்பு, டாக்டர் மாணாக்கனைப் பார்த்து இரவில் என்ன செய்தாய் என்று கேட்க அவனுக்கு ஒன்றும் ஞாபகமில்லை. அப்புறம் அவன் செய்த ஒவ்வொன்றையும் சொல்லிப் பூண்டை தலையணையைப் புரட்டி எடுத்துக் காட்டினார். அப்பொழுது அவனுக்குத்தான் அவஸ்தைப்படும் வியாதி இன்னதென்று தெரிய வந்தது.

இந்தக் கனவில் நடை என்ற வியாதியால் வருந்தும் ஸ்த்ரீயையோ புருஷனையோ அதட்டி மிரட்டி சரியான ஸ்திதிக்குக் கொண்டுவர ஒருபொழுதும் முயலக்கூடாது. அப்படிச் செய்தால் அவன் மாண்டான். ஆகையால், வெகு ஜாக்கிரதையாய் அவனை அல்லது அவளைக் காக்கவேண்டும். ஆனால், எப்படி இடைவிடாமல் காக்கமுடியும்? இதற்கு ஒரு சிகித்ஸை இருக்கிறது. அதாவது, ஸ்த்ரீகளாகட்டும் புருஷர்களாகட்டும் பகற்காலங்களில் துன்மார்க்க எண்ணங்களை நினைக்கக்கூடாது. ஸதா கடவுளைத் தியானித்துக்கொண்டிருக்கவேண்டும். பொய் பேசுதல், திருடுதல், வஞ்சகம் செய்தல் முதலிய எண்ணங்களை மனதினின்றும் விலக்கவேண்டும். வாக்கு மனம் காயம் முதலியவைகள் சுத்தமாயிருத்தல் அவசியம். நல்ல ஸகவாஸத்தில் பழகி தெய்வபக்தி யுடையவர்களாயிருந்தால் காலக்கிரமேண அந்த வியாதி போய்விடும்.

ராவ்சாஹேப் ப. சம்பந்த முதலியார் இயற்றிய பேயல்ல பெண் மணியே என்னும் நாடகத்தில் அதன் கதா நாயகியான பங்கஜம் இந்த மாதிரியான கனவில் நடையால் அவஸ்தைப் பட்டாள். இரவில் உறக்கத்தில் எழுந்திருந்து வெளியில் உலாவுவாள். ஜனங்கள் அவளைப் பேயென்று எண்ணி அப்பேயை அகற்ற எவ்வளவோ திரௌபதை யம்மனை வேண்டிக்கொண்டார்கள். தன் காதலனைப் பற்றி நினைத்துக்கொண்டு தன்னை விவாகஞ் செய்துகொள்ளவேண் டுமே என்ற ஏக்கத்தோடு ஓரிரவு தூக்கத்தில் நடக்கலானாள். அப் படிச் செல்லும்போது அயலான் அறையில் புருந்தாள். தெரிந்து புகவில்லை. அவஸ்தையால் புகுந்தாள். இப்படிச் சென்றதால் காத லன் இவள்மீது அபாண்டமாக நினைக்க நேர்ந்தது. அப்பொழுதும் அவள் தன் நாதனைப்பற்றி பிதற்றுவதைக் கண்ட நாயகன் அவள் மீது குற்றமில்லாதிருக்கக் கண்டு விவாகஞ் செய்துகொண்டான் என்று அந்த நாடகம் கூறும். ஆகவே, இந்த வியாதியால் மனஸ்தா பமும் அபாண்டமான பழியும் பிராண நஷ்டமும் ஏற்படும். இப்படிப் பட்ட வியாதியும் பகவான் ஜனங்களுக்கு உண்டாகும்படியாகச் செய்திருக்கிறார். இதுவும் அவருக்கு திருவுளச் சம்மதம் போலும்.

சேஷசயனம், 14-4-1917. } கி. பி. சேஷாத்ரி அய்யங்கார்.

---

## OLD SAYINGS

By

**Mr. Adage M. A.**

## பழமொழிகள்

1. அவனன்றி ஓரணுவும் அசையாது—கடவுளில்லாமல் உலகத்தில் ஒன்றும் நடக்காது.

2. அறனை மறவேல்—ஈசுவரனை நாம் மறக்கக்கூடாது.

3. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்—தாயார் கடவுளுக்கும் முந்தி, தகப்பனுக்கும் முந்தி கொண்டாடப் படவேண்டுமென்றால் பிள்ளைகளிடத்தில் நாம் எவ்வளவு அன்பாயும் உண்மையாயும் அவர்களுக்கு உதவி புரிந்து கொண்டுமிருக்கவேண்டும். சுமந்து பெற்றதனாலேயே நமது குழந்தைகள் நம்மை இப்படிப் பாவித்து நடத்துவார்களென்று எண்ணுவது பிசகு. நாமும் நமது தாய் தகப்பனை யப்படி பாவித்துப் பிள்ளைகளுக்குக் காட்டவேண்டும்.



4. அறிவுடையோரை அரசனும் விரும்புவான்.

5. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் இந்நான்கு குணங்களே பெண்ணும்.

6. அச்சமு நாணமு மறிவிலோர்க்கில்லை. ஆகையால், பெண் கல்வி அவசியம்.

7. அறம், பொருளின்பமும் வீடும் கொடுப்பதறிவே.

8. அருவறுத்த சாப்பாட்டுக்கு மறமறத்த பட்டினி தேவலை.

9. அதிக ஆசை அதிக நஷ்டம்; ஏழைப் பெண் ராஜ குமாரனுக்குத்தான் வாழ்க்கைப் படுவேனென்று சொல்லலாமா?

10. அடிடா மேளம், பிடிடா பாக்கு வெற்றிலை என்று அவசரத்தில் கல்யாணம் செய்துவிடக்கூடாது. பிள்ளையின் குலம், சீலம், வித்தை, சொத்து, கோத்திரம், வயது இவைகளை விசாரித்து அவனுக்கு நாதியிருக்கிறார்களா என்று பார்த்துப் பெண்களுக்குக் கல்யாணம் செய்யவேண்டும். இல்லாவிட்டால்,

11. அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாளா மென்றாகிவிடும்.

12. அய்யா கதிரு, அம்மா குதிரு என்று ஜனங்கள் பரிகசம் செய்ய இடம் இருக்கக்கூடாது.

13. அசட்டுக்கு வாழ்க்கைப் பட்டு ஆயிரம் வருஷம் கஷ்டப்படுவதைவிட சமத்துக்கு வாழ்க்கைப் பட்டுக் கொஞ்ச காலமிருந்தால் போதும், ஏனென்றால்,

14. அசட்டுக்கு அகங்காரமும், செவிட்டுக்குச் சூனியமும் உண்டு.

15. அவரை விதைக்கத் துவரை முளைக்குமா? அசட்டுப் பெற்றோர்களிடத்தில் அசடான குழந்தைகள் பிறந்து மாரடிக்கும்.

16. அசட்டுக்கு அறுபது நாழியும் தியாஜ்யம் என்று சொல்வதுபோல் நாம் அசடாயிருக்கக் கூடாது.

17. அன்ன நடை நடக்கப்போய் தன் நடையையும் மறந்தாளாமென்று மினுக்கிக் குலுக்கி நடக்கக்கூடாது. அதெல்லாம் குடித்தனப் பெண்ணுக்கு அழகில்லை. அதற்காக ஒருவனும் வலுவில் வந்து கொத்திக்கொண்டு போய்விடமாட்டான்,

18. கல்யாணத்தில் செலவை ஒழுங்காய்ச் செய்யவேண்டும். "அரைப் பணத்தில் கல்யாணம், அதிலே கொஞ்சம் வாண வேடிக்கை" யென்று இருக்கக் கூடாது.

19. அம்மையாரிருக்கிற இடத்தில் சோமக்கலம் கொட்டப் படாது என்று சொல்லாதே.

20. அடாது செய்தால் படாது படவேண்டும்.

21. அசல் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி இராதே. எல்லோரும் நன்றாயிருக்க வேண்டுமென்று நினை.

22. அத்தைக்கு மீசை முளைத்தாலன்றோ சித்தப்பா.

23. அவிழ்த்த இடத்தில் அரை நாள்; குதித்தஇடத்தில் கோமணம் என்று சாமான்களை மூலைக்கு மூலைபோடாதே.

24. அவன் கிடக்கிறான் குடிகாரன்; எனக்கு ஒரு மொந்தை வார் என்று பிறரைப் பழித்து நீ பழிப்புக் கிடமாகாதே.

பழமொழி.

---

## NATURAL HISTORY FOR YOUNG FOLKS

By

**Pandit V. Subramania Ayyar.**

## சிறுவர்களுக்கான பிராணி சாஸ்திரம்

அரிது அரிது மானிட ராதல் அரிது என்று சொல்லியபடி மனிதராய்ப் பிறப்பது அருமை. மிருக பட்சிகளாய்ப் பிறப்பதைக் காட்டிலும் உலகத்தில் மனித ஜன்மம் எடுத்திருப்பது எவ்வளவோ உயர்ந்தது. நம்மிலும் கீழ்ப்பட்ட ஜன்மங்களாகிய மிருகபட்சிகளும் நம்மைப் படைத்த கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டன என்று நினைத்து அவைகளிடத்து நாம் அநுதாபம்காட்டி நடக்கவேண்டும். அப்போதுதான் நாம் ஜன்மம் பெற்றதற்குத்தக்க பலன் கிடைக்கும்.

மிருகங்கள், பட்சிகள், ஊர்வன முதலியவற்றைக் காட்டிலும் மனிதன், உயர்ந்த பிறவியை அடைந்திருக்கிறானாயினும், அவன் மிருகம் போன்றே இரத்தம், சதை, முதலியவற்றுடனும் பிறந்திருக்கிறான். மிருகங்களைப் போலப் பார்வையும், காதையும் உடையவன். அவன் மிருகங்களைப் போல உணவின் ருசியை யறியவல்லவன்; அவைகளைப் போல சிரமங்களை உணரத்தக்கவன். மிருகங்கள் செய்வனபோல சில காரியங்களைச் செவ்வையாய் மனிதன் செய்யமுடியாது. மனிதனுடைய தேகத்தையும் வாலில்லாக்குரங்கின் (Ape) தேகத்தையும் பரீக்ஷித்துப் பார்த்தால் ஒற்றுமைகள் பெரிதும் காணப்படும். ஆகவே, மனிதன் மிருக இனத்தைப்போலப் பிறந்திருந்தாலும் வேறு உயரிய குணங்கள் பெற்றுள்ளமையால் சிறந்து விளங்குகிறான்.



ஆனால், குதிரையும், நாயும் போன்ற வேகத்துடன் மனிதன் ஓடச்சக்தியுள்ளவனல்லன். மனிதப் பிறவியில் ஈசுவரனை அறியவும் அவருடைய குணங்களைப்பற்றி ஸ்தோத்திரஞ் செய்யவும், அவருடைய உருவத்திற்கு வணக்கஞ் செய்யவும் அவருக்குத் தொண்டு செய்யவும் கடவுள் மனிதனுக்குச் சக்தி கொடுத்திருக்கிறார். ஈசுவரன் உலகத்திலுள்ள பிராணிகளுக்குக் கொடுத்த நன்கொடைகளில் சிறந்தது மனிதனுக்குக் கொடுத்த இந் நன்கொடையேயாகும். மனிதன் இவ்விஷயத்திலும் பிறவிஷயங்களிலும் சீர்திருத்தமடையச் சக்தியுடையவன். அவன் தான் குடியிருக்கத்தக்க வீட்டைப் பலமுறைகளிலும் முயன்றுக் கடைசியில் நன்றாகக் கட்டிக்கொள்ள முடியும். அவன் தன் குழந்தைகளுக்கும் அம்மாதிரி கற்பித்துகொள்ளச் சக்தியுடைவன்.

ஆனால், இம்மாதிரியான விஷயங்களில் மிருகங்கள் சீர்திருத்தமடைய முடியாது. கொரில்லா (Gorilla) என்ற மிருகத்தைப் பற்றி எவரும் அறிவார்கள். இவைகள் மனிதனைப் போன்று காடுகளில் வசிக்கும். வேடர்கள் தீமூட்டின இடத்தில் அத்தீயை விட்டு அவர்கள் சென்ற அக்கணமே அவைகள் அவ்விடத்தில் போய் உட்கார்ந்து குளிர் காயும். எரியும் நெருப்பில் தம் கை கால்களைக்காய்ச்சிக்கொண்டு குளிர்ச்சியை நிவிருத்திசெய்துகொள்ளும். குளிர்ச்சி நீங்கப் பெற்று அவை ஆநந்தம் அடையும். ஆனால், அம்மிருகங்கள் இன்னும் சில விறகுகளை ஒடித்து அவற்றில் போட்டு அத்தீயை வளர்க்க அறிவு பெறவில்லை. ஆகவே, அம்மிருகங்கள் மனிதவர்க்கத்திற்கு அடுத்த பதவியில் வருவது. இந்தப் பதவியில் இருக்கும் மிருகங்களைப்பற்றி பின் சொல்லுவோம்.

வி. சுப்பிரமணிய ஐயர்.

# MORAL LITERATURE
## சன்மார்க்கக் கல்வி

### LESSONS FROM SITA'S LIFE

By
**Mr. M. R. Sreenivasa Ayyar**
(Pleader, Periakulam)

சென்றயீப் பத்திரிகையின் 201ம் பக்கத் தொடர்ச்சி.

### ஸ்ரீ சீதாதேவியினிடமிருந்து சில நீதிகள்

ராவணன் தன்னுடைய பிரதாபத்தையும், பராக்ரமத்தையும் நயமாயும் பயமாயும் எடுத்துச் சொல்வதை ஸ்ரீ சீதாதேவி கொஞ்சமேனும் அவைகளை மதிக்காமல் தர்மத்தில் திடமாக நாடின மனதை உடையவளாய் அவனுக்குக் கொடுத்திருக்கிற மறுமொழியானது அவளுடைய விசேஷ ஞானத்தையும் பதிவிரதா தர்மத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

ஸ்ரீ ராமர் சீதையைக் கூட்டிக்கொண்டு அயோத்தியில் இருவரும் சேர்ந்து வாழ்ந்து வரும் நாளில் அவர் தமக்கு நகரத்தாரின் சொற்களால் ஏற்பட்ட அபகீர்த்தியை விலக்கும் பொருட்டு லக்ஷ்மணரைக் கூப்பிட்டார். கர்ப்பவதியான சீதையைக் காட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் தனியே விட்டு விடும்படியாக அவருக்குக் கட்டளையிட்டார். இதை லக்ஷ்மணரால் சொல்லக்கேட்ட சீதை சோகத்தால் பூமியில் விழுந்து பிரக்ஞையற்று அப்பால் தெளிந்து அடியில் கண்டபடி லக்ஷ்மணரிடம் கூறலானாள். "ஐயோ! உலகங்களிலுள்ள அநேக துக்கங்களையும் அனுபவிப்பதற்கே இந்தச் சரீரம் ஏற்பட்டதோ! சகல துக்கங்களும் என் ரூபத்தை எடுத்து வந்திருக்கின்றனவோ! பூர்வ ஜென்மங்களில் என்ன பாவம் செய்தேனோ? எந்த ஸ்த்ரீ புருஷர்களை அன்னியாயமாய்ப் பிரித்துவைத்தேனோ? யாதொரு தோஷத்தையும் அறியாத என்னை ஜனங்கள் தூஷிக்கிறார்களே? அதைக் கேட்டு மகாராஜாவும் என்னைக் காட்டுக்கு அனுப்ப உத்தரவு விட்டார்! முன்பு தண்டகாரண்யத்தில் சஞ்சரிக்கையில் ஸ்ரீராமருடைய முகமண்டலத்தைப் பார்த்து அவருக்கு ஸேவை செய்வதில் நோக்கமுள்ளவளாய் சகல



வனவாஸ துக்கங்களையும் மறந்தேன். * * * இதைக் காட்டிலும் இந்த கங்கையில் விழுந்து பிராணனை விடுவது நல்லது. ஐயோ! அதுவும் எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே. இக்ஷ்வாகு வம்சம் சந்ததியில்லாமல் போகுமே! லக்ஷ்மணா! உத்திரவுப்படி செய். நீ என் நமஸ்காரத்தை மகாராஜாவுக்கும் மாமியார்க்கும் தெரிவி. நான் அவர்களுடைய க்ஷேமத்தை விசாரித்ததாகச் சொல்லு. சீதை சுத்தமானவளென்றும் களங்கமற்ற நடத்தையுள்ளவளென்றும் தம்மிடத்தில் எப்பொழுதும் அபாரமான பக்தியுடையவளென்றும் அவருக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், லோகாபவாதத்துக்குப் பயந்து என்னைக் காட்டுக்கு அனுப்பினாரென்றும் வேறு காரணத்தால் அல்லவென்றும் எனக்கு நன்றாய்த் தெரியும். அவருக்கு லோகாபவாதத்தால் நேரும் அபகீர்த்தியைக் காட்டிலும் எனக்கு இந்தச் சரீரம் பெரிதல்ல. ஆகையால், அந்த அபவாதத்தை எப்படியாவது விலக்கிப் பிரஜைகளை தர்மமாகப் பரிபாலனம் செய்ய வேண்டியது. ஸ்த்ரீகளுக்கு பர்த்தாவே தேவதை; பர்த்தாவே பந்து; பர்த்தாவே குரு. அவருக்குண்டான அபவாதம் பெரிதே யொழிய என் உயிர் பெரிதல்லவென்று நான் சொன்னதாக ராமருக்குத் தெரிவிக்க வேண்டியது" என்று லக்ஷ்மணரிடம் கூறிப் புலம்பினாள்.

ஷை உத்தமமும் தர்மமுமான வார்த்தைகள் பதிவிரதா சிரோன்மணியான சீதையைத் தவிர வேறு எவரால் சொல்ல முடியும்? தர்மமும் கீர்த்தியும் சாசுவதமானது. தேகமும் அது சம்பந்தமாக ஏற்படக்கூடிய கஷ்டமும் நிலையற்றது. ஆதலால், தர்ம பத்தினியானவள் தன் பிராணனை இழந்தாவது புருஷனுடைய இஷ்டத்தையும் தர்மத்தையும் நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கிறாளென்று சீதை உணர்ந்து நடந்ததானது நம்முடைய ஹிந்து மதத்தில் ஸ்த்ரீகளுக்கு விதித்திருக்கிற உத்தமமான தர்மமாயிருக்கிறது. சீதையினுடைய சாந்தமென்ன! ஸ்ரீராமர் பேரில் கோபமாவது வெறுப்பான எண்ணமாவது உண்டா? அந்த ஆராத சோகத்திலும் துன்பத்திலும் பதிவிரதா தர்மத்தைக் கைவிடாது மனம் சலிக்காமல் பேசின சீதையின் வார்த்தைகள் மிகவும் வியக்கத் தக்கன.

மேற்படி கஷ்டங்களெல்லாம் விலகி ஸ்ரீராமரை அடையும் நிலைமையிலிருந்த சீதையை பதிவிரதா தர்மத்தினால் முன் அக்னிப் பிரவேசம் செய்ததுபோல மறுபடியும் அக்னிப் பிரவேசம் செய்து சபதம் பண்ணவேண்டுமென்று ஸ்ரீராமர் சொல்ல அப்பொழுது

சீதை பூமியைப்பார்த்து அடியில் வருமாறு சொல்லலானாள். “நான் மாதவனைத் தவிர வேறொருவரை மனசாலும், வாக்காலும் கர்மத்தாலும் எண்ணாமலிருப்பது வாஸ்தவமானால் மாதவனுக்குப் பத்னியான எனக்கு பூமிதேவி இடம் கொடுக்கவேண்டியது. ராமனைத் தவிர வேறு புருஷனை அறியேனென்பது நிஜமானால் பூமிதேவி எனக்கு இடங்கொடுக்கட்டும்” என்று சொல்ல உடனே அவளை பெற்றெடுத்த தாயான பூமிதேவியானவள் பூமியைப் பிளந்துகொண்டு நாகங்களால் கொண்டு வரப்பட்ட ரத்ன ஸிம்ஹாசனத்தில் சீதையை எடுத்து வைத்துக் கொண்டு ரஸாதல உலகத்திற்குச் சென்றாள்.

ஸ்ரீராமருடைய செய்கையால் தனக்குச் சகிக்க முடியாத துன்பம் நேர்ந்தபோதிலும் தன்னை விட மேலான தர்மத்தை மதித்து அதைக் காப்பாற்றும் பொருட்டு தன் புருஷன் அவ்வாறு செய்தாரென்று நன்குணர்ந்து அவரைக் குறை கூறிப் பழிக்காமல் அவருடைய கட்டளையை சிரமேற்கொண்டு சந்தோஷமாக அங்கீகரித்து நடந்து வந்த வைதேகிக்கு உலகத்தில் எந்தப் பதிவிரதை தான் சமானமாவாள்? புருஷனிடத்து அவளுக்குள்ள அன்பு மிகவும் திடமானது. திரௌபதி முதலியமற்ற பதிவிரதா சிரோன்மணிகளைப் போல் தனக்கு அபராதம் செய்தவர்களைச் சபிப்பது கூட தன்னுடைய பதி பக்திக்கு ஒரு குறைவு வருமோவென்று நினைத்து நடந்தாள். இப்பரத கண்டத்தில் அவதரித்த லோக மாதாவாகிய சீதாதேவியை நமது சகோதரிகள் யாவரும் வணங்கி வழிபட்டு எக்காலமும் துதிசெய்து வருவதுமல்லாமல் அந்த கற்புக்கரசியின் தர்ம வழிகளை அவர்களும் தவறாது அனுசரித்து வருவார்களாக.

M. R ஸ்ரீனிவாஸய்யர்.

---

ஞானதீபிகை அல்லது தர்மதீபிகை :—இது ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியமானது. ஸ்த்ரீ புருஷர்கள் தங்கள் வாழ்நாளில் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் விதிகளையும் விஸ்தாரமாக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஸன்மார்க்கத்தைப்போதிப்பதற்கு இதைவிட வேறு புத்தகம் கிடைப்பது அரிதென்று எல்லா பத்ரிகைகளும் அபிப்ராயப் பட்டிருக்கின்றன. சீக்ரம் ஆர்டர் செய்யுங்கள். விலை ரூ. 1. “பெண் கல்வி” சந்தாதார்களுக்கு விலை அணா 12.—மானேஜர் ‘பெண் கல்வி’ சென்னை, ஈ.

## TEACHING MORAL STORIES

By

**A Story Teller**

## சிறு நீதிக்கதைகளைப் போதித்தல்

சிறுநீதிக் கதைகள் மூலமாகவே சிறுவர்களுக்கு நீதிகளைப் புகட்டவேண்டும். தாய்மார்கள் குழந்தைகளுக்குக் கதை சொல்லிக்கொண்டிருப்பது வீண் வேலை யென்றெண்ணக்கூடாது. ஓடியாடிக் களைத்த குழந்தை தன் தாயின் மடிமீது விழுந்து ‘ஒரு கதை சொல்லம்மா’ வென்று கேட்கும் சமயங்களைக் கைவிடாது சிறிய கதைகளின் வழியாக நீதிகளைக் கற்பிக்கவேண்டும். இளைஞர்களுக்குச் சொல்லும் கதைகள் சிறியதாகவே யிருக்கவேண்டும். சிறிய கதைகள் மூன்றுவகைப்படும்.

(1) வெறுங்கதை :—(Tales) இக்கதையில் நீதியிருந்தாலுமிருக்கலாம். இல்லாவிடினுமில்லை. கதையே தான் பிரதானம்.

(2) நீதியையே பிரதானமாகக் கொண்ட கதைகள் :—(Parables) சொற் சாதுர்யத்தினால் நீதிகளை வளர்த்தி இக்கதைகள் சொல்லப்படும். இக்கதைகள் மூலமாகவே மஹமத்நபி ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் முதலிய மகான்கள் மதோபதேசம் செய்தனர்.

(3) நீதிக்கட்டுக்கதைகள் :—(Fables) இவைகளைப் பற்றியே கொஞ்சம் விஸ்தாரமாகக் கூறுவோம். இதில் முதல் இரண்டு வித கதைளின் அம்சங்களும் கலந்துள்ளன. கதை விநோதமாயும், ரம்மியமாயுமிருக்கும். நீதியும் நன்றாக முன்னின்று அமைந்திருக்கும். ஆனால், நீதியானது இரண்டாவது விதத்தைப்போல் தனியாக விஸ்தரிக்கப்படாமல் கதாபாத்திரங்களை நடிக்கச் செய்யுஞ் சாதுர்யத்தினாலேயே உள்ளங்கை நெல்லிக்கனிபோல தானாக விளங்கும்.

இம்மூன்றாவது விதக் கதைகளே குழந்தைகளுக்கேற்றவை. தன்னை யறியாமலே நீதிகளைக் குழந்தைகள் கிரஹிப்பார்கள். உதாரணமாக, ஆமையும் முயலும் பந்தயம் ஓடினகதை; நரியானது காக்கையை யேமாற்றி அப்பத்தை பிடுங்கிக்கொண்டுபோன கதை; இவைகள் எவ்வளவு ரம்மியமாயிருக்கின்றன, முதன் முதலாக

இக்கதைகளைக் கேட்கும் குழந்தைகள் காக்கை யேமாறுவதைக் கண்டு 'அசட்டுக்காக்கை' யென்று உடல் குலுங்கச் சிரித்துக் கொண்டே வெகு எளிதில் நீதியைக் கண்டு கொள்ளும்.

இம்மாதிரி கதைகளில் அநேகமாக நாடகப் பாத்திரங்கள் மிருகங்களும் மற்ற அசேதன வஸ்துக்களாகவுமிருக்கும். இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லக்கூடும். ஒன்று தந்திரம்; இரண்டாவது சௌகர்யம். மனிதர்களின் நடவடிக்கையைக்கொண்டே நீதி புகட்டவேண்டும். மனிதர்களுக்கு எல்லாவித குணமுமிருக்கின்றது. ஆனால், ஒவ்வொரு மிருகத்திற்கும் ஒவ்வொரு (Predominant) குணம் முதன்மையாக வெளித்தோன்றி நிற்கும். நரி தந்திரமானது, முயல் பயந்த ஸ்வபாவமுடையது, கழுதை மட்டி புத்தியுடையது, ஆனால், பொறுமையுள்ள பிராணி. இச்சிறு கதைகளின் அம்சங்கள் மூன்று.

கதை ஒரே விஷயத்தை குறித்துச் சொல்லப்படவேண்டும். இதில் அதிக விபரங்களும் பல சந்தர்ப்ப விஷயங்களும் நிறைக்கப்படாதிருக்கவேண்டும்

(2) நீதிகள் தெளிவாக முன்னிற்க வேண்டும். எல்லோரும் சுலபமாக ஒரு கதையிலிருந்து அதே நீதிகளைக் கிரஹிக்கக் கூடியதாயிருக்கவேண்டும்.

(3) மிருகபாத்திரங்கள் தங்கள் இயற்கைக் கேற்ப நடக்கவேண்டும். உதாரணமாக, சிங்கம் தைரியமாயிருக்கவேண்டும், ஓநாய் குரூரமாயிருக்கவேண்டும். குதிரையின் கர்வம், குரங்கின் விஷமம், நரியின் தந்திரம், செவ்வனே தவறுதலில்லாமல் முறையே அந்தந்த மிருகங்களுக்கு உரிமைப் படுத்தவேண்டும்.

இம்மாதிரி கதைகளே நமது குழந்தைகளுக்குத் தகுந்தவைகள். ஈசாப்பின் கட்டுக் கதைகளிலும் பஞ்சதந்திரத்திலும் நிறைந்து கிடக்கின்றன. இவைகளின் அருமையை உணராமல் நாம் சிற்சில சமயங்களில் பழய பாட்டிக்கதைகளென்று அலக்ஷியஞ்செய்கிறோம். அது முற்றிலும் பிசகு.

ஒரு கதை சொல்வோன்.

# WOMAN'S WORLD
## ஸ்த்ரீ பிரபஞ்சம்

## HOME NEWS.
### உள்நாட்டு வர்த்தமானம்.

**The Victoria gosha Hospital.**

விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரி :—ஏப்ரல்மீ 7-ந் தேதி லார்ட் பெண்டலாண்ட் அக்ராஸனத்தின் கீழ் மேற்கண்ட ஆஸ்பத்திரியின் இவ்வருஷத்தியக் கொண்டாட்டம் [illegible] ரின் டென்டன்டு வீட்டில் நடந்தது. சென்ற வருஷத்தை [illegible] இவ்வருஷம் ஆஸ்பத்திரி ஒவ்வொரு விஷயத்திலும் விருத்தியடைந்திருப்பதைக் குறித்து அக்ராஸனாதிபதி ஸந்தோஷ மடைந்தார்.

**Arangethal.**

அரங்கேற்றல் :—சென்றமீ 21-ந்தேதி மிஸஸ் சதாசிவய்யர் அக்ராஸனத்தின் கீழ் தங்கசாலைத்தெரு அமராவதி பெண் பாடசாலையில் ஒரு கூட்டம் கூடிற்று. சுமார் 300 ஸ்த்ரீகள் வரை வந்திருந்தனர். அப்போது பண்டிதை ஸ்ரீமதி நாராயணி அம்மாள் அவர்கள் இயற்றிய கௌரியம்மையார் சரித்திரத்தை பண்டிதை ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி அம்மாள் அவர்கள் அரங்கேற்றி அவருடைய கவி சாதுர்யத்தைப் புகழ்ந்து பேசினர். பண்டிதை ஸ்ரீமதி நாராயணி அம்மாள் அவர்கள் போன்ற ஸ்த்ரீ கவிகள் எவ்வளவு பேர் மறைவில் இருக்கிறார்களோ? இக்காலம் புருஷர்களைப்போலவே ஸத்ரீகளும் தங்களுடைய கல்வி ஞானத்தை வெளிப் படுத்துவது அவசியமாயிருக்கிறது. ஸஹோதரி மணிகள் இந்த ஸமயத்தை கைக்கொள்வது நலம். அக்ராஸனாதிபதியும் பண்டிதை நாராயணி அம்மாளவர்களின் கல்விச் சிறப்பை எடுத்துக்கூறி வந்திருந்த ஸ்த்ரீகளைப் படிப்பு விஷயத்தில் கவலை செலுத்தும்படி உத்ஸாகப்படுத்தினர்.

**The Stree Abeda Aikyananda Samajam.**

ஸ்த்ரீ அபேத ஐக்யாநந்த ஸமாஜம் :—இந்த ஸமாஜத்தாரின் பரோபகார வேலைகள் பின்வருமாறு :—1. இவர்கள் திக்கற்ற ஸ்த்ரீகளுக்கு ஒரு கைத் தொழிற் சாலை ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள்.

2. ஸுமார் 50 வீடுகளுக்குச் சென்று வீட்டுப் படிப்பு நடத்திவருகிறார்கள். 3. வீடு வீடாய்ச் சென்று போதிக்க ஸ்த்ரீகளை அந்தப் புரவாத்திச்சிகளாகப் பழக்கி வைக்கிறார்கள். 4. வார வாரம் பிரதி சனிக்கிழமை மாலையில் ஸமாஜம் ஆபீஸில் ஸ்த்ரீகளுக்கு வேண்டிய பிரசங்கங்கள் நடத்தப்படுகின்றன. 5. ஸமாஜமெம்பர்கள் வாசிக்க ஒரு வாசக சாலையும் ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். மேற்கண்ட நல்ல வேலைகள் செய்து வருகிற ஸமாஜத்தின் இவ்வருஷக் கொண்டாட்டம் இம்மாதத்தில் நடை பெறுமென்று கேள்விப் படுகிறோம்.

ஒரு விவாஹம் :—சென்ற மாதத்தில் பம்பாயில் 1872-ம் வருஷத்து 3-வது சட்டப்படி மிஸ். இஞ்ஜிநீர் M. A. என்ற ஒரு பார்சி ஸ்த்ரீ மிஸ்டர் தேசாயி M. A. என்ற ஒரு ஹிந்து கனவானை விவாஹம் செய்து கொண்டாள். இதற்குப் பலபிரபுக்கள் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வாதம் செய்தார்களாம்.

**A Cruel Woman.**

ஒரு பாதகி :—சென்னையில் ஒரு கிறிஸ்தவ ஸ்த்ரீ 7-வயதுள்ள தன் பெண்ணின் அற்பக் குற்றத்திற்காக பழுக்கக் காய்ச்சிய கத்தியினால் பெண்ணின் கன்னம், கழுத்து, தோள் முதலிய இடங்களில் சூடு போட்டு விட்டாள். அந்தக் குற்றத்திற்காக அவளுக்கு கோர்ட்டார் 6-மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தனர்.

**War Loan & Indian Ladies.**

யுத்தக்கடனும் இந்திய ஸ்த்ரீகளும் :—தற்காலம் நடக்கும் மஹா யுத்தத்தை சீக்ரம் முடிக்க இந்தியா கவர்ன்மெண்டார் இந்திய ஜனங்களிடம் பணம் கடன் வாங்கி வருகிறார்கள். கொஞ்சம் சம்பளம் பெறுகிறவர்கள்கூட நம் கவர்ன்மெண்டாருக்கு வட்டிக்குக் கடன் கொடுத்து உதவி செய்யலாம். நம்மை இலவசமாக கவர்ன்மெண்டார் கேட்கவில்லை. பம்பாயிலுள்ள பார்சி ஸ்த்ரீகள் மாத்திரமே ஏறக்குறைய 50 லக்ஷ ரூபாய்க் கடன் கொடுத்திருக்கிறார்களென்று தெரிகிறது. நம் ராஜதானி ஸ்த்ரீகளும் இவ்விஷயத்தில் அக்கரை யெடுத்துக் கொள்ளுவது அவசியம்.

## FOREIGN NEWS.

## வெளிநாட்டு வர்த்தமானம்.

**America Women.**

அமெரிக்க ஸ்த்ரீகள் :—ஜெர்மனிக்கும் அமெரிக்க ஐக்ய மாகாணத்துக்கும் யுத்தம் உண்டாகி விட்டது. வெகு குதூகலத்துடன் அமெரிக்க தேச ஸ்த்ரீகள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து தேச உபகாரத்திற்காகப் பல வேலைகளைச் செய்ய முன் வருகிறார்களாம். புருஷர்கள் யுத்தத்துக்குப் போய்விட்டால் அவர்களுடைய வேலைகளை ஸ்த்ரீகள் வகித்துச் செய்வார்களென்று தெரிகிறது.

**Women Barristers.**

ஸ்த்ரீ வக்கீல்கள் :—இங்கிலாந்தில் ஸ்த்ரீகளும் வக்கீல்களாகச் சேரலாமென்று ஒரு மசோதா வந்திருக்கிறதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது. அமெரிக்காவில் வெகு வருஷங்களுக்கு முன்னதாகவே ஸ்த்ரீகளும் கோர்ட்டுகளில் வக்கீல்களாக ஆஜராகலாமென்று ஏற்பட்டு விட்டதாம்.

**A Woman's Great Deed.**

ஒரு பெண் மாதின் சிறந்தவேலை :—இவ்வுலகில் பெண்ணாய்ப் பிறந்து பெரிய பேரெடுத்த சில மாது சிரோன்மணிகளில் (Miss Riddel) மில்ரெடெல் என்பவள் ஒருத்தி. இம்மாது ஜப்பானில் குஷ்டரோகிகளுக்காக அதிகச் சிரத்தை எடுத்து வேலை செய்து வருகிறாளாம். இவள் இவ்வேலையில் புகுந்து ஏறக்குறைய இருபது வருஷ காலங்களாகின்றன. இதுவரைக்கும் ஜப்பான் கவர்ன்மெண்டார் இவ்வியாதியைப்பற்றி ஒரு ஏற்பாடும் செய்யவில்லையாம். பிறகு, இவள் செய்யும் பேருதவி ஜப்பான் சக்கரவர்த்திக்கும் சக்கரவர்த்தினிக்கும் எட்டியதாம். அதின் மேல் அவர்கள் வேண்டிய உதவி செய்வதாக ஒப்புக்கொண்டு இவள் கட்டிய ஆஸ்பத்திரியை விட பெரிதாகக் கட்டிக் கொடுத்தார்களாம். இப்பொழுது அந்த விடத்தில் 67 குஷ்டரோக வியாதியஸ்தர்கள் இருக்கிறார்களாம். இவள் இவ்வேலையில் புகுவதற்கு முன் குஷ்டரோகிகள் கஷ்டப்பட்ட நிலைமையைக் கதைகளாகச் சொல்லுகிறார்கள். கிறிஸ்தவ மிஷனரியாக வந்த இம்மாது இவ்வளவு தூரம் மானிட ஜென்மத்துக்

காக உதவி புரிவாளென்று இவளுடைய சிநேகிதர்களில் ஒருவரும் நினையாமலிருந்தாலும், தன்னை ஒரு பொருட்டாக எண்ணாமல் குஷ்டரோகிகளுக்கு உதவி புரிந்து வந்த இம்மாது சிரோன்மணியை ஜப்பான் தேசத்தார் ஒருக்காலும் மறக்கமாட்டார்கள். தற்காலத்தில் உலகத்தில் 3,000,000 குஷ்டரோகிகள் இருக்கிறார்களென்றும், அதில் சைனா, இந்தியா, ஜப்பான் ஆக இத்தேசங்களில் ஜாஸ்தி பேர் இருக்கிறார்களென்றும் தெரியவருகிறது.

**An Wonderful Aeroplane.**

ஒரு ஆச்சர்யமான ஆகாய விமானம் :— அமெரிக்கா தேசத்தில் ஒரு மாது நூறு (horse power) குதிரை வேகம் போகக்கூடிய ஒரு ஆகாயக்கப்பல் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறாளாம். அதில் அவள் சுமார் 5000 அல்லது 6000 அடி உயரத்துக்கு மேல், சராசரி ஒரு மணிக்கு 100 மைல் வீதம் மேலே ஆறு மணி நேரம் வரைக்கும் மிஷினை நிறுத்தாமலும், கீழே இறங்காமலும் பறந்து கொண்டிருந்தாளாம். இதை ஜனங்கள் அதிசயமாக நினைக்கிறார்கள். இதற்கு முன், அதிக நேரம் நிறுத்தாமல் பறக்கக்கூடிய கப்பல் கண்டு பிடிக்கவில்லையாம். அதனால்தான் ஸ்த்ரீ புருஷர்கள் யாவரும் அதிசயப்படுகிறார்களாம் :—மிஸ் மதுரம்.

**Women In The Front.**

போர் முகத்தின் ஸ்த்ரீகள் :—பிரான்சுப்போர் முகத்திற்குப் பின்னே ஸ்த்ரீ வேலைக்காரர்களை வேலைக்கு வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. சுமார் 5000-ஸ்த்ரீகள் பிரான்சுக்கு இங்கிலாந்திலிருந்து பழக்கி அனுப்பப்படுவார்களாம். 200-பேர் 200-பேர் வீதமாக அனுப்பப் படுவார்களென்று தெரிகிறது.

**Women Lecturers.**

ஸ்த்ரீ பிரசங்கிகள் :—ஜப்பானில் படித்த ஸ்த்ரீகள் சேர்ந்து "ஜப்பானிய ஸ்த்ரீகள் சங்கம்" என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள். அதன் அதிகாரிகள் ஸமீபத்தில் ஒரு மீட்டிங்கூடி கிராமம் கிராமமாக சுகாதாரத்தையும் குழந்தைகளைக் காப்பாற்றும் விதத்தையும்பற்றி பிரசங்கம் செய்ய ஸ்த்ரீ பிரசங்கிகளைப் பழக்கி வருகிறார்கள்.

# INSTRUCTIVE HINTS
# விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN
## குழந்தைகள் விஷயம்

**Children and Cats.**

குழந்தைகளும் பூனைகளும் :— நமது வீடுகளில் பூனைகளை வளர்ப்பது ஸஹஜம். சிறு குழந்தைகளை அவைகளோடு பெற்றோர்கள் விளையாட விடுகிறார்கள். பூனைகளின் மயிரில் நூற்றுக்கணக்கான விஷக்கிருமிகள் இருக்கின்றனவாம். மேலும் அவை ஒட்டுவாரொட்டியான விஷப்புழுக்களாகும். நமது குழந்தைகளை அவைகளோடு விளையாட விடக்கூடாதென்று ஒரு வைத்திய நிபுணர் கூறுகிறார்.

**Advice to Girls.**

பெண்களுக்குப் புத்திமதி :— பெண்களே! நீங்கள் உங்கள் தகப்பனையும், தாயையும் நேசியுங்கள். அவர்கள் உங்களை அதிகப் பிரியமாக நேசிக்கிறார்கள். நீங்கள் பிறந்தது முதல் அவர்கள் உங்களைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். நீங்கள் குழந்தைகளாக இருக்கும்போது அவர்கள் உங்களை நேசித்து உங்களுக்காகப்பாடுபட்டு வளர்த்தார்கள். உங்கள் தாய் தகப்பன்மார் உங்கள் பேரில் அன்பாய் இருக்கிறது போல உலகத்தில் ஒருவரும் அவ்வளவு அன்பாயிருக்கமாட்டார்கள். உங்களைப் படிப்பிப்பது யார்? உங்களுக்குச் சாப்பாடு போட்டுச்சட்டைபாவாடை வாங்கிக் கொடுப்பது யார்? நீங்கள் வியாதியால் கஷ்டப்படும்போது வைத்தியரைக் கூப்பிட்டு மருந்து கொடுப்பது யார்? உங்களுக்கு எல்லா நன்மையும் கொடுக்கும்படி கடவுளை வேண்டிக்கொள்வது யார்? அவர்கள் உங்களைப் பெற்றவர்களல்லவா? ஆகவே, உங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள். அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். அவர்கள் கஷ்டப்படும்போது அவர்களுக்கு உதவி செய்யுங்கள். நல்ல பெண்களென்று பேரெடுங்கள். கடவுள் உங்களைக் காப்பாற்றுவார். நல்ல பெயரெடுப்பது தான் பெண்களுக்கு லக்ஷணம். கெட்ட பெண்களை ஒருவரும் மதிக்கமாட்டார்கள்.

**Small Pox & Children.**

பெரியம்மையும் குழந்தைகளும் :— இது ஸாதாரணமாகக் குழந்தைகளுக்கு உஷ்ண காலங்களில் வரும் ஒரு வியாதி. இது தொத்து நோய்களுள் ராஜ நோய். வெகு சீக்கிரத்தில் சுற்றுப் பக்கங்களில் பரவும். இந்த நோய் எளிதில் குழந்தைகளைப் பற்றிக் கொள்ளும். இது காற்றின் வழியாகவும், அழுக்குத்துணிகளின் மூலமாகவும், மல மூத்ரங்களின் மூலமாகவும், தொத்துவியாதியாகப் பரவுகிறது. இது குழந்தைகளுக்குப் போட்டினால், அவர்களை வெகு கஷ்டத்திற்கு உள்ளாக்கி விடும். நாம் இவ்விஷயத்தில் வெகு ஜாக்ரதையாயிருக்கவேண்டும் இதிலும் பெரிய நோய்தான் ப்ளேக் என்று சொல்லப்படும். பெற்றோர்கள் குழந்தைகளுக்குப் பெரியம்மை போட்டிருக்கும்போது நல்ல வைத்தியர்களைக் கூப்பிட்டுச் சிகித்சை செய்யவேண்டும். சுகாதார முறைப்படி வீடுகளைச் சுத்தமாய் வைப்பது அவசியம்.

## II

## DOMESTIC HINTS AND SUGGESTIONS

### கிருஹத்தியக் குறிப்புகள்

**Cow's Milk.**

பசும்பால் :—பசுவின் வயதுக்குத் தக்கபடி பால் வித்தியாசப்படும். ஈற்றில் பால் கொஞ்சமாயிருந்து வர வர அதிகப்படும். கன்றின் வயதுக்குத் தக்கபடி பால் பேதப்படும். கன்றின் இளம் பிராயத்தில் பால் அதிக தண்ணீர் கலந்ததாயிருந்து வரவர கனத்த சத்துக்கள் சேர்ந்ததாகயிருக்கும். உதயத்தில் கறக்கும் பாலில் தண்ணீர் கொஞ்சமாயும் கனத்த சத்துக்கள் அதிகமாயிருக்கும். பசுவின் தீனிக்கும் தக்கபடி பாலின் தன்மையும் அளவும் வேறுபடும். கடைசியில் கறக்கப்படும் பாலில் ஆடை அதிகமாயிருக்கும்.

**How To Keep Milk Pure.**

பாலைக் காப்பாற்றும் வகை :—பாலைக் காய்ச்சிக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து ஆவி எழும்பிக்கொண்டிருக்கும்பொழுதே ஒரு பாத்திரத்தில் அடைத்துப் பத்திரமாய் மூடி வைக்கலாம். பாலைக்காய்ச்சாமல சர்க்கரையையும் சோடாபவுடரையும் சேர்த்து ஒரு பாத்திரத்தில் ஆகாயம் உட்கொள்ளாதபடி மூடி வைக்கலாம். பாலைக் கொஞ்சம் சூடாக யிருக்கும் போது சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி கட்டியாய்ப் போனபிறகு வெயிலில் உலர்த்திக் காற்றுப்படாதபடி வைத்துக் கொள்ளலாம். வேண்டியபொழுது இதில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீரில் போட்டால் அது சேர்த்தியான பாலாகும்.

**Children's Food.**

பிள்ளைகளின் போஜனம் :—சிறு பிள்ளைகளுக்கு லகுவாய் ஜீரணமாகக் கூடியதும இரத்தத்தையும், மாமிசத்தையும், உண்டாக்கத்தக்க சத்துக்களையுடையதுமான பால், முட்டை, கோதுமை ரொட்டி போன்ற பதார்த்தங்கள் வேண்டும். மசாலைகள் கூடாது ஏனெனில் நுட்பமான ஜீரணக்கருவிகள் கெட்டுப்போம். நாலு வயதுக்குட்பட்ட பிள்ளைகள் மூன்று மணிக்கொரு தரம் 5-அல்லது 6-தரமும், 16 வயதுக்குட்பட்டவர்கள் 4-மணிக் கொருதரம் 4-தரமும் சாப்பிடவேண்டும்.

**Hints to observe during Epidemic Season**

விஷபேதிகாலத்தில் செய்யவேண்டிய குறிப்புகள் :—சுத்தமான தண்ணீரை உபயோகிக்கவேண்டும். மதுபானங்களை நீக்கவேண்டும். அஜீரணத்தை உண்டாக்கும்படியான பதார்த்தங்களை முற்றிலும் நீக்கவேண்டும். பசித்திருந்தால் நித்திரைக் குறைவு. அசுத்த வஸ்திரம் கடினமுயற்சி முதலிய காரணங்களை நீக்கவேண்டும். சரீரத்தில் அனல் குறையாமலிருக்கும்படி வயிற்றைச் சுற்றி கம்பளி அல்லது பிளானலைச் சுற்றி வைக்கவேண்டும். வீட்டுக்குச் சமீபத்திலுள்ள தொட்டங்கள் சாக்கடைகள் கக்கூசுகள் முதலிய இடங்கள் சுத்தமாயிருக்கவேண்டும். வீடுகளை நன்றாய் வெள்ளையடிக்கவேண்டும். பேதியாகிறவர்களுடைய படுக்கை வஸ்திரம் முதலியவைகளைச் சுட்டெரிக்கவேணடும், அல்லது கெந்தகப் புகையைக் காட்டித் தண்ணீரில் துவைக்கவேண்டும். பேதிகண்ட வீட்டைப் பத்துநாள் வரையில் காலியாக்கவேண்டும். பேதி நடமாடுங் காலங்களில் கடை சந்தை முதலிய ஜனக்கூட்டமான இடங்களுக்குப் போகக் கூடாது. அதிக மனக்கவலைக்கும் பயத்துக்கும் இடங்கொடுக்கக்கூடாது.



## III

## VIEWS AND REVIEWS

### அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்

மனத்தீற் றுறுத்தும் மதிவிளக்கம்:—இப்புஸ்தகத்தை நமது பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். இது வித்தியாவதானம் பிரம்பை ம-ா-ா-ஸ்ரீ, பொன்னுவேற் பிள்ளை அவர்களால் எழுதப்பட்டு "லோகோபகாரி" வெளியாகிற சச்சிதானந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா 4. இது ஒரு சன்மார்க்கப் புத்தகம். ஸ்த்ரீ புருஷர்கள் தங்கள் வாழ்நாளில் பெற்றோர், பந்துக்கள், சிநேகிதர்கள், குரு, சிஷ்யன், எஜமானன் வேலைக்காரன் முதலியவர் களிடம் நடந்து கொள்ளவேண்டிய முறைகளை எளிய நடையில் மிகவும் அருமையாக எடுத்துக் கையாண்டிருக்கிறார். இது ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியமானது. வேண்டுவோர்கள் சென்னை கோமளீஸ்வரன் பேட்டை, "லோகோபகாரி" ஆபிஸில் பெற்றுக்கொள்ளவும்.

**Subodha Rama Charitram.**

ஸுபோத ராம சரித்திரம் :—இதை நமது பார்வைக்கு அனுப்பிய சகோதரிக்கு வந்தனம். இதை இயற்றியவர் சகோதரி வி. பாலம்மாள் ஆவார். இதன் விலை அணா-6. பாடசாலைகளில் சம்ஸ்கிருத பாஷையைப் பாடமாக எடுத்துக்கொண்டு படிக்கும் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் இது உபயோகப்படு மென்பது நமது அபிப்பிராயம். நாம் இதை வாசித்துப் பார்த்ததில் இதன் ஆசிரியர் தெளிவான ஸமஸ்கிருத ஞானம் உடையவரென்று தெரிகிறது. ஆகவே இதுபோன்ற வேறு சில புஸ்தகங்களையும் பாடசாலைக் குழந்தைகளுக்கு உபயோகப் படுமாறு அவர்வெளியிடுவாரென்று நம்புகிறோம். வேண்டுவோர்கள் ஸகோதரி வி. பாலம்மாள், விவேகாசிரமம், பெல்ஸ்ரோட், திருவல்லிக்கேணி என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

பஞ்சீகரண பௌதிக விவேக விளக்கம் :—இப்புஸ்தகத்தை நமது பார்வைக்கு அனுப்பிய ஸஹோதரிக்கு வந்தனம். இது நித்யானந்த சங்கீத சுந்தரியாகிய ஸ்ரீமதி பெங்களூர் நாகரத்தினம்மாள் அவர்களால் இயற்றப்பட்டு ஸ்ரீகணேச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதில் பரமசிவன் உமா தேவிக்கு அருளிச்செய்த சிவ ஞானமும், பஞ்சபௌதிக அத்யாய உடற் கூறும் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிச்செய்த மஹாவாக்ய ப்ரகரணமும் அடங்கி யிருக்கின்றது. அதாவது, பஞ்சீகரண விவரமும் மஹா வாக்யங்களின் ரகஸ்யங்களும் சொல்லி ஆத்மஞானத்தைக் காட்டி ப்ரஹ்மஞானத்தை ஸ்தாபிக்கின்றது. இதை யாவரும்படித்தறிந்து ஞானத்தைப் பெறுவாரென நம்புகிறோம். இவ்வருமையான புஸ்தகத்தைவெளியிட்ட நமது ஸஹோதரி ஆத்ம ஞானானுபவமுடையவரென்று தெரிகிறது. ஆனால், ஒரு குறையை மட்டும் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. புஸ்தகத்தில் அநேக இடங்களில் எழுத்துப் பிழைகள் தவறி விழுந்திருக்கின்றன. அடுத்த பதிப்பில் சுத்தப்பிரதியாக வெளி வருமென்று எதிர் பார்க்கிறோம். இதை வேண்டுவோர்கள் பெங்களூர் நாகரத்தினம்மாள் ஸ்ரீனிவாஸய்யர் தெரு, மிண்டு பேரஸ்டு, சென்னை என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

*THE FEMALE EDUCATION ADVERTISER.*

**MR. D. S. JOMNSON,**

**is here**

**FINE PHOTOGRAPHIC ARTIST**

**AND**

**BROMIDE ENLARGER,**

**Cheap Rates**

**20, Pidariar Koil Street, G. T. Madras.**

**TAMIL BOOKS SUITABLE FOR SCHOOL AND HOME READING.**

(× Approved by Text Book Committee).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸரஸ்வதி ... | 0 | 2 | 0 | பாதன் ... | 0 | 1 | 6 |
| ஸுலோசனை ... | 0 | 2 | 0 | விசித்திர வைத்தியன் ... | 0 | 2 | 0 |
| இட்டார்க்கு இட்டபயன் | 0 | 1 | 0 | ×பொன்மான் ... | 0 | 1 | 0 |
| ஊக்கமே உயர்த்துணை | 0 | 1 | 0 | ×கோமலாங்கி ... | 0 | 1 | 6 |
| கனகாங்கி ... | 0 | 4 | 0 | ×பெரிய மனிதனுடைய பிள்ளை ... | 0 | 0 | 6 |
| கௌஸல்யாதேவி ... | 0 | 2 | 0 | | | | |

சற்குரு

இஃது உபாத்யாயர்கட்கும் மாணவர்களுக்கும் உபயோகமான மாதாந்த செந்தமிழ்ப் பத்திரிகை. வருடச் சந்தா ரூபாய் ஒன்றே. வருட ஆரம்பம் ஜூலை, சற்குரு முதல்வருடத்திய வால்யூம் ரூ. 1, 2-வது வால்யூம் ரூ. 1.

*Apply to:*—**Manager, "SARGURU" OFFICE,**
87, Ramaswamy Street, MADRAS.

ஸஹோதரிகளுக்கு ஒரு விண்ணப்பம்.

நீங்கள் உண்மையை அறியுங்கள். பெங்களூரில் எங்கள் சொந்தத்தறியில் கைதேர்ந்தவர்களால் வெகு காலமாய்த் தயார்செய்யப் பெற்று மிக்க கீர்த்தியோடு விளங்கி வரும் ஸகல ஜவுளி தினுசுகளும் அநேகம் பேர் வேண்டுகோளுக்கிணங்கி இந்த சென்னைப்பட்டணத்தில் ஒரு கடை வைத்திருக்கிறோம். ஸ்திரீகளுக்கு வேண்டிய பெங்களூர் புடவை ரவிக்கை முதலியவைகள் ஸரஸ விலைக்கு விற்கிறோம். தினுசிலும் சாயத்திலும், ஜரிகையிலும் அழுத்தமான நெசவிலும் எங்கள் கம்பெனி பெயர் பெற்றது. ஒருதரம் உண்மையை அறிந்து பாருங்கள். எந்த தினுசுகளும் இஷ்டப்படி தயார்செய்து அனுப்புகிறோம். எங்கள் கம்பெனியை வந்துபார்க்கத் தவறாதேயுங்கள்.

எச், சங்கப்பா பனப்பா,

75, நைனியப்ப நாயகன் தெரு, (மெத்தை) பார்ட்டவுன், சென்னை.

THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்திர ஸகிதமான ஒரு தமிழ் மாதப் பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

| Vol. 6.<br>தொகுதி 6. | June 1917, ஜூன் மாஸம். | No. 9.<br>பகுதி 9. |
|---|---|---|

ஓம்.

பணி முனி புலிக் காலர் பரவு குஞ்சிதபாத பதும மெனதுளவ வாவிவாய்-
அணிபெற மலர்ந்து நறு மணநாறி நறையு குத்து ஆனந்தமீவ தென்றான்று
உணுநஞ் சினைக்க ளமடக்கி மதியொளிமுடி யிருக்க வோர்ஒண்டொடியிடத்து
அணுகி யகலாதென்றும் ஐந்தொழில் நடாத்திப் பொன்னம்பலத்தாடு மரசே.

இது நடராஜர் வணக்கம். பணி முனி என்றது பாம்புக்கால் முனிவராகிய பதஞ்சலி முனிவராகும். புலிக்கால் முனிவர் வியாக்ரபாதர். இவ்விரு முனிவரும் வளைந்த பாதங்களை யுடைய ஸ்ரீ நடராஜ மூர்த்தியை வணங்குகின்றனர். அப்பேர்ப்பட்ட பகவானின் பாததாமரைகள் என்னுடைய மனசாகிய குளத்தில் அழகாக மலர்ந்து, நன்றாக வாசனை வீசி, தேனாகிய அமிருத தாரையைப் பெருகவிட்டு எனக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதெந்நாள்? உள்ளே உண்ணத்தகுந்த விஷத்தினைக் கழுத்திலே நிறுத்தி, நீலகண்டனென்னும் பெயர் புனைந்து மூன்றாம்பிறைச் சந்திரனை சிரசின்மேல் தாங்கி சந்திரசேகரன் என்னும் பெயர் பெற்று, பார்வதிதேவிக்கு வாமபாகத்தினைக் கொடுத்து, அர்த்தநாரி என்னும் பெயர் பெற்று அவ்வம்மையைவிட்டு என்றும் நீங்காது சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரஹம் என்னும் பஞ்ச கிருத்தியங்களைத் தானாகவே நின்று நடத்திப் பொன்னம்பலத்தில் திரிபுர நடனம் செய்கின்ற நடராஜ

மூர்த்தியே! தாங்கள் எப்போது எம்மனசில் சதா சர்வகாலமும், வீற்றிருந்து பிரமானந்தத்தை யளிக்கப்போகிறீர்! தாங்கள் புலிக்கால் முனிவருக்கும், பாம்புக்கால் முனிவருக்கும் அனுக்கிரகம் பண்ணுவதற்காக திருச்சிற்றம்பலத்தில் தேவர்களும், மூவர்களும் காண ஆநந்த நடனம் புரிகின்றீர். தாங்கள் அருந்தத் தக்க விஷத்தைக் கழுத்தில் அடக்கிக்கொள்ளும் பெருமையுடையீர். சந்திரன் பெற்ற சாபத்தை நீக்கி மூன்றாம்பிறைச் சந்திரனாக அவரைச் சிரசில் பெறும் பெருமையைப்பெற்று உலகத்தாரால் போற்றப்படுகின்றீர். பிருங்கி மகரிஷியின் பக்தியினைப் பரிசோதிக்கக் கருதி பார்வதிக்கு இடப்பாகத்தைக் கொடுத்து அர்த்தநாரி என்று சகல உலகத்தாராலும் கொண்டாடும் பெருமை பெற்றீர். ஐந்தொழில்களையும் இச்சாமாத்திரத்தினால் செய்யும் பெருமை பெற்ற உமக்கு என் மனதில் புகுந்து ஆநந்தமளிப்பது பெரிதல்ல; ஆகவே, உமது பாதாரவிந்தங்கள் எனது தியானத்திற்குப் பாத்திரமாகவேண்டும். அப்படிப்பட்ட பரம ஐசுவரியம் பொருந்திய பரமேசுவரனை ஸ்த்ரீ புருஷர்கள் யாவரும் அநுதினம் ஸ்மரித்துக் கைதொழுதலினால் இகபரங்களுக்குச் சௌகரியமுண்டாகும். யாவரும் பரமேசுவரனைத் தியானிப்பதனால் சம்சாரத்தாலுண்டாகிற விசேஷ பயங்களினின்றும் நிவாரணமடைவார்கள். ஸ்ரீமத் நடராஜனின் நாமோச்சாரணத்தினாலேயே எவரும் தம் பாவங்களினின்றும் நீங்கப்பெறுவர். ஆகவே, எவரும் ஸ்ரீ நடராஜனை ஸ்மரிக்கவேண்டும்.

# PROGRESS OF THE WORLD
# பிரபஞ்சப் போக்கு

**Hindu Women University.**

ஹிந்து ஸ்த்ரீகள் யூனிவர்ஸிடி :—புரொபஸர் கார்வேயின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஹிந்து ஸ்த்ரீ யூனிவர்ஸிடியில் தற்போது ஒரு ஸ்த்ரீகள் காலேஜ் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதில் சென்ற வருஷம் 5 மாணவர்கள் சேர்ந்து வாசித்தார்கள். இந்த வருஷம் புதிதாக அதில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள ஒரு மெட்ரிகுலேஷன் பரீக்ஷை நடத்தப்படும் என்று தெரிகிறது. இப்பரீட்சையில் தேறிக் காலேஜில் சேர்ந்து வாசிக்கும் திறமையுள்ள ஸ்த்ரீ மாணவர்கள் 4-பேர்களுக்கு மாசம் 10 ரூபாய் வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுமாம். இதுவரையில், இந்த யூனிவர்ஸிட்டிக்கு மொத்தம் 50,000 ரூபாய் வரையில் நன்கொடை வாக்களிக்கப்பட்டிருக்கிறது. சிலர் வருஷந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார்கள். இப்படி வாக்களிக்கப்பட்டிருக்கும் தொகை 10,000 ரூபாயாகும். இக்காலேஜும் யூனிவர்ஸிடியும் நாளுக்குநாள் விருத்தியாகி செழிக்குமென்று நம்புகிறோம்.



**Vacation Schools.**

விடுமுறைப் பள்ளிக்கூடங்கள்:—ஸாதாரணமாகக் கோடைகால விடுமுறைக்கும் மாரிகால விடுமுறைக்கும், பாடசாலைகளைச் சாத்துவதுண்டு. இந்த விடுமுறை நாட்களில் பிள்ளைகள் துஷ்ட ஸகவாஸம் செய்யாமலும் தேகப் பயிர்ச்சி செய்யாமல் நல்ல காற்றோட்டமில்லாத வீடுகளிலிருந்து கொண்டு தேகத்தை அசௌக்கியப்படுத்திக்கொள்ளாமலும் இருப்பதற்கே விடுமுறைப் பள்ளிக்கூடங்கள் மேனாடுகளிலுள்ள சில முக்கியபட்டணங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இது போன்ற பள்ளிக்கூடங்களினால் பாடசாலைப் பிள்ளைகள் தங்களுடைய சோம்பேரித் தனத்தை ஒழித்து துர்ஸகவாஸம் நீங்கி ஸன்மார்க்கர்களாயும் தேகதிடமுள்ளவர்களாயும் இருக்கிறார்களென்று இவைகளை நடத்துவோர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைவெளியிட்டிருக்கிறார்கள். பாடசாலைகளில் பிள்ளைகளின் க்ஷேமத்தையும் அபிவிருத்தியையும் கவனிக்கும் கவர்ன்மெண்டார் அவர்களுடைய வீடுகளிலும் கவனியாமலிருப்பதானது உசிதமானதல்ல. விடுமுறைப் பள்ளிக்கூடங்களுக்கு யாதொரு கடின விதிகளும் கண்டிப்பும் கிடையாது. அமெரிக்காவில் இதைப்போன்றப் பள்ளிக்கூடங்கள் ஒவ்வொரு பாடசாலையையும் ஒட்டி நடத்தப்பட்டுவருகின்றன. இங்கிலாந்திலும் இது 1902-ம் வருஷத்தில்தான் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்டது. இவைகளெல்லாம் பொது ஜனங்களின் ஒற்றுமையினாலும் ஆதரவினாலும் நடத்தப்படவேண்டும். இவைகளால் பிள்ளைகளடையும் நன்மைகள் அளவற்றன. ஸாதாரணமாக விடுமுறைப் பள்ளிக்கூடங்களில் தெய்வ ஸ்தோத்திரங்களும், ஸன்மார்க்க நீதிகளும் போதிக்கப்படவேண்டும். மேலும் பாட்டுகள், படிப்பைப் போதிக்கும் நாடகங்கள், கதைகள் இயற்கை

வினோதங்கள் சரித்திரங்கள் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படவேண்டும். இவைகளை நடத்துவோர்கள் பிள்ளைகளுக்குத் தொந்திரவாயிராமல் பட்சமாயும் பொழுது போக்காயுமிருக்கும்படி செய்ய வேண்டும். நம்தேசத்தில் இது போன்ற விடுமுறைப் பாடசாலைகள் அவசியம். விடுமுறை நாட்களில் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் வீடுகளிலிருந்து கொண்டு, துன்மார்க்கக் கதைகளையும், பயத்தைக் கொடுக்கும்படியான பேய் பிசாசுக் கதைகளையும், சொல்லக்கேட்டுக் காலத்தைக் கழிக்கிறார்கள். ஆகவே, மேற்கண்ட விடுமுறைப் பள்ளிக்கூடங்கள் உயர்ந்த உத்தம நோக்கங்களைக் கொண்டு பிரதி பாடசாலையையும் ஒட்டி ஸ்தாபிக்கப்படுவது அவசியம். இதை ஸ்கூல்களை வைத்து நடத்துவோர்கள் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

**A Medical School For Women.**

ஸ்த்ரீகளுக்கு ஒரு வைத்ய பாடசாலை :—நம் சென்னை கவர்ன்மெண்டார் ஸ்த்ரீகளுக்குத் தனியாக ஒரு வைத்யபாடசாலை அவசியமென்று கருதி அதை ஏற்படுத்துவதற்குரிய ஸகல முயற்சிகளையும் செய்யும்படி ஸர்ஜன் ஜெனரலைக் கேட்டுவிட்டிருக்கிறார்கள். இவ்வைத்யபாடசாலை முதன் முதலில் மதுரையில் ஏற்படுத்துவதாக யோசனை செய்து அது சௌகரியமாயிருக்காதென்றுகருதி, பிறகு சென்னை நகரத்திலேயே ஸ்தாபிப்பதாகத் தீர்மானித்து விட்டதானது கவர்ன்மெண்டாரின் விவேகத்தைக் காட்டுகிறது. இந்த ஸ்த்ரீ வைத்யபாடசாலை திருவல்லிக்கேணி கோஷா ஆஸ்பத்திரியையொட்டியாவது கல்யாணி ஆஸ்பத்திரியையொட்டியாவது ஸ்தாபிக்கப்படுமென்று அறிகிறோம். பல காரணங்களையும் சௌகரியங்களையும் உத்தேசித்துத் திருவல்லிக்கேணி கோஷா ஆஸ்பத்திரியை ஒட்டி ஸ்தாபிப்பதே பொருத்தமாகும். அதிகாரிகள் இவ்விஷயத்தைச் சீக்கிரப் படுத்துவார்களென்று எண்ணுகிறோம்.

---

லோககுரு வருகையை ஒவ்வொரு மதஸ்தினரும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம் ஸ்த்ரீகள் அவர் வருகையை எதிர் பார்த்து அவரவர்களுடைய கடமையைச் செய்தல் அவசியம் :—ஒரு ஞானி.

* * * *

படித்த ஸ்த்ரீகள் ராமாயணம் மஹா பாரதங்களைப் படிக்கும்போது ஸ்தூலமாக அவைகளின் அர்த்தத்தைக் கவனிக்காமல் தத்வார்த்தமாகக் கவனித்துப் படிக்கவேண்டும் :—ஸ்ரீமதி மீராபாய், கல்கத்தா.

# SPECIAL ARTICLES
# விசேஷ வியாஸங்கள்

## WOMEN'S DUTY TO COMING OF WORLDS TEACHER

By

Mr B. S. Ramasubba Aiyar

## லோககுருவின் வருகைக்கு ஸ்த்ரீகளின் கடமை

சகோதரிகளே !

இக்காலத்தில் நீங்கள் கூர்மையாய் உணரவேண்டிய தொன்றுண்டு. அதாவது, ஸ்த்ரீகளுக்கு அன்பு மிகுதி; புருஷர்களுக்கு ஞானம் மிகுதி; ஆனாலும், ஸ்த்ரீபுருஷர் ஒவ்வொருவருக்கும் இரண்டும் வெகு அவசியம்; புருஷர்களுடைய தர்மத்தைக் கூட இருந்து முன் செலுத்துவதற் கேற்ற ஞானம் ஸ்த்ரீகளிடத்திலும், பெண்மக்களிடத்தில் கௌரவ புத்தி கொள்ளத்தக்க அன்பு புருஷர்களிடத்திலும் தற்காலத்தில் மிகக் குறைவு. ஒரு குடும்பத்தில் ஸ்த்ரீ புருஷர் இருவரும் நேர்மையாயிருக்கவேண்டியது போலவே, ஒரு தேச க்ஷேமத்திற்கும் இன்றி அமையாதது, அத்தேசத்து ஆண், பெண் மக்களின் ஒற்றுமையேயாம். நமது இந்தியாவின் அபிவிருத்தியை ஒரு ரதத்திற்கு ஒப்பிடுவோமானால் ஸ்த்ரீயும் புருஷனும் அதற்கு அவசியமான இரண்டு சக்கரங்களாவார்கள். ஒற்றைச் சக்கரம் மட்டும் பயன்படாது. இதுதான் நாம் அறியவேண்டிய உண்மை.

நாம் ஒவ்வொருவரும் அன்பையும், ஞானத்தையும் நம் சீலத்தில் நிறைய அமைத்துக் கொள்ளவேண்டும். அன்பை யிழந்த ஞானமும், ஞானத்தை யிழந்த அன்பும் பயனற்றவை. இதுமட்டுமோ? தீமையுமல்லவோ விளைகின்றன! எப்படி யென்று பார்ப்போம். ஐரோப்பிய யுத்தத்தில், அரும் பெரும் காரியங்களை ஸாதிக்கக்கூடிய மஹா புத்தி பராக்ரமசாலிகள் தம் ஞானத்தையும், சக்தியையும் எப்படி உபயோகிக்கிறார்கள்? ஒரு க்ஷணத்தில் பதினாயிரக் கணக்கான ஜனங்களைக் கொல்லும் வழியைக் கண்டுபிடித்தி

ருக்கிறார்கள். இங்கு அன்பிழந்த ஞானம் கொடும் பகையாயிற்று. அங்ஙனமே ஞானமிழந்த அன்பு குருட்டு பக்தியும் மூடத்தனமுமாக விளையும். எப்படியெனில், "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்னும் உண்மையை அநேகர் அறிகிறோமில்லை. அறிவோமானால், நம்மையும், நம் பிள்ளைகளையும், நம் பந்துக்களையும், நாம் எவ்வளவு உயர்வாய் மதிக்கிறோமோ, அப்படியே பிறருக்கும், அவரவர் பிள்ளைகளும் பந்துக்களும் உயர்வு என்று உணர்வோம். அப்போது எல்லோரையும் ஸமமான அன்போடு கருதுவோம். இது இல்லாததால் தமது குழந்தைகளை நேசிக்க எண்ணி, பிறர் குழந்தைகளிடத்து அசூயை கொள்கிறோம். ஞானமில்லாமல் அன்பு த்வேஷத்தைக் கொடுக்கும். எது எக்காலத்திலும் அழியாத ஸத்தியமாயுள்ளதோ அதையறிவதுதான் ஞானம். அதனிடத்து பிரியங்கொள்வதுதான் அன்பு. ஸத்தியத்தைத் தழுவாத அன்பும் ஞானமும் சிதைந்துபோம்.

அன்பும், ஞானமும் ஸத்தியத்தைத் தழுவவில்லை. ஆக, உடலையும், உருவத்தையும் பெரிதாக நினைக்கிறோம். உயிரையும் குணத்தையும் கவனிக்கிறோமில்லை. வெளி டம்பத்தைக் கண்டு மயங்குகிறோம். உள்ளத் தூய்மையை அசட்டை பண்ணுகிறோம். அதனால், உலக வாழ்வு ஈசுவர கைங்கர்யமாய் நிகழாமல் உண்பதும் உறங்குவதுமாக முடிகிறது. இப்படிச் சீர்குலையும் காலங்களில்தான் பகவான் அவ்தரிப்பதாகக் கீதா சாஸ்திரம் கூறுகிறது. அதாவது, "தருமம் அழிந்து அதர்மம் ஓங்கும்போது நான் அவதரிக்கிறேன்" என்பதேயாம். இக்காலத்தில் ஞானம் அபிவிருத்தியாகியிருப்பதற்குத் தக்கபடி உலகத்தில் அன்பு இல்லை. நமக்குத் தெரிந்தமட்டில் பிறருக்கு கற்பிக்க வேண்டுமென்ற அன்பும், நாம் கற்றுக் கொண்டதற்குத் தக்கபடி நேர்மையாய் நடக்கத் தீவிர பக்தியும் இப்போது நம்மவருள் மிகத்தேவை. எல்லோரிடத்தும் ஸகோதர பாவமான அன்பு கொள்ள வேண்டுமென்று நாம் எவ்வளவு நன்றாயறிந்தாலும், நம்கண்ணுக்குப் பிரியமான ரூபவான்களிடத்திலும் ரூபவதிகளித்திலும் மட்டும் அன்பு கொள்கிறோமேயொழிய, மற்றவர்கள் எவ்வளவு நற்குணம் பொருந்தியவர்களாயிருந்தாலும், அவர்களைக் கவனிக்கிறோமில்லை.

நம்தேசத்து ஸ்த்ரீ புருஷர்களாகிய நாம் பரஸ்பரம் கௌரவத்தோடு ஒருவரையொருவர் நன்கு மதித்து ஒருங்கு சேர்ந்து நம் தேசத்துப் பொதுநலம் ஒன்றிற்கேனும் உழைக்க முன்வராத



இக்காலத்தில், கருணையங் கடலான ஸ்ரீகிருஷ்ண பகவான் அவதரிப்பாரானால், அவரை நாம் அறிந்து நன்கு மதிக்கமுடியுமா? லோகாநுக்கிரகத்திற்கு அவர் புருஷ ரூபமாய்த்தான் வருவார், ஸ்த்ரீ ரூபமாய் வரமாட்டார்; ஸ்த்ரீ ரூபமாய் வருவார், புருஷ ரூபமாய் வரமாட்டார் என்றும் நாம் கருதல் நியாயமோ? ஒரு மஹா புருஷன் வந்தால் அவருக்கு ஸ்த்ரீயென்றும் சூத்திரனென்றும் பேதபுத்தி இருக்குமோ? "ஸ்த்ரீகளும், வைசியர்களும், சூத்திரர்களும் என்னையடையத் தகுந்தவர்கள்" என்று பகவான் கூறியிருக்கிறாரே! ஸ்த்ரீ ரூபமாய் பகவான் வந்தால், புருஷர்கள் அவரையணுகி வணங்கி, அவர் ஆக்ஞைப்படி நடக்கவும், புருஷ ரூபமாய் பகவான் வந்தால், ஸ்த்ரீகள் அவரையணுகி வணங்கி அவர் ஆக்ஞையின்படி நடக்கவும் கூடும்.

புருஷர்களுக்கு இக்காலத்தில் பக்தியே அழிந்து போயிருக்கிறது. ஸ்த்ரீகளாகிய நீங்கள் பக்தி ரஸத்தை அறிவது போல புருஷர்களுக்கு அறியச் சக்தி கிடையாது. இக்காலத்திலும் பகவான் வருவதாகப் பிரஸ்தாபம் உள்ளது. உலகப் போராட்டத்தை நிறுத்தவும் அவர் வரவை வேண்டுகிறோம். ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் கோபஸ்த்ரீகள் எத்தகைய உள்ளுணர்வோடு பகவானுடைய பெருமையைப் பிரகாசப்படுத்தி வந்தனரோ, அத்தகைய உள்ளுணர்வோடு இக்காலத்திலும் பகவானுடைய அவதாரத்தை ஆவலாய் எதிர் பாருங்கள். முற்காலத்தில் கோபஸ்த்ரீகள் விதைத்த பக்தியே இக்காலம் வரை உலகத்தில் நிலைத்திருக்குமானால், அவ்வித பக்தியை இக்காலத்திலும் நீங்கள் பிரபலப்படுத்த என்ன தடை? இனிவெகு காலம் வரை உலகில் பக்தி நிலைத்திருக்க நீங்கள் விதை ஊன்றுவது உங்கள் பாக்கியமல்லவா? ஸர்வதர்மங்களையும் நாம் அறியாவிட்டாலும், அவதாரமூர்த்தி வருங்காலத்தில் அவரிடம் பக்தியை மட்டும் எல்லோரும் கொள்வார்களானால், அதுவே போதும். அதன் மூலமாய் தர்மங்களைத் தெரிந்து கொள்வோம்.

"அநந்யபக்தியால் மட்டும் என்னையறிய முடியும்" என்று ஸ்ரீகிருஷ்ணன் கீதையிற் கூறியபடியே, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பெருமையை இடையர்களுக்கு இடையப் பெண்கள்தான் அறிவுறுத்தினரென்று கேட்டிருக்கிறோம். அதேமாதிரி, இக்காலத்திலும் வரப்போகும் பரமாசாரியனிடம் ஆண் மக்கள் அநேகருக்குப் பக்தியில்லை. உங்கள் மூலமாகத்தான் அவர்களுக்கு பக்தி பெருக வேண்டும். ஸ்த்ரீகளுடைய நிஜபக்திக்குப் பகவான் மிகவும் கட்டுப்பட்டவர். பகவான் திரௌபதி மானஸம்ரக்ஷணம் செய்யவில்லையா? பகவான் உலகில் உதித்து சங்கடங்களைத் தீர்த்துச் சமாதானத்தை நிலைபெறச் செய்யும்படி தீவிரமாய்ப் பிரார்த்தியுங்கள். அவர் நிச்சயம் வருவார். கோபிகைகளின் சங்கமொன்று முற்காலத்திலிருந்ததென்று தெரிகி

றது. இப்போதும் உங்கள் பக்திக்குரிய பொதுச் சங்கம் ஒன்று அவசியமல்லவா? பூர்வ ஜன்மங்களில் ரிஷிகளாயிருந்தவர்கள் கோகுலத்தில் ஸ்த்ரீகளாய்ப் பிறந்தார்களென்றால், இக்காலத்திலும் அத்தகைய புண்யாத்மாக்கள் ஸ்த்ரீகளாகிய உங்களுக்குள் இல்லையென்று எவர் மறுப்பார்? எத்தனையோ அரிய ரத்தினங்கள் சமுத்திற் புதைந்து கிடப்பனபோல, உங்களுக்குத் தக்க கல்வி ஏற்படாமையால், உங்களிடத்துள்ள நக்ஷத்திரம் பிரகாசிக்க முடியவில்லை. நீங்கள் கல்விப் பேற்றைப் பெறுவதற்கு நீங்களே கற்க முயலவேண்டுமல்லாது, வேறொருவர் உங்களுக்காகக் கற்க முடியாது. உங்களுக்குப் பக்தி மயமான கல்வியைப் புகட்ட, உதயதிசை நக்ஷத்திர சங்கம் நம் இந்தியாவிற்கு ஓர் பெரும் பாக்கியமாகவுள்ளது. இச்சங்கத்தின் நோக்கங்களைப் பற்றியும் அதனாலுண்டாகும் பலன்களைப்பற்றியும் மதுரை பிர்ம்ம ஞான சங்கத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

B. S. ராம சுப்பய்யர்.



ரெட்கிராஸ் சங்கம் ப்ரிஸிடெண்ட,
மாதா லூயி. டி. லா பனௌஸும் அவரது குமாரியும்.

# SRI KRISHNA LEELA

By
Sri S. Kalyani Ammal

## கிருஷ்ண லீலை

𑌰𑌾𑌮𑍋 𑌨𑌾𑌮 𑌬𑌭𑍂𑌵 𑌹𑍁𑌂 𑌤𑌦𑌬𑌲𑌾 𑌸𑍀𑌤𑍇𑌤𑌿 𑌹𑍁𑌂 𑌤𑍌 𑌪𑌿𑌤𑍁𑌃 ।
𑌵𑌾𑌚𑌾 𑌪𑌞𑍍𑌚𑌵𑌟𑍀𑌵𑌨𑍇 𑌵𑌿𑌹𑌰𑌤𑌸𑍍𑌤𑌾𑌮𑌾𑌹𑌰𑌦𑍍𑌰𑌾𑌵𑌣𑌃 ॥
𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌜𑌨𑌨𑍀𑌕𑌥𑌾𑌮𑌿𑌤𑌿 𑌹𑌰𑍇𑌰𑍍𑌹𑍁𑌂𑌕𑌾𑌰𑌤𑌃 𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑌃 ।
𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌕𑍍𑌵 𑌧𑌨𑍁𑌰𑍍𑌧𑌨𑍁𑌰𑍍𑌧𑌨𑍁𑌰𑌿𑌤𑌿 𑌵𑍍𑌯𑌗𑍍𑌰𑌾 𑌗𑌿𑌰𑌃 𑌪𑌾𑌨𑍍𑌤𑍁 𑌨𑌃 ॥

ராமோ நாம பபூவ ஹூம் ததபலா ஸீதேதி ஹூம் தௌபிதுர் ।
வாசா பஞ்சவடி வநே விஹரதா ஸ்தாமாஹரத் ராவண: ।
நித்ரார்த்தம் ஜநநீ கதாமிதிஹரேர் ஹூங்காரத ஶ்ருண்வதஸ்
ஸௌமித்ரே க்வ தநுர்த் தநுர்த் தநுரிதிர் வ்யக்ராகிரப் பாதுந :
(ஶ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம்)

இது ஸ்ரீகிருஷ்ணனைக் குறித்தத் தியான சுலோகம். நந்தகோ குலத்தில் யசோதையினிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் வளர்ந்தார். அவர் பால லீலைகளைக் கேட்க மிகவும் அற்புதமாயிருக்கும். அவைகள் காதுகளுக்கு அமிருதமாயிருக்கும். ஹிருதயத்தில் அவருடைய சரித்திரங்கள் இறங்க இறங்க ஹிருதயம் சுத்தியடைந்து ஈசுவரஸ்வரூபத்தையே நோக்கும். யசோதை ஸ்ரீகிருஷ்ணனின் மாயமாநுஷ வேஷமாகிய குழந்தையைத் தொட்டிலில்விட்டுக் கண் வளர்த்தினாள். குழந்தை நெடுநேரம் தூங்கவில்லை.

எப்போதும் புஸ்தகத்தை வாசிக்க எடுக்கும்போதும், நல்ல காரியங்களைச் செய்யும்போதும் நித்திரா தேவியானவள், அக்காரியங்களை நடக்க வொட்டாமல் நிர்ப்பந்தமாயிருப்பதற்கு ஒவ்வொருவரிடமும் பிரத்தியட்சமாய் வருவாள். வெறுங் காலங்களில் அவள் வருவதில்லை. தூக்கம் வேண்டும், அது இல்லாமல் சரிப்படாது என்றிருக்கும் சமயங்களில் அத்தேவி ரஜாவின் மீது எங்கேயாவது தன்னிச்சைப்படி சென்றிருப்பாள். இது மனிதரைப் பற்றியது. ஆனால், பகவான் சந்நிதானத்தில் இத்தூக்கம் என்ற மாயையின் காரியங்கள் பலிக்கா. பகவான் எல்லாரையும் தூங்க வைத்துவிட்டுத் தாம் தூங்காமல் ஏகரூபனாய்ச் சகல உயிர்களுக்கும் கெடுதல்

வரா வண்ணம் பாது காப்பவர். அப்படிப்பட்ட பகவான் யசோதையின் கையில் அவள் பண்ணின பூர்வ ஜன்மாந்திர வினைப்பயனால் பாலனாய் விளையாடிப் பல லீலைகளைச் செய்தார். யசோதை தாம் எவ்வளவு தரம் தொட்டிலை ஆட்டியும் அவர் தூக்கம் கொள்ளவில்லை. ஒருக்கால் பகவான் மாயமானுஷ வேஷம் போட்டுக்கொண்டு வந்தபின், தாம் நடத்தவேண்டிய பிரபலமான காரியங்களைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தார்போலும். ஆனால், பகவானின் தன்மையை அறியாமல் அவரைப் பரம மானுஷக் குழந்தையாக மதித்த யசோதை, தம் கிருக கிருத்தியங்களைக் கவனிக்க வேண்டி, பாலகிருஷ்ணனைத் தூங்க வைக்க நினைத்துக் குழந்தைக்குப் பின்வருமாறு கதையைச் சொல்ல ஆரம்பித்தாள். குழந்தையும் கதையை நிதானமாய்க் கேட்டது.

ஓ குழந்தாய்! ஒரு கதையைக் கேட்டாயா? ஸ்ரீராமன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் அயோத்தியை யாண்ட தசரதனின் புத்திரன் என்று சொல்லியதும் குழந்தை ஹூம் என்று கேட்டது. அக்குழந்தையைத் தசரதன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய்ப் பாதுகாத்து வளர்த்து வந்தார். அக்குழந்தையை விசுவாமித்ர மகரிஷி வந்து காட்டுக் கழைத்துக்கொண்டு போனார். அங்கு தாடகை முதலியவர்களை சம்ஹரித்துத் தம் யாகத்தைப் பூர்த்தி செய்துகொண்டார். பிறகு, ஜனகனது ராஜ்ஜியத்திற்கு அழைத்துப் போனார். அங்கு ஜனகன் பூமியிலிருந்து பெற்ற ஸ்ரீலக்ஷ்மிதேவி போன்ற சீதையை ஸ்ரீராமனுக்குப் பாணிக்கிரகணம் செய்விக்கச் செய்துகொண்டார். இதைக் கேட்டதும் பாலகிருஷ்ணன் ஹூம் என்றார். பின்னர், ஸ்ரீராமன் சீதையோடு நெடுங்காலம் அயோத்தியில் பிதாவுக்கு ஜனங்களுக்கும் ஆநந்தத்தைத் தம் குணத்தினாலும் செயலினாலும், கொடுத்துவந்தார். இப்படி யிருக்கையில், ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணத் தசரதர் நினைத்தார். தன் பிள்ளை பரதனுக்குத்தான் இராஜ்யம் வேண்டுமென்று ஸ்ரீராமனின் இளைய தாயான கைகேயி தசரதரைக் கேட்டாள். இது தெரிந்து, பிதுர்வாக்கிய பரிபாலனத்தின்பொருட்டு ஸ்ரீராமன் தம் பத்நி சீதாதேவியுடனும் இலக்ஷ்மணனுடனும் வனவாசம் செய்யப் புறப்பட்டுக் கோதாவரி நதிதீரத்திலுள்ள பஞ்சவடியில் வந்தபோது, இலங்கா ராக்ஷஸனான இராவணன், கபட சந்நியாசி வேஷம் பூண்டு



வந்து ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் மானைத் துரத்திக்கொண்டு வெளியே போயிருக்கையில், சீதையை அபகரித்துப் போய் லங்கா நகரம் சென்றுவிட்டான்.

இப்படிப் பாலகிருஷ்ணனின் நித்திரையின் பொருட்டு யசோதை கதை சொல்லிக்கொண்டு வருகையில் இக்கதையின் ஒவ்வோரக்ஷரத்தினையும் விடாமல் உற்றுக்கேட்டிருந்த ஸ்ரீகிருஷ்ணனாகிய குழந்தை மேற்கூறிய கடைசி வாக்கியத்தைக் கேட்கும்போது ஹூம் என்று கேட்கவில்லை. பாலகிருஷ்ணன் தன் முன் அவதாரமாகிய ஸ்ரீராமவதாரத்தை நினைத்துக்கொண்டு, தான் அதனிலும் வேறல்லவாகையால், அந்த ஞாபகமாகத் திடீரென எழுந்து ஓ **ஸௌமித்ரா!** லக்ஷ்மணா! எங்கே தநுஸ்! எங்கே தநுஸ்! எங்கே தநுஸ்! ஒரு நொடிப் பொழுதில் பாணங்களைப் பிரயோகித்து அந்தப்பத்துத்தலையுள்ள இராவணனைத் தொலைத்து விடுவோம் என்று உரத்துக் கூவினார். அப்படிப்பட்ட ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா உங்களை இரக்ஷிக்கட்டும் என்று சொல்வதே மேற்கூறிய சுலோகத்தின் முழுத்தாற்பர்யமாகும். ஆகவே, குழந்தைகளாயினும் வயது சென்றவர்களாயினும், வாலிபர்களாயினும், பெரியோர்கள், உபாத்தியாயர்கள், தாய்தந்தையர்கள், ஆசாரியர்கள் முதலிய எவரிடத்தில் பாடம் கேட்பினும், உபதேசம் பெறினும் ஏகாக்கிர சித்தத்துடனிருந்து அவற்றைக் கிரகிக்கவேண்டும். அப்படிக் கிரகித்தாலல்லது பலனுண்டாகாது. ஸ்ரீராமன் சரித்திரம் முன்னம் நடந்தாலும் இப்போதே நேரிட்டது போல் கதையைக் கேட்ட அந்தப் பரமாத்மாவின் தியானம் யாவரையும் நல்ல வழியில் செலுத்தும். ஆகையால், ஸ்த்ரீகள் பாலர்கள் விருத்தர்கள் அனைவரும் அநுதினமும் இப் பரமாத்மாவைத் தியானித்து நற்கதி பெறுவாராக.

S. கல்யாணி.

---

**ஞான தீபிகை அல்லது தர்ம தீபிகை:**—இது ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியமானது. ஸ்த்ரீ புருஷர்கள் தங்கள் வாழ்நாளில் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்களையும் விதிகளையும் விஸ்தாரமாக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஸன்மார்க்கத்தைப் போதிப்பதற்கு இதைவிட வேறு புத்தகம் கிடைப்பது அரிதென்று எல்லா பத்திரிகைகளும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றன. சீக்கிரம் ஆர்டர் செய்யுங்கள். விலை ரூ. 1. "பெண்கல்வி" சந்தாதார்களுக்கு விலை அணா 12.—மானேஜர் 'பெண் கல்வி' சென்னை, ஈ.

# LIFE OF CONTINENCE

By

**Mr. Sivadyananandan**

## பொறியடக்க வாழ்வு

(சென்ற மேமாதப் பத்திரிகையின் 222-ம் பக்கத் தொடர்ச்சி)

படுக்கை யறை விசாலமானதாயும், வெளிச்சமுள்ளதாயும், காற்றோட்டமுள்ளதாயு மிருக்கவேண்டியது. நம்மவர்கள் அதிக மெதுவான மெத்தைகளில் படுக்கத் தொடங்கி விட்டதனால் எலும்பில்லாப் புழுக்கள்போலத் துவளத் தலைப்பட்டு இனி ஆண்மைத்தனமான செயல்களைச் செய்யத் தகுதியுடையவர்கள் ஆவார்களோ என்று சந்தேகிக்கும்படி யாய்விட்டது. ஆகையால், எப்போதும் சாதாரணப் படுக்கைகளில் படுப்பதே இந்திரிய அடக்கமுள்ளவர்களுக்கு யோக்கியமானது. போர்வை அதிகம் போர்த்துக் கொண்டுக் குளிரடக்கமாய்த் தூங்குவது நல்லதல்ல. கொஞ்சம் குளிர் சரீரத்தைத் தொட்டுக்கொண்டிருக்கும்படி மெல்லிய போர்வைகளைப் போர்த்துக்கொண்டே தூங்கவேண்டும். அதிக சூடான போர்வைகளைப் போர்த்துக்கொண்டு தூங்குவதால் உடம்புக்குக் குணமானதல்ல என்பதைப் பலரும் உணருவார்கள்.

காலையில் படுக்கையிலிருந்து விழித்துக்கொண்டவுடனே எழுந்திருக்கவேண்டும். காலையில் ஒவ்வொருவருக்கும் மல ஜல உபாதைகளால் மலப்பையும் ஜலப்பையும் வீங்கி அவ்விரண்டிற்கும் இடையிலுள்ள காம உறுப்புக்களைத் தூண்டிவிடும். அதனால் காமக் கிளர்ச்சி உண்டாகும். ஜலமலங்களை யொழித்துவிட்டால் அந்நரம்புகளை யுறுத்தும் பைகள் சுருங்கி விடுவதால், அக்காம உறுப்புக்கள் முன்னிலையை யடைந்துவிடும். இச்சிறு விஷயத்தை யறியாமல் பலர் தங்களுக்கு அப்போது தோன்றும் உணர்ச்சி எதனால் என்று பகுத்தறிய முடியாமல் காமானுபவங்களில் தலையிட்டுச் சோர்வை அடைகிறார்கள். இனியாவது இதைப் படித்தவர்கள், தாங்கள் தூக்கத்திலிருந்து விழித்தவுடனே படுக்கையைவிட்டு எழுந்து தங்களது அற்ப சங்கை மகா சங்கையைத் தொந்தரவுகளை யொழிக்க முயலுவார்களென வெண்ணுகிறேன். காலையில் 4, 5, அல்லது 6 மணிக்குத் தூக்கத்தினின்று விழித்தவுடனே, படுக்கையில் படுத்துக்கொண்டு வீண்



மனோராஜ்யம் செய்யாமலும், வியாகூலப்படாமலும் படுக்கையைவிட்டு வெட்டென எழுந்து வீட்டுக்கு வெளியே போய் வருவார்களாயின், அவர்களுடைய தேகமானது எவ்வளவு பரிசுத்தமாய் இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் அநுஷ்டித்துப் பார்க்கவேண்டும்.

சரீர முழுவதையும் ஜலத்தில் நனைப்பது ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமாம். அதனால், ஒரு பெரிய குளத்திலாவது, ஆற்றிலாவது அரைமணி நேரம் துளைய வேண்டுமென்பது அவசியமில்லை. அதிக நேரம் தண்ணீரில் நீந்தித் துளைவதால் சரீரம் வலிமை கெடும். இளம் வெந்நீரிலாவது, பச்சைத் தண்ணீரிலாவது தனது சரீரத்தை நனைத்து ஒரு முறை அல்லது பலமுறை கையை யோட்டித் தேய்ப்பதனால் சரீரம் அடையும் சுகம் அதிகம். இதை ஒரு செம்புத் தண்ணீரில் நமது முற்றத்தில் நாம் எல்லாரும் செய்யலாம். பெரும் தொட்டிகளில் நீர் கொட்டி அந்நீரில் உடல் முழுவதும் நனையக் குளிப்பதுகூட சரீர நரம்புகளைத் தளர்த்திக் காம உற்சாகத்தைக் கிளப்பிவிடும்.

ஒவ்வொரு நாளும் சாப்பிடுவது எவ்வளவு அவசியமோ அப்படியே மனிதர்கள் வேலை செய்வது அவசியம். வழக்கமாய்ச் சோம்பேறியாய் உள்ள ஸ்திரீ புருஷர்களே விஷய சுகங்களில் முழுகிக் கெடுபவர்கள். இந்திரிய நிக்கிரகர்களாயிருக்க விரும்புவோர்கள் தசைகளுக்கும் மூளைக்கும் வேலையைக் கொடுக்கும் தொழில்களையே எப்போதும் செய்யவேண்டியது. தோழர்களைச் சேர்ப்பதில் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய விஷயம் பலவுண்டு: தங்களை எப்பொழுதும் மேனிலைக்குக் கொண்டுவந்து தங்களுடைய மனத்தை உயர்த்தி விசாலப்படுத்தும் சிநேகர்களையே ஒவ்வொருவரும் விரும்பவேண்டும். தற்காலத்துப் நகரவாஸிகளில் பலரும் இவ்விஷயத்தில் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். நகரங்களில் நாடகம், கூத்து, வேசைத் தனம், கட்குடி, மற்றும் கெட்ட நடவடிக்கைகளை விருத்திபண்ணும் அம்சங்கள் பலவுண்டு. பணச்செலவில்லாமல் சகல விஷயானந்தங்களையும் அனுபவிக்கச் செய்வதாக உறுதிகூறித் தூண்டிவிடும் அயோக்கியர்கள் பலருண்டு. அறிவின்மையால் ஒரு கெட்ட பழக்கம் ஏற்பட்டபின் விலக முடியாத நிலையிலிருந்து கஷ்டப்படவேண்டி வரும்.

ஆகையால், சிறுவர் சிறுமிகாள்! கெட்ட நடையுள்ளவர்களைக் கண்டால் பாம்பை யஞ்சி ஓடுவதுபோல ஓடி விலகுங்கள்; ஒரு நன்மை ஒருவனை உயர்த்தி எப்படி பிரபலமானவனாக்கி அவனைப் பின்னும் பல நன்மைகளையும் செய்யத் தூண்டுகிறதோ அதுபோலவே ஒருவன் முதலில் செய்யப் புகுந்த ஒரு தீமை அவனை மேற்கொண்டு இனி ஓங்கவிடாமல் அவனைத் தனக் கடிமையாக்கி அவன் ஜீவியத்தைக் கெடுக்கிறது. இவ்வினைச்செயல் அவனைப்பலரும் வெறுக்கும்படியாகச் செய்து, அவனைப் பாதாளத்தில் ஆழ்த்துகிறது. திடமனமும், உறுதியான சங்கற்பமும், ஆழ்ந்த காரியயோசனையும், எல்லாக் கஷ்டங்களையும் நிவிருத்தி செய்து ஒருவனைப்பொறி யடக்கமுள்ளவனாகச் செய்கின்றன. இவ்விஷயங்களை நம்மவரும் கவனித்து நடப்பார்களாயின் நம் நாட்டுப் பல கேடுகளும், தாழ்வும் ஒழியும் என்பதற்கு ஐயமில்லை.

சிவத்தியாநாநந்தன்

---

# OLD SAYINGS

By

**Mr. Adage M. A.**

## பழமொழிகள்

1. அக்காடு வெட்டிப் பருத்தி போட்டால் அப்பா எனக்கொரு துப்பட்டி என்றாளாம் மகள். சீச்சீ நாயே வேலியில் மாட்டிக் கிழிக்கவா யென்றானாம் தகப்பன். இந்த மாதிரி எப்போதோ வரப்போகிற சமாசாரத்தைப் பற்றிக் கவனித்து உருகாதே.

2. அடுப்பு நெருப்பும் போச்சு; வாய் மாவும் போச்சு என்னும் படியான காரியத்தைச் செய்யாதே.

3. அற்ப சகவாசம் பிராண சங்கடம்.

4. அளிஞ்ச இடம் புழுக்கும். ஒருவரோடும் ரொம்ப நேசம் கொண்டாடக்கூடாது. கிட்ட உறவு முட்டப் பகை.

5. அதட்டி வளர்க்காத பிள்ளையும், முருக்கி வளர்க்காத மீசையும் பயன்படா.

6. அடி உதவுகிறதுபோல் அண்ணன் தம்பி உதவார்.

7. அண்ணன் சம்பாதிக்கிறது அம்பி அரைஞாக்கொடிக்குக்கூட காணவில்லை.



8. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடலாகாது.

9. அவிசாரியில் வந்தது, பெருவாரியில் போய்விடும்.

10. அருண்டவனுக்கு, இருண்டதெல்லாம் பேய்.

11. அற்பத்துக்குப் பவிஷு வந்தால் அர்த்த இராத்திரியில் குடை பிடிக்கும்.

12. அன்னமயம், பிராணமயம், யாராயிருந்தபோதிலும் நிரம்ப அன்னமிட வேண்டும்.

13. அடுத்தது காட்டும் பளிங்கு போல், நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம், என்றபடி உன் முகம் எப்பொழுதும் பிரஸன்னமாகவே இருக்கட்டும்.

14. அச்சுப் பிச்சான் ஆத்தைப் பார்த்துக்கோ என்று இராதே.

15. அரிசி கொடுத்து அக்கா உறவு என்ன?

16. அறுக்க மாட்டாதவனிடம் ஐம்பத்தெட்டு அரிவாள் என்று வேண்டாத சாமான்களையெல்லாம் காசைக் கொட்டி வாங்கிச் சேர்க்காதே.

17. அங்காடிக் காரியைச் சங்கீதம் பாடச்சொன்னால், வெங்காயம் கருவேப்பிலை என்று சொல்லுவள்.

18. அல்லித் தண்டு போல் குளிர்ந்திருக்கும்; அசலாத்துப் பிராமணா பாம்பைப் பிடி என்று பிறருக்குக் கெடுதி விளைக்கக் கூடியதைச் செய்யச் சொல்லாதே

19. அசலாத்து நெய்யே; பெண்டாட்டி கையே என்று சொல்வதுண்டு. அந்தப் பிரியத்தைச் சொந்த வீட்டிலும் காட்டு.

20. அக்கரைக் குளத்தில்போய் பிராணனை விடுவோமென்றால், பாழாய்ப்போகிற ஆறு குறுக்கே யிருக்கிறது.

21. அம்மியும் குழவியும் ஆகாயத்தில் பறக்கும்போது இலவம் பஞ்சு எனக்கென்ன கதி என்று கேட்டதாம் அதுபோல், பெண்களெல்லாம் கசடறக் கற்கு மிக்காளில் நானென்ந மூலை என்று சொன்னாளாம் பண்டைகாலத்துப் பைத்தியங் கொள்ளிப்பாட்டி.

22. அடிக்க ஒரு கை அணைக்க ஒரு கை என்றதுபோலக் குழந்தைகளை ரொம்ப செல்லம் கொடுத்து கழி சிறையாகப் பண்ணவும் கூடாது; அடித்துக் கொல்லவும்கூடாது.

23. அநாதைக்கு தெய்வமே துணை.

24. அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்;

25. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

26. அன்று அயன் எழுதினதை அழித்து எழுதப் போகிறதில்லை.

27. அருளிலார்க் கவ்வுலகில்லை; பொருளிலார்க் கிவ்வுலகில்லை.

28. அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி ஆகாது.

29. அம்மான் பாக்கியம் சம்பா விளைந்தது; பாவி பாக்கியம் பதரா விளைந்தது. எல்லாத்துக்கும் அதிருஷ்டம் வேண்டும்.

30. அழகு சோறு போடுமோ; அதிர்ஷ்டம் சோறுபோடுமோ.

31. அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் பூச்சி. மனதில் கெட்ட எண்ணங்களை வைத்துக்கொண்டு வெளிக்கு மாத்திரம் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

32. அலையை நினைத்துக்கொண்டு உரலை இடிக்காதே.

33. அன்பற்ற மாமிக்கு கும்பிடுகிறதும் குற்றந்தான். பிரியமில்லாதவரிடம் ஒரு காரியமும் வைத்துக் கொள்ளக்கூடாது.

34. அறிந்து செய்த பாவத்தை அழுது தொலைக்கக்கூட முடியாது.

35. அஷ்டமத்துச் சனியை வட்டிக்கு வாங்குவாளா?

36. அடி நாக்கில் நஞ்சு; நுனி நாக்கில் அமிருதம் என்று பொய்யாக அன்பு பேசாதே.

37. அரிச்சந்திரன் வீட்டுக்கு அண்டைவீடு அவன்தான் என்று பிறர் உன்னை ஏசும்படி பொய் சொல்லித் திரியாதே.

38. அஞ்சனக்காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறினான் என்று கேட்டதில்லையா.

39. அங்கே ஏன் கஞ்சிக்கு அழுகிறாய்; இங்கேவா காற்றாய்ப் பறக்கலாம்; என்று ஒருத்தி கூப்பிட்டாளாம். இருக்குமிடத்திலேயே கௌரவமாய் முணுமுணுக்காமல் குடித்தனம் செய்வதே பாங்கு.

மிஸ்டர் பழமொழி எம். ஏ.

# THE COONOOR PASTEUR INSTITUTE

By

**Sri Janaki Ammal**

## குன்னூர் நாய்கடி ஆஸ்பத்திரி.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள ஜனங்களில் நாய் கடியால் வருந்துவோருக்கென்று குன்னூரில் நாய்கடி ஆஸ்பத்திரி ஒன்று ஸ்தாபித்திருக்கும் விஷயம் இப்பத்திரிகையைப் படிப்பவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆயினும், அதைப்பற்றிய விவரம் ஒன்றும் யாருக்கும் தெரியாது. பைத்தியங்கொண்ட நாய்க்கு (Hydrophoebia) தண்ணீர் அருவருப்பென்ற ஒரு வியாதி சம்பவிக்கிறது. அதற்கு அப்போது தண்ணீரைப்பற்றி நினைத்தால் ஆருத்துயரத்தைத் தருமாம். அவ்வெறிகொண்ட நாய்கள் மனிதர்களைக் கடித்தால் அவர்கள் மேலே சொன்ன அவ்வியாதியை அடைகிறார்கள். அவ்விஷ நாயால் கடிக்கப்பட்டவர்கள் ஒரு வாரத்திலிருந்து 6 வாரத்துக்குள் அந்நோயை அடைகிறார்கள். அவர்கள் உடனே ஸமீபத்த ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும். இல்லையேல், அந்த நாய் கடித்த இடத்தில் கார்பாலிக் திராவகத்தையாவது, நைட்ரிக் திராவகத்தையாவது பஞ்சால் தொட்டு வைத்துக் கட்டவேண்டும்.

ஒரு நாயை வெறிகொண்டது என்று நாம் உடனே கொன்று விடக்கூடாது. அதனைப்பத்து நாள் கட்டிப் போட்டுப் பார்த்துக் கண்ட புல்லைத் தின்பது, தண்ணீரில் அருவருப்பு, ஆகார வெறுப்பு, ஊளையிடுதல், அழுதல், கண்டவரைக் கடிக்கப் போதல், முதலிய குணக்குறிகளைக் கண்டால் அந்த நாயைக் கொன்று மூளையை எடுத்து (Bichromate Potash) பைக்கிரோமேட் பொடாஷ் 20 கிரேயின், (Glacial Acetic Acid) கிளேஸியல் அஸ்டிக் திராவகம், $2\frac{3}{4}$ டிராம், தண்ணீர் $6\frac{1}{2}$ அவுன்ஸ், இந்த மூன்றும் சேர்ந்த திராவகத்தில் அதைப் போட்டு எடுத்துக்கொண்டு உடனே குன்னூருக்குப் புறப்படவேண்டும்.

அவர்கள் நோயின் தன்மையை அறிந்து நாய் கடித்தவர்களுக்குச் சிகிச்சை செய்வார்கள். அம்மை குத்துவது போல் அடிவயிற்றில் குத்துவார்கள். இப்படிப் பதினான்கு நாட்கள் குத்தின பிற்பாடு நாய்கடி குணமாகிவிடும். இதுவரையில் குத்தப்பட்டவர்

களில் 200 பேர்களில் ஒருவர்கூட இறந்ததில்லை. இவ்விடத்திற்கு வந்து சிகித்ஸை செய்து கொள்பவருக்கு வசிக்க இடமும் படியுந் தருகிறார்கள். போகவர ரயில்வே சார்ஜுங் கொடுக்கிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளத்தோடு ரஜா தருகிறார்கள். நாய் கடித்ததும் உடனே வந்து சிகித்ஸைசெய்து கொள்வதே உத்தமம். இதை நம்மவர்கள் கவனிப்பது அவசியம்.

இக்குன்னூர் நாய்கடியாஸ்பத்ரிக்கு வந்த நண்பரொருவர் பாஸ்டர் இன்ஸ்டிடியூட் கும்மியொன்று பாடியிருக்கிறார். அதில் அடியிற் கண்ட வழிநடைச் சிந்து பெண் பாலார்க்கு ரம்யமாகவிருக்கும்.

மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூருக்குப் போகும் வழி
மேட்டு வழிகாட்டு வழியாகுமே பெண்ணே
சின்ன சின்ன சக்கரத்தில் சிறப்பான வண்டி பூட்டி
சீக்கிரமாய்க் கொண்டு போகப் பார்க்கிறான் கண்ணே.
ஐந்து மயில் தூரமட்டு மரை வேகமாகவோடி
யப்புறம் வண்டி நிறுத்திப் போடுகிறான் பெண்ணே
முன் சென்ற இஞ்சினைப் பின் கொணர்ந்து மாட்டி விட்டு
முட்டி முட்டித் தள்ளுவதைச் சற்றே கவனி.
ஒரு பக்கம் மலையுச்சி மறுபக்கம் காணாறும்
ஓடுது உடும்பு போலப் பாரடி வண்டி
ஓணான் வளைபுகுந்து ஓடுவது போல வண்டி
ஊடே ஊடே குகை நுழைந்தோடுது கண்ணே.
கன்னங்கறுத்திருக்குங் கருங்குகை தாண்டி வெளி
காணுமட்டு மனஞ்சற்றே கோணுது பெண்ணே
சின்ன சின்ன ஸ்டேஷன்களுஞ் சிறப்பான பழங்களுஞ்
சிறுவர் விற்பதை நோக்கித் தேறடி கண்ணே.
வாழைப்பழம் மாம்பழம் வளமான பலாப்பழம்
வாகுள ஆரஞ்சி நல்ல ஜாதிக்காய்ப்பழம்
கணவாயை நோக்கினாலோ கண்ணிரண்டு போகுதம்மா
காலன் வந்தணுகுவது போலிருக்குதே.
மடமட வென்று ஜலம் மலைமே லிருந்திறங்கி
மாட்சிமை உடனே விழுங் காட்சியைப் பாராய்
பல பல மரங்களும் பலவர்ணப் புஷ்பங்களும்
பார்த்திடக் கண்ணுக்கு வெகு நேர்த்தியாகுமே.
மலைகளிலிரு பக்கமு மாட்சியாய்க் கர்ப்பூரமாம்
வானத்தை யளாவி நிற்கத் தோணுது பாரு
இத்தனை வியப்பிருந்து மிதமில்லை மனதுக்கே
யெப்போ குன்னூர் சேரலாமென்றேங்குதே கண்ணே.

— ஜானகி அம்மாள்.

---

# HISTORY & ANTIQUARY
# சரித்திரமும் ஆராய்ச்சியும்

## UMABAI THABADAY

By
Sri Ganga Bai

## உமாபாய் தாபாடே

ஒரு உத்தம ஸ்த்ரீக்குரிய நற்குணங்கள் பொருந்தியவளும் ஸ்ரீராம பக்தி நிறைந்தவளுமாகிய உமாபாய் தாபாடே என்னும் மஹாராஷ்டிர ஸ்த்ரீ ஒருவர் இருந்தார். இவர், மஹாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்த சத்திரபதி சிவாஜி மஹாராஜரின் பேரனாகிய ஷாஹு அரசரின் காலத்திலிருந்ததாகத் தெரிகிறது. உமாபாயினுடைய மாமனாராகிய எஸூபாடில் தாபாடேயும் அவரின் இரு குமாரர்களும் சிவாஜி மஹாராஜாவினுடைய இரண்டாவது குமாரனாகிய ராஜாராம் மஹாராஜாவின் காலத்தில் ஸைன்யத்தில் உத்யோகஸ்தர்களாய் அமர்ந்தார்கள். இந்த எஸூபாடில் தாபாடேயின் மூத்த குமாரன் பெயர் கண்டோஜி திரியம்பகராவ் தாபாடே. இளைய குமாரனின் பெயர் அசுவந்தராவ் தாபாடே. நமது கதாநாயகியாகிய உமாபாய் கண்டோஜி திரியம்பகராவின் மனைவியாகும். நிற்க, ராஜாராம் மஹாராஜா நோயினால் இறந்து போகவே, அவருக்குப் பிறகு ஷாஹு மஹாராஜா பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில் மஹாராஷ்டிர ராஜ்யம் உயரத்தலைப்பட்டது. இந்த ஸமயத்தில் கண்டோஜி திரியம்பகராவ் தாபாடே பல யுத்தங்களில் ஜயமடைந்து அநேக ராஜ்யங்களைப் பிடித்து வசமாக்கினர். இவரின் சூரத்தனத்தையும் புத்தி சாதுர்யத்தையும் புகழ்ந்து ஷாஹு மஹாராஜா இவருக்குப் பெரிய உத்தியோகம் கொடுத்து அநேக ஸன்மானங்களும் அளித்தனர்.

அக்காலத்து மந்திரியாயிருந்த முதல் பாஜிராவ் பீஷ்வா இவரின் சௌரியத்தைக் கண்டு பொறாமை கொள்ளலானார். இவ்விருவர்களுக்கும் துவேஷம் அதிகரித்து வந்தது. ஒரு ஸமயம் ஈடில்லாத வீராதி வீரனாகிய கண்டோஜி திரியம்பகராவ் தாபாடேயை அநியாயமாக பாஜிராவ் ஆள்வைத்துக் கொன்று விட்டார்.

மூன்றாவது ஸேனாதிபதியாகிய அசுவந்தராவ் தாபாடே தம் தமயன் பாஜிராவால் அநியாயமாகக் கொல்லப்பட்டான் என்று கேட்டவுடன் மிகுந்த துக்கத்தையும் கோபத்தையும் அடைந்தனர். ஹிந்துக்களின் விதிப்படி இறந்த தமயனுக்கு உத்தரக்கிரியைகள் செய்யவேண்டுமல்லவா? அசுவந்தராவ் தாபாடேப் பழிக்குப்பழியாக பாஜிராவைக் கொன்றுவிட்டே மறு காரியம் செய்வதாக சபதம் செய்துகொண்டார். இவருடைய சபதத்திற்கு உமாபாயும் ஸம்மதித்து ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்டார்கள். இவ்விஷயம் பாஜிராவுக்கு எட்டியது. அவர் உடனே திகிலடைந்து ஷாஹூ அரசரின் காலில் விழுந்து தாம் செய்த காரியங்களை எடுத்துச் சொல்லிக் காப்பாற்றும்படி வேண்டினர். தம் காலில் விழுந்த பாஜிராவைக் காப்பாற்ற உத்தேசித்து ஷாஹூ அரசர் அவரை அழைத்துக்கொண்டு தாளேகாம் என்னும் கிராமத்தில் உமாபாயையும் அசுவந்தராவ் தாபாடேயையும் சந்தித்தார்.

ஷாஹூ அரசர் அவர்களைக்கண்டவுடன் பாஜிராவை உமாபாயின் பாதத்தில் விழுந்து தம்மை காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ளச் சொன்னார். பாஜிராவ் அப்படியே செய்து தம் பிழையை காருண்யத்தோடு மன்னித்து விடும்படி உமாபாயை வேண்டினர். நமது கதாநாயகி இந்தத் தர்மசங்கடத்தைக் கண்டு சற்றுத்தயங்கி நிற்கவே, ஷாஹூ அரசர் பின்வருமாறு உமாபாயைப் பார்த்துச்சொல்லலானார். "ஏ தாயே! தங்களது புருஷராகிய கண்டோஜி திரியம்பகராவ் தாபாடேயும் பாஜிராவின் தகப்பனாராகிய பாலாஜி விசுவநாத பீஷ்வாவும் ஆப்த நண்பர்கள். அவ்விருவர்களும் கூடப்பிறந்த சகோதரர்கள் போல் பழகி வந்தனர். ஆகவே, பாஜிராவ் தங்களுக்குப் பிள்ளைமுறைமை ஆகிறது. தாங்கள் மிகுந்த தயவுடன் பிள்ளை செய்த குற்றத்தை க்ஷமித்தருளவேண்டுகிறேன். சரணமடைந்தவனைக் காப்பாற்றுதல் நமது மத தர்மமாகையால் அதையும் தாங்கள் கவனிக்கும்படி வேண்டுகிறேன்" என்று சொல்லவே, உமாபாய் மனமிறங்கி அப்படியே ஆகட்டும் என்று உறுதி கூறினர். பாஜிராவும் அசுவந்தராவ் தாபாடேயினிடம் மன்னிப்பு வாங்கிக்கொண்டார். பிறகு, அவர்கள் ஸந்தோஷமாகத் தங்கள் தங்களிருப்பிடத்தை அடைந்தார்கள். பாருங்கள்! உமாபாயின் காருண்யம் என்ன! அவ



ருடைய வீரத்தன்மை யென்ன! நமக்கு நேரிட்ட ஸங்கடமும் துக்கமும் அதிகமாயிருந்தாலும் சரணம் புகுந்தவர்களைக் காப்பாற்றுதல் பெரிய தர்மமாக ஹிந்து ஸ்த்ரீகள் கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறதல்லவா?

இப்படியாக இருந்துவரும் நாளில், ஆமதாபாத்டாணாவாகிய ஜோராவர்க்கான் வெகு தொந்தரவு செய்துகொண்டிருந்தான். ஸைன்யத்துக்குத் தலைவர்களாயிருந்த உமாபாயின் இருபுத்திரர்களை அழைத்து ஜோராவர்க்கானை அடக்கிவிட்டு வரும்படி ஷாஹூ அரசர் திட்டம் செய்தார். அவ்விருபுத்திரர்களும் பரம்பரையாக அவர்களின் தகப்பனார் வகித்து வந்த உத்தியோகத்தை வகித்தாலும், அவர்கள் பால்யர்களானதால் ஜோராவர்க்கானை அடக்குவதற்குக் கொஞ்சம் சிரமப்படுவார்களென்று அறிந்து உமாபாய்தாம் அவர்கள் பின்னோடு வருவதாகச் சொல்லிப் புறப்பட்டார். உமாபாய் வீரபத்னியும் வீரத்தாயுமாகையால் அவருக்கு யுத்தம் என்றால் வீட்டுக்காரியம் செய்வது போல் ஸாதாரணமாக இருந்தது. உமாபாயும் யுத்தம் செய்யப் புறப்பட்டு வருகிறார் என்று அறிந்த ஜோராவர்க்கான் உமாபாய்க்குப் பின் வருமாறுக் கடிதம் எழுதினான் "அம்மா! நீங்களோ ஸ்த்ரீஜாதியைச்சேர்ந்தவர்கள். உங்கள் புத்திரர்கள் இருவரும் பால்யர்கள். ஆக, நீங்கள் ஸைன்யத்துடன் திரும்பிப்போவது நலம். இல்லாவிட்டால் நாங்கள் எங்கள் ஸாமர்த்தியத்தைக்காண்பிக்காமலிருக்க முடியாது" இதைப்பார்த்த உமாபாய்க்கு ரோசமும், கோபமும் பொறுக்க முடியவில்லை. உடனே ஸைந்யங்களையும் ஸகல ஸேனாதிபதிகளையும் அழைத்து ஒரு ஸபையைக் கூட்டச் செய்தனள்.

உமாபாய் ஸபைக்குப்போகும்போது மஞ்சள், குங்குமம், வளையல் புடவை முதலிய ஸாமான்களைக்கொண்டுபோய் ஸபாமத்தியில் வைத்தனர். ஸபையிலுள்ளவர்கள் இவைகள் எதற்கு என்றும் பலவிதமாக ஒருவரை யொருவர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். உமாபாய் ஜோராவர்க்கான் கடிதத்தைச் சபையோர்களுக்குப் படித்துக் காண்பித்து அவர்களைப் பார்த்து "மஹாராஷ்டா வீரர்களே! நாம் இங்கு எதற்காக வந்திருக்கிறோம். நமது காரியம் மிகவும் பெரிதானது. நாம் நாளைவரை மஹாராஜாவின் அன்னத்தைப் புசித்துக்கொண்டிருக்கிறோம். இக்கடிதத்தைக் கேட்ட நீங்கள் என்ன

செய்யத் தீர்மானித்திருக்கிறீர்கள். அந்த ஜோராவர்க்காளை ஜயித்துவிட்டுப் பிறகு தான் சாப்பிடுவது என்று தீர்மானித்திருக்கிறேன். எனது ஆதரவில் உங்களுக்கு தைர்யமிருக்கும் பக்ஷத்தில் இப்போதே என்னுடன் புறப்பட்டு வரவேண்டும். நீங்கள் பயந்து பின்வாங்கினீர்களேயானால் இதோ ஸபை மத்தியில் வைத்திருக்கிற குங்குமம், மஞ்சள், புடவை முதலியவைகளைத் தரித்துக்கொண்டு வீடுபோய்ச் சேருங்கள்' என்று சொல்லவே, சபை மத்தியிலிருந்து இங்கு இருக்கிறவர்கள் ஒருவரும் பயந்து பின்னடையப்போகிறவர்களில்லை; யுத்தத்துக்குப் புறப்படுங்கள் என்று ஒரு குரல் வந்தது.

பிறகு, எல்லோரும் எழுந்து புறப்படுவதற்கு ஆயத்தமாய் இருந்தார்கள். சத்துருவின் ராஜ்யத்தை நோக்கிப் புறப்பட்டு வீரதீரம்பொருந்தியவர்களான மஹாராஷ்டரர்கள் ஆமத்பாத் நகரத்தை முற்றுகைபோட்டு சத்ருக்களைத் தோற்கடித்து அதை கைப்பற்றினார்கள். பின்னர், அங்குபோய்த்தான் உமாபாய் ஆகாரம்சாப்பிட்டாள். உமாபாயின் சபதம் நிறைவேறியது. சத்ருக்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். ஷாஹூ அரசர் இவைகளை யெல்லாம் கேட்டு உமாபாயின் சௌர்யத்தைப் புகழ்ந்து "உம்மைப்போலவே ஒவ்வொரு மஹாராஷ்டர ஸ்த்ரீயும் ஆகவேண்டுமென்று நான் கடவுளை பிரார்த்திக்கிறேன்" என்று கூறினார். உமாபாய் போன்ற ஸ்த்ரீ ரத்தினங்களே இந்திய மாதாவை பிரகாசிக்கச்செய்தனர். இப்பேர்ப்பட்ட ஸ்த்ரீகளின் குணங்களை நாம் கைப்பற்றவேண்டும். இதுவே ஒவ்வொரு ஹிந்து ஸ்த்ரீயின் கொள்கையாயிருக்கவேண்டும். வீரதீரம் பொருந்திய வம்சத்தில் உதித்த இந்திய ஸ்த்ரீகள் ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். தற்சமயம், இந்தப் பெரிய யுத்தத்தில் நம் சக்ரவர்த்தி சத்ருக்களை ஜயிக்கத் தீர்மானித்திருக்கிறார். நம்மைப் படையில் சேர்ந்து உதவிக்கு வாருங்களென்று அழைக்கிறார் இந்த ஸமயத்தைக் கைவிடாது நமது வீர புருஷர்களை படையில் சேர்ந்து ஜார்ஜ் சக்கிரவர்த்திக்கு உதவிசெய்யும்படி நம் ஸ்த்ரீகள் அவர்களை உத்ஸாகப்படுத்தி அனுப்புதல் அவர்களுடைய கடமையாகும்.

கங்காபாய்.

---

# MORAL LITERATURE
# சன்மார்க்கக் கல்வி.

## DEVOTION OF SIR THOMAS MUNROE

By

**Sri K. Narayani Ammal**

## ஸர் தாமஸ் மன்ரேவின் பக்தி

சுமார் நூறு வருஷங்களுக்கு முன் சென்னையில் சிறிது காலம் கவர்னராயும் இராணுவ அதிகார பிரபுத்துவத்தை வகித்து வந்தவராயுமுள்ள ஓர் ஆங்கிலேய பிரபு இருந்தார். அவர் பேர் மன்ரோ வென்பார்கள். அவர் ஆங்கிலேய தேசத்தவர். தர்மம், நீதி, ஜீவகாருண்யம் இக்குணங்கள் மிகுதியாயுள்ள வராயும் இருந்தார். அவர் சென்னையில் ராணுவ அதிகாரத்தை வகித்தபோது சகல ஜனங்களுக்கும் நன்மை செய்யவேண்டுமென்கிற கருத்தும், தீர்மானமும் உள்ளவராய், சகல ஜனங்களாலும் கொண்டாடப்பட்டு மாக்ஷிமை பெற்று இருந்தார். பிராரப்தத்தின் பலனை அனுபவிக்காமல் தப்பித்துக்கொண்டுபோக யாரால் முடியும்? மகரிஷிகளுக்கும் குபேரனுக்கும் முடியாமலிருக்க சாமான்யர்களுக்கு அதை மீறிப்போக முடியுமா? முடியவே முடியாது.

ஆகையால், பூர்வ ஜன்மத்தில் செய்த வினையினால் மன்ரோப் பிரபுவுக்கு ஓர் கொடூரமான வியாதியுண்டாகியது. அதனால் அவர் பெரும் கஷ்டங்களை யனுபவித்துக் கொண்டிருந்தார். அவர் தேசத்தை ஆளும் பிரபுவாகையால், பிரசித்திபெற்ற ஆங்கிலேய வைத்தியர்கள் அவர் படுக்கைக்கு இருபக்கங்களிலும் பட்டாளத்துச் சிப்பாய்களைப் போல் உட்கார்ந்து கொண்டு தமக்குத் தெரிந்த ஔஷதங்களைக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். பெரிய வைத்திய கிரந்தங்களின் ஏடுகளை தள்ளித் தள்ளிப்பார்த்தார்கள். தமக்குத் தோன்றிய யுக்திகள் செய்து, வேண்டிய மருந்துகளைக் கொடுத்தார்கள். இப்படி எல்லாம் செய்தும், அவர் வினை தீரவில்லை. அவர் தேக ஆரோக்கியத்தைப்பற்றி விசாரணை செய்யும் தபால்கள் அபாரமாக ஆங்கிலேய தேசத்திலிருந்து வந்துக்கொண்டே இருந்தன. ஆங்கிலேய கிறிஸ்தவமத பரமாச்சாரிகள்

மன்ரோப் பிரபுவுக்கு தேகம் சௌஸ்தமாக வேணுமென்று, தெய்வஸ்தோத்திரங்கள் செய்து, கிறிஸ்தவ தேவாலயங்களில் கண்டாறுதம் வாசித்தார்கள். இப்படிப் பலவாறாய்ச் செய்தும் கூட அந்தப் பிரபுவின் வியாதி நீங்கிப் போகவில்லை.

இந்தக் கலியுகத்தில் வினைகள் தீர்க்க வெங்கடேசனன்றி வேறு நாயகனுண்டோ! இப்படி இருக்க, ஒரு நாள் மன்ரோவிடம் இருக்கும் ஹரி பக்தியுள்ள மடப்பள்ளிக்காரன் அவர் துயரப்படுவதைப் பார்த்துப் பரிதாபமுள்ளவனாய் அவரை நெருங்கிப்போய், துரையே! நீங்கள் இவ்விதம் துயரப்படுவது ஏன்! மருந்துகளாலும், மந்திரங்களாலும் உங்கள் வினை தீருமென்று எண்ண வேண்டாம். மாதவன் பக்தியினால் உங்கள் வினை மாண்டுபோகுமென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. இந்தக் கலியுகத்தில் தீராவினைகளைத் தீர்க்கும் திருவேங்கடனைப் பார்க்கிலும் பிரத்தியக்ஷ தெய்வம் இந்த லோகத்திலெங்கும் கிடையாது. நீங்கள் பரிசுத்தமான உள்ளத்தோடு அவர் திருவடியைத் தியானம் செய்யுங்கள். உங்கள் வினை தீர்ந்து விடுமென்று உறுதியாய்ச் சொன்னான். பாவங்களை பறக்கடிக்கும் பரமாத்மாவான ஸ்ரீவெங்கடேசப் பெருமானை மடப்பள்ளிக்காரன் சொன்னபடிக்கு மன்ரோப் பிரபு பக்திச் சிரத்தையுடன் தியானம் செய்துக் கொண்டு, அந்த பக்தனை நோக்கி அப்பா! கிறிஸ்து மதஸ்தனான எனக்குத் திருவேங்கடனுடைய அருளுண்டாகுமாவென்று கேட்டார். அதற்கு மடப்பள்ளிக்காரன் துரையே! ஏன் உண்டாகாது. திருவேங்கடப் பெருமான் கலியுகத்தில் எல்லா மதங்களுக்கும் பொதுவான கடவுளாகும். யாராகிலும் அவரை பக்திச் சிரத்தையுடன் தொழுதால் கட்டாயம் அவர்களுக்குப் பலனுண்டாகும். மேலும், வேதங்களிலும் பக்தி சிரத்தை ஞானம் இவைகளைப் பற்றியே பிராமணத்துவம் உண்டாகுமென்றிருக்கிறது. ஆகையால், நீங்கள் யாதொரு சந்தேகம் மனதில் வைக்காமல், திடமான நம்பகத்துடன் திருவேங்கடனைத் தியானஞ்செய்யுங்களென்று சொன்னான்.

மன்ரோப் பிரபு அப்படியே திருவேங்கடனைத் துதிசெய்து கொண்டிருந்தார். ஆஹா! அக்னிகுண்டத்தில் எரிந்த பனிக்கட்டி என்னவிதமாய்ப் பாழாய் போகுமோ, அவ்விதமாகவே அந்தப் பிரபுவின் வேதனைகள் பறந்துபோயிற்று. மன்ரோப் பிரபுவின்



ஆச்சரியத்தைச் சொல்ல யாரால் முடியும். அந்தப் பிரபுவுக்குத் திருவேங்கடப் பெருமான் பேரில் திடமான பக்தி உண்டாயிற்று. அவருக்குத் திருவேங்கடனுடைய திருமலையைப் பார்க்கவேணுமென்று ஆசை தோன்றியது. திருவேங்கடப்பெருமான் பக்தியின் பெருமையையும், தனக்கு அவர் அருளால் நேரிட்ட நன்மையையும், அவரிடம் தனக்கு உண்டாயிருக்கும் நன்றியையும், உலகமெங்கும் வியாபித்துச் சாசுவதமாகத் திருவேங்கடனுடைய மஹத்துவம் இருக்கும்படி சுவாமி திருக்கோயிலில் ஓர் தர்மத்தை ஏற்படுத்த நிச்சயித்தார். ஆகையால், அவர் மடப்பள்ளிக்காரனை அழைத்துக்கொண்டு திருப்பதிக்குச் சென்று, திருமலையைத் தரிசனம் செய்தார். அப்பொழுது அந்தத் திருமாலை தங்கத்தைப் போல் தகதகவென்று மின்னிக்கொண்டு அந்தப் பிரபுவின் கண்ணுக்குத் தோன்றிற்று. பிறகு, மன்ரோப் பிரபு மடப்பள்ளிக்காரனை திருவேங்கடப் பெருமான் சன்னதிக்கு அனுப்பி ஆனந்தவைபவத்துடன் ஸ்ரீ வெங்கடேஸ்வராருக்கு ஆயிரம் கலச அபிஷேகமும், பூலகாபு சேர்வையும், பிரம்மோற்சவமும் நடப்பித்து, பிராம்மண சாது பைராகி சந்தர்ப்பணைகளைச்செய்து, தினந்தோறும் ஸ்ரீ வெங்கடேஸ்வராருக்கு முதல் கண்ட தரிசனம் ஆனவுடனே அரிசி, நெய், பச்சபயிர், பெருங்காயம், மிளகு, உப்பு சேர்த்து திவ்யமான வெண் பொங்கல் பிரசாதத்தை நிவேதனம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். அந்த நிவேதனம் எப்பொழுதும் தன் பேரால் விளங்கும்படியும் ஏற்பாடு செய்து, அந்தத் தர்மம் சாசுவதமாக நடந்துகொண்டு வருவதற்காக வாயல்பாடு தாலுக்காவைச் சேர்ந்த கோடபயல் என்னும்கிராமத்தைத் தன் வினைதீர்த்த வெங்கடேசனுக்கு ஜாரீநாமா செய்து சாசுவத சிலாசாசனம் செய்துவிட்டார். அந்தத்தருமம் திருவேங்கடனுடைய கோயிலில் இன்றைக்கும் பிரதி தினமும் நடந்தேறி வருகின்றது. ஸ்ரீ வெங்கடேஸ்வராருக்கு நிவேதனையாகும் வெண்பொங்கல் பிரசாதத்திற்கு மன்ரோ பிரபு கங்காளம் என்று பெயர் பிரசித்தியாயிற்று. வினை நேரிட்டபோது கடவுளைப்பார்க்கிலும் வேறுகதியுண்டோ? அவரைத் தியானித்து அவர் அருளைப் பெறுவதே மேலான ஔஷதமாய் இருக்கிறது. எந்த ஜாதி, எந்த மதஸ்தன், எந்த நிறமுடையவனாயிருந்தாலும் பகவானைப் பக்தி செய்தால் அவர் தீராத வினைகளைத் தீர்த்து ஸுகம் கொடுப்பாரென்பது நிச்சயம்.

நாராயணி அம்மாள்.

# LOVING OF PARENTS

By

Mr. M. S. Sadasivan

## பெற்றோர்களை நேசித்தல்

உலகத்தில் மானிடராய் பிறந்த ஒவ்வொருவரும் தாம் உலகில் இருக்குமளவும் செய்யவேண்டிய கடமைகள் பல இருக்கின்றன. அவைகளில் முக்கியமானது நம்மைப் பெற்றதாய் தந்தையர்களைத் தெய்வமாகப் பாவித்து அவர்கள் சொற்படி நடப்பதாகும். மேலும், அவர்களை அன்புடன் வழிபட்டு, அவர்களுடைய முதுமைப் பருவத்தில் பக்ஷமுடன் பாதுகாத்து வருவதாகும். நமக்குப் பிரத்தியக்ஷமான தெய்வம் நமது பெற்றோர்களே யன்றி வேறு ஒருவரும் இல்லை என்று வேதசாஸ்திரங்களும் நீதிநூல்களும் முறையிடுகின்றன.

ஸஹோதரிகளே ! இப்பூவுலகில் சிறந்தது எது என்று எண்ணுகிறீர்கள் ? தங்கமா, அல்லது செல்வமா, ஆஸ்தியா? மோடார்காரா? காப்பி, டீ முதலிய பானங்களா ? இங்கிலீஷ்ப் படிப்பா ? வினோலியா சோப்பா ? ஒன்றுமில்லை ; பின் எது என்று எண்ணுகிறீர்கள் ? அனேக வருஷங்கள் தவம் செய்து, பத்து மாதம் சுமந்து கடவுளைத் தியானித்துக்கொண்டு தொந்திசரிய சுமந்து பெற்றதாயும் தந்தையும் அன்றி வேறு ஒருவரும் அல்லவென்று நம் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்," "தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை" என்றபடி, அவர்கள் எல்லாவிதத்திலும் நமக்குச் சிறந்தவர்களாயிருக்கிறார்கள். நேசிக்கப்பட்டவர்களுள் முக்கியமானவர்கள் அவர்களே. "பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள்" என்றபடி நாம் பசியாயிருப்பதைப் பார்த்துச் சகியாதவர்கள் பெற்றோர்களே. உலகத்தில் எல்லாவற்றையும் வாங்கலாம்; ஆனால், தொட்டிலிலும், கட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும், வைத்துச் சீராட்டி, தேனே யமுர்தமே' என்று அமைத்து அன்புடன் ஆதரித்துக்-காப்பாற்றி வரும், கண்ணாரக்கண்ட பூவுலகின் தெய்வமான நமது தாய் தந்தையாகிய பெற்றோர்களை உலகத்தை விற்றாலும் வாங்கமுடியுமா ? முடியவே முடியாது. நம்மைப் பெற்ற தாய் தந்தையர்களுக்கன்றோ பிள்ளை அருமை தெரியும் 'பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்" என்றபடி, அவர்கள் நம் மேற்கொண்ட நேசத்தை நாம் மதிக்கமுடியாது ; ஏதாவது தின்பண்டங்கள் அவர்களுக்குக் கிடைத்தால் நமக்குக் கொடுக்காமல் நாம் சாப்பிடுவதற்குமுன் ஏதாவது ஒன்றை ,சாப்பிடுகிறார்களா ! வானுலகத்துத் தெய்வத்தைக் காட்டிலும், தன் உயிரைக் காட்டிலும், அதிக அன்புடனும், நம்மை மேலாக நேசிக்கிறார்

கள். ஆதலால்தான் "பிள்ளை பிறப்பதற்கு முன் நின்று பார்." என்று பழமொழி ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், பிள்ளை பிறந்து விட்டால் பிற்பாடு பிள்ளைகளுக்கு வேண்டுமென்று ஆசையுண்டாகி விடுமாம்

ஒரு பெண் ஸகஜமாகக் கலியாணம் ஆகிறவரையில் தனக்கு என்றும், தான் சாப்பிடவேண்டுமென்று மெண்ணுகிறாள். தன் காரியத்திலேயே கருத்து அதிகமாய்ச் செலுத்துகிறாள். கலியாணம் ஆனபின் தன் ஸ்வயகார்யம் சிறிது குறைகிறது. தன் புருஷனிடத்தில் ஆசையும் அன்பும் செலுத்துகிறாள். தனக்கு ஒரு குழந்தையும் பிறந்துவிட்டால், குழந்தைகளிடத்தில் அன்பும் ஆசையும் செலுத்தி எல்லாம் அவைகளுக்கு வேணுமென்று சொல்லுகிறாள். ஒரு குழந்தை பிறந்தால் தன்னை மறந்து தன் உயிரையும் கொடுத்து வளர்க்கிறாள். நம்பெற்றோர்கள் நம்மை எவ்வளவு பாடுபட்டு வளர்த்தார்களோ! நாம் அறியோம்.

"தகப்பன் கட்ட கோமணம் இல்லை, மகன் தஞ்சாவூர் மட்டுக்கடை பாவாடை போடச்சொன்னானாம்" என்றும் "தாய்ச்சீலைக்குச் சாண் துணியில்லை தலைக்கு மேலே சரிகை மேற்கட்டி," என்றும் பழமொழிகள் வழங்குகின்றன. தாய் தந்தையர்களைப் பல விதங்களில் அலக்ஷியம் செய்து சில ஸமயங்களில் அவர்களோடு சண்டை செய்து, அவர்களின் வயது காலத்தில் சாப்பாடு போடாமல் அலையவிடுகிற அனேக புண்யவான்கள் இருக்கின்றனர். சிலர் தகப்பனாரையும், தாயையும் வயது காலத்தில் திட்டுவதும், அவர்களை உதைத்துத் தள்ளுவதுமாயிருக்கின்றனர். இப்பேர்ப்பட்ட மகாபுருஷர்களுக்கு உடனே கைகண்ட பலன் கிடைக்காவிட்டாலும், கூடிய சீக்கிரத்தில் கிடைக்கும். அதுபோல், "தாய் தந்தையர்களுக்கு பீஷ்மர் போலவும், ராமர் போலவும் ஜமதக்கினி முனியின் பிள்ளைபோலவும் நடந்தாலன்றி தலைகீழாய் நின்றாலும் மோக்ஷம் என்பதே கிடையாது. அவர்களுக்கு நரகமே கதி.

கேவலம், ஒரு நாய் கூட தனக்குச் சிறிது ஆகாரம் கொடுத்து வரும் எஜமானனுக்கு நன்றியைக் காட்டுகிறது. நாம் மனித ஜன்மம் எடுத்தும் என் நாயைக்காட்டிலும் சிறந்து விளங்கக் கூடாது? கடவுள் நமக்குப் புத்தி புகட்டும்பொருட்டே ஆலமரத்தையும் சிருஷ்டித்திருக்கிறார். ஆலமரம் கீழே விழாதபடி தன் பிள்ளைகளாகிய விழுதுகள் பலமாக வேரூன்றி மரத்தை வளர இடம் கொடுக்கின்றன. ஆகையால், எனதருமைப் பெண் குழந்தைகளே! தம் தாய் தந்தையர்களின் வாழ்நாட்களுக்கு இன்பம் ஊட்டி சுகத்தைக் கொடுங்கள். அவர்களின் சொற்படி நடந்து அவர்களுடைய அழியாத ஆசீர்வாதத்தைப் பெற்று வாழுங்கள்.

சதாசிவன்.

# WOMAN'S WORLD

# ஸ்த்ரீ பிரபஞ்சம்

## HOME NEWS.

### உள்நாட்டு வர்த்தமானம்.

**Ourselves.**

நமது பத்திரிகை:—1917௵ ஜனவரி௴ முதல் நமது பெண் கல்விப் பத்திரிகை பிரதி மாதம் முதல் தேதியில் தவருமல் வெளி வந்து கொண்டிருக்கிறதை நம் சகோதர சகோதரிகள் அறிவார்கள். பத்திரிகையில் சித்திரப் படங்கள் கிடைத்தபோது அப்போதப் போது பிரசுரித்து வந்தோம். யுத்தத்தின் கொடுமையால் நமக்குப் பலவித கஷ்டங்களிருந்தாலும் அவைகளைப் பாராமல் இம்மாதம் முதற்கொண்டு பிரதிமாதமும் சித்திரப் படங்களைப் பிரசுரிக்கத் தீர்மானித்திருக்கிறோம். ஆகவே, ஸச்சிதானந்தக் கடவுளான ஸர்வேசன் நம்முடைய தீர்மானத்தை நிறைவேற்றுவாரென்று பிரார்த்திக்கிறோம்.

**Madras Women's College Students.**

சென்னை ஸ்த்ரீகள் காலேஜின் வித்யார்த்திகள்:—சென்ற வருஷம் மேற்படி காலேஜில் படித்த ஸ்த்ரீ வித்யார்த்திகளின் படத்தை நாம் வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம் அதை 272-ம் பக்கத்தில் பார்க்கவும்.

**The Stree Aikya Samajam.**

ஸ்த்ரீ ஐக்கிய ஸமாஜம்:—சென்ற௴ 19-ந் தேதி சனிக்கிழமை மாலை 4-மணிக்கு ஸ்ரீமதி விஜயம்மாள் அவர்கள் மீனாக்ஷி கல்யாணம் என்னும் கதையை வெகு அருமையாக தத்வார்த்தங்களுடன் ஹார்மோனிய வாத்திய ஸகிதமாக ஒரு காலக்ஷேபம் செய்தார்.

**Sri Gowri Amma, B. A.**

ஸ்ரீமதி கௌரி அம்மா, B. A.:—திருவாங்கூரில் இழுவ ஜாதியைச் சேர்ந்த ஸ்ரீமதி கௌரி அம்மா அவர்கள் சென்ற வருஷம் பி. ஏ. பரீக்ஷையில் தேறி இருப்பதற்கு அந்த ஜாதிப் பெரியோர்கள் ஒரு மீட்டிங்கு கூடி அவருக்கு ஒரு பொற்பதக்கம் அளித்தனர். அந்த அம்மாள் எம். ஏ. பரீக்ஷைக்கு வாசிக்கத் தீர்மானித்திருக்கின்றனராம். இழுவ ஜாதி ஸ்த்ரீகளுக்குள் முதன் முதலாக பி. ஏ பட்டம் பெற்றவர் இவர் ஒருவரே என்று ஒரு நிருபர் நமக்குத் தெரிவிக்கிறார்.



## FOREIGN NEWS.

### வெளிநாட்டு வர்த்தமானம்.

**Red Cross fund and Women.**

ரெட்கிராஸ் பண்டும் ஸ்த்ரீகளும்:—யுத்தத்தில் காயமடைந்து கிடக்கும் வீரர்களுக்குச் சிகித்ஸை செய்யும்பொருட்டு நாகரீகம் பெற்ற ஒவ்வொரு தேசத்திலும் ரெட்கிராஸ் பண்டு என்ற ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது. இச்சங்கம் அநேகமாக, ஸ்த்ரீகளாலேயே நடை பெற்று வருகிறது. பிறப்பிலேயே பரோபகார குணமுள்ள ஸ்த்ரீகளே இது போன்ற சங்கத்தில் சேர்ந்து வேலை செய்வது வழக்கம். இப்போது பிரான்ஸ் தேசத்து ரெட்கிராஸ் ப்ரிஸிடென்டும் அவருடைய புத்திரியும் லண்டனுக்கு விஜயம் செய்திருக்கிறார். தாயும் பெண்ணும் ஜனங்களுக்கு உழைக்கவே பிறந்திருக்கிறார்கள். இவ்விருவர்களும் ஸமீபத்தில் லண்டனில் உபசரிக்கப்பட்டார்கள். இந்த உத்தம குணமுள்ள ஸ்த்ரீகளின் படத்தை நாம் வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

**Motor Women in Japan.**

ஜப்பானில் மோட்டார் வண்டிகளை ஓட்டும் ஸ்த்ரீகள்:—மேனாட்டு நவீன நாகரீகம் ஜப்பானில் வெகு வேகமாகப் பரவி வருகிறது. பத்து வருஷங்களுக்கு முன் அகௌரவமாக நினைக்கப்பட்ட வேலைகளெல்லாம் இப்போது ஸ்த்ரீகள் அவ்வேலைகளை ஒப்புக்கொண்டு வேலை செய்கிறார்கள். அப்படி அகௌரவமாக நினைக்கப்பட்ட வேலைகளுள் மோட்டார் வண்டிகளை ஓட்டுவது ஒன்று. தற்காலம், ஜப்பானில் ஆயிரத்துக்கு மேலாக ஸ்த்ரீகள் மோட்டார் வண்டிகளை ஓட்டும் உத்தியோகத்திலிருந்து வருகிறார்களென்று ஜப்பான் டைம்ஸ் பேபர் கூறுகிறது.

**Chinese Women.**

சீனு தேசத்து ஸ்த்ரீகள்:—இவர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். தங்கள் மதத்தை பரவச் செய்யும்பொருட்டு மத விஷயமான பத்திரிகை ஒன்று பீகின் பட்டணத்தில் போடுவதாகத் தீர்மானித்திருக்கிறார்களாம். பீகின் பட்டணத்தில் சுமார் இருபது ஸ்த்ரீ சங்கங்கள் வரை இருக்கின்றனவாம். அநேகமாக இந்தியாவில் ஸ்த்ரீகள் மதப்பற்றுடையவர்களாயிருப்பது போல் சீனுவிலும் ஸ்த்ரீகள் மதப்பற்றுடையவர்களென்று ஜாப்பான் ரிவ்யு என்னும் பத்திரிகை கூறுகிறது.

**Boer Women.**

போயர் ஸ்த்ரீகள்:—இவர்கள் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள். இத்தேச ஸ்த்ரீகள் நவீன நாகரீகம் அடைந்தவர்களல்ல.

ஆனாலும், அத்தேசத்தில் குடியேறின ஐரோப்பிய ஸ்த்ரீகளைப் பார்த்துப் பழகி அவர்களும் திருந்திவருகிறார்களென்று தெரிகிறது. ஸமீபகாலத்தில் தான் அத்தேச ஸ்த்ரீகளுக்குள் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டு அதிலிருந்து பத்திரிகை ஒன்று நடத்தப்பட்டு வருகின்றதாம்.



சென்னை ஸ்த்ரீகள் காவேரியின் வேடிக்கை பார்க்கிறார்கள்.

# INSTRUCTIVE HINTS
# விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN
## குழந்தைகள் விஷயம்

**Taking Children in Loins.**

குழந்தைகளை இடுப்பில் எடுத்தல்:—அநேக தாய்மார்கள் அறியாத்தனத்தால் தங்கள் சிறு குழந்தைகளை இடுப்பில் எடுத்துக்கொண்டு சீராட்டுகிறார்கள். மேலும், சிலர் தங்கள் சிறு பெண்களிடத்திலும் அல்லது தங்களுக்குத் தெரிந்த பக்கத்துவீட்டுப் பெண்களிடத்திலும் கொடுத்து குழந்தையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லுகிறார்கள். அப் பெண்கள் ஒரு வயதுக் குழந்தையென்று அறியாமல் இடுப்பில் வைத்துக் கொண்டு ஆடிப்பாடி குலுக்கி அதன் தேகத்துக்குச் சிரமம் கொடுத்துத் தாங்கள் சந்தோஷப் படுகிறார்கள். குழந்தைகளையும் சந்தோஷப் படுத்துவதாக அவர்களின் எண்ணம். ஆனால், இப் பெண்களுக்குச் சந்தோஷம். குழந்தைகளுக்குப் பிராண சங்கடம். அப்படிச் செய்வதனால், குழந்தைகளின் இடுப்பு முதுகு ஆகிய இவைகள் வளைந்து கூனலுண்டாகும். சில சமயங்களில் குழந்தைகளை ஆட்டி குலுக்கிச் செய்வதனால், அவர்களுக்குக் குடலேற்றம், வாந்தி முதலியவைகள் ஸம்பவிக்கும். ஆகவே, தாய்மார்கள் குழந்தைகளைப் பெற்று எடுத்தல்மட்டும் போதாது. அவர்கள் குழந்தைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

**Giving Tea & Coffee to Children.**

குழந்தைகளுக்கு டீயும் காப்பியும் கொடுத்தல் :—பெற்றோர்கள் படுக்கையைவிட்டு எழுந்ததும் அடுப்பங்கரைக்குச் சென்று காபி, டீ முதலிய பானங்களைத் தயார்செய்து கொள்ளுகிறார்கள். அவர்களில் சிலர் சர்க்கரையை ஜாஸ்தி போட்டுப் பானகமாக்கிக் குடிக்கும்போதும், இன்னும் சிலர், டிகாக்ஷன் ஜாஸ்திபோட்டுக் குடிக்கும்போதும் தங்கள் குழந்தைகளுக்கும் கூட கொடுக்கிறார்கள். அவர்கள் குடிக்கும்போது பக்கத்துவீட்டுக் குழந்தைகள் வரநேரிட்டாலும் பிரிய மிகுதியால் அவைகளுக்கும் கொடுக்கிறார்கள். இப்படித் தாங்கள் குடிக்கும்போது குழந்தைகளுக்குக் கொடுக்கலாமா என்பதை அறியாமலும் அப்படிக் கொடுத்தால் குழந்தைகளின் தேகம் தாங்குமா என்பதை யோஜிக்காமலும் பெற்றோர்கள் இந்த பயங்கரமான காபி, டீ முதலிய பானங்களை உபயோகப்படுத்துகிறார்கள். இப்பானங்கள் தேக நரம்புகளுக்கு தளர்ச்சிகொடுத்து உடம்பின் வலுவைக் குறைத்துவிடும். இப்பானத்தின் கெடுதல்களை "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்னும் புஸ்தகத்தில் விரிவாய்க் காணலாம். எந்தக் காரணங்களைக்கொண்டும் குழந்தைகளுக்குப் பானங்களைக் கொடுக்கக் கூடாது. இவைகளுக்குப் பதிலாக நல்ல பாலைக்காய்ச்சிக் கொடுக்கலாம். நவைக் கஞ்சி, பார்லிக் கஞ்சி முதலியவைகள் கொடுக்கலாம்.

# II

# DOMESTIC HINTS AND SUGGESTIONS

## கிருஹத்தியக் குறிப்புகள்

**Eating Ash.**

சாம்பலைத்தின்னல் :—ஸ்த்ரீகள் கர்ப்பிணிகளாகி மூன்று அல்லது நான்காவது மாதத்தில் அவர்களுடைய சாப்பாடு ருசி மாறும். வாந்தி எடுக்கும். சாதாரணச் சாப்பாட்டில் வெறுப்புண்டாகும். அச்சமயங்களில் சிலர் மாங்காய்களையும் புளி ஊறுகாய் முதலியவைகளையும் மிதமிஞ்சித் தின்னுகிறார்கள். இன்னும் சிலர், விபூதி, சாம்பல் கவிமண் முதலியவைகளை அலுக்காமல் தின்னுகிறார்கள். இப்படிச் செய்வதானது அவர்களின் தேகம் ரத்தம் கெட்டு ரோகம் உண்டாகும். அக்காலங்களில் சீதபேதி, சுரம் முதலியவை வாராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். வியாதிகள் வந்தால் குழந்தைக்கும் தாய்க்கும் கெடுதல். இந்த வியாதியோடு பிறந்த குழந்தையானது சீக்காயும் மெலிந்த தாயுமிருக்கும்.

குடும்பப்போக்கிஷம் :—நம் ஸ்த்ரீகள் வர வர கல்வியிலும் நாகரீகத்திலும் முன்னடைந்து வரும் நாளில் அவர்கள் தங்கள் தேக ஸுகத்தை பற்றிக் கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஸ்த்ரீகள் தங்கள் தேகத்தைக் காப்பாற்றும் முறையையும் வியாதிகளைத் தடுக்கும் முறையையும் குழந்தைகளைக் காப்பாற்றும் முறையையும் விரிவாக எளிய தமிழ் நடையில் நோயற்ற வாழ்வு என்னும் அருமையான புஸ்தகம் வெளியாகியிருக்கிறது. காகிதக் கிராக்கி நாளில் உயர்ந்த கடிதத்தில் அச்சடிக்கப்பட்டு ஸுமார் 600 பக்கங்கள் கொண்டதாயிருக்கின்றன. கொஞ்சக் காப்பிகளே அச்சிட்டிருக்கிறதால் சீக்கிரம் ஆர்டர் செய்யுங்கள். விலை ரூ 1-6-0 தபால் கூலி 0-4-0. இந்தியா பிரிண்டிங் அச்சாபீஸ், 117, அரண்மனைக்காரத் தெரு, சென்னை, ஈ.

**Copper Vessels.**

தாமிரப் பாத்திரங்கள் :—நம்முடைய கண்ணுக்குத் தெரியாமலும் தேகத்தில் விஷத்தைக் கொடுக்கக் கூடியவுமான க்ருமிகள் தீர்த்தத்தில் இருக்கின்றன. அந்தத் தீர்த்தத்தைத் தாமிரப் பாத்திரத்தில் எடுத்தால் க்ருமிகளெல்லாம் செத்து ஜலம் ஸுத்தமாய்ப் போய்விடுகிறது. மேலும் தாமிரத்தில் தீர்த்தம் அருந்தினால் காலரா, மலேரியா முதலிய வ்யாதிகள் அணுகா. இங்க்லண்டில் அநேக சாஸ்த்ர விற்பன்னர்கள் தாமிரச்செம்புக்கு இன்னும் என்ன சக்தியிருக்கிறதென்பதைபார்க்கவேண்டி இன்னும் அநேக விதமான வ்யாதிகளுக்குகூட அதில் திராவகம் செய்துகொடுத்து அதற்குண்டான குணங்களை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். ஒரு கோடி காலன் ஜலத்தில் இங்க்லீஷ் நாணயமாகிய $\frac{1}{4}$ கிரௌன் எடை செப்புத் திராவகத்தைக் கலந்தால் ஸுத்தமாய்ப் போய்விடுகிறதாம். ஓர் ஊரில் காலரா அதிகமாய் நடமாடிக்கொண்டிருந்தது. அந்த ஊரின் தெருக்களில் மேற்சொல்லிய திராவகத்தைத் தெளிக்கவே காலரா நின்று போய்விட்டது. சீனர்கள் என்ன அசங்கியமாய்க் குடியிருந்தபோதிலும் அவர்களைக் காலரா அணுகாததற்குக் காரணம் அவர்கள் தீர்த்தத்தை தாமிரப் பாத்திரங்களில் வைத்துக்கொள்வதேயாம்.

THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்திர ஸகிதமான ஒரு தமிழ் மாதப் பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Vol. 6. தொகுதி 6. | July 1917, ஜூலை மாஸம். | No. 10. பகுதி. 10.

ஓம்.

உலகத்தில் ஸ்த்ரீ புருஷர்கள் தங்கள் தக்கள் கர்மானுஸாரப் படி பிறக்கிறார்கள். அவரவர்களின் வாழ்க்கையில் தங்களுக்குரிய கர்மங்களை ஸரிவரச்செய்து முடித்தால்தான் கரையேற முடியும். ஸ்த்ரீகளுக்குரிய கர்மங்களை அவர்களே செய்து முடிக்கவேண்டும். ஒருவருடைய கர்மத்தை வேறொருவர் செய்ய முடியாது. ஸ்த்ரீகள் புருஷர்களுடைய கார்யத்தையும் புருஷர் ஸ்த்ரீகளுடைய கார்யத்தையும் செய்யப் புகுதல் முடியாத கார்யம். ஸ்த்ரீகள் நல்ல கர்மங்களைச் செய்தார்களேயானால் நல்ல குணமுண்டாகும். அதிலிருந்து நல்ல ஜன்மம் உண்டாகும். பிராமணனுக்குரிய கர்மங்களை பிராமணர்கள் செய்யவேண்டும். அவர்கள் செய்யாமலிருந்தார்களேயானால் அதற்குத் தகுந்த பலனை அனுபவிப்பார்கள். அதற்குப் பிறர் ஜவாப்தாரியல்ல. ஒரு ஸ்த்ரீயோ புருஷனோ உயர்ந்த தன்மையை அதாவது பரிசுத்தத்தன்மையை அடையவேண்டுமானால் அவர்கள் தங்களுடைய கடமைகளை ஸரிவர அனுஸரித்து நடக்கவேண்டும். அதற்குப் பழுது நேரக்கூடாது. இதையேதான் பகவத்கீதை 18-வது அத்தியாயத்தில் 45-வது சுலோகத்தில் விளக்கியிருக்கிறது. ஸ்த்ரீகள் தங்களுடைய கடமைகளைச் செய்யப்போகும்போது கடவுளைத் தியானித்துக்கொண்டு தான் செய்யவேண்டும்.

# PROGRESS OF THE WORLD

## பிரபஞ்சப் போக்கு

**Dr Dadhabai Naoroji.**

டாக்டர் தாதாபாய் நௌரோஜி:—பம்பாயில் சென்றமீ 30-ந் தேதி இந்திய மாதா ஒரு உத்தமமான பிள்ளையை இழந்தாள். இழந்த பிள்ளை ஸாதாரணமானவரல்ல. இவர் ஒரு உயர்ந்த உத்தம தேசாபிமானி. இவர் பரிசுத்தமான குணங்களுடையவர்; தேர்ந்த படிப்பாளி; நமது தேசத்துக்கு ஒரு திலகம்போல் விளங்கியவர். தமது ஆயுள் பர்யந்தம் இந்திய ஸ்த்ரீ புருஷர்களின் க்ஷேமத்துக்கு உழைத்தவர்; இவர் ஸ்த்ரீகளின் படிப்புக்கும் அவர்களின் முன்னேற்றத்துக்கும் வெகு பாடுபட்டவர். ஸ்த்ரீகள் அபிவிருத்தியடையந்தால்தான் தேசம் அபிவிருத்தியடையும் என்பதே இவரது கொள்கை. இவர் இறக்கும்பொழுது வயது 92. இவருடைய பிரிவுக்கு இந்தியா முழுமையும் துக்கப்படும். ஆனால், எதைப் பொறுக்க முடியாதோ அதைச் சகித்துத்தான் தீரவேண்டும் என்ற ஒரு கொள்கையை வைத்துக்கொண்டு மனதை திடப்படுத்திக்கொள்ளவேண்டும். டாக்டர் தாதாபாய் நௌரோஜி அவர்களின் மரணத்தினால் ஜனங்கள் துக்கப்படுவது உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் அவர்கள் ஒன்று செய்யவேண்டும். நௌரோஜியவர்களின் அடிச்சுவடுகளை பக்திச் சிரத்தையாகப் பின்பற்றி நடப்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லையென்று நமக்குத் தோன்றுகிறது. அடுத்த மாதம் இவருடைய ஜீவிய சரித்திரத்தைச் சுருக்கமாகப் பிரசுரிப்போம். நம் சகோதரிகள் அவசியம் இவரைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும்.

**Sir R. Tagore On The women of America.**

அமெரிக்கா ஸ்த்ரீகளைப்பற்றி ஸர். ஆர் டாகூர் பேசியது:—ஸமீபத்தில் வங்காள கவீசுவரராகிய ஸர். ரபீன்திரநாத் டாகூர் அவர்கள் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். வழியில் அவரை ஒரு அமெரிக்கா தேசத்து ஸ்த்ரீ சந்தித்து அவருடன் பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தாள். அப்போது, அந்த ஸ்த்ரீ அமெரிக்கா தேசத்து ஸ்த்ரீகளுக்கும் ஹிந்து ஸ்த்ரீகளுக்கும் உள்ள வித்தியாசங்களைக் கேட்டாள். அதற்கு அவர் சொன்னது பின்வருமாறு. "அமெரிக்கா தேசத்து ஸ்த்ரீகள் படிப்புள்ளவர்கள்; ஸாமர்த்தியசாலிகள்; செல்வாக்குடையவர்கள். ஆனால், அவர்கள் பிரதிதினம் புதிது புதிதான விஷயங்களைப்பற்றிப்பேசுவதும் இந்திரியங்களுக்குத் தகுந்தவாறு நாடகங்கள் போய் பார்ப்பதும் வழக்கமாயிருக்கிறார்கள். அநேகமாக இந்திரியங்



களைத் திருப்திபண்ணவே தாங்கள் பிறந்திருக்கிறோமென்று அவர்கள் நினைக்கிறார்கள். குழந்தைகளைப் பெற்றெடுத்து அவைகளைச் சீராட்டி வளர்த்து அந்த ஸுகத்தை அனுபவிக்கத் தெரியாதவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொரு அமெரிக்கா தேசத்து ஸ்த்ரீயும் ஜாஸ்தி கவலையுடையவர்கள். ஏதோ ஒரு கார்யம் பிசகிவிட்டால் அதற்காக அநேக நாள் வருந்துவார்கள். இவைகளெல்லாம் நல்ல தாய்மார்களுக்கு அழகல்ல என்பதுதான் எனது கொள்கை. இந்தியாவிலோ ஹிந்து ஸ்த்ரீகள் அடக்கமுடையவர்கள். பகிரங்கமாக வெளி வந்து பேசுவதும் ஒரு கார்யத்தைச் செய்வதும் அவர்களுடைய ஸ்வபாவத்தை ஒட்டினதாகயில்லை. குழந்தைகளைச் சீராட்டி வளர்ப்பதும் அக்குழந்தைகளை தேசத்துக்கும் கடவுளுக்கும் உபயோகமாகும்படி செய்வதும் ஹிந்து ஸ்த்ரீகளுடைய முக்கிய தர்மமாகயிருக்கிறது. அமெரிக்கா ஸ்த்ரீகளைப்போல் இந்திரியங்களைத் திருப்தி பண்ணப் பிறந்திருக்கிறோமென்ற எண்ணத்தை வெறுப்பார்கள். ஹிந்து ஸ்த்ரிகள் ஆத்ம திருப்தியைப் பெரிதாக நினைத்து அவ்வழியில் பாடுபடுவார்கள், கணவனைத் தவிர வேறு தெய்வம் இல்லையென்ற நம்பிக்கையே அவர்களுக்குப் பிரதானமாகவிருக்கும். இந்த மேலான எண்ணமே உலகத்திலுள்ள படித்த ஸ்த்ரீ புருஷர்கள் அவர்களைக் கண்டு மரியாதை செய்யவும் ஆச்சரியப் படவுமிருக்கிறதென்று" கூறினார். இதை நம் சகோதரிகள் கவனித்துப் படிப்பார்களென்று நம்புகிறோம்.

**Kindergarten Education.**

சிறுவர் சிங்காரத் தோட்டப்படிப்பு:—ஸாதாரணமாக ஹிந்துக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நான்கு வயது முடிந்து ஐந்தாவது வயது ஆரம்பத்தில் அக்ஷராப்பியாசம் ஆரம்பிக்கிறார்கள். அப்பருவமே வித்தியாப்பியாசத்துக்குத் தகுதியான காலம். வித்தியாப்பியாசம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டுவருஷம்வரை பிள்ளைகளின் மூளைவலுவை அறிந்துகொண்டு அவர்களின் விளையாட்டுப் போக்கிலேயே இயற்கைப்பொருள்களைப்பற்றிக் கற்பிக்கவேண்டும். பிள்ளைகளை வாய்விட்டுப் பாடும்படி சொல்லிக்கொடுக்கவேண்டும். பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக பக்ஷிகள், மிருகங்கள், செடிகள் மரங்கள், இவைகளைப் பற்றிச் சொல்லிக்கொடுக்கவேண்டும். எந்தக் காரணங்களினாலும் அவர்கள் புஸ்தகங்களை உபயோகிக்கக்கூடாது. ஆறாவது வயது மத்தியில் பிள்ளைகளுக்கு ஸன்மார்க்கப் போதனைகள் எளிதாகக் கற்பிப்பது நலம். சிறு நீதிகளை மனப்பாடமும் செய்து வைக்கலாம். சிறு சன்மார்க்கக் கதைகளைக் வேடிக்கையாகச்சொல்லி அவர்களை மறுபடியும் திரும்பச் சொல்லும்படி செய்யலாம்.

பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்தில் வைத்த உடன் ஸகலமும் தெரிந்து கொள்ளவேண்டுமென்று பெற்றோர்கள் அவர்களை அடிப்

பதும் பயமுறுத்துவதும் கூடாத கார்யம். உபாத்தியாயர்களும் பிள்ளைகள் துஷ்டத்தனமா யிருக்கிறார்களென்றும் சொல்வதை கிரகிக்காதவர்களா யிருக்கிறார்களென்றும் அவர்களைத் தண்டிக்கக் கூடாது. பிள்ளைகளை அன்பினாலேயும் அமிருதமான பேச்சுக்களினாலேயும் பழக்கிப் பாடங்களைக் கற்பிக்கவேண்டும். இப்படிச்செய்து வந்தால் பிள்ளைகள் ஒருவரேனும் சோடையாகப் போகாமல் சுருசுருப்பாயிருப்பார்கள்.

---

# SPECIAL ARTICLES
# விசேஷ வியாஸங்கள்

## SRI ANNIE BESANT
### A lesson for all

By

Sri S. Bagirathi Ammal

## ஸ்ரீ அன்னிபெஸன்டு அம்மை
### யாருக்கும் ஒரு பாடம்

"பெரியோர்கள் சொல்வது பின்னுக்குச் சர்க்கரை" என்றும் "அழ அழச்சொல்பவர் தமர், சிரிக்கச் சிரிக்கச் சொல்பவர் பிறர்" என்றும் இப்பழமொழிகளை நம் வீடுகளில் அடிக்கடி உபயோகப்படுத்துகிறோம். இவை ஸகோதரிகள் ஞாபகத்திலிருக்கலாம். ஸாதாரணமாகப் பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் வாழ்க்கையில் ஸரியாயிருக்கும்படி பலப்புத்திமதிகளைப் போதிப்பது வழக்கம். பெற்றோர்கள் சொல்லும் புத்திமதிகளை உடன் கேட்டு நடக்கும் மக்கள் சிலர். அப்பேர்ப்பட்ட பெண்கள் பிள்ளைகள் தான் உத்தமர்கள். புத்திசாலிகள்; அவர்களை யாரும் கொண்டாடுவார்கள்; அவர்களே பின்னால் ஸுகம் பெறுவார்கள். பெற்றோர்கள் புத்திமதிகள் கூறும்போது கசிந்து கேட்டுக்கொண்டு பின்னால் துர்க்குணமுள்ளவர்களின் ஸகவாஸம் பெற்று தங்களிஷ்டப்படி கோணலான பாதையில் நடக்கும் மக்கள் அனேகர். இவர்களில் சிலர் வயது வந்த பிறகு அதாவது புத்தி வந்த பிறகு பெற்றோர்கள் சொன்ன புத்திமதிகளைக் கேட்காமற்போனோமே என்று வருந்தி பிறரைப்பார்த்து நல்ல வழியில் நடக்க ஆரம்பிப்பார்கள். மற்றவர்கள் பெற்றோர்களின் புத்திமதிகளைக் கேட்காமலும் தங்களுக்கும்





**Mrs. Annie Besant.**—மிஸஸ் அன்னி பெஸன்டு அம்மை. ஜூன் மாதம் 16-ந் தேதி சென்னை கவர்ன்மெண்டாரால் உதகமண்டலத்தில் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிறார்.

தெரியாமலும் அக்ஞானத்தில் ஆழ்ந்தி துக்கமும் கஷ்டமும் ஆயுள் முடிய அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். ஸ்வயபுத்தி இல்லாத இவர்களுக்கு நல்லது கெட்டதாகவும் கெட்டது நல்லதாகவும் தோன்றும். இவர்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமானதே! இதற்கு யார் என்னசெய்யலாம்? இவர்கள் அறிவுபெற வெகு வருஷங்கள் செல்லும். அதுபோலவே நம்முடைய தற்கால தேச நிலைமையிருக்கிறது. அதைக் கொஞ்சம் கவனிப்போம்.

ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் நமது தேசத்துக்குக் கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் வந்தனர். அக்காலம் நமது ஹிந்து மதம் கேவலதசையிலிருந்தது. அந்நியமதஸ்தர்களின் முயற்சியால் ஹிந்துக்கள் வகுப்பாரிடமிருந்து வருஷாவருஷம் நூற்றுக்கணக்காகப் பல ஜாதிச் சிறுவர்கள் இதர மதங்களில் சேர்ந்துகொண்டு வந்தனர். ஹிந்துமத ஆசாரங்கள் நாளடைவில் நழுவிக்கொண்டு வந்தன. எப்போது ஹிந்து மதாசாரங்கள் குறைந்து வந்தனவோ அப்போது அதர்மங்கள் மேலிட்டு வந்தன. ஹிந்துமதச் சிறுவர்கள் நாஸ்திகர்களாகிப் பெற்றோர்களுக்கு அடங்காமல் அட்டூழியமான கார்யங்களைச் செய்து வந்தார்கள். இந்த நிலைமையைக்கண்டு சிஷ்டர்களாகிய பலர் ஏக்கம்கொண்டு நின்றனர். நமது கீதாசாரியரான ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, பகவத்கீதை நான்காவது அத்யாயம் 7, 8-வது சுலோகங்களில் எப்போது தர்மங்கள் ஒடுங்கி அதர்மங்கள் தோன்றி சிஷ்டர்கள் ஏக்கம்கொண்டு என்னை தியானிக்கின்றனரோ அவர்களைப் பரிபாலிக்க வருகிறேன் என்று சொல்லியிருக்கிறாரல்லவா? ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் வாக்கியத்தைப் பூர்த்தியாக்கும் பொருட்டே அவர் அம்சமாக நமது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மை தோன்றினரென்று நான் கருதுகிறேன். நான் அந்த அம்மையைப்பற்றி நினைப்பது போல நம்தேச மேதாவிகளும் நினைக்கின்றனர். (பிறர் இப்படியாக அவரைக் கருதவேண்டுமென்று நான் கோரவில்லை. இது படிப்போர்கள் மனதில் ஞாபகமிருக்கவேண்டும்.) ஸத்தியமே ஜயம், அதுவே சிறந்த தர்மம் என்ற ஒரு உண்மையைக் கடைப்பிடித்து இவ்வம்மை ஒரு குறையாத பிரகாசம்போல் நம்தேசத்துக்கு விஜயம் செய்தார். இந்தியாவுக்கு வருமுன்னே நமது ஹிந்து மதப்புஸ்தகங்களை ஆராய்ந்து தத்வார்த்தமாகப் படித்தவர். இவர் இந்தியாவில் காலடி வைத்தது முதற்கொண்டு ஒரு நிமிஷமேனும் விருதா காலக்ஷேபம் செய்யவில்லை. ஸதாகாலம் ஹிந்து மதப் புஸ்தகங்களைப் படிப்பதும் ஹிந்துக்களின் க்ஷேமங்களைக் கருதுவதுமாயிருந்து வந்தனர். இவருடைய ஞான குருவால் ஸ்தாபிக்கப்பட்ட பிரம்மஞான சங்கத்துக்கு முக்கிய மெம்பராயிருந்து ஹிந்துக்களுக்குப் பல நன்மைகள் புரிந்தனர். ஹிந்து மதப்பெருமைகளையும் அது உலக நாகரீகத்திற்குச் செய்து வருகிற அளவற்ற நன்மைகளையும்



ஹிந்துக்களுடைய உள்ளக்கிளர்ச்சிக்கு எடுத்துப் போதித்தனர். இவருடைய ஹிந்து மதப் பிரசங்கத்தை ஒரு தடவை கேட்டுவிட்டால் புத்திசாலியான ஒருவன் தன்னுடைய நிலைமையை அறியத்தலைப்பட்டு தன்னுடைய மதத்தை நழுவவிடமாட்டான். பிறர் மதிக்கும்படியே நடந்துகொள்வான். ஹிந்துப்பிள்ளைகள் மதப்பற்று இல்லாமல் கெட்டுப் பாழடைந்து போவதைக்கண்டு எளிய நடையில் ஹிந்து மத போதனைப் புஸ்தகங்கள் எழுதி உபகரித்தனர். ஒவ்வொரு பாடசாலையிலும் அவைகளைப் பாடபுஸ்தகங்களாக வைக்கவேண்டுமென்று அதிகாரிகளைத் தூண்டி அக்காரியத்தை ஸித்திபெறச் செய்தனர். இவர் இப்படி உழைத்து வரும் நாளில் பிரம்மஞான சங்கத்துக்கு அக்ராஸனாதிபதியாயிருந்த ஆசாரியர் பரமபதவியை அடைந்துவிடவே, அவருக்குப் பிறகு நமது அன்னிபெஸண்டு அம்மையாரே அந்த ஸ்தானத்துக்கு அக்ராஸனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இவருடைய செல்வாக்கும் புகழும் இம்மண்ணுலகத்திலுள்ள எல்லாதேசங்களிலும் பரவின. ஒவ்வொரு தேசத்திலுள்ள அதிமேதாவிகள் இவருக்குச் சிஷ்யர்களானார்கள். ஸுமார் 30,000 மெம்பர்கள் வரை பிரம்ம ஞான சங்கத்துக்கு அங்கத்தினர்களாயிருந்து வருகிறார்கள். எல்லா தேசங்களிலும் இதற்குக் கிளைச் சங்கங்களிருக்கின்றன. நமது சென்னை நகரத்துக்குத் தெற்கே நான்கு மைலுக்கப்பாலுள்ள அடையாறு என்ற ஒரு சிறு க்ஷேத்திரமே பிரம்மஞான சங்கத்துக்குத் தலைமை ஸ்தானமாகயிருந்து வருகிறது. இச்சங்கத்தின் ஆதரவில் பலவிடங்களில் இந்தியர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிற காலேஜ்களும் ஹைஸ்கூல்களுமிருக்கின்றன. அநேகபெண் பள்ளிக்கூடங்களும் பஞ்சம பாடசாலைகளும் திவ்வியமாக நமது ஜாதீய முறைப்படி நடந்து வருகின்றன. தீண்டாத ஜாதியாரென்று கருதப்படும் நமது தேசத்து ஜனங்களிடத்தில் மிகுந்த அபிமானமும் அன்பும் கொண்டவர். தம்முடையச் சொந்தப்பணத்திலிருந்து நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு உதவிச்சம்பளம் கொடுத்து உதவினர். இவர் ஒவ்வொரு நிமிஷமும் ஓயாதபடி ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் புத்திமதிகளைப்போதித்து அவர்களுக்குள்ளிருந்த வித்தியாசங்களை ஒழிக்கச்செய்தனர். இவரின் முயற்சியால் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ஒன்றுபட்டு உண்மைச் சிநேகிதர்களாயிருந்து வருகிறார்கள். பிறமதத் தூஷணைகள் கூடாதென்று எல்லோருக்கும் அறிவூட்டினர். இந்தியர்களுக்குள் ஸமரஸ ஸகோதர பாவத்தை நிலை நாட்டினர். இவர் செய்து வந்த கார்யங்களெல்லாம் நமது ராஜாங்கத்தாருக்கும் நன்மைகளாயிருந்தன. அவர்களும் இவ்வம்மையாரை மதித்து இவருடைய யோசனைகளை அடிக்கடிக்கேட்டு வந்தார்கள்.

சென்ற மூன்று வருஷங்களுக்கு முன்னர் தெய்வ ஆக்ஞையை முன்னிட்டு நமது அம்மை இந்தியர்களின் ராஜீய விஷயத்தில் நுழைந்து பாடுபடலானார். இவர் ஸாதாரண மனிதர்களைப்போல் கௌரவத்துக்கும் பெருமைக்கும் பாடுபட்டவரல்ல. மேலும், தம்மைப் போலவே பிறரையும் நினைத்து நடக்கும் ஸ்வபாவமுடையவர், தெய்வாம்சத்தை யுடையவராதலால் தெய்வபலத்தை முன்னிட்டு இந்தியர்களின் ராஜீயவிஷயமாக அவர்கள் அடையவேண்டிய ராஜாங்க சுதந்திரங்களையும் அவர்களுக்கிருக்கிற பலகுறைகளையும் பலமாக எடுத்துப் போதித்து வந்தார். இவர் இந்தியர்களாகிய நமக்குப் படிப்பு விஷயமாகவும், ஆசாரச்சீர்திருத்த விஷயமாகவும், தீண்டாத ஜாதியாரை உயர்த்தும் விஷயமாகவும் ராஜாங்கவிஷயமாகவும் செய்துவந்திருக்கிற நன்மைகள் அளவற்றன. இந்தியர்களும் இவருடைய தியாகத்தையும், பற்று இல்லாத குணத்தையும், இவரால் அடைந்த ஸகலநன்மைகளையும் பார்த்து இவர் சொற்படி நடக்கத் தலைப்பட்டார்கள். இவருடைய சங்கங்களில் ஆயிரக்கணக்காகப் படித்தவர்கள் சேர்ந்து இவருடன் பொது ஜனங்களின் நன்மைக்கு உழைக்க முன்வந்தார்கள். இவர்களைத்தான் உத்தமர்கள் என்று சொல்லவேண்டும். மற்றவர்கள் அபிப்பிராய பேதத்தினால் இவருடன் சேர்ந்து உழைக்காமலும் சிற்சில இடங்களில் தாறுமாறாக நடந்துகொண்டும் வந்தார்கள். ஸமீபத்தில் ராஜாங்கத்தார் நமது அன்னிபெஸன்டு அம்மை ராஜீய விஷயமாக ஜனங்களுக்குப் போதித்தும் எழுதியும் வருகிற வேலைகள் சண்டை சமயத்தில் ஸரியானதில்லையென்று கருதி இவரை பந்தோபஸ்தில் வைத்துவிட்டார்கள்.

இச்சங்கதி நாடெங்கும் எட்டியது. ஸ்த்ரீகளும் புருஷர்களும் சேர்ந்து பலபாகங்களில் கூட்டங்கூடி சென்னை ராஜாங்கத்தார் செய்திருக்கும் உத்தரவைக் கண்டனம் செய்துவருகிறார்கள். இது இப்படியிருக்க, அபிப்பிராய பேதத்தினால் இவருடன் சேர்ந்து உழைக்காமல் ஒதுங்கியிருந்த ஜனங்களில் அநேகர் அன்னி பெஸன்டு அம்மை சொன்ன புத்திமதிகளைக் கேட்டு அவர் செய்த நன்மைகளை முன்னமே அறியாமற் போனோமே என்று வருந்தி கும்பல் கும்பலாய் ஸ்வய ஆட்சிசங்கத்திலும் பிரம்மஞான சங்கத்திலும் சேர்ந்து வருகிறார்கள். ஒதுங்கி யிருந்தவர்களில் சிலர் பிறர் சொல்லுகிற புத்திமதிகளைக் கேட்காமலும் தங்களுக்கும் நல்லது கெட்டது என்று தெரியாமலும் இவருக்கு விரோதமாக நடந்து வருகிறார்கள். இவர்களின் நிலைமை பரிதாபமானதுதான். ஆனால், வெகுகாலம் கழித்தாவது அன்னி பெஸன்டு அம்மை செய்திருக்கிற நன்மைகளை அறிவார்கள் என்று நம்புகிறேன். கூடிய சீக்கிரத்தில் ஸ்ரீ அன்னி பெஸன்டு அம்மை விடுவிக்கப் பெறுவாரென்று கடவுளை பிரார்த்திக்கிறேன். இவருக்கு இப்போது வயது 72 ஆகிறது.

சுபம். சுபம். பாகீரதி.

# PROTECTION OF COWS

By

Mr. Sivadyananandan

## பசுக்களைக் காப்பாற்றுதல்

வஞ்சனையில்லாமல் பசுபரிபாலனத்துக்குத் தோட் கொடுங்கள். பசு மிகப் பரிசுத்தமான ஜந்து. அதனைப் பூஜிக்கவேண்டுமென்று நம் ஹிந்து சாஸ்திரங்களெல்லாம் சொல்லுகின்றன. அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள ஜனங்கள்கூட இம்மாதிரியாகப் பசுவை நன்றாய்ப் பூஜித்துக் காப்பாற்றுகிறார்கள். மகம்மதிய மதப் புஸ்தகங்கள்கூட பசுக்கள் பூஜார்ஹமென்று சொல்லுவதாக கோஸ்வாமி யென்ற ஸ்வாமிகள் எழுதியிருக்கிறார். மதத்தில் சொல்லியிருக்குங் காரணத்துக்காக அதனைப் பூஜிக்கும் விஷயம் ஒரு புறமிருக்கட்டும். அப்பசுவால் மனிதர் தினம் அடையும் லாபங்களை எண்ணிப் பார்த்தாலும் அதனை எல்லா விதத்தாலும் பூஜிக்கவேண்டுமென்று புத்திமான்களெல்லோரும் எண்ணும்படியிருக்கிறது. முக்காற்பங்கு குழந்தைகளெல்லோரும் பசுவின் பாலைக்குடித்து ஜீவிக்கிறார்கள். கிழவர்களுக்குப் பசுவின் பால் ஆதாரமாயிருக்கிறது. வியாதிஸ்தர்களுக்குப் பசுவின் பால் முக்கிய ஆஹாரம். பசுவின் பால், பசுவின் நெய் சேராத மருந்தில்லை. ஆயிரமடங்கு பசுக்கள் மனிதரைத் தாய்க்கு மதிகமாய்க் காப்பாற்றுகின்றன. இவ்வளவு உபயோககரமான பசுவை அதன் பாலைக்குடித்துக் குடித்துக் கடைசியில் பால்வற்றின உடனே, மனிதன் குரூரமுள்ளவனாய் அதனைக் கசாப்புக்காரர்களுக்கு விற்றுவிடுகிறான்.

கசாப்புக்காரர்கள் ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான பசுக்களை வெட்டிக்கொன்று அவற்றின் மாமிசத்தை விற்றுத் தம் வயிற்றை நிரப்புகிறார்கள். இது மிகவும் கோரச்செய்கையல்லவா? இக்கோரகிருத்தியத்தை யார் செய்கிறான்? கசாப்புக்காரன் மாத்திரமா? இல்லை, இல்லை. அதன் பாலைக் குடித்துக் குடித்துத் தன் குடும்பவிருத்தி செய்துகொண்டு முடிவில் வற்றிப்போனவுடனே, கோஹத்தி செய்யும் கசாப்புக்காரனுக்கு விற்பவனே அப்பாபத்தையதிகமாகச் செய்கிறானென்று சொல்ல வேண்டியிருக்கிறது. பசுவைக்கொன்ற தோஷம் இவனுக்கே அதிகமாய்த் தொடருகிறது. புண்ய பூமியென்றும், பசுவைப் பூஜிக்குந் தேசங்களில் முதன்மை

யானதென்றும், பிரஸித்தி வசித்த நமது பாரதகண்டத்தில் தினந்தோறும் கொல்லப்படுகிற பசுக்களின் தொகையை நினைத்தால் மிகவும் துக்கம் ஏற்படும்.

'என் பாலைக் குடித்துத் தன் குடும்பத்தை அபிவிருத்தி பண்ணிக்கொண்டு கடைசியில் என்னைக் கசாப்புக்காரனுக்கு விற்கும் மனிதன் மகாதுன்மார்க்கன்' என்று பசு சொன்னதாகக் கிரந்தங்கள் முறையிடுகின்றன. பசுவதை பஞ்சமகாபாதகங்களி லொன்றென அவை அலறுகின்றன. இக்கோர பாதகத்திலிருந்து நமது தேசத்தைத் தப்புவிப்பதற்காகப் பெரியோர்களால் கோரட்சண ஸபைகள் அங்கங்கே ஸ்தாபிக்கப்படுகின்றன. இச்சபையோர் பசுவிற்குக் கசாப்புக்காரர்கள் கொடுக்கும் பணத்தைக் காட்டிலும் அதிகமாகப் பணங்கொடுத்து, கிரகஸ்தர்கள் விற்கும் பசுக்களையெல்லாம் வாங்கி, விசாலமான சாலைகள் கட்டுவித்து, அவற்றில் பசுக்களைக் கட்டித்தீனிபோட்டுத் தண்ணீர் காட்டிக் காப்பாற்றுகிறார்கள்.

நாஸிகாத்ரயம்பகத்தில் ஒரு பெரிய கோரட்சண சாலையிருக்கிறது. இதில் பசுக்கள் கணக்கில்லாமலிருக்கின்றன. பம்பாய் நகரத்தில் நான்கு சாலைகளிருக்கின்றன. இச்சாலைகள் மிகப் பெரியவை. இவற்றிற்கு லட்சக்கணக்காக மூலதனம் உண்டு. இம்மாதிரி பசுச்சாலை ஸிக்கந்திராபாத்தில் ஒன்றுண்டு. நமது மாகாணத்தில் ஒரு பசுச்சாலையுமில்லை. ஆனால், பசுக்கொலைமாத்திரம் அதிகமாய் நடப்பதாகக் கேள்விப்படுகிறோம். பசுக்கொலைசெய்வோர் பிரபலமாய் அவை உயிரோடிருக்கும்போதே மிகக் குரூரமாய் நடத்துகிறார்கள். அது மகா பாபம்.

பசுக்களின் உபயோகத்தைக் குறித்தும், அதன் மகிமையைக் குறித்தும் ஐந்தாம்வேதமாகிய பாரதத்திலிருந்து சில பிரமாண வாக்கியங்களை இதனடியில் வரைகிறோம். அநுசாஸனிக பர்வத்தில் பசுக்களைக் குறித்து இம்மாதிரியாக எழுதப்பட்டுள்ளது.

பயஸா ஹவிஷா தத்னா சக்ருதா சாதசர்மணா!
அஸ்திபிச் சோபகுர்வந்தி ச்ருங்கைர்வாலைச்ச பாரத॥

பால், மோர், நெய், கோமயம், சரமம், எலும்புகள், கொம்புகள், வால் இவை யெல்லாவற்றாலும் பசுக்கள் உலகத்துக்கு உபகாரஞ்செய்கின்றன.



மாதரஸ்ஸர்வ பூதானாம் காவஸ்ஸர்வஸுகப்ரதா:!
வ்ருத்திமாகாங்க்ஷ தானித்யம் காவ: கார்யா: ப்ரதட்சிணா:॥

பசுக்கள் எல்லாப் பூதங்களுக்கும் தாய்போல ஸகல ஸுகங்களையும் அளிப்பதால் விருத்தியடைய வெண்ணுபவர்கள் பசுக்களுக்கு உபசாரஞ் செய்யவேண்டும்.

ஸமதாட்யா நதுபாதேந கவாம் மத்யேநசவ்ருஜேத்!
மங்களாயதநம் தேவ்யஸ்தஸ்மாத் பூஜ்யாஸ்ஸதைவஹீ॥

பசுக்களைக் காலாலுதைக்கக்கூடாது. அவற்றின் கூட்டத்து நடுவில் நடக்கக்கூடாது. அவை மங்களகரமானவையாதலால் அவற்றை யெப்போதும் பூஜிக்கவேண்டும்.

காதக: காதகோவாபி ததாயச்சாநுமந்யதே!
யாவந்தி தஸ்யாரோமாணி தாவத் வர்ஷாணிமஜ்ஜதி॥

பசுவைக் கொல்லுபவனும், தின்பவனும், இவர்களுக்கு உடந்தையாயிருப்பவனும், அதாவது கசாப்புக்காரனுக்கு விற்பவனும், பசுவுக்கெவ்வளவு மயிருண்டோ அவ்வளவு வருஷம் நரகத்தில் விழுந்து கெடுவான்.

நஹிபுண்யதமம் கிஞ்சித்கோப்யோ பரதஸத்தம!
ஏதா: புண்யா: பவித்ராச்ச த்ரிஷுலோகேஷுஸத்தமா:॥

பசுவைக் காட்டிலும் புண்யதமமானது எதுவும் இல்லை. திரிலோகத்திலுங்கூட அது புண்ணியமானதென்று கருதப்படுகிறது.

காவோபூதஞ்ச பவ்யஞ்ச காவ: புஷ்டிஸ்ஸநாதநீ!
காவோலக்ஷ்ம்யாஸ் ததாமூலம் கோஷுதத்தம் நசயதி॥

பசுக்கள் எப்போதும் புஷ்டியைத் தருகின்றன. அவை யெப்போதும் லக்ஷ்மிக்கு மூலமாம். பசுவுக்குக் கொடுத்தது எப்போதும் வீண் போவதில்லை.

ஆகையால், மகாஜனங்களே! நமது மாகாணத்தில் பசுக்களுக்கு நேரும் கஷ்டங்களை நிவர்த்தித்து இதர தேசங்களைப்போலவே இங்குங்கூட கோரட்சணசபைகளை ஸ்தாபியுங்கள். அது மகாபுண்யம். கீர்த்தியை விரும்பின திலீபமகாராஜன் பண்டைக் காலத்து வசிஷ்டருடைய பசுக்களைக் காப்பாற்றினான். அந்த முறை ரகுவம்சத்தில் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

பசுவைப் பூஜித்தால், நாகரீகர்களான மேல் நாட்டார் சிரிப்பார்களென்று வெட்கப்படுவோருங்கூட இப்பொழுது பசுவைப் பூஜிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

இந்துக்கள் பசுக்களுக்குச் செய்யும் மரியாதைகள் ஜாஸ்தி. தற்காலம் ஹிந்துக்கள் அவைகளைக் கவனிக்கிறார்களில்லை. ஆனால், இப்போது ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நடைபெறும் விஷயங்களைக் கவனித்தால், பசுப்பாதுகாப்பு விஷயமாக மேல் நாட்டு ஜனங்கள் செய்யும் பராமரிப்புகள் சீக்கிரம் வைதீக இந்துவின் செய்கைகளுக்கும் மேற் போய்விடுமென்று தாராளமாகச் சொல்லலாம்.

இந்து தேசமகாஜனங்களே! நம்மாகார முழுமையும் பசுஜாதியின் உதவியினாலே நமக்குக் கிடைக்கிறதென்று அறியுங்கள். விழித்துக்கொள்ளுங்கள். விரைவாக கோரட்சணசாலைகளைக் கட்டுங்கள். மிகுந்த கீர்த்தியை ஸம்பாதியுங்கள். பசுக்களைக் காப்பாற்றி உங்கள் மதத்தை நிலைநிறுத்துங்கள்.

சிவத்தியானாநந்தன்.

---

## NATURAL HISTORY FOR YOUNGSTERS

By

**Pandit V. Subramania Aiyar**

## சிறுவர்களுக்கான பிராணிவர்க்க சாஸ்திரம்

### சிம்பான்ஸிக் குரங்கு

சிம்பான்ஸி என்னும் ஜாதிக் குரங்கு ஆப்பிரிக்கா தேசத்தில் கொரில்லாவைப் போன்ற நீண்ட மயிர்களையுடையனவாய் வாழுகின்றன. ஆதலால், இவைகளையும் கொரில்லாவென்றே சிலர் ஒரு ஸமயம் நினைத்தார்கள். கொரில்லாக் குரங்கின் காதுகளைக்காட்டிலும், சிம்பான்ஸியின் காதுகள் பெரியனவாயிருக்கும். கொரில்லாக் குரங்கு எப்போதும் தனித்து வாழும் இயல்புடையது. சிம்பான்ஸிக் குரங்குகள் கூட்டம் கூட்டமாய்ச் சஞ்சரிக்கும் தன்மையுடையன. இவைகள் அப்படிக் காட்டில் சஞ்சரிக்கும்போது யானையோ சிங்கமோ இக்கூட்டத்தைக் கண்டு எதிர்க்க அஞ்சும்.



### ஊராங் உடாங்

ஊராங் உடாங்கூட வாலில்லாக் குரங்கு வகையில் பெரிய இனத்தைச்சேர்ந்தது. இது ஒரு சமயத்தில் கப்பலில் கொண்டு போகப்பட்டபோது, அங்கு கொண்டுவரப்பட்ட ஒரு ஆமையைக் கண்டு பயந்தது. பயந்து கூச்சலிட்டுக்கொண்டு கப்பல்பாய் மரத்தினுனியில் உட்கார்ந்து கொண்டது. கடைசியில், பசிவந்தபோதுதான் கீழ்வந்தது. இக்குரங்கு பொது வாய் மிகுதியும் அமைதியுடையது. போர்னியூத் தீவில் ஊராங்கு உடாங்கு அதிகமாகப் பிறந்து வளர்கிறது. அத்தேசத்திலுள்ள காய்கனி வர்க்கங்களே அவைக்கு ஆகாரமாகும். ஆனால், அவை இறைச்சி உண்ணவும், மதுபானம் செய்யவும், தேயிலைப்பானம் அருந்தவும் பழக்கப்படுகின்றன. கொரில்லாக் குரங்குகளைப்போல் இப்பிராணிகள் தனித்து வாழப் பிரியமுடையன. வயது ஏற ஏற இதற்கு உக்கிரமதிகம். கிளைகளின் மத்தியில் தழைகளால் சிறு குடிசைகள் கட்டிக்கொண்டு வாழும் இயல்புடையன. சிம்பான்ஸிக் குரங்கும் குடிசைக் கட்டிக்கொள்ளுமாயினும், அவற்றை அவை தரையில் கட்டிக்கொள்ளுகின்றன. கொரில்லா, சிம்பான்ஸிக் குரங்குகளைப்போல் மனிதாகிருதிபொருந்தியதாய் ஊராங் உடாங்கு உள்ளது. இந்த மூன்றுஜாதிக் குரங்குகளும் முஷ்டிகளை ஊன்றிக்கொண்டே ஊர்ந்து செல்லும் தன்மைவாய்ந்தன, அவைகள் தம்கைகளின் உட்பாகங்களைப் பொருத்திவைத்துக்கொண்டு நடக்கும் சுபாவமுடையனவல்ல.

### ஸயாமங் குரங்கு.

ஸயாமங் (Siamang) என்னும் குரங்கு சுமாத்ரா தீவில் வாழும் பிராணி. அது தம் குஞ்சு குழந்தைகளை அதிக ஜாக்கிரதையாய்க் காப்பாற்றும் இயல்புடையது. தம்முடைய சிறு குழந்தைகளை வெகு அன்போடு ஆதரிக்கும். இந்த ஜாதி தாய்க்குரங்கு தம் பெண் குரங்குகளைத் தினந்தோறும் தண்ணீரிற் கொண்டுபோய்க் குளிப்பாட்டும். தகப்பன் ஸ்தானத்திலிருக்கும் குரங்குகள் தம் ஆண் சந்ததிகளைக் கொண்டுபோய் அம்மாதிரியே குளிப்பாட்டும். காலையிலும் மாலையிலும் ஒருவித சப்தமிட்டுக் கொண்டுப் பட்டைகளாகத் திரண்டு தம் தலைவர்களின் கீழ் அடங்கி நின்று ஸந்தோஷப்படும்.

### ஜிப்பன் (Gibbon Apes) குரங்குகள்.

இவைகள் நீளமான முன்னங்கைகளையுடையன. இவைகள் தொலை தூரத்திற்குத் தாண்டிக் குதிக்கும் வலிமைவாய்ந்தன. இவை அப்படித் தாவும்போது ஆகாயத்தில் பறப்பனவாகத் தோன்றும். இங்கிலாந்துக்குக் கொண்டு போகப்பட்ட ஒரு குரங்கு 18 அடி தூரம் தாண்டினதாகச் சொல்லப்பட்டது. போர்னியூத் தீவிலிருக்கும் குரங்குகள் இவைகளைக் காட்டிலும் இரட்டத்தனை தூரம்பாயும் என்று சொல்லப்படுகிறது. இவைகள் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளும் கைவிரல்களையுடையன. இவை மரங்களில் வேகமாய்ச் சஞ்சரிப்பதுபோல், கைப்பளுவினால் பூமியில் சஞ்சரிக்க முடியாது. கழுத்தை நிமிர்த்திக்கொண்டு மனிதனைப்போல அதிக தூரம் நிமிர்ந்து செல்லவும் முடியாது.

### மாகட் (Magot or Barbary Ape) குரங்கு.

ஐரோப்பாவில் மாகட் அல்லது பார்பெரி என்னும் வாலில்லாக் குரங்கு என்ற ஒரே ஜாதிதான் உயிர் வாழுகிறது. அது ஜிப்ரால்டர் என்னுமிடத்தில் அதிகமாக வசித்து வருகிறது. அது காய்கனிவர்க்கங்களில் பிழைத்துவரும் சாகபட்சிணியன்று. அது ஒருவித வண்டுகளையும், தேள்களையும் பிடித்துத்தின்று ஜீவிக்கின்றது. தேள்களைப் பிடிக்கும்போது, அவற்றின் கொடுக்குகளை அவை கொட்ட ஆரம்பிக்குமுன்னேயே ஜாக்கிரதையாய்க் கிள்ளி எறிந்துவிட்டு உண்ணுகின்றது. தேள்களையே அது பெரிதும் பிரியமாய் உண்ணுகின்றது.

பண்டிட் சுப்பிரமணிய ஐயர்.

உலகபரிணாமத்தில் துக்கமும் கஷ்டமும் ஏற்படுவது ஸகஜம். அதனால், துக்கம் ஏற்பட்டுதே என்று மனம் சலிக்கக்கூடாது. அது நமது ஸுகத்துக்காக ஏற்பட்டதென்று நினைத்து நம்முயற்சியை நிறைவேற்றவேண்டும். கடைசியில் ஸுகம் உண்டாகும். இது நிச்சயம்:—ஸ்ரீ விவேகாநந்த சுவாமி.

* * *

முப்பது வருஷம் ஸுகப்பட்டவனுமல்ல முப்பது வருஷம் கஷ்டப்பட்டவனுமல்ல.

* * *

கலியுகத்தில் துஷ்டர்கள் ஜாஸ்தி. அவர்கள் செய்வது நியாயம். அதற்கு உட்பட்டிருத்தலானது நமது விதியின் பயனே யொழிய வேறில்லை.

## SRI MAHALAKSHMI

By

Mr. P. K. Kalyanarama Sastriyar

(Sub-Registrar, Trichinopoly)

### ஸ்ரீ மகாலக்ஷ்மி

ஸ்ரீ லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்குப் பாத்திரமாக விருக்க விரும்பும் பெண் கல்வியைப் படிக்கும் சகோதரிகள் இங்கு நாம் சொல்லப்புகும் விஷயத்தைச் சீராய்க் கவனித்து அதன்படி நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம். ஆயுளையும், ஆரோக்கியத்தையும், ஐசுவரியத்தையும், சற்புத்தியையும், சத்சங்கத்தையும் கூட்டி வைத்து ஜனங்களை க்ஷேமமாய் வாழச்செய்வது ஸ்ரீ மகாலக்ஷ்மியின் கிருபா விலாஸமே யென்பது யாருக்கும் தெரிந்தவிஷயம். இந்த லோகமாதாயாரிடம் நிலைநின்று கடாக்ஷிக்கின்றாளோ அவர்கள் பெரியோர்களும், மாதா பிதாக்களும், பந்துக்களும், அதிதிகளும் தங்களைவெறுத்துக்கொள்ளும்படிக் கனவிலும் நடந்துகொள்ள மாட்டார்கள். பொய்யும் நாஸ்திகவாதமும் அவர்களை அணுகாது. அதைர்யமும் அசட்டுத்தனமும் அவர்களை அண்டாது. செய்நன்றி மறவாமையும் நம்பினோரைக் காப்பாற்றலும் அவர்களுக்கு முதன் முதலான கார்யமாகும். கண்டவிடங்களிற் சென்று, கண்டவர்களுடன் கூடி, கண்டபடி யெல்லாம் பேசிக் கண்டவாறெலாம் உண்டு உடுத்துக் கலங்கிக் குலுங்கித் தாறுமாறாய் நிற்றல் அவர்களிடத்தில் ஏற்படாது. துர்வாதமும், கோட்சொல்லுதலும், கலகம் செய்தலும், நல்ல காரியங்களை விரோதித்தலும் அவர்களிடம் நாடாது. தன்னாலோ பிறராலோ தானம் செய்யப்பட்ட பொருளை அவர்கள் மறுபடியும் அடையவிரும்பார்கள். தன்னை ஆச்ரயித்திருக்கும் பெற்றோர்களையும் மற்றோர்களையும், பந்துக்களையும், சகோதரிகளையும், கன்னிகைகளையும், பாலர்களையும் போஷிப்பதில் தேகசிரமத்தையும் திரவியச்செலவையும் ஒரு நாளும் அவர்கள் பாராட்ட மாட்டார்கள்.

ஸதாசாரமென்பது அவர்களிடத்தேதான் காணப்படும். அவர்கள் நனைந்த கால்களுடன் சயனிக்கமாட்டார்கள். கால்களை நன்றாய் அலம்பாமலும், உடுப்புக்களை உடுக்காமலும் படுக்கைக்குச் செல்லமாட்டார்கள். அந்திசந்திகளிலும் பகல் காலத்திலும் படுத்துக் கொள்வதை விலக்குவார்கள். தலையில் எண்ணையை வைத்துக்

கொண்டு மற்ற காரியங்களைச் செய்ய மாட்டார்கள். எண்ணெய் தேய்த்துக்கொண்ட படி நமஸ்கரித்தல், பூக்கொய்தல் முதலிய காரியங்களில் பிரவேசிக்க மாட்டார்கள். நகத்தினால் புஷ்பங்களைக் கிள்ளமாட்டார்கள். கால் நகத்தினால் தரையிற் கீரமாட்டார்கள். உடம்பை எப்பொழுதும் பரிசுத்தமாய் வைத்துக்கொள்வார்கள். மந்திர தந்திரங்களாலும் சூதுவாதுகளாலும் ஜீவிக்க விரும்பார்கள். தர்ம காரியங்களில் சென்று ஒரு நாளும் பின்னிடமாட்டார்கள். குறைவாக ஒன்றையும் எக்காரணத்தினாலும் செய்யமாட்டார்கள். பகலில் சிற்றின்பத்தை விரும்பும் அவலக்ஷணம் அவர்களிடத்துக் கிட்டவே கிட்டாது. வம்புபேசலும் வயிறு வீங்க உண்ணலும் கடுகடுத்துச் சம்பாஷித்தலும் அவர்களிடம் காணக்கிடைக்காது. சிரஸில் புஷ்பமும் தேகத்தில் வஸ்திராபரணங்களும், முகத்தில் தெளிவும் கண்களில் காந்தியும், வாக்கில் மாதுர்யமும் கொண்டவர்களாய் எப்பொழுதும் மங்கள ரூபிகளாய் அவர்கள் விளங்குவார்கள். தீபநிழலிலும் ஆஸனநிழலிலும், படுக்கை நிழலிலும் பரபுருஷர் பரஸ்திரீ நிழலிலும் ஒரு நாளும் ஒதுங்கி நில்லார்கள். பெரியோர்களுக்குப் பணிந்து ஹிதத்தையே எப்பொழுதும் நாடுவார்கள். பதியின் மனமறிந்து நடப்பார்கள். விளையாட்டினால் கூட கணவனுக்கு வேலையிடமாட்டார்கள். துடைப்பத்தின் தூளி மேலேபடும்படியான இடங்களில் செல்லார்கள். துடையில் தாளம் போடுதல், மேஜை நாற்காலிகளைத் தட்டுதல், எச்சிலைத் தொடுதல், இருட்டில் படுத்தல், இரவிலுடுப்பைப் பகலில் உடுத்தல், காய்கனியில்லாது புஜித்தல், சோம்பற் படுதல், கல்லெடுத்துத் தட்டுதல், நிர்வாணிகளைப் பார்த்தல், அஸ்தமிக்கும் சூர்யனைக் கண்ணுற்றல், பிறர் பொருளை ஆசித்தல், பிறர் ஸ்த்ரீகளையோ புருஷர்களையோ காமித்தல், பிறருக்குப் பிரதிகூலமியற்றுதல், நகத்தினாலோ, முள்ளினாலோ, ரத்தத்தினாலோ, மண், கரி முதலியவற்றாலோ வீணில் சுவர்களிலும் தரைகளிலும் எழுதுதல், காலலம்பாமல் புஜித்தல், கண், காது, வாய், மூக்கு, உள்ளங்கை, உள்ளங்கால் இவைகளில் சந்தனம் முதலியவை பூசிக்கொள்ளல், சாப்பிட்ட பிறகு பல்துலக்குதல் முதலிய அல்பக்ஷணங்கள் அவர்களிடம் பொருந்தாது. பெரியோர்கள் அனுபவத்தினாலும் திருஷ்டாந்தங்களினாலும் சாஸ்திரங்களினாலும் லக்ஷ்மீவிலாஸம் பொருந்திய ஸ்த்ரீபுமான்கள் மேற்கண்ட உத்தம குணங்களுடையவர்களாய் இருப்பார்களென்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளை



யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு நம் பெண்கல்விப் பத்திரிகையைப் படிக்கும் ஸகோதரிகள் தம்மிடமிருக்கும் நற்குணங்களை மேன்மேலும் பிரகாசிப்பித்துக் கொண்டும் தம்மிடம் இல்லாத நற்குணங்களை அனுஷ்டானம் செய்துகொண்டும் வருவார்களேயானால் அவர்களே நமது ஆரிய பூமிக்கு இன்றியமையாத அலங்காரமாய் விளங்குவார்கள். இந்த லக்ஷணங்கள் நம்மிடம் பொருந்த லக்ஷ்மிதேவியின் கிருபையே காரணமாதலால் அந்த லோகமாதாவை மனதாரத் தியானிப்போம்.

ப. கி. கல்யாணராம சாஸ்த்ரிகள்.

---

# MORAL LITERATURE
# சன்மார்க்கக் கல்வி

## A WOMAN SAINT

By

**Sri Kalyani Ammal**

## ஒரு ஸந்யாஸினி

பக்தியின் பெருமையை விளக்கக் கதைகள் இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் அநேகமிருக்கின்றன. ஈச்வரனிடத்து மிகுந்த ப்ரேமையையும் ஈடில்லாத பக்தியையும் வகித்து வந்த நமது பூர்வீக மகரிஷிச்சிரேஷ்டர்களில் மதங்கமஹரிஷி மகாமகிமை பொருந்திய தபோதனர். இம்மஹரிஷியைப்போன்றவர்களின் பக்திக்கு ஈடுபட்டே ஸ்ரீமந்நாராயணமூர்த்தி, மானுஷ வேஷம் தரித்து தண்டகாரண்யத்தில் தமது சக்திஸ்வரூபியாகிய சீதாதேவியுடன் பாதசாரியாய் ஸஞ்சரித்தார். அவர் தம்மை நோக்கித்தபம் செய்யும் பகதமண்டலங்களின் ஆச்ரமங்கள் தோறும் தாமாகவேபோய் அவர்களுக்கு ஸேவை ஸாதித்து அவர்களைக் கிருதார்த்தர்களாகச்செய்துகொண்டிருந்தார்.

மதங்க மஹரிஷியின் உத்தமகுணங்களோ அற்பமனுஷன் நாவினால் சொல்லத் தகுந்ததன்று. அவர் அற்பர்களிடமும் கருணை

கூர்ந்து அவருடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தினாலேயே பரிசுத்தமாக்கும் தபஸுடையவர். அவர்களை உயர்ந்த பதவிக்குக்கொண்டு வரும் குணமுடைய மஹாநுபாவர். இப்பேர்ப்பட்டப் பரிசுத்தமான மகரிஷியினிடத்தில் சபரி என்னும் யாருமற்ற அனாதையான ஸ்த்ரியானவள் சிஷ்ய கோடிகளில் ஒருவராகச் சேர்க்கப்பெற்றாள். உலர்ந்த ஸமித்துக்களைப் பொருக்கி ஆச்ரமத்திற்கருகே கொண்டு போய்ச்சேர்ப்பதே அவளுக்கு மதங்க மஹரிஷியிட்ட வேலையாகும். இவ்வாறு சபரியைப் பணிவிடையாளாகக் கொண்ட மதங்க மகரிஷியை மற்ற ரிஷிகள் வெறுத்து வந்தனர். அவர் செய்யும் கார்யங்களைத் தூஷித்தாலும், அவர் அதனை லக்ஷ்யம் செய்வது கிடையாது.

ஸ்ரீராமன் தண்டகாரண்யத்தில் சித்ரகூடம் வந்து சேர்ந்தபோதே, மதங்கமஹரிஷி தமது கார்யம் பூலோகத்தில் முடியப்பெற்றவராய் பிரம்மலோகப் பிராப்தியடைய விருக்கையில், தமது சிஷ்யையாகிய சபரியைத் தம்மிடம் அவர் வரவழைத்தார். ஸ்ரீராமனைத் தாம் பார்க்கப் பாக்யம் பண்ணவில்லையென்றும், தாமிருந்த ஆச்ரமம் ஸ்ரீராமன் வரும்போது சூன்யமாயிருக்கப் படாதாகையால், தமக்குப்பதிலாக அந்த ஆச்ரமத்திலிருந்து ஸ்ரீராமனுக்குச் சபரியே ஆதித்யம் பண்ண யோக்யதையுடையவள் என்றும் சொல்லிப் போயினார். அவர் சொல்லியவாறே, ஸ்ரீராமனுக்கு ஆதித்யம் பண்ணவேண்டி அம்மஹாநுபாவன் வருகையை உத்தேசித்து சபரி, அன்று முதல் காட்டிலுள்ள பலவித பழங்களைச் சேகரிக்கலானாள். ஸ்ரீராமனுக்கு அளிக்கத்தகுந்த பழம் நல்லதாயிருக்கிறதா, ருசியுள்ளதாயிருக்கிறதா என்று சபரி பல்லினால் மெல்ல மெல்லக் கடித்துக் கடித்துப்பார்ப்பாள். நல்ல பழங்களை அப்படியாய்ந்து எடுத்து எடுத்துச் சேர்ப்பாள், இந்த பக்தைக்குத் தரிசனம் கொடுக்கவே ஸ்ரீராமன் சபரியாச்ரமம் வரப்பதின்மூன்று வருஷம் சென்றது. அப்படி வந்து சேர்ந்தபோது, சபரி ஸ்ரீராமனுக்குக் கொடுத்த பழம், பதின்மூன்று வருஷத்திற்கு முன் பறித்துக் கடித்து ருசி பார்த்து வைத்த பழங்களேயாயினும், அவை அன்றே தான் பறித்தன போலும், அன்றேதான் கனிந்து பழுத்தனபோலும் தோன்றின. அவ்வளவு புதிதாயும் ருசியுள்ளதாயுமிருந்தன. சபரியின் பக்தியின் பெருமையை என்னென்றுரைக்கலாம்! தெய்வபலம்



தெய்வபக்தி முதலியனகொண்டு அஸாத்யமானகார்யத்தையும் ஸாத்யமாகச் செய்து பகவானுடைய கிருபையைப்பெறலாமென்று தெரிகிறதல்லவா? ஆகவே, பக்தியே பரமனை வசப்படுத்தும் மருந்து. மாணிக்கவாசகரும், ஈசனை 'பக்திவலையில் படுவோன் காண்க' என்றார். சபரியின் ஆதித்யம் பெற்ற ஸ்ரீராமலக்ஷ்மணர், மதங்கமஹரிஷியின் ஆச்ரமப்பிராந்தியங்களைக் காட்டவேண்டுமென்று கேட்க, சபரியும் தன் ஆசார்யரின் பெயரை உச்சரிக்காது அவர் இருந்த இடம், பூஜைபண்ணின இடம் முதலியவைகளைக் காட்டிக்கொண்டு சென்றாள். பம்பாஸரப்பிராந்தியத்தில் தன்னாசாரியர் எது நினைத்தாலும் வரும் என்றும் அவரால் கூடாத கார்யம் ஒன்றுமில்லையென்றும் சொல்லி அவர் தம் ஸ்நானார்த்தமாக வரவழைத்த ஸப்த ஸமுத்திரங்களையும் ஸ்ரீராம லக்ஷ்மணருக்குக் காட்டி நின்றாள்.

ஸ்ரீமதங்கர் பேர் சொல்லாமலே, அவர் பூஜை பண்ணின க்ஷேத்ரத்திலேயே, அவர் அர்ச்சித்த புஷ்பங்கள் இன்னும் வாஸனை குறையாமலும் நிறம் குன்றாமலும், வாடாமலுமிருக்கும் நிலையைக் காட்டி, அவருடைய பெருமையை உயர்த்திக் கூறினாள். அம்மஹரிஷி பெரிய உபவாஸ விரதத்தை அனுஷ்டித்த பின்னர் ஸப்த ஸமுத்ரதீர்த்தங்களில் ஸ்நானம் செய்தார். அச்சமயம் அவர் அரையில் கட்டிக்கொண்டிருந்த ஸ்நான வஸ்திரமாகிய மரயுரியை மரத்தில் சுருட்டி வைத்ததிலிருந்து, நீர் இன்னும் சொட்டிக் கொண்டிருப்பதைக்காட்டி, அப்படிப்பட்ட பக்தியின் மஹிமையே இதுவரையில் இப்படி விளங்கிவருகிறதென்றும் கூறினாள். இம்மாதிரி சபரஸ்த்ரீயும் தனது ஆசார்யரின் பெயர் சொல்லாமலே குருபக்தியுடையவளாய் நின்று ஸ்ரீராமனது கிருபையினால் மோக்ஷஸாம்ப்ராஜ்யத்தைப் பெற்றதிலிருந்து, ஸ்த்ரீ புருஷர்கள் அறியவேண்டிய விஷயங்கள் அதிகமிருக்கின்றன. பெரியவர், குருக்கள், மாதா பிதாக்கள் முதலியவர்களுடைய பெயர்களைத் துணிந்தடித்து அவமரியாதைக் கறிகுறியாய் சொல்லாமலிருத்தலே, பக்தியாயிருப்பதற்கு முதற்படியென்றறியவேண்டும். அவ்வுயர்ந்த நாமதேயங்கள் பூஜ்யதா பாவனையுடன் மனதில் தியானபாத்திரமாயிருக்கவேண்டுமே யொழிய வேறு விதமாய் அதனை உபயோகித்தல் நன்மை தரத்தக்கதன்றாம். இதனாலன்றோ பெரியவர்கள் தொன்று தொட்டு ஸம்பிரதாயமாய்

குருத்யானமென்றொன்றைக் குறிப்பிட்டு வைத்திருக்கிறார்கள். ஆகவே, பெரியவர்கள் பெயர் சொல்லாமையைப் பக்திக்கு முதற்படியாகக்கொண்டு நடத்தல் மிகவும் அவசியமானதென்று சபரியின் சரித்திரம் எவருக்கும் நன்றாகத் தெரிவிக்கும்.

கல்யாணி அம்மாள்.

---

## UNREALISED ONES

## விட்டகுறை

### ஓர் திவ்விய சரித்திரம்.

ஒரு குருவும் அவர் சிஷ்யனும், அநேக சிவஸ்தலங்களுக்குச் சென்று யாத்திரை செய்துகொண்டு வருகையில் வழியில் குருவுக்கு மிக்க அசாத்தியமான நோய் கண்டுவிட்டது. இதனால் அவர் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்து கொண்டிருக்கையில், ஓர் பறைச்சேரியண்டை இருவரும் வந்து தங்கும்படி நேர்ந்தது. அப்பொழுது குருவுக்கு அடங்காத கொடிய தாகம் அதிகரித்தது. உடனே தமது சிஷ்யனை அவசியம் தண்ணீர் கொண்டுவரும்படி ஏவினர். அவன் எங்குஞ் சுற்றிப் பார்த்தும் தண்ணீர் வாங்கத்தக்க உயர்ந்த வருணத்தவர் இல்லாமையினால் குருவிடம் வந்து சங்கதியைச் சொன்னான். அதற்கு அவர் நாம் இப்பொழுது எங்கே வந்து சேர்ந்திருக்கிறோமென்று கேட்டார். சிஷ்யன், ஸ்வாமி! இஃது ஒரு பறைச்சேரி. அதனால்தான் நமக்குத் தண்ணீர் கொடுக்கத்தக்கவர் இங்கு ஒருவருமில்லையென்று கூற, குரு, அப்பா! நானோ சகிக்கமுடியாத நோயினால் வருந்துகின்றேன்; எனக்கு மரணதாகம்போலக் கொடிய தாகம் உண்டாகியிருக்கிறது. பறையரிடமிருந்தாவது கொஞ்சம் தண்ணீர் வாங்கிவா என்று மிகுந்த தாழ்ந்த குரலில் கூறினார்.

உடனே சிஷ்யன் தீவிரமாக ஓடிப்போய்த் தண்ணீர் வாங்கி வருவதற்குள்ளே குருவினுடைய ஆன்மா நீங்கியது. அதைக்கண்ணுற்ற சிஷ்யன் நாம் எவ்வளவு ஞான நூல்களைக் கற்றும் யாது பயன்? நமது குருவினுடைய ஆபத்துக்காலத்தில் ஆரம்பத்திலேயே பறையரிடமிருந்து தண்ணீர் வாங்கி வந்து கொடாமற் போனோமே. இந்தப் புத்தியீனத்தினால் நமது அருமையானவும் பரிசுத்தமானவுமான குரு மிகுந்த தாகத்தோடு உயிர் விடும்படி நேர்ந்ததே! அந்



தோ! "என்ன பாதகத்தைச் செய்துவிட்டேன்" என்று சிந்தையை நொந்துகொண்டான். அந்த வியாகூலமே அவனது தேகத்தை உருக்கி முடிவில் தனது ஆவியை நீக்கும்படி நேர்ந்தது. குரு பறையரிடமிருந்தாவது தமக்குத் தண்ணீர் வராதா? என்று பறைச்சேரி ஞாபகத்தோடும், சிஷ்யன் தனக்கு மெய்யறிவூட்டிய குருவுக்கு அந்தியகாலத்தில் தண்ணீர் கொடாத மகா பாதகனாகி விட்டோமே யென்ற மிகுந்த குருபக்தியோடும் இறந்தார்கள்.

'எப்பொருளைச் சிந்திப்பானிவ்வுடல் விட்டேகும்போ,
தப்பொருளையே யொருவனார்ந்திடுவான்-பொற்பினவன்
எப்பொழுதுஞ் சிந்தித்திருந்திடலாலந் நினைப்பைச்
செப்பியவிவ்வுண்மைதனைத்தேர்.'

என்ற ஓர் சீவன் முக்தரின் வாக்கியப்படி, குருவுக்குப் பறைய ஜன்மமும், சிஷ்யனுக்கு அந்த நகரத்தை ஆளும் அரச ஜன்மமுங் கிடைத்தன. குரு பறையனாகப் பிறந்தபோதிலும் விட்ட குறையால், தமக்கு முற்சென்ம முடிவில் ஏற்பட்ட எண்ணவிசேஷத்தால் தாழ்ந்த ஜன்மம் வந்தது என்ற ஞாபகம் அவருக்கு நன்றாக இருந்தது. ஆதலால், பிறந்தது முதல் குழந்தை வாய்திறந்து சத்தமிடாமல் மௌனமாக இருந்துவிட்டது. ஐந்து வயசுக்கு மேலாகியும் அந்தச் சிறுவன் மற்றைய சிறுவர்களோடு விளையாடப் போவதுமில்லை; வாய்திறந்து பேசுவதுமில்லை. ஆனதால், அவனை எல்லோரும் ஊமைப்பையனென்றும், மந்தப்பையனென்றும் ஏளனஞ் செய்து வந்தனர். அச்சிறுவனோ பூர்வ ஜன்ம ஞாபகத்தினால், நாம் பறையரோடு கலந்து நிலையில்லாத இம்மைச் சுகங்களை அனுபவித்துக்கொண்டு கடவுளை மறந்து இருப்போமாயின் பின்னரும் ஜன்மத்திற்கு ஆளாக வேண்டிவருமே யென்ற பயத்தையுடையவராய் ஸதா காலமுஞ் சிவத்யானஞ் செய்துகொண்டிருந்தார். இந்த இரகசியத்தை மற்றவர்கள் எவ்வாறு உணரமுடியும்? சிஷ்யன் அரசன் குழந்தையாகப் பிறந்தும் பூர்வஜன்ம ஞாபகத்தால், நாம் செய்து வந்த குருபக்தி விசேஷத்தாலல்லவா நமக்கு இந்தச் சிறந்த பதவி கிடைத்தது. இதைக்கொண்டே நாம் ஏமாந்துவிடாமல் சிவாநுக்கிரகத்தைப் பூரணமாகப்பெற முயலவேண்டும். நமது குரு எங்கே வந்து பிறந்திருக்கிறாரோ? எப்படியாவது அவரை நாம்

அடையவேண்டும் என்ற எண்ணத்தோடு கடவுள் பக்தியுடையவனாகவும், தூயசிந்தையுடையவனாகவும், சதாசாரத்தோடு கூடினவனாகவும், புத்தி தெரிந்த நாள் முதல் தன்காலத்தைக் கழித்து வருவானாயினன்.

இப்படியிருக்கையில், காலக்கிரமத்தில் இந்தப் பிள்ளைக்குப் பட்டாபிஷேகமாக அவனே அந்த நகரத்துக்கு அரசனானான். அப்பொழுது தன் ஊர்ப் பறைச்சேரியில் ஒரு பறையன் பிறந்தது முதல் மந்தனாகவும் ஊமையனாகவும் இருக்கிறானென்று கேள்வியுற்றான். உடனே, அரசனுடைய மனம் சற்று இளகியது. ஏன் இந்தச் சங்கதி கேட்டதும் தன் மனம் உருகியது என்ற தன்மை மாத்திரம் அவனுக்குப் புலப்படவில்லை. அந்த ஊமையனுடைய தகப்பன் நாள்தோறும் நடுராத்திரியில் வீதிகளில் பறை அடித்து ஊரார்களைச் சாக்கிரதையாயிருக்கும்படி அரசாட்சியாரால் நியமிக்கப்பட்ட ஒரு பிரசித்தப் பறையனென்று அரசனுக்குத் தெரியவந்தது. அது முதல் அரசன் தன் மனைவியோடு மேலுப்பரிகையில் பறையன் வந்து போமளவும் இருந்துவிட்டுப் பள்ளியறைக்குப் போவது என்று தீர்மானித்து விட்டான். ஏனப்படி யேற்பாடு செய்தானென்றால் ஓரிரவாவது அந்த மந்தப் பறையன் தந்தைக்காகப் பறையடிக்க வந்தாலும் வருவான். அப்பொழுது அவன் வாக்கிலிருந்து வருஞ்சொல் எவ்விதமாக இருக்குமென்று பார்க்கவேண்டும், என்ற ஆவலினாலே இவ்வாறு அரசன் திட்டம் பண்ணினான். அரசன் மேலுப்பரிகையில் தன் மனைவியோடு சுகித்திருந்தபோதிலும்,

எத்தொழிலைச் செய்தாலுமே தவஸ்தைப்பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே—வித்தகமாய்த் தாதி விளையாடியிருகைவீசி வந்தாலும் தாதி மனம் நீர்க்குடத்தேதான்.

என்ற பட்டினத்தடிகளது திருவாக்கின்படி அரசன் உள்ளமானது விட்டகுறையின் விசேஷத்தால் எப்பொழுதும் சிவத்தியானத்திலே அமிழ்ந்து கிடந்தது. இவ்வாறு சிறிது காலம் நடந்து வருகையில், ஒரு நாள் லோந்து சுற்றும் பறையனுக்குக் கொடிய தாபச்சுரம் உண்டாகிவிட்டது. அன்று நடுராத்திரி தனக்கு நியமிக்கப்பட்டப் பணிவிடையைச் செய்துமுடிக்கச் சாத்தியப்படாமல் போய்விட்டதே யென்ற துக்கம் அவனை வந்து பிடித்தது. தனக்கெ



திரே நிற்கின்ற ஊமையனைக் கண்டதும், நமக்கு ஒரு ஆண்பிள்ளை இருக்கிறானென்பதினால் என்ன பிரயோசனம்? இந்தச் சமயத்தில் அவனால் என்ன உதவிசெய்ய முடியும்? இந்தப்பிள்ளை இருந்தாலென்ன? இல்லாமற் போனாலென்ன? இரண்டுஞ் சரிதான், என்று வாய்விட்டுப் பிரலாபிக்கலானான். ஒரு நாளும் அசையாது ஊமையனைப்போல மௌனமாயிருந்த அவன், தினந்தோறும் தகப்பன் செய்துவந்த தொழிலைப் பார்த்திருந்தபடியால் அங்கு ஒரு ஆணியில் மாட்டியிருந்த பறையைக் கழுத்திலெடுத்து மாட்டிக்கொண்டு, ஒன்றும் பேசாது அடிக்குங் கோல்களையுமெடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டு விட்டான். இதைக் கண்டதும் சுரத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டு கிடந்த தகப்பனுக்கு மிகுந்த மன மகிழ்ச்சியுண்டாகி விட்டது. அந்த ஊமையன் முற்சென்மத்தில் மகாஞானியானதால், ஒரு சிவசந்நிதானத்தை யடைந்து சுவாமி தரிசனம் செய்துகொண்டு நடுநிசியானவுடன் கிழக்கு வீதியில் போய்ச் சற்று நேரம் பறையடித்து விட்டு,

சனித்தலுந் துக்கஞ் சரையுறலுந் துக்கம்
மனைக்கிழத்தியுந் துக்கமாறு—தனர்த்தமிகு
சஞ்சார சாகரமுந் துக்கமா மாதலினால்
துஞ்சாதீர் துஞ்சாதீர் சோர்ந்து.

என்ற வெண்பாவை உரக்கக் கூவி ஜனங்களை எச்சரிக்கைசெய்தான். இவ்விஷயத்தைக் கேட்கவேண்டும் என்றே உப்பரிகையில் நெடுங்காலமாகக் காத்திருந்த அரசன் காதில் அச்செய்யுளின் அர்த்தம் புகுந்தது. அக்கினிக்குமுன் எதிர்ப்பட்ட வெண்ணெய்க்கட்டிபோல அவன் சிந்தை உருகத்தொடங்கியது. உடனே, அவன் ஓர் தூதனை அழைத்து அப்பறையன் தனது பணிவிடைகளை முடித்துக்கொண்டு கிழக்கு வீதிக்குத் திரும்பிவருகையில், நமது அரண்மனை வாயிலுக்கு அழைத்துவரும்படி கட்டளை யிட்டு அனுப்பினான். தெற்கு வீதியிற் சென்ற மந்தைப் பறையன் அங்கே கொஞ்ச நாழிகைவரையில் பறையை முழங்கி விட்டு,

பேராசையாற்பார் பிணிக்கப்படுகிறது
ஏரார்தொழிலாலுமெண்ணனுஞ்—சோர்வாகி
ஓங்காயுளின்குறைவையோர்வதில்லையாதலினால்
தூங்காதீர் தூங்காதீர் சோர்ந்து.

என்று உரக்கக்கூவி எச்சரிக்கைசெய்தான். அப்பால், மேற்குவீதியையடைந்து சிறிதுநேரம் பறைகொட்டி விட்டு,

காமன் குரோதன் கடுலோப னென்கின்ற
நாமத் திருடர் பலர் ஞானமணி—தாமிங்
கொழித்துக் கவரவுட லுற்றா ரின்னே
விழிக்க விழிக்க விரைந்து,

என்று உரக்கக்கூவிவிட்டு வடக்கு வீதிக்கு வந்தான், அங்குநின்று மிகுந்த ஆவேசத்துடன் பறையை அடித்துவிட்டு,

தாயில்லைத் தந்தையில்லைச்சார் சோதரரில்லை
ஏயகிளைஞர்களியாருமில்லை—நேயங்
கெழுமுபொருளில்லைக் கிருகமில்லையென்றே
ஒழிமினொழிமினுறக்கு,

என்றுப் பலமாக எச்சரிக்கை செய்துவிட்டு, மறுபடியும் கிழக்குவீதிக்கு வருகையில் தன்னை மறந்து ஆனந்தத் தாண்டவமாடிக்கொண்டு,

தந்தை சதாசிவனே தாயவன் வல்லமையே
அந்தமிலாச் சுற்ற மவனடியார்—சொந்த
இடமாகு மூவுலகு மென்று மகிழ்வுற்று
மடமாவதற்று நெஞ்சே வாழ்,

என்னுஞ் செய்யுளைப் பாடிக்கொண்டு தம்பம் போலச் சிறிதுநேரம் சலனமின்றி நின்றான். இவனுடைய வரவை எதிர்நோக்கிக்கொண்டு தயாராக இருந்த தூதன் அரசன் ஆக்ஞையைக் கூறி, அவனை அரண்மனை வாசலில் கொண்டுவந்து விட்டான். அரசன் மிகுந்த ஆனந்தத்தோடு ஓடிவந்து அவரைக் கண்டவுடன், ''பிரிந்தவர் கூடினால் பேசவேண்டுமோ'' என்று கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்பர் கூறியதுபோலத் தன்வசமழிந்து கண்ணீருடன் அவருடைய பாதாம்புயங்களில் அடியற்றமரம்போல அரசன் வீழ்ந்தான். அதன் பின்னர், இருவரும் ஏதோ பரிபாஷை பேசிக்கொண்டு, போன விடமின்னதென்று மற்றவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டார்கள். அவர்களிருவருக்கும் விட்ட குறை வந்து தொட்டுக்கொண்டமையால் அந்த ஜன்மத்திலேயே பரமுத்தியை அடைந்தார்களென்று நாம் சொல்லவும் வேண்டுமோ?—இந்துசாதனம்.

---

# WOMAN'S WORLD
# ஸ்த்ரீ பிரபஞ்சம்

## HOME NEWS.

### உள் நாட்டு வர்த்தமானம்.

**Indian War Loan.**

இந்திய யுத்தக்கடன்:—பம்பாயிலுள்ள ஸ்த்ரீகளின் யுத்தக்கடன் ஆபீஸில் 62 லட்சம் ரூபாய் சேர்ந்திருக்கிறது. பம்பாய் மாகாணத்து ஸ்த்ரீ புருஷர்கள் இந்திய யுத்தக்கடன் விஷயத்தில் ஊக்கம் குறையாமல் பாடுபட்டு வருகிறார்கள்.

**St Gabriel European Girl school.**

ஸெயின்ட் கேப்ரீல் ஐரோப்பிய பெண் பாடசாலை:—குன்னூரிலிருக்கும் ஸெயின்ட் கேப்ரீல் ஐரோப்பிய பெண்பாடசாலையை விசாலமாகக் கட்டுவதற்காக சென்னை கவர்ன்மெண்டார் 7000 ரூபாய் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

**Compulsory Education.**

கட்டாயக் கல்வி:—மைசூர் ஸமஸ்தானத்தில் கட்டாயக் கல்வி ஏற்பட்டு சில வருஷங்களாகின்றன. இம்மாதம் முதற்கொண்டு இன்னும் 170 இடங்களில் ஆரம்பக் கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டு வரவேண்டுமென்று மகாராஜா உத்தரவு செய்திருக்கிறாரென்பதைக்கேட்டுச் சந்தோஷப்படுகிறோம்.

**Mrs. Annie Besant and her two Associates Interned.**

மிஸஸ் அன்னிபெஸண்டும் அவருடைய ஸகாக்களில் இருவரும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டார்கள்:—இந்தியர்களுக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் ஸ்வய அரசாக்ஷி வேண்டுமென்று வரம்பு கடந்து பேசியும் எழுதியும் வருவதாக ராஜாங்கத்தார் அபிப்பிராயப்பட்டு அவரையும் அவருடன் சேர்ந்து உழைத்து வந்த மிஸ்டர் அருன்டேல், மிஸ்டர் வாடியா ஆகிய இருவர்களையும் உதக மண்டலத்திலுள்ள ஒரு வீட்டில் சென்றமாதம் 16ந்தேதி முதற்கொண்டு பந்தோபஸ்தில் வைத்திருக்கிறார்கள். இவர்கள் விஷயமாக ராஜாங்கத்தார் செய்தது பிசகு என்று நம் இந்தியாவில் பலவிடங்களில் கூட்டங்கூடி அந்த உத்தரவைக் கண்டனம் செய்து வருகிறார்கள். மேலும், தங்களுடைய தீர்மானத்தை இந்தியா மந்திரிக்கும் வைஸ்ராய் அவர்களுக்கும் தெரிவித்து வருகிறார்கள்.



Czar's Family—ருஷ்ய சக்கிரவர்த்தியின் குடும்பம்.
(யுத்தத்தில் ஜனங்களால் ராஜ்யத்தினின்று நீக்கப்பட்டு குடும்பத்தோடு பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.)



162408

**G. T. Women's determination.**

ஜார்ஜ்டவுன் ஸ்த்ரீகளின் தீர்மானம் :—செப்டம்பர் மாதம் 23-ந் தேதி சனிக்கிழமை, சென்னை ஜார்ஜ் டவுனில் அநேக இந்து ஸ்த்ரீகள் பலர் கூட்டங்கூடினார்கள். சுதேசிப் பொருள்களை ஆதரிப்பது பற்றி வங்காள ஸ்த்ரீகள் செய்திருக்கும் தீர்மானத்தை வாசித்து தாமும் அந்தத் தீர்மானத்தை மேற்கொண்டனர். சுதேசிப் பொருள்களை ஆதரவு செய்வது பற்றிய தீர்மானம் புகழக்கூடியது. ஆனால், எந்த இடத்தில் இந்த மீட்டிங்கூடினார்களென்றும் அந்த ஸ்த்ரீகள் யாவர்களென்றும் தினப்பத்திரிகைகளுக்கு எழுதின நிருபர் தெரிவிக்கவில்லை.

**The Besant Fund.**

பெஸண்டு சகாயநிதி:—ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மாளை பந்தோபஸ்தில் வைத்ததின் பொருட்டு அவருக்காக ஒரு சகாய நிதி ஏற்பட்டிருக்கிறது. அதற்கு பம்பாயிலுள்ள கௌரவ குடும்பத்து ஸ்த்ரீயாகிய மிஸ் ஹாமாபாய் என்பவர் ரூ. 5000 உதவியிருக்கிறார்.

## FOREIGN NEWS.

### வெளிநாட்டு வர்த்தமானம்.

**Women Workers**

ஸ்த்ரீகள் தொழிலாளிகள்:—புருஷர்களில் பலர் போர்முனைக்குப் போய்விடவே, கிரேட் பிரிட்டனிலுள்ள பற்பலவிதமான தொழில்களிலும் ஏராளமான ஸ்த்ரீகள் வேலைக்கு அமர்த்தப் படுகின்றனரென்பது நேயர்களுக்குத் தெரியும். இதுவரையில் ஆண்மக்கள் பார்த்து வந்த வேலைகளிலே 11-லட்சத்து 25-ஆயிரம் ஸ்த்ரீகள் அமர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. இன்னும் ஜாஸ்தியாகப் பல தொழில்களுக்கு ஸ்த்ரீகள் அமர்த்தப்படுவார்களென்றும் ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது.

**Innocent Women Shot.**

ஒன்றுமறியாத ஸ்த்ரீகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் :—ஆஸ்டிரியாவில் மொரேவியா யென்னும் ஒருமாகாண மிருக்கிறது. அங்கேயுள்ள ஸ்த்ரீகள் கூட்டம் கூடி சாப்பாட்டுக்கு ரொட்டியில்லையென்று அதிகாரிகளிடம் கூக்குரலிட்டு அழுதனர். அப்பொழுது அவர்கள் மீது குருப்புகள் இரக்கமின்றி சுட்டதனால் பலர் இறந்தும், பலர் காயங்களுமடைந்தனர்.

TSS m211/N11

**Belgian Royal Children.**

பெல்ஜிய ராஜ குழந்தைகள் :—மனிதர்களது வாழ்க்கையில் அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டம் என்பது தொடர்ந்து வருகிறது. உதாரணமாக, தற்காலம் நடக்கும் மஹா யுத்தத்தினால் பெல்ஜிய அரசர் தம் குடும்ப ஸகிதமாக நாட்டை விட்டு அநியாயமாக ஜெர்மனியர்களால் துரத்தப்பட்டாரென்பது நமது சகோதரிகளுக்கு ஞாபகமிருக்கலாம். இப்போது பெல்ஜிய ராணியாரும் அவரது குழந்தைகளும் இங்கிலாந்தில் வசித்து வருகிறார்கள். பெல்ஜிய ராஜ குழந்தைகளின் மூவர் படத்தை நாம் அடுத்த பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அதைப் பார்க்கவும்.

**The Czar's Royal Family.**

ருஷ்யச் சக்கிரவர்த்தியின் ராஜகுடும்பம் :—இவரின் குடும்ப ஸகிதமான ஒரு படத்தை நாம் வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அதைக் கவனிக்கவும். தான் என்கிற கர்வமே ஒருவனுக்குப் பெரிய சத்துரு. மற்றச் சத்துருக்களைவிட இதுவே கொடிய நித்திய சத்துருவாகும். பல நூற்றாண்டுகளாக ருஷ்யாவை ஆண்டு வந்த வம்சத்தில் இந்தச் சக்கிர வர்த்தி உதித்தார். இவரும் சில வருஷங்கள் ராஜ்யபாரம் செய்தார். ஆனால், தான் என்கிற கர்வமும், அதர்மங்களும் ராஜ்யத்தில் மேலிட்டு வந்தன. இவைகளால் ஜனங்கள் ஸகிக்க முடியாமல் பலவித கஷ்டங்களுக்குள்ளாகி அனுபவித்தார்கள்; எதற்கும் ஒரு வரம்பு இருக்கிறதல்லவா? காலம் திடீரென்று மாறினது. ஜனங்கள் ஒன்று சேர்ந்து ருஷ்யச் சக்கிரவர்த்தியை ராஜ்யத்தினின்று நீக்கிவிட்டார்கள், மேலும், அவரையும் அவரது குடும்பத்தையும் சிறையில் வைத்திருக்கிறார்கள். மனிதனுக்கு அடுத்த நிமிஷம் என்ன வருமோ வென்று சொல்வதற்கு இடமில்லாமலிருக்கிறது. எல்லாம் ஈசன் செயல்.

**A Heroic woman.**

ஒரு வீர ஸ்த்ரீ :—இப்போது நடக்கும் பலமான சண்டையினால் ஸ்த்ரீகள் தங்களுடைய தைரியத்தையும் மனோதிடத்தையும் பகிரங்கமாகக் காண்பித்துவருகிறார்கள். சென்ற வருஷம் வெர்டுன் என்ற இடத்தில் பிரஞ்சு வீரர்களுக்கும் ஜெர்மனியர்களுக்கும் பலமான சண்டை நடந்தது. அப்போது ஒரு பிரஞ்சு ஸ்த்ரீ, புருஷ வேஷம் பூண்டு ஐந்து ஜெர்மன் வீரர்களை தனது கத்தியால் குத்திக் கொன்றனள். அவள் அவர்களை குத்திவிட்டுத் திரும்பும் போது வேறொரு ஜெர்மன் அவள் காலில் சுட்டான். அது அதிகமாகக் காயம்படவில்லை. இருந்தாலும், வைத்திய அதிகாரிகள் அவளைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்க்கும்போது அவள் ஒரு பால்ய ஸ்த்ரீயென்று தெரியவந்தது. இது என்ன ஆச்சர்யம்! அவளுடைய படத்தையும் அடுத்த பக்கத்தில் காணலாம்.





பெல்ஜிய ராஜ குழந்தைகள்.



ஐந்து ஜெர்மன் வீரர்களைச் சுட்டுக்கொன்ற ஒரு ப்ரெஞ்சு தேச வீரஸ்த்ரீ.

# INSTRUCTIVE HINTS
# விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN
## குழந்தைகள் விஷயம்

**A fund for destitute Children.**

**அநாதைக் குழந்தைகளுக்கு ஒரு நிதி :—** அநாதையான குழந்தைகளைக் காப்பாற்றும் பொருட்டு புதுச்சேரியில் ஒரு நிதி சேகரிக்கப் பட்டு வருகிறது. அங்குள்ள காலேஜ் அதிகாரிகளும் உபாத்தியாயர்களும் இது விஷயமாக முயற்சி எடுத்து வருகிறார்கள். புதுச்சேரி ராஜாங்கத்தாரும் இந்த நிதியை ஆதரித்து வருகிறார்களென்று தெரிகிறது.

**About children.**

**குழந்தைகளைப் பற்றி :—** தாய்மார்கள் எவ்வளவுக் கெவ்வளவு தங்களுடைய குழந்தைகளை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வளர்த்து வருகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு குழந்தைகள் நோயில்லாமல் இருக்கும். ஆகவே சரீர புஷ்டியும் புத்தி அபிவிருத்தியும் உண்டாகும். இதனால் தாய்மார்களுக்கும் ஆனந்த முண்டாகும். தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகள் விஷயத்தில் கவனிக்க வேண்டியவைகளாவன, குழந்தைகளின் வளர்ச்சி, குழந்தைகளின் ஆசாரம், உடை, தேக அப்பியாஸங்கள் அவைகளுக்கு ஏற்படக் கூடிய வியாதிகள், அவ்வியாதிகளைத் தடுக்கவேண்டிய வழிகள் ஆகிய இவைகளாகும்.

குழந்தைகள் பிறந்ததும் சுமார் 10 நிமிஷத்திற்குப்பிறகு அதன் தொப்புள் கொடியை அறுக்கவேண்டும். அறுக்கு முன் இக்கொடியில் இரண்டு மூன்று முடிச்சுகள் பலமான பட்டுநூலினால் போட்டுக்கொள்ளவேண்டும். முதல் முடிச்சு தொப்புளிலிருந்து 4 அங்குலம் தள்ளிருக்கவேண்டும், இரண்டாவது முடிச்சு முதல் முடிச்சுலிருந்து இரண்டு அங்குலம் தள்ளிப்போட்டுக்கொண்டு இவ்விரண்டு முடிச்சுக் குமத்தியில் அறுக்க வேண்டும். அறுத்தவுடன் கொடியை மடித்துவயிற்றில் வைத்து ஒருதுணியினால் வயிற்றைச் சுற்றிக் கட்டவேண்டும். குழந்தையின் முகத்தையும் கண் காதுகளையும் நன்றாய்த் துடைக்க வேண்டும். மேலும் வாயிலிருக்கும் கோழையை மெதுவாய் எடுக்க வேண்டும். அப்படிச்சரியாய் எடுக்காததனால் சில குழந்தைகள் அழமுடியாமலிருந்துவிடுகின்றன. தொப்புள்கொடியை அறுக்கும்போது சில தாய்மார்கள் அதை அநாவசியமாய் இழுத்துவிடுகிறார்கள். இது சுத்தப்பிசகு. ஸாதாரணமாகத் தொப்புள் கொடியானது 4 அல்லது 5வது தினத்தில் விழுந்துவிடும். அறியாத தாய்மார்கள் பிறந்த குழந்தைகளுக்கு தினஸரி இரண்டுவேளையும் ஆமணக்கெண்ணை கொடுக்கிறார்கள். குழந்தைக்கு மலப்பிரவிருத்தி ஸரியாய்ப் போகாமலிருந்தால் மட்டும் கொடுக்க வேண்டும். விளக்கெண்ணையை தினம் கொடுத்து பழக்கம் செய்யக்கூடாது. சிறு குழந்தைகளின் குடல் இலேசானது. 8, 9 வயதுவரையிலும் பேதிக்கு விளக்கெண்ணையைத் தவிர வேறு ஒன்றும் கொடுக்கக் கூடாது. பேதி மருந்துகள் கொடுத்தால் அது வயிற்றில் போய் வலியைக் கிளப்பி விடும். ஆகவே, மேற் கண்டவைகளைத் தாய்மார்கள் ஞாபகத்தில் வைப்பது அவசியம்.



II

# DOMESTIC HINTS AND SUGGESTIONS
# கிருஹத்தியக் குறிப்புகள்

**Alum.**

**படிக்காரம் :—** இது சீனாகற்கண்டு போன்ற ஒருவிதப்பொருள். இந்தியாவில் இது அபரிமிதமாய்க் கிடைக்கிறது. இது ஜலத்தில் எளிதில் கரையும். இது புளிப்பான உருசியுள்ளது. தேகத்தில் சிறு காயங்களில் இரத்தம் கசியும்போது இதைப் பொடி செய்து போட்டால் இரத்தக் குழாய்களை யடைத்து இரத்தக் கசிவை நிறுத்திவிடும். இக்குணத்தை உடைத்தாயிருப்பதால் இதை கண்வலி, பல்வலி, முதலியவைகளுக்கு உபயோகிக்கிறார்கள். பற்பொடியுடன் இதைப் பொடி செய்து கலப்பதும் இக்குணத்தைக்கொண்டே என்றறியவும். காடி, சாராயம், இவற்றில் படிக்காரத்தைக்கரைத்து அதில் துணியை நனைத்து சுளுக்குக்கும் வீக்கங்களுக்கும் உபயோகிப்பதுண்டு. துணிகளில் சாயம் நன்றாய்ப் பிடிக்கும் பொருட்டும் இதைச் சாயத்துடன் கலக்கிறார்கள்.

**Mixed Metals.**

**கலப்பு உலோகங்கள் :—** தாமிரமும் துத்தநாகமும் சேர்ந்தது பித்தளை. தாமிரமும் தகரமும் சேர்ந்தது வெண்கலம். ஈயமும் தகரமும் சேர்ந்தது ஈயப் பொடி. ஈயத்தையும் நிமிளை (Antimony) யையும் சேர்த்து அச்சு அடிப்பதற்கு வேண்டிய எழுத்துக்களைச் செய்கிறார்கள். ஸவரினில் 11 பங்கு தங்கமும், ஒரு பங்கு தாமிரமும் சேர்ந்திருக்கின்றன. ஷில்லிங்கிலும் இந்திய வெள்ளி நாணயங்களிலும் வெள்ளியுடன் கொஞ்சம் தாமிரம் கலந்திருக்கின்றது. ஜெர்மன் ஸில்வர் என்பது தாமிரம், துத்தநாகம், ஈயம், நிக்கல் என்பவற்றால் ஆனது. தாமிர நாணயங்களில் தாமிரத்துடன் துத்தநாகத்தைச் சேர்த்திருக்கிறார்கள். இக்கலப்பால் தான் இவை உறுதியாகவிருக்கின்றன. ஈயப் பொடி என்பது ஈயமும் தகரமும் சேர்ந்தது. வெள்ளிப் பொடி என்பது இரண்டு பங்கு வெள்ளியும் ஒரு பங்கு பித்தளையும் கலந்தது. தங்கப்பொடி என்பது தாமிரம் வெள்ளி இவற்றை ஸம அளவில் எடுத்துக்கொண்டு தங்கத்துடன் கலப்பது. பித்தளைப் பொடி என்பது பித்தளையும் வெண்கலமும் கலந்தது.

**A word to old mothers.**

**தாய்மார்களுக்குப் புத்திமதி :—** உங்கள் பெண்கள் உங்களைப் போலிருக்கிறார்களா ? இல்லையே ? உங்கள் காலத்தில் நீங்கள் எவ்விதம் நடந்தீர்களோ அவ்விதம் உங்கள் பெண்கள் தற்காலம் நடக்கிறார்களா ? நீங்களெல்லாம் பிரசவமாகும் வரை வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு வந்தீர்களே ? இப்போது உங்கள் பெண்களால் வேலை செய்ய முடிகிறதா ? நீங்களும் உங்கள் பெரியோர்களும் பிரசவிக்கப் போகிறோம் என்பது கூடத் தெரியாமல் இடுப்புவலி ஆரம்பித்து இரண்டு மூன்று வலிகளில் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் பிரசவித்தீர்களே. உங்கள் பெண்கள் ஸுகப் பிரஸவத்துக்குக் கூட ஒருவாரம் அவஸ்தைப் படுகிறவைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் தற்கால மேனாட்டு நாகரீகத் தன்மைகளும் ஸ்திரீகளின் சரீரவலிக்குறைவும் தானென்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

# III

# VIEWS AND REVIEWS

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்

**The Light of Wisdom.**

**ஞானதீபிகை** :—இது குன்னூர் ஆனந்தாசிரமம் ஸ்ரீ சிவஸுப்ரமணிய அய்யரால் எழுதப்பட்டு 'பெண் கல்வி'ப் பத்திரிகை ஆபீஸிலிருந்து வெளியாக்கப்பட்டது. இதன் விலை ரூ. 1 ஆனால், 'பெண் கல்வி' சந்தாதாரர்களுக்கு மட்டும் அணா 12க்குக் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சுமார் இருநூறு வருஷங்களுக்குமுன் இப்புஸ்தகம் முதன் முதலில் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து சீனபாஷையில் ஒரு சீன பாஷைப் பண்டிதரால் மொழிபெயர்க்கப்பட்டது. பிறகு, ஒரு கிறிஸ்தவப்பாதிரியால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் பிரதம ஆசிரியர் ஒரு பிராமண சிரேஷ்டராகும். இப்புஸ்தகத்தில் எந்த ஜாதியாயிருந்தாலும் அல்லது எந்த வகுப்பினராயிருந்தாலும் ஸ்த்ரீ புருஷர்கள் தங்கள் வாழ்க்கையில் அனுஷ்டிக்கவேண்டிய ஸகல கடமைகளையும் விரிவாக எடுத்து எழுதியிருக்கிறார். இதில் ஒரு விசேஷமிருக்கிறது. படிக்கிறவர்கள் இது ஹிந்து மதப்புஸ்தகமென்றும் கிறிஸ்தவ மதப்புஸ்தகமென்றும் சொல்ல முடியாது. இவ்வருமையான புஸ்தகம் சீன பாஷையிலும், ஜப்பான் பாஷையிலும் இங்கிலீஷ் பாஷையிலும் மற்ற பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு அந்தந்த தேசங்களிலுள்ள பாடசாலைகளில் ஸன்மார்க்கப் புஸ்தகமாக ஏற்படுத்தப் பட்டிருந்ததென்று தெரியவருகிறது. இதன் ஆதி சரித்திரத்தை விஸ்தாரமாகப் புஸ்தகத்தில்காணலாம். இது ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஸ்த்ரீ புருஷர்கள் இதை வாங்கி வாசிக்கவேண்டியது அவசியமாகும். நம் பாடசாலைகளில் மாணவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டு ஸன்மார்க்கபுஸ்தகமாக ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டுவருகிறது. வேண்டுவோர்கள் சென்னை 'பெண் கல்வி' ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Ratna Prakash.**

**ரத்தினப் பிரகாசம்** :—இதை நம் பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். இதன் ஆசிரியர் ஸ்ரீமான் டி. பி. ஜயசங்கர் தவேயாகும். இது ஒரு அருமையான நூதன புஸ்தகம். நம் ஸ்த்ரீ புருஷர்கள் நவரத்தினங்களாலாகிய ஆபரணங்களை வெகுகாலம் தொட்டு அணிந்து வருவது வழக்கமாயிருந்து வருகிறது. நம்மவர்களில் அனேகர் நவரத்தினங்களுடைய குணங்களைத் தெரியாமலே நகைகளை அணிந்து வருகிறார்கள். வைரம், மரகதம், மாணிக்கம், புஷ்பராகம், வைடூர்யம், கோமேதகம், இந்திர நீலம், முத்து, பவழம் ஸ்படிகம் முதலானவைகளுடைய குணங்களையும் அவைகளை அணிந்து கொள்வதனாலுண்டாகும் பலாபலன்களையும் விளக்கமாக ஆதாரங்களுடன் இதில் எடுத்துக் காட்டியிருக்கிறார். வைர நகைகள் அணிந்து கொள்ளும் ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கும் அவசியமான ஒரு கைப்புஸ்தகமாகும். இதன் விலை அணா 8. தபால் கூலி வேறு. வேண்டுவோர்கள் தஞ்சாவூர், ஜே. தவே அண்டு கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 18 SEP 1917 MADRAS.


# THE FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்திர ஸஹிதமான ஒரு தமிழ் மாதப் பத்திரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| Vol. 6. | August, September 1917. | No. 11, 12. |
| தொகுதி 6. | ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாஸம். | பகுதி. 11,12. |


ஓம்.

தேவ தேவன் மெய்ச் சேவகன் றென் பெருந்துறை நாயகன்
மூவராலு மறியொணா முதலாய வானந்த மூர்த்தியான்
யாவராயினு மன்பரன்றி யறியொணா மலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கணம் சென்னி மன்னிச் சுடருமே."

(திருவாசகம்)

கல்லால விருக்ஷத்தில் ஸ்ரீ குரு முகூர்த்தமாய்ச் சின் முத்திரையுடன் சனக, சநந்தன சனத் குமார சனத் சுஜாதியர் என்ற நால்வருக்கும் உபதேசித்துக்கொண்டு வீற்றிருக்கும் தேவர்களுக்கெல்லாம் ஆதிதேவனாகிய ஸ்ரீ பரமேசுவரன், பிரம்மா விஷ்ணு ருத்ராதிகளால் அறிய முடியாத பரம்பொருளானவர். அப்பரப் பிரம ஸ்வரூபமாகிய பரம்பொருளை அன்பினாலன்றி மற்ற எவற்றாலும் அறியமுடியாது. கர்ம மார்க்கங்களை வழுவாமல் செய்பவர்கள், மகா தபஸ்விகள் விசேஷமாய்ச் சிறப்பித்துச் சொல்லும்படியான ஸமாதி யோகம், ஞானயோகம் முதலிய யோகம் புரிபவர் முதலியவர்கள் வசமாகி நாம் பொருந்த மாட்டோம். குற்றமில்லாத அன்பைச் செலுத்தி எம் வசப்பட்டவரோடேயே பொருந்தி நிற்போம். அவரிடத்திலேயே நாமும் சம்பாஷணை செய்வோம். அவர் முன்னால் சேர்ந்து அவர் உள்ளத்திலேயே உறைவோம் என்று ஈசுவரன் கூறுகிறார். அப்படிப்பட்ட ஈசுவரனின் பாதாரவிந்தங்களை நாம் நம் ஹிருதய கமலத்தில் வைத்துத் தியானிப்போமாக.

# PROGRESS OF THE WORLD

# பிரபஞ்சப் போக்கு

**Ourselves.**

நமது பத்திரிகை:—பத்திரிகைக்குத் தேவையான பேப்பரின் அதிகவிலை யேற்றத்தாலும் இன்னும் எதிர்பாராத காரணங்களாலும் ஆகஸ்டு மாதப் பத்திரிகையை செப்டம்பர் மாதத்தோடு சேர்த்து வெளியிடும்படி நேரிட்டதற்கு நாம் விசனிக்கிறோம்.

**A Woman Editor in U. P.**

ஐக்கிய மாகாணத்தில் ஒரு ஸ்த்ரீ பத்திராதிபர்:—மசமதஸ் அசஸ் பீகம் என்னும் ஒரு மகம்மதிய ஸ்த்ரீ கடந்த இரண்டு வருஷங்களாக ஐக்கியமாகாணத்திலுள்ள லக்னோ பட்டணத்தில் ஒரு மாதப் பத்திரிகையை ஆரம்பித்து மிகத் திறமையாக நடத்திவருகிறாரென்று கேட்டு மிகவும் ஸந்தோஷ மடைகிறோம். வங்காள மாகாணத்தில் மூன்று ஸ்த்ரீ பத்திராதிபர்கள் வெவ்வேறான மாதப் பத்திரிகையை நடத்தி வருகிறார்களென்பது நமக்கு முன்னமே தெரிந்த விஷயம். பம்பாயிலும், பஞ்சாபிலும் ஸ்த்ரீ பத்திராதிபர்கள் இருக்கிறார்களென்பது கேள்வி. நம் சென்னையில் கடந்த ஆறு வருஷங்களாகப் "பெண் கல்வி"ப்பத்திரிகை ஸகோதரி தாயாரம்மா அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. தெலுங்கு தேசத்தில் நமக்குத் தெரிந்து இருவர் "ஸாவித்திரி" "ஹிந்து சுந்தரி" என்னும் மாதப் பத்திரிகைகளை திவ்யமாக நடத்தி வருகிறார்கள். மலையாளம், கன்னடம் முதலிய நாடுகளிலும் ஸ்த்ரீ பத்திராதிபர்கள் தனியாகப் பத்திரிகைகளை நடத்தி வருகிறார்கள். நம் இந்தியாவில் பல ஸ்த்ரீ பத்திராதிபர்கள் இருந்தும் இல்லாததுபோல் இருப்பதற்குக் காரணம் அவரவர்கள் நடத்தும் பத்திரிகைகளுக்குத் தகுதியானபடி ஆதரவு கிடைக்காமையென்பதே முக்கியமானதாகும். இன்னும் எவ்வளவோ கற்றுத்தேர்ந்த பெண் மணிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சௌகர்யங்கள் இல்லாததனாலேயே அவர்கள் முன்வர முடியாமலிருப்பதை சகோதரிகள் அறியவேண்டும்.

**Compulsory Education.**

கட்டாயக் கல்வி:—பிங்கள வருஷத்தை இந்தியர்கள் பலவிதத்திலும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், இவ்



வருஷத்தில் இதுவரையில் எதிர்பாராத ஸம்பவங்கள் நம் தேசத்தில் நேர்ந்திருக்கின்றன. இனியும் நேர்ந்து வருமென்பது நிச்சயம். பிரிட்டிஷார் நம் இந்தியாவை ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாகவே ஆண்டு வருகிறார்கள். இவ்வளவு வருஷகால ஆட்சியில் இந்தியர்களின் படிப்பு அபிவிருத்தி மிகவும் குறைவு. இதையறிந்து பல மேதாவிகள் இந்திய ஸ்த்ரீ புருஷர்களுக்குக் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் செய்யவேண்டுமென்று பல தடவைகளில் கவர்ன்மெண்டாரை மன்றாடிக் கேட்டு வந்தார்கள். இந்திய ஸ்த்ரீ புருஷர்கள் அதிருஷ்ட ஹீனர்களாயிருந்ததால் கவர்ன்மெண்டார் இது விஷயமாய்த் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. கடைசியாக, சென்ற மாதம் பம்பாய் சட்ட சபையில் இது விஷயமாக ஒரு மெம்பர் ஒரு மசோதா கொண்டுவந்தார். அதிருஷ்டவசமாக அம்மசோதாவை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு தங்கள் கீழிருக்கிற ஜில்லா முனிஸிபாலிடிகளில் கட்டாய இலவச ஆரம்பப் படிப்பை ஏற்படுத்த அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். இனி, சீக்கிரத்திலேயே கட்டாய இலவசப் பிரைமெரிப் படிப்பு பம்பாய் மாகாணத்திலுள்ள ஜில்லா முனிஸிபாலிடிகளில் ஏற்படுத்தப்படுமென்று நம்பலாம். பம்பாய்க் கவர்ன்மெண்டாரின் செய்கை நல்ல காலத்திற்கு ஒரு அடையாளமாகும். இனி, மற்ற மாகாண கவர்ன்மெண்டார்களும் இவ்விஷயத்தில் அக்கரை செலுத்துவார்களென்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

# SPECIAL ARTICLES

# விசேஷ வியாஸங்கள்

## GREAT WOMEN OF PAST
BY
Mr. Sivadyanandan.

## புராதன ஸ்த்ரீ மணிகள்.

காலஞ்சென்ற மைசூர் நவீன கதாப்பிரவீணரான ஸ்ரீமான் பி. வெங்கடாசாரென்பவர் கன்னட பாஷையில் எழுதினதை யாதாரமாகக் கொண்டு மிஸ்டர் ஜி. ஆர். ஜோஸியரென்பவர் "இந்தியன் லேடீஸ் மகஸைனில்" பின்வருமாறு எழுதுகிறார்:—

தற்காலம் ஒரு ஜாதி நாகரீகத்தை யடைவதற்கு வேண்டியவை யென்று தற்காலத்தார் எண்ணுவதை யெல்லாம் நம் புராதனர்கள் எண்ணவில்லை என்று நாம் சொல்ல முடியாது. நம் புராதன ஆரியர்கள் ஆண்பிள்ளைகளுக்கு மாத்திரம் கல்வி கற்பித்தல் போதாதென்பதை நன்கறிந்திருந்தார்கள். அதனால், அவர்களும் தங்களது மாதர்களை அந்தகாரத்தில் மூழ்கவிட்டு தாங்கள் மாத்திரம் படிப்பில் முன்னேறினவர்களல்லர். பண்டைக் காலத்து ஆரியர்களின் சரித்திரத்தை எவ்வளவு காலம் கழித்து ஆராய்ந்து பார்த்தாலும் அப்பொழுதும் அதனுள் வித்வாம்சனிகளிருந்ததாகவே தெரிகிறது.

வேதகாலத்துக்கு முன்னிருந்த ஆரியர்களைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. வேதகாலத்தைப் பார்த்தாலும் ஆரியர் அக்காலத்துக்குத் தக்கவாறு நாகரீக மடைந்திருந்தார்களென்றே சொல்ல வேண்டி யிருக்கிறது. பஞ்ச நதிக்கரையில் தோன்றிய வேதப் பண்கள் இந்தியா முழுதும் பரவத் தொடங்கியது. காலை, மாலை, நடுப்பகல்களிற் செய்யும் ஜபங்கள் பூமி, அப்பு, வானம் மூன்றையும் நடுங்கச் செய்து கொண்டிருந்தன. இந்தக் கீர்த்தனங்களைச் செய்வதற்கு அநேக மாதரும் உதவி புரிந்திருந்தனர். நாம் இப்பொழுதெப்படி வேதங்களைக் கம்பீரத்துடன் ஓதி ‘நாங்கள் ஆரிய புத்திரர்கள்’ என்று சொல்லிக் கொள்ளுகிறோமோ அதுபோலவே, அம்மாதரும் ஓதித் தங்களை “ஆர்ய புத்திரிகள்” என்று பெருமை பாராட்டிக் கொண்டிருந்தனர். அநேக ஸ்த்ரீகள் வெகு திறமையோடும் வேதரிக்குகளைப் பாடினர். ரிக்வேதத்திலும் ஒருவர் இருவரைக் காணலாம்.

ரிக்வேதம் 5-வது அத்யாயம் 28 ஸூக்தம் ஒரு மாது பாடியது. அவரது பெயர் விச்வவரை. அவர் அத்ரி குமாரத்தி. அந்த ஸூக்த தேவதை அக்நியாம். அகஸ்தியர் மனைவி லோபா முத்ரை ரிக்வேதத்தில் 179-வது ஸூக்தத்தைப் பாடினவர். அதன் தேவதை ரதியாம். லோபா முத்ரையின் கதை காசிகாண்டத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. நைமிச வனத்தில் ஒரு ஸமயம் ரிஷிகளெல்லாரும் கூடியிருந்தார்கள். அந்த அகஸ்தியர் தம்பத்தினியோடு வந்தபோது லோபாமுத்ரையை எல்லாரும் புகழ்ந்தார்கள். மேலும், அருந்ததி, சாவித்திரி, அநசூயை, சாண்டில்யை, ரதி, லட்சுமி, ஸூநீதி, ஸ்வாஹா முதலியவர்கள் லோபாமுத்திரைக்குச் சமானமாகார்கள் என்று துதித்தார்கள். ராமாயணத்தில் கற்புடைய மனைவிகளுக்கு லோபாமுத்திரையை சான்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் மகாபண்டிதை. என்றாலும், தம் புருஷனிடத்து அதிகம் பிரீதியும் சக்தியும் உடையவர்.



ரிக் வேதம் 10-வது அத்தியாயம் 125-ம் ஸூக்தம் அம்பிரியின் புத்ரி வாக் கென்பவர் பாடினது. அது மிகச் சிறந்தது. பிற்காலத்து வேதாந்த தத்துவங்களுக்கு அதுவே மூலமாக எண்ணப்படுகிறது. காலமாக ஆக இந்து நாகரீகம் சிறந்தோங்கிற்று. அதனோடு இந்து ஸ்த்ரீகளின் கீர்த்தியும் ஓங்கிற்று. இந்து புருஷர்கள் வேதாந்த விசாரத்தில் சிறந்து விளங்கினபோது இந்து மாதர்களும் அவர்களுக்குப் பின் தங்கவில்லை. அவர்களும் அந்நெறியில் உழைத்து ஈடு கொடுத்து ஸமானமாக வந்தார்கள்.

மைத்ரேயியை முதலில் கவனிப்போம். அவர் ஒரு பேர் போன வித்வாம்ஸனி. பிரஹதாரண்யக உபநிஷத்தில் அவரது கதை சொல்லப்பட்டிருக்கிறது. அவர் மித்ரரது புத்ரி. மித்ரரம் பெரிய பண்டிதர். சிறு குழந்தையிலிருந்தே அவருக்குக் கல்வி கற்பித்து வந்தார். பிரஹதாரண்யக உபநிஷத்தின் ஒரு பாகம் அவரது நுண்ணிய புத்தியை விஸ்தரிப்பதற்காகவே அமைந்திருக்கிறது. தம் கணவரோடு ஆத்ம விசார சம்பந்தமாக அவர் செய்த தர்க்கத்தைப் படிக்கும் போது எவருக்கும் ஆச்சரிய மதிகரிக்கும். யாக்ஞவல்கியர் வானப் பிரஸ்தாச்ரமத்துக்குப் போகும்போது அவருக்கு இரண்டு மனைவிகளிருந்தனர். தமது ஆஸ்தியை இருவருக்கும் பங்கிட ஒருவர் தம் பாகத்தை யெடுத்துக் கொள்கிறார். ஆனால் மைத்ரேயியோ, அச்சமயம் அழியக்கூடிய செல்வம், உலகவஸ்துக்கள் இவற்றைப்பற்றித் தம் புருஷரோடு வாதாடுகிறார். அதைப் படிக்கும் நவீன ஞானிகள் அவரது அற்புத ஞானத்தை வியந்து பேசுவார்கள். அக்காலத்தில் மித்ரர் ஒரு வேத பாடசாலை யேற்படுத்தியிருந்தார். அதில் மைத்ரேயி ஒரு உபாத்தியாயினி. தம் கல்வியைப் பிறருக்குப் போதிப்பதிலேயே அவருக்குப் பிரியமதிகம்

அக்காலத்து மைத்ரேயியைக் காட்டிலும் பேர் போனவர் கார்க்கி. இவர் மைத்ரேயின் அத்தை. யாக்ஞவல்கியர் அவருக்குத் தான் தலை குனிந்தது. ஜநக மகாராஜாவுக்கு ஏதாவது சந்தேகம் நேர்ந்தால் வித்வான்களை யழைத்துச் சபை கூட்டி அவர்கள் மத்தியில் தம் சந்தேகங்களைக் கேட்பது வழக்கம். அவர் ஒரு ஸமயம் யாகம் பண்ணினார். ‘யாகமுடிவில் 1000 பசுக்களைக் கொண்டுவந்து அவற்றின்

கொம்புகளில் தலைக்குப் பத்துப்பவுன் வீதம் கட்டி அப்பொழுதங்கு வந்திருந்த வித்வத் கூட்டத்தை நோக்கி உங்களிற் சிறந்த தத்வ விவேகி இவற்றைக் கொண்டுபோகலாம்.' என்றார். ஒருவரும் கொண்டுபோகத் துணியவில்லை. அப்பொழுது யாக்ஞவல்கியர் அவற்றை ஓட்டிக்கொண்டு போக வாரம்பித்தார். எல்லாருக்கும் அவரிடத்துப் பெருமதிப்புண்டு. ஆகையால், ஒருவரும் அவரைத் தடுக்கவில்லை. ஆனால், அங்கு மூலையிலிருந்த கார்க்கி அவரைத்தடுத்து 'நீர்தாம் சிறந்த தத்துவ விவேகியா?' என்றார். அவர் ஆமென; அவரோடு மேற் கோள்களோடு வாதாடி அவரை வாதில் வென்றார்.

மற்றொரு பண்டிதை தேவாஹூதியாம். அவருடைய தந்தை ஒரு மனுவாம். இவர் சிறுமியா யிருக்கும்போதே அவருக்குப்படிப்பில் கண்ணும் கருத்துமுண்டு. அவர் ஒரு ஏழைச் சந்நியாசியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு அரண்மனையைத் துறந்து அடவிக்கு வந்து அவரோடு வசித்தாள். அவள் புருஷன் பெயர் கர்த்தமன். தம் மனைவியாகிய தேவாஹூதிக்கு வேண்டியவளவு கல்வி பயிற்றினார். மன ஓர்மையோடு அவற்றையெல்லாம் கற்று, சிரவண மனன நிதித்யாஸங்களினால் பற்பல அற்புத தத்துவங்களையும் புருஷனுக்கு எடுத்துக் காட்டினார். அவரது புத்திரரே கபிலர். தேவாஹூதியில்லையானால் கபிலருக்கு ஸாங்க்ய யோகம் எழுத முடிந்திராது.

புத்த மதம் பரவத் தொடங்கின பிறகு பெண்கல்வி விருத்தியாயிற்று. அநேக வித்வாம்ஸனிகள் தலை கிளம்பினார்கள். அசோகனது சகோதரி சங்கமித்தை இலங்கையைத் தன்நிலையான வாசஸ்தானமாகக்கொண்டு அங்கேயுள்ள மாதர்களை பண்டிதைகளாக்கி அவர்களைக்கொண்டு புத்தமதத்தைப் பரவச் செய்தார்.

சங்கரர் மீண்டும் இந்துமத ஸ்தாபனஞ் செய்தபோது அவருக்குத் துணைநின்றதும் ஒரு ஸ்த்ரீயே. மண்டனமிசிரரும் சங்கரரும் வாதஞ் செய்தபோது மத்யஸ்தமாக விருந்தது மண்டனரது மனைவி பாரதியாகும். அவர் இருவர் நியாயங்களையும் சரிவரக் கேட்டுச் சிந்தித்துத் தம் புருஷன் தோல்வியை யெடுத்துக் காட்டினார். அவரும் புருஷனும் சங்கரருக்குச் சீடர்களானார்கள். பாரதி என்றால் சரஸ்வதி என்றர்த்தம். அவர் சாரதாவின் அம்சமாகும். அவரது பெயராலேயே சிருங்ககிரியிலுள்ள சாரதாபீடம் விளங்குகிறது.

இம்மாதிரி ஸ்த்ரீ ரத்நங்களின் பெயர்களையும் அவர்களின் சரிதங்களையும் பழைய நூல்களில் பரக்கக் காணலாம்.

சிவத்தியாநாநந்தன்.

# SRI KRISHNA JAYANTHI

BY

Sri S. Rangammal.

## ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி.

பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே.—பகவத்கீதை.

கிருஷ்ணாஷ்டமி யென்பது நம் ஆரியாவர்த்தமெங்கும் ஒரு பெரும் பண்டிகையாகக் கொண்டாடப்படும் மத சம்பந்தமான பண்டிகைகளுள் முதன்மையானதாகும். இதற்கு ஜன்மாஷ்டமி அல்லது கோகுலாஷ்டமி என்று பெயர். இது பிரசித்திபெற்ற பகவத்கீதையை அர்ச்சுனன் வாயிலாக உலகினுக்கு உபதேசித்தருளிய உத்தமாவதாரமான ஸ்ரீ கிருஷ்ண பகவான் பிறந்த நாளாகும். இவரது ஜனன விசேஷமானது வடமொழிக் கிரந்தங்களில் விஸ்தாரமாய் வர்ணித் துரைக்கப்பட்டிருக்கின்றது. அதனை இங்கு சுருக்கி யெழுதுவது உசிதமென்று கண்டோம்.

### கம்ஸன்.

துவாபர யுகாந்தத்தில் கம்ஸன் என்னும் கொடுங்கோலரசன் வட இந்தியாவில் ராஜ்ய பாரம் புரிந்துவந்தான். அவன் செய்யாத அக்கிரமங்கள் இல்லை. அவனிடத்திராத துர்க்குணங்கள் வேறெங்குமிரா. அவனால் உபத்திரவம் வரவர அதிகரித்து மிகவுங் கடுமையாயிற்று. அந்த இமிசையை ஜனங்கள் சகிக்க முடியாதவராயினர். நமது திரிமூர்த்திகளிலொருவரான சிவனார் தமது பக்தர் கேட்டவரங்களை அவரது குணாகுணங்களைக் கவனியாது அளிப்பது வழக்கமன்றோ? அவர் கம்ஸனுக்கொரு வரங்கொடுத்திருந்தார். அதாவது அவனை யாவராலும் வெல்ல முடியாத பராக்கிரமத்தை அவனுக்கு அனுக்கிரகித்திருந்தார். ஆனால், அவனது சகோதரியான தேவகியின் கர்ப்பத்தில் உதிக்கும் எட்டாவது பிள்ளையின் கையால் அவனுக்கு மரணம் சம்பவிக்குமெனச்சொல்லியிருந்தார். தனது மருமகனது கையாலிறவாதிருக்கக் கருதி கம்ஸன் தன் சகோதரியான தேவகியையும் அவளது கணவரான வஸுதேவரையும் அதுமுதல்

யமுனா நதிக்கரையிற் சிறையிலடைத்து அவர்கள் அவ்விடத்தே அநேக ஆண்டுகளிருக்குமாறு செய்தான்.

### பூமிதேவி முறையிடல்.

கம்ஸனது இம்சையைத் தாளாது ஜனங்கள் கடுந்துயரத்திலாழ்ந்திருக்க, பூமிதேவி யொருபசுவுருக்கொண்டு சிவபிரானை நாடி முறையிட்டாள். அவர் தேவகணங்களோடு கூடி அப்பசுவை யழைத்துக்கொண்டு பிரம்மாவினிடம் சென்றுரைத்தனர். பிரம்மா திருப்பாற்கடலில் இலக்குமி ஸமேதராய் அநந்தன் (முடிவற்றவன்) என்னும் அரவத்தின்மீது பள்ளிகொண்டிருக்கும் உலக ரக்ஷகனை ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைப் பிரார்த்திக்க இசைந்து, அன்னவாகனத்தின் மீதூர்ந்து விஷ்ணுவிடம் சென்றனர். கம்ஸனது கொடுங்கோன்மையை விவரித்துரைத்து சிவனாரளித்த வரத்தின் பலங்கொண்டு அவன் வெகு துன்பப்படுத்துகின்றான். ஆகையால், இக்கொடுமையை யடக்க இதுவே தருணம். தாங்கள் மனிதாவதாரமெடுத்துப் பிருந்தாவனத்தில் தேவகியின் கருப்பத்தில் ஜனிக்கவேண்டும்; கம்ஸனை வென்று உலகத்தை ரக்ஷிப்பவன் அவளது வயிற்றிலேயே பிறக்க வேண்டும் என்று பிரம்மா பிரார்த்திக்க, ஸ்ரீமகாவிஷ்ணு சம்மதித்தார். சிவனைப் பிரார்த்தித்து அவர் தம் மனைவியாரான உமாதேவியின் சகாயம் இருக்குமாறு செய்ய வேண்டுமென்று ஸ்ரீமகாவிஷ்ணு சொல்ல சிவனாரும் அதற்கிசைந்தார்.

### கிருஷ்ண ஜனனம்.

லக்ஷ்மீஸமேதராய் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி உமாதேவியையழைத்துக்கொண்டு பூவுலகம்சேர்ந்து தேவகியும் வசுதேவரும் சிறைப்பட்டிருந்த வடமதுரை என்னும் பட்டணத்திற்கேகினர். தேவகியின் கர்ப்பத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு கிருஷ்ணமூர்த்தியாய் அவதரித்தனர். அதே தருணத்தில் உமாதேவி பிருந்தாவனத்து இடையருட் சிரேஷ்டனான நந்தனது மனைவியான யசோதையின் வயிற்றிலொரு பெண்குழந்தையாய்த் தோன்றினள். இதுவரையில் தேவகியின் வயிற்றிலுதித்த ஏழு குழந்தைகளையும் பிறந்தவுடனே கம்சன் கொன்று விட்டனன். எட்டாங் குழந்தையான ஸ்ரீ கிருஷ்ணனையும் அவன் அவ்வாறு கொல்லாதிருக்கச்செய்ய வேண்டியிருந்தது. தந்தையான வசுதேவர் மிகுதியும் வருத்தப்பட்டார். மறுநாள் உதயத்தில் கம்சன் இக்குழந்தையைக் கொன்று விடுவானென்பது அவரது துணிபு. அப்போது பிறந்த



கிருஷ்ணன் ஒருஉபாயஞ் சொல்லினாராம். யமுனாநதியைக் கடந்து பிருந்தாவனத்திற்குப் போய் அங்கு பிறந்துள்ள நந்த கோபனது பெண்சிசுவை யெடுத்துக்கொண்டு தம்மை அங்கு விட்டு வருமாறு யுக்தி சொன்னாராம். மேலும், வசுதேவர் தொட்டமாத்திரத்திற் சிறையின் ஏழுகதவுகளும் திறக்குமென்றும் காவலாளிகள் உறங்குவாரென்றும் அநுக்கிரகித்தனராம். அவர் கூறியவண்ணமே அனைத்தும் அமைந்திருந்தன. ஆனால், இரவானமையின் இருள் மிகுந்திருந்தது. யமுனைக்குப் போய்ச்சேருவதே வசுதேவருக்குக் கஷ்டமாயிருந்தது. எனினும், கிருஷ்ணஜனனத்தன்றிரவு ஒரு புயற்காற்று வீசியது. மேகம் இடித்து மின்னியது. இம்மின்னலொளியைக் கொண்டு யமுனைசேர்ந்தார். இங்கொரு பெருந்தடை யெதிர்ப்பட்டது. பலமான மழை வெள்ளத்தால் யமுனை பெருகி இருகரையும் புரண்டோடியது. அதனைக் கடக்க வியலாது வசுதேவர் திகைத்து நிற்கையில் ஒரு நரி (யோகமாயையினமைப்பு) அவ்வழி யோடி வந்தது. அதன் பின்னர்ச் செல்லவே நதியைக் கடப்பதற்கு ஆழமில்லாத துறையொன்றேற்பட்டது. கடவுளின் திருஅவதாரத்தைக் காண்பதற்கு யமுனைக்கும் ஆவலாயிருந்தமையின் நதியின் மத்தியில் சிசுவைத் தந்தை கைதவறி விடுமாறு அவள் செய்தனள். வசுதேவர் மனம் வருந்தியுரக்க அழுதார். உடனே, சிசு நீரின் மேற்புறத்துக் கிளம்பி வந்தது; அதனைக் கைப்பற்றி வஸுதேவர் க்ஷேமமாய் முன் செல்வாராயினர். அக்கரை சேர்ந்ததும் குழந்தையை முன்சொல்லியவாறு மாற்றி, வசுதேவர் யாவருமறியாது நந்த கோபாலனது குழந்தையுடன் தம் சிறைச்சாலைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். முன் பிறந்த ஏழு குழந்தைகளைப் போலவே இதனையும் மறுநாட் காலையில் அரசன் கொல்லச் செய்தான். அப்போழ்து அச்சிசுவினின்றும் உமாதேவி வெளிக்கிளம்பி கம்ஸனைக் கண்டு நகைத்து, அவன் மோசம் போயினானென்றும், அவனது மருமகன் உயிர்த்திருக்கின்றமையின் சாபம் பலிக்குமென்றும் கூறி மறைந்தனள்.

### உற்சவம்.

கிருஷ்ணன் பிறந்தது சிராவண மாதம் அஷ்டமி திதியிலாகும். இரவில் மூன்றும் பூதம் ஆரம்பகாலத்தில் ரோகிணி நக்ஷத்திரம் சந்திரனுடன் கூடியிருப்பது 'ஜயந்தி யோக' மெனப்படும். இத்தினமானது வருஷந்தோறும் பெரிய பண்டிகையாய்க் கொண்டாட

படுகின்றது. உபவாஸமிருத்தல், அர்ச்சனை ஆராதனை முதலியன செய்தல், ஆகிய யிவை உற்சவக் குறிகளாகும். சில சமயங்களில் ரோகிணி நக்ஷத்திரம் ஓரிரவுக்கதிகமாய்ச் சந்திரனுடன் கூடி யிருத்தலும் அமையும். அங்ஙனமாயின், முதல் தினத்தை யொழித்து இரண்டாந் தினத்தில் இவ்வுற்சவங் கொண்டாடப்படும். இரண்டு தினங்களிலும் ரோகிணியும் சந்திரனுஞ் சேர்ந்திராவிடின், ஜயந்தி யோகத்தைக் கவனியாது ரோகிணி நக்ஷத்திரம் உச்சமாயிருப்பதை மாத்திரங் கொண்டு அந்தத் தினத்திற் கொண்டாட வேண்டும். இரண்டு தினங்களிலும் ரோகிணி (ஜயந்தி யோகமின்றி) உச்சமாயிருப்பின், இரண்டாந்தினமே கொண்டாடற்பாலதாகும். துவைதவாதிகளான மாத்வர்கள் ஜனன லக்னத்திற்கு முந்திய தினமெல்லாம் உபவாஸமிருப்பர். அன்று முழுவதும் அன்ன பானாதிகளின்றி மறுதினம் பாரணை செய்வார்கள். அன்றைய தினம் கிருஷ்ணமூர்த்தியின் விக்கிரகத்துக்கு அபிஷேகாலங்காரங்கள் செய்து கோவில்களிற் செய்வதுபோல உற்சவம் நடத்துவார்கள். பின்னர் ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாம் ஸ்கந்தத்தை யோதுவார்கள். இதிற் கிருஷ்ணபகவானது அவதார சரித்திரம் விரித்துரைக்கப்பட்டுளது. இரவில் இதேமாதிரியாகக் கோவில்களில் உற்சவங் கொண்டாடப் படும். அப்பொழுதே கிருஷ்ணன் பிறந்ததாக ஐதீகம். ஸ்ரீவிஷ்ணுபக்தர்களும் உபவாஸமிருப்பாரெனினும், அன்றிரவு கோவில்களில் உற்சவம் ஆயின் தென்கலை வைஷ்ணவர்கள் பின்னர் பிரஸாதம் அருந்துவர். வடகலையாரில் சிலர் மாத்திரமே மறுநாட் காலைவரையில் ஆகாரங்கொள்ளார். வைஷ்ணவர்களனைவரும் தமிழ் நாலாயிரப் பிரபந்தமோதுவர். ஸ்மார்த்தர்கள் பாகவதம் தசமஸ்கந்த பாராயணஞ் செய்வர். இவ்வுற்சவத்தை ஹிந்துக்கள் எல்லோரும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

ரங்கம்மாள்.

---

ஸரோஜா:—ஒவ்வொரு தேசாபிமானியும் ஸ்த்ரீயும் படித்து அறிந்து கொள்ளவேண்டிய ஒரு அருமையான கதை. இதன் விலை அணா 5. வேண்டுவோர்கள் 'பெண்கல்வி' ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## FLOWERS

BY

Sri K. Mangalam

## புஷ்பங்கள்

உலகில் புஷ்பங்களை விரும்பாதவர் யார்? ஒருவருமில்லையென்றே சொல்லலாம். பூவினிடத்திலிருக்கும் ஆசையினால் நந்தவனத்திலும், தோட்டத்திலும், தொட்டிகளிலும், வீட்டைச்சுற்றி வேலிகளிலும், பந்தலிலும், கீரைப்பாத்தியிலும், அதை வைத்துப் பயிரிட்டு வளர்க்கிறோம். மலர்ந்த புஷ்பங்களை தேகத்துக்கு அலங்காரமாகவும் சிரசுக்கு ஆபரணமாகவும், கழுத்துக்கு முத்தாஹாரம் போல் மாலையாகவும், கைக்குச் செண்டாகவும், கைக்குக் கங்கணமாகவும் அரசன் முதல் எளியவர் வரையில் தரித்து ஆனந்தப்படுகிறோம்.

ஏன் பூவினிடத்தில் நாம் அதிக அன்பு பாராட்டுகிறோம்? அதினிடத்தில் என்ன விசேஷமிருந்து நமக்குக் களிப்பை உண்டாக்குகிறது? அது கண்ணுக்கு அழகாகவும், நானா விசித்திரமான உருவங்களாகவும் குளிர்ந்த மணம் வீசுகின்றதாகவும் இருக்கின்றது. மேலும், நமது கண்ணுக்குக் குளிர்ந்த காட்சியைத் தருகிறது. நானாஜாதி புஷ்பங்களை நினைத்துப் பார்த்தால் அவைகள் ஒன்றுபோலொன்றிராமல் கணக்கிடக் கூடாத பற்பல உருவங்களும் தினுஸு தினுஸான வர்ணங்களும் உடையனவாகக் காணப்படுகின்றன. உருவங்களில் ஒன்று நட்சத்திரம் போலவும், மற்றொன்று சிமிழ்போலவும் வேறு கிண்ணம் போலவும், விசித்திரமான வர்ணம் பொருந்திய வண்ணாத்திப் பூச்சி இறக்கைபோலவும் காணப்படும். இன்னும் சில, ஜிமிக்கி போலவும், பட்டு வாகன்பை போலவும், மணிகள் போலவும் இருக்கிற புஷ்ப வகைகளைக் கணக்கிட முடியாது. புஷ்பங்களின் வர்ணவகைகளைப்பற்றி வர்ணித்துச் சொல்லுவது அசாத்தியம். சில புஷ்பங்களுக்கு வர்ணம் ஒன்றாகயிருக்கும், சிலவற்றிற்கு இரண்டு; இன்னும் சிலவற்றிற்கு மூன்றும் நான்குமாயிருக்கும். சில மலர்களில் ஒவ்வோரிதழிலும் நவரத்தின மிழைத்து அழகாய் அடுக்கியதுபோலிருக்கும்.

வாசனையிலோ மணமுள்ள புஷ்பங்களைவிட மாநிலத்தில் மகிழ்ச்சிதரக்கது வேறு வஸ்து ஒன்று மில்லையென்று தோன்றும். சில புஷ்பங்களிலிருந்து பரிமளமான பன்னீரெடுத்துப் பளிங்கு பாத்திர

த்திலேற்றி, கல்யாண காலங்களிலும் விருந்திடுங்காலங்களிலும் மற்ற சந்தோஷ வேளைகளிலும் வேண்டிய போதெல்லாம் உபயோகித்துக் கொண்டு வருகிறோம்.

இனி புஷ்பங்களின் அமைப்பைச் சொல்லுகிறேன். அந்த அதிசயத்தைக் கேளுங்கள். பொழுதுபட மூடிக்கொள்ளுவதும், மறுபடியும் உதயத்தில் மலர்வதுமான தாமரை பூவைப்போன்ற புஷ்பங்கள் சிலவுண்டு. இவ்வித மலர்களைச் சில தேசத்தார் 'பகற் கண்' என்று சொல்லுகிறார்கள். சில புஷ்பங்கள் காலையிலும், மத்தியானத்திலும், பொழுதுபோகு முன்னும், பொழுது போன பின்னும் மலர்கிறதினாலே, அப்படி மலர்கிறவைகளை வீட்டுக்கு வெளிப்புறத்தில் சிறு பாத்தியாகப் போட்டு வளர்க்கிறார்கள். அந்தந்த ஜாதி புஷ்பம் மலர்கிற வேளையைக் கணக்கிட்டு சில விவேகிகள் நேரத்தை அறிவதற்குக் கடிகாரம்போல் ஆக்கிக் கொள்ளுகிறார்கள். இவ்விதமாகவே அந்தந்த மாதத்திலுண்டாகும் மலர்களைப் பார்த்து மாதத்தோடே மாதம் கணக்கிட்டு மாதப் பஞ்சாங்கமாகவும் வைத்துக் கொள்ளுகிறார்கள். புஷ்பங்களின் அழகையும், இயற்கை அமைப்பையும் அறிவது மானிடரால் முடியாது. ஒரு கவிவாணர் ஒரு சிறு புஷ்பத்திலிருந்து வாழ்நாளில் அறியக்கூடிய ஸகல பாடங்களையும் அறிந்து கொள்ளலாமென்று கூறியிருக்கிறார்.

படித்தவர்களாகிய பெரியோர்கள் புஷ்பங்களைக் காலால் மிதிக்கக் கூடாதென்று கூறுவர். ஏனென்றால், புஷ்பம் லக்ஷ்மி தேவிக்குச் சமானம். புஷ்பங்கள் இல்லாத கல்யாணம் ஒரு கல்யாணமாகாது என்று கூறுவோர் பலர். கல்யாணத்தை சிறக்கச் செய்யக்கூடியவைகளில் புஷ்பம் முக்கியமானது. யாராவது புஷ்பங்களைக் கொடுத்தால் வேண்டாமென்று சொல்லக்கூடாது. அப்படிச் சொல்லுவோர் லக்ஷ்மியை நிராகரித்ததாகும். ஸ்த்ரீகளுக்கு முக்கியமாகப் புஷ்பத்தில் வெகு பிரியமுண்டு. எவ்வளவு கோபமுள்ள ஸ்த்ரீயாயிருந்தபோதிலும் புஷ்பத்தைக் கண்டவுடன் அவள் கோபம் தணிவது ஸகஜம். புஷ்பங்களின் அழகும் மணமும் தலைவலியைப் போக்கும். மாதக்கணக்காய் படுத்த படுக்கையுடன் கிடக்கும் வியாதியஸ்தர்களின் மனது குளிர்ந்து இருக்கும் படிக்குப் புஷ்பச் செண்டுகளை அவர்கள் கையில்கொடுப்பது வழக்கம். ஸ்த்ரீ புருஷர்களுடைய சிநேகத்தை விருத்தி செய்வதில் புஷ்பங்களின் உதவி அதிகமென்பதை யாவரும் அறிவார்கள்.

மங்களம்.

## ON HEALTH

BY

### A Lady Student

## தேகா ரோக்கியம்

1. மனிதன் ஜீவாதாரமென்ன ? மனிதர் பிழைத்திருப்பதற்கு சாதனம் மூன்று. அவை, காற்று, தண்ணீர், உணவு இவைகளாகும். இவற்றுள் நீர், உணவு இல்லாமல் சில காலம் பிழைத்திருந்தாலும் இருக்கலாம். காற்று இல்லாமல் ஒரு நிமிஷமேனும் ஜீவிக்கமுடியாது பிறப்பு முதல் இறப்புவரையில் காற்றுவேண்டும். ஆகையால், காற்று வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரமாயிருக்கிறது.

2. சுத்த ஆகாயத்தைப் பெறும் வகையென்ன? அதற்கு சுத்த ஆகாயமுள்ளவிடத்தில் பகலில் நாம் உலாவவேண்டும். நமக்கு ஸமீபத்திலுள்ள நல்ல காற்றை அழுக்கும் குப்பையும் கெடுக்கும்படி விடக் கூடாது. போதுமானபடி சுத்தமான காற்று நமது தேகத்தில் புகும்படி செய்து கொள்ள வேண்டும். எழுதும் பொழுதும் வேலை செய்யும் பொழுதும் கூனிக் குனிந்து கொண்டிருக்கக் கூடாது. நிமிர்ந்து உட்கார்ந்திருப்பது அதிக சுகத்துக் கேதுவானது. ஆகையால், தான் பள்ளிக்கூடங்களில் மாணுக்கர்களை பாக் பெஞ்சியில் உட்காரும்படி செய்கிறார்கள். வியாதியஸ்தர்களுக்கு சுத்தமான காற்று அதிகமாய் வேண்டும். ஒரு மனிதன் சுகமாயிருக்க அவனுக்கு 10 அடி உயரம் 10 அடி அகலம் 10 அடி நீளமான இடம் வேண்டும்.

3. நாம் உட்கொள்ளும் மூச்சு நமது தேகத்தின் உட்புறத்தை எப்பொழுதும் சுத்தி பண்ணி அசுத்தங்களை நீக்கிவிடுகிறது. உட்செல்லும் ஆகாயம் சுத்தமாயிருந்தால் நல்ல ரத்தம் விருத்தியாகும். நாம் வெளிவிடும் மூச்சு கரிவாயு, ஜலவாயு ஊத்தை, முதலியமூன்று அசுத்தமானவைகளை வெளியே தள்ளுகிறது. நாம் ஒரு சிறு அறைக்குள் தூங்கினால் மூச்சிலிருந்து வெளிப்படும் விஷவாயு அறையை நிரப்பும். சுத்த ஆகாயம் வெளியிலிருந்து உள்ளே வர ஏதுவில்லாதபடியால் மரணத்தை உண்டாக்கும்.

4, சாப்பிடும் பொழுது கவனிக்க வேண்டியவை என்ன? போஜனத்தை விழுங்குவதற்கு முந்தி அதை நன்றாய் மெல்ல வேண்டும்.

இவற்றைக் கையாடினால் போஜனம் சீக்கிரம் செரித்து தேகத்தைப் போஷிக்கும். சாப்பிடும் பொழுது ஒன்றையும் குறித்து யோசித்துக் கொண்டிராமல் சந்தோஷமாய் சாப்பிடவேண்டும். சாப்பிடும் பொழுது தண்ணீரைக் கொஞ்சமாய்க் குடித்தல் நல்லது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும். ஆகையால், மட்டுக்கு மிஞ்சி சாப்பிடக்கூடாது. சாப்பிடும் பொழுது அவசரப்படக்கூடாது. சாப்பிட்டவுடன் வேலை செய்யவும்கூடாது. கொஞ்சநேரம் இளைப்பாறுவதே நல்லது.

ஒரு ஸ்த்ரீ வித்யார்த்தி.

---

## SWADESHI VOW AND WOMEN

BY

Sri Rajammal

## ஸ்வதேசிய விருதமும் ஸ்த்ரீகளும்

ஸ்வதேசி, ஸ்வதேசி என்ற சப்தம் சென்னை நகரிலும் இந்தியாவிலுள்ள இதர இடங்களிலும் தற்காலம் கிளம்பியிருக்கிறது. ஸ்த்ரீகளும் புருஷர்களும் அநேகர் ஆங்காங்கு மீட்டிங் கூடி "ஸ்வதேசிய விருதம்" செய்து கொண்டு வருகிறார்களென்று தினப்பத்திரிகைகளில் காண்கிறோம்.

ஸுமார் 10-வருஷங்களுக்கு முன் இந்தமாதிரி ஸ்வதேசிய சபதம் வங்காளத்தில் முதன் முதல் கிளம்பியது. அந்தச் சபதத்தின் கூக்குரல் தேசமெங்கும் மேலாகப் பரவி அப்படியே அமிழ்ந்து போய்விட்டது. அப்போதைவிட தற்காலம் அது மறுபடியும் கொஞ்சம் மும்முரமாகக் கிளம்பியிருக்கிறது. இதன் உள் அம்சங்களை நாம் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.

ஸ்வதேசம் என்ற பதத்தின் அர்த்தம் 'சொந்ததேசம்' 'தன் தேசம்.' தன் தேசத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருபவனுக்கு "ஸ்வதேசி" என்று பெயர். சில காலமாக நம்தேச முன்னேற்றத்திற்குச் செய்யப்படும் முயற்சிகளில் ஸ்வதேசிய சபதம் அல்லது ஸ்வதேச விரதத்தை ஒரு பாகத்துக்கே ஜனங்கள் உபயோகப் படுத்துகிறார்கள். அதாவது தேசாபிமானத்தால் அந்நிய நாடுகளிலிருந்து வரும்வஸ்துக்களை வாங்கி உபயோகப்படுத்தாமல் சொந்த தேசத்தில் செய்யப்பட்ட வஸ்துக்களை வாங்கி உபயோகப்படுத்துவது அவசிய



மென்று அநேகர் ஸ்வதேச விரதம் கொள்ளுகிறார்கள். இவர்கள் இப்படி விரதம் கொள்ளுவது நல்லது தான். ஏனென்றால், நாம் கிரயம் கொடுத்து ஸ்வதேச ஸாமான்களை வாங்குவதனால் அப்பணம் அந்நிய நாடுகளுக்குப் போகாமல் நம்மூரிலேயே சுழன்று கொண்டு நாட்டுச் செல்வத்தை விருத்தியாக்குகின்றது. நாட்டில் பணம் அதிகமாயிருப்பதால் அதைக் கொண்டு அநேக தொழில்கள் விருத்தியாகிச் செழிக்கும். அப்போது தொழிலாளிகளும் கூலி வேலைக்காரர்களும் பட்டினியாலும் வியாதியாலும் வருந்த மாட்டார்கள். தாய் தேசத்தில் வயிறு பிழைப்பதற்கு வழியில்லாதபடி வேறு தேசங்களுக்குச் சென்று சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவிக்கமாட்டார்கள். ஆகவே, நம்தேசத்தில் செய்யப்பட்ட ஸாமான்களை வாங்குவது ஒவ்வொரு ஸ்த்ரீ புருஷர்களுடைய தர்மமாகயிருக்கிறது.

இப்போது நாம் உபயோகிக்கும் வஸ்துக்களை நான்கு விதமாகப் பிரிக்கலாம். முதலாவது, நமக்கு அனாவசியமானதும் உபயோகமற்றதுமானவைகள். இரண்டாவது, நமக்கு அவசியமானவைகள். மூன்றாவது, நம் நாட்டில் சௌகர்யமாகச் செய்யக்கூடியவைகள். நான்காவது பிரதேசத்தார்கள் நம்மைக் காட்டிலும் சௌகர்யமாகச் செய்யக்கூடியவைகள். இப்படியாகப் பிரித்து ஆராய்ந்து பார்க்குமளவில் முதலாவதாகச் சொல்லப்பட்ட அனாவசியமானதும்உபயோகமற்றதுமான வஸ்துக்களையே நாம் அந்நிய நாடுகளிலிருந்து பெறுகிறோம். அவைகளையே நாம் பெரிதும் உபயோகப்படுத்துகிறோம். ஒரு காசு பெறாத தட்டுமுட்டு ஸாமான்களை நாம் வாங்கிச் சுமக்கிறோம். வாங்கும்போது அவைகள் நமக்கு அவசியம் தேவையானதா இல்லையா என்பதை யோசிப்பது கிடையாது. புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக்கொண்டதுபோல தங்கள் குடும்ப நிலையறியாத நம் ஸ்த்ரீகள் ஐரோப்பிய ஸ்த்ரீகளைப்போல் கோணலும் மாணலுமாக கூந்தலை வாறி அதில் உபயோகமற்ற சிகப்பு நாடா பச்சை நாடாக்களைக்கட்டி அலங்கோலம் செய்து கொள்கிறார்கள்.

அநியாயமாக நம் சிறு பெண்களை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்போது அவர்களைக் கோரமாக அலங்காரம் செய்து அனுப்புகிறார்கள். கடவுளால் வெகு மனோகரமாகச் சிருஷ்டிக்கப்பட்ட திவ்விய வாஸனையுள்ள புஷ்பங்களை விட்டு விட்டு கடுதாசினாலும் நூலினாலும் செய்யப்பட்டவைகளை அணிந்துகொண்டு தங்களுடைய இயற்

கை அழகை விகாரம் செய்து கொள்ளுகிறார்கள். நம் வீடுகளில் சில வருஷங்களுக்கு முன் வழங்கி வந்த அதி ரமணீயமானப் பிரப்பந் தட்டுகளைக் காணோம். மூன்றாம் நாள் துருப்பிடித்துப் பார்ப்பதற்கே அருவருப்பைக் கொடுக்கும்படியான ஜெர்மனி, ஜப்பான் கில்டு தாம்பாளங்களை வாங்குகிறோம். நம் வீடுகளில் அழகான குத்து விளக்குகளைக் காணோம். இப்போது சிமிணி விளக்குகளை வாங்கி அதன் புகையால் கண்ணைக் கெடுத்துக் கொள்கிறோம். ஸ்திரீகள் ஸ்நானம் செய்வதற்கு வாஸனையான ஸ்நானப் பொடிகளை உபயோகித்து வந்தோம். அது தேகாரோக்கியத்துக்கு எடுத்தது. இப்போது பிறந்த குழந்தை முதற்கொண்டு அந்நிய நாடுகளிலிருந்து வரும் பல எண்ணெயினாலும் கொழுப்பினாலும் செய்யப்பட்ட ஸோப்புகளை உபயோகப் படுத்துகிறோம். இப்படியாக எழுத ஆரம்பித்தால் நம் வீடுகளில் இருக்கிற ஸாமான்கள் அநேகமாக நமக்குத் தேவையானதல்ல.

இன்னும் முக்கியமான ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும். தெய்வீகமான ஸங்கீத சாஸ்திரத்தைப் பாழாக்கிக் கொண்டோம். நம் வீணை பிடில் தம்பூர் இவை போன்ற அழகிய ஸங்கீதக் கருவிகளைக் காணோம். ஹா ஹூ என்று பேரிரைச்சல் போடும்படியான ஹார்மோனியங்களையும், பியானோப் பெட்டிகளையும், கிராமபோன்களையும் வாங்கி உபயோகிக்கிறோம். நம் சங்கீத சாஸ்திரம் அபூர்வமான லக்ஷணங்கள் பொருந்தியதல்லவா? இந்திரியங்களைத் திருப்திப் படுத்தும் ஹார்மோனியமா அதற்கு ஏற்றது? இன்னும் கொஞ்ச காலத்துக்குள் இந்த ஹார்மோனியங்களினாலும் கிராமபோன்களினாலும் நம் ஸங்கீதம் இருந்த இடம் தெரியாமற் போய்விடும். ஆகவே, ஸ்வதேச விரதம் எடுத்துக்கொள்கிறவர்கள் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுஉண்டு நமக்குத் தேவையில்லாத வஸ்துக்களை அந்யநாடுகளிலிருந்து வாங்கக் கூடாது. நம் தேசத்தில் உண்டாகிற ஸாமான்களையே வாங்கவேண்டும் ஒரு ஸாமான் நம் தேசத்தில் உண்டாகாமல் அந்த ஸாமான் நமக்குத் தேவையாயுமிருக்கும் பக்ஷத்தில் அதை அந்நிய நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இப்படியாக அநுஷ்டிப்பது தான் ஸ்வதேசிய விரதமென்று சொல்லத்தகும். இதை நம் ஸ்திரீகளும் புருஷர்களும் கட்டாயம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

இராஜம்மாள்.

## A WOMAN WHO CONQUERED YAMA.

### எமனை ஜயித்த பெண்மணி.

வட இந்தியாவிலுள்ள மத்திர தேசத்திலே சத்தியம், தவம், தானம், தர்மம், ஆண்மை, ஊக்கம், பூததயை, பச்சாத்தாபம் முதலிய பல நற்குணங்களும், நன்னெறி நல்லொழுக்கங்களும் அமைந்த அசுவபதி யென்னும் ஓர் அரசனிருந்தான். அவன் குடிகளால் மிகக் கொண்டாடப்பட்டு நீதி முறைதவறாது நல்லரசு செலுத்திவந்தனன். அவன் சகல சாம்பிராஜ்யங்களும் நிறையப் பெற்று, ஒரு குறையுமின்றி மிகவும் மேன்மையாக வாழ்ந்திருந்தான். ஆனாலும், அவனுக்குப் புத்திர ஸந்தானம் ஒன்று மாத்திரம் நெடுநாள்வரையில் உண்டாகாதிருந்தது. மக்கட்செல்வம் ஒன்றில்லையாயின் மற்றவை யாவுமிருந்தும் இல்லாதவையே; மேலும், இதுவரையில் நீடித்துவந்த முன்னோர்களுடைய வம்சமும் நம்மோடு அழிந்துபோகின்றதே என்றெண்ணி மிக வருந்தினான். அதற்காக ஆகாரம் நித்திரை முதலியவைகளையும் ஒழித்து ஜிதேந்திரியனாக நெடுநாள் தவஞ் செய்தான், அவன் இயற்றிய தவத்தால் திருவுளமுவந்து அவனுக்குமக்கட்பேறு உண்டாகும்படி சுவாமி சங்கற்பித்தார். அதனால் அம்மகாராஜனுக்குச் சீக்கிரமே ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது ஸாவித்திரி தேவியின் அனுக்கிரகத்தால் பிறந்த பெண்மணியாதலின், அதற்கும் ஸாவித்திரியென்றே நாமகரணம் செய்வித்து, அவ்வரசன் அக்குழந்தையை மிகப் பரிவுடன் பாதுகாத்து வளர்த்து வந்தான். அச்செல்வப் புதல்வியும் ஒரு தெய்வப் பெண்போலவே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, சகல கலைகளிலும் மிக்க வல்லவளாகி, பெண்களுக்கு அவசியமாய்த் தெரிய வேண்டிய வியாபாரங்களிலும் நன்றாய்க் கைபழகினாள். தாய் தந்தையர்கட்கு அவள் ஒரே மகளானதுபற்றி, அவர்கள் அச்செல்வப் புதல்வியை மிகவும் அருமையாய் ஆதரித்து வந்தனர்.

இவ்வண்ணம் இருக்கையில் ஸாவித்திரிக்கு விவாகம் செய்து கொள்ளத் தக்க வயது வந்துவிட்டது. மின்னற்கொடிபோன்ற மேனியுள்ளப் பெண்ணின் ரூபலாவண்ணியங்களைக் கண்டவர்கள் அனைவரும் அவளொரு தெய்வப்பெண்ணென்றே நி[illegible]து ஆ[illegible]

கள். அச்செல்வச் சிறுமியின் வடிவழகையும் விவேகத்தின் அழகையும் கண்டு அதிசயித்து அரசர்கள் அனைவரும் இவ்வழகியை மணம் புரிய நாம் ஈடானவர்களல்லவென்று எண்ணினார்கள்; ஒருவரும் வந்து அவளை இல்லாளாக வரிக்கத் துணியவில்லை. இப்படியிருக்க ஒரு நாள் ஸாவித்திரி நீராடி ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டுவந்து தந்தையின் பாதங்களைப் பணிந்து நின்றாள். அப்போது அவ்வரசன் அவ்வருமை மகளை ஏறிபிறங்கப்பார்த்து இல்வாழ்க்கை செய்யத்தக்க வயது வந்திருப்பது கண்டு, அவளைக் கலியாணம் செய்து கொள்ள ஒருவரும் வந்து வேண்டாமற் போகவே மிகவும் விசனமுற்றான். அப்புதல்வியைப் பார்த்து, என் செல்வமே! இப்போது உனக்கு விவாகம் செய்துகொள்ள வேண்டிய வயது வந்துவிட்டது; ஆயினும், இதுவரையில் ஒருவரும் வந்து உன்னை வரிக்கவில்லை; ஆதலின் நீயே பலவிடங்களிலும் போய்ப் பார்த்து உன் மனதிற்கேற்ற புருஷனைத் தெரிந்துகொண்டுவா; ஏற்றிருக்குமாயின் அவனுக்கே உன்னை மணமாலை சூட்டுவிக்கிறேன். பெண்ணுக்குப் பொருத்தமான பர்த்தாவைத்தேடிக் கலியாணம் செய்விக்காத பிதாவை அனைவரும் நிந்திப்பார்கள். அப்படிப்பட்ட நிந்தை எனக்கு நேராதிருக்கும்படி நீ செய்துகொள்ள வேண்டும் என்று சொல்லி, அவளோடு கூடப் போய்வரும்படி மந்திரி முதலிய பரிஜனங்களுக்கெல்லாம் கட்டளையிட்டான். தந்தை சொன்ன சொற்கேட்டு அந்தக்குணபூஷணி கொஞ்சம் வெட்கினவளாகித் தலைகுனிந்து தந்தையை நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, மந்திரி முதலானவர்களோடு கூடப் பொன்னால் செய்யப்பட்ட ரதமேறிப் புறப்பட்டாள். போம்போது முதலில் ராஜரிஷிகள் வசித்திருக்கும் தபோ வனங்களுக்குச் சென்று, அங்கங்குள்ள பெரியோர்களையெல்லாம் ஸேவித்து வழியிலுள்ள பல புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடி, பல தான தர்மங்கள் செய்து கொண்டு போனாள்.

ஸாவித்திரி யாத்திரை போயிருந்த காலத்தில் ஒரு நாள் நாரத முனிவர் அசுவபதியின் அரண்மனைக்கு வந்தார். அவர்களிருவரும் விநோதமாய்ப் பேசிக்கொண்டிருந்த தருணத்தில் தீர்த்த யாத்திரை போயிருந்த ஸாவித்திரி தான் போனகாரியத்தை முடித்துக் கொண்டு திரும்பிவந்தாள். உடன் தந்தையின் அரண்மனைக்குள் சென்று அங்கிருந்த தந்தையோடு முனிவரையும் வணங்கி நிற்க, நாரதமுனிவர் அரசனைப் பார்த்து! ராஜனே! இம்மகள் இப்போது



எவ்விடம் போய் வருகிறாள்? இன்னும் ஏன் இவளுக்குக் கலியாணம் செய்விக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறீர்? என்று வினவினர். அதுகேட்டு அரசன், சுவாமி! அந்தக் காரியநிமித்தமே இம்மகள் இப்போது போய் வந்தாள்; சமயத்தில் தேவரீர் இங்கு எழுந்தருளியது அடியேனுடைய பாக்கிய விசேஷமே, இவள் வரித்து வந்திருக்கிற பர்த்தாவைத்தேவரீர் சற்றுவிசாரித்து அவருடைய குணாதிசயங்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன் என்றுசொல்லி, தான் போய் வந்த வரலாற்றைத் தெளிய உரைக்கும்படி மகளுக்கும் ஆக்ஞாபிக்க, அப்பெண்ணும் அவ்வண்ணமே கூறலாயினாள்.

முனிச் சிரேஷ்டரே! ஸால்வதேசத்திலே தியுமத்ஸேனன் என்று ஒரு அரசன் அரசாண்டு வந்தது தங்களுக்குத் தெரியுமே, அவருடைய குமாரன் மிகச் சிறுவனாய் இருக்கையிலேயே அவ்வரசர்க்குக் கண் கெட்டுப் போயிற்று. அத்தருணங் கண்டு பகைவர் அந்த ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு அவரையும் அடித்துத் துரத்திவிட்டார்கள். பின்பு, அவர் தம்மிளங் குழந்தையோடும் பத்தினியோடும் மகரிஷிகள் வாசஞ் செய்யும் தபோவனம் வந்து சேர்ந்து அங்கு அம்முனிவர்களோடு கூட வசித்துக் கொண்டிருக்கின்றனர். நகரத்திலே பிறந்து தபோவனத்திலே வளர்ந்த அந்த ராஜரிஷியினுடைய புத்திரரான ஸத்தியவான் என்பவரே எனக்கு ஏற்ற பர்த்தாவென்று நான் மனதினால் வரித்து அதைத் தங்களிடம் தெரிவிக்க வந்தேன் என்றாள்.

அதுகேட்டு நாரதமுனிவர், ராஜனே! இம்மகள் அறியாமையால் ஸத்தியவானை வரித்து வந்தாள். ஆயினும், அவன் அற்பமானவனல்ல. அவனுடைய மாதா பிதாக்கள் எப்போதும் சத்தியமே பேசுவதுபற்றி, அவனுக்கு ஸத்தியவான் என்றே நாமகரணம் செய்யப்பட்டது. அவன் எல்லாக் கலைகளும் கற்றுத் தேர்ந்தவன். புத்தியில் அவனுக்கு எதிர் ஒருவருமில்லை. அழகில் அச்வினீ தேவதைகளுக்கு ஒப்பானவன். வீர்ய தைர்ய பராக்கிரமம், சத்தியம் தானதர்மம் பரோபகாரம் முதலிய பல நற்குணங்களும் ஸத்தியவானிடத்தில் குடிகொண்டிருக்கின்றன; ஆனாலும், அவன் இம்மகளுக்குக் கணவனாவதற்கு உரியவனல்லன்; அவனைத்தவிர மற்றெவனையாவது வரித்துக்கொண்டு வரட்டுமென்றார். அதுகேட்டு அசுவபதி, அதற்குக் காரணமாய் அவனிடத்திலுள்ள தோஷம் இன்னதெனத் தெரிவிக்க வேண்டும் என்று அம்முனிவரைப் பலதரம் நிர்ப்பந்தித்துக் கேட்க

அவர், அந்த ராஜகுமாரனிடத்தில் மற்றொரு துர்க்குணமும் இல்லை. அற்பாயுவாகப் பிறந்திருக்கிறான்; இன்னும் ஒருவருஷகாலமே அவ்விளவரசன் இப்பூமியில் ஜீவித்திருப்பான். விதியை வெல்ல யார்தாம்? அதுபற்றியே நான் அவனை வேண்டாமென்றேனென்றார்.

அவ்வுரையைக் கேட்டு அரசன் கோடையிடியைக் கேட்ட பாம்புபோல நடுங்கி பெண்களுக்குத் தக்க புருஷனைத் தேடிக் கலியாணம் செய்விப்பது பெற்றோர்களுடைய பொறுப்பேயன்றிப் பெண்களுடைய இஷ்டமல்லவென்று சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. ஆதலின், இப்போது இம்மகள் கொண்டிருக்கும் கொள்கையை மாற்றி, மற்றொரு நாயகனையே தேடவேண்டுமெனத் தீர்மானித்து அதை அம்மகளுக்கு அறிவித்தார். அதுகேட்டு அந்தக் குணபூஷணி, ஸ்வாமி! ஸத்தியவானே அடியாளுக்கேற்ற பர்த்தாவென்று முதலில் மனதினால் வரித்துவிட்டிருக்க, இப்போது அதைவிட்டு மறுபடி மற்றொருவனை எப்படி வரிக்கிறது என்று விண்ணப்பம் செய்துகொண்டாள். அசுவபதி, என் அருமை மகளே! ஸத்தியவான் உனக்கு எவ்விஷயத்திலும் ஒப்பற்ற கணவனென்பதற்கு ஐயமில்லை; ஆனாலும், ஆயுள் குறுகிப் பிறந்தானே. இன்னும் ஓராண்டளவே அவன் உயிரோடிருப்பான். அதற்குப் பிறகு நீ கணவனை இழந்த கைம்பெண்ணாகவல்லவோ வருந்தவேண்டும்! பெண்களுக்குப் புருஷனே பூஷணமாம். புருஷன் இறக்கும்போது பெண்சாதிகளுக்குள்ள எல்லாச் சிறப்பும் அவனோடு கூடவே போய்விடும். அப்படி இருக்கையில், இந்தக் கல்யாணத்தை நான் எப்படிச் சம்மதிப்பேன்! சிறுமகளானதுபற்றி உன்னுடைய நன்மையைக் கூட நீ உணராதிருக்கிறாய். பெண்கள் பசுமையாய் இருந்தால் பெற்றோருக்குப் பெருமை உண்டாகும்; பெண்கள் வருந்தினால் அவர்கட்கும் வருத்தமே. ஆனதுபற்றியே, பெற்றோர் பெண்களுக்குத் தக்க கணவனைத் தேடிக் கலியாணம் செய்விக்கின்றனர். அப்படியிருக்க, உடனே இறந்து போகிறவன் என்று தெரிந்திருக்க, அவனுக்கு எப்படி மகளைக் கொடுக்கலாம். ஆதலின், மாதா பிதாக்களுக்கு மனவருத்தமுண்டாக்கத்தக்க விஷயத்தில் வீண் பிடிவாதம் பிடித்துப் பெற்றோர் உரையை எதிர்க்காதே. "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை." உனக்குச் சுயம்வரமே செய்துகொள்ள வேண்டுமென விருப்பமுளதாயின், இவ்விந்து தேசத்திலுள்ள இளவரசர் அனைவரையும் இவ்விடத்திற்சேரவழைப்போம். அவர்களுள்



உன் மனதுக்கேற்ற மன்னவனைத் தேர்ந்தெடுத்துக்கொள். வாழ்நாள் குறுகியவனான ஸத்தியவானைமட்டும் இனி நினையாதே என்றான்.

அதுகேட்டு ஸாவித்திரி, ஸ்வாமி! தேவரீர் இவ்வண்ணம் உபதேசிப்பது தகுதியன்று. ஒருவனுக்கு ஒன்று கொடுக்கிறேன் என்பதும், ஒருவனைக் கணவனாக வரிப்பதும் ஒரே தரம் செய்யவேண்டுவதேயன்றி மாறி மாறிப் பலதரம் செய்யத் தக்கதல்ல. தீர்க்காயுவாகட்டும் அற்பாயுவாகட்டும், குணவானாகட்டும் நிர்க்குணவானாகட்டும், முதலில் நான் எவனை ஒருதரம் வரித்தேனோ, அவனே எனக்குக் கணவன். அவனை விட்டு மற்றொருவனை நான் ஒருபோதும் வரியேன். முதலில் ஒரு கார்யத்தை மனதினால் நிச்சயித்து, பின்பு அதை வாயினாற் சொல்லி, பிறகு அதைச் செய்வதே உலக வழக்கம். ஆதலின், நான் மனதிற் செய்த நிர்ணயத்தை மாற்றுவது நியாயமன்று. நான் கைம்பெண்ணாகி வருந்த வேண்டுமென்பது என் தலைவிதியாயின் அதை மறுபடியும் மாற்ற யார் தாம்? இவ்வுலகில் ஒன்றும் நித்தியமானதன்று. இப்பூமியில் பிறந்தவன் இன்றைக்காயினும் நூற்றாண்டுக் கழிந்தாயினும் இறக்க வேண்டியவனே. அவன் இறப்புக்குத் தப்பமுடியாது. அப்படியிருக்க, அதற்கு நாமேன் பயப்படவேண்டும். கடவுள் இட்டபடியே நடக்கும் என்று கூறினாள். அதைக்கேட்ட நாரதர் ஸந்தோஷமடைந்து, ஏ ராஜனே! இப்புண்யவதி ஸத்தியவானிடத்திலேயே உறுதியான அன்புகொண்டிருக்கிறாள். இவளுடைய உறுதியினின்றும் இவள் உள்ளத்தைத் திருப்ப யாராலும் முடியாது. ஸத்தியவானைப்போல ஸத்திய புருஷன் இப்பூவுலகில் வேறு ஒருவருமில்லை. ஆகையால், அவருக்கே இம்மகளைக் கல்யாணம் செய்விப்பது எனக்கு யுக்தமாகப் புலப்படுகிறது. இக்குணவதிக்கு ஸர்வாபீஷ்டமும் உண்டாவதாக என்று ஆசீர்வதித்து ராஜனிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அரசன் மற்றொன்றும் தோன்றாமல் நாரத பகவான் சொல்லிப்போனபடியே ஸாவித்திரிக்கு விவாகம் செய்விக்க நிச்சயித்து, அதற்கு வேண்டிய ஸகல கார்யங்களையும் செய்துகொண்டு மந்திரி முதலிய தன் பரிஜனங்களோடும் பிராமணர் புரோகிதர் முதலானவர்களோடும் பெண்ணை அழைத்துக்கொண்டு நல்ல சுப முகூர்த்தத்தில் பிரயாணப்பட்டு தியுமத்ஸேனனுடைய தபோவனம் போய்ச் சேர்ந்தான். அந்த ஆசிரமத்திலே தியுமத்ஸேன மகரிஷி இர

ண்டு நேத்திரங்களும் இல்லாமல் அந்தகராய் தர்ப்பாசனத்தில் உட்கார்ந்திருக்கக் கண்டு அவரைத் தண்டனிட்டு, தான் வந்தகாரியம் இன்னதென்பதையும் விண்ணப்பம் செய்தான். அதைக்கேட்டு அவ்வரசன் ஸந்தோஷமுள்ளவரானார்.

விவாகத்திற்கு வேண்டிய சன்னாகங்கள் எல்லாம் செய்யப்பட்டன. அந்தத் தபோவனத்திலுள்ள ராஜரிஷிகள் பிராமணர்கள் முதலிய பலரும் வந்திருந்து ஸாவித்திரிக்கும் ஸத்தியவானுக்கும் விவாகத்தை வெகுச் சிறப்பாக நடப்பித்தனர். இவ்வண்ணம் தன் மகளை அவளுடைய மனோரதப்படியே ஸத்தியவானுக்கு விவாகஞ்செய்து கொடுத்துவிட்டு அசுவபதி தன்னிடம் போய்ச் சேர்ந்தான். சகல நற்குணங்களும் அமைந்த அக்குலமகளை மணம் பூண்டு ஸத்தியவானும் மனமுவந்தனன். தானே வேண்டி விரும்பிய வித்தகனை ஸத்தியவானுக்கு மணமாலை சூட்டிய ஸாவித்திரியும் அகமகிழ்ந்து, தன் தந்தை அவ்விடம்விட்டுப் போனவுடனே தானும் தன் மாமியைப்போலவே தபோ வேடம்பூண்டு கணவன் மாமி மாமன்மார்களை அவரவர்கட் கேற்றபடி உபசாரம் செய்து பூசித்து வந்தனள். இவ்வண்ணமே சிலகாலம் அவர்கள் அந்தத் தபோவனத்தில் சுகமாக வாழ்ந்துகொண்டு இருந்தார்கள்; ஆயினும், நாரதமுனிவர் உரைத்த உரைமட்டும் மறவாமல் எப்போதும் ஸாவித்திரியினுடைய இருதயத்தில் இருந்துகொண்டே யிருந்தது.

நாரதர் சொன்ன வார்த்தையை நிமிஷமும் மறந்துவிடாமல் இத்தனை நாளாயினவென்று நாள்தோறும் விடாமல் ஸாவித்திரி கணக்கிட்டுக் கொண்டுவந்தாள்; அந்த ஒரு வருஷமும் வெகுவாய்க் கழிந்துபோயிற்று. நாரதர் சொன்ன கணக்குப்படி, ஸத்தியவான் இறக்க மூன்றே நாள் மிகுந்திருந்தது. அது தெரிந்து ஸாவித்திரி அன்றையதினமே மூன்று நாளில் நிறைவேற்றவேண்டிய மிகக் கொடிய நோன்பு ஒன்றைக் கைக்கொண்டாள். அதுகண்டு அவளுடைய மாமி மாமன் முதலியோர் இத்தன்மையான கொடிய நோன்பைத் துவக்குவது உன்னைப்போன்ற சிறு பெண்களுக்கு ஏற்ற தல்லவென மறுக்க, அம்மகள் நான் ஏதோ ஒரு இன்றியமையாத காரியத்திற்காக இந்நோன்பு நோற்கலானேன். ஆதலால் இதற்கு நீங்கள் இடையூறு செய்யாதிருக்கப் பிரார்த்திக்கிறேனென வேண்டிக்கொண்டு, அந்த விரதத்தை நியமப்படியே நடத்தி வந்



தாள். ஆகாரம் இல்லாமையால் அவளுடைய சரீரம் நாளுக்கு நாள் பார்க்க மிகவும் கிருசமாய்ப் போயிற்று. மூன்று நாள் இராத்திரி அவள் நித்திரை கொள்ளவேயில்லை. உதயமானவுடனே நமது நல்வாழ்க்கைக்கு நாசம் உண்டாகப்போகிறதேயென்று சிந்தை கலங்கினவளாய்க் கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்தாள். மறுநாள் உதயமானவுடனே அவள் எழுந்து ஸ்நாந ஸந்தி முதலிய காலைக் கடன்களைச் செய்து முடித்துக்கொண்டு அந்த தபோவனத்திலுள்ள மாமி மாமன் முதலிய பெரியோர்களனைவரையும் ஒவ்வொருவராய்த் தொழுது வந்தாள். அப்போது, அவர்கள் நீ தீர்க்க சுமங்கலியாக வாழக்கடவையென வாழ்த்தியது கேட்டு, இப்பெரியோர் உரைபொய்யாகாதிருக்கக் கடவதென்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு தனிப்புறமாய் உட்கார்ந்து நாரதர் சொன்ன நிமிஷம் எப்போது வருமோவென்று விசாரமுற்றிருந்தாள். அதுகண்டு அவளுடைய மாமி மாமன்மார் அவளருகே சென்று, பெண்ணே உன் மனோரதப்படி நிர்விக்கனமாக நோன்பு நோற்று முடித்தாயே; பாரணை செய்ய வேண்டிய பொழுதாயிற்று; போஜனத்துக்கு எழுந்துவாவென்று வேண்ட, அவள் இன்று சூரியாஸ்தமயமான பிறகு தான் பாரணை செய்ய வேண்டுமென நான் ஸங்கற்பம் செய்து கொண்டேனாதலால் இது பாரணை செய்யச் சமயமல்லவென மறுமொழி கூறினாள்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் ஸத்தியவான் வழக்கப்படியே காய் கிழங்கு கட்டை முதலியவை வெட்டிக்கொண்டு வருவதற்காக அன்று மாலை வேளையில் கோடரியை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு வனத்திற்குப் போகப் புறப்பட்டார். நாரதமுனிவர் சொல்லிய சமயம் நெருங்கி அதற்காகவே போகின்றனரோ என்னவோவென மனதில் அச்சங்கொண்டு, இத்தருணத்தில் இவரைத் தனியே செல்லவிடுவது சரியல்லவென நிச்சயித்துத் தானும் அவனுடன் புறப்பட்டாள். அவளைப் பார்த்து ஸத்தியவான், என் கண்மணியே! நீ ஒருநாளும் காட்டுக்குப் போனவளன்று. காட்டுவழியில் நடப்பது வெகு கடினமாயிருக்கும். மேலும், இப்பொழுது உபவாஸத்தால் மிக்க இளைப்புற்றிருக்கின்ற நீ உன்மலரடிகள் நோவ எப்படி நடந்து வரமாட்டுவாய்? இன்று வேண்டாமென மறுக்க, அவள் எத்தனை நாள் உபவாஸமிருந்தாலும் எனக்குச் சிறிதும் இளைப்பில்லை. இப்பொழுது காடுகளைப் போய்ப் பார்க்க நான் அதிக ஆவல் கொண்டிருக்கிறேனாதலால், என்னைத் தடுப்பது தகுதியல்லவென்று

அவரை வேண்டினர். அவர், ஆனால் நீ உன் மாமியோடு சொல்லாமல் வருவது சரியல்ல. அவளிடம் நியமனம் பெற்றுக்கொண்டு வாவென்றார். அப்படியே அவள் மாமியண்டைபோய்த் தண்டனிட்டு, என் கணவனோடுகூடக் காட்டுக்குப் போய்வர அடியாளுக்கு விடைகொடுக்க வேண்டுமெனவேண்டினள். ஆயின் உன் இஷ்டப்படியே போய்ப் பொழுதுபோவதற்குள் வீடு வந்து சேர் என்றாள். அது கேட்டு ஸாவித்திரி சந்தோஷமடைந்தவள் போலச் சிரித்த முகமாகவே கணவனோடு களித்துக்கொண்டு போனாளாயினும், எந்த நிமிஷத்தில் எப்படியாகுமோவென்று மனதினுள் துக்கித்துக்கொண்டேயிருந்தாள். ஸத்தியவானும் வழியிலுள்ள விநோதக் காட்சிகளை அவளுக்குக் காட்டி உல்லாஸமாகப் பேசிக் களித்துக்கொண்டே போனான்.

ஸத்தியவான் தான் குறித்த காட்டிற்சென்று அங்கு தன் பாரியையோடுகூட வேண்டிய பழங்கள் சேர்த்து அவற்றை அவள் கையில் கொடுத்துவிட்டுக் கட்டைகளை வெட்டக் கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு பெரிய விருக்ஷத்தில் ஏறினான். ஏறி அங்கோருலர்ந்த கிளையை வெட்டிக்கொண்டிருக்கையில், அவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்துத் தலைநோயுண்டாகிச் சகிக்கக் கூடாமற் போயிற்று. அதனால், அவன் உடனே மரத்தினின்றும் இறங்கி மனையாட்டியண்டை வந்து, பெண்ணே! பட்ட வருத்தத்தால் எனக்குத் தலைநோயுண்டாயிற்று; மிகவும் இளைப்பாயிருக்கின்றது; நிற்கத் தள்ளவில்லை. சற்றுப் படுத்துக்கொள்ள வேண்டுமென்றான். அது கேட்டு ஸாவித்திரி, ஐயோ! இவர்க்குக் காலம் கிட்டிற்றே யென்று மிக்க திகில்கொண்டு, ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, அவன் சிரசைத் தன் மடியில் வைத்துப் படுக்கச்செய்து, அவர்க்கு ஏற்றபடி உபசாரம் செய்தாள். ஆயினும், நிமிஷத்துக்கு நிமிஷம் அவனுக்குத் தேகத்தில் உபத்திரவம் அதிகமாகிக் கொண்டேவந்தது. எவ்வளவு உபசாரம்செய்தாலும் அவனுடைய நோயைத்தீர்க்க அவளாளாகவில்லை; சீக்கிரமே அவனுக்குப் பிரக்ஞை தப்பிப்போயிற்று. நாரதமுனிவர் உரைத்துப்போன உரையை எப்போதும் மனதிற்கொண்டிருந்த அவ்வுத்தமி அவர் குறித்த காலம் வந்துவிட்டது என்று எண்ணினாள்.

இவ்வண்ணமிருக்க இரண்டொரு நிமிஷத்தில், சிவந்த ஆடையுடுத்துச் சூரியன்போலப் பிரகாசிக்கின்ற ஒரு புருஷன் கண்களில்



நெருப்புப் பொறிபறக்கக் கயிறுங் கையுமாய்ப் பயங்கரமான தோற்றத்தோடு ஸத்தியவானுடைய பக்கத்திலே வந்து அவனையே நோக்கி நிற்கக் கண்டாள். அவரைப் பார்த்தவுடனே ஸாவித்திரி தன் மடியிலிருந்த ஸத்தியவானுடைய சிரசை மெல்ல எடுத்துத் தரையிலே விட்டுவிட்டு எழுந்து, மனதினில் நடுக்கமுற்றிருந்தாள். ஆனால், அப் புதிய புருஷனைப் பார்த்துக் கைகூப்பிக்கொண்டு ஒரு வார்த்தை சொன்னாள். அதாவது, ஸ்வாமி! தேவரீருடைய திருமேனியைப் பார்க்கையில் மானிடராகத் தோன்றவில்லை. தெய்வமென்றே தோன்றுகிறது. ஆதலின், தேவரீர் யாரோ? அடியாளுக்கு விளங்கச்சொல்ல வேண்டுகிறேன். இங்கு வந்த காரியம் யாதென்று வினவினாள். அது கேட்டு அந்த மனிதர், நீ கற்புநிலைதவறாத குணபூஷணியாயும் தவப்பெருமை பெற்றவளாயுமிருப்பதால், நான் உனக்குப் பிரத்தியக்ஷமாகி உன்னுடன் பேசுகின்றேன். என்னைத்தான் யமனென்பார்கள். உன்னுடைய பர்த்தாவான இந்த ஸத்தியவானுக்கு வாழ்நாள் குறுகி முடிவுகாலம் வந்துவிட்டது. ஆதலால், இவனுடைய உயிரைப் பிடித்திழுத்துக்கொண்டு போக வந்தேன் என்றுரைத்தது கேட்டு, ஸாவித்திரி, சாமகாலத்தில் உயிரைக்கொண்டுபோக தேவரீருடைய தூதர்களே வருகிறதென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படியிருக்க, இப்பொழுது தேவரீரே நேராய் எழுந்தருளினதற்குக் காரணமென்னவென்று வினவினாள். அதற்கு தருமதேவன், உன்னுடைய பர்த்தாவான இந்த ஸத்தியவான் தன் பெயருக்கேற்றபடியே ஸத்தியம் தவறாதவன். தர்மம் தவம் முதலிய சகல நற்குணங்களும் நிறைந்த மகா புருஷன். ஆதலால், இவன் என்னுடைய தூதர்களால் கொண்டுபோகத் தக்கவனல்லன். ஆனதுபற்றி, நானே நேராக வந்தேனென்றுரைத்தார். உடனே ஸத்தியவானுடைய சரீரத்தினின்றும் கட்டைவிரல் அளவான ஜீவனைப் பாசத்தாற் கட்டியிழுத்தார். அந்த நிமிஷமே ஸத்தியவானுடைய சரீரம் மூச்சடங்கி மேனியும் வாடிச் சிறிதும் செய்கையற்றுப் பார்க்க விகாரமாகிவிட்டது. பின்பு, தர்மதேவன் அதைக் கட்டி இழுத்துக் கொண்டு தென்திசை நோக்கிச் சென்றார்.

அதைக் கண்ணுற்றிருந்த பதிவிரதையான ஸாவித்திரியும் புலம்பிக்கொண்டு தர்மதேவனைப் பின்தொடர்ந்தோடினாள். அவனைப் பார்த்து யமதர்மராஜன் பெண்ணே! உன் புருஷனுக்கு நீ வழிகொண்டு விட்டது போதும். ஏன் வீணாசைகொண்டு வருந்துகிறாய்?

திரும்பிப்போய் இனி இவர்க்கு நடத்தவேண்டிய உத்தரக்கிரியைகளுக்கு உரிய வியாபாரத்தைப் பார் என்று சொன்னார். இதுகேட்டு ஸாவித்திரியானவள் கண்ணும் கண்ணீருமாய், என்னுடைய நாயகனை யார் எங்கே கொண்டு போகிறார்களோ, அல்லது அவரே சுயமாய் எவ்விடத்திற்குச் செல்கின்றனரோ அவ்விடத்துக்கு அவரோடு கூடப் போவதே என்னுடைய கடமை. இதுவரையில் நான் அனுஷ்டித்து வந்த தவத்தினாலும், பெரியோர்களுக்குச் செய்த பூஜையாலும், பர்த்தாவினிடத்திலிருந்த பக்தியாலும், தேவரீருடைய அனுக்கிரகத்தாலும் நான் என் பர்த்தாவைத் தொடர்ந்துவர யாதொரு தடையுமில்லை; இந்நேரம் பேசிப்பழகித் தேவரீர் அடியாளுக்கு மித்திரராயினதுபற்றி இப்போது ஒரு விண்ணப்பம் செய்கிறேன்; உலகத்தில் தர்மத்திற்கு மிஞ்சினது மற்றொன்றுமில்லை; அந்த தர்மமே தேவரீராய் விளங்குவதால் தேவரீருக்கு அசாத்தியமான தொன்றுமில்லை. ஸத்தியவானுக்குப் பதில் அடியாளைப் பிடித்துக் கொண்டு அவரை விட்டுவிட வேண்டுகிறேனென்றாள். அதைச் செவிசாற்றிய யமதர்மராஜன், பெண்ணே! இப்பேச்சைக்கேட்டு நான் அதிக சந்தோஷமடைந்தேன். ஸத்தியவானுடைய ஜீவனொன்று தவிர மற்றென்ன வரங்கள் வேண்டுமானாலும் கேள். நான் கொடுக்கக் காத்திருக்கிறேன் என்று உரைத்தார். அதைக்கேட்ட ஸாவித்திரி, ஆயின் அடியாளுடைய மாமனார் ராஜ்யம் இழந்து இரண்டு நேத்திரங்களும் தெரியாமல் அரணியத்தில் ஓர் ஆச்சிரமத்திலே வருந்துகிறார். அவர்க்கு கண்கள் நன்றாய்த் தெரிந்து தேகத்தில் நல்ல வடிவழகும் வலிமையும் உண்டாகும்படி அனுக்கிரகிக்கவேண்டும். இரண்டாவது, என் மாமனார்க்குக் கைசோர்ந்துபோன ராஜ்யம் மறுபடியும் கிடைத்து அவர் தருமநெறி தவறாமல் அரசுசெலுத்திக்கொண்டு வரும்படி தேவரீர் திருவுளம் இரங்கவேண்டும். மூன்றாவது, என்னுடைய பிதாவானவர் பிள்ளையில்லாமல் வெகுகாலமாக வருந்திக்கொண்டிருக்கிறார். அவருடைய குலம் அழிந்து போகாமல் எந்நாளும் தழைத்தோங்கும்படி அவர்க்குக் குமாரன் உண்டாகத் தேவரீர் கிருபை செய்தருள வேண்டுமென்று வணங்கி வேண்டினாள். அவ்வண்ணமே உன் மனோரதம் பூர்த்தியாகக்கடவது. நீ நெடுந்தூரம் நடந்துவரவேண்டாம். திரும்பிப்போவென்று அவளுக்குரைத்துத் தர்மதேவன் அப்புறம் போய்விட்டான். ஆனால், அவள் திரும்பாமல், என் மனதுமட்டும் நெடுந்தூரம் ஓடுகிறதேயொழிய நான் பர்த்தாவினுடைய ஸன்னி



தானத்தைவிட்டு அதிகதூரம் எங்கும் போகவில்லையென்று சொல்லிக்கொண்டு அவருடனே சென்றாள். சிறிதுதூரம் போனபின்பு எமதர்மராஜன் மறுபடி திரும்பிப் பார்க்க, ஸாவித்திரி இன்னும்விடாமல் தொடர்ந்து வருவதுகண்டு பெண்ணே! நான் என்ன சொல்லியும் கேளாமல் நீ தொடர்ந்து ஓடி வருவதற்குக் காரணமென்னவோ தெரியவில்லை; திரும்பி வீட்டுக்குப் போவென்று சொன்னது கேட்டு அவள் கண்ணுங்கண்ணீருமாய் என் பிராண நாதனுடைய சமீபத்திலிருக்கும் எனக்கு இளைப்பு ஒன்றுமில்லை. என் கணவனைத்தவிர என்னைக் காப்பவர் உலகத்தில் வேறு யாருளர்? குல ஸ்திரீகளுக்குத் தெய்வம் புருஷனைத்தவிர வேறு யாருமில்லை. ஆதலால், என் பிராண நாதன் இவ்வுலகத்தை விட்டுப் போகும் போது நான் இங்கிருந்து ஆவதென்னவென்று உடல் குலுங்கப் புலம்பினாள்.

அதுகேட்டுத் தருமதேவன் அப்பெண்மணியினிடத்தில் திருவுளமிரங்கி, ஓ பெண்கள் நாயகமே! உன்னுடைய வாய்மொழியைக் கேட்டு என் மனம் உருகுகின்றது; உனக்கு வேண்டிய வரத்தைக் கேள், கொடுக்கிறேனென்று சொல்ல, அவள் துக்கத்தால் வாயைத் திறவாமல் சிறிதுநேரம் சும்மா நின்றுகொண்டிருந்தாள். மறுபடியும் தர்மராஜன் வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்க, ஸத்தியவானுக்கு அடியாளிடத்தில் மிகப் பராக்கிரமசாலிகளான நூறு குமாரர்கள் பிறக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டுமென்று அவள் வரங்கேட்டாள். அதைச் செவிகொண்ட தருமதேவன் சிறிதுநேரம் ஒன்றும் தோன்றாமல் பிரமித்து நின்று பிறகு அவளைப்பார்த்து, அப்படியே ஆகக்கடவது. இப்பொழுது நீ வெகுதூரம் வந்துவிட்டாய். திரும்பிப் போவென்று சொல்லிவிட்டுப் போயினார். அப்போதும் ஸாவித்திரி அவரை விடாமல் அவர் பின்னேயே சென்றாள். சிறிது தூரத்துக்கப்பால் தர்மராஜன் ஸாவித்திரி இன்னும் ஓடிவருவதுகண்டு வீடுபோய்ச் சேரும்படி சொன்னார். அவள், இவ்வுலகத்தில் எல்லாமறிந்த பெரியோர்க்குத் தெரியாததொன்றுமில்லை. அவர்களுடைய ஸத்தியத்தாலேயே இவ்வுலகமெல்லாம் கட்டுண்டு நிற்கிறது. அப்படிப் பட்டவர்களுடைய அனுக்கிரகம் ஒருபோதும் வீண்போகாததாகையால் அநாதையான அடியாளைக் காத்தருள வேண்டுகிறேன் என்றாள். அதைச் செவிசாற்றிய தர்மதேவன், உன்னுடைய வார்த்தையைக் கேட்கக்

கேட்க எனக்கு அதிக ஆனந்தமாகிறது. உனக்கு இஷ்டமான வரத்தை வேண்டிக்கொள் என்று சொன்னார்.

ஸாவித்திரி, அடியாளுக்கு என்ன வரமிருக்கிறது ? ஸத்தியவானுடைய உயிரைத் தவிர எனக்கு வேண்டுவது மற்றொன்றும் இல்லை; மேலும், அவருக்கு நூறு பிள்ளைகள் பிறக்கும்படி நீங்கள் முன் அனுக்கிரகித்தது அவர் பிழைத்தெழாமல் எப்படி பரிபூரணமாகும். ஆதலின், அவரைப் பிழைப்பூட்டித் தேவரீருடைய திருவாக்கை யதார்த்தமாக்க வேண்டுகிறேன். கணவனை விட்டுப் பிரிந்து எந்தச் சுகமும் அனுபவிக்க எனக்கு இஷ்டமில்லை. பர்த்தாவைவிட்டுத் தேவலோகம் போகவும் இஷ்டமில்லை. கட்டின கணவனில்லாமல் எந்தப் பெருமைதான் வந்தாவதென்ன ? பிராணநாதன் இறந்தபிறகு நான் உயிரோடிருக்கவும் வேண்டுமா ? ஆதலால், தேவரீரையே சரணமாக அடைந்தேன். காத்தருள வேண்டும் ஸ்வாமி என்று ஆராத்துயரத்தோடு அழுது வேண்டினாள். அதுகண்டு தர்மராஜன் கற்பு நிலையில் ஒப்புயர்வில்லாத உத்தமி இவளைத் தவிர உலகத்தில் மற்றொரு பெண்டிரில்லையென மனமகிழ்ந்து திருவுளம் இரங்கித் தான் கால பாசத்தால் கட்டியிருந்த ஸத்தியவானுடைய ஜீவனை அவிழ்த்துவிட்டு பெண்கள் நாயகமே! இனி உனக்கு ஒரு குறையுமில்லை; கணவனோடுகூட உன் மனோரதப்படியே நூறு மக்களைப் பெற்று நீதிமுறை தவறாமல் உலகத்தைக் காத்துக்கொண்டு சுகமாக நெடுநாள் வாழ்ந்திருக்கக் கடவையென்று சொல்லி ஆசீர்வதித்து அவளை அனுப்பி விட்டுப் போயினர்.

இவ்வண்ணமாகத் தான் கருதிய வரங்களைப் பெற்றுக்கொண்டு ஸாவித்திரி தேவி தர்மதேவனைப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு தன் புருஷனுடைய பிரேதம் படுத்திருக்கும் இடம்வந்து சேர்ந்தாள். சேர்ந்து முன்போலவே ஸத்தியவானுடைய சிரத்தை மடியிலெடுத்துவைத்து உபசாரம் செய்துகொண்டிருந்தாள். அப்படியிருக்கச் சிறிதுநேரத்தில் அவன் கொஞ்சம் களைதெளிந்தவன்போலக் கண்விழித்துப் பார்த்துப் பிரமித்துப் பெண்சாதியை நோக்கி, கண்மணியே! நான் நெடுநேரம் தூங்கிப்போனேனே ! இந்நேரம் நீ என்னை எழுப்பாமலிருந்ததேன்? நீ மாத்திரம் ஒண்டியாய் உட்கார்ந்திருந்தாயே. முதலில், நான் தலைநோய்கொண்டு மரத்தினின்றும் இறங்கி உன் மடியில் படுத்துக்கொண்டது வரையில் எனக்கு



நன்றாக நினைவிருக்கிறது. அதற்குப்பிறகு, யாரோ ஒரு கறுத்த புருஷன் தடியும் தாம்புமாய் இவ்விடம் வந்து என்னைப் பிடித்திழுத்தாய் நினைவுவருகிறது; அது கனவோ அல்லது வாஸ்தவமோ தெரியவில்லை. நீ அறிந்திருந்தால் தெரியச்சொல் என்று கேட்டார். ஸாவித்திரியானவள் அயர்ந்து நித்திரை செய்பவரை எழுப்புவது கூடாதென்று நான் உங்களை எழுப்பவில்லை; அது என்மேல் குற்றமாயின் மன்னிக்கவேண்டுகிறேன். மற்றச் செய்தியெல்லாம் நடந்தபடி நாளைக்காலையிலே விண்ணப்பம் செய்கிறேன்; இராத்திரி நேரமாகின்றது. இந்நேரம் ஆச்சிரமத்திலே பெரியோர் நம்மைக் காணாமல் மிகவும் வருந்திக்கொண்டிருப்பார்கள். உங்களுக்குத் தலைநோய் நீங்கி ஆச்சிரமத்துக்கு எழுந்துபோகச் சக்தியிருக்குமாயின் எழுந்திருங்கள்; மெல்ல நடந்துபோவோமென்று சொல்ல, அப்படியே ஸத்தியவான் மெல்ல எழுந்து ஸாவித்திரியின் தோளை ஊன்றிக்கொண்டு கண் சுழலமிடக் கால்தள்ளாட வெகு வருத்தத்துடன் மெதுவாக நடந்து சென்றான்.

இவர்கள் இப்படியிருக்க, ஆச்சிரமத்தில் அந்தகராயிருந்த ஸத்தியவானுடைய பிதாவுக்கு நேத்திரம் நன்றாய்த் தெரியலாயிற்று. அதனால் அவர் நெடுநாளாய்க் காணாதிருந்த பல காட்சிகளையும் கண்டு களிப்படைந்தாராயினும், இராத்திரி நெடுநேரமாகியும் காட்டுக்குப்போன குமாரன் திரும்பிவராதது கண்டு மிக்க விசாரமுற்றவராய்த் தன் பெண்ஜாதியுடன் அவரை எங்கும் தேடத் தலைப்பட்டார். அந்தத் தபோவனத்திலிருந்த மகரிஷிகள் பலரும் அவர்கள் வருந்துவதைப் பார்த்துப் பலவிதமாய்ச் சமாதானம் சொன்னார்கள். என்ன சொல்லியும் கேளாமல் அத்தனை பேரோடுங்கூடத் தேடித் திரிந்தார்கள். அந்த சமயத்தில் ஸாவித்திரியோடுகூட ஸத்தியவான் மெதுவாய் அவ்வாச்சிரமம் வந்துசேர்ந்தான். அவர்களுடைய அடியோசையைக் கேட்டவுடனே அங்கிருந்த அனைவரும் ஓடிவந்து ஸத்தியவானைக் கட்டி முத்தமிட்டுக்கொண்டு யாதொரு தீங்குமின்றிச் சுகமாய் வந்தீர்களாவென்று நல்வரவு விசாரித்துக் களிப்பு அடைந்தார்கள். பிறகு, அங்கு வந்திருந்த முனிவர்களெல்லாம் ஸாவித்திரியினிடத்தில் ஏதோ மகிமையிருக்கின்றதெனத் தெரிந்து, நீங்கள் இந்நேரம் தாமதித்து வந்ததற்குக் காரணமென்ன? அந்தகராயிருந்த இம்மகரிஷிக்குத் திடீரென்று கண்தெரிந்ததற்கு நிமித்தமென்ன? இது உங்களுடைய மகிமையாலேயே நேர்ந்ததெனத் தோன்றுகின்

றது; அதையும் தெரிந்தால் சொல்லுங்களென்று கேட்க, ஸாவித்திரியானவள், முன் நாரதமுனிவர் சொன்ன சொல் முதலாய் நடந்த வர்த்தமானங்க ளெல்லாவற்றையும் உரைத்தாள். அதுகேட்டு, அனைவரும் அவளுடைய பெருமையைப் பார்த்து மிக்க மனமகிழ்ந்து அவளை வேண்டியபடி ஆசீர்வதித்துத் தத்தம் ஆச்சிரமத்துக்குச் சென்றார்கள்.

அன்றையதினம் சதுர்த்தசியாதலால் தன் கணவன் பிழைத்தெழுந்த பெருமைக்காகச் சதுர்த்தசி தோறும் ஸாவித்திரி விரதம் கொண்டிருந்தாள். அது காரணமாகவே இத்தேசத்தில் இப்போதும் சில பெண்டீர் ஸாவித்திரி சதுர்த்தசியென்று சொல்லி அன்றைய தினம் விரதம் கொண்டாடுகின்றனர்.

மறுநாள் உதயமானவுடனே இந்தச் செய்தி அத்தபோவன மெங்கும் பரந்து அனைவரும் ஸாவித்திரியைப்பற்றிப் புகழலானார்கள். அப்படியிருக்கையில் சால்வ தேசத்திலிருந்து மந்திரி முதலியபரி ஜனங்களெல்லாரும் ஓடிவந்து, உங்களுடைய ராஜ்யத்தை அநியாயமாய் அபகரித்துக்கொண்ட பகைவனை நாங்கள் அடித்துத் துரத்தி விட்டோம். நீங்களே அத்தேசத்தை இனி ஆளவேண்டு மெனக் குடிகளும் ஆவல்கொண்டிருக்கிறார்கள். ஆதலின், நீங்கள் உடனே நகரத்துக்கு வந்து அரசாட்சியைக் கைக்கொள்ளவேண் மென்று தியுமத்ஸேன மகாராஜனைப் பிரார்த்தித்தார்கள். அவ்வரசனும் அதற்கு உடன்பட்டு நகரத்துக்குச் சென்று பட்டந்தரித்து தன் குமாரனை ஸத்தியவானோடு வெகு மேன்மையாய் அரசுசெலுத்திவந்தான். ஸத்தியவானும் அருமைப் பெண்டாட்டியான ஸாவித்திரியினிடத்தில் நூறுமக்களைப் பெற்றுத் தந்தை காலத்துக்குப் பிறகு தானே குடிகளைக் காத்து வெகு மேன்மையாக நெடுநாள் வாழ்ந்திருந்தான்.

---

நமது குடும்பம் நம்தேசத்துக்கு ஒரு ஹிருதய ஸ்தானமாகும். குடும்பமானது மனிதனால் உண்டாக்கப்பட்டு அமைக்கப்பட்டதல்ல; பரம் பொருளின் காருண்யத்தால் ஏற்பட்டதாகும்.

* * * *

மானிட சக்தியால் குடும்பத்தை அழிக்க முடியாது; அது ஒரு தேசத்தைப் போன்றது.

# NEW MOTHER

## A Story.

## புதுத்தாயார்

கும்பகோணத்திலுள்ள பக்தபுரி அக்கிரகாரத்தில் குப்புவய்யர் என்னும் ஒரு வயோதிகப் பிராமணர் வசித்துக்கொண்டிருந்தார். அவருக்குப் பூர்வீகம் கும்பகோணத்துக்கு வடக்கேயுள்ள பூஞ்சோலை என்ற ஒரு சிறு கிராமம். அவர் மழநாட்டுப் பிரஹசரணத்தைச் சேர்ந்தவர். கிராமத்தில் ஸொத்துக்கள் ஒன்றுமில்லாதவராதலால் பட்டணம்போய்ப் பிழைக்கலாமென்று கும்பகோணம்வந்தார். அங்கு பல பெரிய மனுஷர்களின் ஆதரவில் தமது ஒரே பிள்ளையை டவுன் ஹைஸ்கூலில் சம்பளமில்லாமல் சேர்த்தார். தாம் இஞ்சுவிருத்தி செய்து அன்றாடு சேர்ந்த அரிசியை வீட்டில் கொண்டுவந்து சேர்ப்பது வழக்கம். அவருடைய ஸம்ஸாரமாகிய மங்களம்மாள் மிகச் சிராகக் குடித்தனம் செய்துகொண்டு ஸுசீலியாய் குடும்ப பாரத்தை நிர்வகித்துக்கொண்டு வந்தாள். இவர்களின் ஏழ்மைத்தனத்தைக் கண்டு அக்கம் பக்கத்துள்ள ஜனங்கள் இவர்களை மிகக் கேவலமாக இகழ்வார்கள். குப்புவய்யரும் மங்களம்மாளும் கடவுள் செயலென்று தாங்கள் ஒன்றும் பேசமாட்டார்கள். இப்படியாகப் பத்து வருஷங்கள் கழிந்தன. அவர்களின் ஒரே பிள்ளையாகிய ராமஸாமி என்பவன் கிளாஸில் எல்லாம் முதன் முதலாகத் தேறி உபாத்தியாயர்களிடத்திலும் மற்றும் பிரபுக்களிடத்திலும் நல்ல பெயர் எடுத்துவந்தான். ஒரு வகுப்பிலும் தவறாமல் பையனுக்கு பி. ஏ. பரீக்ஷைத் தேறியது. குப்புவய்யருக்கும் மங்களம்மாளுக்கும் வந்த ஸந்தோஷக் கடிதங்கள் அளவில்லாமலிருந்தன. முன்னால் அவர்களைக் கேவலமாக இகழ்ந்த அக்கம் பக்கத்து ஜனங்களும் பந்துக்களும் ராமஸாமி பி. ஏ. பரீக்ஷை தேறினதைப் பற்றி ஸந்தோஷ ஸமாச்சாரம் விசாரிக்க தினம் வந்துகொண்டிருந்தார்கள். ராமஸாமிக்கு வக்கீல் பரீக்ஷைக்கு வாசிக்க ஆசையிருந்தது. கும்பகோணத்துக் காலேஜில் படிப்பு முடிந்தவுடன் சென்னைப்பட்டணத்துக்கு வருவதாகத் தீர்மானித்தான். குப்புவய்யரும் மங்கள்ம்மாளும் நல்ல தினம் பார்த்து எல்லோரும் புறப்படுவதற்கு அநேக யத்தனங்களைச் செய்துகொண்டிருந்தார்கள்.

கடைசியாக, சென்னைப்பட்டணம் வந்து தங்கசாலைத் தெருவில் ஐந்து ரூபாவாடகைக்கு ஒருசிறு அரையை எடுத்துக்கொண்டு குடியிருந்தார்கள். ராமஸாமி சட்ட காலேஜில் சேர்ந்து வாசித்துவரும் நாளில் குப்புவய்யர் திடீரென்று மார்நோயால் இறக்கும்படி நேரிட்டது. இக்கொடிய துக்கத்தை மறக்க யாரால் முடியும்? ராமஸாமிக்குக் கை உதவி போய்விட்டது. அவன் மிகவும் ஏக்கம் கொண்டான். ராமஸாமியின் சிநேகிதர்கள் அவனை அடிக்கடி தேற்றுவார்கள், அவன் படிப்புக்கு ஹானி வரும்படியிருந்தது. ஏனென்றால், பண

உதவி செய்வார் ஒருவருமில்லை. மங்களம்மாள் என்ன செய்வாள் பாபம்! கல்யாண மாதம் பிறந்தது. அநேகர் ஜாதகக்கட்டுகளையும் பணப்பைகளையும் எடுத்துக்கொண்டு ராமஸாமியின் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவர் ராமஸாமிக்குக் கொஞ்சம் எட்டிய பந்து. அவர் தாம் ராமஸாமியின் சட்டப் படிப்பு முடிகிறவரையுள்ள ஸகல செலவுகளையும் ஏற்றுக்கொள்வதாக ஒப்புக் கொண்டார். மங்களம்மாளுக்கு ஒரு பெரிய கவலை தீர்ந்தது. நல்ல தினத்தில் ராமஸாமிக்கு சென்னப்பட்டணத்திலேயே விவாகம் நடந்தது. ராமஸாமியின் அகமுடையாளான கல்யாணியை அவள் மாமியாரான மங்களம்மாளிடத்தில் விட்டுவிட்டு கல்யாணியின் தகப்பனார் ஊர் போய்ச் சேர்ந்தார். ராமஸாமிக்கு படிப்புச் செலவைப்பற்றிய கவலை இல்லையாதலால் அவன் நன்றாகப்படித்து முதல் வகுப்பில்தேறினான். பிறகு, ராமஸாமி எந்த ஜில்லாவில் வக்கீல் உத்தியோகம் செய்யலாமென்று மாமனாரையும் தாயாரையும் கலந்து யோசித்தான். அவர்கள் திருச்சினாப்பள்ளி உசிதமென்று சொன்னார்கள். அவர்களின் இஷ்டப்படியே திருச்சினாப்பள்ளி சின்னக்கடைத் தெருவில் போர்டு போட்டுக்கொண்டு வக்கீல் உத்யோகத்தைச் செய்து வந்தான்.

இரண்டு மூன்று வருஷங்கள் வரை ராமஸாமியிடத்தில் கேஸ்கள் வராமலிருந்தன, அக்காலத்துப் பெரிய வக்கீல் ஒருவரின் தயவைச் சம்பாதித்துக் கொண்டு சின்னச்சின்ன கேஸ்களில் ஜட்ஜுமுன் ஆஜராகி அக்கேஸ்களை மிக ஸாமர்த்தியமாய் வாதித்து வருவான். ஜட்ஜும் இவனிடத்தில் பக்ஷமுடையவராகி அவன் வாதிக்கும் கேஸ்களைக் கொஞ்சம் கவனமாய்க் கேட்பார். இவனுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு மற்ற வக்கீல்களும் இவனிடத்தில் மதிப்புடையவர்களாயிருந்து வந்தார்கள். வக்கீல் வேலைக்கு ஆரம்பித்து ஐந்து வருஷங்களுக்குள் இவனுக்கு மீ 1க்கு 1000க்கு மேலாக வருமானம் வர ஆரம்பித்தது. சில வருஷங்களுக்குள் ஆயிரக்கணக்காகச் சம்பாதித்தான். சின்னக்கடைத் தெருவில் வாடகைக்குக் குடியிருந்த வீடு ராமஸாமிக்குப் போதாமலிருந்தது. பணத்தெம்பு உண்டானதும் திருச்சி கண்டோன்மெண்டில் ஒரு புதிய காலி நிலத்தை நயமாக விலைக்கு வாங்கி பதினாயிரம் ரூபாய்கள் செலவழித்து நாகரீகமான ஒரு பங்களாக் கட்டிப் புதிதாக அவ்வீட்டில் குடிப் போனான். அங்கு குடிப்போனதும் பழைய நாற்காலி, மேஜைகள், வீட்டுச் சாமான்கள் யாவும் புதுபங்களாவுக்குத் தகுதியாக இல்லை. உடன், சென்னப்பட்டணத்லுள்ள கர்ஸன் கம்பெனிக்கு எழுதிப் புதிது புதிதானவும் அழகானவுமான நாற்காலி, மேஜை கட்டில் முதலியவைகளைத்தருவித்து பங்களாவில் அலங்கரித்தான். பிறகு, ஒன்றன்பின் ஒன்றாகக் குதிரைவண்டி வீட்டுச் சாமான்கள் முதலியவைகளையும் புதிதாகப் பங்களாவில் சேர்ப்பித்தான். வேலைக்காரர்களையும் புதிதாக அமர்த்தினான். கண்டோன்மெண்டு பங்களாவுக்கு அவன் புதிதாகக் குடிப்போனது முதற்கொண்டு ஸகலமும் புதிதாகவே வைத்து அனுபவித்து வந்தான். தானும் புது மனுஷன் போல அலங்கரித்துக் கொள்வான். எல்லாம் அவனிடத்தில் புது மயமாகவே யிருந்தன.

இவனுக்கு லக்ஷ்மீகடாக்ஷம் பூர்ணமாக உண்டாகியது. ௴ 1-க்கு 10,000 க்குக் குறையாமல் வரும்படி வந்துகொண்டிருந்தது. ராமஸாமியின் ஸந்தோஷத்துக்கு அளவே கிடையாது. தன் பங்களாவை எவ்வளவு திவ்வியமாக வைத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு திவ்வியமாக வைத்துக் கொண்டிருந்தான். பங்களாவைப் பல பெரிய மனிதர்கள் வந்து பார்க்க வேண்டியதன் பொருட்டே பதினைந்து நாளைக்கு ஒரு தடவையாவது ஒரு விருந்துக் கச்சேரியோ சங்கீதக் கச்சேரியோ வைத்து ஊரிலுள்ள பெரிய மனிதர்களை அழைப்பான். இப்படியிருக்கையில், ஒரு நாள் கிருஷ்ணராயர் என்பவர் இவனுடைய பங்களாவுக்கு வந்தார். அவர் ராமஸாமியின் ஆப்த நண்பர். ஆனதால், தமாஷாக ராமசாமி அய்யர்! தாங்கள் செய்த வேலைகளெல்லாம் திவ்வியமா யிருக்கின்றன. கண்ணுக்குத் தென்படுபவைகளெல்லாம் புதிதாக இருக்கின்றன. நீரும் புதிதாகத் தோன்றுகிறீர்! ஆனால், தங்கள் தாயார் மட்டும் புதிதாகயில்லை. கர்நாடகமாக நாகரீகமில்லாமல் இருக்கிறாள். அது ஒன்றுதான் இந்த பங்களாவின் அழகுக்குக் கொஞ்சம் குறைவா யிருக்கிறது. மற்றவைகளெல்லாம் வெகு ஷோக்கா யிருக்கின்றன என்று சொல்லவே, ராமஸாமி உடன் எழுந்து அவர் கையைக் குலுக்கி பலே ராயர்! நான் வெகு நாளாக நினைத்துக்கொண்டிருந்ததை நீர் இன்று உடனே சொன்னதானது எனக்கு இவ்வளவுதான் சந்தோஷமில்லை. இருக்கட்டும்! நான் மனதில் கொண்டிருக்கிற கார்யத்தை சில தினங்களில் நிறைவேற்றி விடுகிறேன் என்று சந்தோஷமாகத் தெரிவித்தான்.

சில நாள் கழிந்தன. அப்படியே தன் தாயாரான மங்களம்மாளை ஒரு தினம் காலையில் வண்டியிலேற்றிக்கொண்டுபோய் மைலம் சந்தையிலுள்ள ஒரு தெருக்கோடியில் வண்டியை நிறுத்தி அவளைக் கீழ் இறக்கிவிட்டு, அம்மா! எனக்கு நீ ஸரியான தாயாரல்ல; நானிருக்கிற அழகுக்கும் பெருமைக்கும், பங்களாயிருக்கிற நேர்த்திக்கும் நீ அங்கு என்னுடன் இருக்கிறதானது பங்களாவின் அழகையும் என் கௌரவத்தையும் குறைக்கிறது. பங்களாவில் எல்லாம் புதிதாக வாங்கிவைத்துக் கொண்டிருக்கிற காலத்தில் நீ மட்டும் பல்லுப்போய் நாகரீகமில்லாமல் கர்நாடகமாக இருக்கிறதானது நான் உன்னை என் தாயார் என்று சொல்வது வெட்கமாயிருக்கிறது. இவ் வூரைவிட்டு எங்கேயாவது போய் பிச்சையெடுத்துப் பிழைத்துக்கொள் என்றுக் கடுமையாக ஆக்ஞாபித்து, என் முகத்திலும் நீ காணக்கூடாது. என் பங்காளப்பக்கமும் வரக்கூடாது என்று சொல்லி அனுப்பிவிட்டுத்தான் சந்தோஷமாக வீடுநோக்கி வந்தான். இக்காரியம் முடிந்து இரண்டு நாளாகியது. அக்கம்பக்கத்து ஜனங்களுக்குத் தெரிந்தால் அது ஊர் முழுமையும் பரவக் கேட்கவேண்டுமா? வக்கீல் ராமஸாமி செய்த கார்யம் ஸரியானதென்று அவனைப்போன்ற ஆங்கிலம் படித்தப் பிரபுக்கள் கிளப்புகளில் கூட்டம் கூடி வம்பு பேசிக்கொண்டிருந்தார்

கள். கர்னாடகமாக யிருந்துவரும் புருஷர்களில் ராமஸாமி செய்தது பிசகு என்றும் சிருங்ககிரி சங்கராச்சாரியார் மடத்துக்கு எழுதி அவனை ஜாதிப் பிரஷ்டம் செய்யவேண்டுமென்றும் பேசிக்கொள்வோர் பலர். ஐயோ! ராமஸாமி நல்லவன். ஏதோ அவனுக்கு இந்தத் துர்ப்புத்தி வந்தது! அவனுடைய வினையென்று பேசுவோர் இன்னும் பலர். ஸன்மார்க்கப் படிப்பின்றி இந்த ஆங்கிலப் படிப்புப் படித்து மேனாட்டு நாகரீகத்தை அனுஷ்டித்தால் கர்வமும் வீண் பெருமையும் உண்டாவது ஸகஜமென்று சொல்லி வம்பளப் போர் மற்றும் பலர். இது மட்டுமா! கூட்டம் கூட்டமாக ஸ்த்ரீகள் குளக்கரைகளிலும் காவேரிக் கரைபடித்துறைகளிலும் வம்பளந்து கடைசியாக அவன் செய்தது பிசகென்றே சொல்லிக்கொண்டு போனார்கள். ஸுமார் ஒருமாதம் வரை திருச்சினாப்பள்ளி டவுன் முழுமையும் இதைத்தவிர வேறு பேச்சு கிடையாது.

சென்னையிலுள்ள 'நியு இந்தியா' பேபருக்கு இந்தச் சங்கதியை யாரோ ஒரு அதிகப் பிரஸங்கி எழுதியனுப்பி விட்டான். 'நியு இந்தியா' பேபருக்குக் கொஞ்சம் சந்தாதாரர்களிருந்தால் இவ்விஷயம் அதிகமாக வேறு இடங்களில் பரவாது. அதற்கு ஆயிரக் கணக்காக இருக்கிறதனால் தேசமெங்கும் பரவியது. ஒவ்வொரு பேபரும் அதனதன் அபிப்ராயத்தை வெளியிட்டது. அவ்வளவு அபிப்பிராயங்களையும் இங்கு எழுத முடியாது. ஆனால், பம்பாயில் பிரசுரமாகும் 'ஹஞ்சு' என்ற விகடப் பத்திரிகை பின் வருமாறு அபிப்பிராயம் கொடுத்தது. "ராமஸாமி செய்த கார்யத்தைப் படித்தோம். ஆனால், இது நமக்குப் புதுமையல்ல. பம்பாயில் ஸகஜமாக இதற்கு மேலாக எவ்வளவோ கேஸ்கள் வெளிவந்திருக்கின்றன. பம்பாயில் நடக்கிற கேஸ்களின் விவரத்தை நோக்கும்போது அக் கேஸ்களில் ஸம்பந்தப்பட்டவர்கள் மார்க்கெட்டுகளுக்குச் சென்று பழைய தாயாரைத் துரத்தி விட்டு புதுத் தாயாரை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், பிரஸ்தாபக் கேஸில் ராமசாமி தன் தாயாரைத் துரத்தி விட்டு புதுத் தாயாரை வாங்காமலிருந்ததானது ஒரு விதத்தில் ஸந்தோஷமென்று குறிப்பிட்டிருந்தது." மேலும், கல்கத்தா விகடப் பத்திரிகை சொல்வதைக் கவனிப்பது அவசியம். அதன் அபிப்பிராயம் பின் வருமாறு. "திருச்சி, வக்கீலான புதுராமஸாமியின் விஷயத்தை பம்பாய்ப் பத்திரிகையில் பார்த்தோம். அதற்குக் காரணம் சிலர் ஆங்கிலக் கல்விப் படித்ததனால் ராமஸாமி இப்படியாகத் தன் தாயாரைத் துரத்தி விட்டானென்று கூறுகிறார்கள். இப்படிச் சிலர் பேசுவது "தென்னை மரத்தில் தேள் கொட்டினதாம், பனை மரத்தில் நெறிஏறினதாம்" என்ற ஸமாச்சாரமாக யிருக்கிறது. நாங்களெல்லோரும் ஆங்கிலக் கல்வி படிக்கவில்லையா? நாங்களெல்லோரும் தாயாரைத் துரத்தி விட்டு புதுத் தாயார் வாங்க எத்தனிக்கிறோமா? நாம் படிக்கிற பள்ளிக்கூடங்களில் ஸன்மார்க்கக் கல்வி கட்டாயமாக இல்லாததும்,



மேனாட்டார்களின் நாகரீகப்பித்தும் ஒரு காரணமாயிருக்கலாமென்று நமக்குத் தோன்றுகிறது. மேலும், பெற்றோர்கள் நம் புராண இதிகாஸங்களைச் சரிவரப் படிக்காமலிருத்தலாலும் அவர்களின் ஸரியான பழக்க மின்மையாலும் வரும் பலன்களென்றுமே தோன்றுகிறது". கல்கட்டா விகடப் பத்திரிகை கொடுத்த அபிப்பிராயம் ஸரியானதென்று அநேக பத்திராதிபர்கள் தங்கள் தங்கள் பத்திரிகைகளில் எழுதிவந்தார்கள். இவ்விஷயங்களை ஆதியோடந்தமாக என் சகோதரியிடம் தெரிவித்தேன். இதுதான் படித்தவர்களின் ஆசாரச் சீர்திருத்தமென்று விசனக் முகத்துடன் குறிப்பிட்டாள். நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது என் கடைசித் தங்கை கமலவல்லியும் பக்கத்துவீட்டுக் குஞ்சுவும் ஓடிவந்து வயறு அறுந்துபோகும்படி சிரித்தார்கள். அவர்களைப் பார்த்து எங்களுக்கும் சிரிப்பு வந்தது. ஒருவர் முகம் ஒருவர் பார்த்துக் கலகலவென்று சிரித்துக்கொண்டிருக்கும்போது என் தகப்பனார் ஆபீஸிலிருந்து வந்தார். அவர் காலடி சப்தம் கேட்டவுடன் நாங்கள் அனைவரும் உள்ளே ஓடிப்போய்விட்டோம்.

ஜானகி.

* இக்கதை ஒருவரைப்பற்றியதல்ல. தற்காலம் பொதுவாகப் படித்தவர்கள் பெற்றோர்களை வயது காலத்தில் பல துன்பங்களுக்கு உட்படுத்துகிறார்களாதலால் அதைக்கொண்டு இது எழுதப்பட்டதென்பதை இதன் ஆசிரியர் தெரிவிக்கிறார்.

# WOMAN'S WORLD
# ஸ்த்ரீ பிரபஞ்சம்

## HOME NEWS.
## உள் நாட்டு வர்த்தமானம்.

**Sri Rukmani Ammal.**

ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் :—மைசூர் மகாராணி காலேஜுக்குத் தலைவராகவிருக்கும் ஸ்ரீமதி ருக்மணி அம்மையாரவர்கள் மைசூர் யுனிவர்ஸிடி மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**Queen Mary College.**

க்வீன் மேரி கலாசாலை :—சென்னை மாதர் கலாசாலை இனி க்வீன் மேரி அவர்களின் பேரால் அழைக்கப்படும். அக்கலாசாலையை யொட்டிய 'லேடீ டாரன் எளிய வித்தியார்த்தி நிதி' என்றிருக்கும் நிதிக்கு மிஸ்டர் C. P. ராமஸாமி ஐயர் 500 ரூபாய் நன்கொடை யளித்திருப்பதை மதிராஸ் கவர்ன்மெண்டார் அன்புடன் அங்கீகரித்துக் கொண்டார்கள்.

**A Woman's Distress.**

**ஒரு ஸ்த்ரீயின் பரிதாபம்:**—வடமேற்கு இந்தியாவிலுள்ள ரோஹ்ரி என்னும் நகரில் 70-வது வயதுள்ள ஸ்த்ரீயொருவள் தனது மூன்று குமாரர்களைப் போருக்கனுப்பிவிட்டாள். குமாரர்கள் சென்ற தினத்திலிருந்து நாளது வரையில் அவளுக்குக் காகிதம் ஒன்றுமே கிடைக்கவில்லையாதாம். அந்த ஸ்த்ரீயானவள் தனக்கு வார்த்திபமாயிருக்கும் இக்காலத்தில் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள வேறு வழியில்லாது பென்ஷன்பெற்ற ஓரிந்திய ஸோல்ஜரின் பாதுகாப்பிலிருந்து வருகிறாளாம். அந்த ஸோல்ஜர் இப்போது தன்னால் உதவி செய்ய முடியாதென்று சொல்லிவிட்டாராம். தன் புதல்வர் இருக்குமிடத்தையாவது அறியவேண்டி அவ்வார்த்திப அன்னை செய்துவந்த முயற்சிகளேதும் பலிதமாகவில்லையாம். அம் மாது தன் கதியை ஸுக்கூர் ஜில்லா கலெக்டருக்குத் தெரிவித்துக் கொண்டதற்கு, அவர் தம்மால் ஏதொன்றும் செய்ய வியலாதென்று சொல்லிவிட்டாராம். ஐயோ பாபம்! அவ்வெளிய வார்த்திப மாதின் கதி இனி நிர்க்கதிதான்போலும்.

**Mrs. Sivakamu Ammal.**

**மிஸஸ் சிவகாமு அம்மாள்:**—இவர் பம்பாய் வைத்திய காலேஜில் வாசித்து வந்தார். இவர் மிஸஸ் பெஸன்டு சங்கத்தைச் சேர்ந்தவர். மிஸஸ் பெஸன்டு அம்மையை பந்தோபஸ்தில் வைத்துவிட்ட ஸமாச்சாரத்தைக் கேட்டவுடன் தமது படிப்பை நிறுத்திவிட்டு சென்னை ஸ்வய ஆக்ஷி சங்கத்தில் சேர்ந்து உழைக்க முன்வந்திருக்கிறார். ஸமீபத்தில் டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் சென்னை ஸ்வய ஆட்சி சங்கத்தின் கீழ் இவருக்கு நல்வரவேற்பு செய்தார். இப்போது மிஸஸ் சிவகாமு அம்மாள் பல ஜில்லாக்கள்தோறும் சென்று ஸ்வய ஆட்சி பிரசங்கம் செய்து வருகிறார்.

**Swadeshi Vow & Women.**

**ஸ்வதேசிய விரதமும் ஸ்த்ரீகளும்:**—இந்தியாவிலுள்ள முக்கிய பட்டணங்களிலுள்ள ஸ்த்ரீகள் ஆங்காங்கு கூட்டங்கூடி அந்நியநாட்டுப் பொருள்களை விலக்கி இந்தியாவில் செய்யப்பட்ட ஸாமான்களையே உபயோகிக்கவேண்டுமென்று ஸ்வதேசிய விரதம் எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

**Muhamadali's Mother.**

**மகம்மதாலியின் தாய்:**—வட இந்தியாவிலுள்ள மத்திய மாகாணத்தில் மகம்மதாலி, ஷொகட்டாலி என்னும் இரு சகோதரர்கள் பந்தோபஸ்தில் வைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களின் தாயார் சில தினங்களுக்கு முன் கனம் தங்கிய ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு ஒரு உருக்கமான கடிதம் எழுதினார். அவர் அக்கடிதத்தில் இந்திய ஸ்த்ரீ புருஷர்கள் தாய் தேசத்துக்கு உழைக்கப் பின் வாங்கக் கூடாதென்றும் இனி ஸ்த்ரீகளும் புருஷர்களோடு ராஜாங்க விஷயத்தில் உழைக்க முன் வரவேண்டுமென்றும் எழுதியிருக்கிறார்.

**Women Conference.**

**ஸ்த்ரீகள் கான்பரன்ஸ்:**—சென்னையில் வருகிற டிஸம்பர் மாதத்தில் ஸ்த்ரீகள் கான்பரன்ஸ் ஒன்று நடத்துவது அவசியமென்று ஒரு நிருபர் தினப் பத்திரிகையொன்றுக்கு எழுதியிருக்கிறார். அது நல்ல யோசனையாகும். ஸ்த்ரீகளின் கார்யத்தை அவர்களே கவனித்துக்கொள்வது அவசியமாகையால் புருஷர்களைப்பின் பலமாகக் கொண்டு வித்தியா விஷயமாக தங்கள் யோசனைகளைத் தெரிவிப்பது அவசியம்.



# FOREIGN NEWS.

## வெளிநாட்டு வர்த்தமானம்.

**Women Prive leges.**

**ஸ்த்ரீ சுதந்தரங்கள்:**—ஸ்த்ரீகள் உத்தியோகம் வகிக்க லாயக்குள்ளவர்களல்லவென்று சொல்லி வந்த காலமெல்லாம் இப்போது எங்கேயோ மாறிவிட்டது. ஆடவரைப் போல் ஸ்த்ரீகளுக்குச் சர்வ சுதந்தரங்களுமுண்டென்று சொல்லும் வண்ணம் ருஷியாவின் தலை நகரான பீட்ரோகிராடில் இப்போது ஒரு உத்தரவு பிரசுரமாயிருக்கிறது. அதன் பிரகாரம் பார்க்குமிடத்து புருஷர்களைப்போல ஸ்த்ரீகளும் மந்திராலோசனை ஸபை மெம்பர் ஸ்தானம் வரையிலுள்ள எவ்வுத்தியோகத்தையும் வகித்தற்குரியவரென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

**Women Workers.**

**ஸ்த்ரீகள் வேலைக்காரர்கள்:**—இந்த மகாயுத்தம் ஆரம்பமானது முதற்கொண்டு இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் ஸ்த்ரீகள் செய்யும் வேலைகள் மிகவும் புகழத்தக்கன. இங்கிலாந்தில் ஸ்த்ரீகளின் உதவியில்லையேல் யுத்தம் நடத்துவது கடினமாகிவிடும். இதையறிந்தே அநேக மந்திரிகள் ஸ்த்ரீகளுக்குரிய சுதந்திரங்களைக் கவனிக்கவேண்டுமென்று பல முறையும் தெரிவித்திருக்கிறார்கள். புருஷர்களைக்காட்டிலும் ஸ்த்ரீகள் தேசாபிமானம் பூண்டு நடந்து வருவது இங்கிலாந்து தேசம் செய்த பாக்கியமாகும். எங்கு ஸ்த்ரீகள் மனம் பற்றி வேலை செய்கிறார்களோ அங்கு ஜயம் நிச்சயம் என்பது பெரியோர்கள் வாக்கு.

**Women Soldiers.**

**ஸ்த்ரீகள் வீரர்கள்:**—ருஷ்யாவிலுள்ள மாஸ்கோப் பட்டணத்தில் ஸுமார் 250 உயர்குல ஸ்த்ரீகள் தங்கள் தேச கௌரவத்தைக் காப்பாற்ற ஜெர்மனியர்களோடு சண்டைபோட யுத்தமுனைக்குப் போயிருக்கிறார்களாம். இவர்களை பெரிய ராணுவ அதிகாரிகளும் உத்ஸாகப்படுத்தி அனுப்பினார்களாம். என்ன தேசாபிமானம்! என்ன பராக்கிரமம்! இதுவல்லவோ ஸ்த்ரீகளின் வீரத்தன்மைக்கு அடையாளம்.

**America Women.**

**அமெரிக்கா ஸத்ரிகள்:**—அமெரிக்காவில் சுமார் ஒரு கோடியே எழுபது லட்சம் வயது நிறைந்த பெண்கள் கலியாண மில்லாமல் இருக்கிறார்கள். இதில் தொண்ணூறு லட்சம் பேர்கள் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள். எண்பத்தொறு லட்சம் பேர்கள் இருபது வயது முதல் நாற்பத்து நான்கு வயதுக்குட் பட்டவர்கள்; இன்னும் ஐந்து லட்சம்பேர்கள் நாற்பத்தைந்து முதல் ஐம்பத்து நான்கு வயது குட்பட்டவர்கள். புருஷர்களில் நூற்றில் முப்பத்தொன்பது பேர் கலியாண மில்லாதிருக்கிறார்கள். இதற்குக் காரணம் பெண்களின் அதிநாகரீக முன்னேற்றமும் சுதந்தர உணர்ச்சியுமென்பார்கள் சிலர்; ஆனால், கலியாணம் செய்துகொண்டு குடும்பத்தை நிர்வகிக்கத் தகுந்த சம்பாதனைக் குறைவும் காரணமாகுமென்பர். இன்னும் சிலர் அங்கே கூடிய வரையில் நல்ல ஸ்திதியில் வாழ ஒரு குடும்பத்துக்குக் குறைந்தது வாரம் ஒன்றுக்கு எழுபத்தைந்து ரூபாய் வேண்டுமாம். உலகத்தில் ஏதோ அகஸ்மாத்தாக புருஷர்களெல்லாம் இறந்து போக நேரிட்டாலும் அவர்களின் குறையை அவ்வளவாகப் பாராட்டோம். இப்போது போலவே அப்போதும் ஜீவித்து வருவோம் என்று இப்புது மாதிரிப் பெண்கள் சொல்லி வருகிறார்களாம்.

# INSTRUCTIVE HINTS
# விசேஷக் குறிப்புகள்

## CONCERNING CHILDREN
## குழந்தைகள் விஷயம்

**Juvenile Court in Bengal.**

சிறுவர்களுக்கு ஒரு கோர்ட்டு:— வங்காள மாகாணத்தில் சட்ட விரோதமாகக் குற்றம் செய்த சிறுவர்கள் 15 வயதுக்குட் பட்டவர்களாயிருந்தார்களானல் அச் சிறுவர்களை அடைத்து வைக்க ஒரு தனியான வீடும், அவர்கள் செய்த குற்றங்களை விசாரித்து அவர்களைத் தண்டிக்க ஒரு தனியான கோர்ட்டும் ஏற்பட்டு இரண்டு வருஷங்களாகிறது. இதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அக் கமிட்டியார் இக்கோர்ட் நல்ல வேலைசெய்து வருகிறதென்று தெரிவிக்கிறார்கள்.

**Children.**

குழந்தைகள்:-இவ் வுலகத்தில் வருஷமொன்றுக்கு சுமார் 3,60,00,000 குழந்தைகள் பிறக்கின்றன வாம். அஃதாவது நிமிஷம் ஒன்றுக்கு 70 குழந்தைகளும் செக்கண்டு ஒன்றுக்கு 1 குழந்தைக்கு அதிகமாகவும் பிறக்கின்றனவாம். ஒரு வருஷக் குழந்தைகளை ஒரே வரிசையில் தொட்டில்களில் அமைத்து வைத்தால் அத்தொட்டில்கள் இப்பூமண்டலம் முழுமையும் சுற்றியிருக்குமாம்.

**Religious Education and Moral culture in schools.**

ஸ்கூல்களில் மதக்கல்வியும் நல்லொழுக்கப் பயிற்சியும்:—பேஹார் கவர்ன்மெண்டார் பேஹார் ஒரிஸ்ஸாவிலுள்ள ஸ்கூல்களில் வாரத்திற்கொருமுறை நல்லொழுக்கப் பயிற்சியை உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்கு அவசியம் போதித்து வர வேண்டுமென்றும் அவரவர்களுக்குரிய மதஸம்பந்தமான விஷயங்களைக் கற்பித்து வர வேண்டுமென்றும் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

**Can a child sleep too much?**

குழந்தை ஜாஸ்தி நேரம் தூங்கலாமா?:—சுருக்கமாகவும் துர்ப்பலமாகவும் பிறந்த குழந்தை ஜாஸ்தி நேரம் தூங்கினால் அதிகநாள் ஜீவித்திராது. நீளமாகவும் பலமாகவும் பிறந்த குழந்தை கூட அதிக நேரம் தூங்கினாலும் அதுவும் அதிக நாள் ஜீவித்திருக்க முடியாது. தாதியானவள் தன் மடியில் குழந்தையைப் படுக்க வைத்து அதைத் தூங்க வைக்கக் கூடாது. அந்த அப்யாஸம் மிகவும் கெட்டது. குழந்தை ஸாதாரணமாக தன்னிஷ்டம்போல் கீழே படுத்துத் தூங்கினால் நன்றாகவும் பலமாகவும் இருக்கும்.

**Artificial Food.**

செயற்கை ஆகாரம்:—பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால் இல்லாமல் போய் விட்டால் கண்டபாலைக் கொடுத்து வரக்கூடாது. குழந்தையின் தேகதர்மத்தைக் கவனித்தல் அவசியம். குழந்தைக்குக் கொடுக்கும் பால் எளிதில் ஜீரணிக்கத் தக்கதாயும், குழந்தை வளருகிதற்கு ஒத்தாசையாயுமிருக்கவேண்டும். அது குழந்தை வாய்க்கு ருசியாயும் நல்லஇடத்தில் வைக்கப்பட்ட தாயுமிருக்க வேண்டும். அடிக்கடி குழந்தையின் ஆகாரத்தை மாற்றுதல் தெரியாத் தன்மையாகும். ஒரே விதமான ஆகாரத்தையே கொடுத்து வர வேண்டும். குழந்தைக்கு ஏதாவது வியாதி வந்தால் உடனே தகுந்த டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்.

# II

# DOMESTIC HINTS AND SUGGESTIONS

## கிருஹகிருத்தியக் குறிப்புகள்

**Antedote for mad dog bites.**

**பைத்தியம் பிடித்த நாய் விஷந்துக்கு முறிவு**:—மணத்தக்காளித்தழையை இடித்து ரஸம்பிழிந்து சல்லாத் துணியில் ஏழு தடவை வடிக்கட்டி ஒரு நாளைக்கு அரைக்கால்படி ரஸம் வீதம் மூன்று நாள் குடிக்கவேண்டும். ஆறு நாள் உப்பில்லா பத்தியம் இருந்து கஞ்சி சாப்பிடவும். ஏழாவது நாள் ஓமத்தை அரைத்து வெந்நீர் ஸ்நாநம் செய்து ஆறுவாரம் நல்லெண்ணை சேர்க்காமல் ஸாதாரண ஆசாரம் புசித்துவந்தால் விஷம் முறிந்து விடும்.

**Remedy for White Ants.**

**கறையானைத் தொலைக்க மருந்து**:-கன்றாய்க் கொதிக்கும் வெந்நீரிலே சீனக்காரத்தைக் கரைத்துப் பொந்திலூற்றிவிடக் கறையான் நாசமாகுமாம். பொட்டுப்பூச்சி வலைநெய்யுமிடங்களில் இதை யூற்றிவிட்டாலும் அது பயந்து ஓடிவிடுமாம்.

**Mango Nut.**

**மாங்கொட்டை**:—மாங்கொட்டையின் பருப்பை உலர்த்தித் தூள் செய்து 20 முதல் 30 நெல்லெடை வரை தேனில் அல்லது வெல்லத்தில் கலந்துக் கொடுத்தால் வயிற்றில் சேர்ந்திருக்கும் கிருமிகள் வெளியாகும். மூலத்திலிருந்து இரத்தம் அதிகமாய் வடிவதையும், மாதவிடாயில் சோணிதம் மிதமிஞ்சிப் பெருகுவதையும் மாங்கொட்டைத்தூள் நிவிருத்தி செய்யும். சீதபேதியிலும், இரத்தக் கடுப்பிலும் இதைக் குழம்பாக்கி அன்னத்துடன் கலந்து உபயோகிப்பது நாட்டு வழக்கம். இதனால் சீதபேதி முதலிய குணமாவதாகவும் அனுபவத்தில் அறியப்பட்டிருக்கிறது.

**Fasting.**

**பட்டினி யிருத்தல்**:—பட்டினிகிடந்தால் பிணி தீருமென்று ஒரு ஆங்கில டாக்டர் கூறுகிறார். வியாதியைத் தீர்ப்பதற்குப் பட்டினி கிடப்பது ஒரு பெரிய ஔஷதமாகுமென்றும், வியாதிக்காரன் அதற்கு முந்தி ஸரியாக போஷிக்கப் பட்டவனாக இருந்தாலும் 3, 4 நாள் சுத்தப் பட்டினியாயிருந்து கொஞ்சம் தண்ணீர் மட்டு அருந்தி வந்தால் போதுமென்றும் சொல்லுகிறார். இந்த வழக்கம் நம் தேசத்தில் அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. ஏகாதசி தினம் சுத்தமாய் பட்டினியிருப்பது தேக ஆரோக்கியத்துக்கு ஏற்றது. ஏகாதசி ஸ்திரீ புருஷர்களுக்கு முக்கியமான விரதம்.

**Body Clean.**

**சரீர சுத்தம்**:—நாள் தோறும் அதிகாலையில் எழுந்தால் புத்தி தெளியும்; சுறுசுறுப்பு உண்டாகும்; காலையிலே சால் நடையேனும் அல்லது வேறு தேகப் பயிற்சியேனும் செய்வது முக்கியமாகும். உடுக்கிற வஸ்திரமும் படுக்கையும் அழுக்கில்லாமலிருத்தல் அவசியம். சரீரத்தினின்றும் வெளியில் வரும் அழுக்கானது படுக்கையிலும் வஸ்திரத்திலும் ஒட்டிக் கொள்ளும். அவைகள் சரீரத்தில் படும்போது மயிர்க் கால்களை அடைத்து வியாதியை விளைவிக்குமாதலால் படுக்கைகளும் வஸ்திரங்களும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். குடும்பத்திலுள்ள ஸ்திரீகள் இவைகளைக் கவனித்துவந்தால் அநேகமாக நாமே வியாதிகளை வரவொட்டாமல் தடுக்கலாம்.

162408

# VIEWS AND REVIEWS

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்

**Bala Vaidya Bodini.**

பால வைத்திய போதினி :—இவ் வருமையான புஸ்தகத்தை நம் பார்வைக்கு அனுப்பிய மகமதிய நண்பருக்கு அநேக வந்தனம். இதில் பாலர்களுக்கு வரும் வியாதிகளையும் அவற்றின் சிகித்ஸைகளையும் தெளிவாக தம் அனுபவத்தோடு நம் இந்திய ஸ்த்ரீகளின் உபயோகத்திற்காக பிரசுரித்திருக்கிறார். இதன் ஆசிரியர் வெகு வைத்திய புஸ்தகங்களுக்குக் கர்த்தாவாகையால் இவர் சொல்லும் சிகித்ஸைகளை நம் ஸ்த்ரீகள் தாராளமாகக் கையாளலாம். ஒவ்வொரு குடும்ப ஸ்த்ரீயும் இப்புஸ்தகத்தை வாங்கி வாசிக்கும்படி விரும்புகிறோம். இதன் விலை ரூ. 1-5 வேண்டுவோர்கள் பெண்கல்வி ஆபிஸுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**Kannan Songs.**

கண்ணன் பாட்டு :—இதன் ஆசிரியர் புதுவை ஸ்ரீ ஜத் சுப்பிரமணிய பாரதியார். இவர் அருள் பெற்றவர். இவருடைய புஸ்தகங்களையும் அவற்றின் உபயோகத்தையும் நாம் நம் தமிழ் நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இப்புஸ்தகத்தை வாங்கி வாசிப்போருக்கு இதன் அருமை தெரியவரும். நாம் ஒரு வார்த்தை மட்டும் கூறுகிறோம். தமிழ் நாட்டு ஸ்த்ரீ புருஷர்கள் இதனால் அடையும் லாபம் மிகப் பெரிதாகும். இவ்வருமையான புஸ்தகத்தை ஜனங்கள் படித்துப் பிரயோஜனப் படுமாறு ஸ்ரீமான் ப. சு. நெல்லைய பிள்ளை பிரசுரம் செய்திருக்கிறார். இதன் விலை அணா 4. வேண்டுவோர்கள் 'பெண் கல்வி' ஆபிஸுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**Anbanandan.**

அன்பானந்தன் :—இதன் ஆசிரியர் ஸ்ரீமான் C. M. இராஜு செட்டியார் அவர்கள். இவர் நாவலெழுதுவதில் ஸமர்த்தர் என்று தமிழுலகம் நன்கு அறியும். அன்பை விளக்கி அதன் உயர்வை எடுத்துக் காட்டவே இந்நூல் எழுதப்பட்டது. இதன் நடை இனிமையாயிருக்கிறது. இதன் விலை ரூபா ஒன்றாகும். வேண்டுவோர் சென்னை, வால்டாக்ஸ் ரோடு, இராஜேந்திர விலாஸிலிருக்கும் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**Janaki.**

ஜானகி:—இப்புஸ்தகத்தை நம் பார்வைக்கு அனுப்பிய ஸகோதரிக்கு அநேக வந்தனம். இதன் ஆசிரியர் திருச்சி, ஸ்ரீமதி பிரகதாம்பாளாகும். இது ஒரு நவீன நாடக புஸ்தகமாகும். மற்ற நாடகங்களைப் போலிராமல் இதில் நாடகத்துக்கு வேண்டிய அலங்காரங்கள் பொருந்தியிருக்கின்றன. தமிழ் நடையும் இனிமையாயிருக்கிறது. ஸ்த்ரீ ஆசிரியர்கள் தமிழ் நாட்டில் மிகச் சொற்பம். ஸ்த்ரீகள் வெளிவந்து புஸ்தகங்கள் இயற்றுவது எளிதல்ல ; ஆகவே, ஸ்த்ரீ புருஷர்கள் ஸ்ரீமதி பிரஹதாம்பாள் போன்ற ஸ்த்ரீ ஆசிரியர்களின் புஸ்தகங்களை ஆதரித்து இன்னும் ஸ்த்ரீகளுக்கு உபயோகப்படும்படியான புஸ்தகங்களை எழுதத் தூண்டுவது அவசியம். இதன் விலை அணா 12. வேண்டுவோர்கள் 'பெண்கல்வி' ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : 162408 ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.